ஸ்ரீ

திருக்குறள்

அறத்துப்பால் மூலமும்

பரிமேலழகருரையும்

கும்பகோணம் கவர்ன்மெண்ட்காலேஜ் தமிழ்ப்பண்டிதராயிருந்து

காலஞ்சென்ற

வை. மு. சடகோபராமாநுஜாசார்ய ஸ்வாமிகள்

இயற்றிய

குறிப்புரையுடன்

மலைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யரால்

பார்வையிடப்பெற்று

மலைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஆர். ஜி. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1937

விலை. 1 - 8 - 0.

பொருளடக்கம்.

1. முகவுரை III

2. திருவள்ளுவர் வரலாறு V

3. திருக்குறள் வரலாறு XI

4. பரிமேலழகர் வரலாறு XVIII

5. அறத்துப்பாலின் இயல்அதிகாரம் என்பவற்றின் அட்டவணை XXII

6. திருக்குறள் அறத்துப்பால் மூலமும் பரிமேலழகருரையும் க

7. செய்யுண் முதற்குறிப்பகராதி உஎஎ

8. அறத்துப்பால்மூலம் பரிமேலழகருரை என்றவற்றின் அரும்பதம் முதலியவற்றின் அகராதி உஅ0

9. பிழைத்திருத்தம் உகஙு

வை. மு. சடகோபராமாநுஜாசார்யர்.

முகவுரை.

தமிழ்மொழி சிறப்புற்றதாக மதிக்கப்படுவதற்குரிய பல காரணங்களுள் திருக்குறளைப்பெற்றிருப்பதென்பது முதன்மையான காரண மெனின், அது மிகையாகாது. இதன் சிறப்பினைக் கருதியே, இது, பலமொழிகளிலும் உருப் பெயர்க்கப்பட்டுப் பலராலும் அவாவோடு கற்கப்பட்டுவருகின்றது.

ஆயினும், மூலத்தைப் படித்த மாத்திரத்திலேயே எங்கும் இந்நூல் எளிதிற் பொருள் விளங்குவதன்று. ஆகவே, இதற்கு உரை இன்றியமை யாத தாகும். இந்நூற்குப் பழமையாகவே பல உரைகள் இருக்கின்றன என்று ஏற்படினும், பரிமேலழகருரையும் மணக்குடியருரையுமே அச்சாகி வெளிவந் திருக்கின்றன. மற்றைய உரைகள் இப்போது கிடைப்பதும் அரியன.

வெளிவந்துள்ள இருவுரைகளுள்ளும் பரிமேலழகருரையே யாவராலும் பாராட்டப்படுகின்றது. அவ்வுரை, நூலாசிரியருடைய கருத்துக்கு ஏற்பப் பதப்பொருளே விளக்குவதோடு பல இடங்கட்கும் விசேடமான பதசாரம் இன்றியமையா இலக்கணக்குறிப்பு அணி வேறுவகையானபொருள் பிற வாறுரைகூறுவதில்நேர்படும்மாறுபாடு முதலிய பலவிஷயங்களையும் கொண் டது: அவ்வுரையைப் படித்தறிவோர் பலவிஷயங்களையு மூணர்ந்த புலவ ராவ ரென்பது, திண்ணம்.

ஆயினும், படிக்கின்ற நிலையிலிருப்பவர்க்கு அவ்வுரைப்பொருள் முழுவ தையும் உள்ளபடியறிதல், முடியாது.அதற்குத்தக்க ஒருகுறிப்புரை யிருப்பின் நலம். பிற்காலத்தில் உரையெழுதிப் பொருளைத் தெரிவிப்பதில் ஒத்தாரு மிக்காரும் இல்லாது தலைசிறந்து விளங்கியவரும் அடியேனுக்குத் தமையன் முறையாகுபவரும் என்ஆசிரியருமான ஸ்ரீ - உ - வே. வை - மு - சடகோப ராமாநுஜாசார்ய ஸ்வாமிகள் திருக்குறளில் அவ்வப்போது யூனிவர்ஸிடி யார் பரீட்சைக்குப்பாடமாகவைத்த பகுதிகளைப் பரிமேலழகருரையோடும் அதற்குத் தாமாக எழுதிய குறிப்புரையோடும் வெளியிட்டிருந்ததுண்டு: அப்பகுதிகள் அறத்துப்பால் முழுதுக்கும், பொருட்பாலில் இறுதியில் இரண்டொருஅதிகாரங்கட்குத் தவிர மற்றைப் பகுதிகட்கும் உள்ளன. அந்தக்குறிப்புரையை அப்பெரியார் எழுதி வெளியிடுதற்குத் துணையாயிருந் தவர், அடியேனுக்குத் தமிழிலக்கணவாசிரியரான் ஸ்ரீ - உ - வே. சே - கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் ஆவர். சில சமயத்து நானும் உடனிருந்த துண்டு.

அப்பெரியாரின் குறிப்புரையோடு பரிமேலழக ருரையைப் பதிப்பித் தால், தமிழ்கற்போர்க்கு மிகவும் பயன்படுமென்று, வித்துவான் - வேங்கட ராயுலுரெட்டியாரும் மற்றும் சிலஅறிஞர்களும் வற்புறுத்திக் கூறிய தண்டு. அவர்கள் கூறியதைக் கடைப்பிடித்து, திருக்குறளைப் பரிமேலழக ருரையோடும், (கிடைக்கும் பகுதிவரைக்கும்) அப்பெரியாரின் குறிப்புரை யோடும் (கிடையாதபகுதிக்கு எனது சிற்றறிவிற்குஏற்ப ஒருகுறிப்புரை யெழுதி அதனோடும்) நூல்முழுவதையும் பூர்த்திசெய்து வெளியிடும் நோக்கத் தோடு முதன்முதலில் இந்த அறத்துப்பாலை வெளியிடுகின்றேன்.

இந்தப்பதிப்பை நடத்தும்போது, தமிழ்லெக்ஷிகன் தலைமைப் பண்டித ராகிய ஸ்ரீ. உ. வே. மு-இராகவையங்கார்ஸ்வாமிகள் பார்வையிட்டு வெளி யிட்டுள்ள திருக்குறட் பிரதியையும் வேறு சில பிரதிகளையும் வைத்து ஒப்பு நோக்கிப் பாடபேதங்களைக்குறித்துள்ளேன்.குறிப்புரையில் இலக்கணப்பகுதி மிகுதியாகஇருந்ததனால்,சிலவற்றைஅடித்துவிட்டும்,விளங்காதிருக்குமென்று தோன்றிய சில விடங்களை விளக்கியும் இங்ஙனம் சில மாறுதல்கள் செய் துள்ளேன். அங்ஙனம் யான் கைவைத்ததனால் ஒருகால் எதேனும் இப்பதிப் பிற் பிழைவந்திருக்குமோ என்று அஞ்சுகின்றேன். என்னுடைய கருத்துக் குறைவினால் பிழை நேர்ந்திருப்பின், அறிஞர் தாம் பொறுத்துக்கொள்வ தோடு அப்பிழையை அடியேனுக்கும் தெரிவித்தால், அவர்கள்திறத்து நன்றி யறிதலோடு அப்பிழைகளைத் திருத்திக்கொள்வேன்.

எனது இம்முயற்சியைக் கற்கும் நிலையிலுள்ளோர் ஆதரிப்பின், அஃது மேன்மேலும் யான் முயற்சிசெய்வதற்கு ஊன்றுகோலாகு மென்பதை இங் குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனதுகாலத்தையெல்லாம் வீணுக்காமல் கல்வித்துறையிற் செலுத்தி, எனக்குத் தோன்றுத்துணையாய்நின்று திருவருள்புரியும் அருட்பெருங்கடலை அநவரதமும் எண்ணியெண்ணி வாழ்த்துகின்றேன்.

ஈசுவரஹ
ஜப்பசிமீ 15உ

இங்ஙனம்
வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யன்.

திருவள்ளுவர் வரலாறு.

திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் அகத்தியமகாமுனிவரது மரபில் தோன்றியவரென்றும், இவரது தாய் ஆதிபிற்கருவூரிற்புலையனுல்வளர்க்கப் பட்டவ ளென்றும், ஒளவை உப்பை உருவை வள்ளி என்னும் நால்வர் மகளிரும், அதிகமான் கபிலர் என்னும் இருவர் ஆடவரும் இவர்க்கு முன்பிறந்த சகோதரிகளும் சகோதரரு மாவ ரென்றும், இவர்களைத் தாயாகிய ஆதி, தந்தையாகிய திருவாரூர்ப் பகவனது கட்டளைப்படி பெற்ற அவ்விடத்திலேயே விட்டுச்சென்றன ளென்றும், ஒளவை சரசுவதியமிசமானவ ளென்றும், இவராற் சங்கப்புலவர்கள் கருவபங்கப்பட்டன ரென்றும், இவர் ஏலேலசிங்கனைப் பலவாறு சோதித்து அவனது பக்குவநிலையைக் கண்டு அவனை முதற்சீடனுகக் கொண்டன ரென்றும், இடைக்காடர் விஷ்ணுவின் அமிச மென்றும், வள்ளுவர்க்கு மனைவியாகிய வாசுகி அவர்சொற்படி கற்புமகிமையால் மணலை அன்னமாக்கிப் படைத்தன ளென்றும், ஏலேலசிங்கன்மகனுகிய அழகானந்தன் சிவனது அமிசமென்றும், கரைதட்டிச்சாய்ந்துபோன ஏலேலசிங்கனது வர்த்தகக்கப்பல் திருவள்ளுவர்கையால் தொட்டமாத்திரத்திற் சரிப்பட்டு நின்ற தென்றும், இவர் பொதியமலைக்குச் சென்று அகத்தியரைக் கண்டு அவர்க்கு இந்நூலைக் காட்டி அங்கீகரிப்பித்தன ரென்றும், இங்ஙனம் பலவாகச் சரித்திரத்தை விரித்துக் கூறுவர். இவற்றுள், சில, கபிலரகவலென வழங்குவதிலுங் காணப்படுகின்றன. ஆதிபகவராலே விடப்பட்ட ஏழாவது குழந்தையாகிய இவரை ஒருவேளாளன் கொண்டுபோய்த் தன் மனைவிகையிற் கொடுத்து வளர்த்து வாசுகியென்பவளை மணஞ்செய்வித்துப் பரலோகஞ்சென்றன ரென்றும், அக்குமாரர் மயிலாப்பூரில் "உள்ளூரொடுவாழாமல் ஊர்ப்புறஞ்சேரிசார்ந்து, தெள்ளுசொற் புலமைவாய்ந்து சேலேநெய்திருந்தவாற்றல், வள்ளுவனென்னூர் பல்லோர் வளமையோனென லோராரே" என்றும் கூறுப.

திருக்குறள் செய்தருளிய தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் வரலாறு இங்ஙனெல்லாம் கூறப்படினும் இவற்றில் எம்மாத்திரம் உண்மையென்பது ஆராய்ச்சி செய்யவேண்டுவதாகவே யுள்ளது.

கபிலரகவலில் ஆதியென்பவட்கும் பகவனென்பவனுக்கும் புத்திரராகப் பிறந்தவர் திருவள்ளுவ ரென்று இவர் பிறப்புக் கூறப்படாநிற்க, யாளிதத்த னென்பானுக்கும் பார்ப்பினியென அவனுற்கருதப்பட்ட ஒரு புலைச்சிக்கும் பிறந்தவர் இவ ரென்று ஞானமிருதம் என்ற தமிழ்நூல் கூறுகின்றது. இங்ஙனம் ஒன்றோடொன்று மாறுபட எழுதி வைக்கப்பட்டிருத்தலால், இன்னதுதான் வாய்மையானது என்று துணிந்துசொல்லத்தக்க பேராதாரம் எதுவும் இன்று.

இங்ஙன் இவருடைய பிறப்பைப்பற்றியானபோது இவருடையகுலந் தான் இன்னதெனத் துணிய வியலுமோ? இனி, ஒருசாரார் வள்ளுவ ரென்று இவர்க்குள்ளபெயரைக் கொண்டு இப்புலவரை வள்ளுவக்குலத்

தின ரென்பர்: அன்னூர் "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமக் நான்கின், திறந்தெரிந்து செப்பிய தேவை - மறந்தேயும், வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற், கொள்ளா ரறிவுடையார்" என்ற திருவள்ளுவமாலையையும், "மெய்த்திரு வள்ளுவனுர் வென்றுயர்ந்தார் கல்வி நலந், துய்த்தசங்கத் தார்தாழ்ந்தார் சோமேசா - உய்த்தறியின், மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங், கற்ரு ரனைத்திலர் பாடு" என்ற சோமேசர்முதுமொழிவெண்பாவையும் தம்கூற்றுக்கு மேற்கோளாகக் காட்டுவர்: அவருரையைமறுப்பார் திருவள்ளுவமாலையிற் கூறிய "வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்கொள்ளாரீ அறிவுடையாரீ" என்பதே அன்னூரை வள்ளுவக்குலத்தினரென்பது கொள்ளத்தக்கதன்று என மறுக்கின்ற தென்றும், சோமேசர்முதுமொழிவெண்பாவினுரிரியர் தாம் கர்ணபரம்பரையிற் கேட்டதுமாத்திரத்தைக்கொண்டு சரித்திரவுண்மை யை யாராயாது குறளுக்குக் காட்டாக ஒருசரிதையைக் கூறுவதென்று அம் மாத்திரமே கருதிக் கூறிரு ரென்றும், கல்விநலந்துய்த்த என்று அடை மொழிகொடுத்த சங்கத்தாரைக் கல்லாதாரென்று மாறுபடுபொருண்மொழி யென்னும் வழுப்படக் கூறியதும் அவர் ஆராய்ந்துகூருமையைப் புலப்படுத் தும்என்றும் கூறுவர். (இது வழுவன்று என்று சாதிக்கவேண்டுவார் பெரும் புலவரான திருவள்ளுவரோடு ஒப்பிட்டுப்பார்க்கின் சங்கத்தார் கல்லாதவராவ ரென்ற கருத்தாற் கூறியதென்ப.) இனி, மற்றொருசாரார் யானைமேல் மூவசறைந்துஅரசாணைதெரிவிக்கும்வள்ளுவக்குலத்தாரால் வளர்க்கப்பெற்றுச் சிறப்படைத்தவ ராதலால், இவர்க்கு வள்ளுவரென்ற அப்பெயர் நிலைத்த தென்பர். வேறுசிலர் வண்மைக்குணமுடையவராதல்பற்றிவந்த பெயரென் பர்: சில உரையாசிரியர்களோ திருவள்ளுவரென்ற பெயரைக் காரணப்பெய ராகக் கொள்ளாது இயற்பெயரென்று கூறியுள்ளனர். இங்ஙன் கர்ணபரம் பரையில் தாம் கேள்வியுற்ற வகையாகவும் அவரவர்கட்குத் தோன்றியபடி கற்பனையாகவும் வழங்குவதுகொண்டு, இந்தத் திருவள்ளுவருடைய பிறப் பைப்போலவே இவருடைய குலத்தைப்பற்றியும் யாதொன்றும் துணிந்து எழுத இயலாது.

இனி இவர் பிறந்துவளர்ந்த ஊரைப்பற்றிச் சற்று ஆராய்வோம்: "உப்பக்கநோக்கி * உபகேசிதோண்மணந்தா, னுத்தரமாமதுரைக்கச்சென்ப - இப்பக்கம், மாதானுபங்கி மறுவில்புலச்செங்காப், போதார்புனற்கூடற்கச்சு"

---

* உபகேசிஎன்பது - நப்பின்னையைக் காட்டுமென்று நேமிநாதவுரை யால் விளங்குவதால், இதற்கு வேறு வகையாகப் பொருள்கூறுதல் சிறவாது: கண்ணபிரானே உபகேசி தோண்மணந்தானென்று கூறியதற்கு எற்பத் திரு வள்ளுவரை மாதானுபங்கிமருவி என்று கூறியிருக்கின்ற தென்றும், இத் தொடர்-மாதானுபங்கி யென்பாரே மனைவியாகப்பொருந்தியவனென்று திரு வள்ளுவனுர்க்கு அடைமொழியாக வந்துள்ள தென்றும், ஆகவே இவருடைய மனைவியார்பெயர் மாதானுபங்கி என்பதாகவேணும் என்றும், 'மாதானுபங்கி மறுவில்' என்ற பாடம் தவறுனதாக இருக்குமென்றும் ஒருசாரார் ஊகித்துக் கூறுகின்றனர்.

(இதன்பொருள்:—வடதிசையைக்குறித்து நப்பின்னைப்பிராட்டியை மணந்த கண்ணபிரானே வடமதுரைக்கு அச்சுஎன்பர்: இப்பக்கத்தை [தென் திசையை] நோக்கி மாதானுபங்கியும் குற்றமற்ற செங்நாப்போதாருமாகிய திருவள்ளுவர் தென்மதுரைக்கு அச்சுஆவர் என்பது. அச்சு-ஆதாரம்.) என்று கூறியிருப்பதை நோக்குமிடத்து இவர் பிறந்துவாழ்ந்த இடம் தென்மதுரை யென்று துணியலாகும். ஆனாலும், ஒருசாரார், இப்புலவர் பிறந்த ஊர் மயிலேயென்று சாதிக்கின்றனர்: ஆயினும், அதனை நாட்டுதற்குக் காட்ட லாகும் பழஞ்சான்று யாதொன்றும் தக்கதாகக் காணப்படவில்லை.

இவரதுதொழில் நெய்தற்றொழி லென்பர். தமிழ்நாவலர்சரிதையில், 'திருவாலங்காட்டுத் திருநடனங் கண்டீரோ? என்று முனிவர் கேட்க, வள்ளுவர்பாடியது' என்று "பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத், தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி, விழைநக்கி நூல்நெருடு மேழை யறிவேனே, தழைநக்குஞ் பிஞ்ஞகன்றன் கூத்து" என்ற வெண்பா எழுதப்பட்டுள்ளது. இச்செய்யுளில் 'நாவிவிழைநக்கி நூனெருடுமேழை' என்று தம்மையே கூறிய தாக வருதலாலும், கர்ணபரம்பரைச் செய்தியிலும் இவர் ஆடைநெய்தற் றொழிலைக்கொண்டவ ரென்று கூறப்படுதலாலும், நெய்தற்றொழிலே இவர் கொண்டிருந்த தொழிலாயிருக்கலாம். இப்பாட்டின் வரலாறு வேறுவகை யாக இக்காலத்து வழங்கப்படும்.

இவரது மதம் இன்ன தென்று எவ்வித்தத்திலும் நன்கு விளங்கவில்லை. இவர் இந்நூலின் முதலிற் கூறிய கடவுள்வாழ்த்தும், பல சமயங்கட்கும் பொதுவாகவே யுள்ளது; மற்ற விஷயங்களும் பெரும்பாலும் இப்படியே: இவரைச் சைவரென்றுவது வைஷ்ணவரென்றுவது ஒருசார்பாகக் கூறி யாவரும் ஒத்துக்கொள்ளும்படி நிலைநிறுத்துதற்குத் தக்கஆதாரமொன்று மில்லை. இவர்க்கு நாயனா ரென்று வழங்குகிற பெயர்மாத்திரத்தைக் கொண்டு இவரைச் சைவ ரென்று சாதிக்க லாகாது; நாயனா ரென்னும் அச் சொல் சைவசமயத்தில்மாத்திரமேயன்றி வைஷ்ணவசமயத்திலும் ஜைநசமய த்திலும் கடவுளுக்கும் அடியார்கட்கும் பெயராக வழங்குதல் உணர்க: திருக் கோவையாருரையிற் பேராசிரியர் கடவுளை 'நாயனார்' என்றதும், சீவகசிந்தா மணியுரையில் நச்சினார்க்கினியர் தந்தையை 'நாயனார்' என்றதும் பிறவுங் காண்க. இது நிற்க: இவரது மதம் ஜைநமா யிருக்கலா மென்று சிலர் ஊகிக் கிறார்கள்; அதற்குக்காரணம்-திருக்குறளில், கடவுள்வாழ்த்தில் 'பகவன், அறி வன், மலர்மிசையேகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், ஐந்தவித்தான், அறவாழியந்தணன், எண்குணத்தான்' என அருகக்கடவுளுக் குப்பெயராக வழங்குஞ் சொற்களை உபயோகித்திருத்தலும், அருகசரணம் சித்தசரணம் * சாதுசரணம் தர்மசரணம் என்ற ஜைநசமயக்கடவுள்வணக்கம்

* வான்சிறப்புச் சித்தசரணத்துக்கு அறிகுறியாதல், உய்த்துணரத்தக் கது; எல்லாவுலகத்துக்கும் மேலிடத்திலுள்ளவன் சித்தனென்பது ஜைநசம் பிரதாயம்.

நான்கிற்கும் ஈடாகக் கடவுள்வாழ்த்து வான்சிறப்பு நீத்தார்பெருமை அறன்வலியுறுத்தல் என்னும் நான்கு அதிகாரங்களைப் பாயிரமாக நூலின் முதலில் முறையே கூறியிருத்தலும், ஜைநர்க்குச் சிறப்பாகவுள்ள புலால்மறுத்தல் கொல்லாமை என்ற ஒழுக்கங்களை மிகவற்புறுத்திக் கூறுதலும், அதிலும் "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற, னுயிர்செகுத்துண்ணாமை நன்று" எனயாகத்தை மறுத்தலும் முதலியன. அந்தத் திருக்குறளில் "உலகியற்றியான்," "அந்தணர்நூல்," "மறப்பினுமோத்துக் கொளலாகும்பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்," "அறுதொழிலோர் நூன்மறப்பர்" "அவியுணவி னொன்மேற்" என்பவை முதலாகக் கூறியனகொண்டு இக் கொள்கை மறுக்கப்படும். இவர் வேதம், கடவுள், உயிர், பூதமைத்து, புலால் மறுத்தல், தவம் முதலியன கொண்டிருத்தலால், பௌத்தருமாகார். இனி, "மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான், தாஅய தெல்லாம் ஒருங்கு," என்று கூறியிருத்தலாலும், "தாமரைத்தண்ணீர்மன்னுமலர்தாட் டுயிலி னினிதுகொல், தாமரைக்கண்ணானுலகு" என்று சிற்றின்பத்தை எல்லாவற்றினுஞ்சிறந்த மோட்சலோகத்துப் பேரின்பத்தினும் சிறந்தது என்று சொல்லவேண்டிய விடத்துத் தாமரைக்கண்ணானுலகு என்று திருமாலினது ஸ்ரீவைகுண்ட லோகத்தினின்பத்தையே குறித்தலாலும், இவ்வுலகமாகிய லீலாவிபூதிக்கும் ஸ்ரீவைகுண்டமென்கிற நித்தியவிபூதிக்கும் இறைவன் திருமாலே யென்று தெரிவித்த ஆசிரியர் திருமாலுக்குரிய அகாரத்தையே முதன் மொழியாகத் தொடங்குதலாலும், இங்ஙன் அகச்சான்று பல இருத்தலால் இவரை வைஷ்ணவர், தம்மதத்தவரென்று சாதிக்கலாம். ஆயினும், தாமரைக்கண்ணானென்பது "மலர்மிசையேகினான்" என்றுற்போன்று அடியார்களின் இதயகமலத்தின்கணுள்ளானென்ற பொருளைக் காட்டலாமாதலால் திருமாலையே சிறப்பாகக்காட்டுவ தென்று கொள்ளவேண்டியதில்லையென்றும், "அடியளந்தான்றோற்றம்" என்று கூறியமாத்திரத்தானே திருமாலினிடத்துப் பக்தியினுற்றான் கூறினு ரென்று கொள்ளமுடியாதென்றும், பாணினி பகவான் "அ இ உண்" என்று தொடங்கினுற்போல இந்நூலாசிரியர் மங்கள வெழுத்தாக அகரத்தைத் தொடங்கியிருக்கலாமென்றும், ஆகவே, இந்த அகச்சான்றுகள் இவரை வைணவரென்று நிலைநாட்டப்போதாதென்று வைணவர் கூறுவதற்கு மறுப்புக்கூறவியலும்: இங்ஙனிருத்தலால், இந்நூலாசிரியரை வேதவேள்விகளையும் சாதிகளையும் உடன்பட்ட வைதிகக் கொள்கையினரென்றுசொல்லலாவதன்றி, இன்ன மதத்தவர்தாம் என்று உறுதியாகச்சொல்லிநாட்டுதற்குஏற்ற சிதந்தவது ஒன்றும் காணப்பட்டிலது. இங்ஙன் இருப்பதுகருதியே திருவள்ளுவரின் திருக்குறளைப்பற்றி "ஒன்றேபொருளெனின் வேறென்பவேறெனின், அன்றென்பவாறுசமயத்தார்-நன்றென்ன, எப்பாலவ ருமியையவே வள்ளுவனார், முப்பால்மொழிந்தமொழி" என்று கூறியதுமென்க.

இவர் காலம்:—இத்திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றி மணிமேகலையிலும் கல்லாடத்திலும் கூறியிருத்தலாலும், இறையனாரகப்பொருளினது உரையில் திருக்குறட்பாக்கள் எடுத்து ஆளப்பட்டிருத்தலாலும், மணி

மேகலை, அதனோடு சமகாலத்ததாகிய சிலப்பதிகாரம், இறையனாரகப்பொரு ளுரை, கல்லாடம் என்னும் இவற்றிற்கு முந்தியது இந்நூலென நன்கு அறி யப்படுகின்றது. இன்னும் சங்கத்துநூல்கள் பலவற்றிலும் திருக்குறளின் கருத்துக்களும் சொற்பொருள்களும் காணப்படுதலால், திருவள்ளுவராற் சங்கம் அழிக்கப்பட்டதென்பதும், சங்கத்து அரங்கேறிய நூல்களெல்லா வற்றுள்ளும் திருக்குறளே இறுதியான தென்பதும் பொருந்தாவாம். இனி ஒருசாரார், ஆசிரியர் தொல்காப்பியனார் மொழிக்குமுதலாகெழுத்தைக் கூறுமிடத்து "சகரக்கிளவியுமவற்றோரற்றே, அ ஔ ளவெனுமூன்றலங் கடையே" என்று கூறியதற்கு ஏற்ப, இத்தத் திருக்குறளில் வடமொழியல் லாது அகரத்தை முதலிற்பெற்ற சகரத்தை ஆதியாகக்கொண்ட தமிழ்ச் சொல்லைத் திருக்குறளாசிரியர் தமது நூலகத்து எடுத்தாளாமையால், இந்நூல் தொல்காப்பியர்காலத்தை ஒட்டியதாக இருக்கலா மென்கின்றனர்: அது பொருந்துவதாகத் தோன்றவில்லை: அகரத்தை முதலிற்பெற்ற சகரத்தைக் கொண்ட சொல் தமிழ்மொழியிலில்லாமையால் அவ்வாறானசொல் வட சொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருக்குமன்றி எவராலும் தம்அறி யாமையானன்றித் தமிழ்மொழிச்சொல்லாகப் பிரயோகிக்கமுடியாதன்றே! இனி, ஐயப்பொருளொன்றே கூறிய கொல் என்னும் இடைச்சொல்லை "என் கொல்"(2)என்று அசைநிலையாகவும்,உருவுவமத்தில்உருபாகவரவேண் டிய 'போல'என்ற சொல்லை"வெயில்போலக்காயும்" (77)என்று வினையுவம வுருபாகவும், மற்று என்னுஞ்சொல்லை "மற்றின்பம்" (173) என்று மற்றை யென்னுஞ் சொற்போலப் பிரிது என்ற பொருள்படவும் பிரயோகித்தும், "அதுணர்வார்" (257) என்று குற்றியலுகரம்போல முற்றியலுகரத்தின் மீது உயிரெழுத்தேற்றியும் இங்ஙன் தொல்காப்பியத்திற்குமுரணாக இத்தத் திருக்குறளிற் பல வந்துள்ளதனால், இந்நூலாசிரியர் தொல்காப்பியனுர்க்குப் பலநூற்றாண்டுகள் காலத்தினுற் பிற்பட்டவரா யிருக்கவேண்டும். ஆனால், "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின், நஞ்சுமுண்பர்கனிகாகரிகர்" என்ற நற்றிணையடிகளும், "என்றும், பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி அறனறிதல், சான்றவர்க்கெல்லாங் கடனால்", "நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவா, நெஞ்சத்திற்குறுகிய கரியில்லையாகலின்" என்ற கலித்தொகையடிகளும்,முறையே "பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டுபவர்", "அறிவினுளுவ துண்டோ பிறிதினோய், தந்நோய் போற் போற்றுக்கடை", "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்ற திருக்குறள்களே அடியொற்றியன: இங்ஙனெல்லாம் வருதலின் நற்றிணைப்பாடல் கலித்தொகைப்பாடல் என்ற இவற்றிற்கெல்லாம் முந்தித் திருக்குறள் தோன்றிப் பரவியிருக்கவேண்டும். இக்ஙனகவும், கடைச்சங்கநூல்கட்கெல்லாம் குறள் காலத்தாற் பிந்தியது என்று சாதிக்கவேண்டுவோர் நற்றிணை முதலியவற்றிலிருந்தே குறளாசிரியர் கூறினுரென்று சொல்லவுங் கூடும்: என்றாலும்,"நிலம்புடை பெயர்வதாயினு மொருவன், செய்தி கொன்றோர்க் குய்தியில்லென, அறம்பாடிற்றே

ஆயிழைகணவ" என்று வரும் புறநானூறு "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லே, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக் குறளைக் கருதியே கூறியது எனத் தெற்றென விளங்குதலால், தொகைநூல் களிலும் எடுத்தாளும்படி அத்துணைப் பழமை பொருந்தியது இத்தத் திருக் குறள் என்பதிற் சிறிதும் ஐயம் இல்லே: ஆதலால், கடைச்சங்ககாலத்தில் முற்பட்டிருந்தவர் திருவள்ளுவரென்று கூறுவதன்றி, திருவள்ளுவருடைய காலத்தைக் குறித்து இன்ன நூற்றாண்டினரென்று திண்ணமாகக் குறிப் பிடமுடியாது.

திருவள்ளுவர் பெயர்களும் பெயர்க்காரணங்களும்:—(1) திருவள்ளு வர், (2) தேவர், (3) முதற்பாவலர், (4) மாதானுபங்கி, (5) தெய்வப்புலவர், (6) செந்நாப்போதார், (7) பெருநாவலர், (8) நான்முகனார், (9) புலவர், (10) பொய்யில்புலவர், (11) நாயனார் என்பன இவர்க்கு வழங்கும் பெயர்கள்.

(1) **திருவள்ளுவ** ரென்ற பெயரைக் குறித்து முன்னரே எழுதப்பட்டது. (2) **தேவர்** - தெய்வத்தன்மையையுடையவர்; மனிதரினும் மேலாக நன்கு மதித்துத் தேவர்போல உயர்த்திக் கொண்டாடப்படுபவர்; ஞான அநுட் டானங்களால் விளங்குபவர். "தேவிற் சிறந்த திருவள்ளுவர்" என்று திருவள் ளுவமாலையில் வருவது காண்க. (3) **முதற்பாவலர்**-முதன்மையுடைய பாவலர்; என்றது, கவிகளுட் சிறந்தவ ரென்றபடி; [பா வலர் - பாடல்பாட வல்லவர்: பா - செய்யுள்.] அன்றி, முதற்பா வலர் எனப் பிரித்து, நால்வகைப்பாக்க ளுள்ளும் 'முதற்பா' எனப்படுகின்ற வெண்பாவால் நூல்செய்த வல்லமை யுடையவர் என்றுமாம்; பலவகை வெண்பாக்களுள்ளுங் குறள்வெண்பா முத லாதலுங் காண்க. (4) **மாதானுபங்கி** யென்பது இவரது மனைவிக்குப் பெய ரென்று கொள்ளுதலுண்டு என்று முன்னர்க் காட்டப்பட்டது. இனி, இவ் வாசிரியர்க்கே பெயரெனக் கொள்ளின், இது, தாயை நிகராகக்கொண்டு நடக்கின்ற ஒழுங்கின ரென்று பொருள்படுதலால், தாய் பிள்ளையினிடத்து அன்புசெய்தல்போல இவர் உயிர்களிடத்து அருள்செய்பவ ரென்க; ("தாயொக்கு மன்பின்" என்றார் பிறரும்.) மாத்ரநுபங்கி எனப் புணராது மாதானுபங்கி என நின்றது, பிராகிருதவிலக்கணத்தா லென்ப. இனி, தாயோ வென்னத்தக்கவரென்றும் பொருள்படும். "பெற்றவரு நற்குருவும் பேணி யொருபொருளே, யுற்றிருகா லன்றியுரை செய்யார்—பற்றி, யொரு பொருளைப் பத்துப் பொருளாகச் செப்பித், தருகையால் வள்ளுவரே தாய்" என்பது காண்க. (5) **தெய்வப்புலவர்** - தெய்வத்தன்மையையுடைய அறிவையுடையவர். அறிவுக்குத் தெய்வத்தன்மை-எல்லாப்பொருள்களையும் உள்ளது உள்ளபடி அறிதல். "சிறப்பி னுகிய பெயர்கிலக் கிளவிக்கும், இயற் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையிலே சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், கல்லியாலாகிய பெயர்க் குப்பின்னே இயற்பெயர் வருதற்கு 'தெய்வப்புலவன் திருவள்ளுவன்' என

உதாரணங்காட்டி யிருத்தலால், திருவள்ளுவர்க்கு 'தெய்வப்புலவர்' என்பது கல்விபற்றிவந்த சிறப்புப்பெய ரென்று தெரிகிறது. (6) செந்நாப்போதார் - கவிக ளாகிய தேனைச் சொரிகிற செவ்விய நாவாகிய மலரை யுடையவ ரென்று பொருள்: "மாதாநுபங்கி மருவிபுலச் செந்நாப்போதார்" என்று வழங்கியிருத்தலும் "என்றும் புலராது" என்ற இறையனூர் பாசுரத் தில் திருவள்ளுவர்வாய்ச்சொற்குக் கற்பகத்திருமலர் உவமை கூறப்பட்ட வாறும் உணர்க; அன்றி, (திருவள்ளுவமாலையில்) "வள்ளுவன்வாய தென் வாக்கு"என்று நாமகள்தானே கூறியதாக வந்திருத்தற்கு ஏற்பச் (சரசு வதிக்கு இருப்பிடமான) சிவந்த நாவாகிய மலரை யுடையவ ரென்றுங் கொள்ளலாம். (போது - மலர்.) (7) பெருநாவலர்-பெருமையுடைய புலவர்; நாவலருட் பெரியவ ரென்க. நாவலர் - கவநசக்தியும், போதநாசக்தியும், பிரசங்கசக்தியும் முதலிய நாவின் வல்லமை யுடையவர். இப்பெயர், திருவள்ளுவமாலையில் தொடித்தலைவிழுத்தண்டினூர்செய்யுளில் வந்துள்ளது. (8) நான்முகனார் - பிரமதேவனது அமிசமாகப் பிறந்தவர்; (திருவள்ளுவ மாலையில்) "நான்மறையின் மெய்ப்பொருளை மூப்பொருளா நான்முகத் தோன், தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை, வந் திக்க சென்னி வாய் வாழ்த்துக நன்னெஞ்சே, சிந்திக்க கேட்க செவி" எனவும், "ஐயாறு நூறு மதிகார மூன்றுமா, மெய்யாய வேதப் பொருள் விளங்கப்—பொய்யாது, தந்தா னுலகிற்குத் தான் வள்ளுவனாகி, அந்தாமரை மே லயன்" எனவும் கூறியன காண்க. (9) புலவர் - புலம் அல்லது புலமை உடையவர்; புலம் - தேர்ந்த அறிவு: புலமை - கல்வித்தேர்ச்சி; அதாவது-பல வேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறி வுடைமை, பாண்டித்யம். இப்பொதுப்பெயர், திருவள்ளுவர்க்குச் சிறப்பாக வழங்கும். (திருவள்ளுவமாலையில்) "புலவர் திருவள்ளுவ ரன்றிப் பூமேற், சிலவர் புலவ ரெனச் செப்பல்—சிலவு, பிறங்கொளிமாலைக்கும் பெயர் மாலை மற்றும், கறங்கிருண்மாலைக்கும் பெயர்" என மதுரைத் தமிழாசிரியர் செங் குன்றூர்க்கிழார் கூறியதுகொண்டு அறிக. (10) பொய்யில்புலவர் - பொய்ம்மையில்லாதபுலவர்; பொருள்களை உள்ளபடி உணரவும், உணர்ந்த படி உரைக்கவும் வல்ல அறிவை யுடையவரென்றபடி. சித்தலைச்சாத்தனார் மணிமேகலையில் "பொய்யில் புலவன் பொருளுரை தேறுய்" என்றனர். (11) நாயனார் - தலைமையானவர்: இப்பெயர், நச்சினார்க்கினியருரையிற் பயின்றுள்ளது.

திருக்குறள் வரலாறு.

திருக்குறளென்ற அரிய பெரிய நூலினது சொற்செறிவு பொருட் பொலிவு முதலிய பெருமைகளை இத்தன்மையன வென்று எடுத்து உரைக்க இயலாமல் "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" எனவும், "பழுததமிழ்ச்சொல்லருமை நாலிரண்டி" எனவும், "கடு

கைத் தலைத்தேழ்கடலைப் புகட்டிக், குறுகத் தறித்த குறள்" எனவும் முன்னோர் வியந்து கூறியிருத்தலின், இதன்பெருமை இத்துணைத்தென அளவிடுதற்கு அருமையானது. கபிலர், பரணர், கக்கீரர், மாமூலர், கல்லாடர், நல்லந்துவனர், பாரதம்பாடிய பெருந்தேவனர் முதலிய சங்கப்புலவர் இந்நூலைக் குறித்துச் சிறப்பித்துச் செய்யுள் செய்தன ரென்றால், இதன் சிறப்பை எடுத்து உரைக்க வல்லார் யார்? அன்றியும், கடைச்சங்கப் புலவரி லொருவரும், மணிமேகலை நூலாசிரியரும், சங்கத்தி லரங்கேற்றுதற் பொருட்டு வரும் நூல்களிற் குற்றங்காணுந்தோறும் மனம்பொறாது அப் பிழையைக் கேட்கும்படிநேர்ந்த தம் தலைவிதியை மிகநொந்து தமதுதலையி லறைந்துகொண்டேவருகையால் எப்பொழுதும் தலை புண்பட்டுச் சீயோ டிருக்கிற காரணம்பற்றி 'சித்தலைச்சாத்தனர்' என்று பெயர்பெற்றவருமாகிய மதுரைக்கூலவாணிகன்சாத்தனர், இத்திருக்குறளைக் கேட்டபொழுது, இவ்வொருநூலுமே யாதொருகுற்றமுமில்லா திருந்த தென்று மிகவுவந்து "மும்மலியு முக்நாடு முந்நதியு முப்பதியு, மும்முரசு முத்தமிழு முக்கொடியு— மும்மாவுந், தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே, பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்" என்று கொண்டாடிப் பாடினர். இம்மகிமை, அவருடனிருந்த மருத்துவன் தாமோதரனர் இந்நூலைச்சிறப்பித்து "சீர்திரீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய், மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி, மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால், தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு" என்றதனால் தெரிகிறது. "பல்காற் பழகினுந் தெரியா வுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கும்" எனப் பிற்காலத்தாரும் இதன்பெருமையை ஓதியிருத்தல் காண்க. "ஆலும்வேலும் பல்லுக்குஉறுதி, நாலும்இரண்டும் சொல்லுக்குஉறுதி" (இதில், ஆல் - ஆலம் விழுது. வேல் - கருவேலங்கொம்பு. நால் - நாலடியார். இரண்டு - குறள்) என்ற பழமொழியையும் உணர்க.

இத்திருக்குறள் "நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைக்கிலையொ டாங் கீழ்க்கணக்கு"

எனக் கூறப்பட்ட சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் ஒன்று மென அறிக. பதினெண்கீழ்க்கணக்குக்களாவன:—க. நாலடியார், உ. நான்மணிக்கடிகை, [நானூற்பது—] ங. இனியவைநாற்பது, ச. இன்னாநாற்பது, ஞ. கார்நாற்பது, ஃ. களவழிநாற்பது, [நால்ஐந்திணை—] எ. ஐந்திணையைம்பது, அ. ஐந்திணையெழுபது, கூ. திணைமொழியைம்பது, கo. திணைமாலைநூற்றைம்பது, கக. மூப்பால் [—திருக்குறள்], கஉ. திரிகடுகம், கங. கோவை [—ஆசாரக்கோவை], கச. பழமொழி, கஞ. மாமூலம் [—சிறுபஞ்சமூலம்], கஃ. காஞ்சி [—முதுமொழிக்காஞ்சி], கஎ. ஏலாதி, கஅ. கைக்கிலை என்பன. ('நானூற்பது' என்பதிலுள்ள நால் என்பதை 'ஐந்திணை'

என்பதனோடுங் கூட்டுக; கூட்டவே, 'நால்ஐந்திணை' என்பது - ஐந்திணைப் பொருளுணர்த்தும் ஐந்திணையைம்பது முதலிய நான்குநூல்களின்மேல் நிற்கும்.)

கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என இருவகை; அவற்றில், மேற்கணக்காவது - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப்பாக்களாலும் நாற்பதுமுதல் ஆயிரத்துமுந்நூற்றுமூப்பதாக வருவது: கீழ்க்கணக்காவது - அறம்பொருளின்பங்களைப் பற்றிய வெண்பாக்களினாலும் வெண்பாவினினங்களாலும் அத்தொகைபட வருவது; இதனை, பன்னிருபாட்டியற் சூத்திரங்களால் அறிக. மிக்க அடிகளையுடைய பலவகைப் பாக்களால் வருவதுபற்றி மேற்கணக் கென்றும், குறைந்த அடிகளையுடைய ஒருவகைப்பாவால் வருவதுபற்றிக் கீழ்க்கணக்கென்றுங் காரணக்குறியமைந்தன வென உணர்க.

திருக்குறளின் பெயர்கள்:—(1) திருக்குறள், (2) முப்பால், (3) பொய்யாமொழி, (4) வாயுறைவாழ்த்து, (5) உத்தரவேதம், (6) தெய்வநூல், (7) திருவள்ளுவர், (8) தமிழ்மறை, (9) பொதுமறை, (10) திருவள்ளுவப் பயன், (11) பொருளுரை, (12) முதுமொழி என்பன.

திருக்குறள் என்ற பெயரீக் காரணம்:—(1) திருக்குறள் - சிறந்த குறள் வெண்பாக்களினாலாகிய நூல்; அடையடுத்த ஆகுபெயர். கலிப்பாவினாலாகிய நூல் கலி யென வழங்குதல்போல, குறட்பாவினாலாகிய நூல் குறள் என வழங்குகின்றது. (2) முப்பால் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையுடைய நூல்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பால் - பகுப்பு. (3) பொய்யாமொழி - பொய்யில்லாத சொற்களையுடைய நூல்: உண்மைப் பொருளையுணர்த்தும் நூல்; பயன்விளைவிலே தவறுதநூல். "பொய்ப்பால பொய்யேயாய்ப்போயின பொய்யல்லாத, மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே-முப்பாலின், தெய்வத் திருவள்ளுவர் செப்பிய குறளால், வையத்து வாழ்வார் மனத்து" என்றதனால், இந்நூலின் மெய்யுணர்வுபயத்தற்சிறப்பை அறிக. பொய்யாமொழியென்பது - நூலுக்கு, அடையடுத்த கருவியாகுபெயர். (4) வாயுறைவாழ்த்து—வாயுறை - மருந்து, வாழ்த்து - வாழ்வித்தல்; உடம்புக்குஉறுதிசெய்யும் மருந்துபோல, உயிர்க்கு உறுதிசெய்து உலகத்தை வாழ்விக்கும் நூலென்க: நீதிகளை வற்புறுத்திக்கூறுவ தென்றவாறு. "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய, வந்த விருவினைக்கு மாமருந்து - முந்திய, நன்னெறி காமறிய நாப்புலமை வள்ளுவனார், பன்னிய வின்குறள் வெண்பா" என்ற பாடலில் இந்நூலை மருந்தென்றவாறு உணர்க. "வாயுறைவாழ்த்தே வயங்கு நாடின், வேம்பும் கடுவும் போல வெஞ்சொல், தாங்குதலின்றி வழிநனியபயக்குமென்று, ஓம்படைக்கிளவியின் வாயுறுத் தற்றே" என்றார் தோல்காப்பியனார். 'வாய் - வாய்மொழி, உறை - மருந்து: வாயுறை யென்பது - சொல்மருந்தெனப் பண்புத்தொகையாம். இனி,

வாய்க்கண் தோன்றிய மருந்து என வேற்றுமைத்தொகையுமாம். மருந்து போறலின், மருந்தாயிற்று' என்றது, தொல்காப்பியவுரை. (5) உத்தர வேதம்-வடமொழிவேதத்தின்பின் தோன்றிய வேதம்; வேதத்தின் பிற்பகுதி யெனப்படுகிற உபநிஷத்துக்களின் கருத்து அமைந்தது. (6) தெய்வநூல் - தெய்வத்தன்மையுடைய நூல்; சங்கமேறியது. (7) திருவள்ளுவர்-திருவள்ளுவராற் செய்யப்பட்ட நூல்; ஆசிரியர் பெயர் நூலை யுணர்த்தினமையால், கருத்தாவாருபெயர். "வள்ளுவர் தொல்காப்பியமே", "தொல்காப்பியத் திருவள்ளுவர் கோவையார்" என்பன காண்க. (8) தமிழ்மறை - தமிழ்வேதம்; வடமொழிவேதத்தின் பொருளைத் தமிழில் உரைத்தது: வடமொழியில் வேதம்போலத் தமிழ்மொழியில் எல்லாப் பொருள்களுக்கும் சிறந்த பிரமாண மாக யாவராலும் அங்கீகரிக்கப்படுவது; "ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி, வேதப்பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோர், உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே, வள்ளுவர் வாய்மொழி மாண்பு" எனவும், "வேதப்பொருளை விரகால் விரித்துலகோர், ஓதத் தமிழா லுரைசெய்தார் - ஆதலால், உள்ளுந ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப, வள்ளுவர் வாய்மொழிமாட்டு" எனவும், "அற முப்பத்தெட்டுப் பொரு ளெழுபதின்பத், திற மிருபத்தைக்தாற் றெளிய - முறைமையால், வேத வீழுப்பொருளை வெண்குறளால் வள்ளு வனு, ரோத வழுக்கற்ற தூல்கு" எனவும் கூறியன காண்க. (9) பொது மறை-வடமொழி வேதம்போ லன்றி எல்லாச்சாதியார்க்கும் எல்லாச்சமயத் தார்க்கும் பொதுவான வேதம்; "செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த, பொய்யா மொழிக்கும் பொருளென்றே - செய்யா, அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை, இதற்குரிய ரல்லாதா ரில்" எனவும், "அரு மறைதை, ளேத்துஞ் சமயநூலாதும் நம் வள்ளுவனுர், புந்தி மொழிந்த பொருள்" எனவும் கூறியன காண்க. 'எல்லாநூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பு' என்பர் பரிமேலழக ரும். (10) திருவள்ளுவப்பயன்-திருவள்ளுவராற் செய்யப்பட்டதும் "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்றபடி எல்லார்க்கும் எல்லாப் பயனையும் அளிப்பது மான தொரு நூல். "அறனறிந்தோம் ஆன்ற பொரு ளறிந்தோம் அன்பின், திறனறிந்தோம் வீடுதெளிந்தோம் - மறனெறிந்த, வாளார்நெடுமாற! வள்ளுவனுர் தம்வாயாற், கேளாதன வெல்லாங் கேட்டு" என்றதனாலும், இந்நூல் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்துதலை அறிக. "எல்லாப்பொருளு மிதன்பா லுளஇதன்பா, லில்லாத வெப்பொருளு மில்லையால்-சொல்லாற், பரந்த பாவாலென்பயன் வள்ளுவனுர், சுரந்தபா வையத் தூணே" என்றதும் காண்க. (நச்சினர்க்கினியர் முதலிய உரையாசிரி யர்களும், திருக்குறளை 'திரு வள்ளுவப்பயன்' என்பர்.) (11) பொருளுரை - பொருள்நிரம்பிய சொல். கபிலர், பெரிய பனைமரத்தின் சாயையையும் தன்னுள் அடக்கிக்காட்டுஞ் சிறு புல்நுனிநீரையும்; பரணரும், பொன்முடி யாரும், இரண்டு அடிகளால் உலக முழுதையுந் தாவியளந்த திருமாலின் வாமனவடிவத்தையும் இந்நூலுக்கு உவமை கூறியதனால், இத்தூற்பாக்கள்

சூத்திரம்போலச் சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனே செறித்து இனிதுவிளக்கித் திட்பநுட்பஞ் சிறந்தனவாதல் விளங்கும். "பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு, தெரிந்து திறந்தொறுஞ் சேரச்-சுருங்கிய, சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல், வல்லா ரார் வள்ளுவ ரல்லால்" என்றதும் காண்க. (12) முதுமொழி - பழமையான சொல். பின் னிரண்டடியில் ஒவ்வொரு திருக்குறளையும் மூன்னிரண்டடியில் அக்குற ளின் நீதிக்குத் திருஷ்டாந்தமாக ஒவ்வொருசரித்திரத்தையும் இடையில் 'சோமேசர்' எனச் சிவபிரான்பெயர் முன்னிலையையும் அமைத்துப் பாடப் பெற்றதாகிய 'சோமேசர் முதுமொழிவெண்பா' என்ற தூலின்பெயரில் 'முதுமொழி' என்ற தொடர் திருக்குறளின்மேல் நிற்றல் காண்க.

இங்ஙன் முப்பால் முதலிய சிறப்புப்பெயர்பெற்ற இத்திருக்குறள் இன்னநூல்வழியே தோன்றிய தென்று கொள்ள இடமில்லாமையால், முதனூலின்பாற்படு மென்பர். இனி, தருமசாஸ்திரம் அர்த்தசாஸ்திரம் காமசாஸ்திரம் முதலியவற்றின் கருத்தைத் தழுவியது இக்நூலென்பதை நோக்குமிடத்து வழிநூலெனக் கொள்ளுதலே பொருந்தும். "எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பு," "வியாழவெள்ளிகள் துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்", "ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்பு புலவி என நால்வகைத் தாக்கிக் கூறினர்" எனப் பரிமேலழகர் கூறியன இங்குக் கருதத்தக்கன.

இந்தத் திருக்குறள், அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் எனு மூன்றுபால்களையுடையது: புருஷார்த்தமாகிய அறம்பொருளின்பங்கள் மூன்றினையும் வழுவாதொழுகவே மோட்ச மடையலா மாதலால், அதற்காக வேறுவகுத்துக்கூறவில்லை. அறத்துப்பால்தானும், (1)பாயிரம், (2)இல்லறவி யல், (3)துறவறவியல், (4)ஊழ்என்று நான்குபிரிவினையுடையது: இனி, ஒருசா ரார் பிரமசரியம் காருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் நால்வகை நிலையுள், பிரமசரியம் சீடனுய் நின்றுகுருவைத்தல்லது செய்வது பிறிதின் மையின் அதனைப் புதல்வரைப்பெறுதல் என்பதனு ளடக்கி, காருகத்தம் இருபததிகாரத்தானும், வானப்பிரத்தம் பத்ததிகாரத்தானும், சந்நியாசம் மூன்றதிகாரத்தானும், எல்லார்க்கும் பொதுவாகிய ஊழ் ஓரதிகாரத்தானு மாக இங்ஙன் பாயிரம் நான்கதிகாரங்களோடு சேர்த்து முப்பத்தெட்டதி காரத்தால் அறத்துப்பாலை முடித்தா ரென்ப. (இவ்வாறுன திருக்குறளின், பொருட்பால் காமத்துப்பால்களின் அதிகாரங்கள் முதலியன குறித்து அவ் வப்பாலின் தொடக்கத்திற் கூறப்படும்.)

இத்திருக்குறள் திருவள்ளுவரால் வடநூற்பொருளை மேற்கொண்டு தமிழா லுரைப்படுகின்றமையான் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப் பால் எனப் பகுக்கப்பட்டன. தமிழ்முறையாற் பகுக்கப்பட்டுக் கூறப்படின், புறம் அகம் என்று பகுத்துக்கொண்டு கூறப்பட்டிருக்குமென்ப. இனி, தமி

முழுவும் 'அறம்பொருளின்பம்' என்று கூறப்படுவதுண்டு ஆதலால், அறத்துப் பால் பொருட்பால் காமத்துப்பால் என்று பகுத்துக்கொண்டு கூறினும், இந் நூல் தமிழ்முறையால்தான் கூறப்படுகின்றது என்று வாதித்தாலும், "அறம் பொருளின்பமுயிரெச்சநான்கின், றிறந்தெரிந்து கூறப்படும்" என்னுங் குற ளில் உபதைகளைப்பற்றிக் கூறியவை, ஆசிரியர் வடநூற்பொருளே மேற்கொ ண்டு கூறினரென்பதை வற்புறுத்தும். இந்நூல், தமிழிற்குப் பொருந்தக் கூறப்பட்டுள்ளதென்பதை "அகரமுதல" என்று அகரமுதலாகத்தொடங்கி "கூடி முயங்கப்பெறின்" என்று னகரவிறுதியால் முற்றியது குறிப்பிக்கும்.

இனி, கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலி யுறுத்தல் என்ற நான்கதிகாரமும் பாயிரமாக அமையுமாறு என்னையோ எனின்?—இதற்கு லெக்ஸிகன்ஆபீஸ் தலைமைப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. மு. இராகவயங்கார் ஸ்வாமிகள் தொல்காப்பியப்பொருளதிகார வாராய்ச்சி யென்னும் நூலிற் கூறியிருப்பது வருமாறு:—"தெய்வப்புலமைத் திருவள்ளு வனர், தம் பெருநூற்றொடக்கத்தே கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கதிகாரங்களைப் பாயிரமாகத் தனியே நிறுத்திக் கூறினரன்றே? இங்ஙனம் இந் நான்கதிகாரங்களை மட்டும் பாயிரமாக வள்ளுவனர் தனியே கொண்டது எக்காரணம்பற்றி என்ற கேள்வி நெடுக நிகழ்ந்து வருவதுண்டு. இதற்குத் தக்கவிடை இது காறும் பெறப்பட்டதில்லை. ஆயினும், தொல்காப்பியனர்கூறிய "கொடி நிலை கந்தழி" என்ற இச்சூத்திரம் அக்கேள்விக்கு ஏற்ற விடை தரவல்ல தென்பதே எங்கொள்கை. அஃதாவது - இச்சூத்திரத்திற் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள்வாழ்த்தொடு வரும் என, உயர் பின்வழிவரும் ஒருவினையொடுச்சொல்லைக் கடவுள்வாழ்த்துக்குக் கூறு தலால் அவ்வாழ்த்து முதற்கட்கூறுஞ் சிறப்புடைய தென்பதும், மற்றவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்கு உரிய வென்பதும் அறியத்தக் கன. இவற்றுட் 'கொடிநிலை' என்பது மேகத்தை உணர்த்தும்; கீழ்த்தி சைக்கண்ணே நிலைபெறுதலுடையது, நீடுநிலையுடையது என்பன இதன் பொருளாம். [கொடி - கீழ்த்திசை *] நச்சினர்க்கினியரும் இவ்விரு பொருள்களைபற்றிச் சூரியனுக்கு இப்பதத்தை இணக்குதல் காண்க. மேக வாகனனாகிய இந்திரனது திசை கிழக்காதலின் அத்திசையே மேகத்துக் கும் உரிய தென்பதும், அங்குநின்றெழுந்த கொண்டல்களே உலக தாபந்தீரப் பெய்வன என்பதும் அறியத்தக்கன. குணக்கினின்று எழுவது பற்றியே மேகம் கொண்டலெனப் பெயர்பெற்றதென்க. "ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு-காலத்திற்றோன்றியகொண்மூப்போல்" என்பதனுல்

* கொடி-கீழ்த்திசையாதல், 'குன்றிவர்ந்து கொடிக்கொண்ட கோடை யால்' (கநo), 'கொடிமிசை மையறு மண்டிலம்' (கசக) என வரும் கலித் தொகையடிகளானும், 'கொடிமுதலா வீங்கிவற்றைக் கொண்டெண்ணுங் காலே' என்னுஞ் சினேந்திரமாலைத்தொடரானும் (ஙஎ) அறிக.

(கலித். அஉ) கிழக்கிலெழும் கொண்டல்களே பெயலிற் சிறந்ததாதல் அறியப்படும். இவ்வாறன்றி மின்னற்கொடிக்கு நிலைக்களமாதல்பற்றி மேகம் 'கொடிநிலை' எனப்பட்டதெனினும் அமையும். இவற்றுல், கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்கவல்லதாதல் தெளியலாம். இரண்டாவது கந்தழி என்பது: கந்து - பற்று, அழி-அழிவு; அஃதாவது பற்றழிந்தார் ஆகிய நீத்தாரதுதன்மை என்றபடியாம். மூன்றுவதான வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும். என்னே? அவ்வறம் சிறப்பாக வண்மைபற்றியே நிகழ்வதாகலின்; 'ஈதலறம்' என்றுர் ஔவையாரும். நச்சினர்க்கினியர் தங்கொள்கைக்கியையச் சந்திரனுக்கு இப்பதத்தை இணக்குமிடத்து, "வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம்வழங்கலான் வள்ளியென்பதூஉமாம்" என்று கூறுதலினின்று, வண்மையடியாகவே வள்ளி என்ற சொல் வழங்கியதென்பது அவர் கருத்தாதல் தெளியப்படும். படவே, வண்மையாகிய அறத்துக்குரியகடவுள் வள்ளி யெனப்பட்ட தென்க. இங்ஙனம் மேகம் நீத்தார் அறக்கடவுள் என்ற மூன்றும், முதற்கடவுளே முதலாகக்கொண்டு வாழ்த்தப்படுதலும் இப் பாடாண்பகுதியாம் என்பது, சூத்திரப்பொருளாதல் கண்டுகொள்க. எனவே வள்ளுவனுர்கூறிய பாயிரமும் இவ்விலக்கணம்பற்றியே அமைந்த தென்பது விளக்கமாம்."

இனி, பாயிரமென்பது - கடவுள்வாழ்த்தும் சொலப்படு பொருளும் எய்த வுரைப்பதாகும்; அவ்விலக்கணத்திற்கு ஏற்ப முதலதிகாரத்திற் கடவுள்வாழ்த்துக் கூறினர்: இந்நூலுட் கூறப்படுவது அறமே யாதலாலும் அந்தஅறத்தை வெளிப்படுத்தியவர் நீத்தாரேயாதலாலும் அந்நீத்தாரின் நல்லொழுக்கத்திற்குத் தான் துணையாயிருத்தலோடு கடவுள் தன்மையும் வாய்ந்திருப்பது வான்ஆதலாலும், கடவுள்வாழ்த்துக்குப்பின் வான் சிறப்பையும் நீத்தார் பெருமையையும் கூறி, அதன் பின்னர் அறன் வலியுறுத்தலைக் கூறினரென்னலாம்: இந்நூலுள் அறம்பொருளின்பம் என்ற மூன்றும் கூறப்படாநிற்கக் கூறப்படும்பொருள் அறமொன்றே போலப் பாயிரத்தில் அறன்வலியுறுத்தலைமாத்திரம் கூறியது குன்றக் கூறலாகாதோ? எனின்,—இந்நூலாசிரியர் அறத்தோடுபொருந்திய பொருளின்பங்களேயன்றி அறத்திற்குமாருன பொருளின்பங்களே வேண்டாராதலாலும், "சிறப்புடைமரபின்பொருளும் இன்பமும், அறத்தின் வழிப்படுஉந் தோற்றம்போல" என்றபடி பொருளின்பங்கள் அறத்தின் வழிப்பட்டே நிற்பன ஆதலாலும் சொல்லப்படுபொருளைத் தொகுத்துக் கூறும் பாயிரத்தில் அறத்தினைக் கூறி, மற்றைப்பொருளின்பங்களைக் கூறுதல் குன்றக்கூறலாகாதென்க.

இத்திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் - தருமர், மணக்குடியர், தாமத்தர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், நச்சர், பரிமேலழகர் எனப் பதின்மர். இதனை, "தருமர் மணக்குடியர் தாமத்தர் நச்சர் பரிதி பரிமேலழகர்—திருமலையர், மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்

ளுவர் நூற்கு, எல்லியுரை செய்தா ரிவர்'' என்ற செய்யுளினுல் அறிக. 'மணக்குடியர்' என்ற பெயர் 'மணக்குடவர்' என்றும், 'மணக்குடையர்' என்றும் வழங்கும். இதில், 'நச்சர்' என்பது நச்சினார்க்கினியரையெனக் கொள்ளுதல், தகுதியுடையதாகத் தோன்றவில்லை; ஏனெனில்:—''பாற்கடல் போலப்பரந்த நன்னெறி'' என்று தொடங்குகிற நச்சினார்க்கினியருரைச் சிறப்புப்பாயிரச் செய்யுளில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையில் (பேராசிரியர் உரையெழுதாதுவிட்ட) இருபதுபாட்டு என்னும் இவற்றிற்கு நச்சினார்க்கினியர் உரையெழுதினரெனக் கூறப்பட்டிருத்தலே யன்றி, திருக்குறளுக்கு உரையெழுதினரெனக் கூறப்படாமையா லென்க. ''பாரத் தொல்காப்பியமும் பத்துப்பாட்டுங் கலியும், ஆரக் குறுந்தொகையு ஞான்றும்—சாரத், திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும், விருத்தி நச்சினார்க்கினியமே'' என்றதும் காண்க. இப்பதின்மருரையுள்ளும் பின்னர்ச்செய்யப்பட்டதும் மிகச்சிறந்ததும் பரிமேலழகருரையே யாதலின், அதுவே இக்காலத்து மேலாக வழங்கிவருகின்றது. அவ்வுரையாசிரியராகிய

பரிமேலழகர் வரலாறு.

இவர், தொண்டைநாட்டிற் சிறந்த காஞ்சீபுரத்திற் பிறந்தவர்: இது ''திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன், வள்ளுவனார்க்கு வழிகாட்டினுன் தொண்டை மண்டலமே'' என்ற தொண்டைமண்டலசதகத்தால் அறியப்படும். இவர் அந்நகரிலுள்ள ஸ்ரீஉலகளந்தப்பெருமாள் கோயில் அருச்சக பரம்பரையிற்சேர்ந்தவர்: இதனை, ''நீணிலமளந்தோன் தாடொழுமரபின்'' என்ற இவர் உரைச்சிறப்புப்பாயிரத்தால் தெளியலாம். இவர் இளமையிலே வடமொழியில் தருக்கம் வியாகரணம் சாங்கியம் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களைக் கரைகண்டு உணர்ந்து, தென்மொழியிலும் தொல்காப்பியம் முதலிய நூல்களிற் பல்காற்பயின்று புலவர்திலகராய்ப் புகழ்பெற்றிருந்தனர். இவர் திருக்குறளுரையை யியற்றி யரங்கேற்றியதுகுறித்து வழங்குவதொரு வரலாறு வருமாறு:—புலவர்திலகரான பரிமேலழகர், தமதுபுலமை புலப்படுமாறு பெரியதோருரை யியற்றக்கருதி, அதற்குத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளே ஏற்ற தென நன்குஅறிந்து, முன்னரே அந்நூலுக்குத் தருமர்முதலியோர் ஒன்பதின்மரும் இயற்றியுள்ள உரைகளை உற்று நோக்கி, அவற்றின்கண் உளவாய குற்றங் களைந்து குறைபெய்து சிறந்ததோருரை யியற்றி, அதனைப் பாண்டியனவைக்களத்து அரங்கேற்றச் சென்று, தமதுகருத்தை அரசனுக்கு அறிவிக்க, 'மற்றையோருரைக்கும் உமது உரைக்கும் உள்ள வாசி விளங்குமாறு அற்புதமொன்று காட்டுவீராயின் உமது உரை ஏற்றமுடையதாக அங்கீகரிக்கப்படும்' என வேந்தன் கூறியதற்கு, இவர் 'அங்ஙனமே ஆகுக' எனச் சம்மதிக்க, அரசன் 'மற்றையுரைகள்போ லன்றி நுமதுஉரையே நூலாசிரியரது கருத்துக்கு இணங்கி ஏற்றமுடைய தென்பீராயின், நீர் இவ்வெண்கலப்பரியின்மேல் ஏறியிருந்து

அரங்கேற்றுவீராக: அப்பொழுது, இப்பரி இடம்பெயர்ந்து இயங்குமாயின், நும் உரை மெய்யுரையாக மெச்சப்படும்' என்று தனது சபையில் இருந்த தோர் வெண்கலக் குதிரையைக் காட்ட, இவர் அவ்வாறே அப்பரிமேல் இருந்து தமது உரையை அரங்கேற்றின ரெனவும், அப்பொழுது அப்பரி இருப்பிடம்விட்டு இயங்கிய தெனவும், அதனால் இவர்க்கு 'பரிமே லழகர்' எனச் சிறப்புப்பெயர் அமைந்த தெனவும் கூறுகின்றனர். (இப் பெயர், 'பரிமேலழகியார்' என்றும், பரிமேலழகரையன்' என்றும் வழங்கும்.) இவர் திருக்கோவையாரென்கிற சைவநூலினின்று இலக்கிய இலக்கண விஷயத்திற்கு மேற்கோள் எடுத்து ஆண்டமைபோல வன்றித் திருவாய்மொழியென்னும் வைஷ்ணவதிவ்வியப்பிரபந்தத்தினின்று தத்துவ விஷயத்திற்குப் பிரமாணமாக "அற்றது பற்றெனில், உற்றதுவீடு," "நன்று ஞானங் கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா மீர்த்து, ஒன்றுய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனே யுணர்ந்துணர்ந்து, சென்றுங் கின்ப துன்பங்கள் செற்றுக் கலைந்து பசையற்றால், அன்றே அப்போதே வீடு அதுவே வீடுவீடாமே" என்ற பாசுரங்களே எடுத்துக்காட்டினமையும், அரசனே இறையென்ற கடவுட்பெயராற் குறித்ததற்குத் திருவாய்மொழியி லிருந்து ஆதாரங் காட்டுமிடத்து "திருவுடைமன்னரைக் காணில் திருமா லைக் கண்டேனே யென்னும்" என்று "பெரியாரும் பணித்தார்" என்றதும், பிறநூலாசிரியர்களே அவ்வாறு 'பெரியார்' என்ற சொல்லால் எங்கும் குறி யாமையும், "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல், தாமரைக் கண்ணு னுலகு" என்ற குறளில் நிரதிசயப்பேரின்பத்தைக்குறிக்கிற 'தாம ரைக்கண்ணு னுலகு' என்பதற்கு - 'துறந்த யோகிகள் எய்துஞ் செங்கண் மாலுலகம்' என்று உரைகூறி, 'இந்திரனுலகென்று உரைப்பாருமுளர்: தாம ரைக்கண்ணுனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன் மையறிக' எனப் பிறர்மதம்மறுத்ததும், "நீணிலங் கடந்தோன் தாள்தொழு மரபிற், பரிமேலழக னுரிமையினுணர்ந்தே" என்ற பரிபாடலுரைச் சிறப்புப் பாயிரமும், இதற்குஏற்ப இவரைக் காஞ்சீபுரத்து உலகளந்தபெருமாள் கோவில் அர்ச்சகர் மரபினரென்பதும், "மடியிலாமன்னவன்"என்ற குறளில் 'அடியளந்தான்' என்பதற்கு 'தன் அடியளவானே எல்லாவுலகையும் அளந்த இறைவன்' என உரைகூறியதும் இவர் வைணவரென்பதை வற்புறுத்தும்.

இவ்வுரைச் சிறப்பை

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள்ளுவர்தம்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்சேர் பரிமே லழகனெனும்
மன்னு முயர்நாமன் வந்து"

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ ரூரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி"

"தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக ரேற்று"

"திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவ ளுய்த்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விமுப்பாலுக்கு
ஓருரை யன்றி யொன்பது சென்றும்
ஐயுற வாகக் கையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்கு
உள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
எழுத்து முதல இலக்கண வகையும்
வழுத்தில் வேதாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு
இதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச
விழுப்பொருள் தோன்ற விரித்தினி துரைத்தான்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பருள் ளாளெனப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி யீச னருளால்
உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே."

"வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுத்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்"

என்ற பழஞ்செய்யுட்கள் தெரிவிக்கும்.

காலம்:—இவர் காமத்துப்பாலின் முதலில் 'இச்சிறப்புப்பற்றி வட நூலுட் போசராசனும்.....இதனையே மிகுத்துக்கூறினன்' என்று போசராசனை மேற்கோள்காட்டியிருத்தலால், இவர்காலம் போஜராஜன் காலத்துக்குப் பின் என்பது தெளிவாம். போஜராஜன் காலம் 11-ஆம் நூற்றாண்டென்பர். மேற்காட்டிய பாடல்களுள் "வள்ளுவர்சீர்" என்ற பாடல் உமாபதிசிவாசார்யர் செய்த தென்பது நிச்சயமானால், அவர் பதினான்காம்

நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தவரென்பது திண்ணமாதலால், இவர் பதினோராம் நூற்றாண்டிற்கும் பதினைந்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தவரென்பது, தேற்றம். சிலாசாசனவாராய்ச்சியாலும் மற்றும் சில காரணத்தாலும் சேனாவரையருடைய சமகாலத்தவரும், அவருக்குப் பிராயத்தினால் சிறிது குறைந்தவருமாகி கி. பி. 1272 இல் வாழ்ந்திருந்தவர் இவரென்று லெக்விகன்தலைமைப்பண்டிதர் ழ. ராகவய்யங்கார்ஸ்வாமிகள் சாஸனத்தமிழ்க்கவிசரிதம் என்ற நூலில் எழுதியுள்ளனர்.

எட்டுத்தொகையுள் ஒன்றான பரிபாடலுக்கும் இவர் உரையெழுதியுள்ளார். திருமுருகாற்றுப்படைக்குப் பரிமேலழகருரை யென ஒருரை வழங்குகிறது: அது திருக்குறள் பரிமேலழகருரை நடையினும் மிக்க வேறுபாடுடையது; ஆதலின் அது இவர் செய்ததன் றென்பர்.

குடிமையென்ற அதிகாரத்தில், "பழங்குடி"என்றஇடத்தில்,'தொன்று தொட்டு வருதல் - சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டுவருதல்' என்று இவர் தமிழ்நாட்டு மூவேந்தர்களைச் சிறப்பித்துக் கூறியிருத்தலால், இவர்க்கு உள்ள தேசாபிமானமும், பாஷாபிமானமும், ராஜாபிமானமும் வெளியாம்.

இந்தப் பரிமேலழகருடைய உரைநடை, செய்யுளுக்குப் * பொழிப்புரையாக அமைந்துள்ளது; ஓரதிகாரத்திற்கும் மற்றோரதிகாரத்திற்குமுள்ள இயைபை எடுத்துக்காட்டுவது; ஒவ்வோரதிகாரத்துமுள்ள பத்துப்பாடல்களும் இன்ன இன்ன பொருளன என்று சில இடத்துத் தொகுத்தும், சில விடத்துத் தனிப்படவும் எடுத்துக்காட்டுவது; பதசாரத்தை விளக்கிச் செல்வது; பண்டையநூல்களின் சொற்பொருளே ஆங்காங்குத் தழுவியெழுதப்படுவது; வேறுபொருள் தக்கதாயின் அதனை எடுத்துக் காட்டுவதோடு தகாதாயின் அதனைக் காரணங்காட்டி மறுப்பது; நுண்ணிய இலக்கணப் பொருளைத் தெரிவிப்பது; பலஅரிய வடநூற் பொருள்களைத் தமிழர் உணருமாறு தெள்ளிய இனியநடையிற் றெரிப்பது; கற்போர்க்கு விளங்கும் பொருட்டு ஔவையுண்டநெல்லிக்கனி இந்திரன்பிறர்மனைநயந்துபெருமையிழந்தமை என்றாற் போன்றவைகளை உதாரணமாகக் கொண்டது; நுண்ணிதாயாராய்ந்து செல்வதால், மதிநுட்பமுடையவர்க்கே எளிதில் விளங்குவது.

திருக்குறளுக்கு இவர் செய்த இவ்வுரை 'பரிமேலழகியார்விருத்தி' என்ற பெயரால் வழங்கப்பட்ட தென்று எட்டுப்பிரதிகளினால் தெரிகிறது.

---

* அப்பொழிப்புரை, இடையிடையே பதங்களையமைத்து, பதவுரையாக இப்பதிப்பில் அச்சிடப்பட்டிருக்கிறது.

அறத்துப்பாலின் இயல் அதிகாரம் என்பவற்றின் அட்டவணை.

பாயிரம்.

1. கடவுள்வாழ்த்து 4
2. வான்சிறப்பு 15
3. நீத்தார்பெருமை 21
4. அறன்வலியுறுத்தல் 30

இல்லறவியல்.

5. இல்வாழ்க்கை 37
6. வாழ்க்கைத்துணைநலம் 42
7. புதல்வரைப்பெறுதல் 47
8. அன்புடைமை 53
9. விருந்தோம்பல் 59
10. இனியவைகூறல் 64
11. செய்ந்நன்றியறிதல் 70
12. நடுவுநிலைமை 77
13. அடக்கமுடைமை 84
14. ஒழுக்கமுடைமை 90
15. பிறனில்விழையாமை 96
16. பொறையுடைமை 102
17. அழுக்காறாமை 107
18. வெஃகாமை 113
19. புறங்கூறாமை 119
20. பயனிலசொல்லாமை 125
21. தீவினையச்சம் 130
22. ஒப்புரவறிதல் 139
23. ஈகை 146
24. புகழ் 155

துறவறவியல்.

விரதம்:—

25. அருளுடைமை 164
26. புலான்மறுத்தல் 172
27. தவம் 179
28. கூடாவொழுக்கம் 185
29. கள்ளாமை 193
30. வாய்மை 202
31. வெகுளாமை 208
32. இன்னாசெய்யாமை 215
33. கொல்லாமை 223

ஞானம்:—

34. நிலையாமை 233
35. துறவு 242
36. மெய்யுணர்தல் 251
37. அவாவறுத்தல் 261
38. ஊழ் 269

திருக்குறள்.

'திரு' என்பது சிறப்புப்பொருளுணர்த்தும். சிறுமையுணர்த்துங் குறளென்னும் பண்புப்பெயர் - ஆகுபெயராய், வெண்பாவிற் சிறுமையையுடையதாகிய இரண்டடிப்பாவை உணர்த்தி, பின் கருவியாகுபெயராய், அக்*குறள் வெண்பாவாலாகிய நூலை உணர்த்தி, இந்நூற்குக் காரணப்பெயராயிற்று; இது - இருமடியாகுபெயர்.

தொல்காப்பியத்திற் செய்யுளியலில் ஆசிரியர், பா நான்கென்றும் அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறி, பின்பு அம்மை முதலிய எட்டும் [அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன] தொடர்நிலைச்செய்யுட்கு இலக்கண மென்று கூறுகின்ற இடத்து, "வனப்பியல்தானே வகுக்குங் காலைச், சின்மென் மொழியால் தாய பனுவலோடு, அம்மை தானே அடிநிமிர் பின்றே" என்ற சூத்திரத்தால், 'சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம்' என்று கூறினமையின், இந்நூல் அங்ஙனங்கூறிய அம்மையா மென்று உணர்க. இன்னும் அச்சூத்திரவுரையில், பேராசிரியர், 'அடிநிமிராது என்றது, ஐந்தடியின் ஏறாது என்றவாறு. தாயபனுவலோடு என்றது, அறம்பொருளின்பமென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப: வேறு இடையிடை அவை யன்றியுந் தாய்ச் செல்வது என்றவாறு. அஃதாவது - பதினெண் கீழ்க்கணக்கு என உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம்பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்றுவருமாறும், கார்காற்பது களவழிநாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டுகொள்க' என்றதும் அறியற்பாலது.

---

* குறள் வெண்பாவாவது-இரண்டு அடியாய், ஈற்றடி முச்சீரடியாகவும் மற்றையடி நாற்சீரடியாகவும் வரப்பெற்று, காய்ச்சீரும் அகவற்சீரும் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையுங் கொண்டு, மற்றைச் சீருந் தளையும் பெருமல், காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாடுகளில் ஒன்றில் முடிந்து, ஒருவிகற்பத்தாலாயினும், இருவிகற்பத்தாலாயினும் வருவதாம். [அகவற்சீர் என்றது, ஈரசைச் சீர்களை. வெண்சீர் வெண்டளையாவது - காய்முன் நேர் வருவது: இயற்சீர்வெண்டளையாவது - மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது; "காய்முன் நேரும் மாமுன் நிரையும், விளமுன் நேரும் வருவது வெண்டளை." ஒருவிகற்பமாவது - ஓர் எதுகையாய் வருவது; இருவிகற்பமாவது - இரண்டு எதுகை வருவது.]

திருக்குறள்.

பரிமேலழகருரை.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை - அறம், பொருள், இன்பம், வீடு என்பன: அவற்றுள், வீடென்பது - * சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது, இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன, எனை மூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது - மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலுமாம்; அஃது - ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள், ஒழுக்கமாவது - அந்தணர் முதலிய வருணத்தார் தத் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளில் நின்று அவற்றிற்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்; வழக்காவது - ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் செல்வது: அது - கடன்கோடல்முதற் பதினெட்டுப் பதத்ததாம்; தண்டமாவது - அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினுரை அந்நெறி நிறுத்தற்பொருட்டு † ஒப்பதாடி அதற்குத்தக ஒறுத்தல். இவற்றுள், வழக்குந் தண்டமும் உலகநெறிநிறுத்தற்பயத்தவாவது அல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பில வாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டு, தெய்வப்புலமைத் திருவள்ளுவரால், சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான் நால்வகைநிலைத்தாய் வருணந்

---

* தொல்காப்பியச்சிறப்புப்பாயிர உரையில் நச்சினார்க்கினியர் 'வீடுகூறாரோ வெனின்?—அகத்தியனுரும் தொல்காப்பியனுரும் வீடுபேற்றிற்கு நிமித்தங்கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறு ரென்று உணர்க: அஃது, "அந்நிலை மருங்கி னறமுத லாகிய, மும்முதற் பொருட்கு முரிய வென்ப"[3] என்பதனுன் உணர்க: இக்கருத்தானே வள்ளுவநாயனுரும் மும்பாலாகக்கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்' என உரைத்ததனால், நச்சினார்க்கினியரது கருத்து இவ்விஷயத்தில் வேறுதல் விளங்கும். தொல்காப்பியப் பொருளதிகார வுரைத் தொடக்கத்தில் 'இந்நிலையாமையானும் இவற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்' என்றதுங் காண்க.

† புறநா—10.

தோறும் வேறுபாடுஉடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி,இல்லறம் துறவறம் என இருவகைநிலையாற் கூறப்பட்டது;அவற்றுள், இல்லறமாவது - இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவது ஆதலின், அதனை முதற்கண் கூறுவான் தொடங்கி எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

(குறிப்புரை.) அறத்துப்பால்-தருமத்தையுணர்த்தும் பாகம்; இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. இந்திரன் முதலிய இறையவர் பதங்கள் - போகஸ்தானங்கள்; இறையவர் - தேவர்கள், பதம் - இடம். அந்தமில் இன்பத்து அழிவுஇல் வீடு - நலமந்தமில்லாதோர் நாடு; அந்தம்-முடிவு; அந்தம்இல் இன்பம் - எல்லையில்லாத இன்பம். எய்துதல்-அடைதல். மாந்தர் - மனிதர். உறுதி - நிலையான நன்மை; உறுதிதருவதனை 'உறுதி' என்றது-காரியவாகுபெயர். பொருள்-புருஷார்த்தம்; ஜீவனுல் வேண்டப்படும் பயன். அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை, முறையே, வடநூலார், தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்பர். சிக்ஷையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்து-மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாததன்மையது. நூல்-சாஸ்திரம்.' அறம்-(இன்னது செய்யத் தக்கது என நூல்களினுல்) வரையறுக்கப்பட்டது: அறு - பகுதி, அம் - செயப்படுபொருள் விகுதி; இதற்கு எதிர்மொழி - மறம்: அதருமம்; அதற்கு - (இன்னது செய்யத்தகாதது என நூல்களினுல்) மறுக்கப்பட்ட தென்பது பொருள். ஒழுக்கம் வழக்கு தண்டம் என்பவற்றை, வடநூலார், முறையே, ஆசாரம் வியவகாரம் பிராயச்சித்தம் என்பர். அந்தணர் - பிராமணர். வருணம் -சாதி. 'முதலிய' என்றதனுல், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் முதலியோரைக் கொள்க. பிரமசரியம்-ஆசிரியனிடத்து ஓதிக் கற்று விரதங்காத்து விவாகமின்றி யிருக்கும் நிலை; நிலை-ஆச்சிரமம். 'முதலிய' என்றதனுல், கிருகஸ்தம், வாநப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன கொள்க. கிருகஸ்தம் - இல்லறத்தின் வழுவாது மனைவியோடும் இல்லத்திற் கூடி வாழும் நிலை. வாநப்பிரஸ்தம்-இல்லந்துறந்து மனைவியோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ்செய்யும் நிலை. சந்நியாசம்-முற்றத்துறந்த நிலை. கடன்கோடல் முதற் பதினெட்டுப் பதத்தது-கடன்வாங்குதல், அடைக்கலமாகவைத்த பொருள், உடையனல்லாதவன் விற்றல், கூடிமேம்படுதல்,கொடுத்ததை மீண்டுங்கொடாமை, கூலிகொடாமை, கட்டுப்பாடுகடத்தல், விற்றுங்கொண்டும் உள்ளம் ஒப்பாமை, ஒப்பிப் பணிசெய்யாமை, எல்லை வழக்கு, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, திருடு, வன்செய்கை, மாதரைக் கவர்தல், மாதர் ஆடவர் தருமம், தாயபாகம், சூது எனப் பதினெட்டு வகையது. வழீஇயினுர் - தவறிநடந்தவர். ஒப்பீநாடி-பக்ஷபாதமில்லாமல் ஆராய்ந்து. ஒப்ப-சமமாக, நடுவுநிலைமையாக. அதற்குத் தக ஒறுத்தல்-அத்தக்க குற்றத்திற்குத் தக்கபடி தண்டித்தல். உலகநெறி நிறுத்தற்பயத்த ஆவது

அல்லது - இவ்வுலகவழியிலே உயிர்களை நிலைநிறுத்துதலாகிய பிரயோசனத்தைக் கொண்டிருப்பனவாவது அல்லாமல். உறுதிபயத்தற்சிறப்பில - நன்மை தருஞ் சிறப்பை யுடையனவல்ல. தேய இயற்கை - நாட்டுநடத்தை. ஈண்டு - இங்கே. புலமை - அறிவு. முதற்கண் - முதலில். கூறுவான் - சொல்ல. இலக்கியம் - லக்ஷ்யம்.

அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் இல்வாழ்க்கைநிலை முந்திய தாதலின் முன்பும், அதனைத் துறக்கும்நிலை பிந்தியதாதலின் அதன்பின்பும் வைக்கப்பட்டன வென்க.

"மூன்றுறுப்படக்கிய தன்மைத்தாயின், தோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப" என்னுந் தொல்காப்பியத்துச் செய்யுளியற் சூத்திரத்தின் படி, திருக்குறள், பால் இயல் அதிகாரம் என்னும் மூன்று உறுப்புக்களையும் அடக்கியதொருபிண்டமா மென்று உணர்க.

பாயிரம்.

முதல் அதிகாரம்.—கடவுள் வாழ்த்து.

அஃதாவது-கவி தான் வழிபடுகடவுளையாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளையாதல் வாழ்த்துதல்; அவற்றுள், இவ்வாழ்த்து-ஏற்புடைக்கடவுளே யென அறிக: என்னே?—சத்துவம்முதலிய குணங்களான் மூன்றாகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளரோடு இயைபு உண்டாகலான், அம்மூன்றுபொருளையுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமை யாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறிஞ ரென உணர்க.

(கு - ரை.) வழிபடுகடவுள்-குலதெய்வமாகக்கொண்டு ஆராதிக்கப்படுகிற கடவுள்; வைஷ்ணவர்க்கு விஷ்ணுவும், சைவர்க்குச் சிவனும், ஜைநர்க்கு ஜிநனும், பௌத்தர்க்குப் புத்தனும் போல்வன. எடுத்துக் கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுள்-தான் செய்யத்தொடங்கிய நூலிற் சொல்லப்படும் விஷயத்திற்குத் தகுதியுடைய கடவுள்; இராமாயணத்திற்கு இராமனும், பாரத பாகவதங்களுக்குக் கண்ணனும், கந்தபுராணத்துக்குச் சுப்பிரமணியனும் போல்வன. என்னே-என்னவென்றால். சத்துவம் முதலிய குணங்களால் மூன்றாகிய உறுதிப்பொருள்-சாத்துவிக குணத்தால் அறமும், இராஜசகுணத்தாற் பொருளும், தாமசகுணத்தால் இன்பமு மாகிய புருஷார்த்தங்கள். அவற்றான் மூவராகிய முதற் கடவுள்-அக்குணங்களால் விஷ்ணு பிரமன் சிவன் என்னுந் திரிமூர்த்திகளின் சொரூபியதாகிய பரபிரஹ்மம். இயைபு - சம்பந்தம்.

அதிகாரம்-அதிகரித்தல்; அது இருவகைப்படும்: அவற்றுள் ஒன்று-அரசன் தான் இருந்த இடத்திலே இருந்து தன் நாடு முழுவதும் தன் கட்டளை

யில் கடக்கச் செய்தல்போல, ஒருசொல் நின்றஇடத்தே நின்று பல செய்யுட் கள் தன் பொருளையே சொல்லிவரும்படி செய்வது; மற்றொன்று-அங்கங்குச் சென்று கட்டளை நிறைவேற்றும் அதிகாரிகள் போல ஓரிடத்து நின்ற சொல் பல செய்யுட்களோடுஞ் சென்று இயைந்து தன் பொருளையே கூறுவிப்பது: [இவற்றை முறையே வடநூலார் யதோத்தேசபக்ஷ மென்றும், காரியகால பக்ஷ மென்றுங் கூறுவர்.] அவற்றுள் இங்கு அதிகாரம் என்றது, முதலிற் கூறியவாறு ஒரு பொருளையே குறித்துவரும் பல செய்யுட்களின் தொகுதி யாகிய நூற்கூறுபாட்டை. பால் இயல் என்பவற்றிற்கும் இதுவே பொருளா யினும், இந்நூலில் சங்கேதத்தால், பால் என்றது-பெரும்பிரிவுக்கும், இயல் என்றது-அதற்கு உட்பட்ட சிறு பிரிவுக்கும், அதிகாரம் என்றது-அதன் உட் பிரிவுக்குமாகக் கொள்ளப்பட்டது. அதிகாரம்-வடசொல். இதற்கு-முறைமை யென்று பொருள்கூறுவர் நச்சினார்க்கினியர்.

கடவுள் - மனமொழிமெய்களைக் கடந்த பரம்பொருள்; கடவுள்-தொழிற் பெயர்: கட - பகுதி, உள் - விகுதி; கடத்தலையுடைய பொருளுக்குத் தொழி லாகுபெயர். வாழ்த்து - பிறவினை முதனிலைத்தொழிற்பெயர். கடவுள்வாழ் த்து நூலிற்கு முதலிலிருத்தல் அதிகாரமுறைமை என்று அறிக.

பாயிரம், முகவுரை, நூன்முகம், புறவுரை என்பன ஒருபொருட்சொற் கள். பொதுப்பாயிரமென்றும், சிறப்புப்பாயிர மென்றும் பாயிரம் இருவகைப் படும். தன்னூலுரைக்கப்படும் ஒரு நூலுக்கு மாத்திரமே உரியதன்றிப் பலநூல் களுக்கும் பொதுப்பட உரைக்கப்படுவது பொதுப்பாயிரம். அங்ஙனமன்றித் தன்னூலுரைக்கப்படும் ஒருநூலுக்கே உரியதாம்படி உரைக்கப்படுவது சிறப் புப்பாயிரம். இந்நூலின் முதல் நான்கு அதிகாரங்களைச் சிற்சில காரணங்க ளால் இருவகையாகவுங் கொள்ள இடமுண்டாதல்பற்றி, அவை,பாயிரமெனப் பொதுப்படக் கூறப்பட்டன. இப்பாயிரத்தை அறத்துப்பாலினுட்பட்ட தென் பர் ஒருசாரார்; மற்றொருசாரார் அதற்கு வெளிப்பட்ட தென்பர். திருவள் ளுவமாலையில் தொடித்தலை விழுத்தண்டினார் ''அறநான்கு'' என்றதனால், அறத்துப்பாலி னுட்பிரிவுகள் நான்கு என விளங்கும்; அவை இன்னவை யென்பதை அத்திருவள்ளுவமாலையில் ''பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன் மூன்றே, தூயதுறவறம் ஒன்று ஊழ் ஆக—ஆய, அறத்துப்பால் நால்வகை யாஆய்த்துரைத்தார் நூலின், திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து'' என்று எறிச்சலூர் மலாடனார் கூறியதனால் விளங்கும். இவை, 'அறத்துப்பாலி னுட் பட்டது பாயிரம்' என்பதற்கு ஆதாரமாம். அதற்கு வெளிப்பட்ட தென்ப தற்கு ஆதாரம் - அத்திருவள்ளுவமாலையில், ''வீடொன்று பாயிரம் நான்கு விளங்கு அறம், நாடிய மூப்பத்துமூன்று ஒன்று ஊழ்'' என்று சிறுமேதாவி யார் கூறியது காண்க; அதன் உரையில்'அறத்துப்பாலுள் அடங்காதுஅதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின், 'வீடொன்று பாயிரம்' என்று கூறினார்' என்றதும் இங்கு அறியத்தக்கது. ஆகவே, இருவகையும் தொன்று தொட்டு வழக்க மென விளங்கும்.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இதன்பொருள்.) அகரம் முதல - அகரமாகிய முதலெழுத்தையுடையன, எழுத்து எல்லாம் - எழுத்துக்க ளெல்லாம்; (அதுபோல), ஆதி பகவன் முதற் று - ஆதிபகவனுகிய முதலே யுடைத்து, உலகு—; (என்றவாறு.)

இது, தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை - விகாரத்தா னன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை - செயற்கையுணர்வா னன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கே யன்றி வடவெழுத்திற் கும் முதலாதல் நோக்கி, 'எழுத்தெல்லாம்' என்றார். 'ஆதிபகவன்' என்னும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வடநூல்முடிபு. 'உலகு' என்றது, ஈண்டு உயிர்கள்மேல் நின்றது. காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூறவேண்டுதலின், 'ஆதிபகவன் முதற்றே யுலகு' என உலகின் மேல் வைத்துக் கூறினார்: கூறினுரேனும், 'உலகிற்குமுதல் ஆதிபகவன்' என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் - தேற்றத்தின்கண் வந்தது.

இப்பாட்டான், முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஆதி பகவன் - முதற் கடவுள். பகவன் - பகவாக் என்னும் வடமொழியின் விகாரம்; நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐசுவரியம், ஞானம், வைராக்கியம் என்கிற ஆறுகுணங்களுக்கும் 'பகம்' என்று பெயராதலால், பகவானென்பதற்கு, இந்த ஆறுகுணங்களையு முடையவனென்று பொருள். ஆதிபகவன் என்பது-வடமொழிப் புணர்ச்சி யாதலால், வலி மிகவில்லை. உடைத்து - உடையது. எடுத்துக்காட்டுவமையாவது - உபமானத்தையும் உபமேயத்தையும் வேறு வேறு வாக்கியங்களாக நிறுத்தி இன்னது உபமானம்- இன்னது உபமேயம் என்பது தோன்ற இடையில் உவமவுருபு கொடாமற் கூறும் அணி: இதனை உவமையணியில் அடக்குதல் தமிழ்நூலார் கொள்கை: வடநூலாருள் ஒருசாரார் த்ருஷ்டாந்தாலங்கார மென வேறு கக்கூறுவர்; ஆசிரியர் தொல்காப்பியனுர் வேறுபடவந்தஉவமத்தோற்றத்தில் அடக்குவர். எடுத்துக்காட்டுவமையில் உபமானஉபமேயவாக்கியங்களைத் தனித்தனி நிறுத்தும்போது பொதுத்தன்மை வேறுபட்டிருக்கவேண்டுமாதலாலும், இச்செய்யுளில் பொதுத்தன்மையாகிய முதன்மையாதலென்பது அங்ஙன் வேறுபட்டிராமையாலும், இது எடுத்துக்காட்டுவமையணியன்று: தொடரீழதுவனமயணி யாகுமென்பர், ஒருசாரார்: தண்டியாசிரியர் இதனை, மறுபோருஞவமையென்பர். தலைமை-முதன்மை. விகாரத்தான் அன்றி நாத மாத்திரையான இயல்பாற் பிறத்தல் - ஒலியின் வேறுபாட்டினுற் பிறவாமல் வாய்திறத்தலும் ஒலிமாத்திரமாகிய இயற்கையாற் பிறத்தல். இதுபற்றியே, "மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தில், கடவுள்எல்லாச் சராசரப் பொருள்களிலும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு போல அகரம் எல்லா எழுத்துக்களிலுங் கலந்து அவற்றின் தன்மை

யாய் நிற்கும் என்றது; ஸ்ரீபகவத்கீதையில் கண்ணன் "எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே" எனக் கூறியவாறுங் காண்க. அன்றியும், பாஷையை அமைத்தற்குத் தொடுத்த ஒலிகளுள் அகரம் முதல்நாதம் என்பது, அனுபவ சித்தம். வாமந புராணத்தில் 'அகரம் எல்லாச்சொற்களுக்கும் மூல மாதலாலும், பிரஹ்மம் எல்லாப் பொருள்களுக்கும் மூல மாதலாலும், அ என்று பரபிரஹ்மத்துக்குப் பெயர்' என்று கூறியிருக்குமாறு அறிக. நாதம் - உயிர்முயற்சியா லெழுகிற சமாநவாயுவினால் ஆவது. செயற்கை யுணர்வான் அன்றி இயற்கையுணர்வான் முற்றும் உணர்தல்-(கல்வி கேள்வி முதலியவற்றால் ஆகுஞ்) செயற்கை யறிவினை லல்லாமல் இயற்கை யறிவினால் எல்லாம் அறிதல். இருபெயரொட்டுப்பண்புத்தொகை யாவது - 'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே தொக்கு நிற்கச் சிறப்புப்பெயரும் பொதுப்பெயருமாய் ஒருபொருளைக் குறிக்கிற இருசொற்கள் தொடர்ந்து நிற்பது. ஈண்டு - இங்கே. உலகு என்பது லோகமென்னும் வடமொழியின் திரிபு என்று சேனாவரையர் கொள்கை; தமிழ்ச்சொல்லேயாகு மென்பது, நச்சினார்க்கினியர் மதம்: இது இடத்தை யுணர்த்தும்பொழுதிற் போல உயிர்களை யுணர்த்தும்பொழுதும் ஆகுபெயர் என்று இயற்பெயரே என்பது, இருவர்க்கும் ஒப்பமுடிந்தது: வடநூலார் கொள்கையும் இதுவே. உலகு என்னும் பலபொருளொருசொல் ஜீவாத்மாக்களை உணர்த்துதலை "உலக மூவப்ப வலனேர்பு திரிதரு" என்னுந் திருமுருகாற்றுப் படையிலுங் காண்க. இனி, இங்கே, உலகு என்பது - இரட்டிற மொழிதலால், உலகங்களையும் அவ்வுலகத்துப் பொருள்களையும் உணர்த்திற் றென்று கொள்ளுதலு மாம். உண்மை - இருப்பு. காணப்படும் புகையைக் கொண்டு நெருப்பு உண்டு என அறிவுப் அநுமாநப் பிரமாணத்தால், காணப்படும் உலகத்தோற்றத்தைக் கொண்டு அதற்குக் காரணமாகிய கடவுளொருவ ருண்டென்று கொள்ள வேண்டுமென்க: இது, நையாயிகர் மதம். தேற்றம் - உறுதி. எல்லா நூல்களும் மங்கலமொழி முதல்வகுத்துக் கூறவேண்டுதலால், 'அகரம்' என்று தொடங்கினார்; காத்தற்றொழிற்கு உரிய கடவுளாகிய திருமாலின் திருநாமங்களில் அகரம் முதன்மையான நாம மாதலால், மங்கலச்சொல்லாமென்று அறிக. அகரமுதல், பகவன்முதல் - இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். முதல - பலவின்பாற் குறிப்பு முற்று; முதல்-பகுதி. இதன் ஒருமை-முதற்று. எழுத்து - எழுதப்படுவதென்னும் பொருளில் செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர்: இனி, பகவன்-ஐந்து ஞானத்துள்ளுஞ் சிறந்த நிரிகால உணர்ச்சியாகிய கேவலஞான முடையவனென்று கூறி, அருகக்கடவு ளென்று உரைப்பாருமுளர்; "செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்" என்பர். சிலப்பதிகாரத்தும். இனி, "அந்தமி லாதியம் பகவன்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்திருத்தலால், பகவன் - திருமால் என்றும் பொருள்கொள்ளலாம். (க)

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

(இ - ள்.) கற்றதனால் ஆய பயன் என் - (எல்லாநூல்களையுங் கற்ற வர்க்கு) அக்கல்வியறிவான் ஆய பயன் யாது? வால் அறிவன்-மெய்யுணர் வினையுடையவனது, நல் தாள்-நல்ல தாள்களை, தொழாஅர் எனின்-தொழா ராயின்; (எ - று.)

எவன் என்னும் வினுப்பெயர் - என் என்று ஆய், ஈண்டு, இன்மை குறித்துநின்றது. கொல்என்பது - அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந் தாகலின், 'நற்றாள்' என்றார்.

ஆகமவறிவிற்குப்பயன் அவன்தாளைத்தொழுது பிறவியறுத்த லென்பது இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்யுணர்வு-உண்மையறிவு; ஐயம் திரிபு இல்லாத அறிவு: தத்துவஞானம். 'எவன்' என்பது வினுப்பெயர்:இது, அஃறிணை யிருபாலுக் கும் பொது;உயர்திணை யன்று;இதனை, வினுப்பொருளைத் தரும் குறிப்புவினை முற்றுவினையுமாம். 'எவன்'என்பது என் என்று ஆனது,தொகுத்தல் விகாரம். இன்மை-இல்லாமை. கொல்-இடைச்சொல். அசைநிலை யாவது-ஒருபொருளை யும் உணர்த்தாமற் பெயர்ச்சொல்லோ டாயினும் வினைச்சொல்லோ டாயினுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றல். பிறவிப் பிணிக்கு மருந்து - பிறப்புத்துன் பங்களாகிற நோயை ஒழித்தற்கு மருந்து போல்வது. ஆகம அறிவு - சாஸ்தி ரங்களைக் கற்றதனு லாகிய அறிவு. இதனால் - இப்பாட்டால். ஆய - பெய ரெச்சம். தொழாஅர் - அளபெடை, செய்யு ளோசை நிறைக்க வந்தது. இனி, "அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்" எனச் சிலப்பதிகாரத்து வருத லால், வா லறிவன்-எல்லாப் பொருளையும் அறியுந் தூய அறிவை யுடையவ னென்று, அருகக்கடவு ளென்பாரு முளர். இனி, "அடலாழி கொண்ட அறி வன்" என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், அறிவன் - திருமா லென் றுங் கொள்ளலாம். (உ)

கூ. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ - ள்.) மலர்மிசை ஏகினான் - மலரின்கண்ணே சென்றவனது, மாண் அடி - மாட்சிமைப்பட்ட அடிகளை, சேர்ந்தார்—, —மிசை நிலம்-(எல்லாஉல கிற்கும்)மேலாய வீட்டுலகின்கண், நீடு வாழ்வார்-அழிவின்றிவாழ்வார்;(எ-று.)

அன்பான் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடி வோடு விரைந்துசேறலின், 'ஏகினான்' என இறந்தகாலத்தாற் கூறினார்; என்னை?—"வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வருஉம் வினைச் சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்த பொருள வென்மனார் புலவர்" என்பது ஒத்தாகலின். இதனை, 'பூமேல் நடந்தான்'என் பதோர் பெயர் பற்றிப் பிறிதொருகடவுட்கு ஏற்றுவாரும் உளர். சேர்தல்- இடைவிடாது நினைத்தல்.

(கு - ரை.) மலரின்கண் - மலரில்: என்றது, இருதய கமலத்தை. மலர்போலும் வடிவமுடைய நெஞ்சை 'மலர்' என்றது, உவமையாகுபெயர். மிசை - ஏழனுருபு. சென்றவன் - விரைந்துவந்துவீற்றிருப்பவன். மாட்சிமைப்பட்ட - பெருமை பொருந்திய. அடி - பாதம். சேர்ந்தார் - மனத்தாற் கிட்டினவர். நிலமிசை - மிசை நில மென மாறுக. நீடு - நீடித்து; நெடுங்காலம்: பகுதியே வினையுரியாய் நின்றது. நினைவார்-தியானிப்பவர். சேறலின் - செல்லுதலினால். ''வாராக் காலத்து'' என்னும் தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துக்குப் பொருள் - எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒரு படியாக வருகிற வினைச்சொல்லாகிய சொல்லின்பொருளே இறந்தகாலத்தாற் குறிப்போடு சொல்லுதல் விரைவுப்பொருளே யுடையன என்று சொல்லுவர் ஆசிரியர் என்பது; நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் விரைவுபற்றி இறந்தகாலமாகச் சொல்லலாமென்பது கருத்து: இது, காலவழுவமைதி;[நன். பொது. ஈஈ.] ஒத்து - இலக்கணம். அருகக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக்கொண்டு அதனை ஊர்ந்து சென்றனனென்று ஜைநநூல்களிற் சொல்லப்படுதலால், 'பூமேல் நடந்தான்' என்று அக்கடவுளுக்கு ஒருபெயர்: அதனை, ''தேனவிழ்த் தளிக ளெல்லாஞ் செவ்வழி பாடா நின்ற, பூநகைத் திலங்கு கஞ்சப் பொகுட்டின்மீதே யொதுங்கும், நான்முகக் கடவுள்,'' ''மடலவிழ் கமலவூர்தி வந்த வாமன்,'' ''நாண்மலர்வான்,மீயகத்தே வர மேற்கொள்ளுந் தேவர்,'' ''மலரேந்து சேவடிய மால்,'' ''செய்ய தாமரையி,னங்க ணடிவைத் தருளு மாதியாய்,'' ''மலர்மிசை நடந்த மலரடி'' என்பன காண்க. எல்லா மலர்களினும் தாமரை சிறத்தல் பற்றி, 'மலர்' எனப்பட்டது; ''பூவெனப்படுவது பொறி வாழ் பூவே'' என்பது காண்க; (பொறி - இலக்குமி.) ''மணனக மலமற மலர்மிசை யெழுதரு, மணனுணர் வளவிலன்'' என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், மலர்மிசை ஏகினான்-திருமால் என்றுமாம்.

சு. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(இ - ள்.) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி - (ஒருபொருளையும்) விழைதலும்வெறுத்தலும் இல்லாதவன் அடியை,சேர்ந்தார்க்கு—,யாண்டுமும்-எக்காலத்தும், இடும்பை - பிறவித்துன்பங்கள், இல - உளவாகா; (எ - று.)

பிறவித்துன்பங்களாவன - தன்னைப்பற்றி வருவனவும், பிற வுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வருந் துன்பங்கள். அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் இன்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

(கு - ரை.) விழைதல் - விரும்புதல். உளவாகா-இல்லையாம். தன்னைப்பற்றி வருவன - சரீரத்தைப்பற்றி வருந் தலைநோய் முதலியவும், மனத்தைப்பற்றிய காமம் கோபம் முதலியவும்; இவை, ஆத்யாத்மிகம் எனப்படும். பிறவுயிர்களைப்பற்றி வருவன - மனிதர் விலங்கு பிசாசு முதலியவற்றால் நேர்பவை; இவை, ஆதிபௌதிகம் எனப்படும். தெய்வத்தைப்பற்றிவருவன -

காற்று மழை இடி வெயில் முதலியவற்றால் சேர்பவை; இவை, ஆதிதைவிகம் எனப்படும். இவற்றை, வடநூலார் தாபத்திரயமென்பர். அவ்விரண்டும் - வேண்டுதலும் வேண்டாமையும். வேண்டுதல்வேண்டாமை-உம்மைத்தொகை. சேர்ந்தார்க்கியாண்டும் - சூத்தியவிகாரம், அலகு பெற்றுநின்றது. யாண்டும், உம்மை - முற்றுப்பொருளது. 'யாண்டு மில' என்றதனால், கடவுளைத் தியானித்து மனஞ்சலிப்பின்றி நல்லொழுக்கத்தில் நிற்பவர் இம்மையில் தமக்கு நேருந் துன்பங்களை மனந் தளராமல் பொறுப்பாரென்பதும்; மறுமையில் வீடுபெறுதலால் அத்துன்பம் விட்டகலும் என்பதும் பெற்றும். ''பகை ணண்பொ டில்லான்'' என்று சீவகசிந்தாமணியில் அருகக்கடவுளைக் கூறியிருத்தலால், வேண்டுதல் வேண்டாமையிலான் என்பதற்கு - அருகக்கடவுளென்று கூறுவாரு மூளர். ''கொள்கை கொளாமை யிலாதான், எள்கலிராக மிலாதான்'' என்று ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், வேண்டுதல் வேண்டாமையிலான் - திருமாலாகவுமாம். (ச)

ரு. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ - ள்.) இருள் சேர்-மயக்கத்தைப்பற்றி வரும், இரு வினைஉம்-(நல்வினை தீவினை என்னும்) இரண்டுவினையும், சேரா - உளவாகா : இறைவன்-இறைவனது, பொருள் சேர் புகழ் - மெய்ம்மைசேர்ந்த புகழை, புரிந்தார் மாட்டு - விரும்பினாரிடத்து; (எ - று.)

இன்னதன்மைத்தென ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை 'இருள்' என்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலான் 'இருவினையுஞ் சேரா' என்றுங் கூறினார். இறைமைக்குணங்கள் இலராயினுரை உடைய ரெனக்கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேரா ஆகலின், அவை முற்றும் உடைய இறைவன் புகழே 'பொருள்சேர் புகழ்' எனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்.

(கு - ரை.) மயக்கமாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லை யெனவும், மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் பொய்ந்நூல் வழக்குக்களை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல்; குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றைப் பிறிதொன்றுகத்துணிதலும், அது: மயக்கம், அவித்யை, விபரீத ஞானம், மருள், இருள் என்பன-ஒருபொருட்சொற்கள். கருமங்களுக்கு அவித்யை காரணமாதலை ''பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும், மருளானும் மாணாப் பிறப்பு'' என மேல் மெய்யுணர்த லென்னும் அதிகாரத்துட் கூறுவதனாலும் உணர்க. இங்கே 'நல்வினை' என்றது, அழியுந் தன்மையனவாகிய சுவர்க்க இன்பம் முதலிய காமியங்களைத் தருவனவாகிய யாகம்முதலியவற்றின் பயனை; இவை, முத்திக்கு நேரே காரணமாகிய தத்துவஞானத்தை உண்டாக்காமை மாத்திரமேயன்றித் தீவினைபோல அது நிகழவொட்டாமல் தடை செய்து நிற்றலு முடையனவாம்; ஆதலால், இந் நல்வினை தீவினை இரண்டும் ஒரு

வனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துவதிற் பொன்விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தம்முள் ஒப்பனவா மென்க; ஆனது பற்றியே, 'இரு வினையுஞ் சேரா' என்றார். இறைவன்-தலைவன். இறைமைக் குணங்கள் - தலைவனுதற்கு ஏற்ற முற்றுமறிதல் முதலிய நற்குணங்கள். உடையர்-அக்குணங்களை யுடையவர். சேரா-அஃறிணைப் பன்மை எதிர்மறை முற்று. மாட்டு - ஏழனுருபு. இரு வினையும், உம் - இனைத்தென் றறிபொருளில் வந்தது. சிலப்பதிகாரத்திலே அருகக்கடவுளின் நாமாவளியில் ''இறைவன்'' என்று ஒரு பெயர் கூறப்பட்டிருத்தலால், இங்கே அருகனென்று உரைப் பாரு முளர். "இருந்தா னென்னுள்ளத் திறைவன்" என்று ஆழ்வார் அருளிச்செய்தலால், இறைவன் - திருமாலாகவுமாம். (இ)

கூ. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ - ள்.) பொறி-(மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும்ஐம்)பொறிகளை, வாயில் - வழியாகவுடைய, ஐந்து - ஐந்து அவாவினையும், அவித்தான்-அறுத்தானது, பொய் தீர் ஒழுக்கம் நெறி - மெய்யான ஒழுக்கநெறியின் கண், நின்றார் - வழுவாதுநின்றார்,—நீடு வாழ்வார் - (பிறப்பின்றி) எக்காலத்தும் (ஒருதன்மையராய்) வாழ்வார்; (எ - று.)

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கண்செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழிக்கநெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின், ஆண்டை ஆறனுருபு - செய்யுட்கிழமைக்கண் வந்தது; 'கபிலரது பாட்டு' என்பதுபோல.

இவை நான்குபாட்டானும், இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலுஞ் செய்தார் வீடுபெறுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பொறி - பஞ்சேந்திரியம். அவா - பொருள்களின் மேலே தோன்றும் பற்றுள்ளம். அறுத்தான்-ஒழித்தவன். பொய் தீர் நெறி எனவே, மெய்யான நெறியாயிற்று. அறுத்தானது ஒழுக்க நெறி : அறுத்த கடவுளாற் சொல்லப்பட்ட வேதம் முதலிய நூல்களிற் கூறப்பட்ட நல்லொழுக்க முறைமை;என்றது,இங்கு, விதிப்படி அருச்சித்தல் பூசித்தல் முதலியவற்றை. புலன்கள் ஐந்து - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன; வடநூலில் ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் எனப்படும். ஆண்டை ஆறனுருபு - ஐந்தவித்தான் என்ற அவ்விடத்துத் தொக்கு நின்ற ஆறும் வேற்றுமை யுருபு. செய்யுட் கிழமை, பொருட்பிறிதின்கிழமைப்பொருளில் அடங்கும்; இதனைத் தொல்காப்பியனார் 'தெரிந்து மொழிச் செய்தி' என்பர். மூன்று நான்காம் பாட்டுக்களால் கடவுளை நினைத்தவர் வீடுபெறுவ ரென்றும், ஐந்தாம்பாட்டால் அவனை வாழ்த்தியவர் வீடுபெறுவ ரென்றும், ஆறும்பாட்டால் அவன் நெறிநின்றவர் வீடுபெறுவ ரென்றுங் கூறப்பட்டது. ஐந்து - அவாவுக்கு, எண்ணலளவையாகுபெயர். அவித்தான், நின்றார் - பெயர்கள். ஒழுக்கம்-தொழிற்பெயர். 'ஐந்தவித்தான்,' 'பொய்தீர்' என்பன - இயற்கையைச்

சொன்னவை. சிலப்பதிகாரத்து "ஐவரைவென்றோன்" என்று அருக னைக் கூறியிருத்தலால், ஐந்தவித்தான் - அருகக்கடவுள் என்பாரு முளர். 'இருடீகேசன்' என்னுந் திருநாமத்தின் கருத்தால், ஐந்தவித்தான் - திரு மால் என்றுங் கொள்ளலாம்; ஹ்ருஷீக ஈசன்-இந்திரியங்கட்குத் தலைவன்.

எ. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

(இ - ள்.) தனக்கு உவமை இல்லாதான்-(ஒருவாற்றானுந்) தனக்கு நிக ரில்லாதவனது, தாள் - தாளை, சேர்ந்தார்க்கு அல்லால் - சேர்ந்தார்க்கு அல் லது, மனம் கவலை மாற்றல் - மனத்தின்கண் நிகழுந் துன்பங்களை நீக்குதல், அரிது - உண்டாகாது; (எ - று.)

"உறற்பால, தீண்டா விடுத லரிது" என்றாற்போல, ஈண்டு அருமை - இன்மைமேல் நின்றது. தாள்சேராதார் பிறவிக்கு ஏதுவாய காமவெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து இறந்து அவற்றான்வருந் துன் பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

(கு - ரை.) ஒருவாற்றானும் - ஒருவகையாலும். நிகர் - ஒப்பு. தாள் - திருவடி. நிகழும்-உண்டாகிற. "உறற்பால, தீண்டா விடுத லரிது" என்னும் மேற்கோள், நாலடியார் - பழவினை-கூ ஆம் செய்யுளில் உள்ளது; ஊழ்வினை யால் வரத்தக்க நன்மைதீமைகள் அடையாமல் விடுவதில்லை என்று பொருள். அரிது - இல்லை. அவற்றான் - காமம்முதலியவற்றால். உவமை=உபமா: வடமொழி. தனக்கு உவமையில்லாதான் - அருகக்கடவுள் என்பாரும் உளர். "ஓதாதார் மிக்காரை யியலாயமாமாயா" என்றும், "தன்னெப்பாரில்லப் பன்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்தலால், தனக்கு உவமையில்லாதான்-திருமா லென்றுங் கொள்ளலாம். ஒப்பில்லாதவனெனவே, உயர்வில்லாதவ னென்பது பெறப்படும். (எ)

அ. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(இ - ள்.) அறம் ஆழி அந்தணன்-அறக்கடலாகிய அந்தணனது, தாள்-தாளாகிய புணையை, சேர்ந்தார்க்கு அல்லால் - சேர்ந்தார்க்கு அல்லது, பிற ஆழி நீந்தல்-(அதனிற்) பிறவாகிய கடல்களை நீந்தல், அரிது—; (எ - று.)

அறம் பொருள் இன்பம் என உடன் எண்ணப்பட்ட மூன்றனுள் அறத் தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் 'பிற' எனப் பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையும் தனக்கு வடி வாக உடையனாகலின், 'அறவாழியந்தணன்' என்றார். அறவாழி என்பத னைத் தருமசக்கரமாக்கி, அதனையுடைய அந்தணன் என உரைப்பாரு முளர். அப்புணையைச்சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவ ராகலின், 'நீந்தலரிது' என்றார். இஃது, ஏகதேசவுருவகம்.

(கு - ரை.) அறக்கடல் என்பது, நீர்நிரம்பிய கடல்போலத் தருமம் நிரம்பியவை னென்றபடி. அந்தணன் - அழகாகிய தண்மையை யுடையவன்; தண்மை-அருள். பூணை-உதப்பம். பிறவாகிய கடல்கள் - பொருளும் இன்பமுமாகிய கடல்கள்; அவை, அளவில்லாதனவாதலால், கடலெனப்பட்டன. நீந்தல் - கடத்தல். ஏனை - மற்றை. தருமசக்கரத்தையுடைய அந்தணன் - அருகக்கடவுள். அப் பூணையை - தாளாகிய பூணையை. அவற்றுள் பொருளின்பங்களுள். பொருளின்பங்களாகிய கடத்தலே ஆழிநீந்த லென்றதற்கு ஏற்பத் தாளைப் பூண யென்ஞமையால், ஏகதேசநபகாலங்காரம்; அதாவது - ஒருபதுதியை உருவகப்படுத்தி மற்றொருபதுதியை உருவகப்படுத்தாமல்விடுவது: உருவகப்படுத்தல் என்பது, உவமானத்தையும் உபமேயத்தையும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென்பது தோன்ற வைப்பது. ஆழி - கடலை உணர்த்தும்பொழுது, ஆழ்ந்திருப்பதென்று பொருள்; இ - வினைமுதற் பொருள் விகுதி: சக்கரத்தை உணர்த்தும்பொழுது, ஆழி - வட்டம்: அதனை யுடையதென்று பண்பாகுபெயர்; (பகைவரை) அழிப்பதென்றும் பொருளாம். அறம் என்பதை - அரம்என்பதன் திரிபாகக் கொண்டால், ஆயிரம் அரங்களையுடைய சுதரிசனம்என்னுஞ் சக்கரத்தையுடைய திருமால் என்று பொருள்படும்; "அறவனை யாழிப்படையந்தணனை" என ஆழ்வார் அருளிச்செய்தலால், தருமஸ்வரூபியுஞ் சக்கரபாணியுமான திருமா லென்றுமாம். பிற ஆழி - அறத்தின் வேறுபட்டனவான பாவங்களாகிய கட லென்றுங் கொள்ளலாம். பிற என்பதை முதனிலைத்தொழிற்பெயராகக் கொண்டால், பிறப்புத்துன்பங்களாகிய கடலென்று ஆகும். (அ)

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளை வணங்காத் தலை.

(இ - ள்.) கோள் இல் - (தத்தமக்கு ஏற்ற புலன்களைக்) கொள்கையில்லாத, பொறியின் - பொறிகள்போல, குணம் இல - பயன்படுதலுடைய வல்ல: எண் குணத்தான் - எண்வகைப்பட்ட குணங்களை யுடையானது, தாளை - தாள்களை, வணங்கா - வணங்காத, தலை - தலைகள்; (எ - று.)

எண்குணங்களாவன - தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கை யுணர்வினனுதல், முற்றும்உணர்தல், இயல்பாகவேபாசங்களின்நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை; இவ்வாறு, சைவாகமத்திற் கூறப்பட்டது. அணிமாவை முதலாகவுடையன எனவும், கடையிலா அறிவை முதலாகவுடையன எனவும் உரைப்பாரு முளர். 'காணுத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில' எனத் தலைமேல்வைத்துக் கூறினார்: கூறினுரேனும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில என்பதாஉங் கொள்க.

இவை மூன்றுபாட்டானும், அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(சு - சை.) தன்வயத்தனுதல்-சுவதந்திரத்வம். தூய உடம்பின் ஞுதல்-விசுத்த தேகத்வம். இயற்கை யுணர்வின ஞுதல் - அநாதிபோதம். முற்றும் உணர்தல் - சர்வஜ்ஞத்வம். இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் - நிராமயத்வம். பேரருளுடைமை - அலுப்தசக்தி. முடிவிலாற்றலுடைமை-அநந்தசக்தி. வரம்பிலின்பமுடைமை-த்ருப்தி. அணிமாவைமுதலாக உடையன - அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்வம் என இவை. அவற்றுள், மிகவும் நுண்ணியத்தால்-அணிமா. மிகவும் பருத்தல்-மகிமா. மிகவும்கனத்தல்-கரிமா. மிகவும்நொய்தாதல் - லகிமா. வேண்டுவனஅடைதல்-பிராப்தி. குறைவின்றி நிறைவுள்ளவனுதல் - பிராகாம்யம். யாவர்க்கும்மேம்பட்டிருத்தல் - ஈசத்வம். எல்லாவற்றையும் தன்வசமாக்க வல்லவனுதல் - வசித்வம். இவை, அஷ்டஐசுவரியங்களெனப்படும். கடையிலா அறிவை முதலாக உடையன - கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுஇன்மை, அழியாஇயல்பு என இவை; வடமொழியில் முறையே அநந்தஞாநம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்கோத்ரம், நிராயுஷ்யம், நிர்நாசம் எனப்படும்: இவ்வாறு ஆருகத நூலிற் கூறப்பட்டது. இனி, அபஹதபாப்மத்வம், விஜரத்வம், விம்ருத்யுத்வம், விசோகத்வம், விசிகித்ஸத்வம், அபிபாஸத்வம், ஸத்யகாமத்வம், ஸத்யஸங்கல்பத்வம் என்றும்; வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஜ்ஞாநம், சக்தி; பிராப்தி, பூர்த்தி என்றும் வைணவ நூல்களுள் எட்டுக் குணங் கூறப்பட்டிருத்தலால், எண்குணத்தான்-திருமா லென்றுங் கொள்ளலாம். வணங்காத தலை என்றது - வாழ்த்தாத நாவிற்கும் உபலக்ஷணம்; உபலக்ஷணமாவது - ஒருமொழி, ஒழிந்த தன் இனத்தையுங் குறிப்பது. கீழிரண்டுபாட்டுக்களால் கடவுளே நிலையாமையா லுண்டாங் குற்றமும், இப்பாட்டால் அவனே வாழ்த்தாமையாலும் வணங்காமையாலு முண்டாங் குற்றமும் கூறப்பட்டன. கோள்-கொள்கை; விகுதிபுணர்ந்துகெட்டு முதனிலைதிரிந்த தொழிற்பெயர். பொறியின், இன் - ஐந்தாம்வேற்றுமையுருபு; ஒப்புப் பொருள். ஏ - தேற்றம். உத்தம அங்க மாதலால், தலை என்று சிரசுக்குப் பெயர். பார்வைமுதலிய புலன்களில்லாமற் கண்முதலிய உறுப்புக்கள் இருந்தும் பயன்படாதவாறு போல, கடவுளைவணங்காதவர்கள் மனிதவுடம் பெடுத்திருந்தும் அதன்பயன் பெறாதவரென்பது, இதன்கருத்து. இல் பொறி - பண்புத்தொகை. (க)

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

(இ - ள்.) இறைவன் அடி - இறைவன் அடியென்னும்புணையை, (சேர்ந்தார்), பிறவி பெரு கடல்-பிறவியாகிய பெரிய கடலை, நீந்துவர்—; சேராதார் - (அதனைச்) சேராதார், நீந்தார்-நீந்தமாட்டாராய் (அதனுள் அழுந்துவர்); (எ - று.)

காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், 'பிறவிப் பெருங்கடல்' என்றார். 'சேர்ந்தார்' என்பது, சொல்லெச்சம்.

உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறிநினைப்பார்க்கு அஃதறுமையும் ஆகிய இரண்டும் இதனுல் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) அதனை - அடியென்னும் புணையை. அதனுள்-பிறவிப்பெருங்கடலுள். சொல்லெச்சமாவது - பாட்டில் சொல் குறைந்துநிற்பது. காரண காரியத் தொடர்ச்சியாய் - ஒருபிறப்பு மற்றொருபிறப்புக்குக் காரணமாதலும், மற்றொருபிறப்பு அதன்காரியமாதலு மாகிச் சம்பந்தப்பட்டு. உலகியல்பு - இவ்வுலக நடத்தை.

"பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா, நிறைவனடி சேராதார்"—'இது, சேர்ந்தார்நீந்துவ ரென எதிர்மறைகொண்டு முடிதலின், எதிர்மறை யெச்சமாயிற்று' என்பது, நன்னூற் பழைய வுரை. இனி, சேராது ஆர் எனப்பிரித்து, இறைவனடி சேராது ஆர் பிறவிப்பெருங்கடல் நீந்துவர்? (எவரும்) நீந்தார் என்று பொருள்கொண்டால், 'சேர்ந்தார்' என்ற எதிர்நிலை யெழுவாய் வருவிக்கவேண்டிய அவசியம் இல்லையாம். இவ்வுரையில், ஆர் நீந்துவர், நீந்தார் என இரண்டு வந்தது, வற்புறுத்துதற்கு என்க; 'உண்டோ உணர்ச்சி மற்றில்லாரும்",'வளம்படவேண்டாதார் யார் யாருமில்லை",'முனிவர் சொற் பொய்க்குமோ பொய்யாதே" என்றுற் போலக் கொள்க. ஆர்-யார் என்பதன் மரூஉ. இறைவன்-எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாய்த் தங்குகிறவன்; இறுத்தல் - தங்குதல். "எங்குமுளன் கண்ணன்" என்றும், "உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்றும் ஆழ்வார் அருளிச்செய்திருத்தலால், இறைவன்-திருமால் என்றுங் கொள்ளலாம். பிறவி-'வி'விகுதி பெற்ற தொழிற்பெயர். (கo)

உ-ஆம் அதிகாரம்.—வான்சிறப்பு.

அஃதாவது - அக்கடவுளதுஆணையான் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம்பொருள்இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல். அதிகாரமுறைமையும், இதனுனே விளங்கும்.

(கு - ரை.) ஆணை - ஆஞ்ஞை; கட்டளை. அதற்கு உறுதியாகிய - உலகத்துக்கு நன்மையைத் தருவதான. கடவுள்வாழ்த்தின் பின் கடவுளின் கட்டளையினுலாகிய மழையினது சிறப்பைக் கூறுதலே, அதிகாரமுறைமை.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

(இ - ள்.) வான் - மழை, நின்று - இடையறுதுநிற்ப, உலகம்—, வழங்கி வருதலான் - நிலைபெற்று வருதலான், தான்-அம்மழைதான், அமிழ்தம் என்று - (உலகத்திற்கு) அமிழ்தமென்று, உணரற் பாற்று - உணரும் பான்மையையுடைத்து; (எ - று.)

'நிற்ப' என்பது, 'நின்று' எனத் திரிந்துநின்றது. 'உலகம்' என்றது, ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்றுவருதலாவது - பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தம்உண்டார் சாவாது நிலைபெறுதலின், 'உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்று உணர்க' என்றார்.

(கு - ரை.) இடை-நடுவில். அறுதல் நீங்காமல். அமிழ்தம்-அம்ருதமென்னும் வடமொழியின் திரிபு: மரணமில்லாமற்செய்வதென்ற பொருள். நின்று-செய வெனெச்சத்திரிபு: 'வழங்கிவருதலால்' என்னும் பிறகர்த்தாவின் வினையைக் கொண்டுமுடிதற்கு ஏலாமையால், 'நின்று' என்பதனை, அதற்கு ஏற்ற செய வெனெச் சத்தின் திரிபாகக் கொண்டார்: [நன் - வினை - உள.] எஞ்ஞான்றும்-எப்பொழுதும். பாற்று - ஒன்றன்பாற்குறிப்புமுற்று; பால்-பகுதி. இனி, இக் குறளில், 'வான்' என்பதில் மூன்றும்வேற்றுமையுருபு தொக்குநின்றதாக்கி, வானினுல் உயிர்கள் நிலைபெற்றுத் தொழில்கள் நடந்துவருதலால் அது அமிழ்தமென்று உரைபாற்று என்றுங்கொள்ளலாம். 'நின்று' என்பதை ஏழாம்வேற்றுமை யுருபாகக்கொண்டு உரைத்தல் வேண்டு மென்பது, வீர சோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனுரது கொள்கை. (க)

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பா யதூஉ மழை.

(இ - ள்.) துப்பார்க்கு-உண்பார்க்கு, துப்பு ஆய துப்பு-நல்லவுணவுகளை, ஆக்கி - உளவாக்கி, துப்பார்க்கு - (அவற்றை) உண்கின்றார்க்கு, துப்பு ஆய தூஉம் - (தானும்) உணவாய் நிற்பதூஉம், மழை—; (எ - று.)

தானும்உணவாதலாவது - தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃது ஒக்கும்; இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை, வழங்கிவருதலுடையவாயின என்பதாம்.

(கு - ரை.) துப்பு ஆய-நன்மையாகிய. உயர்திணைமேல் வைத்துக்கூறின மையின் - துப்பார்க்கு என உயர்திணைச் சொல்லாற் சொன்னதனுல். உயர் திணை - உயர்வாகிய பகுப்பு. அஃறிணை - அல்திணை; அதுவல்லாத [தாழ்வா கிய] பகுப்பு. நீர்வேட்கை - தாகம். அவை - உயிர்கள். துப்பார், துப-பகுதி. துப்பு-நன்மையென்னும் பொருளில், பண்புப்பெயர்; உணவு என்னும் பொரு ளில், தொழிலாகுபெயர். அளபெடை, ஓசை நிறைத்தது. சொற்பொருட்பின் வருநிலையணி. (உ)

கஊ. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று உடற்றும் பசி.

(இ - ள்.) விண்-மழை, இன்று - வேண்டுங்காலத்துப் பெய்யாது, பொய்ப்பின் - பொய்க்குமாயின், விரி நீர் - கடலாற் சூழப்பட்ட, வியன்-அக ன்ற, உலகத்துள் - உலகத்தின்கண், நின்று - நிலைபெற்று, உடற்றும்-(உயிர் களை) வருத்தும், பசி—; (எ - று.)

கடலுடைத்தாயினும் அதனைப் பயனில்லை யென்பார், 'விரிநீர் வியனுல கத்து' என்றார். உணவின்மையின் பயமான் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

(கு - ரை.) இன்றி - எதிர்மறைக்குறிப்புவினையெச்சம், இன்று எனத் திரிந்துநின்றது; [ஈன்-உயிர்ப்பித்தற்புணரியல் - உரூ.] வியன் - அகலமுணர்த் தும் உரிச்சொல்; "வியனென் கிளவி யகலப் பொருட்டே". உடற்றும்-உடல் என்பதன் பிறவினையாகிய உடற்று - பகுதி. வின் என்னும் ஆகாயத்தின் பெயர் - அங்குப் பொருந்திய மழைக்கு ஆகுபெயர்: கீழ் 'வான்' என்றதும், மேல் 'விசும்பு' என்பதும் இவ்வாறே.கடலாற் பயனில்லாமை, உவர்நீருடைத் தாதலால் என்க. பொய்ப்பின் - எதிர்காலவினையெச்சம். உடற்றுமென்பதற் குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. (கூ)

கசு. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(இ - ள்.) உழவர்—, ஏரின் - ஏரான், உழாஅர் - உழுதலைச்செய்யார்: புயல் என்னும் - மழையென்னும், வாரி-வருவாய், வளம் - (தன்)பயன், குன் றிக்கால் - குன்றின்; (எ - று.)

'குன்றியக்கால்' என்பது, குறைந்து நின்றது. உணவின்மைக்குக் கார ணங் கூறியவாறு.

(கு - ரை.) உழவர் - உழுதுபயிர்செய்பவர். உழு-பகுதி, அ - சாரியை, வ் - சுட்டி, அர் - விகுதி. ஏர் - கலப்பை; இன் - ஐந்தனுருபு, ஏதுப்பொருள். உழார்-எதிர்மறைப்பலர்பால்முற்று. அளபெடை, செய்யுளோசை நிறைக்க வந்தது. வருவாய் - வரவுகளுக்கு ஆன ஏது. வாரி - வரவுக்குக் கருவியானது; இ - கருவிப்பெருன் விகுதி. குன்றிக்கால்-காலீற்று எதிர்காலவினையெச்சத் தின் தொகுத்தல். வருவாயினது வளம் குன்றினால் என ஆறும்வேற்றுமைத் தொகையாகவுங் கொள்ளலாம். (சு)

கஎ. தெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(இ - ள்.) கெடுப்பதூஉம் - (பூமியின்கண்வாழ்வாரைப் பெய்யாது நின்று) கெடுப்பதூஉம், கெட்டார்க்கு-(அவ்வாறு)கெட்டார்க்கு, சார்வு ஆய் - துணையாய்(ப் பெய்து), மற்று ஆங்கே - முன் கெடுத்தாற் போல, எடுப்ப தூஉம்—, எல்லாம் - இவையெல்லாம் (வல்லது), மழை—; (எ - று.)

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கு என்பது-மறுதலைத்தொழி லுவமத்தின்கண்வந்த உவமச்சொல். கேடும்ஆக்கமும் எய்துதற்கு உரியார் மக்களாதலின், 'கெட்டார்க்கு' என்றார். 'எல்லாம்' என்றது - அம்மக்கள் முயற்சிவேறுபாடுகளாற் கெடுத்தல்எடுத்தல்கள்தாம் பல வாதல் நோக்கி. 'வல்லது' என்பது, அவாய்நிலையான் வந்தது. மழையினது ஆற்றல் கூறியவாறு.

(கு - ரை.) எடுப்பது - காப்பது. மற்று, ஆங்கு - இடைச்சொற்கள். 'பெய்யாமற் கெடுத்து' என்ற வினையை 'பெய்து கெடுக்காமல்' என மாற்றியதனால், வினைமாற்று. ஆங்கு என்பது - கெடுத்தாற்போல என எடுத்தற்கு எதிர்த்தொழிலாகிய கெடுத்தலென்னும் உவமைக்கு உருபாய் வந்தது. கேடு - வறுமை. ஆக்கம் - செல்வம். மக்கள்-மனிதர். கெட்டார்க்கு என்றூர் - உயர்திணையாகக்கூறினர். எல்லாம் என்றது-இரண்டும் என்னுமல் எல்லாமென்று சொன்னது. அவாயீநிலை - ஒருசொல் மற்றொருசொல்லை வேண்டிநிற்றல்; இவ்வாறு வருவித்துமுடிப்பதை வடநூலார் அத்தியாஹாரமென்பர். ஆற்றல் - வல்லமை. கெடுப்பதும், எடுப்பதும் என நிற்பினுஞ் செய்யுளோசை குன்றாயினும், இன்னிசை நிறைத்தற்பொருட்டுக் குறில் நெடிலாய் அளபெடுத்தது. உம் - எண்ணும்மைகள். எல்லாம் என்றது, வியப்புப்பற்றிக் கூறியதாகவுமாம். ஆங்கே, ஏ - அசை. (கூ)

கசு. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(இ - ள்.) விசும்பின் - மேகத்தின், துளி—, வீழின் அல்லால் - வீழின் காண்பதல்லது, மற்று ஆங்கே - வீழாதாயின் அப்பொழுதே, பசு புல் தலை - பசும்புல்லினது தலையையும், காண்பு - காண்டல், அரிது—; (எ - று.)

விசும்பு - ஆகுபெயர். மற்று - வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பு உம்மை, விகாரத்தால் தொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம்.

- (கு - ரை.) விசும்பின், ஐக்தனுருபு நீக்கப்பொருளது. மேகத்தின்-மேகத்தினின்றும், துளி வீழின் - மழைத்துளிவிழுந்தால். ஆகுபெயர் - இடவாகுபெயர்; விசும்புஎன்பது அங்குள்ள மேகத்துக்கு ஆகிவந்தது காண்க. ஆகுபெயராவது, ஒரு பொருளின்பெயர் அப்பொருளுக்குச் சம்பந்தப்பட்ட வேறொரு பொருளுக்கு வழங்குவது. 'வீழின்' என்ற வினையை 'வீழாதாயின்' என மாற்றியதனால், மற்று-வினைமாற்று. உம்மை, செய்புள்விகாரத்தால் தொக்கது, 'பசும்புற்றலை' என்னுமிடத்தில்; அது, அப்புல்லினது ஸ்பரிசத்தை அறியும் அறிவைமாத்திரம் உடைத்தாயிருக்குந் தன்மையைத் தெரிவித்ததனால், இழிவுசிறப்பாயிற்று; "புல்லு மரனு மோரறி வினவே" என்றூர் தொல்காப்பியனார். காண்பு - தொழிற்பெயர்; பு - விகுதி. (கூ)

கஎ. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(இ-ள்.)நெடு கடல்உம் - அளவில்லாத கடலும், தன் நீர்மை குன்றும் - தன் இயல்பு குறையும்: எழிலி தான் - மேகந் தான், தடிந்து - (அதனைக்) குறைத்து, நல்காது ஆகிவிடின்-(அதன்கண்)பெய்யாதுவிடுமாயின்; (எ-று.)

உம்மை - சிறப்பும்மை. தன் இயல்பு குறைதலாவது - நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணிமுதலாயின படாமையுமாம். ஈண்டு 'குறைத்தல்' என்

றது, முகத்தலே; அது "கடல்குறைபடுத்தநீர் கல்குறைபட வெறிந்து" என் பதனாலும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும் என்பதாம்.

இவையேழுபாட்டானும், உலகம் நடத்திற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) நெடு - நீண்ட. குன்றும்-குறையும். அதனை-கடலின் நீரை. குறைத்து - மொண்டு. அதன்கண் - கடலில். சிறப்பு - உயர்வுசிறப்பு; மழைக் குக் காரணமாதலாகிய கடலினது உயர்வை விளக்கியதனால். மணி - முத் தும், பவளமும்: "வைகாசியிலே ஞாயிற்றுச்சோதியின் மழையிலே முத் துக்குக் கரு: ஐப்பசிப்பூசத்து மழையிலே பவளத்துக்குக் கரு" என்பர். படா மை - உண்டாகாமை. முகத்தல் - மொள்ளுதல். "கடல்குறைபட" என்ற மேற்கோள் பரிபாடலில் உ0-ஆம் பாடலிலுள்ளது: இதன்பொருள்—கடல் குறைபடுத்த - கடலினின்று முகந்துகொண்ட, நீர் - நீரை, கல் - மலையின் கற்கள், குறைபட - தூளிபட, எறிந்து - சிதறி என்பது. முதலாய - காரண மாகிய. எழிலி - எழுச்சியையுடையதென மேகத்துக்குக் காரணப்பெயர். ஆகிவிடின், விடு - தூவுப்பொருளுணர்த்திவந்த தூவினை. தடிந்து - குறையச்செய்து; தன்வினை பிறவினைப்பொருளில் வந்தது: இதனை வட நூலார் 'அந்தர்ப்பாவித ணிச்' என்பர்; தடித்து என்பதன் மெலித்தல் விகாரமாகவுங்கொள்ளலாம். (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(இ - ள்.) வானோர்க்குமும் - தேவர்கட்கும், ஈண்டு - இவ்வுலகில், சிறப் பொடு-(மக்களாற் செய்யப்படும்) விழவொடுகூடிய, பூசனை-பூசையும், செல் லாது - நடவாது: வானம் - மழை, வறக்கும் எல் - பெய்யாதாயின்; (எ-று.)

நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்ற ராகலின், 'செல்லாது'என் றார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது நைமித்திக மாதலின், அதனை முற் கூறினார். உம்மை - சிறப்பும்மை.

(கு - ரை.) விழவு - திருவிழா: உற்சவம். நைமித்திகம் - யாதாயினு மொரு நிமித்தம்பற்றிச் செய்வது. செல்லாதென்றார் - ஒருமையாக்கூறினார். நித்தியத்தில் தாழ்வு தீரச் செய்வது - நாள்தோறுஞ் செய்யப்படுவதனினும் விசேஷமாகச் செய்யப்படுவது; பவித்திரஉத்ஸவம் முதலியன. அதனை 'சிறப்பு' என்றதும், இதுபற்றியே. எல் - என்னில் என்பதன் மரூஉ. வா னோர் - வானுலகத்துள்ளவர். சிறப்பு - உயர்வுசிறப்பு. (அ)

கக. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ - ள்.) வியன் உலகம் - அகன்ற உலகின்கண், தானம் தவம் இர ண்டுமும்-தானமுந் தவமும் ஆகிய இரண்டுஅறமும், தங்கா - உளவாகா: வா னம் - மழை, வழங்காது எனின் - பெய்யாதாயின்; (எ - று.)

தானமாவது - அறநெறியான்வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகை யோடுங் கொடுத்தல். தவமாவது - மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கல்முதலாயின. பெரும்பான்மைபற் றித் தானம் இல்லறத்தின்மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன.

(கு - ரை.) அகன்ற-விசாலமான. அற நெறியான் வந்த - தருமமார்க் கத்தில் நின்று சம்பாதித்த. தக்கார் - அறிவொழுக்கங்களினால் தகுதியான வர். உவகை - மனமகிழ்ச்சி. தவமாவது - மனம் ஐம்பொறிகளின்வழியே போகாமல் ஒருவழியில் நிற்கும்பொருட்டு நீர்பருகியும் காற்று நுகர்ந்தும் காய் கனிகிழங்குசருகுவருக்கங்களேயுண்டும் விரதங்களால் உணவைச் சுருக்கலும், கோடைக்காலத்தில் வெயிலிலும் பஞ்சாக்கினிமத்தியிலும் நிற்றலும், மாரிக் காலத்தும் பனிக்காலத்தும் நீர்நிலையிற் பாயியேற நிற்றலும் முதலிய செயல் களே மேற்கொண்டு அவற்றால் வருந் துன்பங்களைப் பொறுத்து உடம்பை யொறுத்துப் பிறவுயிர்களை ஓம்புதல்; தபஸ்என்னும் வடமொழித்திரிபு. இல் லறமும் துறவறமும் நடவா வென்பது கருத்து. (கூ)

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(இ - ள்.) யார் யார்க்குமும்-எவ்வகை மேம்பாட்டார்க்கும், நீர் இன்று-நீரைஇன்றி, உலகு - உலகியல், அமையாது எனின் - அமையாதாயின், ஒழுக்கு - (அந்நீர் இடையறாது ஒழுகும்) ஒழுக்கும், வான் இன்று - வானை யின்றி, அமையாது—; (எ - று.)

பொருளின்பங்களை 'உலகியல்' என்றார், அவை இம்மைக்கண்ணவாக லின். இடையறாது ஒழுகல் - எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின் றமையாதுலகென்பது எல்லாராலும் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக் கும் வானின் றமையாமை தெளியப்படு மென்பார், 'நீரின்றமையாதுலகெ னின்' என்றார். இதனை, நீரையின்றி அமையாது உலகாயின் எத்திறத்தார்க் கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாது என உரைப்பாரும் உளர்.

இவை மூன்றுபாட்டானும், அறம் பொருள் இன்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.)எவ்வகைமேம்பாட்டார்க்கும்-எவ்வளவுபெருமையுடையவர்க் கும். உலகுஇயல் - உலகநடத்தை. அமையாது - நடவாது. இம்மைக் கண்ண - இப்பிறப்புக்கே பயன்படுவன. முதலருத்தத்தில், ஒழுக்கு - ஏரி குளம் முதலியவற்றில் நீர் ஓடி ஒழுகுதல். இரண்டாமருத்தத்தில், ஒழுக்கு- வருணாசிரம தருமத்தில் வழுவாதுநடத்தல். முதலருத்தத்தின் கருத்து - உலகவாழ்க்கைக்கு நீர் அவசியமாதல்போல அந்நீர்ப்பெருக்கிற்கு மழை அவசிய மென்பது; மழையின்றி நீரூறு, நீரின்றி உலகுஇயலா என்றதாம். இரண்டாமருத்தத்திற்குக் கருத்து - உலகவாழ்க்கைக்கெல்லாம் நீர் அவ சியமாதலால் உலகத்தவரொழுக்கத்திற்கெல்லாம் மழை அவசிய மென்பது,

"யழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்றார் கான்மணிக்கடிகையிலும். எனின் என்பது, என்றால் என்னும் பொருளைத் தராமல் தேற்றப்பொருளைத் தந்தது. உம்மை - முற்றப்பொருளோடு உயர்வுசிறப்புப்பொருளது. ஒழுக்கு - இருபொருளிலும், முதனிலை திரிந்த தொழிற்பெயர். கீழிரண்டு வாக்கியங்களால் அறம் நடத்தற்கு ஏதுவாதலும், இப்பாட்டால் பொருளின் பங்கள் நடத்தற்கு ஏதுவாதலும் கூறப்பட்டது. (கo)

க - ஆம் அதிகாரம்.— நீத்தார்பெருமை.

அஃதாவது - முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற்பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின், இது, வான்சிறப்பின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) முற்றத்துறத்தல் - (உலகியலையும் இல்லறவாழ்க்கையின் நிலையில்லாமையையும் அறிந்து கடவுளின் தன்மையைத் தெரிந்து மோட்சத்தையடையும் பொருட்டுத் தேகாபிமானம் முதலிய எல்லாவற்றையும்) முழுவதும்விடுதல். முனி என்னும் வடசொல்லுக்கு-கடவுளையே எப்பொழுதுந் தியானஞ்செய்பவன், அல்லது திரிகால ஞானமுடையவன் என்று பொருள். அவ்வறமுதற்பொருள்கள் - கீழ் 'வான்சிறப்பு' என்னுமிடத்திற் சொல்லப்பட்டபடி உலகத்திற்கு உறுதியாகிய அறம் பொருளின்பங்கள். உலகிற்கு-உயிர்களுக்கு. உள்ள ஆறு உணர்த்துவார் - உள்ளபடி தெரிவிப்பவர். அவர்-துறந்தவர். இது - நீத்தார்பெருமை. உயிர்களும் உயிர்களுக்கு உறுதியான அறம்பொருளின்பங்களும் நடத்தற்கு ஏதுவான மழையின் சிறப்பைக் கூறியபின், அறம்பொருளின்பங்களை உயிர்களுக்கு உணர்த்துதற்கு உரிய துறந்தவரது மகிமையைக் கூறுதல், அதிகாரமுறையென்க. நீத்தவர் முக்திமார்க்கத்திற்கு உரிய வழிகளைத் தேடித் தமது இன்பத்தைப் பார்ப்பதேயன்றி, ஜீவகாருண்யத்தால் யாவரும் நல்லொழுக்கத்தில் நிற்குமாறு அவரவர்கள் செய்யவேண்டுங் கடமைகள் முதலியவற்றை விவரித்துப் பலநூல்களியற்றுவதும், பிறர்க்கு ஞானோபதேசஞ் செய்வதும் எங்கும் வழக்கமென்க. இனி, மழைக்குக்காரணம் தவம் முதலிய நல்வினைகளாதலால், முனிவரின் பெருமையை மழைச்சிறப்பின்பின் வைத்தா ரென்றுங் கொள்ளலாம்; "மழையுந் தவமிலா நிலவுழி யில்லை" என்பது காண்க.

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(இ - ள்.) ஒழுக்கத்து (தமக்கு உரிய) ஒழுக்கத்தின்கண்ணே (நின்று), நீத்தார் - துறந்தாரது, பெருமை - பெருமையை, விழுப்பத்து - விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும், வேண்டும் - (இதுவே விழுமிது என) விரும்பும், பனுவல் துணிவு - நூல்களது துணிவு; (எ - று.)

தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது - தத்தம்வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுகி, அறம்களாரும்;

அறம்வளர, பாவந்தேயும்; பாவந்தேய, அறியாமை நீங்கும்; அறியாமைநீங்க, நித்தஅநித்தங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன்மாலையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும், பிறவித்துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாக, பிறவிக்குக் காரணமாகிய பயனில் முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சி உண்டாம்; அஃது உண்டாக, மெய்யுணர்வு பிறந்து, புறப்பற்றுகிய எனதென்பதும், அகப்பற்றுகிய யானென்பதும் விடும்: ஆகலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்துவிடுதல் எனக் கொள்க. 'பனுவல்' எனப் பொதுப்படக் கூறிய அதனுன், ஒன்றையொன்று ஒவ்வாத சமயநூல்க ளெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவு என்பது பெற்றும். செய்தாரது துணிவு, பனுவல்மேல் ஏற்றப்பட்டது.

(கு - ரை.) விழுமிய-சிறப்புடைய. விழுமிது-சிறந்தது. துணிவு-சித்தாந்தம். நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வு - என்றும் நிலையாயுள்ள பொருள்கள் இவை, நில்லாத பொருள்கள் இவை, இரண்டுக்கும் உள்ள பேதம் இப்படிப்பட்டது என்று பகுத்தறியும் விவேகம். அழிதன்மாலைய வாய - அழியுந்தன்மையை யுடையனவாகிய. உவர்ப்பு - வெறுப்பு. மெய்யுணர்வாவது - பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களாலன்றி உண்மையால் அறிதல். புறப்பற்றுகிய எனதென்பது - தன்னோடு இயைபில்லாத புறமாகிய பொருளை எனதென்றுகருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல்; மமகாரம். அகப்பற்றுகிய யானென்பது - தானல்லாத அகமாகிய உடம்பை யானென்று கருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல்; அகங்காரம். ஒவ்வாத - ஒத்திராத. சமயநூல்கள் - மதக்கிரந்தங்கள். 'நூல்செய்தார் வேண்டுவர்' என்று சொல்லாமல் அவரது சித்தாந்தத்தை நூலின்மே லேற்றி 'வேண்டும் பனுவற்றுணிவு' எனப்பட்டது. துணிவு - துணியப்பட்டபொருளுக்குத் தொழிலாகுபெயர். நூல்கள்சொல்லும் பெருமையான பொருள்களுள் மீத்தார்பெருமை சிறந்ததென்பதாம். (க)

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(இ - ள்.) துறந்தார் - (இருவகைப் பற்றினையும்) விட்டாரது, பெருமை-பெருமையை, துணை கூறின்-(இவ்வளவென்று) எண்ணுற் கூறியறியலுறின், (அளவுபடாமையான்), வையத்து இறந்தாரை - இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை, எண்ணி கொண்டு அற்று - எண்ணி (இத்துணையர் என) அறியலுற்றாற் போலும்; (எ - று.)—முடியாது என்பதாம்.

கொண்டால் என்னும் வினையெச்சம்,'கொண்டு' எனத்திரிந்துநின்றது.

(கு - ரை.) எண்ணுற் கூறியறியலுறின் - அளவிட்டுச்சொல்லி அவ்வழியால் அறியத்தொடங்கினால். இத்துணையரென - இத்தனைபேரென்று. பிறந்து இறந்தவர்களையெல்லாம் எண்ணி அளவிடுதல் முடியாததுபோல,

மூனிவர்களது மகிமையையெல்லாம் எண்ணி அளவிடுதல் முடியா தென்ற படி. வையம் - எல்லாப்பொருள்களையும் வைக்கும் இடமென்று பூமிக்குக் காரணப்பெயர். கொண்டு - கொண்டால்; எச்சத்திரிபு. அற்று - அன் என்னும் உவமவுருபிடைச் சொல்லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு முற்று; று - விகுதி. பெருமை துணைக் கூறின் - பெருமையது அளவைக் கூறலுறின் என்றுமாம். (உ)

உகூ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(இ - ள்.) இருமை - (பிறப்பு வீடு என்னும்) இரண்டினது, வகை - தன்ப இன்பக் கூறுபாடுகளை, தெரிந்து - ஆராய்ந்து அறிந்து, (அப்பிறப்பு அறுத்தற்கு), ஈண்டு - இப்பிறப்பின்கண், அறம்-துறவறத்தை, பூண்டார் - பூண்டாரது, பெருமை - பெருமையே, உலகு - உலகின்கண், பிறங்கிற்று - உயர்ந்தது; (எ - று.)

*"தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப் போல, 'இருமை' என்பது ஈண்டு எண்ணின்கண் நின்றது. பிரிநிலை ஏகாரம், விகாரத்தால் தொக்கது. இதனால், திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது.

இவை மூன்றுபாட்டானும், நீத்தாரதுபெருமையே எல்லாப் பெருமை யினும் மிக்கதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறப்பினது துன்பக்கூறுபாடென்றும், வீட்டினது இன்பக் கூறுபாடென்றும் முறையே கூட்டுக. அறுத்தற்கு - ஒழிப்பதற்காக. பூண் டார் - மேற்கொண்ட முனிவர். அறம் பூண்டார் - கல்லொழுக்கத்தை ஆப ரணமாகக்கொண்டவர். "தெரிமாண்" என்றுதொடங்கும் மேற்கோளின் பொருள்:—தெரி - ஆராயப்பட்ட, மாண் - மாட்சிமையையுடைய, தமிழ் மும்மை-இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழையுடைய, தென்-தெற் கின்கணுள்ள, அம்-அழகிய, பொருப்பன் - பொதியமலையையுடையவனென் பது. இங்கு, மும்மை-மூன்றின் தன்மையையுணர்த்தாமல் மூன்றை உணர்த் தியதுபோல, இருமை - இரண்டின் தன்மையையுணர்த்தாமல் இரண்டென் னும் எண்ணையே உணர்த்திற்று. இருமையென்பதில், மை விகுதி - தன் மையை உணர்த்தாமல் தன்மையுடைய பொருளையே உணர்த்தியதனால், பகு திப்பொருள்விகுதி யென்னும் ஸ்வார்த்தபாவதத்திதப் பிரத்தியயமாம். 'பெரு மையே' என்று இருக்கவேண்டிய ஏகாரம், தொகுத்தல்விகாரமாயிற்று. திகிரி உருட்டி-ஆஜ்ஞா சக்கரத்தைச் செலுத்தி. ஆணையைச் சக்கரமென்றுங் குடை யென்றுங்கூறுதல், கவிசமயம். அரசர்முதலிய எல்லோர்பெருமையினுந் துறந்தவர்பெருமையே சிறந்துவிளங்கிற்று உலகத்திலே என்பதாம். (கூ)

உச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

* இம்மேற்கோள் பரிபாடலிலுள்ளதென்கின்றனர்.

(இ - ள்.) உரன் என்னும் தோட்டியான்-திண்மையென்னுந் தோட்டியால், ஓர் ஐந்தும் - (பொறிகளாகிய யானை) ஐந்தனையும், காப்பான் - (தத்தம் புலன்கள்மேற் செல்லாமற்) காப்பான்,—வரன் என்னும் வைப்பிற்கு - (எல்லாநிலத்தினும்) மிக்கதென்று சொல்லப்படும் வீட்டுநிலத்திற்கு, ஓர் வித்து - ஓர் வித்தாம்; (எ - று.)

இஃது, ஏகதேசவுருவகம். திண்மை-ஈண்டு, அறிவின்மேற்று. அந்நிலத்திற் சென்று முளைத்தலின், 'வித்து' என்றார்; ஈண்டுப் பிறந்து இறந்துவரும் மகனல்ல னென்பதாம்.

(கு - ரை.) திண்மை - வலிய அறிவு; மனவுறுதி. தோட்டி-மாவெட்டி, அங்குசம். காப்பான் - அடக்கித் தடுத்து ஆளுபவன். "மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற, ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்க், கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான், விலங்காது வீடு பெறும்" என்னும் நாலடியாரினுங் காண்க. புலன் - விஷயம். மிக்கது - சிறந்தது. வித்து-விதை. நல்லறிவைத் தோட்டியாக உருவகப்படுத்தினதற்கு எற்ப, பஞ்சேந்திரியங்களே யானைகளென்னுமையால், ஏகதேசவுருவகவணி. அறிவின்மேற்று-அறிவென்னும் பொருளின்மேலது. முத்தியுலகத்திற்போய் முளைப்பதனால், 'வித்து' என உருவகப்படுத்தினர். ஈண்டு - இவ்வுலகத்தில். மகன்-மனிதன். உரனென்னும் பண்புப்பெயர், அறிவுக்கு ஆகுபெயர். தோட்டியான், ஆன்-மூன்றனுருபு, கருவிப்பொருள். ஐந்தும், உம்மை - முற்று. வரன் - வரமென்னும் வடமொழியின் ஈற்றுப்போலி. வைப்பு - வைக்குமிடமாகிய உலகத்துக்குத் தொழிலாகுபெயர். (அ)

உரி. ஐந்தவித்தா னூற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(இ-ள்.) ஐந்து அவித்தான்-(புலன்களிற் செல்கின்ற) அவா ஐந்தனையும் அடக்கினனது, ஆற்றல் - வலிக்கு, அகல் விசும்பு ளுளார் கோமான் - அகன்ற வானத்துவுள்ளார் இறைவனுகிய, இந்திரனே--, சாலும் கரி-அமையுஞ்சான்று.

ஐந்தும் என்னும் முற்றும்மையும், ஆற்றற்கு என்னும் நான்கனுருபுஞ் செய்யுள்விகாரத்தால் தொக்கன. தான் ஐந்தவியாது சாபமெய்திநின்று அவித்தானது ஆற்றலுணர்த்தினு ஞகலின், 'இந்திரனே சாலுங் கரி' என்றார்.

(கு - ரை.) அவா-ஆசை. வலி-சக்தி. அகன்ற வானத்துள்ளா ரிறைவன்-பரந்த மேலுலகத்தி லுள்ள தேவர்களுக்குத் தலைவன். அமையுஞ் சான்று-தகுந்த சாக்ஷி. ஐந்து-இனைத்தென்று அறிபொரு ளாதலால், அதில் முற்றும்மை அவசியம் வேண்டியதாயிற்று. 'இந்திரனேசாலுங்கரி' என்பதிலுள்ள கதை:-கௌதமமுனிவரது மனைவியாகிய அகலியையின்மீது பலகாலாகக் காதல்கொண்டிருந்த தேவேந்திரன் ஒருநாள் நடுராத்திரியிலே பொழுதுவிடியுங்காலத்துக் கோழிகூவுவதுபோலக் கௌதமராச்சிரமத்துக்கு அருகேவந்துகூவ, அது கேட்ட முனிவர் எழுந்து சந்தியாகாலஞ் சமீபித்ததெனகருதிக் காலைக்கடன்

கழிந்தற்கு யாற்றிற்கு விரைந்து செல்ல, அப்பொழுது இந்திரன் இதுவே சமயமென்று அம்முனிவருருக்கொண்டு ஆச்சிரமத்துட்சென்று அவளோடு கலக்க, அவளும், 'முனிவரல்லர்: இந்திரன்'என்று உணர்ந்தும் விலக்காமல் உடன்பட்டிருக்க, அதனை ஞானக்கண்ணினால் அறிந்து உடனேமீண்டுவந்த அம்முனிவர் அவளைக் கருங்கல்வடிவமாம்படி சபித்து, இந்திரனையும் உடம்பு முழுவதும் பெண்குறியுடையனும்படியும் ஆண்குறியிழக்கும்படியுஞ் சபித்தன ரென்பதாம். ஸாபம் - வெகுண்டு கூறும் மொழி. கோமான், மான் - பெயர்விகுதி. இந்திரனே, ஏகாரம் - உயர்வுசிறப்பு; இதனால் வேறுகூறுவது அவசியமில்லை யென்பதும் விளங்கும். (இ)

உசு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(இ - ள்.) (ஒத்த பிறப்பினராய மக்களுள்), செயற்கு அரிய செய்வார்-செய்தற்கு (எளியவற்றைச் செய்யாது) அரியவற்றைச் செய்வார், பெரியர்-; செயற்கு அரிய செய்கலாதார் - (அவ்வெளியவற்றைச் செய்து) அரியவற்றைச் செய்யமாட்டாதார், சிறியர்—; (எ - று.)

செயற்கு எளியவாவன - மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்தலும் வெஃகலும் வெகுளலும் முதலாயின. செயற்கு அரியவாவன - இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புக்கள். மீசிற் பலகால் மூழ்கல் முதலாய "காலிரு வழக்கிற் ரூபதபக்கம்" என் பாருமுளர்; அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரதுபெருமைக்கு ஏலாமை அறிக.

(கு-ரை.) ஒத்த பிறப்பினராய மக்கள்-பிறப்பு ஒத்த மனிதர்கள். அதனை-மனத்தை. வெஃகல் - ஆசையைக்கொள்ளுதல். வெகுளல் - கோபித்தல். எண்வகை யோகஉறுப்புக்கள் - எட்டுவகையோகஅங்கங்கள்; அவை - இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றுள், இயமம்-கொல்லாமை, வாய்மை முதலியன. நியமம் - தத்துவதூலாராய்ச்சி, தெய்வவழிபாடு முதலியன. ஆசனம் - இருப்பு: அது, ஸ்வஸ்திகம்முதலாக எண்வகைப்படும். பிராணயாமம்-உயிர்நிலை; வளிநிலையெனவும்படும்: அதாவது-பிராணவாயுவை ரேசக பூரக கும்பகஞ்செய்தல். பிரத்தியாகாரம்-மனவொருக்கம்; தொகைநிலையெனவும்படும்: அது, உபாதியைநீக்கி உன்நோக்கல். தாரணை-கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுள் ஒன்றில் எப்பொழுதுஞ் சித்தையைவைத்தல்; இது, பொறைநிலையெனப்படும். தியானம்-ஐம்புலனடக்கி யோகஞ்சேர்தல்; இது, நிலையெனப்படும். சமாதி-இந்திரியம்முதலிய தத்துவங்களின் சேஷ்டைகளுக்கு ஏதுவாகிய உடம்பினுள் நின்று அவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றின்றியிருக்கும் ஆத்மாவாகிய தன்னைத் தான் காண்டல். இவற்றின் பரப்பெல்லாம் இற்கு உரைப்பின் பெருகும்; ஆதலால், யோகதூல்களுட் கண்டுகொள்க.

*"பொய் கொலை களவே காமம் பொருணசை,யிவ்வகையைந்து மடக்கியதிய மம்," "பெற்றதற் குவத்தல் பிழம்புகனி வெறுத்தல்,கற்பன கற்றல் கழிகடுத் தூய்மை, பூசனைப்பெரும்பயம் ஆசாற்களித்தலொடு, நயனுடை மாபின் நியம மைந்தே", 'நிற்ற லிருத்தல் கிடத்தல் நடத்தலென்று, ஒத்த நான்கினெல்கா நிலைமையோடு, இன்பம் பயக்குஞ் சமய முதலிய, அந்தமில் சிறப்பி னுசன மாகும்," "உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுக், தந்த மியக்கத் தடுப்பது வளிநிலை," "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை, ஒருவழிப்படுப் பது தொகைநிலை யாமே," "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறை நிலை," "நிறுத்திய வம்மன நிலைநிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத் தல் நினைவே," "ஆங்ஙனங் குறித்த அம்முதற் பொருளொடு, தான்பிற ஞகாத் தகையது சமாதி" என்னுஞ் சூத்திரங்களே யுணர்க. நீரிற் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கின் தாபதபக்கம் - தண்ணீரிற் காலத்தோறும் முழுகுதல், நிலக்கிடைகிடத்தல், தோலுடை உடுத்தல், எரி ஓம்புதல், ஊர் அடையாமை, சடைதரித்தல், காட்டிலுண்ணுதல், கடவுட்பூசை என்னும் எட்டுவகை மார்க்கத்துத் தவம்புரியுங் கூறு; † "நீர்பலகான் மூழ்கி நிலத்த சையித்தோலுடையாச், சோர்சடை தாழச் சுடரோம்பி-ஊரடையார், கான கத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் துய்க்கும் வழி," *"நீஇ ராடல் நிலக்கிடை கோடல்,தோஒ லுடுத்தல் தொல்லெரி யோம்பல், ஊரடை யாமை யுறுசடை புனைதல், காட்டி லுணவு கடவுட்பூசை, ஏற்ற தவத்தி னியல்பென மொழிப" என்பன காண்க. இவையெல்லாம், தவஞ் செய்து யோகஞ்செய்வார்க்கு உரியன. இனி, தவஞ்செய்வார்க்கு உரியன - ஊண்நசையின்மை, நீர்நசையின்மை, வெப்பம்பொறுத்தல், தட்பம்பொறுத் தல், இடம்வரையறுத்தல், ஆசனம்வரையறுத்தல், இடையிட்டுமொழிதல், உரையாடாமை என எட்டுவகைப்படும். "நாலிருவழக்கிற் றுபதபக்கம்" என் பது, தொல்காப்பியத்துப் பொருளதிகாரத்தில் புறத்திணையியலில் உ0-ஆம் சூத்திரத்தில் உள்ளது. எலாமை - பொருந்தாமை. செயற்கு - 'கு' விகுதி காலங்காட்டும் எதிர்காலவினையெச்சம்; அல் - சாரியை. அனிய - பலவின் பால் வினையாலணையும்பெயர். இத்திருக்குறளே "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையான்" என்னுந் திருக் குறளோடு ஒப்பிடுக. (சு)

உஎ. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(இ - ள்.) சுவை - சுவையும், ஒளி - ஒளியும், ஊறு - ஊறும், ஓசை - ஓசையும், நாற்றம் - நாற்றமும், என்ற - என்று சொல்லப்பட்ட, ஐந்தின் - (தன்மாத்திரைகள்) ஐந்தனது, வகை - கூறுபாட்டையும், தெரிவான்கட்டு எ - ஆராய்வான் அறிவின்கண்ணதே, உலகு - உலகம்; (எ - று.)

*இச்சூத்திரங்கள்-தொல். பொ. புறத். உ0-உரையிற்காட்டப்பட்டவை.
† புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப், கக.

அவற்றின் கூறுபாடாவன-பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும்' அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும்,அவற்றின்கூறுகியஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். 'வகை தெரிவான் கட்டு' என உடம்பொடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும்.*தத்துவமும் இருபத்தைந்தனையுந் தெரிதலாவது-மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அன்மையின் பகுதியேயாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கண் தோன்றிய மானும் அதன்கண் தோன்றிய அகங்காரமும் அதன்கண் தோன்றிய தன்மாத்திரைகளும் ஆகிய ஏழும் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும்,அவற்றின்கண்தோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களும் ஆகிய பதினொன்றும் தங்கண்தோன்றுவன இன்மையின் விகுதியேயாவதல்லது பகுதியாகாதெனவும், புருடன் தான் ஒன்றில்தோன்றுமையானும் தன்கண்தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும் சாங்கியநூலுள் ஓதியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்துமல்லது உலகு எனப் பிறிதொன்றில்லையென உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின் கண்ணதாயிற்று.

இவை நான்கு பாட்டானும், பெருமைக்கு ஏது ஐந்தவித்தலும் யோகப் பயிற்சியுந் தத்துவவுணர்வும் என்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பஞ்சபூதங்களின் காரணம், பஞ்ச தன்மாத்திரைக ளெனப் படும்: அவை, ஐம்புலன். தன்மாத்திரை - பூதங்களின் ஸூக்ஷ்மாவஸ்தை என்பர், தத்துவத்ரயத்தில். அறிவின் கண்ணது-அறிவினிடத்தது. பூதங்கள் ஐந்து - நிலம், நீர், தீ, காற்று, வானம். ஞானேந்திரியம்-அறிகருவி; அவை-மெய், வாய், கண், மூக்கு, செவி. கர்மேந்திரியம்-கிரியைக்கு உரிய பொறி; அவை-உபத்தம், பாணி, பாதம், பாயு, வாக் என்பன. உடம்பொடுபுணர்த்தல் என்பது ஒரு தந்திரவுத்தி; அதாவது - (இலக்கணத்திற்)சொல்லவேண்டும் விதியை வெளிப்படையாகச்சொல்லாமல் ஆசிரியன் பிரயோகத்தின் மூலமாகத் தெரிவித்தல்; அது - நன்னூலில் 'குற்றியலுகரஞ் சிறுபான்மை உயிர்முதல்மொழிவரும்போது கெடாமல்நிற்கும்' எனச் சொல்லவேண்டியவர் அவ்வாறு விதித்துச்சொல்லாமல் ''தன்முக மாகத் தானழைப்பதுவே'' எனத் தாம் பிரயோகித்ததன் குறிப்பினால் அவ்விதியைப் பெறவைத்தாற் போல்வது: இங்கே 'ஐந்தின்வகை' என்றதனால் இருபதுதத்துவங்களையுங் கூறினற்போல, புருஷனும் அவன் தெரிதற்குக் கருவியாகிய மானங்கார மனங்களும் அவற்றிற்குக் காரணமாகிய மூலப்பிரகிருதியும் ஆகிய மற்ற ஐந்தையும் வெளிப்படையாக் கூறாமல் 'தெரிவான்' என உயர்திணை

* திருவாய்மொழி, 10, 7, 10-இல் வருகின்ற ''பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானங் காரமனங்களே'' என்ற அடிகளைக் காண்க.

யாண்பாலாகப் பிரயோகித்ததன் குறிப்பினுற் பெறவைத்ததனால், உடம் பொடுபுணர்த்தலாயிற்று: இது, தொல்காப்பியத்து மரபியலின் இறுதிச் சூத்திரத்தில் 'ஒருதலைமொழிதல்' என்ற உத்திக்கு இனமாகப் பேராசிரிய ராற் கூறப்பட்டுள்ளது; இதனை வடநூலார் 'ஞாபகம்' என்றுகூறியுள்ளார்: பிரயோகவிவேகத்தின் (சூத். 50.) உரையில் வடநூலார் 'உடம்பொடுபுணர்த் தலே நிபாதமென்பர்' என்று எழுதியுள்ளது. நிபாதமென்பது - சொல்லிய இலக்கணத்தால் அமையாத சொல்லை 'இது அமைக' என்ற குறிப்போடு ஆசிரியன் உச்சரிப்பது. அது, சுழற்சியென்றபொருளில் தெருமரல் அலமரல் என்ற இச்சொற்கள் எவ்வாறு வந்தன என்று காரணம் அறியப்படாம லிருக்கவும், அவை யப்பொருளில் வருக என்றகருத்தோடு ஆசிரியன் "தெரு மரலலமரலாயிரண்டுஞ் சுழற்சி" என்று கூறினுற்போல்வது. இங்குக் கூறிய வாற்றால் நிபாதமென்பது உடம்பொடுபுணர்த்தலாகாதென்பது பெறப்படும். புருடன் - ஆத்மா. தெரிதற்கருவி - தெரிவதற்குக் காரணம். மான் - மஹத் தத்துவம்; மஹத் என்னும் வடமொழி எழுவாயொருமையில் 'மஹான்' என நிற்கும்: அது,தமிழில் மான் எனத் தற்பவமாயிற்று. சாங்கிய நூலிலே'மான்' என்றது, புத்தியை. மான் அகங்கார மனங்கள் - மஹான் அஹங்காரம் மநஸ் என்னும் மூன்றுதத்துவங்கள். மூலப்பகுதி - மூலப்பிரகிருதி; இது, பிரபஞ் சத்திற்குக்காரணம். பகுதி-பிரகிருதி;காரணம். விகுதி-விகிருதி;காரியம். ஒன் றின் தோன்றியது அன்மையின் - ஒன்றினிடத்திலிருந்து தோன்றியதல் லாததனால். முதலாயது - காரணமாகியது. தங்கண்தோன்றுவன-தம்காரிய மாகியவை. சாங்கிய நூலுள் ஓதியவாற்றான் - சாங்கியசாஸ்திரத்திற் சொன் னபடியே. நான்கு ஐந்தாம் பாட்டுக்களால் நீத்தார்பெருமைக்கு ஏது ஐந்த வித்தல் என்றும், ஆறும்பாட்டால் யோகப்பயிற்சி என்றும், ஏழாம்பாட் டால் தத்துவஞானம் என்றும் கூறப்பட்டது. என்று என்னும் எண்ணி டைச்சொல்லைச் சுவையென்று, ஒளியென்று, ஊறென்று, ஓசை யென்று, நாற்றமென்று என எல்லாவற்றோடுங் கூட்டுக; [நன். இடையி யல் - சூ0.] அவ்வியலில் சூ-ஆம்சூத்திரத்து விதியினுல், இது தொகைபெற்று வந்தது. இனி, என்ற என்னும் பெயரெச்சத்து அகரவீறு விகாரத்தால் தொக்கதென்றுங் கொள்ளலாம். கட்டு - கண் என்னும் பெயரடியாகப் பிற ந்த ஒன்றன்பாற்குறிப்புமுற்று; டு - விகுதி. எல்லாவற்றையுங் காணுத லால், அறிவை 'கண்' என்றார். ஏகாரம் - தேற்றம். இங்கே "மூலப்ரக்ருதி ரவிக்ருதிர் மஹதாத்யாஃப்ரக்ருதிவிக்ருதயஸ் ஸப்த, ஷோடஶகஸ்து விகாரோ நப்ரக்ருதிர் நவிக்ருதிஃ புருஷஃ" என்னும் வடநூல்மேற்கோளின் பொருளை விசாரித்து அறிக. இனி, இக்குறளுக்கு-ஐம்புலன்களை இன்ன இன்ன இடத் திற் செலுத்தல்கூடும் இன்னஇன்ன இடத்திற் செலுத்தல்கூடாது என்று உய்த்துணர்ந்துதேர்ந்த ஞானிகளது சொற்படி நடப்பர் உலகத்தார் என் றும் பொருள்கொள்ளலாம். (எ)

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ - ள்.) நிறை மொழி மாந்தர்-நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது, பெருமை - பெருமையை, நிலத்து-நிலவுலகத்தின்கண், மறைமொழி - (அவர் ஆணையாகச் சொல்லிய) மந்திரங்களே, காட்டிவிடும் - (கண் கூடாகக்) காட்டும்; (எ - று.)

'நிறை மொழி' என்பது, அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் - பயனை உணர்த்துதல்.

(கு - ரை.) நிறைந்த மொழி - பழுதுபடாத மொழி; பொருள் நிரம்பிய சொற்கள். ஆணை - கட்டளை. கண்கூடாக - பிரத்தியட்சமாக. அருளி - கருணைகொண்டு. வெகுண்டு - கோபங்கொண்டு. அருளிக்கூறும்மொழி - அனுக்கிரகவார்த்தை. வெகுண்டுகூறும்மொழி - சாபவார்த்தை. பயந்தேவிடும் - தந்தேவிடுகிற. முனிவரது சாப அநுக்கிரகங்களைக் கடவுளரும் தடுக்கும் வன்மையுடையரல்ல ரென அறிக. மறைமொழி - புறத்தார்க்குப் புலனுகாமல் மறைத்துக் கூறப்படுஞ் சொற்களுடன்; எனவே, மந்திரமாயிற்று. மாந்தர் - ஒருமையில்லாமல் எப்பொழுதும் பன்மையிலேயே வருஞ் சொல்; தொல் காப்பியத்துச் சொல்லதிகாரத்தில் ''ஆண்மையடுத்த'' என்ற சூத்திரத்தில் ''மாந்தர் மக்களென்னும் பெயரும்,...,அப்பதினேந்துமவற்றோரன்ன'' என்று கூறியதனாலும் இது அறியப்படும். இவ்வாறு வருவதை வடநூலார் 'நித்யபகுவசனம்' என்பர். துணிவுப்பொருள்தோன்ற, 'காட்டிவிடும்' என்றார். நிறை மொழி மாந்தர் - சொல்லியசொல்லின்பொருள் எங்கும் குறைவில்லாமற் பயன்தரும்படி சொல்லும் ஆற்றலுடையார். தொல்காப்பியனார் ''நிறைமொழி மாந்த ராணைபிற் கிளந்த, மறைமொழி தானே மந்திர மென்ப'' (செய்-179) என்றதுங் காண்க. (அ)

உக. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(இ - ள்.) குணம் என்னும் குன்று ஏறி நின்றார் - (துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய) நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவரது, வெகுளி—, கணம்ஏஉம்-(தான் உள்ள அளவு)கணமே யாயினும், காத்தல் - (வெகுளப்பட்டாரால்) தடுத்தல், அரிது—; (எ - று.)

சலியாமையும் பெருமையும் பற்றி, குணங்களைக் குன்றாக உருவகஞ் செய்தார். குணம்-சாதியொருமை. அஞ்சியாய் வருகின்றவாறுபற்றி ஓரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்கு மாகலின் 'கணமேயும்' என்றும், நிறைமொழிமாந்தராகலின் 'காத்தலரிது' என்றுங் கூறினர்.

இவை இரண்டு பாட்டானும், அவராணை கூறப்பட்டது.

(கு - ரை.) கணமேயாயினும் - கூணப்பொழுதாகவேயிருந்தாலும். சலியாமை - அசையாதிருத்தல். குன்று - மலை. சாதியொருமையாவது - ஒரு சொல் ஒருமையிலே தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின் ஒருமை பன்மை விகுதியுருக மேல்வந்து முடிக்குஞ்சொல்லைப்பெற்றும் பொருளுணர்

தானே பன்மைப்பொரு ளுணர்த்துவது; இதனே வடநூலார், 'ஜாத்யேக வசனம்' என்பர். ஒரோவழி - ஒவ்வொருசமயத்தில். 'காத்தலரிது' என்றார், அவர்கள்சாபத்தைச் சகித்தல் கூடாமையால். (கூ)

கூ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(இ - ள்.) எ உயிர்க்குஉம்-எல்லா வுயிர்கள்மேலும், செம் தண்மை-செவ்விய தண்ணளியை, பூண்டு ஒழுகலான்—, அந்தணர் என்போர்-அந்தண ரென்று சொல்லப்படுவார், அறவோர் - துறவறத்தில்நின்றவர்; (எ - று.)

பூணுதல் - விரதமாகக் கோடல். 'அந்தணர்' என்பது - அழகிய தட்பத் தினே யுடையார் என ஏதுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மே லன்றிச் செல்லா தென்பது கருத்து.

அவ்வாறு ஆணையுடைய ராயினும் உயிர்கள்மாட்டு அருளுடைய ரென் பது, இதனைற் கூறப்பட்டது.

(கு - ரை.) செவ்விய தண்ணளி-நல்ல குளிர்ந்த கருணை. துறந்தவர்க்கு அருளுடைமை சிறந்த விரதமாம். தட்பம் - தண்மை. ஏதுப்பெயர்-ஒருகார ணத்தால் வந்தபெயர். அந்தணர்—அம் - அழகு; தண் - குளிர்ச்சி; இப்பண் படி, ஆகுபெயராய், அருளே உணர்த்திற்று: அர் - விகுதி. (கo)

சு-ஆம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

அஃதாவது - அம்முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப் பொருளும் இன்பமும் போலாது அறன் இம்மை மறுமை வீடு என்னும்மூன் றனையும் பயத்தலான் அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்ப மும், அறத்து வழிப்படூஉத் தோற்றம் போல" என்றார் பிறரும்.

(கு - ரை.) போலாது - போலாகாமல். முனிவர் பெருமையைக் கூறிய பின் அவர்களால் தெரிவிக்கப்பட்ட புருஷார்த்தங்களுள் முதலதாகிய தரு மத்தின் வலிமையை உறுதியாகக்கூறுதல் அதிகாரமுறைமை என்க. "சிறப் புடைமரபின்" என்னும் மேற்கோள், புறநானூற்றில் கூக-ஆம் செய்யுளில் உள்ளது; இதற்குப் பொருள் - சிறப்பாகிய தன்மையையுடைய அருத்தமுங் காமமுந் தருமத்துக்குப் பிற்படுந் தன்மைபோலஎன்பது. அறன் - அறமென் பதன்போலி.

கூக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(இ - ள்.) சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந் தரும்; செல்வம்உம் ஈனும்-(துறக்கம் முதலிய) செல்வத்தையுந் தரும்; (ஆதலான்), உயிர்க்கு - உயிர் கட்கு, அறத்தின் கூஉங்கு - அறத்தின் மிக்க, ஆக்கம்—, எவனோ - யாது?

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு 'சிறப்பு' எனப்பட்டது. ''சிறப்பென்னுஞ் செம்பொருள்'' 358)என்ற திருக்குறளிலும் சிறப்புஎன்பது வீடுஎன்னும்பொருளில் வந்தது: ''சிறந்ததுபயிற்றல்'' (கற்-51)எனத் தொல் காப்பியத்து வருதலுங் காண்க. ஆக்கந்தருவதனை 'ஆக்கம்'என்றார். ஆக்கம்-மேன்மேல்உயர்தல். ஈண்டு 'உயிர்' என்றது, மக்களுயிரை; சிறப்புஞ் செல்வமும் எய்துதற்கு உரியது அதுவே யாகலின்.

இதனால், அறத்தின்மிக்க உறுதி யில்லை யென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) துறக்கம்-சுவர்க்கபதவி. ஆக்கம்-உயர்ச்சிதருவது. சிறப்பு-சிறந்த வீட்டுலகத்துக்கு, பண்பாகுபெயர். அறத்தின் - ஐந்தனுருபு, உறழ் பொருவு; இது. எல்லாப்பொருளில் அடங்கும். அளபெடை, இன்னிசை தருதற்பொருட்டு. ஆக்கம் - காரியவாகுபெயர். ஓ - அசை. 'சிறப்பீனும், செல்வமுமீனும்' என்னும் வாக்கியங்களுக்கு அறமென்பது, தோன்று எழுவாய். இனி, ஈனுமென்பதைப் பெயரெச்சமாக்கொண்டு, ஒருவாக்கியமாக முடிப்பினும் இழுக்காது. ஊங்கு-உயர்வு இழிவு எல்லாப்பொருளில் வரும் இடைச்சொல். எவன்-இன்மைகுறித்தது. (க)

ஈஉ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), அறத்தின் ஊஉங்கு - அறஞ்செய்தலின் மேற்பட்ட, ஆக்கமும்—,இல்லை—; அதனை—, மறத்தலின் ஊங்கு - (மயக்கத்தால்) மறத்தலின் மேற்பட்ட, கேடு - கேடும், இல்லை—; (எ - று.)

'அறத்தினூஉங் காக்கமு மில்லை' என மேற்சொல்லியவதனையே அனுவதித்தார்; அதனைத் கேடு வருதல் கூறுதற் பயன் நோக்கி.

இதனால், அது செய்யாவழிக் கேடு வருதல் கூறப்பட்டது.

(கு - ரை.) கேடு - தீமைதருவது. அனுவதித்தல் எனினும், வழிமொழிதல் எனினும் ஒக்கும்; அநுவாதமாவது - முன்சொல்லப்பட்டதொன்றையே வேறொன்றுவிதித்தற்பொருட்டுப் பின்னுஞ் சொல்லுதல்: அதனால் அது கூறியதுகூற லென்னுங் குற்றமாகாது வழிமொழித லென் றுமியிற்று; வழி மொழிதற்கு முன் கூறப்பட்டதைப் புரோவாதமென்பர் வடநூலார்: இங்கே, புரோவாதம்-''அறத்தினூஉங் காக்க மெவனே'' என்பது. அது-அறம். (உ)

ஈஊ. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) ஒல்லும் வகையான் - (தத்தமக்கு) இயலுந் திறத்தான், அறம் வினை - அறமாகிய நல்வினையை, ஓவாதே - ஒழியாதே, செல்லும் வாய் எல்லாம்-(அஃது) எய்தும்இடத்தனெல்லாம், செயல்-செய்க; (எ-று.)

இயலுந் திறமாவது - இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கு ஏற்பவுஞ் செய்தல். ஓவாமை - இடைவிடாமை. எய்தும்

இடமாவன - மனம் வாக்குக் காயம் என்பன. அவற்றுற்செய்யும் அறங்களாவன - முறைமே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலும் என இவை.

இதனுன், அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

(சு - ரை.) தத்தமக்கு இயலுந் திறத்தான்-தங்கள் தங்களுக்குக் கூடிய மட்டினுல். ஒழியாதே - இடைவிடாமல். அஃது எய்தும் இடத்தானெல்லாம் அவ்வறம் பொருந்துமிடங்களெல்லாவற்றாலும். செய்க - செய்யக் கடவன். யாக்கைநிலை - சரீரத்தின்நிலைமை. மனமொழிமெய்கள் - திரிகரணமெனப்படும். திரிகரணங்களாலும் அறஞ்செய்தல் - மனத்தால் நல்லவற்றை நினைத்தலும், வாயால் நல்லவற்றைச் சொல்லுதலும், உடம்பினுல் நற்கருமங்களைச் செய்தலுமாம். ஆறு - விதம். ஓவாது - எதிர்மறைவினையெச்சம். செயல் - வியங்கோள். (கூ)

கூசு. மனத்துக்கண் மாசில னுதல லனைத்தற
னுகுல நீர பிற.

(இ - ள்.) (அவ்வாற்றுன் அறஞ்செய்வான்), மனத்துக்கண் - (தன்) மனத்தின்கண், மாசு இலன் ஆதல் - குற்றமுடையனல்லனாக; அனைத்து அறன்-அவ்வளவே அறமாவது; பிற - அஃதொழிந்த சொல்லும் வேடமும், ஆகுலம் நீர-(அறமெனப்படா,) ஆரவார நீர்மைய; (எ - று.)

குற்றம் - தீயன சிந்தித்தல். பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்றனவாகலின், 'ஆகுலநீர' என்றார். மனத்து மாசுடையனுயவழி அதன் வழிய வாகிய மொழிமெய்களாற் செய்வன பயனில வென்பதாஉம் பெறப்பட்டது.

(சு - ரை.) அவ்வாற்றுன்-அவ்விதத்தால்: ஒல்லும்வகையாலென்றபடி. வேடம் - வேஷம்; மனத்தில் தருமசிந்தை யில்லாமலே வெளிக்குத் தருமஞ் செய்பவன்போலக் காட்டுவது. ஆரவார நீர்மைய-பலரும் அறியச் செய்யும் ஆடம்பரத்தன்மையையுடையனவாம். அதன் வழியவாகிய - மனத்தின் வழியே நடப்பனவாகிய. ஆதல் - உடன்பாட்டுவியங்கோள். நீர - பலவின் பால் முற்று: நீர்மை-பகுதி. இக்குறள், மூன்று முடிபு. முதல்வாக்கியத்துக்கு, ஒருவன் - தோன்று எழுவாய். இனி, ஆதல் என்பதைத் தொழிற் பெயராக வைத்து, 'மனத்தில் மாசில்லுத லாகிய அதுவே அறன்: பிற இடம்பத்தன்மையன' என இரண்டுமுடிபாகவுங் கொள்ளலாம். பிற - இடைச்சொல்லடியாப் பிறந்த பெயர். (சு)

கூடு. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(இ - ள்.) அழுக்காறு - (பிறராக்கம்) பொறுமையும், அவா-(புலன்கண் மேற் செல்கின்ற) அவாவும், வெகுளி-(அவை ஏதுவாகப் பிறர்பால்வரும்) வெகுளியும், இன்னு சொல் - (அதுபற்றி வருங்) கடுஞ்சொல்லும், (ஆகிய), நான்குமாம் - இந்நான்கினையும், இழுக்கா-கடிந்து, இயன்றது-இடையறாது நடந்தது,—அறம் - அறமாவது; (எ - று.)

இதனுன், 'இவற்றோடுவிரவி இயன்றது அறமெனப்படாது' என்பதூஉங் கொள்க.

இவை இரண்டுபோட்டானும், அறத்தினது இயல்பு கூறப்பட்டது.

(கு-ரை.) பிறராக்கம் பொறுமை-அயலார்க்கு உண்டாகும்நன்மைகளைக் கண்டு மனம் பொறுதிருத்தல். கடிந்து - நீக்கி. இவற்றோடு விரவிஇயன்றது - அழுக்காறுமுதலியவற்றோடு கலந்து நடந்தது. அருத்தாபத்தியால், 'பொறுமை முதலியவற்றோடுகூடியது அதருமம்' என்றுங்கொண்டார். அழுக்காறு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; அழுக்கறு-பகுதி: இது-ஒருசொல்; இனி, அழுக்கு அறு என்னும் இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்டு, எதிர்மறையிலக்கணையால், குற்றத்தைநீக்கு என்னும்பொருளைத் தராமல் குற்றத்தையுடையவனுகு எனப்பொருள்பட்டு, பொறுமையைக் குறித்ததென்றுங் கொள்ளலாம். அழுக்காறுமுதலியன பெயர்ச்செவ்வெண்ணுதலால், அது, ஈற்றில் 'ஙான்கு'என்னுஞ் தொகைபெற்றுவந்தது. இழுக்கா-இறந்தகால வினையெச்சம்; ஆ-விகுதி, காலங்காட்டிற்று. இயன்றது - வினையாலணையும் பெயர். இயன்றதே அறம் என்னும் பிரிநிலையேகாரம் தொக்கது.

(ஈடு)

ஈசு. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(இ - ள்.) அன்று அறிவாம் என்னுது - (யாம் இது பொழுது இளைய மாகலின்) இறக்கும் ஞான்று செய்து மெனக் கருதாது, அறம்-அறத்தினை, செய்க - (நாள்தோறுஞ்) செய்க; அது-அவ்வாறு செய்த அறம், பொன்றும் கால் - (இவ்வுடம்பினின்றும் உயிர்) போங்காலத்து, (அதற்கு), பொன்று-அழிவில்லாத, துணை - துணையாம்; (எ - று.)

'மற்று' என்பது, அசைநிலை. 'பொன்றுத்துணை' என்றார், செய்த உடம்பு அழியவும் உயிரோடு ஒன்றி ஏனையுடம்பினுஞ் சேறலின்.

இதனுன், இவ்வியல்பிற்றய அறத்தினை, நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க வென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இதுபொழுது இளையமாகலின் - இப்பொழுது இளமைப் பருவத்தை யுடையவராயிருக்கிறோ மாதலால். இறக்கும் ஞான்று செய்தும் - (மூதுமைப்பருவம்வந்து) சாம்பொழுது தருமஞ் செய்வோம். பொன்றுதல் - இறத்தல். அதற்கு - உயிருக்கு. செய்த உடம்பு-தருமத்தைச்செய்த சரீரம். ஒன்றி - கூடிநின்று. ஏனை உடம்பினும் சேறலின் - மற்றொரு பிறப்பின் உடம்பிலும் அவ்வறத்தின்பயன் செல்லுதலால். இவ்வியல்பிற்று-இப்படிப்பட்டதன்மையையுடையது. நிலையின - இருக்கிற. அன்று - அக்காலத்தில். அறிவாம் - தனித்தன்மைப் பன்மைமுற்று; பார்த்துக்கொள்வோ மென்று பொருள். கால் - காலம் என்பதன் கடைக்குறை. வயதுமுதிர்ந்தவர் மாத்திரமேயன்றி இளையவர்களும் இறத்தலுண் டாதலாலும், மரணம்நேரிடுங் காலம் இன்னதென்று எவர்க்கும் ஒருதலையாக அறிதல் கூடாமையாலும்,

'அன்றறிவாமென்னு தறஞ்செய்க' என்றார். "மற்றறிவா நல்வினை யாமி னைய மென்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின், மூற்றி யிருந்த கனியொழியத் தீவளியால், நற்கா யுதிர்தலு முண்டு" என்றார், காலடியாரிலும். 'பொன்றுத்துணை' என்றது, உடம்பு அழிந்தபின்னும் தான் அழியாததனால். (சு)

நூ எ. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானெ ரேர்ந்தா னிடை.

(இ - ள்.) அறத்து ஆறு இது என - அறத்தின்பயன் இதுவென்று (யாம் ஆகமஅளவையான்) உணர்த்தல், வேண்டா—; சிவிகை பொறுத்தானெடு ஊர்ந்தானிடை - சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை(க் காட்சியளவைதன்னானே உணரப்படும்); (எ - று.)

பயனை 'ஆறு' என்றார், பின்னதாகலின். 'என' என்னும் எச்சத்தால் சொல்லாகிய ஆகமவளவையும், 'பொறுத்தானெ ரேர்தானிடை' என்றதனால் காட்சியளவையும் பெற்றும். 'உணரப்படும்' என்பது, சொல்லெச்சம்.

இதனான், பொன்றுத்துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

(கு - ரை.) ஆகமஅளவை - சாஸ்திரப்பிரமாணம். சிவிகை - பல்லக்கு; பரிபாஷை என்னும் வடமொழியின் திரிபு. காவுவான்-சுமப்பவன். செலுத்துவானிடை - அதில் ஏறிநடத்துபவனிடத்தில். காட்சியளவை-பிரதியக்ஷப்பிரமாணம். அறஞ்செய்தால் அவ்வழியே அதன்பயன் அதன்பின் உண்டாதலால், பயன் 'ஆறு' எனப்பட்டது; ஆறு-வழி. வேண்டா - வேண்டுமென்பதன் எதிர்மறை. இதற்குஎழுவாய் - 'என' என்பது. 'என' என்பதற்கு - என்று சொல்ல லென்பது பொருளாதலால் ஆகமப்பிரமாணமும், 'சிவிகை பொறுத்தானெ ரேர்தானிடை' எனக் குறித்துச் சொன்னதனைப் பிரதியக்ஷப்பிரமாணமும், பெற்றுக்கொண்டோம். பொருள்முடியாததனால் 'உணரப்படும்' என்று எஞ்சிய சொல் வருவிக்கப்பட்டது: இங்ஙனம்வருவிப்பது, சொல்லெச்சம். தருமத்தின்பயன் இப்படிப்பட்டதென்று நூல் கலோக்கொண்டு அரிதின் தெரிவிக்கவேண்டிய தில்லை; உலகத்தில் ஒருவன் பல்லக்கைத் தூக்க மற்றொருவன் அதன்மேலேறி வீற்றிருப்பதைக் கண்கூடாகக் காணுதலினாலேயே அறஞ்செய்தவன் இன்பமனுபவிப்பானென்றும், அதுசெய்யாதவன் துன்பமனுபவிப்பா னென்றும் எளிதில் தெரிந்துகொள்ளலாமே யென்பது, கருத்து. இனி, இத்திருக்குறளுக்கு-'துறவறத்தின்பயனாகிய ஆத்மசொரூபஞானம் இப்படிப்பட்டதென்று யாம் இப்பொழுது புதிதாக வகுத்துச் சொல்லவேண்டுவதில்லை; சவ்வீரமகாராஜனுக்குப் பல்லக்கைச்சுமந்த ஜடபரதயோகிக்கும் அந்த ரகூகணமகாராஜனுக்கும் நடந்த சம்பாஷணையாலே அறியப்படும்' என்றும் உரைக்கலாம்; ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாம்அம்சத்தில் இருநிதான்கு அத்தியாயங்களிற் காண்க.

நூ அ. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(இ - ள்.) வீழ் நாள் - செய்யாது கழியும் நாள், படாஅமை-உளவாகா மல், ஒருவன்—,ன்று ஆற்றின் - அறத்தைச் செய்யுமாயின், அஃது - அச் செயல், வாழ் நாள் வழி அடைக்கும் கல் - (அவன் யாக்கையோடு) கூடும் நாள்வரும் வழியை (வாராமல்) அடைக்குங் கல்லாம்; (எ - று.)

ஐவகைக்குற்றத்தான் வரும் இருவகைவினையும் உள்ள துணையும் உயிர் யாக்கையோடுங்கூடி நின்று அவ்வினைகளது இருவகைப் பயனை யும் நுகரு மாகலின், அந்நாள் முழுவதும் 'வாழ்நாள்' எனப்பட்டது. குற்றங் கள் ஐந்தாவன - அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என் பன; இவற்றை வடநூலார் 'பஞ்சகிலேசம்' என்ப. வினை இரண்டாவன-நல் வினை, தீவினை என்பன. பயன் இரண்டாவன - இன்பம், துன்பம் என்பன.

இதனுன், அறம் வீடுபயக்கு மென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) செய்யும் - செய்வான். யாக்கை - உடம்பு. ஐவகைக் குற்றம்- அனுதியாகிய அவித்தையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருளி டத்துச் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலையிடத்துச் செல்லுங் கோபமும் என்பன. இவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவுதல் ஆசையிலும் அடங்குதலால், தமிழ்நூலார் "காமம்வெகுளி மயக்கம்" எனக் குற்றம் மூன்றென்பர். விழைவு-ஆசை. வெறுப்பு கோபம். கிலேசம்-துன்பந் தருவன. படாமை - எதிர்மறைவினையெச்சம். நன்று-நல்ல அறத்துக்கு, பண் பாகுபெயர். அஃதொருவன் - ஆய்தவெழுத்து மெய்போல ஒலித்து அலகு பெறுதுநின்றது. படாஅமை - அளபெடை ஓசைநிறைத்தது. வாழ்நாள்வழி - பிறப்படையும் வழி. (அ)

நகூ. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(இ - ள்.) அறத்தான் வருவதுஎ - இல்லறத்தோடு பொருந்தி வருவதே, இன்பம் - இன்பமாவது; மற்று எல்லாம் - அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம், புறத்த - (இன்பமாயினுந்) துன்பத்தினிடத்த; புகழும் இல - (அதுவேயுமன்றிப்) புகழும் உடையவல்ல; (எ - று.)

ஆனுருபு, ஈண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது; "தூங்கு கையா னேங்கு நடைய" என்புழிப்போல. இன்பம் - காம நுகர்ச்சி; அஃதாமாறு, காமத்துப் பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புற மெனவே, துன்பமாயிற்று. பாவத்தான் வரும் பிறனில்விழைவு முதலாயின அக்கணத்துள் இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய்விளைதலின், 'புறத்த' என்றார்; அறத்தோடு வாராதன புகழுமில எனவே, 'வருவது புகழுமுடைத்து' என்பது பெற்றும்.

இதனுன், அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவ ரென் பது கூறப்பட்டது.

(கு - ரை.) "தூங்கு கையான்" என்னும் மேற்கோள் - புறநானூறு உ- ஆம் செய்யுளில் உள்ளது; இதற்கு-தொங்குகிறகையையுடை கும்பிமான கை

யையு முடைய வென்று பொருள். என்புழி - என்றவிடத்தில். மூன்றும் வேற்றுமையின் உருபுகளுள் ஆனுருபு, பெரும்பாலும் கருவிகருத்தாப்பொருள்களில் மாத்திரமே வரும். காமத்துப் பாலின் முதலில் 'ஈண்டு இன்பமென்றது - ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை' எனக் கூறுவர், பரிமேலழகர். பிறனில்விழைவு - அயலான்மனையாளை விரும்புதல். பின் துன்பமாய்விளைதல் - பழியும் பாவமும் ராஜதண்டனையுமாய் முடிதல். அறத்தோடு கூடிவருவது புகழுடையது எனக் கொண்டது, அருத்தாபத்தி. இம்மையின்பம் - இவ்வுலகத்தின்பம். மற்றுஎன்னும் இடைச்சொல், இங்கே, சுட்டியதற்கு இனமான பொருளில் வந்தது. புறத்த - பலவின்பாற் குறிப்புமுற்று; புகழும், உம்மை - இறந்தது தழுவிய எச்சம். (சு)

சஂ. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, செயல்பாலது - செய்தற்பான்மையது, அறனே - நல்வினையே; உயல் பாலது - ஒழிதற்பான்மையது, பழி(ஏ) - தீவினையே; (எ - று.)

'ஓரும்' என்பன இரண்டும் - அசைநிலை. தேற்றேகாரம், பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனை 'பழி' என்றார்.

இதனுள், செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) செய்தற்பான்மையது - செய்யப்படும் உரிமையையுடையது. ஒழிதல் - செய்யாது விடுதல். ஓரும் - இடைச்சொல். 'அறனே' என்பதிலுள்ள ஏகாரம், 'பழி' என்பதனோடுங் கூட்டப்பட்டது. பாவத்தைத் தருவதாய்ப் பழிக்கப்படுதல்பற்றி, அதருமத்தை 'பழி' என்றார்; காரணக்குறி. (கஂ)

பாயிரம் மூற்றிற்று.

இல்லறவியல்.

(கு - ரை.) அறஞ்செய்தற்குரிய இல்லறம் துறவறம் என்ற இருவகை நிலையுள் இல்லறம் முதல நூதலால், இல்லறவியல் முதலில் வைக்கப்பட்டது: இல்லறத்திலிருந்து துறவறத்திற்குச் செல்லலர் மாதலால், இல்லறம் முதலதாம்: இனி, "இல்லற மல்லது நல்லற மன்று" என்று ஔவையார் கூறினபடி இருவகை அறத்துள் இல்லறம் தலைமையானதாதலால், அதை முதலில்வைத்தா ரென்றலும் ஒன்று. இந்த இல்லறவியல், இல்வாழ்க்கையென்பது முதல் புகழ் ஈறாகவுள்ள இருபது அதிகாரங்களைக் கொண்டதாகும்.

ரு - ஆம் அதிகாரம்—இல்வாழ்க்கை.

அஃதாவது - இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ் செய்தற்கு உரிய இருவகைநிலையுள் முதலாதலின், இஃது, அறன் வலியுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல் - அதற்குரிய மனையாளுக்கு, ஆகுபெயர். வாழ்க்கை - தொழிற்பெயர். இன்னிலை-இல்நிலை எனப் பிரிக்க; இல்லறநிலைமை யென்று பொருள். அறன்வலியுறுத்தலைக் கூறிய பின், அறஞ்செய்வார்க்கு உரிய இருவகைநிலையுள் முதலதான இல்லறநிலைக்கு மனையாளோடுகூடிவாழ்தல் முக்கியமாதல், அதிகாரமுறைமையென்க.

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை.

(இ - ள்.) இல் வாழ்வான் என்பான் - இல்லறத்தோடுகூடு வாழ்வா னென்று சொல்லப்படுவான், இயல்பு உடைய மூவர்க்குமும் - அறவியல்பினை யுடைய ஏனைமூவர்க்கும், நல் ஆற்றின்-(அவர்செல்லும்) நல்லொழுக்க நெறிக்கண், நின்ற - நிலைபெற்ற, துணை - துணையாம்; (எ - று.)

'இல்' என்பது, ஆகுபெயர். 'என்பான்' என, செயப்படுபொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது. ஏனையமூவராவார் - ஆசாரியனிடத்தினின்று ஓதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரிய ஒழுக்கத்தானும், இல்லிவிட்டுத் தீயோடு வனத்தின்கட் சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத் துறந்த யோக ஒழுக்கத்தானும் என இவர். இவருள் முன்னையிருவரையும் பிறர்மதம்மேற்கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச் செல்லுமளவும் அச்செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றுன் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வந்நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், 'நல்லாற்றி னின்ற துணை' என்றார்.

(கு - ரை.) வினைமுதல் - கருத்தா. 'எனப்படுவான்' என்பது அகரச்சாரியையும் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் 'படு' விகுதியும் தொக்கு 'என்பான்' என நின்றதாகக் கொண்டார், பிரயோகவிவேகநூலாரும், தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரரும். இல்லிற் செய்யுந் தருமத்தை 'இல்' என்றது - இடவாகுபெயர். தீ - நித்தியாக்கினி. வழிபட - உபசரிக்க. அவ்வாறு தவஞ்செய்யும் ஒழுக்கத்தான் - வாநப்பிரஸ்தன். யோக ஒழுக்கத்தான் - சந்யாசி. திருவள்ளுவர் 'இல்லறம்,' 'துறவறம்' என இருவகை ஆச்சிரமமாகவே வகுத்துக்கொண்டா ராதலால், மற்றையிரண்டாச்சிரமத்தாரையுங் கூட்டி 'மூவர்க்கும்' என்றது - பிறர்மதத்தை அங்கீகரித்ததாயிற்று; இது 'உடன்படல்' என்னும் மதம். இவர்-மூன்றுச்சிரமத்தார். முடியச்செல்லுமளவும் - நிறைவேற்றுமளவும். அச்செலவுக்கு - அவ்வொழுக்கத்திற்கு. இடையூறு - தடை, உண்டி - உணவு. உறையுள் - இடம். அவ்வந்நெறி - அந்தந்த வழிகள்.

சஉ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(இ - ள்.) துறந்தார்க்குஉம் (கலைகணைவரால்) துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்குஉம்-கல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்குஉம்-(ஒருவரும் இன்றித் தன்பால்வந்து) இறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், துணை—; (எ - று.)

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர் கலைகளைந்தின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவுமுதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன்முதலியசெய்து கல்லுலகின்கட் செலுத்தலானும், 'துணை' என்றார்.

இவை இரண்டுபொட்டானும், இன்னிலை எல்லாஉபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) கலைகணைவரால் துறக்கப்பட்டார் - தஞ்சமாக இருந்தவர்களால் விடப்பட்டுக் கதியற்றவராயினவர். கல்கூர்ந்தார் - தரித்திரர். துவ்வாதவர்-அனுபவிக்கப்படும் பொருளொன்றையும் அனுபவிக்கப்பெறாதவர்: எனவே, தரித்திரராயிற்று. தன்பால் - தன்னிடத்தில். பாவம் ஒழிய - தீவினைக்குக் காரணமாகிய வழிகள் தவிர மற்றவழிகளால். நீர்க்கடன் - தருப்பணம். இங்கே, துறந்தார் - சன்னியாசிகளல்ல ரென அறிக. (உ)

சஊ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றுங்
கைம்புலத்தா றோம்ப றலை.

(இ - ள்.) தென்புலத்தார் - பிதிரர், தெய்வம் - தேவர், விருந்து-விருந்தினர், ஒக்கல் - சுற்றத்தார், தான்—, என்ற - என்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து - ஐந்திடத்துஞ் செய்யும், ஆறு - அறநெறியை, ஓம்பல் - வழுவாமற் செய்தல்,—தலை - (இல்வாழ்வானுக்குச்) சிறப்புடைய அறமாம்; (எ - று.)

பிதிரராவார் படைப்புக்காலத்துஅயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்திசையாதலின், 'தென்புலத்தார்' என்றார். 'தெய்வம்' என்பது, சாதியொருமை. 'விருந்து' என்பது - புதுமை: அஃது ஈண்டு ஆகுபெயராய், புதியராய்வந்தார்மேல் நின்றது; அவர் இருவகையர்; பண்டு அறிவு உண்மையின் குறித்து வந்தாரும், அஃது இன்மையின் குறியாது வந்தாரும் என. ஒக்கல் - சுற்றத்தார். எல்லா அறங்களும் தான் உளனாய் நின்று செய்யவேண்டுதலின், தன்னை ஓம்பலும் அறனுயிற்று. என்ற என்பது, விகாரமாயிற்று. ஆங்கு - அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனாகலின், 'ஐம்புலம்' என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றாயிற்று, இவ்வைவம் புலத்திற்கும் ஐந்து கூறு வேண்டுதலான் என்பது அறிக.

(கு - ரை.) பிதிரர் - பிதிருக்கள். அயன் - பிரமன். கடவுட்சாதி - தேவசாதி. தென்புலத்தார் - தெற்குத்திக்கிலுள்ளவர். விருந்து - விருந்தினர்க்குப் பண்பாகுபெயர். பண்டறிவு - முன்பரிசயம்; அறிமுகம். ஓம்பல் - காத்தல். ஈண்டுங்கு - அகரம், தொகுத்தல் விகாரம். இறைப்பொருள் - வரிப்பணம்.

'ஐம்புலத்து' என்றஇடத்தில் மூற்றும்மை விகாரத்தால் தொக்கது. தெய்வம்-தைவம். ஒக்கல் - மனம் ஒருமித்திருக்கும் பந்துக்களுக்குத் தொழிலாகுபெயர். தலைமையான அறத்தை 'தலை' என்றது, பண்பாகுபெயர். தெய்வம் - பித்ரு தேவரொழிந்த மற்றைத்தேவர். (ஈ)

சசு. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழிபெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(இ - ள்.) பழி அஞ்சி - (பொருள்செய்யுங்கால்) பாவத்தை அஞ்சி (ஈட்டி), பாத்து - (அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினர்க்கும் தென் புலத்தார் முதலிய நால்வர்க்கும்) பகுத்து, ஊண் - (தான்) உண்டலை, வாழ்க்கை - (ஒருவன்) இல்வாழ்க்கை, உடைத்து ஆயின்—, வழி - அவன்வழி, (உலகத்து), எஞ்ஞான்றும்—, எஞ்சல் இல் - (நிற்றலல்லது) இறத்தலில்லை.

பாவத்தான்வந்த பிறன்பொருளைப் பகுத்துஉண்ணின், அறம் பொருளுடையார்மேலும் பாவம் தன்மேலுமாய்நின்று வழி எஞ்சுமாகலின், 'பழியஞ்சி' என்றார். வாழ்வானது உடைமை, வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

(சு - ரை.) பொருள் செய்யுங்கால் - பணஞ் சம்பாதிக்கும்பொழுது. ஈட்டி - சம்பாதித்து. அவன்வழி - அவனுடைய சந்ததி பகுத்து உண்ணின்-(பிறர்க்குப்) பகுத்துக்கொடுத்துத் தானும் உண்டால். அறம்-பகுத்துக் கொடுத்தலாலுண்டாகிற அறம்; அது, அப்பணத்துக்கு உடையவரிடஞ் செல்லும். பாவம் - தீய வழியால் அப்பொருளைச் சம்பாதித்ததனாலுண்டான தீவினை. வாழ்வானுக்கும் வாழ்க்கைக்கு மூள்ள ஒருமைப்பாடுபற்றி, வாழ்பவனதுடைமையை வாழ்க்கையின்மேலேற்றி, 'வாழ்க்கை உடைத்தாயின்' எனக் கூறப்பட்டது. ஒருவனுக்குப் பின் நிற்பதாதலால், 'வழி' என்று சந்ததிக்குப்பெயராயிற்று. உடைத்தாதலின் அருமை தோன்ற, 'உடைத்தாயின்' என்றார். இனி, இக்குறளுக்கு - இல்வாழ்வானெருவனது செல்வம் லோபியென்பதனல்வரும்பழிக்குப் பயந்து பிறர்க்குப்பங்கிட்டுக்கொடுத்துத் தானும்உண்ணுதலையுடையதாமாயின், அச்செல்வம், அவனுக்கு மாத்திரமேயன்றி அவன் சந்ததியார்க்கும் எப்பொழுதுங் குறைவுபடுதலில்லையாம் என்றும் உரைக்கலாம். பாத்து, பகுஎன்பதன் மரூஉவாகிய பா - பகுதி. ஊண்-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். உடைத்து - குறிப்புமுற்று. இல் - இல்லையென்பதன் விகாரம்.

சநி. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(இ - ள்.) இல்வாழ்க்கை - (ஒருவன்) இல்வாழ்க்கை, அன்புஉம்-(தன் துணைவிமேற் செய்யத்தகும்) அன்பினையும், அறன்உம் - (பிறர்க்குப்பகுத்து உண்டலாகிய) அறத்தினையும், உடைத்து ஆயின்—, அது - அவ்வுடைமை, பண்புஉம் பயன்உம் - (அதற்குப்) பண்பும் பயனுமாம்; (எ - று.)

கிரனிறை. இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சு ஒன்றுகாவழி இல்லறங் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று; அறனுடைமை பயனுயிற்று.



இவைமூன்றுபாட்டானும், இன்னிலையில் நின்றான் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) துணைவி-மனைவி. அவ்வுடைமை-அந்த உடைத்தாயிருத்தல். இல்வாழ்க்கைக்கு மனைவிமேலன்பு குணமும், பிறர்க்குப் பகுத்துஉண்பது பிரயோசனமுமா மென முறையே சென்று இயைதலால், முறைநிரல்நிறைப் பொருளோரோ; அதாவது - வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவற்றையும் அம்முறையே சொல்வது. கடைபோகாமை-முடியாமை; அதனை "மருவிய காதன் மனையாளுந் தானும், இருவரும்பூண்டார்ப்பி னல்லால் - ஒருவரால், இல்வாழ்க்கையென்னு மியல்புடைய வான்சகடஞ், செல்வாது தெற்றிற்று நின்று" என்னும் அறநெறிச்சாரத்துப் பாட்டினாலும் அறிக. (நி)

சஉ. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(இ - ள்.) (ஒருவன்), இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையை, அறத்து ஆற்றின் - அறத்தின்வழியே, ஆற்றின் - செலுத்துவானாயின், புறத்து ஆற்றில் - (அவன் அதற்குப்) புறமாகிய நெறியில், போஒய் - போய், பெறுவது-பெறும் பயன், எவன் - யாது? (எ - று.)

'அறத்தாறு' என்பது - பழியஞ்சிப் பகுத்து உண்டலும், அன்புடைமையும் என மேற்சொல்லிய ஆறு. 'புறத்தாறு'-இல்லிலிருந்துவிட்டு வனத்துச்செல்லும் நிலை. அந்நிலையின் இது பயனுடைத் தென்பார், 'போஒய்ப் பெறுவதெவன்' என்றார்.

(கு - ரை.) அதற்குப் புறமாகிய நெறி - வாசப்பிரஸ்தம். எவன் என்றதனால், போய்ப் பயனில்லை யென்பதும், அதனிலுஞ் சிறந்தபயன் இல்லிலேயே எய்தும் என்பதும் பெற்றாம். அளபெடை - அசைநிறைக்க வந்தது. (சு)

சஎ. இயல்பிலா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(இ - ள்.) இல் வாழ்க்கை - இல்வாழ்க்கைக்கண்நின்று, இயல்பிலான்-(அதற்கு உரிய) இயல்போடு கூடி, வாழ்பவன் என்பான்-வாழ்பவ னென்று சொல்லப்படுவான்,—முயல்வாருள் எல்லாம் - (புலன்களை விட) முயல்வாரெல்லாருள்ளும், தலை - மிக்கவன்; (எ - று.)

முற்றத்துறந்தவர் விட்டமையின், 'முயல்வார்' என்றது மூன்றாம்நிலையில் நின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் 'எல்லாருள்ளும்' எனவும், முயலாதவைத்துப் பயன்எய்துதலின் 'தலை' எனவுங் கூறினார்.

(கு-ரை.) விட்டமையின்-ஐம்புலன்களை விட்டதனால். மூன்றாம்நிலையில் நின்றார் - வாசப்பிரஸ்தர். மனைவியோடு வனஞ்செல்லுதலும், மனைவியின்றி அங்குச் செல்லுதலும், வனத்தில்தானே குறித்த ஓரிடம் செல்லுதலும், இன்னவிடஞ் செல்வதென்று குறித்தலின்றிச் செல்லுதலும் என வானப்

பிரஸ்தாபிலை பலவகைப்படுதலின், 'அந்நிலைதான் பலவகைப்படுதலின்' என்ரு ரென்னலாம். முயலாதுவைத்துப் பயனெய்துதலின் - முயற்சி செய்யாமல் ஐம்புலன்களோடு கூடிநின்றே மேலான பிரயோசனத்தை அடைவதனால். இயல்பினுன், ஆன் - உடனிகழ்ச்சி. தலை-ஆகுபெயர். (எ)

ஈஅ. ஆற்றி னெழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து.

(இ - ள்.) ஆற்றின் ஒழுக்கி - (தவஞ்செய்வாரையும் தத்தம்) நெறியின் கண் ஒழுகப்பண்ணி, அறன் இழுக்கா - (தானும் தன்) அறத்தின் தவருத, இல்வாழ்க்கை—,—நோற்பாரின் - அத் தவஞ்செய்வார் நிலையினும், நோன்மைஉடைத்து - பொறையுடைத்து; (எ - று.)

பசிமுதலிய இடையூறு நீக்கலின், 'ஆற்றினெழுக்கி' என்ரூர். 'நோற்பார்' என்பது,ஆகுபெயர். நோற்பார்நிலைக்கு அவர்தம்மை உற்றநோயல்லது இல்வாழ்வார்நிலைபோற் பிறரை உற்ற நோயும் பொறுத்தல் இன்மையின், 'நோற்பாரி னேன்மையுடைத்து' என்ரூர்.

(கு - ரை.) பொறை-பொறுமை. நோற்பார் என்பது-நோற்பாரின் நிலைமைக்கு ஆனது, பொருளாகுபெயர். துறந்ததவஞ்செய்பவர் தமக்குவருந் துன்பங்களே மாத்திரமே பொறுத்துக்கொள்ளுகிறூர்கள்; இல்லறத்தவரோ, தமக்குவருந்துன்பங்களைப் பொறுத்துப் பிறர்க்குவருந்துன்பங்களையும் நீக்குகின்றனர்: ஆதலால், இல்லறஞ் சிறந்தது என்றபடி. (அ)

ஈகூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(இ - ள்.) அறன் எனப்பட்டது - (இருவகை அறத்தினும் தூல்களான்) அறனென்று சிறப்பித்துச்சொல்லப்பட்டது, இல்வாழ்க்கை ஏ - இல்வாழ்க்கையே; அஃது உம்-எனைத்துறவறமோஎனின் அதுவும், பிறன் பழிப்பது இல் ஆயின் - பிறஞற்பழிக்கப்படுவதில்லையாயின், நன்று - (அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக) நன்று; (எ - று.)

ஏகாரம், பிரிநிலைக்கண் வந்தது. இதனுற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், 'அஃது' என்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேல் நின்றது. 'பிறன் பழிப்பது' என்றது, கூடாவொழுக்கத்தை. துறவறம் மனத்தையும் பொறிகளையும் ஒறுத்து அடக்கவல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றை ஒறுக்கவேண்டாது ஐம்புல இன்பங்கள் ஆரத்துய்க்கும் * எண்மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கு எண்ணப்படுவது என்றவாருயிற்று.

இவைநான்குபாட்டானும், இன்னிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) துறவறத்தைப் பிரித்தலினுல், ஏகாரம் - பிரிநிலையாயிற்று. இதனுல் - ஏகாரத்தால். அதன்மேல்-துறவறத்தின்மேல். கூடாவொழுக்கம்-

* மேன்மையுடைய என்று பிரதிபேதம்.

தவத்தோடு பொருந்தாததாகிய தீய ஒழுக்கம். ஒறுத்து-வருத்தி. ஆரத் துய்க்கும்-நிரம்ப அனுபவிக்கிற. எண்மை-எளிமை, சௌகரியம். ஒருங்கு-ஒருசேர. இனி, இக்குறளுக்கு-அறமெனப்பட்டது இல்வாழ்க்கையே; அவ்வில்வாழ்க்கையும் பிறனுற்பழிக்கப்படுவனவான பிறனில்விழைதல் அழுக்காறு பேராசை புறங்கூறல் முதலிய தீக்குணங்களில்லாததாயின் நன்று என்றும் உரைக்கலாம். (கூ)

நிo. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(இ - ள்.) வாழ்வாங்கு - (இல்லறத்தோடுகூடி) வாழும் இயல்பினால், வையத்துள் - வையத்தின்கண், வாழ்பவன்—, வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - (வையத்தானே யெனினும்) வானின்கண் உறையுந் தேவருள் (ஒருவனாக) வைத்து நன்குமதிக்கப்படும்; (எ - று.)

பின் தேவனுய் அவ்வறப்பயன்நுகர்தல் ஒருதலை யாகலின், 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்றார்.

இதனால், இன்னிலையது மறுமைப்பயன் கூறப்பட்டது; இம்மைப் பயன், புகழ்: அதனை இறுதிக்கட் கூறுப.

(கு - ரை.) வையத்தின்கண் - பூலோகத்தில். நன்குமதித்தல்-கௌரவித்தல். அறப்பயனுகர்தல் - தருமத்தின்பயனை அனுபவித்தல். ஒருதலை-நிச்சயம். இறுதிக்கட் கூறுப-இவ்வியலின் முடிவில் உச-ஆம் அதிகாரத்திற் கூறுவர். உள் இரண்டும் - எழனுருபு. வைக்கப்படும் - செய்யுமென்முற்று ஆண்பாலிற் சென்றது. இல்லறத்தில் முறைதவறுமல்வாழ்பவன் மறுமையில் தேவகதியைப் பெறுவான்; அன்றியும், இம்மையில் தேவரைப்போலக் கொண்டாடப்படுவான் என்பது கருத்து. (கo)

கூ-ஆம் அதிகாரம்—வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது - அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) துணை - துணைவிக்குப் பண்பாகுபெயர். நலம்-பண்புப்பெயர்.

நிக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(இ - ள்.) மனை தக்க - மனையறத்திற்குத் தக்க, மாண்பு - நற்குண நற்செய்கைகளை, உடையள்ஆகி-உடையளாய், தன் கொண்டான் வளம் தக்காள்-தன்னைக்கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை யுடையாள், வாழ்க்கை துணை - அதற்குத் துணை; (எ - று.)

நற்குணங்களாவன - துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டு அருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன - வாழ்க்கைக்கு வேண்டும்பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில்வன்மை

யும், ஒப்புரவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது-முதலை அறிந்து அதற்கு இயைய அழித்தல்.

இதனுன், இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) மனையறம் - இல்லறம். மனை - மனையறத்திற்கு, ஆகுபெயர். மாண்பு - மாட்சிமை; சிறப்பு: இங்கே நற்குணங்களும், நற்செய்கைகளும். கொண்டவன் - விவாகஞ்செய்துகொண்டபுருஷன். வருவாய்க்குத் தக்க வாழ்க்கை - வரும்பொருளளவுக்குத் தகுந்தபடி சம்சாரகாரியங்களைச் செய்தல். துறந்தார்ப்பேணல் - முனிவர்களை உபசரித்தல். விருந்தயர்தல் - விருந்தாளிகளை உண்பித்தல். வறியார்மாட்டு - தரித்திரரிடத்தில். அருளாவது - ஒருசம்பந்தமுமில்லாமல் இயல்பாகவுண்டாகுங் கருணை. கடைப்பிடித்தல் - அப்பொருள்களை மறவாமற் செவ்வையாய்ச் சேர்த்தல். அட்டில் தொழில் வன்மை - போஜநபதார்த்தங்களை இனியசுவைபடச் சமையல்செய்யுந் திறம்; அட்டில் - சமையலிடம். ஒப்புரவுசெய்தல் - உலகநடையையறிந்து அதற்கு ஏற்பச் செய்தல். அழித்தல்-செலவிடுதல். இரண்டுநன்மை-மனைத் தக்கமாண்புடையளாதலும், தற்கொண்டான்வளத்தக்காளாதலும். மாண்பு - பண்புப்பெயர். தற்கொண்டான் - இரண்டனுருபு தொக்கது. (க)

நிஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(இ - ள்.) மனை மாட்சி - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண் - (ஒருவன்) இல்லாளிடத்து, இல் ஆயின்-இல்லையாயின், வாழ்க்கை - அவ்வில்வாழ்க்கை, எனை மாட்சித்து ஆயின்உம்-(செல்வத்தான்) எத்துணைமாட்சிமைத்தாயினும், இல் - (அஃது) உடைத்தன்று; (எ - று.)

'இல்' என்றூர், பயன்படாமையின்.

(கு - ரை.) எத்துணை மாட்சிமைத்து - எவ்வளவு பெருமையையுடையது. அஃதுஉடைத்தன்று - சிறப்புடையதன்று: அவ்வில்வாழ்க்கை மனையாளது தீக்குணந் தீச்செயல்களோடு கூடிநின்று பயன்படாததனுல், 'இல்' எனப் பட்டது. மாட்சி - பண்புப்பெயர். எனை - எத்தனை யென்பதன் மரூஉ. மனை மாட்சி - நான்காம்வேற்றுமை யுருபும்பயனும் உடன்தொக்க தொகை. ஆயினும், உம்மை - உயர்வுசிறப்பு. (உ)

நிங. இல்லதெ னில்லவண் மாண்பாரு ளுள்ளதெ
னில்லவண் மாணுக் கடை.

(இ - ள்.) (ஒருவனுக்கு), இல்லவள் - இல்லாள், மாண்பு ஆனால் - நற்குண நற்செய்கையளாயினக்கால், இல்லது - இல்லாதது, என் - யாது? இல்லவள் - அவள், மாணுக்கடை - அன்னளல்லாக்கால், உள்ளது—, என்-யாது? (எ று.)

'மாண்பு' எனக் குணத்தின்பெயர், குணிமேல்நின்றது.

இவை இரண்டு பாட்டானும், இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாள்து மாட்சியே பிறவில்ல லென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அன்ன ளல்லாக்கால்-நற்குண நற்செய்கைகளே யுடையவ ளல்லாவிட்டால், இரண்டுவாக்கியங்களிலும்'ஒருவனுக்கு' என்பது வருவிக்க. வினை, இன்மைகுறித்தது. மாண்பு - பண்பாகுபெயர். குணி-குணத்தையுடை யது. குணம் - பண்பென்றும், குணி - பண்பியென்றுங் கூறப்படும். மா ணாக்கடை - கடைஎன்ற விகுதி பெற்ற எதிர்மறையெதிர்காலவினையெச்சம்.

நிசை. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) (ஒருவன் எய்தும் பொருள்களுள்),பெண்ணின் பெருந் தக்க-இல்லாளின் மேம்பட்ட பொருள்கள், யா உள - யாவை உள? (அவள்மாட்டு), கற்பு என்னும் திண்மை - கற்பு என்னுங் கலங்காநிலைமை, உண்டாகப்பெ றின் —; (எ - று.)

கற்புடையாள்போல அறம் முதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிற இன் மையின், 'யாஉள' என்றார்.

இதனால், கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) அவள்மாட்டு - அவளிடத்தில். கற்பாவது - தன்கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; பாதிவிரத்தியம்; கொண்டானிற் சிறந்த தெய்வ மில்லை யென்றும் அவனுக்கு இன்னவாறு தீ குற்றேவல்செய்து தொழுகுஎன்றும் தாய்தந்தையராலும் பிறராலுங் கற்பிக்கப்படுதலால், கற்பு எனப் பெயர்பெற்றது. 'பெருந்தக்க' என்பதில், தக்க - இறந்தகாலப்பலவின் பால்வினையாலணையும் பெயர்;'தகு'என்ற பகுதி ஒற்று இரட்டி இறந்தகாலங் காட்டிற்று.யா - அஃறிணைப் பன்மை வினுப்பெயர். திண்மை - உறுதி. (சு)

நிஎ. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(இ - ள்.) தெய்வம் தொழாஅள் - பிறதெய்வந் தொழாது, கொழுநன் தொழுது - (தன் தெய்வமாகிய) கொழுநனைத் தொழாநின்று, எழுவாள் - துயிலெழுவாள், பெய் என-பெய்யென்றுசொல்ல, மழை பெய்யும்—;(எ-று.)

தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங் காலத் தாகலின், 'தொழுதெழுவாள்' என்றார். 'தொழாநின்று' என்பது, 'தொழுது' எனத் திரிந்து நின்றது. தெய்வந் தான் ஏவல்செய்யும் என்பதாம்.

இதனால், கற்புடையவளது ஆற்றல் கூறப்பட்டது.

(கு - ரை.) கொழுநன் - கணவன். தொழாநின்று - தொழுதுகொண்டு. துயிலெழுவாள் - தூக்கத்தினின்று எழுந்திருப்பவள். தொழுது - நிகழ்கால வினையெச்சத்தின் திரிபு. தொழுதெழுவாள் என்றது - *துயிலெழுங்காலத் தல்லது முன்உணர்வு இன்மையான் உணர்வுஉறுங்காலத்து மறவாதுநினை வாள் என்றவாறு. 'பெய்யெனப்பெய்யுமழை' என்றது - கற்புடையவ

* திருக்கோவையார், 118, உரை. துயில்வதற்குமுன் கணவனைத் தொழுமுணர்வே இருத்தலால், கற்புடையார்க்குத் துயிலெழிய உணர்வுண் டாங்காலத்தும் அந்தத்தொழுமுணர்வேயுடனுண்டாகுமென்பர்.

ளிட்டகட்டளையைத் தெய்வஞ்செய்யுமென்றபடி; தெய்வத்திற்குந்தெய்வம் கற்புடையாளென்றவாறு. "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன, செய்வகை செய்வான் தவசி கொடிதோரீ, நல்லவை செய்வகை செய்வா னரச னிவர்மூவர், பெய்யெனப் பெய்யு மழை" என்றூர், திரிகடுகத்தும். ஆற்றல் - மகிமை. இனி, கொழுநற் றொழு தெழுவா ளென்பது - எழுந்துகொழுநற்றொழுவாளென முன்பின்னுகப் பொருள் படு மென்றூர், பிரயோகவிவேகநூலார்; அவர்கூறுமாறு:—"கொழுநற்றொழு தெழுவாள்,' 'தொழுதெழுவார்விளைவள நீறெழ' என்னுந் திருவள்ளுவரினும் திருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் 'தொழாநின்றெழு வாள்,' 'தொழாநின்றெழுவார்' என எச்சத்திரிபாய் உரைப்பர்: எழுதல்-துயி லொழிதலாதலின், 'எழுந்து தொழுவாள்,' 'எழுந்துதொழுவார்' என முன் பின்னுகப் பொருள்படுத லன்றி 'நகுபுவந்தான்,' 'ஓடிவந்தான்' என்பனபோ லத் தொழாநின்று துயிலெழுதல் கூடாதென்க. "வைகறை யாமந்துயிலெ ழிந்து தான் செய்யும், நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதின், தந் தையுந் தாயுந் தொழுதெழுக" என்பது துயிலெழிந்து பின் தந்தையுந்தாயுந் தொழுது பின்காரியத்திற் செல்க எனப் பொருள்பட்டு வருதலானும், அவருரை அசம்பாவித மென்க' என்பது. தெய்வந்தொழாளென்பது-கண வனையே தெய்வமாகத்தொழுதலேக் காட்டுவதன்றித் தெய்வந்தொழுதலே விலக்கியதன் றென்றது, ஈண்டுக் கருதத்தக்கது. தொழாள் - முற்றெச்சம். அளபெடை, அசைநிறைத்தது. கொழுநற் றொழுது-உயர்திணையில் இரண்ட னுருபு தொக்கது. (கூ)

நிகூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(இ - ள்.) தன் காத்து - (கற்பினின்றும் வழுவாமல்) தன்னைக் காத்து, தன் கொண்டான் பேணி - தன்னைக் கொண்டவனையும் (உண்டி முதலிய வற்றால்) பேணி, தகை சான்ற சொல் காத்து - (இருவர்மாட்டும்) நன்மை யமைந்த புகழ் நீங்காமற் காத்து, சோர்வு இலாள் - (மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினும்) கடைப்பிடியுடையாளே, பெண்-பெண்ணெனப்படுவாள்;(எ-று.)

தன்மாட்டுப் புகழாவது-வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது. சோர்வு - மறவி.

இதனுன், * கற்புடையாளது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பேணி - உபசரித்து. இருவர்மாட்டும்-கணவன் தான் என்னும் இருவரிடத்தும். இருவர்மாட்டும் நன்மையமைந்த புகழ் என்றது - இவளைக்கொள்வதற்கு இவள்கணவன் என்ன தவஞ்செய்தானே எனக் கொண்டவனையும், பதிவிரதைத்தன்மையைக்கண்டு அவன்மனைவியையும் அவர்கள்வாழ்மூரிலுள்ளார் யாவரும் புகழ்வது. கடைப்பிடியுடையாள் -

* தற்புகழ்தற்சிறப்பு என்று பிரதிபேதம். தற்புகழ்தற்சிறப்பு - கற் புடையாளாகிய தன்னைப் புகழ்தலின் சிறப்பு என்று பொருள்.

மறவாமல் உறுதியாகப்பற்றுதலே யுடையவள். மறவி-மறத்தல். கொண்டான்-பெயர். தகை - தகுதி: இது, தொழிலடியாப்பிறந்ததாயினும் பொருளாற் பண்புப்பெயர். சான்ற - சால்என்னும் உரிச்சொலடியாப் பிறந்த இறந்த காலப் பெயரெச்சம். சொல்-புகழாதலே "சொன்மாண்பமைந்த குழு" எனச் சிந்தாமணியிலுங் காண்க. சோர்வு - தொழிற்பெயர். இனி, தகை சான்ற சொற் காத்து என்பதற்கு - (கணவனது) நன்மைநிறைந்த சொல்லே (எப் பொழுதும் கடவாமற்) காத்து என்றும் பொருள்கொள்ளலாம். (சு)

நிஎ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(இ - ள்.) சிறை காக்கும் காப்பு - (மகளிரைத் தலைவர்) சிறையாற்காக்குங் காவல், எவன் செய்யும்-என்ன பயனைச் செய்யும்? மகளிர்-அவர், நிறை காக்கும் காப்பே - (தமது) நிறையாற் காக்குங் காவலே, தலை - தலையாய காவல்; (எ - று.)

சிறை - மதிலும் வாயில்காவலும் முதலாயின. நிறை - நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவல் இல்வழி ஏனைச் சிறைக்காவலாற் பயனில்லை யென்பார், 'நிறைகாக்குங் காப்பே தலை' என்றார். ஏகாரம் - பிரிநிலைச்சுண் வந்தது.

இதனுன், தற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மகளிர் - மனைவிமார். தலைவர்-கணவர். வாயில்காவல்-காவலாளர்களால் வாயிலைக் காக்கச்செய்தல். என்பார்-என்றுசொல்லவந்தவர். சிறைக்காவலைப் பிரித்ததனால், ஏகாரம் - பிரிநிலையாயிற்று. தற்காத்தல்-தன்னைத் தானே கற்பிற் காத்துக்கொள்ளுதல். காப்பு-தொழிற்பெயர். (எ)

நிஅ. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(இ - ள்.) பெண்டிர்—, பெற்றான் - (தம்மை) எய்திய கணவனை, பெறின் - (வழிபடுதல்) பெறுவராயின், புத்தேளிர் வாழும் உலகு - புத்தேளிர் வாழும் உலகின்கண், பெரு சிறப்பு பெறுவர்-(அவராற்) பெருஞ்சிறப்பினைப் பெறுவர்; (எ - று.)—'வழிபடுதல்' என்பது - சொல்லெச்சம்.

இதனுன், தற்கொண்டாற்பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பெண்டிர் - மனைவிமார். வழிபடுதல்-வணங்கி உபசரித்தல். புத்தேளிர் - தேவர்கள். அவரால் - தேவர்களால். பெருஞ்சிறப்பு - மேன்மைப்பாடு. பேணப்படுவர் - மரியாதை செய்யப்படுவர். பெற்றாற்பெறின் - இரண்டனுருபு உயர்திணையில் தொக்கது. புத்தேளிர், இர் - பலர்பால்விகுதி.(அ)

நிகூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(இ - ள்.) புகழ் - புகழை, புரிந்த - விரும்பிய, இல்-இல்லாளே, இலோர்க்கு - இல்லாதார்க்கு, இகழ்வார் முன் - (தம்மை) இகழ்ந்துரைக்கும் பகைவர்முன், ஏறு போல் பீடு நடை - சிங்கவேறுபோல நடக்கும் பெருமிதநடை, இல்லே—; (எ - று.)

புரிந்த என்னும் பெயரெச்சத்து அகரம், விகாரத்தால் தொக்கது. பெருமிதமுடையானுக்குச் சிங்கவேறு நடையான் உவம மாகலின், 'ஏறுபோல்' என்றார்.

இதனுன், தகைசான்ற சொற் காவாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) இகழ்ந்து உரைக்கும் - நிந்தித்துப்பேசுகிற. சிங்கவேறு-ஆண் சிங்கம். ஏறு - ஆண்மைப்பெயர். பெருமிதநடை - கம்பீரமானநடை. பெருமிதம் - வீரத்தனம். 'முன்' என்னும் இடைச்சொல், இங்கே இடப்பொருள் குறித்தது. நடை - தொழிற்பெயர்; நட - பகுதி, ஐ - விகுதி. (கூ)

சூ0. மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
கல னன்மக்கட் பேறு.

(இ - ள்.) மங்கலம் என்ப-(ஒருவற்கு) நன்மை யென்று சொல்லுவர் (அறிந்தோர்), மனை மாட்சி - மனையாளது நற்குண நற்செய்கைகளே; அதன் நன் கலன் (என்ப) - அவைதமக்கு நல்ல அணிகல மென்று சொல்லுவர், நல் மக்கள் பேறு - நல்ல புதல்வரைப் பெறுதலே; (எ - று.)

'அறிந்தோர்' என்பது, எஞ்சிநின்றது. மற்று - அசைநிலே.

இதனுன், வாழ்க்கைத்துணைக்கு ஆவதோர் * அணிகலங் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

(கு - ரை.) அவைதமக்கு - நற்குணங்களுக்கும் நற்செய்கைகளுக்கும். அணிகலம் - ஆபரணம். புதல்வர் - பிள்ளைகள். எஞ்சி - குறைந்து. வாழ்க்கைத்துணைக்கு ஆவதோர் அணிகலம் - மனைவிக்கு ஆபரணம்போலச் சிறந்த ஒரு நன்மையை. வருகின்ற அதிகாரம் - புதல்வரைப்பெறுதல். தோற்றுவாய்-தொடக்கம். 'என்ப' என்னும் எதிர்காலப் பலர்பால்வினைமுற்று, பின்வாக்கியத்திலும் கூட்டி யுரைக்கப்பட்டது; என் - பகுதி, ப - விகுதி: இவ்விகுதியே எதிர்காலமுணர்த்திற்று; [நன். பதவியல்-கஅ.] 'அதன்' எனச்சுட்டினது, மாட்சியை. 'நல்மக்கள்' என்றது, குறிப்பால் ஆண்பிள்ளைகளைத் தெரிவித்தது. 'தனிமரந் தோப்பாகாது, தனிப்பிள்ளை பிள்ளையாகாது' என்பது பழமொழியாதலால், 'மக்கள்'எனப் பன்மைப்பாலாற்கூறினர்; மேல் அதிகாரத்திற்கு 'புதல்வரைப்பெறுதல்' எனப் பெயர் வைத்ததும், இதுபற்றியே. பேறு - முதனிலைதிரிந்ததொழிற்பெயர். (கo)

எ - ஆம் அதிகாரம்—புதல்வரைப் பெறுதல்.

அஃதாவது - இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும் தேவர்கடன் வேள்வியா

* அணிகலம் என்று பிரதிபேதம்.

ஞும் தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலானும் அல்லது இறுக்கப் படாமையின், அக்கடனிறுத்தற்பொருட்டு நல்மக்களைப் பெறுதல். அதிகார முறைமை, மேலே பெறப்பட்டது.

(கு - ரை.) இருபிறப்பாளர் மூவர்-உபநயனத்திற்குமுன்பு தேகஉற்பத்தி யாகிய ஒருபிறப்பும், உபநயனத்திற்குப்பின்பு அதன் ஸம்ஸ்காரங்களா லாகிய தொருபிறப்பும் ஆகிய இரண்டுபிறப்புக்களை யுடைய பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்னும் முதல்மூன்றுவருணத்தவர். இயல்பாக இறுக்கப்படுஉங் கடன்மூன்று-சுபாவமாகக் கொடுத்துக் கழிக்கவேண்டும் மூன்றுகடமைகள். கேள்வி - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார்கூறக்கேட்டல். வேள்வி - யாகம். பித்ருதேவதைகளுக்குக் கொடுக்கப்படுங் கடமைகளைச் செலுத்தும்பொருட்டு நல்லபுத்திரரைப்பெறுதல் அவசிய மென்றபடி. பிள்ளை யில்லாதவர்கள் அடையத்தக்க 'புத்'என்னும் நரகத்தினின்றுதம் தாய்தந்தை யரைப் புதல்வர் காப்பதனாலும், புதல்வர்ப்பேறு இன்றியமையாததாயிற்று. மேலே - "மங்கலமென்ப" என்னும் பாட்டில்.

சுக. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ - ள்.) பெறுமவற்றுள் - (ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவு அறிந்த மக்கள் பேறு அல்ல-அறியவேண்டுவன அறிதற்கு உரிய மக்களைப் பெறுதலல்லது, பிற - பிற பேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் மதிப்ப தில்லை; (எ - று.)

'அறிவது' என்பது-அறிதலைச்செய்வது என, அத்தொழின்மேல் நின் றது. காரணமாகிய உணமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடு மாதலான், அத்துணிவுபற்றி, 'அறிந்த' என இறந்தகாலத்தாற் கூறினார். 'அறிவறிந்த' என்ற அதனான், 'மக்கள்' என்னும்பெயர் பெண்ணெழித்து நின்றது.

இதனான், புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பேறு - பாக்கியம். அறிவது-தொழிற்பெயர்; வினையாலணை யும்பெயராகக் கொள்ளலாகாது: பிறவென்னும் பன்மையோடு மாறுபடு மாத லால். அறிவதற்குரிய மக்களை, 'அறிந்த மக்கள்' என இறந்தகாலத்தாற் சொன்னது, துணிவுபற்றிவந்த காலவழுவமைதி. அறிவறிந்தமக்கள்-ஒன் றெழி பொதுச்சொல். அறிவு - அறியவேண்டு மவற்றிற்குத் தொழிலாகு பெயர். இனி, 'அறியவேண்டுமவற்றை' என வருவித்து 'அறிவினால் அறி ந்த' என்றும் பொருள் கொள்ளலாம். "நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே," "பேதைமை யென்பதுமாதர்க்கணிகலம்" என்பனபற்றி, 'அறிவறிந்தமக்கள்' என்றது - பெண்மக்களை விலக்கிற் றென்னை. புதல்வர்ப்பேறு-புதல்வரைப்பெறுதல்.

சுஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
புண்புடை மக்கட் பெறின்.

(இ - ள்.) எழு பிறப்புஉம் - (வினைவயத்தாற் பிறக்கும்) பிறப்பு ஏழின் கண்ணும், தீயவை தீண்டா - (ஒருவனைத்) தின்பங்கள் சென்று அடையா: பழி பிறங்கா - (பிறரால்) பழிக்கப்படாத, பண்பு உடை - நற்குணங்களை யுடைய, மக்கள்-புதல்வரை, பெறின் - பெறுவானுயின்; (எ - று.)

* அவன் தீவினைவளராது நேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனுயின் என்றவாறுயிற்று. பிறப்பு ஏழாவன - ''ஊர்வ பதினெண்ரு மொன்பது மானிடம், நீர்பறவை நாற்காலோர் பப்பத் தாஞ்-சீரிய, பத்தமாந் தேவர் பதினெ லயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவர காலந்து''. தந்தைதாயர்தீவினை நேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யுந் தான தருமங்கட்கு அவர்நற்குணங் காரணமாகலின், 'பண்பு' என்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேல் நின்றது.

(கு - ரை.) வினைவயத்தால் - கருமவசத்தினுல், அவன் தீவினை-தந்தை யது பாவம். ''ஊர்வ பதினெண்ரும்'' என்னும் பாட்டிற்குப் பொருள் - ஊர் கிற ஜந்துக்களின் பிறப்புவகைகள் பதினெரு லட்சமாம்: மனிதப்பிறப்புக் கள் ஒன்பதுலட்சமாம்: நீர்வாழ்ஜாதியும் பறவைகளும் மிருகங்களும் தனித் தனி பத்துப்பத்துலட்சமாம்: சிறந்தமுறையையுடைய தேவர்கள் பதினெலு லட்சமாம்: பிரமனுற் படைக்கப்பட்ட முடிவில்லாததன்மையையுடைய அசையாப்பொருள்கள் இருபதுலட்சம் எனப்படும் என்பது; 'அயன்படைத்த' என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக. இவை - எண்பத்துநான்கு நூறு யிரம் யோனிபேத மெனப்படும். இவ்வெழுவகைத்தோற்றத்துள் தேவர்களை விலக்கிப் பருவதத்தைக் கூட்டி "மக்கள் விலங்கு பறவை யூர்வன, நீருட்டிரிவன பருப்பதம் பாதவம், எனவிவை யெழுபிறப் பாகு மென்ப" என வழங்கும் பழம்பாட்டும் ஒன்று உண்டு. 'பண்புடை மக்கள்' என்பதற்கு - தந்தைதாயரை நோக்கிச் செய்யும் நல்வினைகளையுடைய புத்திரர் என்பது, கருத்து. காரியத்தின்மேல் நின்றது - காரியமாகிய நல்வினையைக் குறித்து நின்றது. உடை - உடைய என்பதன் விகாரம். இனி, இக்குறளுக்கு - ஒரு வம்சத்தில் ஒருவன் நல்லபிள்ளைகளைப் பெற்றுல் அவ்வம்சத்தில் மூன்னேழு பின்னேழு நடுவேழு என்னும் இருபத்தொருதலைமுறையார்க்குந் தீவினைகள் தொடரா வென்றும் பொருள்கொள்ளலாம். (உ)

கூஉ. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(இ - ள்.) தம் மக்கள் - தம்புதல்வரை, தம் பொருள் என்ப-தம் பொருளென்று சொல்லுவர் (அறிந்தோர்): அவர் பொருள் - அப்புதல்வர் செய்த பொருள், தம் தம் வினையான் - தம்மைநோக்கி (அவர்) செய்யும் நல்வினையானே, வரும் - (தம்பால்) வரும் (ஆதலான்); (எ - று.)

'தந்தம்வினை' என்புழித் தொக்குநின்ற ஆறும் வேற்றுமை-'முருகனது குறிஞ்சிநிலம்' என்புழிப்போல, உரிமைப்பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களை 'பொருள்' என உபசரித்தார்.

* இத்தவாக்கியம், ஒருபிரதியிலில்லை.

இவை இரண்டுபாட்டானும், நன்மக்கட்பெற்றூர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) தம்பால்-தம்மிடம். செய்த-சம்பாதித்த. 'என்ப'என்பதற்கு 'அறிந்தோர்'என்னும் எழுவாய் வருவிக்க. தம்தம்வினை-தம்தமக்குரியனவாக மக்கள்செய்த வினை. (ஈ)

சுசு. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(இ - ள்.) அமிழ்தின்உம் ஆற்ற இனிது - (சுவையான்) அமிழ்தத்தினும் மிக இனிமையுடைத்து: தம் மக்கள்-தம் மக்களது, சிறு கை - சிறு கையான், அளாவிய - அளாவப்பட்ட, கூழ் - சோறு; (எ - று.)

சிறுகையான் அளாவ லாவது-"இட்டுத் தொட்டுங் கவ்வியுந் தழந்தும், நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்"தல்.

(கு - ரை.) சுவை-ருசி. அளாவப்பட்ட-அளையப்பட்ட. "இட்டுத் தொட்டும்" என்னும் மேற்கோள் - புறநானூற்றில் கஅ - இல் உள்ளது; நெய்யோடுகூடிய சோற்றைக் கையாலெடுத்தெறிந்தும் பரிசித்தும் வாயினுற் கௌவியுங் கையால் அளைந்தும் உடம்பின்கட் படச்சிதறுதல் என்று இதன் பொருள். கூழ் - இங்கே உணவுப்பொதுவாய் நின்றது; இழிந்த உணவாகக் கொண்டு, மக்கள் தம்கையாலளைந்த கூழும் அமிழ்தினுமினியதா மெனினும் அமையும். "பொன்னுடையரேனும் புகழுடைய ரேனுமற், றென்னுடைய ரேனு முடையரோ - இன்னடிசில், புக்கிளையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய், மக்களோயிங் கில்லாதவர்" என்றூர் புகழேந்திப்புலவரும். (சு)

சுருி. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(இ - ள்.) உடற்கு - (ஒருவன்) மெய்க்கு, இன்பம் - இன்பமாவது, மக்கள் - மக்களது, மெய்-மெய்யை, தீண்டல்-தீண்டுதல்; செவிக்கு—, இன்பம்-இன்பமாவது, அவர் சொல் கேட்டல் - அவரது சொல்லைக் கேட்டல்; (எ-று.)

மற்று-வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லே யன்றி அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்பட 'சொல்' என்றூர். 'தீண்டல்', 'கேட்டல்' என்னுங் காரணப்பெயர்கள் - ஈண்டுக் காரியங்களின்மேல் நின்றன.

(கு - ரை.) மெய் - உடம்பு. 'மெய்தீண்டல்' என்னும் வினையை ஒழித்து 'சொற்கேட்டல்' என்னும் வினையைக் கூறியிடத்து வந்ததனால், மற்ற-வினை மாற்றுப் பொருளதாயிற்று. தீண்டல், கேட்டல் என்னுங் காரணப்பெயர்கள், அவற்றாலுண்டாகும் இன்பமாகக் கூறப்பட்டன. வினையில்லாமையாற் பொய்யாகிய உடம்பை 'மெய்' என்பது, மங்கலவழக்கு. இனி, மக்கள் மெய் தீண்டல் - மக்கள் தமதுடம்பைத் தழுவுத லென்னுமாம். (ரு)

சுசு. குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

(இ - ள்.) குழல் இனிது - குழலிசை இனிது, யாழ் இனிது - யாழிசை இனிது, என்ப - என்று சொல்லுவர்: தம் மக்கள் - தம் புதல்வருடைய, மழலை சொல் - குதலைச் சொற்களை, கேளாதவர்—; (எ - று.)

குழல், யாழ் என்பன - ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச் சொல் இனிதென்பர் என்பது, குறிப்பெச்சம். இனிமையிருதிறத்தி, மழலைச் சொல்லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு.

இவை மூன்றுபாட்டானும், இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) குழலிசை-ஊதப்படுகிற வேய்ங்குழலின் ஒலி. யாழ் வீணை. 'குழல்,' 'யாழ்' என்னும் இரண்டும் - அவற்றின்ஒலிக்குப் பொருளாகுபெயர். தெறிப்பேச்சமாவது-சொல்லலி பொருள்வலிகளாற் குறிக்கப்படுஞ் சொற்கள் குறைந்துநிற்பது; இது, வடநூலில் அருத்தாபத்தியின்பாற்படும். கீழ்ப்பாட்டில் 'சொற்கேட்டலின்பஞ்செவிக்கு' எனப் பொதுவகையாகச் சொல்லப்பட்டவற்றுள் அடங்கினின்ற மழலைச்சொல்லை, மிகுந்த இன்பந்தருதல்பற்றித் தனியே இப்பாட்டிற் சிறப்பித்துக் கூறினர். "சொன்ன கலியின் துறைய னெத்துந்தோய்ந்தாலும், என்ன பயனுடைத்தா மின்முகத்து-முன்னங், குறு குதலைக்கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச், சிறுகுதலை கேளாச் செவி" என்றார் புகழேந்தியாரும். (சு)

சுஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(இ - ள்.) தந்தை—, மகற்கு - புதல்வனுக்கு, ஆற்றும் - செய்யும், நன்றி-நன்மையாவது,-அவையத்து - (கற்றோர்) அவையத்தின்கண், முந்தி இருப்ப-(அவரினும்) மிக்கிருக்குமாறு, செயல் - கல்வியுடையனாக்குதல்; (எ - று.)

பொருளுடையனாக்குதல் முதலாயின, துன்பம்பயத்தலின் நன்மையாகா என்பது கருத்து.

இதனுள், தந்தைகடன் கூறப்பட்டது.

(கு - ரை.) அவையத்தின்கண் - சபையில். அவரினும் மிக்கிருக்குமாறு - அங்குள்ள படித்தவர்களெல்லாரைக்காட்டிலும் மேம்பட்டிருக்கும்படி. தந்தை கடன் - பிதா புத்திரர்க்குச்செய்யவேண்டிய கடமை. தந்தை, தாம் - பகுதி, தை - முறைப்பெயர்விகுதி. நன்றி - பண்புப்பெயர்; றி - விகுதி. அவை - கற்றறிவுடையோர்கூட்டம்;ஸபா என்னும்வடமொழியின் திரிபு. முந்தியிருப்ப-முதன்மைபெற்றிருக்கும்படி; அதாவது - தேர்ந்தகல்விகற்பித்து, அவர்களெல்லாம் மதிக்கும்படி. செல்வப்பொருள் நிலையில்லாததாதலால், அதனை ஒழித்தார். "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றார் புறநானூற்றிலும்.

சுஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

(இ - ள்.) தம் மக்கள் - தம் மக்களது, அறிவு உடைமை—, மா நிலத்து மன் உயிர்க்கு எல்லாம் - பெரிய நிலத்து மன்னுகின்ற உயிர்கட்கெல்லாம், தம்மின் - தம்மிலும், இனிது - இனிதாம்; (எ - று.)

ஈண்டு 'அறிவு' என்றது, இயல்பாகிய அறிவோடு கூடிய கல்வியறிவினை. 'மண்ணுயிர்' என்றது, ஈண்டு, அறிவுடையார்மேல் நின்றது: அறிவுடைமை கண்டு இன்புறுதற்கு உரியார் அவராகலின்.

இதனுள் தந்தையினும் அவையத்தார் உவப்ப ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) நிலத்து - பூமியில். மன்னுகின்ற - நிலைபெற்ற. ஒருவன் அறிவுடையனாயிருத்தல் அவன் தந்தைக்கு எவ்வளவு இனிமையைத் தருமோ அதனினும் பலமடங்கு பிறர்க்கும் இனிமையைத் தரு மென்பது கருத்து. பிறர் கல்வியைக்கண்டு பொறாமைப்படுபவனும் தன்மைந்தன் கல்விமிகுதியைக்கண்டு களித்தலும், கல்வியறிவில்லாதவனும் தன்மகனுக்குக் கல்விகற்பித்தலும் காண்க. 'தம், மின்' என்பது, 'இனிது' என்னுங் குறிப்புவினை கொண்டது. உடம்பிற்கேயன்றி உயிர்க்கு எப்போதும் அழிவில்லையாதலால், 'மன்னுயிர்க்கு' என்றார். இன்புறுதல் - மகிழ்தல். அவையத்தார் உவப்பர் - சபையிலுள்ளோர் மகிழ்வர். இனி, இக் குறளுக்கு - தமது புத்திரர் தம்மைக்காட்டிலும் அறிவுடையராயிருப்பது பெரிய நிலவுலகத்தி லுள்ளார் யாவர்க்கும் இனிமையைத்தரும் என்றும் பொருள்கொள்ளலாம். (அ)

சுகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(இ - ள்.) ஈன்ற பொழுதின் - (தான்)பெற்ற பொழுதைமகிழ்ச்சியினும், பெரிது உவக்கும் - மிக மகிழும்: தன் மகனை—, சான்றோன் என - (கல்வி கேள்விகளால்) நிறைந்தா னென்று (அறிவுடையார்) சொல்ல, கேட்ட—, தாய்—; (எ - று.)

* கவானின்கட் கண்ட பொதுஉவகையினும் சால்புடைய னெனக் கேட்ட சிறப்புஉவகை பெரிதாகலின்'பெரிதுவக்கும்'எனவும்,பெண்ணியல்பால் தாளுக அறியாமையின் 'கேட்டதாய்' எனவும் கூறினர். 'அறிவுடையார்' என்பது வருவிக்கப்பட்டது; சான்றோ னென்றற்கு உரியவர் அவராகலின். தாயுவகைக்கு அளவின்மையின் அஃது இதனுட் பிரித்துக் கூறப்பட்டது.

(கு - ரை.) பெற்றபொழுதை மகிழ்ச்சி - பிள்ளையைப்பெற்றகாலத்திலுண்டான சந்தோஷம். கேட்ட - கேள்விப்பட்ட. கவானின்கண் - மடியில். சால்பு - கல்வி கேள்விகளாலாகிய நிறைவு. தாயுவகை - தாயின்மகிழ்ச்சி. 'பிரித்துக்கூறப்பட்டது' என்றது, கீழ்ப்பாட்டில் 'தம்மின்' என்றதில் தாயுவகையும் அடங்கலாமாதலால். பொது உவகை - பிள்ளைபிறந்தது என்பதனாற் பொதுப்பட உண்டாகும் மகிழ்ச்சி. சிறப்புவகை-நமதுமகன் அறிவுமிக்கவனானென்று சிறப்பாக உண்டாகும் மகிழ்ச்சி. உவக்கும் - செய்யுமென்முற்று, பெண்பாலிற் சென்றது. பெரிது - ஒன்றன்பாற்குறிப்புமுற்று, வினையுரியாய் நின்றது.சான்றோன் - னகரவீற்றயல் ஆகாரம் ஓவாயிற்று. (கூ)

எ0. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

* கவானின்மகற்கண்டபொழுதை யுவகையினும்என்று பிரதிபேதம்.

(இ - ள்.) தந்தைக்கு (கல்வியுடையனுக்கிய) தந்தைக்கு, மகன்—, ஆற்றும் - செய்யும், உதவி - கைம்மாறுவது,—இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல் - (தன் அறிவும் ஒழுக்கமும் கண்டார்) 'இவன் தந்தை (இவனைப் பெறுதற்கு) என்ன தவஞ் செய்தான்கொல்லோ?' என்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல்; (எ - று.)

'சொல்' என்பது, நிகழ்த்துதலாகிய தன்காரணந் தோன்ற நின்றது. நிகழ்த்துதல் - அங்ஙனஞ் சொல்ல ஒழுகுதல்.

இதனுன், புதல்வன்கடன் கூறப்பட்டது.

(கு - ரை.) கைம்மாறு - பிரதியுபகாரம். நிகழ்த்துதல் உண்டாகச்செய்தல்; அதாவது - நல்லறிவும் நல்லொழுக்கமு முடையவனுதல். ஒழுகுதல் - நடத்தல். நிகழ்த்துதலாற் சொல் பிறக்குமென்க. புதல்வன்கடன்-புத்திரனது கடமை. கொல் - வியப்பிடைச்சொல். தவத்தின் அளவு தெரியாமையால் ஐயவிடைச்சொல்லாகவுமாம். உதவி - தொழிற்பெயர். நோற்றான், கொல் - பகுதி. "உன்னேக்கண்டார், என்ன நோன்பு நோற்றுள்கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள், என்னும் வார்த்தை யெய்துவித்த இருடீகேசா", "செம்மலைப்பயந்த நற்றாய் செய்தவ முடைய ளென்பார், எம்மலைத் தவஞ் செய்தாள்கொ லெய்துவம் யாமுமென்பார்" என்பன காண்க. (கo)

அ - ஆம் அதிகாரம்—அன்புடைமை.

அஃதாவது - அவ் வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர் புடையார்கண் காதல் உடையனுதல். அதிகாரமுறைமையும் இதனுனேவிளங்கும். இல்லறம் இனிதுநடத்தலும், பிறவுயிர்கள்மேல் அருள்பிறத்தலும் அன்பு பின்பய ஞதலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பு இல்வழி இல்லறம் இனிதுநடவாமை, "அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை" என்பதனுலும், அதனுன் அருள்பிறத்தல் "அரு ளென்னு மன்பீன் குழவி" என்பதனுலும் அறிக.

(கு - ரை.) தொடர்புடையார்கண் - பந்துக்களிடத்தில். காதல் - ஆசை. புதல்வரைப்பெறுதலின்பின் அப்புதல்வர்முதலியோரிடத்து அன்புடைமை யை வைத்தார். ஒருசம்பந்தமுமில்லாமலே வருத்தமுற்றவர்களின்மேற்செல்வ தாகிய அருள் யாதாயினுமொருசம்பந்தம்பற்றிச்செல்லும் அன்பு முதிர்ந்த விடத்து உண்டாவதை, மேல் 'பொருள்செயல்வகை' என்னும் எசு-ஆம் அதி காரத்தில் "அருளென்னும் அன்பீன் குழவி" என்பதனுல் அறிக; இம்மேற் கோளுக்கு - அன்பினுற் பெறப்பட்ட அருளென்னுங் குழந்தை யென்று பொருள். "அறவோர்க் களித்தல்" என்னும் மேற்கோள் - சிலப்பதிகாரத்துக் கொலைக்களக்காதையில் உள்ளது; இதற்கு - பிரமசாரிகளுக்கு வேண்டுவன கொடுத்தலும், வாநப்ரஸ்தரைக் காத்தலும், சந்நியாசிகளை எதிர்கொண்டு உப சரித்தலும், தொன்றுதொட்டுவருஞ் சிறப்பினையுடைய விருந்தினரை எதிர் சென்றழைத்துவந்து உண்பித்தலும் என்னுமிவற்றை இழந்த என்னை என்று

பொருள்: இது, கண்ணகியென்பவள் தன்கணவனுகியகோவலன் தன்னிடத்து முன்னம் அன்பில்லாதிருந்ததனைக் கூறியது. 'அளியாவது - அன்பு காரணத்தால் தோன்றும் அருள்; அன்பாவது - மனைவியர்கண்ணும் தாய் தந்தை புதல்வர் முதலிய சுற்றத்தின் கண்ணும் மனமகிழ்ச்சி நிகழ்த்திப் பிணிப்பித்துநிற்கும் நேயம்' என்பது, பொருளதிகாரவுரை.

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(இ - ள்.) அன்பிற்குமும்—, அடைக்கும்-(பிறர் அறியாமல்) அடைத்து வைக்கும், தாழ்—, உண்டுஓ - உளதோ? ஆர்வலர் புல் கண் நீர் - (தம்மால்) (அன்புசெய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி) அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே, பூசல் தரும்-(உள்ளின்ற அன்பினை எல்லாரும் அறியத்) தூற்றும், (ஆதலான்); (எ - று.)

உம்மை, சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை, கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கு எய்தாதாயினும் அனுமானவளவையான் வெளிப்படு மென்பதாம்.

இதனுன், அன்பினது உண்மை * உணர்த்தப்பட்டது.

(கு - ரை.) அடைத்து வைக்கும் - மறைத்துப் பூட்டிவைக்கும். தாழ் - தாழக்கோல். உளதோ - இல்லையென்றபடி; ஓ - எதிர்மறை. ஆர்வலர் - அன்புடையவர்; இதில்: ஆர்வு - பகுதி: அல் - சாரியை: அர் - விகுதி. கண்டுழி - பார்த்தபொழுது. புல்லிய - துன்பமான; புன்மை - இங்கே, துன்பம். தூற்றும் - வெளிப்படுத்தும். சிறப்பு - உயர்வுசிறப்பு. அனுமான அளவை - அநுமாநப்ரமாணம்; இது, முதல்திருக்குறளின் குறிப்பில் இன்னதென்று கூறப்பட்டது. இன்பத்தினுல் உண்டாகும் ஆனந்தக்கண்ணீரை விலக்குதற்கு, 'புன்கணீர்' எனப்பட்டது. தாழ் என்பதற்கு - சினேயாகுபெயராய், தாளிடப்படுங் கதவு என்றும் பொருள்கொள்ளலாம். உண்மை - இருத்தல். அன்பென்பது இன்னதென்று பிரதியட்சமாகக் காணப்படுவதன்று, அதனையுடையவரிடத்து உண்டாகுங் கண்ணீர்பெருகல் முதலிய குணங்களால் ஊகித்து அறியத்தக்க தொரு பொருளா மென்பது, கருத்து; இதுபற்றியே தொல்காப்பியனரும் "ஒப்பு முருவும் வெறுப்பு மென்ரு, கற்பு மேரு மெழிலு மென்ரு, சாயலுநாணு மடனு மென்ரு, நோயும் வேட்கையு நுகர்வு மென்ரும், காவியின் வரூஉங் கிளவி யெல்லா, நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது, காட்ட லாகாப் பொருள வென்ப" என்ரார். பொருளதிகாரவுரையில் 'அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தில்நிகழும் நேயம்; அஃது அடையார்க்குப் பிறர்கண் துன்பங்கண்டழிக் கண்ணீர் விழு மாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்கு மென்பது; இவையெல்லாம் தத்தம் மனத்தினிகழ்ச்சியை வெளிப்படுப்பனவாகலின் மெய்ப்பாடெனப்பட்டன' என்றும். இறையனரகப்பொருளுரையில் நக்கீரர் 'குடக்துள் விளக்கும் † தடம்

* கூறப்பட்டதுஎன்று பிரதிபேதம். † தடம் - வாளிடும்உறை.

றுள் வாளும் போல இதுகாண் அன்பென்று தக்து காட்டலாகாது; அன்புடையரான குணங் கண்ட இடத்து இவைஉண்மையான், ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக்கொள்ளற்பாற்று' என்றுங் கூறியவாறு காண்க. (க)

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(இ - ள்.) அன்பு இலார் - அன்பிலாதார், எல்லாம் தமக்கு உரியர் - (பிறர்க்குப் பயன்படாமையின்) எல்லாப்பொருளானும் தமக்கே உரியர்; அன்பு உடையார்—, என்புஉம் பிறர்க்கு உரியர் - (அவற்றுனேயன்றித் தம்) உடம்பானும் பிறர்க்கு உரியர்; (எ - று.)

ஆனுருபுகளும், பிரிநிலேயேகாரமும்-விகாரத்தால் தொக்கன. 'என்பு' - ஆகுபெயர். என்பும்உரியராதல், ''தன் அகம் புக்க குறுகடைப்புறவின், தபுதி கண்டு அஞ்சிச் சீரைபுக்''கோன் முதலாயினுர்கட் காண்க.

(கு - ரை.) அவற்றுனேயன்றி - அப்பொருள்களாலேயல்லாமல். ஆனுருபுகள் - 'எல்லாம்,' 'என்பும்' என்னுமிடங்களில்; எல்லாவற்றினும், என்பினும் என விரிக்க. பிரிநிலே ஏகாரம் - 'தமக்கு' என்பதில். என்பு - அதனேயுடைய உடம்புக்குச் சினேயாகுபெயர். உம்மை - இறக்கதழுவியஎச்சப்பொருளது. ''தன்னகம்புக்க குறுகடைப்புறவின்'' என்பது-புறநானூறு சங-இல் உள்ளது; இதற்குப் பொருள் - தன்னிடம் வந்து சரணமடைந்த தளர்ந்த நடையையுடையபுறவினதுகேட்டைக் கண்டு பயந்து (அதனேக்காக்கும்பொருட்டுத் தான்) தராசுத்தட்டில் ஏறின சிபிச்சக்கரவர்த்தி என்பது. சிபிஎன்னுஞ் சக்கரவர்த்தி அரசாளுகையில் அவனது மேன்மைக்குணத்தைப் பரீட்சிக்கும் படி இந்திரன் பெரும்பருந்தாகவும் யமன் சிறுபுறுவாகவும் வடிவமெடுத்துப் புறுவைப் பருந்து துரத்திவர, அப்புறு சக்கரவர்த்தியைச் சரணமடைய, அரசன் அதற்கு அபயமளிக்க, பின்னேவந்த பருந்து 'என் இரையைக் கொடுத்துவிடு' என்று கேட்க, மன்னவன் 'அடைக்கலம்புகுந்தவரை ஆதரியாதுவிடுதல் அதிபாதகமாதலால் இதையன்றி எதுகேட்டாலுங் கொடுப்பேன்' என்ன, பருந்து 'இந்தப்புறுவின் எடையளவு தசை உன்உடம்பில் அரிந்துகொடு' என்ன, வேந்தன் சம்மதித்து உடனே உடம்பிலுள்ள உறுப்புக்களே யெல்லாம் ஒவ்வொன்றுக அறுத்து வைத்தும் எடைகுறைந்தமையால் தானே தராசுதட்டில் ஏறி எடையை நிறைக்க, உடனே அத்தேவர்கள் பிரதியக்ஷமாகி மிகவியந்து வேண்டின வரங்களே அளித்துப்போயின என்பது கதை. 'முதலாயினுர்' என்றது - தமது முதுகெலும்பை இந்திரனுக்கு வச்சிராயுதத்துக்காகக் கொடுத்த கதிசிமுனிவரும், தன்னுடன்பிறந்த கவசகுண்டலங்களே இந்திரனுக்குத் தானஞ்செய்த கர்ணனும் முதலியோரை உட்கொண்டு. என்பு - எலும்பு. (உ)

எங. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ - ள்.) ஆர் உயிர்க்கு - (பெறுதற்கு) அரிய மக்களுயிர்க்கு, என்போடு இயைந்த - உடம்போடு உண்டாகிய, தொடர்பு-தொடர்ச்சியினை, அன்போடு இயைந்த வழக்கு என்ப-அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பய னென் றறு சொல்லுவர், (அறிந்தோர்); (எ - று.)

பிறப்பினது அருமை, பிறந்தஉயிரின்மேல் ஏற்றப்பட்டது. 'இயைந்த' என்பது, உபசாரவழக்கு. வழக்கு - ஆகுபெயர். உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அதுசெய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி உளதா யிற்று என்பதாம்: ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன், அன்புடைமை யென் றாயிற்று.

(கு - சை.) நெறி-வழி. மனிதப்பிறப்பு அரியதாதலே "அரிதரிது மானி டராத லரிது" என ஔவையார் கூறியதனாலும் அறிக. 'அன்போடு இயைய வந்த' என்னும் அருத்தத்தில் 'அன்போடு இயைந்த' என்றது, உபசாரவழக்கு; இதனை வடநூலார் 'ஔபசாரிகப்ரயோகம்' என்பர். வழக்கு - அதன்பயனைக் குறித்ததனால், ஆகுபெயர். அதுசெய்தற்பொருட்டு - அன்புசெய்யுநிமித்தம். இத்தொடர்ச்சி உயிர்க்கு மனிதவுடம்போடு உண்டான சம்பந்தம். இனி, இக் குறளுக்கு - அரிய உயிர்களுக்கு மானிட உடம்புகளோடு உண்டான சம்பந்தத் தைக் முற்பிறப்புக்களில் அவ்வுயிர்கள் அன்போடு பொருந்திவந்த நெறியின் பயனென்று சொல்வர் அறிந்தோர் என்று உரைப்பாரு முளர். (சு)

எசு. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(இ - ள்.) (ஒருவனுக்கு), அன்பு - (தொடர்புடையார்மாட்டுச் செய்த) அன்பு, ஆர்வம் உடைமை ஈனும் - (அத்தன்மையாற் பிறர்மாட்டும்) விருப்ப முடைமையைத் தரும்; அது - அவ்விருப்பமுடைமைதான், நண்பு என்னும் நாடா சிறப்பு ஈனும்-(இவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய்) யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்; (எ - று.)

உடைமை - உடையனாந்தன்மை. யாவரும் நண்பாதல் எல்லாப்பொரு ளும் எய்துதற்கு ஏதுவாகலின், அதனை, 'நாடாச்சிறப்பு' என்றார்.

(கு - சை.) தொடர்புடையார்மாட்டு-உறவினரிடத்தில். நொதுமல் - விரோதமுஞ் சிநேகமு மில்லாதிருக்குந் தன்மை; உதாஸீநதை. நாடாச் சிறப்பு - இவ்வளவென்று மதிக்கக்கூடாத செல்வம். (சு)

எடு. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

(இ - ள்.) அன்பு உற்று - அன்புடையராய், அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - நெறியின்பயன், என்ப - என்று சொல்லுவர் (அறிந் தோர்):வையகத்து-இவ்வுலகத்து,இன்பு உற்றார்-(இல்வாழ்க்கைக்கண்ணின்று) இன்பம் நுகர்ந்து, எய்தும் - (அதன்மேல் துறக்கத்துச் சென்று) எய்தும்,சிற ப்பு - பேரின்பத்தினை; (எ - று.)

வழக்கு - ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங் கூடி இன்புற்றூர் தாம்செய்த வேள்வித்தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவ ராகலின், 'இன்புற்றூரெய்துஞ் சிறப்பு' என்றூர். தவத்தால் துன்புற்று எய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டும் இன்புற்று எய்துதல் அன்பானன்றி இல்லை யென்பதாம்.

(கு - ரை.) துறக்கத்து - சுவர்க்கத்தில். ஆண்டும் - அவ்விடத்தும்; மறுமையிற் சுவர்க்கத்தும். ஈண்டும் இன்புற்றுஎய்துதல்-இவ்வுலகத்தும் இன்பத்தையனுபவித்து அடைதல். வழக்கு, நீதி, நெறி, முறைமை என்பன - ஒரு பொருட்சொற்கள். (கூ)

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(இ - ள்.) அன்பு—, சார்பு-துணையாவது, அறத்திற்கே—,என்ப-என்று சொல்லுவர், அறியார் - அறியார் (சிலர்); மறத்திற்குஉம் - ஏனை மறத்திற்கும், அஃதுஎ - அவ்வன்பே, துணை - துணையாவது; (எ - று.)

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறம்நிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையா மென்பார், 'மறத்திற்கு மஃதே துணை' என்றூர்; ''துன்பத்திற்கியாரே துணையாவார்'' என்புழிப்போல.

இவையைந்துபாட்டானும், அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மறம் - அதருமம். உள்ளத்து மறம் நிகழ்ந்துழி-மனத்திற் கோபம் உண்டானபொழுது. ''துன்பத்திற்கு'' என்னும் மேற்கோள், திருக்குறள் - கஉ0-ஆம் அதிகாரம் - கூ-இல் உள்ளது; இதற்கு-ஒருவர்க்குத் துன்பம்வந்தவிடத்து அதனைநீக்குதற்கு வேறுதுணையாவா ரொருவருமில்லை யென்று பொருள். 'மறத்திற்கு அன்புதுணை' என்றதை'பித்தத்துக்கு இஞ்சி நல்லது' என்பதுபோலக் கொள்க. அறியார்-பெயர். என்ப - பயனிலை. 'அறத்திற்கே' என்பதில், ஏ - பிரிநிலை. மறத்திற்கும், உம் - இறந்தது தழுவிய எச்சம். அஃதே, ஏ - தேற்றம். அஃதே - ஆய்தம், மெய்போல ஒலித்தது.

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(இ - ள்.) என்பு இலதனை - என்பில்லாத உடம்பை, வெயில் போல-வெயில் காய்ந்தாற்போல, காயும்—: அன்பு இலதனை-அன்பில்லாத உயிரை, அறம் - அறக்கடவுள்; (எ - று.)

'என்பிலது' என்றதனுன் உடம்பு என்பதூஉம், 'அன்பிலது' என்றதனுன் உயிர் என்பதூஉம் பெற்றும். *வெறுப்பின்றி எங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன் இயல்பாற் சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடு

* வேறுபாடின்றி என்று பிரதிபேதம்.

மென்பதாம்: அதனை, 'காயும்' என வெயில் அறங்களின்மேல் ஏற்றினர், அவற் றிற்கும் அவ்வியல்பு உண்மையின். இவ்வாறு ''அல்லவை செய்தார்க் கறங் கூற்றம்'' எனப் பிறருங் கூறினர்.

(கு - ரை.) என்பில்லாத உடம்பு - புழு உடம்பு. காய்தல்-காய்ந்து கொல்லுதல். அறக்கடவுள் - தருமதேவதை. அத்தன்மைத்தாகிய - வெறுப்பில் லாத. அவ்வியல்பு - காய்தற்றன்மை. ''அல்லவை'' என்னும் மேற்கோள், நான்மணிக்கடிகை - அதி-இல் உள்ளது; இதற்கு - அதருமங்களைச் செய்தவர் களுக்குத் தருமதேவதை யமனைப்போலத் துன்புஞ்செய்யும் என்பதுபொருள். உவமையணி. ஏகாரம்-கருணையோகூடிய இரக்கத்தைக் காட்டும். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

(இ - ள்.) அகத்து - மனத்தின்கண், அன்பு இல்லா - அன்பில்லாத, உயிர்—, வாழ்க்கை - (இல்லறத்தோடுகூடி)வாழ்தல்,—வன்பாற்கண் - வன் பாலின்கண், வற்றல் மரம் - வற்றலாகிய மரம், தளிர்த்தற்று - தளிர்த்தாற் போலும்; (எ - று.)—கூடாதென்பதாம்.

வன்பால் - வன்னிலம். வற்றல் என்பது - பால்வினங்கா அஃறிணைப் படர்க்கைப்பெயர்.

(கு - ரை.) வன் பால் - கடினமாகிய பூமி; பாலைநிலம். 'வன்பார்க்கண்' என்றும் பாடமுண்டு. வற்றலாகிய மரம் - ஈரம் வற்றியதாகிய மரம். 'வற்றல்' என்பதில், அல் - கருத்தாப்பொருள் விகுதி. வற்றல்மரம் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை. பால்வினங்கா அஃறிணைப்படர்க்கைப் பெயராவது- ஒன்றன்பாலைக்காட்டுகிற'து' என்கிற விகுதியையாவது, பலவின்பாலைக் காட்டுகிற 'வை, அ, கள்' என்னும் விகுதிகளு ளொன்றையாவது பெறுமல் அவ்விருபால்களுக்கும் பொதுவாய் வருகிற அஃறிணைப் பெயர். தளிர்த்தற்று - தளிர்த்தாலற்று என்பதன் விகாரம். வற்றல் மரம் - ஒருஜாதிமரமுமாம். (அ)

எக. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(இ - ள்.) யாக்கை யகத்து - யாக்கையகத்தின்கண் (நின்று), உறுப்பு - (இல்லறத்திற்கு) உறுப்பாகிய, அன்பு—, இலவர்க்கு - உடையரல்லாதார்க்கு, புறத்து உறுப்பு எல்லாம் - ஏனைப் புறத்தின்கண் நின்று உறுப்பாவன வெல் லாம், எவன் செய்யும்-(அவ்வறஞ்செய்தற்கண்) என்ன உதவியைச் செய்யும்?

புறத்துறுப்பாவன - இடனும், பொருளும், ஏவல்செய்வாரும் முதலா யின. துணையோடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின், 'எவன் செய்யும்' என்றார். உறுப்புப் போறலின், 'உறுப்பு' எனப்பட்டன. யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்னபயனைச் செய்யும்? மனத்தின்கண் உறுப்பாகிய அன்பு இலாதார்க்கு என்று உரைப்பாருமுளர்; அதற்கு இல் லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக.

(கு - ரை.) யாக்கை யகத்தின்கண் நின்று - உடம்பினுள்ளேயிருந்து. உறுப்பு - அங்கம். புறத்தின்கண் - வெளியிலே. எவன் செய்யும் - ஒன்றையுஞ் செய்யாதென்பது கருத்து. துணைபோடு கூடாதவழி - இல்லறத்திற்குத் துணையாகிய அன்போடு கூடாதவிடத்து; இல்லறவாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியோடு கூடாதவிடத்து எனினுமாம். அவற்றுல்-இடம்பொருள் ஏவல்களால். முதலடியில் உறுப்பு - உவமவாகுபெயர். போறலின் - ஒத்திருத்தலால். "இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவல்மற், றெல்லா மிருந்தமவற் கென்செய்யும் - நல்லாய், மொழியிலார்க் கேது முது நூல் தெரியும், விழியிலார்க் கேது விளக்கு" என்பது காண்க. அதற்கு-அவ்வுரைக்கு. இயைபு - சம்பந்தம். (கூ)

அ0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ - ள்.) அன்பின் வழியது - அன்பு முதலாக அதன்வழிநின்ற உடம்பே, உயிர் நிலை - உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு - அவ்வன்பில்லாதார்க்கு (உளவான), உடம்பு - உடம்புகள், என்பு தோல் போர்த்த - என்பினைத் தோலாற் போர்த்தனவாம்: (உயிர்நின்றனவாகா); (எ - து)

இல்லறம் பயவாமையின், அன்னவாயின.

இவை நான்குபாட்டானும், அன்பில்வழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(கு - ரை.) அதன்வழிநின்ற - அதன்பின்நின்ற. அன்பில்லாத உடம்புகள் இல்லறத்தைத் தாமாட்டாமையால், இவ்வாறு கூறினர்; "நெட்டுயிர்ப் போடுற்றபிணம்" என்றுற்போல. அன்ன - அப்படிப்பட்டவை. போர்த்த - பலவின்பால் முற்று. அஃதிலார்க்கு - ஆய்தம் மெய்போல ஒலித்தது. அன்பில்லாவிடின் உடம்பு எடுத்தது பயனற்ற தென்பதாம். (க0)

கூ - ஆம் அதிகாரம்.—விருந்தோம்பல்.

அஃதாவது - இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துள் முன்னைய இரண்டும் கட்புலனுகாதாரை நினைந்துசெய்வன வாகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்குரு லன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறு காத அன்புடையிருவர் கூடியல்லது செய்யப்படாமையின், இஃது, அன்புடைமையின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இருவகைவிருந்தினர் - கூஉ-ஆம் குறளின் உரையிற் கூறப்பட்டவர். புறந்தருதல் - காத்தல். முன்னைய இரண்டும் - பிதிருக்களே ஓம்பலும், தேவரை ஓம்பலும். கட்புலனுகாதார் - பிரதியக்ஷமாகாதவர். பின்னைய இரண்டும் - சுற்றத்தாரை ஓம்பலும், தன்னே ஓம்பலும். இடை - அந்நான்கிற்கும் நடுவில். அன்புடையிருவர்-கணவனும் மனைவியும். அன்பில்லாமல் விருந்தோம்புதல் கூடாததனுல், இதனை அன்புடைமையின்பின் வைத்தார்.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) இல் இருந்து - (மனைவியோடும் வனத்திற் செல்லாது) இல்லின்கண் இருந்து, ஓம்பி - (பொருள்களைப்) போற்றி, வாழ்வது எல்லாம் - வாழுஞ்செய்கையெல்லாம்,—விருந்து ஓம்பி - விருந்தினரைப் பேணி, வேளாண்மை செய்தற்பொருட்டு - (அவர்க்கு) உபகாரஞ் செய்தற்பொருட்டு.

எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும், பொருள் * போற்றலுங் காரணமாக வருந் துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம்.

(கு - ரை.) போற்றி - காத்து. பேணி - உபசரித்து. வாழ்வதெல்லாம்- ஒருமைப்பன்மைமயக்கம். பொருட்டு - நான்காம் வேற்றுமைச் சொல்லுருபு. விருந்தோம்பாவழி இல்வாழ்க்கை பயனற்றதென்பதாம். (க)

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(இ - ள்.) சாவா மருந்து எனின்உம் - (உண்ணப்படும் பொருள்) அமுதமே யெனினும், விருந்து - (தன்னே நோக்கி வந்த) விருந்து, புறத்தது ஆ - (தன் இல்லின்) புறத்ததாக, தான் உண்டல் - தானே உண்டல், வேண்டல் பாற்று அன்று - விரும்புதல் முறைமை யுடைத் தன்று; (எ - று.)

சாவா மருந்து - சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகால் தான் உண்டலைச் சாவாமருந் தென்பார் உளராயினும் அதனை ஒழிக என்று உரைப்பினும் அமையும்.

இவை இரண்டுபாட்டானும், விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) இப்பாட்டுக்கு இரண்டுரை. முதல் உரையில் 'சாவாமருந்து' என்பது - அம்ருதம் என்பதன் மொழிபெயர்ப்பு; கிடைப்பதற்கரியதும் மிகவினியசுவையுடையது மாகிய அமிருதங் கிடைத்தாலும் அதனையும்விருந்தாளிகளுருக்குக் கொடுத்து உண்ணவேண்டுமே யன்றி விருந்தினரைத் தன் வீட்டு வாயிலில் வைத்துவிட்டுத் தான் உண்ணலாகா தென்பது கருத்து. இரண்டாம்உரையில், சாவாமருந்து - ம்ருதசஞ்சீவிநீ என்பதன் மொழிபெயர்ப்பு; விருந்தினரை வாயிலில் வைத்துவிட்டு ஒருதரம் ஒருவன் உண்டால் அது இறவாமற்சிரஞ்சீவியாயிருத்தற்குரியமருந்தாம் என்று எவராயினுஞ் சொல்லி நிலைநிறுத்தினாலும் அவ்வாறு உண்ணலாகாது என்பது கருத்து: விருந்தினரை உண்பியாமல் தானுண்பது சாதலினும் இன்னாதது என்பதாம். புறத்ததா; ஆ - ஆக என்பதன் தொகுத்தல். வேண்டற்பாற்று-விரும்பப்படுதலாகிய தன்மையையுடையது. பாற்று-ஒன்றன்பாற்குறிப்பு வினையாலணையும்பெயர். 'விரும்பத்தக்கதன்று' என்று சொன்னதனாலே, செய்யத் தக்கதன்றென்று சொல்லவேண்டாதாயிற்று. (உ)

* செய்தல் என்று பிரதிபேதம்: செய்தல் - சம்பாதித்தல்.

அஉ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ - ள்.) வரு விருந்து - (தன்னேநோக்கி) வந்த விருந்தை, வைகல்உம்-நாள்தோறும், ஓம்புவான் - புறந்தருவானது, வாழ்க்கை - இல்வாழ்க்கை,—பருவந்து - (நல்குரவான்) வருந்தி, பாழ் படுதல்-கெடுதல், இன்று - இல்லை.

நாள்தோறும் விருந்தோம்புவானுக்கு அதனைப் பொருள்தொலையாது மேன்மேற் கிளைக்கும் என்பதாம்.

(கு - ரை.) புறந்தருவான்-(உணவுமுதலியகொடுத்துப்) போற்றுபவன். நல்குரவு - வறுமை. பொருள் தொலையாது - பணஞ் செலவழிந்து விடாமல். கிளைக்கும் - வளரும். வைகலும், உம்மை - தொறுப்பொருளது. பருவந்து, பருவா-பகுதி. இப்பாட்டான், விருந்தோம்புதலாற் பொருளழியுமே யென்று ஏக்கங்கொள்ளலாகாது எனத் துணிவு கூறினர். (கூ)

அசு. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(இ - ள்.) செய்யாள் - திருமகள், அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, உறையும் - வாழாநிற்கும்: முகன் அமர்ந்து - முகம் இனியனுய், நல் விருந்து-தக்க விருந்தினரை, ஓம்புவான்-பேணுவானது, இல்-இல்லின்கண்; (எ-று.)

மனம் மகிழ்தற்குக் காரணம், தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி - ஞானஒழுக்கங்களான்உயர்தல். பொருள்கிளைத்தற்குக் காரணம் கூறியவாறு.

(கு - ரை.) திருமகள் - இலக்குமி. ஞானஒழுக்கங்களான் உயர்தல்-அறிவினலும் ஆசாரத்தாலும் சிறத்தல். அகம் என்னும் உள்ளிடத்தின் பெயர், அங்குஉள்ள மனத்துக்கு இடவாகுபெயர். அமர்ந்து-பொருந்தி யென்றுமாம். செய்யாள் - செம்மையையுடையவள்; செம்மை என்பது ஈறுபோய் முன் நின்றமெய்திரிந்த செய் - பகுதி. (ச)

அடு. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

(இ - ள்.) விருந்து ஓம்பி - (முன்னே) விருந்தினரை மிசைவித்து, மிச்சில் மிசைவான் - (பின்) மிக்கதனை(த் தான்) மிசைவானது, புலம் - விளை புலத்துக்கு, வித்து இடல்உம் வேண்டும் ஓ - வித்திடுதலும் வேண்டுமோ? வேண்டா; (எ - று.)

கொல்என்பது - அசைநிலை. 'தானே விளையும்' என்பது, குறிப்பெச்சம்.

இவை மூன்றுபாட்டானும், விருந்தோம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) மிசைவித்து - உண்பித்து. மிசைவான்-உண்பவன். விளை புலம் - கழனி. வித்திடுதல் - விதைவிதைத்தல். வித்து இடலும் என உம்மை மாறுக. ஓ-எதிர்மறை. மிச்சில்-மிஞ்சு என்னும் பகுதியிலிருந்து வந்தது.

அஉ. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பர்
நல்விருந்து வானத் தவர்க்கு.

(இ -ள்.) செல் விருந்து - (தன்கண்) சென்ற விருந்தை, ஓம்பி - பேணி, வரு விருந்து-(பின்) செல்லக்கடவ விருந்தை, பார்த்து—, இருப்பான் - (தான் அதனேடு உண்ண) இருப்பான்,—வானத்தவர்க்கு நல் விருந்து -(மறு பிறப்பில் தேவனுய்) வானினுள்ளார்க்கு நல்விருந்தாம்; (எ - று.)

வருவிருந்து என்பது - இடவழுவமைதி. நல்விருந்து - எய்தாவிருந்து. இதனுன், மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) சென்ற - வந்த. செல்லக்கடவ - வரத்தக்க. பார்த்து-எதிர் பார்த்து. அதனேடு உண்ண இருப்பான்-அவ்விருந்தாளியோடு புசிக்கக் காத்திருப்பவன். வானினுள்ளார் - தேவர். "தருசொல் வருசொல் லாயிருஞிள வியுங், தன்மை முன்னிலை யாயீ ரிடத்து" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தின்படி தன்மைமுன்னிலைகளுக்கு உரிய வருசொல், அதற்கு மாருக இங்கே படர்க்கையிடத்திற்கு வந்தமையால் இடவழுவாகி, "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்துப் பொதுவிதியால் அமைக்கப்படுதலால் வழுவமைதியாயிற்று. எய்தா விருந்து - பெறுதற்கு அரிய விருந்து. (சு)

அஎ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(இ - ள்.) வேள்வி பயன் - (விருந்தோம்பலாகிய) வேள்வியின் பயன், இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - இன்னளவிற்று என்பதோர் அளவுடைத்தன்று: விருந்தின் துணை துணை-(அதற்கு) அவ்விருந்தின் தகுதியளவே அளவு: (எ - று.)

ஐம்பெருவேள்வியின் ஒன்ருகலின் 'வேள்வி' என்றும், பொருளளவு "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" ஆகலின், 'இனைத்துணைத்தென்பதொன்றில்லை' என்றும் கூறினர்.

இதனுன், இருமையும் பயத்தற்குக் காரணம் கூறப்பட்டது.

(கு -ரை.) வேள்வி - யாகம். அளவிற்று - அளவையுடையது. அதற்கு - அப்பயனுக்கு. தகுதி - பெருமை. ஐம்பெருவேள்வி - பிரமயஜ்ஞம், தேவயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், பூதயஜ்ஞம் என்னும் பஞ்ச மஹாயஜ்ஞங்கள். அவற்றுள், பிரமயஜ்ஞம் - வேதமோதுதல்; தேவயஜ்ஞம் - ஓமம்வளர்த்தல்; மநுஷ்யயஜ்ஞம் - விருந்தோம்புதல்; பித்ருயஜ்ஞம்-தருப்பணஞ்செய்தல்; பூதயஜ்ஞம் - பலியீதல். "தான்சிறி தாயினும்" என்னும் மேற்கோள்-காலடியாரில் நான்காமதிகாரத்தில் எட்டாம் பாட்டிலுள்ளது. இதற்குப்பொருள் - தானஞ்செய்யப்படும்பொருள் தான் மிகச் சிறியதாயிருந்தாலும், தகுதியையுடைய சற்பாத்திரங்களின் கையிற் சேர்ந்தால்,மிகப்பெரியஆகாயமுஞ் சிறியதென்னும்படி தருமத்தின் மேலானபயனைப் பரப்பிவிடும் என்பது. இருமையும் - இம்மைமறுமையிரண்டையும். இனை என்பதை இத்தனையென்பதன் மரூஉ என்பர். விருந்தின் துணைத் துணை என்பதற்கு - தான் விருந்தினர்க்

குச்செய்யும் உபசாரத்தின் அளவே அளவாம் என்று பொருள்கொள் வாருமுளர். (எ)

அஅ.பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(இ - ள்.) பரிந்து ஓம்பி - (நிலையாப்பொருளை) வருந்திக் காத்து(ப் பின் அதனை இழந்து), பற்று அற்றேம் என்பர் - (இதுபொழுது யாம்) பற்றுக்கோ டிலமாயினேம் என்று இரங்குவர்: விருந்து ஓம்பி - (அப்பொருளான்) விருந் தினரை ஓம்பி, வேள்வி தலைப்படாதார் - வேள்விப்பயனை எய்தும் பொறி யிலாதார்; (எ - று.)

"ஈட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்துன்பம்" ஆக லின், 'பரிந்தோம்பி' என்றார். வேள்வி - ஆகுபெயர்.

(கு - ரை.) நிலையாப் பொருள் - நிலையில்லாதசெல்வம். இதுபொழுது - இப்பொழுது. பற்றுக்கோடிலமாயினேம் - ஆதரவில்லாதவராஞேம். இரங்கு வர் - பச்சாத்தாபப்படுவர். பொறியிலாதார் - விதியில்லாதவர். "ஈட்டிய" என்னும் மேற்கோள் - காலடியாரில் உஅ - ஆம் அதிகாரத்தில் கo - ஆம் பாட்டிலுள்ளது; இதற்கு, சம்பாதித்த நல்லபொருளைக் காப்பாற்றுவதும் அப்படியே மிகுந்த துன்பம் என்பதுபொருள். வேள்வி - அதனாற் பெறப்படும் பயனுக்குக் காரணவாகுபெயர். விருந்தோம்பாதவர் பொருளையிழந்து பரித விப்பர் என்க. (அ)

அசு. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(இ - ள்.) உடைமையுள் - உடைமைக்காலத்து, இன்மை - இன்மை யாவது,—விருந்து ஓம்பல் ஓம்பா மடமை - விருந்தோம்பலை இகழும் பேதை மை; மடவார்கண் உண்டு - (அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது,) பேதை யார்மாட்டே உளதாம்; (எ - று.)

உடைமை - பொருளுடையனுந்தன்மை. பொருளாற்கொள்ளும் பயனை இழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக உப சரித்தார். பேதைமையான் விருந்தோம்பலை இகழின், பொருள் நின்றவழியும் அதனாற் பயனில்லை யென்பதாம்.

இவை யிரண்டு பாட்டானும், விருந்தோம்பா வழிப் படுங் குற்றம் கூறப் பட்டது.

(கு - ரை.) உடைமைக்காலம் - பொருளுடையனாயிருக்குங்காலம். இன் மை - வறுமை. இகழும் - இகழ்ந்து செய்யாமல்விடும். பேதைமை - அறியா மை. அஃது - அப்பேதைமை. பேதையார் - அறிவில்லாதவர். செல்வத்தால் அடையப்படும் பிரயோசனத்தை அடையாமல் இழக்கச்செய்து அச்செல்வத் தை இல்லாததாக்குதலால் இன்மைக்குக்காரணமாகிய விருந்தோம்பா மடமை யை அதன்காரியமாகிய இன்மையாகச் சொன்னது, உபசாரவழக்கு. பொருள் நின்றவழியும் - செல்வம் இருந்தபோதிலும். அஃது என்னுஞ் சுட்டுப்பெயர்,

வருவித்து உரைக்கப்பட்டது. 'மடவார்கண்' என்பதில் பிரிநிலவேகாரம் தொக்கது. மடவார் - மடமையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற் பெயர். (கூ)

கூ0. மோப்பக் குழையு மனிச்ச மூகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(இ - ள்.) அனிச்சம் - அனிச்சப்பூ, மோப்ப குழையும் - மோந்துழியன்றிக் குழையாது; விருந்து - விருந்தினர், முகம் திரிந்து நோக்க குழையும் - முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்; (எ - று)

அனிச்சம் - ஆகுபெயர். சேய்மைக்கட் கண்டிழி இன்முகமும், அது பற்றி நண்ணியவழி இன்சொல்லும், அவைபற்றி உடன்பட்டவழி நன்றூற்றலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், நீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

இதனுன், விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டு மென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) அனிச்சம் - ஓர்மரம்; அது, அதன்மலர்க்கு முதலாகுபெயர். மோந்துழியன்றிக் குழையாது - மோந்துபார்த்தாலன்றி வாடாது. தூரத்தில் விருந்தினனைப் பார்த்த பொழுதே இனியமுகமும், அதனுல் அவன் கிட்டிய பொழுது இனியசொல்லும், அவ்விரண்டினுலும், அவன் இணங்கினபொழுது அவனுக்கு நல்லஉபசாரஞ்செய்தலு மாகிய மூன்றும் விருந்தோம்புவார்க்கு அவசியமானவையாம்; இவற்றுள் முதலதாகிய இனியமுக மில்லாவீடின், வந்தவிருந்தினன் தூரத்திலிருந்தே வாடி விலகிப்போவன்: ஆதலால், முகக்கினுல் தொட்டு மோந்தாலல்லது வாடாத அனிச்சப்பூவைக்காட்டிலும் கண்டமாத்திரத்தில் வாடும் விருந்தினர் மிகமென்மையானவ ரென்பதாம். இது, குறிப்பினுல், உபமானத்தினும் உபமேயம் உயர்ந்ததென்று உயர்வுதோன்ற நின்ற வேற்றுமையணி. (கo)

கo - ஆம் அதிகாரம்.—இனியவைகூறல்.

அஃதாவது - மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய இனியசொற்களைச் சொல்லுதல். இதுவும் விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மனத்தின்கண் உவகையை வெளிப்படுப்பனவாகிய-மனத்திலுள்ளமகிழ்ச்சியை வெளியில் தெரிவிப்பனவாகிய. இதுவும் - இனியவை கூறலும். இன்றியமையாது - இல்லாமல்முடியாதது; அதியவசியமானது. கீழ் அதிகாரத்தின் இறுதியிற் கூறப்பட்ட இன்முகத்துக்கு இன மாதலால், இன் சொல்லை இங்கே கூறுகிறார்.

கூக. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(இ - ள்.) இன் சொல்-இன்சொலாவன,—ஈரம் அளை இ - அன்போடு கலந்து, படிறு இல ஆம் - வஞ்சனையிலவாயிருக்கின்ற, செம் பொருள்-அறத்தினை, கண்டார் - உணர்ந்தார், வாய் சொல் - வாயிற்சொற்கள்; (எ - று.)

ஆல் - அசைநிலை. அன்போடு கலத்தல் - அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை - வாய்மை. மெய்யுணர்ந்தார்நெஞ்சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், 'செம்பொருள்' எனப்பட்டது. இலவாஞ் சொல் என இயையும். 'வாய்' என வேண்டாது கூறினர், தீயசொற் பயிலா என்பது அறிவித்தற்கு.

இதனுன், இன்சொற்கு இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) ஆல் - 'இன்சொலால்' என்பதில். வாய்மை - உண்மை; சத்தியம். மெய்யுணர்ந்தார் - தத்துவஞானிகள். செம்மை-நன்மை. செம்மையுடையதாய்த் தோன்றுவது - அறம். ஆம் என்னும் பெயரெச்சம்-'செம்பொருள்' என்பதனோடு சேராமல், 'சொல்' என்பதனோடு முடிந்தது. 'சொல்'என்பது - பால்பகா அஃறிணைப்பெய ராதலால், 'இலவாஞ்சொல்' எனப் பன்மை விசேஷணங்கொடுத்துக் கூறினர். தீயசொற்பயிலா-தருமமறிந்தவர் வாய்கள் ஒருபொழுதும் கெட்டசொற் சொல்லுதலைப் பழகினவல்ல. 'வாய்' என வேண்டாதுகூறினர் - 'செம்பொருள்கண்டார்சொல்' எனவே அமையவும், வாய் என்று அவசியமில்லாமற் சொன்னர். சொன்னதற்குக் காரணம் - விதப்புச் சொல் வேண்டியபொருளை விளக்கு மென்பது. அளை இ - அளைந்து என்னும் வினையெச்சம் விகாரப்பட்டு அளபெடுத்தது; இது, சொல்லிசையளபெடை.

கூஉ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
இன்சொல னாகப் பெறின்.

(இ - ள்.) அகன் அமர்ந்து - நெஞ்சு உவந்து, ஈதலின் - (ஒருவர்க்கு வேண்டியபொருளைக்)கொடுத்தலினும், நன்று—: முகன் அமர்ந்து - (கண்ட பொழுதே) முகம் இனியனாய், இன்சொலன் ஆக பெறின் - (அதனோடு) இனியசொல்லையும் உடையனாகப்பெறின்; (எ - று.)

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன்வயத்த தாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாக இன்மையின், அதனினும் அரிது என்னுங் கருத்தான், 'இன்சொல னாகப்பெறின்' என்றார்.

(கு - ரை.) பொருள்வயத்ததன்றித் தன்வயத்ததாயினும் - செல்வத்தின் வசத்திலுள்ளதல்லாமல் தன்வசத்திலுள்ளதாயிருந்தாலும்;தானஞ் செய்தல் பொருளுள்ளவர்க்கே கூடும், இன்சொல் அப்படியன்றிப் பொருளில்லாதவர்களுக்குங் கூடியதாயிருந்தாலும். அறநெஞ்சு - தருமசிந்தை. அதனினும் அரிது - தானத்தினும் அருமையானது. 'பெறின்' என்பது - பெறுதலின் அருமையை விளக்கிற்று. 'நன்று' என்னுங் குறிப்புமுற்றுக்கு 'அது' என்னும் எழுவாய் வருவிக்க. எகாரம் - தேற்றம். (உ)

கூஙு. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
* மின்சொ லினதே யறம்.

(இ - ள்.) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி - (கண்டபொழுதே) முகத்தான்விரும்பி இனிதாகநோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினது எ - (பின் நண்ணியவழி) மனத்துடன் ஆகிய இனியசொற்களைச் சொல்லுதலின் கண்ணதே, அறம்—; (எ - று.)

'நோக்கி'என்னும்வினையெச்சம், 'இன்சொல்'என அடையடுத்து நின்ற முதனிலைத்தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்ணதன்று என்றவாறு.

இவை இரண்டுபாட்டானும், இன்முகத்தோடுகூடிய இன்சொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்தது என்பது கூறப் பட்டது.

(கு - பை.) நோக்கி - பார்த்து. நண்ணியவழி-கிட்டிச்சென்றபொழுது. அகத்தான், ஆன் - உடனிகழ்ச்சி. அடை - அடுத்துநிற்பது: விசேஷணம். இன்சொல் - இனியசொற்களைச் சொல்லுதல் என விரிக்க. ஈதலின்கண்ணதன்று - தானத்தினிடத்திலுள்ளதன்று. இப்பொருளோத் தந்ததனால், எகாரம்-பிரிநிலை. முன்னரே பிணித்துக் கோடலின் - முன்னே விருந்தாளியை அன்புகாட்டித் தழுவுதலால். சொலினது - குறிப்புவினையாலணையும்பெயர்; முற்றுமாம். (ஙு)

கூசு. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

(இ - ள்.) யார்மாட்டும் - எல்லார்மாட்டும், இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு - இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லே யுடையார்க்கு, துன்பு உறூஉம் துவ்வாமை - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு, இல் ஆகும் - இல்லையாம்; (எ - று.)

ஈ முதலிய பொறிகள் சுவைமுதலிய புலன்களே நுகராமை யுடைமையின், 'துவ்வாமை' எனப்பட்டது. யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்குப் பகையும் தொகுமலும் இன்றி உள்ளது நண்பேயாம்; ஆகவே, அவர் எல்லாச் செல்வமும் எய்துவர் என்பது கருத்து.

(கு - பை.) மிகுவிக்கும் - அதிகப்படுத்துகிற. நுகராமை-அனுபவியாமை. துவ்வாமை-உண்ணுதல் முதலியன செய்யப்பெறுமை; எனவே, வறுமையாயிற்று; இது, எதிர்மறைத்தொழிற்பெயர்; து - பகுதி. உறூஉம் - இன்னிசையளபெடை. (சு)

கூஙி. பணிவுடைய னின்சொல னதை லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, அணி - அணியாவது,—பணிவுடையன் - (தன்னுல் தாழப்படுவார்கண்) தாழ்ச்சியுடையனும், இன்சொலன்

* இன்சொலினஃதே என்று பிரதிபேதம்.

ஆதல் - (எல்லார்கண்ணும்) இனியசொல்லையும் உடையனாதல்; பிற-(இவை யிரண்டு மன்றி மெய்க்கு அணியும்)பிறஅணிகள், அல்ல-அணியாகா; (எ-று.)

இன்சொலனாதற்கு இனமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினார். மற்று - அசைநிலை. வேற்றுமையுடைமையான் 'பிற' எனவும், இவைபோலப் பேரழகு செய்யாமையின் 'அல்ல' எனவும் கூறினார்.

இவை இரண்டுபாட்டானும், இனியவைகூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) அணி - அணியப்படும் ஆபரணம். தாழப்படுவார் - கீழ்ப் படிந்திருக்கத்தக்க பெரியோர். தாழ்ச்சி - வணக்கம். இவையிரண்டு-தாழ்ச்சி யும், இன்சொல்லும். மெய்க்கு - உடம்புக்கு. உடன் - கூட. பிறஎன்பது இனங்குறித்ததனால், மற்று - அசையாயிற்று. வேற்றுமையுடைமை - வணக் கமும் இன்சொல்லும் போலத் தன்னோடு ஐக்கியப்பட்டிராமல் வேறுபட்டி ருத்தல். அணி - மத்திமதீபம். உடம்புக்கே அழகு செய்யும் புறத்தணியாற் பயனில்லை, உயிர்க்கும் அழகுசெய்யும் அகத்தணியே பயனுடையதென்பது கருத்து. (கூ)

கூசு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(இ - ள்.) நல்லவை - (பொருளாற் பிறர்க்கு) நன்மைபயக்குஞ்சொற் களே, நாடி - (மனத்தான்) ஆராய்ந்து, இனிய சொலின் - இனியவாக (ஒரு வன்) சொல்லுமாயின், (அவனுக்கு), அல்லவை தேய - பாவங்கள் தேய, அறம்—, பெருகும் - வளரும்; (எ - று.)

தேய்தல் - தன்பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலைஇன்றி மெலிதல். "தவத்தின்முன்னில்லாதாம்பாவம்" என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங் காலும் கடியவாகச்சொல்லின் * அறனுகாது என்பதாம்.

இதனுன், மறுமைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) தேய - குறைக்துவர. தன்பகையாகிய - பாவத்திற்குப்பகை யான. நிலையின்றிமெலிதல் - நிற்குமிடமில்லாமல்வாடுதல். "தவத்தின்முன்" என்னும் மேற்கோள், நாலடியார், துறவு முதற்பாட்டில் உள்ளது. இப் பொருட்டு - 'அல்லவை தேய அறம்பெருகும்' என்பதன் பொருளுடையது. கடியவாக - கடிஞ்சொல்லாக. அறமல்லாதவையெனவே, பாவங்களாம். (கூ)

கூஎ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(இ - ள்.) நயன் ஈன்று - (ஒருவனுக்கு இம்மைக்கு) நீதியையும் உண்டா க்கி, நன்றி பயக்கும் - (மறுமைக்கு) அறத்தையும் பயக்கும்: பயன் ஈன்று - (பொருளாற் பிறர்க்கு) நன்மையைக் கொடுத்து, பண்பின் தலைப்பிரியா - இனிமைப்பண்பின் நீங்காத, சொல்—; (எ - று.)

* அறனுகாதென்று பிரதிபேதம்.

நீதி - உலகத்தோடு பொருந்துதல். 'பண்பு' என்பது, ஈண்டு அதிகார்த்தான் இனிமைமேல் நின்றது. தலைப்பிரிதல் - ஒருசொல்நீர்மைத்து.

(கு - ரை.) இனிமைப்பண்பு - இனிமையாகியகுணம். இங்கே 'நயன், நீறு' என்றது - உலகத்தாரெல்லாரோடும் உண்டாகும் ஒற்றுமையை. 'பண்பு' என்னும் பொதுப்பெயர் - இங்கே 'இனியவைகூறல்' என்னும் அதிகாரத்திற்கு ஏற்ப, சிறப்பாய் இனிமையைக்குறித்தது. ஒருசொல்நீர்மைத்து-தலை பிரிதல் என இரண்டுசொற்போலத் தோன்றினாலும் ஒருசொல்லின்தன்மையையுடையது; தலையென்பது - பொருளில்லாமல் வினைச்சொல்லை அடுத்து வந்த உபசர்க்கம். நன்றி - அறத்துக்குப் பண்பாகுபெயர். (எ)

கூஅ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(இ - ள்.) சிறுமையுள் நீங்கிய - (பொருளாற் பிறர்க்கு) நோய் செய்யாத; இன்சொல் - இனிய சொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - (ஒருவனுக்கு) இருமையினும் இன்பத்தைப் பயக்கும்; (எ - று.)

மறுமையின்பம் பெரிதாகலின், முற் கூறப்பட்டது. இம்மையின்பமாவது - உலகம் தன்வயத்ததாகலான் கல்லனவெய்தி இன்புறுதல்.

இவைஇரண்டுபோட்டாலும்; இருமைப்பயனும் ஒருங்கு எய்துதல் வலியுறுத்தப்பட்டது.

(கு - ரை.) நோய்செய்யாத - துன்பத்தை உண்டாக்காத. பெரிது-இம்மையின்பத்தினுஞ் சிறந்தது. உலகம்தன்வயத்ததாகலான்-உலகத்தவரெல்லாந் தன்வசப்படுதலால். கல்லன எய்தி இன்புறுதல் - நல்ல பொருள் புகழ் முதலியவற்றை அடைந்து இன்பப்படுதல். ஒருங்கு எய்துதல் - ஒருசேரப் பெறுதல். வலியுறுத்தப்பட்டது - இன்சொற்சொல்லுதலாற் கிடைக்குமென்று துணிவாகச்சொல்லப்பட்டது. சிறுமை - துன்பம்; அது வன்சொல்லின் பயனுதலால் அதனை விலக்கி, 'சிறுமையுணீங்கிய இன் சொல்' என்றார். உள் - ஐந்தனுருபு, கீக்கப்பெருளது. (அ)

கூகூ. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(இ - ள்.) இன்சொல் - (பிறர்கூறிய) இன்சொல், இனிது ஈன்றல் - (தனக்கு) இன்பம் பயத்தலை, காண்பான்-அனுபவித்து அறிகின்றவன்;—வல்சொல் வழங்குவது - (அதுநிற்கப் பிறர்மாட்டு) வன்சொல்லைச் சொல்வது, எவன் - என்னபயன் கருதி? (எ - று.)

இனிது என்றது - வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொல் பிறர்க்கும் இன்னாதாகலின், அது கூறலாகா தென்பது கருத்து.

(கு - ரை.) அதுநிற்க-அவ்வின்சொல்லைப் பேசுதலைத்தவிர்ந்து. இனிது - இனிமை யென்னும்பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். இன்னாது - இனியதன்று. கொல், ஓ - அசைகள். வழங்குவது - எதிர்காலத்தொழிற்பெயர்; வினையாலணையும்பெயரன்று. (கூ)

கoo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(இ - ள்.) இனிய - (அறம்பயக்கும்) இனிய சொற்களும், உள ஆக - (தனக்கு) உளவாயிருக்க, (அவற்றைக் கூறுது), இன்னாத - (பாவம்பயக்கும்) இன்னாத சொற்களை, கூறல் - (ஒருவன் கூறுதல்,—கனி - (இனிய) கனிகளும், இருப்ப - (தன் கைக்கண்) உளவாயிருக்க, (அவற்றை நுகராது), காய் - (இன்னாத) காய்களை, கவர்ந்து அற்று - நுகர்ந்ததனைடு ஒக்கும்; (எ - று.)

'கூறல்' என்பதனால், 'சொற்கள்' என்பது பெற்றாம். பொருளை விசேடித்து நின்ற பண்புகள், உவமைக்கண்ணுஞ் சென்றன. இனிய கனிகள்என்றது, ஒளவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தாவனவற்றை. இன்னாத காய்கள் என்றது, காஞ்சிரங்காய்போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவில் தனக்கே இன்னாது என்பதாம்.

இவைஇரண்டுபாட்டானும், இன்னாதகூறலின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) நுகராது - உண்ணுமல். பொருள் - உபமேயம். உபமேயமாகியசொற்களை விசேடித்துநின்ற 'இனிய', 'இன்னாத' என்னும் குணத்தைக் குறித்த விசேஷணங்களை, உபமானமாகிய 'கனி', 'காய்' என்பவற்றோடும் முறையே கூட்டுக. காஞ்சிரங்காய்போல நஞ்சாவன - எட்டிக்காய்போல விஷமாய்க்கொல்லத்தக்கவை. 'இனிய', 'இன்னாத' என்னும் இரண்டுபெயரெச்சங்களும் கொண்டு முடியுஞ்சொல்லை அவாவிநின்றன வாதலால், 'சொற்கள்' என வருவித்தார்; இனி, இவற்றைப் பலவின்பால்வினையாலணையும்பெயராகக் கொள்ளுதலுமாம். ஒளவையார் அதிகமானென்னும் வள்ளலிடத்தினின்று அமிருதத்தின் தன்மையையுடைய இனியதொரு கருநெல்லிப்பழத்தைப் பெற்று உண்டு அவனைப் பாடி அதனாற் பலகாலஞ்சீவித்திருந்தா ளென்பது, கதை: இதனை "மால்வரைக், கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த, வரவுச் சினங்கனலு மொளிதிகழ் நெடுவே, லரவக் கடற்றானை யதிகன்" என்னுஞ் சிறுபாணாற்றுப்படையடிகளாலும், "அதியர் கோமான், *** பெருமை யீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், சாத னீங்க வெமக்கீத் தனையே" என்று ஒளவையாரே பாடிய புறநானூற்றுச்செய்யுளாலும் அறிக. (இதற்கு - நாகலோகஞ்சென்று ஆதிசேஷன்மகளை மணந்து அவனிடத்தினின்று, போர்த்துக்கொண்டால் இளமைமாறாதிருக்கச் செய்வதொரு பொற்படாமும், உண்டால் நீடிழிகாலம் உயிர்வாழத்தக்கதொரு நெல்லிக்கனியும் பெற்றுத் தனதுகாவிரிப்பூம்பட்டினத்துக்கு மீண்டுவந்த பந்தனென்னும் வணிகன்மீது ஒளவை ஒருதவமணிமாலையும் அந்தாதியும் பாடி அவ்விரண்டையும்பெற்றுப் பழத்தை உண்டு வாழ்ந்தா ளென்று ஒருகதை கூறுவாரு மூளர்; அது பொருந்துமாயிற் கொள்க.) (கo)

௯௯ - ஆம் அதிகாரம்—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது - தனக்குப் பிறர்செய்தநன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில்குற்றம் செய்ந்நன்றிகோறலே யாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃது, இனியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) செய்ந்நன்றியறிதல் - வடமொழியில் 'க்ருதஜ்ஞதா' எனப் படும். செய்ந்நன்றி - இறந்தகாலவினைத்தொகை. நன்றி - பண்புப்பெயர்; உபகாரம். அறிதல், மறவாமை என்பன - ஒருபொருட்சொற்கள். இன் சொற்களைச்சொல்லிக்கொண்டு கிருகஸ்தாச்சிரமதருமத்தினின்று தவறுதலுவர் களுக்குப் பாவத்தை நீக்கும் பிராயச்சித்தமொன்றில்லாத குற்றமாவது செய்த நன்றியைமறத்தலே யாதலால், அக்குற்றத்தைப் பாதுகாத்து விலக்கும் பொருட்டு, செய்ந்நன்றியறிதலென்னும் அதிகாரம் இனியவைகூறலென் னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்ட தென்றவாறு. இல்லறத்தார்க்கு இனியவை கூறல்போலச் செய்ந்நன்றியறிதலும் மிகவும் அவசிய மென்க. உய்தி - பாவத்தினின்றுநீங்கும்வழி; இவ்வதிகாரத்தின் பத்தாம்பாட்டைப் பார்க்க. கோறல் - கொல்லுதல்; என்றது - மறத்தல் என்றபடி. அதனைப் பாதுகாத்து - அக்குற்றத்தைத் தம்மிடஞ்சேரவொட்டாமல் தடுத்து; இதனை "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" என்பதுபோலக் கொள்க. கடி தற்பொருட்டு - விலக்குதலினிமித்தம்.

௯0௯. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(இ - ள்.) செய்யாமல் - (தனக்கு முன் ஓர்உதவி) செய்யாதிருக்க, செய்த - (ஒருவன் பிறனுக்குச்) செய்த, உதவிக்கு —, வையகம்உம் - மண் ணுலகும், வானகம்உம் - விண்ணுலகும், (கைம்மாறுகக்கொடுத்தாலும்), ஆற் றல் - ஒத்தல், அரிது —; (எ - று.)

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையன வாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. 'செய்யாமைச் செய்த வுதவி' என்று பாடமோதி, மறித்துஉதவமாட்டாமையுள்ளவிடத்துச்செய்த உதவி யென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) மண்ணுலகு - பூலோகம். விண்ணுலகு - தேவலோகம். கைம்மாறு - பிரதியுபகாரம். ஆற்றுதல் - நிறையொத்தல், ஈடாதல். ஒரு காரணத்தைப்பற்றிச் செய்யப்படுகிற பிரதியுபகாரங்கள் ஒருகாரணமுமில் லாமற்செய்யப்பட்ட முதலுபகாரத்துக்கு ஈடாகா வென்பதாம். 'செய்யா மைச் செய்தவுதவி'என்ற பாடத்துக்கு - பிரதியுபகாரஞ்செய்தற்கு இயலாத வறியவர்கள் விஷயத்திற் செய்த உபகார மென்று பொருள்; அப்பாடத்தில், செய்யாமையென்னும் எதிர்மறைத் தொழிற்பெயர், ஆகுபெயராய்நின்றது. செய்யாமல் - எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சம். வையகம்-(பொருள்களை) வைக்கும் இடம் எனப் பூமிக்குக் காரணப்பெயர். அரிது - ஒன்றன்பாற்

குறிப்புமுற்று: அருமை - பகுதி. முதலிலே தானுகப் பிறனொருவனுக்குச் செய்த உபகாரத்துக்கும், பிரதியுபகாரத்தைவிரும்பாமல் மிகுந்த ஏழைகளுக்குச் செய்த உபகாரத்துக்கும் எதுவும் ஈடாகாதென்பது, இத்திருக்குறளின் கருத்து. இங்கே "ஏற்றகைமாற்றுமை யென்னுஞ் தாம்வரையா, ராற்றுதார்க் கீவதா மாண்கட - ஞற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல், பொலிகட னென்னும் பெயர்த்து" என்னும் நாலடியார்ச் செய்யுள் அறியத்தக்கது. (க)

கஙஉ. காலத்தி னஞ்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(இ - ள்.) காலத்தினால்-(ஒருவனுக்கு இறுதிவந்த) எல்லைக்கண், செய்த-(ஒருவன்) செய்த, நன்றி - உபகாரம், சிறிது எனின்உம் - (தன்னை நோக்கச்) சிறிதாயிருந்ததாயினும், ஞாலத்தின் மாண பெரிது - (அக்காலத்தை நோக்க) நிலவுலகத்தினும் மிகப்பெரிது; (எ - று.)

அக்காலம்நோக்குவதல்லது பொருள்நோக்கலாகா தென்பதாம். 'காலத்தினால்' என்பது - வேற்றுமைமயக்கம்.

(கு - ரை.) இறுதி - முடிவு, அழிவு; ஆபத்து என்றபடி. எல்லைக்கண் - சமயத்தில். தன்னைநோக்க - அந்தஉபகாரத்தின் அளவைப் பார்க்குமிடத்து. உபகாரஞ்செய்யப்பட்ட சமயத்தினது அருமைபெருமைகளை நோக்கி அவ்வுபகாரத்தை நன்குமதிக்கவேண்டுமேயல்லாமல் உபகாரஞ்செய்யப்பட்ட பொருளினது சிறுமையை நோக்கி அவ்வுபகாரத்தை அவமதிக்கலாகா தென்பது, கருத்து. 'காலத்தினால்' என்பதில், ஆல்என்னும் மூன்றனுருபு-தனக்குரிய பொருள்களில் வாராமல் காலத்தில் என ஏழாம்வேற்றுமைக்குரிய இடப்பொருளில் வந்ததனால், வேற்றுமைமயக்கம்: வேற்றுமைமயக்கம் எனினும், உருபுமயக்கம் எனினும் ஒக்கும்; இதற்கு "யாத னுருபிற் கூறிற்றுமி னும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரம், விதி. எனினும், உம் - இழிவுசிறப்பு. ஞாலத்தின், இன் - ஐந்தனுருபு, உறழ்பொருவு; ஞாலத்தைக்காட்டிலுமென்ற பொருள்: இது, எல்லைப் பொருளின்பாற்படும்; (ஞாலத்தைப்போல என உரைத்தால் உவமப்பொருவு என்னும் ஒப்புப்பொருளாம்.) "பெரிது பெரிது புவனம் பெரிது" ஆதலால், பெருமைக்கு நிலவுலகம் எடுத்துக்கூறப்பட்டது. (உ)

கஙக. பயன்தூக்கார் செய்த வுதவி நயன்தூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(இ - ள்.) பயன் தூக்கார் - (இவர்க்குஇதுசெய்தால்) இன்னது * பயக்குமென்று ஆராய்தலிலராய், செய்த—, உதவி - உதவியாகிய, நயன் - ஈரமுடைமையை, தூக்கின் - ஆராயின்,—நன்மை - (அதன்)நன்மை, கடலின் - கடலினும், பெரிது - பெரிதாம்; (எ - று.)

* பயப்பரென்று என்று பிரதிபேதம்.

இவைமூன்றுபாட்டானும், முறையே, காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினுற் செய்ததூஉம், பயன்தூக்காராய்ச்செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பயன் தூக்கார்-(இன்னுரக்கு இன்னவுதவிசெய்தால் நமக்கு இன்னநற்பயனுண்டாகுமென்று தமக்கு) ஒருபயனே நோக்காதவர்களாய். நயன் - அன்புள்ள செய்கை. ஈமுமுடைமை - அன்புடைமை. அதன்நன்மை-அவ்வுதவியின் நலம். முறையே - வரிசையாய். பயன், நயன் - பயம், நயம் என்பவற்றின் ஈற்றுப்போலிகள்; [நன். எழுத். சூஎ.] தூக்கார் - எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்றெச்சம்; [நன். வினை. கூஉ.] தூக்கின் - எதிர்காலவினையெச்சம். நிலத்தினும் பெரிய தாதலால், இங்கே கடலை எடுத்துக்கூறினர்.

கஅசை. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(இ - ள்.) தினை துணை நன்றி செயின்உம்-(தமக்குத்) தினையளவிற்றாய உபகாரத்தை (ஒருவன்) செய்தானாயினும், பனை துணை ஆ கொள்வர்-(அதனை அவ்வளவிற்றாகக்கருதாது) பனையளவிற்றாகக் கருதுவர், பயன் தெரிவார்-(அக்கருத்தின்) பயன் தெரிவார்; (எ - று.)

தினை, பனை என்பன - சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை. அக்கருத்தின் பயனாவது - அங்ஙனங்கருதுவார்க்கு வரும் பயன்.

(கு - ரை.) தினை - ஒருவகைச்சிறுதானியம். தினையளவிற்று-தினையவ்வளவு சிறியது. கருதாது - நினையாமல். அக்கருத்தின்பய னென்றது - அவ்வாறு நினைப்பதனு லுண்டாகும் புகழ்புண்ணியங்களை. தினை - சிறுமைக்கும், பனை - பெருமைக்கும் எடுத்துக்காட்டப்படும் அளவென்று முறைகிரணி றைப்பொருள்கோளாகக் கொள்க. அளவை - இங்கே, உபமான அளவை. ஆ - ஆகவென்பதன் தொகுத்தல். பனையை எடுத்துக்கூறியது, தினையினது எதுகைக்கு ஏற்றிருத்தலை நோக்கிப்போலும். "தினையனைத்தேயாயினுஞ் செய்தநன் றுண்டாற், பனையனைத்தா வள்ளுவர் சான்றோர் - பனையனைத், தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னுட, நன்றில நன்றறியார் மாட்டு" என்னும் நாலடியார்ச்செய்யுளோடு இதனை ஒப்பிடுக. பனை - பனைமரத்தின் உயர்ச்சி. "நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்கு, என்று முறுதியே சூழ்க வெறிதிரை, சென்றுலாஞ் சேர்ப்ப வதுபோல நீர்போயும், ஒன்றிரண் டாம் வாணிக மில்" என்னும் பழமொழிப்பாட்டையும் பார்க்க. (சு)

கஅநி. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(இ - ள்.) உதவி - (கைம்மாறாக) உதவி, உதவி வரைத்து அன்று - (காரணத்தானும் பொருளானும் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன் செய்த) உதவியளவிற்றன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து-அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதியளவிற்று; (எ - று.)

'சால்புஎவ்வளவுபெரிதாயிற்று, உதவியும் அவ்வளவு பெரிதாம்' என்பார், 'சால்பின் வரைத்து' என்றார்.

இவையிரண்டுபோட்டானும், மூன்றுமல்லாத உதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறரொருவரால் உதவிசெய்யப்பட்டவர் அவ்வுதவிசெய்தவர்க்குத் தமது மேன்மைக்கு ஏற்றபடி பிரதியுபகாரத்தைச் செய்யவேண்டுமேயன்றி அவ்வுதவியினது காரணம் பொருள் காலம் என்பவற்றிற்கு ஏற்றபடி கைம்மாறு செய்யலாகா தென்பது, கருத்து. மாற்றுதவிக்கு அளவில்லையென்றவாறு. சால்பு, அமைதி, மேன்மை, தகுதி என்பன - ஒருபொருட் சொற்களென அறிக. 'உதவிவரைத்தன்று' என்றதனால், எழுவாயாகிய மற்றொரு 'உதவி' என்னுஞ் சொல் பிரதியுதவியாயிற்று. மூன்றுமல்லாத - காரணமில்லாமற் செய்ததும் தக்ககாலத்திற்செய்ததும் பயனெதிர்பாராமற் செய்தது மல்லாத. செய்தவழி - செய்தவிடத்து. வரைத்து - பெயரடியாகப் பிறந்த அஃறிணை யொன்றன்பாற் குறிப்புப்பெயர். சால்பு - பண்புப்பெயர்; இன் - சாரியை. உதவி என வந்த சொல்லும் பொருளும் அடுத்தடுத்து வந்ததனால், சொற்பொருட்பின்வருநிலையணி. (கூ)

கஅசு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(இ - ள்.) துன்பத்துள் - துன்பக்காலத்து, துப்பு ஆயார் - (தனக்குப்) பற்றுக்கோடாயினோரது, நட்பு - நட்பை, துறவற்க - விடாதொழிக; மாசு அற்றார் - (அறிவு ஒழுக்கங்களில்) குற்றமற்றோரது, கேண்மை - கேண்மையை, மறவற்க - மறவாதொழிக; (எ - று.)

கேண்மை - கேளாந்தன்மை. இம்மைக்கு உறுதிகூறுவார், மறுமைக்கு உறுதியும் உடன் கூறினர்.

(கு - ரை.) துன்பக்காலம் - துன்பம் வந்த காலம். பற்றுக்கோடாயினர் - ஆதாரமானவர்கள்; தளர்ச்சிவந்த சமயத்தில் ஊன்றுகோல்போல உதவியவர்கள் என்றபடி. நட்பு - சினேகம்; பண்புப்பெயர்: நள் - பகுதி, பு - விகுதி. கேளாந்தன்மை - சினேகிதனுந்தன்மை. இம்மை - இப்பிறப்பு. மறுமை-மரணத்தின்பின்வருநிலை. ஞான அனுட்டானங்களையுடையவர்களது நட்பு மறுமைக்கு நன்மைதருவதுபோல ஆபத்காலத்திலுதவுபவர்களதுநட்பு இம்மைக்கு நன்மைதருவதென்பது, இத்திருக்குறளின் கருத்து. இங்கு 'மறவற்க மாசற்றார் கேண்மை' என்றதற்கு ஏற்ப, மேல் நட்பாராய்தலென்னும் அதிகாரத்தில் ''மருவுக மாசற்றார் கேண்மை''எனக் கூறுதல் காண்க. மாசற்றார் கேண்மை மறுமைக்கு உறுதிதருவதாதலை ''இம்மையடக்கத்தைச்செய்து புகழாக்கி, உம்மை யுயர்கதிக் குய்த்தலான்—மெய்ம்மையே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே, நட்டார் ரெனப்படு வார்'' என்ற அறநெறிச்சாரத்தாலும் அறிக. மறவற்க, துறவற்க - எதிர்மறைவியங்கோள். அற்றார் என்னும் வினையாலணையும்பெயரில், அறுஎன்னும் குறிலிணைப்பகுதி ஒற்று

இரட்டி இறந்தகாலங் காட்டிற்று. ஒருவர்க்கொருவர் கூமசமாசாரங்களைக் கேட்பதனால், கேண்மையென்று நட்புக்குப் பெயர். துப்பு என்பதற்கு-துணையென்றாயினும், வலியென்றாயினும் பொருள்; "அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும், நுணையும் வலியும் பொலிவும் நெய்யும், அனுபவமும் தூய்மையும் துப்பென லாகும்" என்பது நிகண்டாதலின். துன்பத்துள், உள்-ஏழனுருபு.

கoஎ. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(இ - ள்.) தங்கண் விழுமம் துடைத்தவர் - தங்கண் (எய்திய) துன்பத்தை நீக்கினவருடைய, நட்பு - நட்பினை, எழுமை எழு பிறப்புமும் - எழுமையினையுடைய (தம்) எழுவகைப்பிறப்பினும், உள்ளுவர் - நினைப்பர், (நல்லோர்); (எ - று.)

'எழுமை' என்றது, வினைப்பயன்தொடரும் எழுபிறப்பினை; அது வாளாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு, மேலேஉரைத்தாம். விரைவு தோன்ற, 'துடைத்தவர்' என்றார். நினைத்தலாவது - துன்பந்துடைத்தலான் அவர்மாட்டுளதாகியஅன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்துஅன்புடையராதல்.

இவையிரண்டுபாட்டானும், நன்றிசெய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) தங்கண் எய்திய - தம்மிடத்து நேர்ந்த. எழுமை - ஏழின்தன்மை. ஒருயிர் ஒருபிறப்பிற்செய்த புண்ணியபாவங்களாகிய வினைகள் பின்பு ஏழுபிறப்புவரையில் அவ்வுயிரை விடாமல் தொடர்ந்து தத்தம்பயனை அனுபவிப்பிக்கு மென்கிற கொள்கை, வாளாபதியென்னுங்காப்பியத்துள் விவரித்துக்கூறப்பட்டிருக்கிற தென்றவாறு. வாளாபதி-பஞ்சகாவியங்களிலொன்று; மற்றவை - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி. மேலே உரைத்தாம் - முன் புதல்வரைப்பெறுதலென்னும் ஏழாமதிகாரத்தில் "எழுபிறப்புந் தீயவை தீண்டா" என்னும் இரண்டாவதுதிருக்குறளின் உரையிற் கூறினேம். துடைப்பவர் என எதிர்காலமாகவாயினும் துடைக்கின்றவர் என நிகழ்காலமாகவாயினுங் கூறுமல், 'துடைத்தவர்'என இறந்தகாலத்தாற்கூறியது - விரைவுபற்றியதென்க; "வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி, இறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல், விரைந்தபொருள வென்மனார் புலவர்"என்பது தொல்காப்பியம். துன்பந்துடைத்தலான் அவர் மாட்டுஉளதாகிய அன்பு - தமது துன்பத்தை நீக்கினதுகாரணமாக அந்நீக்கினவரிடம் உண்டான அன்பு. தங்கண், தம் - தாம் என்பதன் விகாரம்; கண் - ஏழனுருபு. "விழுமஞ் சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தால், விழுமமென்பது - துன்பமென்னும் பொருளையுமுணர்த்துவதோர் உரிச்சொல்லாம். இனி, தம் கண் விழும் அம் துடைத்தவர் எனப் பதம்பிரித்து - (துன்பத்தால்) தமது கண்களினின்று பெருகுகின்ற நீரை (அத்துன்பம்நீக்குதலாற்) போக்கினவ ரென்று உரைகூறுதலும் அமையும். உள்ளுவர், உ -

சாரியை. கஉசு-ஆம் திருக்குறளை இங்கே நோக்குக. "ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற்கு, எழுமையு மேமாப் புடைத்து" என்ற குறளையுங் காண்க.

கo அ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(இ - ள்.) நன்றி மறப்பது - ஒருவன் (முன்செய்த) நன்மையை மறப்பது, நன்று அன்று - (ஒருவற்கு) அறனன்று; நன்று அல்லது அன்றுஎ மறப்பது - (அவன்செய்த) தீமையைச் செய்தபொழுதே மறப்பது, நன்று - அறன்; (எ - று.)

இரண்டும் ஒருவனுற் செய்யப்பட்டவழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

(கு - ரை.) அறனன்று - தருமமன்று. இரண்டும் - உபகாரமும், அபகாரமும். மறப்பதும் - மறக்கப்படுவதும். மறவாததும் - மறக்கப்படாததும். வகுத்து - பிரித்துஎடுத்து. மறப்பது - எதிர்காலத்தொழிற்பெயர். நன்று என்னுஞ்சொல் மூன்றனுள், முதலன இரண்டும் - நல்ல தன்மையை யுடையதாகிய தரும மென்னும் பொருளைத் தந்ததனால், பண்படியாப்பிறக்க குறிப்புவினையாலணையும் பெயர்; பண்பாகுபெயரெனவுமாம். மூன்றுவது-முற்று. அன்று என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது - எதிர்மறைக் குறிப்புமுற்று; பின்னது - சுட்டடியாப்பிறக்து ஏழாம்வேற்றுமையிடப் பொருளுணரநின்ற இடைச்சொல். ஏகாரம் - தேற்றமும் விரைவுங் குறித்தது. அல்லது-எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர்; அ-சாரியை. நன்மை யல்ல தெனவே, தீமை யாயிற்று. (அ)

கo கூ. கொன்றன்ன வின்ன செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(இ - ள்.) கொன்று அன்ன இன்ன செயின்உம் - (தமக்கு முன் ஒரு நன்மைசெய்தவர் பின்) கொன்றாலொத்த இன்னதவற்றைச் செய்தாராயினும், (அவையெல்லாம்), அவர் செய்த நன்று ஒன்றுஉம் உள்ள கெடும்-அவர் செய்த நன்மையொன்றனையும் நினைக்க இல்லையாம்; (எ - று.)

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்கு மென்பதாம்.

இதனுன், நன்றல்லது அன்றே மறக்குந் திறம் கூறப்பட்டது.

(கு - ரை.) இன்னதவற்றை - இனிமையல்லாத பலவற்றை; வெறுக்கத்தக்க பல துன்பங்களை. ஒருவர்செய்த உபகாரம் தினையளவுசிறியதாயினும் பனையளவுபெரியதாகப் பயன்தெரிபவராற் கொள்ளப்படுதலால், ஒருவர் தமக்கு ஒருகாலத்திற் செய்த உபகாரமொன்றுதானே பின் அவர் தமக்குச் செய்த அபகாரங்களையெல்லாம் மறக்கச்செய்யும் என்பது, கருத்து.- "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன்தெரிவார்" என்பதை இங்கேயறிக. நன்றல்லது அன்றே மறக்குந் திறம் -

அபகாரத்தை அப்பொழுதே மறந்துவிடுவதற்கு உபாயம்; அதாவது - அவர்செய்த உதவியை நினைக்கவேண்டுமென்பது. "ஒருநன்றிசெய்தவர்க் கொன்றி யெழுந்த, பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் - கயவர்க்கு, எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின், எழுநூறுந் தீதாய்விடும்" என்ற நாலடியாரைக் காண்க. கொன்று - கொன்றல் என்னும் எதிர்காலவினை யெச்சத்தின் திரிபு; [நன். வினை. உஎ.] இனி, கொன்றன்ன என்பதை - கொன்றதன்ன எனத் தொழிற்பெயர் விகாரமாகவுங் கொள்ளலாம். "சாதலி னின்னுத தில்லை" ஆதலால், 'கொன்றன்னவின்னு செயினும்' எனப்பட்டது. அன்ன - அன்னென்னும் உவமவுருபிடைச்சொல் லடியாப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். இன்னு - இன்னுமையென்னும் எதிர்மறைப்பண்படியாப்பிறந்த பலவின்பால்வினையாலணையும்பெயர். உம்-இழிவுசிறப்பு. ஒன்றும் என இருந்த உம்மையின்மகரவொற்று "மவ்வீறொற்றழிந்து" என்பதனாற் கெட்டது: இனி, ஒன்று நன்று - வினைத்தொகையாக, பெருந்தியஉபகாரமென உரைத்தலும் ஒன்று. உள்ள - செயவெனெச்சம்; காரணப்பொருளாதலால், இறந்தகாலம். (கூ)

கஉ0. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ - ள்.) எ நன்றி கொன்றார்க்குஉம் - பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும், உய்வு உண்டு ஆம் - பாவத்தின் நீங்கும் வாயில் உண்டாம்; செய்நன்றி கொன்ற மகற்கு - (ஒருவன்) செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு, உய்வு இல்லை - அஃது இல்லை; (எ - று.)

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது - ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவுசிதைத்தலும், பார்ப்பார்த்தப்புதலும் முதலிய பாதகங்களைச்செய்தல்.

இதனால், செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது.

(கு - ரை.) எந்நன்றி என்பதில், எகரவினா - சிறப்பை உணர்த்திற்று; எஞ்சாமையுணர்த்தினதாக்கி, எல்லாத்தருமங்களையும் என்றும் உரைகூறலாம். நன்றி - உபகாரத்துக்குப் பண்பாகுபெயர். சிதைத்தல் - அழித்தல். உம்மை - இழிவுசிறப்பு. வாயில் - வழி, உபாயம். பாவத்தின் நீங்கும் வாயில்-பிராயச்சித்தம். மகன் - மனிதன். அஃது - தீவினையொழிவு. ஆன் முலையறுத்தல் - பசுவின் முலையை அறுத்தல். மகளிர்கருவு சிதைத்தல் - பெண்களது கருப்பத்தை விச்சேதப்படுத்தல். பார்ப்பார்த் தப்புதல் - பிராமணர்க்குப் பிழைசெய்தல். இவை - முறையே கோஹத்தி, சிசுஹத்தி, பிரமஹத்தி என்பனவாம். முதலிய பாதகங்கள் என்றது - பெண்கொலை முதலியவற்றை. "ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும், மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும், பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென, நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன், செய்திகொன் றோர்க்குய்தி யில்லென, அறம்பா டிற்றே ஆயிழை கணவ" என்னும் புறநானூற்று(34)ச் செய்யுளின் பொருளை இங்கே நோக்குக. 'நோவதை முத

லாயின வாக்காற் சொல்லவும் படாமையின், ஆன்மூலையறுத்த வெனவும், மகளிர்கருச்சிதைத்தவெனவும், பார்ப்பார்த்தப்பியவெனவும் மறைத்துக் கூறப்பட்டன' என்பது, புறநானூற்றின் உரை. உய்வு - பிராயச்சித்தத்துக் குத் தொழிலாகுபெயர். உண்டு, இல்லை - இருதிணையைம்பான் மூவிடத்துக் கும் பொதுவான குறிப்பு முற்றுக்கள்; [நன். வினை. உ0.] ஆம்-அசை. (கo)

கஉ - ஆம் அதிகாரம்—நடுவுநிலைமை.

அஃதாவது-பகை நொதுமல் நண்புஎன்னும் மூன்றுபகுதியினும் அறத் தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை. இது, நன்றிசெய்தார்மாட்டு அந்நன்றி யினை நினைத்தவழிச் சிதையுமன்றே? அவ்விடத்துஞ் சிதையலாகா தென் றற்கு, செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) நடுவுநிலைமை - வடமொழியில் 'மத்யஸ்த்ததா' எனப்படும்; அதாவது - பகைவர், அயலார், சினேகிதர் என்ற இம்மூவகையோரிடத்தும் தருமத்தில் தவறுமல் சமமாகநிற்குந்தன்மை: பக்ஷபாதமில்லாமையென்றபடி. நடுவு, உ - சாரியை. நிலைமை - பண்புப்பெயர். இது - நடுவுநிலைமை. நன்றியைச் செய்தவரிடத்து அன்புபாராட்டவேண்டுவது கடமையாயினும், அவரிடத்தும் பக்ஷபாதமாக ஒழுகுதல்கூடாது என்பதைவிளக்கும்பொருட்டு, நடுவுநிலைமை யென்னும் அதிகாரம் செய்ந்நன்றியறிதலென்னும் அதிகாரத் தின்பின் வைக்கப்பட்ட தென்க. நொதுமல் - விருப்பு வெறுப்பு இன்மை, உதாசீநதை. இங்கு, பகை நொதுமல் நண்பு என்ற மூன்றும் - ஆகுபெயராய், பகைவர்முதலியோரைக் காட்டும். மூன்றுபகுதி - மூன்றுவகுப்பானவர்.

கஙக. தகுதியென வொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(இ - ள்.) தகுதி என ஒன்றுஉம்ஏ - நடுவுநிலைமை யென்று சொல்லப் படும் ஓ ரறமுமே, நன்று—: பகுதியான் - (பகை நொதுமல் நண்பு என்னும்) பகுதிதோறும், பால் பட்டு ஒழுக பெறின் - தன் முறைமையை விடாது ஒழு கப்பெறின்; (எ - று.)

தகுதியுடையதனை 'தகுதி' என்றார். 'ஊராளுநர் தேவகுலம்' என்பது போல, 'பகுதியான்' என்புழி ஆறுருபு - தோறுமென்பதன் பொருட்டாய் நின்றது. 'பெறின்' என்பது, அவ்வொழுக்கத்து அருமை தோன்றநின்றது.

இதனுன், நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒழுகப்பெறின் - நடக்கப் பெற்றால். தகுந்த தன்மையை யுடைய நடுவுநிலைமையைத் தகுதியென்றது, பண்பாகுபெயர். ஊராளுநர் தேவகுலம் என்பதற்கு-ஊர்தோறும் ஒருதேவாலய மென்று பொருள். என் புழி - என்னுமிடத்து. ஆறுருபு - மூன்றுமுருபு. பொருட்டு - பொருளது. 'நன்றே' என்னும் பிரிநிலையேகாரம், பிரித்து 'ஒன்றும்' என்பதனோடு கூட்டப்பட்டது. ஒன்றும்நன்று என்றவிடத்து, "மவ்வீறொற்றழிந்துயிரீ றொப்பவும்" என்பதனால், மகரவொற்றுக் கெட்டது. 'ஒன்று' - ஓரறத்தை

உணர்த்தியதனால், எண்ணலளவாகுபெயர்; இது போல்வன்வற்றை எண்ணுக்கும் எண்ணுடைப்பொருளுக்கும் பொது வென்பாரு முளர். உம் - இழிவுசிறப்பு. பாற்பட்டு - முறைமைப்பட்டு. (க)

ககஉ. செப்ப முடையவ னக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(இ - ள்.) செப்பம் உடையவன் - நடுவுநிலைமையுடையவனது, ஆக்கம்-செல்வம்,—சிதைவு இன்றி - (பிறர்செல்வம்போல்) அழிவின்றி, எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து-(அவன்)வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து.

விகாரத்தால்தொக்க எச்சவும்மையான், இறக்குந்துணையும் அவன்தனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றும். அறத்தோடு வருதலின், அன்னதாயிற்று. தான் இறந்துழி எஞ்சிநிற்பதாகலின், 'எச்சம்' என்றார்.

(கு - ரை.) வழியினுள்ளார் - சந்ததியார். இறந்தது தழுவிய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது, 'எச்சத்திற்கு'என்ற விடத்தில். இறக்குந்துணையும் அவன்தனக்கும் ஏமாப்புடைத்து-சாகிறவரையிலும் அந்நடுவுநிலைமையையுடையவனுக்கும் வலியாதலையுடையது. நடுவுநிலைமையையுடையவனது செல்வம் அவனுக்கும் அவன்சந்ததியார்க்கும் இன்பந்தருவதாதற்குக்காரணம் தருமத்தோடுபொருந்திவருதலென்றபடி. அன்னதாயிற்று - தனக்கும் சந்ததிக்கும் ஏமாப்புடையதாயிற்று. தகப்பன் இறந்ததன்பின் மிகுந்து நிற்பதாதலால், எச்சம் என்று சந்ததிக்குப் பெயர்; எஞ்சு-பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி, மெல்லெழுத்துவல்லெழுத்தானது - விகாரம். நடுவுநிலைமையையுடையவனது செல்வம் எப்பொழுதும் அழியாதென்பது, இத்திருக்குறளின் கருத்து. செப்பம் - 'பம்' விகுதிபெற்றபண்புப்பெயர். உடையவன் - குறிப்பு வினையாலணையும்பெயர். ஆக்கம் - சம்பாதிக்கப்பட்டதெனக் காரணப்பெயர்; ஆக்கு - பிறவினைப்பகுதி, அம் - செயப்படு பொருள்விகுதி. சிதைவு-தொழிற்பெயர். ஏமாப்பு - தொழிற்பெயர்; ஏமா-பகுதி: இது - அலமா, இறுமா, சோகா என்பனபோல, ஒருசொல். (உ)

ககஙூ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

(இ - ள்.) நன்று ஏ தரின்உம் - (தீங்கன்றி) நன்மையே பயந்ததாயினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை-நடுவுநிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை, அன்றுஏ ஒழிய விடல் - அப்பொழுதே ஒழியவிடுக; (எ - று.)

நன்மைபயவாமையின், 'நன்றேதரினும்' என்றார். இகத்தலான் என்பது, 'இகந்து' எனத் திரிந்துநின்றது.

இவையிரண்டுபாட்டானும், முறையே, நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மைபயத்தலும், ஏனைச்செல்வம் தீமைபயத்தலும் கூறப்பட்டன.

(கு - ரை.) தீங்கன்றி - தீமையைத்தராமல் என்றபடி. பயந்தது-தந்தது. ஒழிய - நீங்கும்படி. 'நன்றேதரினும்' என்ற உம்மை - நன்மையைத்

தாராமையைத் தெரிவித்ததனால், எதிர்மறைப்பொருளாம்; உயர்வுசிறப்பு மாம். விடுக - விடக்கடவன். காரணப்பொருளதாகிய இகக்களன்னும் செய வெனெச்சம், இகந்து என இறந்தகாலவினையெச்சமாகத் திரிந்தது; தன் கருத்தாவின் வினையைக்கொண்டுமுடிதற்குஏற்ற 'இகந்து' என்னுஞ்செய்தெ னெச்சம் 'ஆம்' என்னும் வேறுகருத்தாவின்வினையைக் கொண்டுமுடிந்ததனால், அதனை வேறுகருத்தாவின்வினையையுங்கொண்டு முடிதற்குஏற்ற செய வெனெச்சத்தின் திரிபாகக்கொள்ளவேண்டியதாயிற்று; [நன். வினை. உரு, உஎ.] நடுவுநிலைமையை விட்டதனால் வருஞ் செல்வமானது நன்மைதருவதே யில்லை: அப்பொழுது நன்மைதருவதுபோலத் தோன்றினும் பின்பு அனுபவ த்தில் தீமையையே தரும்: ஆதலால், அதனை விரும்பலாகா தென்பது, இதன் கருத்து. ஏனைச்செல்வம் - நடுவுநிலைமையொழிதலால்வந்தசெல்வம். நன்றே: ஏகாரம் - பிரிநிலை. ஆம் - ஆகுமென்னுஞ் செய்யுமெ னெச்சத்து ஈற்று உயிர்மெய் சென்றது: [நன். வினை. உஉ.] ஒழியவென்னுஞ் செயவெனெச் சம் - காரியப்பொருள தாதலால், எதிர்காலம். விடல் - 'அல்' விகுதிபெற்று வந்த உடன்பாட்டுவியங்கோள். (கூ)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

(இ - ள்.) தக்கார் - (இவர்) நடுவுநிலைமையுடையவர், தகவு இலர் - (இவர்) நடுவுநிலைமையிலர், என்பது-என்னும் விசேடம்,—அவர் அவர் எச்சத் தால் - அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும், கா ணப்படும் - அறியப்படும்; (எ - று.)

தக்கார்க்கு எச்சமுண்டாதலும், தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலை யாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின.

இதனுன், தக்காரையும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) விசேடம் - வேறுபாடு. ஒருதலை - நிச்சயம். அவை - நன்மக் கள் உண்டாதலும், இல்லையாதலும். குறி - அடையாளங்கள். அறியுமாறு - அறியும்விதம். நடுவுநிலைமையுடையவர்க்கு நல்லசந்ததியுண்டாகும்; நடுவுநிலை மையில்லாதார்க்குச் சந்ததியே உண்டாகாது: ஒருகால்உண்டாயினும் நற் குணஞ்செய்கையுடையதாயிராது என்பது, இதன்கருத்து. தக்கார் - பகுதி ஒற்றிரட்டியது; இறந்தகாலத்தின்குறி. "மகனுரைக்குந் தந்தை நலத்தை," "பழியின்மை மக்களாற் காண்க" என்னும் நான்மணிக்கடிகையையும், "நன் றிப் பயன்தூக்கா ஞாலியும் சான்றோர்முன், மன்றிற் கொடும்பா டுரைப்பா னும் - நன்றின்றி, வைத்த தடைக்கலங் கொள்வானு மிம்மூவர், எச்ச மிழ ந்து வாழ்வார்" என்ற திரிகடுகத்தையும், "மகனறிவு தந்தையறிவு" என்ற பழமொழியையும் நோக்குக. எச்சம் என்பதற்கு - புகழ் என்று பொருள்கூறி னுரு முளர். (ச)

ககநி. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(இ-ன்.) கேடுஉம்-(தீவினையாற்) கேடும், பெருக்கம்உம்-(நல்வினையாற்) பெருக்கமும், இல் அல்ல - (யாவர்க்கும்) முன்னே அமைந்துகிடந்தன: நெஞ்சத்து கோடாமை - (அவ்வாற்றை அறிந்து அவைகாரணமாக)மனத்தின்கட் கோடாமையே,சான்றோர்க்கு (அறிவான்) அமைந்தார்க்கு, அணி-அழகாவது.

அவைகாரணமாகக் கோடுதலாவது - அவை இப்பொழுதுவருவனவாகக்கருதிக் கேடுவாராமையைச்குறித்தும் பெருக்கம்வருதலைக்குறித்தும் ஒருதலைக்கண் நிற்றல். 'அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று' என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை அழகுசெய்தலின், 'சான்றோர்க்கணி' என்றார்.

(கு - ரை.) கேடு-கெடுதல்; மூதனிலைதிரிந்த தொழிற்பெயர்: தொழிற்பெயர்விகுதி புணர்ந்து கெட்டது. உம்மைகள்-எண்ணுப்பொருளன. தீவினை நல்வினைகள் - முற்பிறப்புக்களிற் செய்துவைத்த பாவமும் புண்ணியமும். பெருக்கம் - பெருகுதல், தொழிற்பெயர்: பெருகு - பகுதி, அம் - விகுதி, பகுதி ஒற்றிரட்டினது - விகாரம். இல் - இல்லை யென்பதன் விகாரம். அல்ல - பலவின்பாற்குறிப்புமுற்று. இல்லல்ல - இரண்டு எதிர்மறை சேர்ந்து உடன்பாடாயிற்று; உண்டாயுள்ளன என்று பொருள். அவ்வாற்றையறிந்து அவைகாரணமாக மனத்தின்கட் கோடாமை - கேடும்பெருக்கமும் முன்னே வினைப்பயனென்கிற அவ்விதத்தை அறிந்து கேட்டைவிலக்கும்பொருட்டும் பெருக்கத்தையடையும்பொருட்டும் மனத்திற் பக்ஷபாதஞ்செய்யாமை. கோடாமை - கோணுமை; எதிர்மறைத்தொழிற்பெயர். அமைந்தார் - நிறைந்தவர். சான்றோர் என்னும் வினையாலணையும்பெயரில், சால்என்னும் உரிச்சொல் - பகுதி. அழகுசெய்வதை அழகென்றது, காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. ஒருதலைக்கண் நிற்றல் - ஒருபக்கத்தில் அன்பு கொண்டு நிற்பது. கோடுதலன்று என உண்மையுணர்ந்து - கெடுதிவாராதிருப்பதற்கும் நன்மைவருதற்கும் நடுவுநிலைமைதவறுதல் காரணமன்றென்று உண்மையறிந்து. சால்பினை - அறிவினதுநிறைவை. 'கேடும் பெருக்கமும் இல்லல்ல' என்பதன் உண்மையை ''பல்லாவு ளூய்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்னதகைத்தே தற்செய்த, கிழவனே நாடிக் கொளற்கு'' என்னும் நாலடியார்ச்செய்யுளால் அறிக. மனம் மொழி மெய் என்னுந் திரிகரணங்களுட் சிறந்ததாகிய மனத்தினது கோணுதல் மற்றைமொழிமெய்கள் கோணுதற்குக் காரண மாதலால், 'நெஞ்சத்துக் கோடாமை' என்றார். (டு)

ககசு. கெடுவலியா னென்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின்.

(இ - ள்.) (ஒருவன்), தன் நெஞ்சம்—, நடுவு ஒரீஇ-நடுவுநிற்றலை ஒழிந்து, அல்ல செயின் - நடுவல்லவற்றைச் செய்யநினைக்குமாயின், (அந்நினைவை), யான் கெடுவல் என்பது அறிக - யான் கெடக்கடவே னென்று உணரும் உற்பாதமாக அறிக; (எ - று.)

நினைத்தலும் செய்தலோடு ஒக்கு மாகலின், 'செயின்' என்றார்.

(கு - ரை.) நெஞ்சம் - மனம். 'நெஞ்சம்' என்றதற்கு ஏற்ப, 'செயின்' என்பதற்கு - 'செய்யநினைக்குமாயின்' என்று உரைக்கப்பட்டதென்க. உற்பாதம் - பின்நிகழக்கடவதாகிய தீமையை முன்னர்த் தெரிவிக்குந் தூர்நிமித்தம். கெடுவல் - தன்மையொருமை எதிர்காலமுற்று; அல் - தன்மையொருமை விகுதி, வ் - இடைநிலை. கெடுவல் + யான் = கெடுவலியான்; தன்னெழி மெய்ம்முன் யகரம்வர இகரந்தோன்றிற்று: [ந்ன். மெய். ஈ.] ஒருவியென்னும் இறந்தகாலவினையெச்சம், 'ஒரீஇ' என விகாரப்பட்டு அளபெடுத்தது. மனத்திற்பகூபாதங்கொள்ளுதல் விரைவிற்கெடுதியடைதற்குக் காரணமாம் என்பது, இதன் கருத்து. என்பது - எதிர்காலவினையாலணையும்பெயர். தன்-தான் என்பதன் விகாரம். (சு)

கஙஎ. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் ஞெழ்வு.

(இ - ள்.) நடு ஆக - நடுவாகநின்று, நன்றிக்கண் - அறத்தின்கண்ணே, தங்கியான் - தங்கினவனது, தாழ்வு - வறுமையை, கெடு ஆக வையாது - வறுமையென்று கருதார், உலகம் - உயர்ந்தோர்; (எ - று.)

'கெடு' என்பது - முதனிலைத்தொழிற்பெயர். 'செல்வமென்று கொள்ளுவர்' என்பது, குறிப்பெச்சம்.

இவைமூன்றுபாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா வென்பதூஉம், கோடுதல் கேட்டிற்கு ஏதுவா மென்பதூஉம், கோடாதவன்தாழ்வு * கேடன் றென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) தங்கினவன்-நிலைபெற்றவன். வறுமை - ஏழைமை. முதனிலைத்தொழிற்பெயராவது - விகுதிபுணர்ந்து கெட்டுப் பகுதிமாத்திரமாய்த் தொழிலையுணர்த்துஞ்சொல்; முதனிலை - பகுதி, பகுபதங்களின் முதலில் நிற்பது. கெடு - கெடுதல்: இது - இலக்கணையால், வறுமையை உணர்த்திற்று. "உலக மென்ப துயர்ந்தோர் மாட்டே" என்பதனை இங்கே உணர்க. உலகம் - இது பொருளால் உயர்திணையாயினும், சொல்லால் அஃறிணையாதலால், வையாதென்னும் அஃறிணைமுற்றைக் கொண்டது. குறிப்பெச்சமாவது - வெளிப்படையாகவன்றி மறைத்துநின்று வேறொருசொல்லின் குறிப்பினால் தோன்றும் பொருள்; 'வறுமையென்று கருதார்' என்றதனால், 'செல்வமென்று கொள்ளுவர்' என்பது குறிப்பிக்கப்பட்டது: குறிப்பெச்சத்தை வடநூலார் அர்த்தாபத்தி யென்பர். நன்றி - அறத்துக்குப் பண்பாகுபெயர். நடுவுநிலைமை தவறுமையால் வறுமைவந்த பொழுதிலும் அது உயர்ந்தோராற் செல்வத்தோடொப்ப நன்குமதிக்கப்படும் என்பது, இதன் கருத்து. (எ)

கஙஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

* செல்வமென்பதூஉம் என்று பிரதிபேதம்.

(இ - ள்.) சமன் செய்து -(முன்னே தான்) சமஞ்செய்து, சீர்தூக்கும்-(பின் தன்கண்வைத்த பாரத்தை) வரையறுக்கும், கோல் போல் - துலாம் போல, அமைத்து - (இலக்கணங்களான்) அமைந்து, ஒரு பால் கோடாமை-ஒருபக்கத்துக் கோடாமை, சான்றோர்க்கு—, அணி - அழகாம்; (எ - று.)

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது-* தொடைவிடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறு உணர்த லாகவும், ஒருபாற்கோடாமையாவது - அவ்வுள்ளவாற்றை மறையாது பகை தொதுமல் நட்பு என்னும் மூன்றுதிறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களான் அமைதல் - இருவழியும், ஏற்பன கொள்க.

(கு - ரை.) வரையறுத்தல் - இவ்வளவென்று அளவிட்டுக்காட்டுதல். துலாம் - தராசுகோல். உபமானமாகிய தராசுகோலினது விசேஷணமாகிய சமன்செய்தலேயும் சீர்தூக்கலேயும் உபமேயத்தினிடத்தும், உபமேயமாகிய சான்றோரின் விசேஷணமாகிய அமைதலேயும் ஒருபாற்கோடாமையையும் உபமானத்தினிடத்தும் கூட்டி, சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைத்து ஒருபாற்கோடாத துலாக்கோல்போல, சமன்செய்து சீர்தூக்கி இலக்கணங்களானமைத்து ஒருபாற்கோடாதவர் சான்றோ ரெனப் பொருள் கொள்க. உவமை யடை - உபமானத்தின் விசேஷணம். பொருள் - உபமேயம். பொருளடை - உபமேயத்தின் விசேஷணம். சீர்தூக்கல் - ஆராய்தல். சான்றோர் ஆராய்தலாவது - ஆக்ஷேபசமாதானங்களால் வாதிப்பிரதிவாதிகளிடங் கேட்ட விஷயங்களே முறைப்படியே உள்ளவிதமாக அறிதல். தொடை - ஆட்சேபம், வினு. ஊழான் - முறைமையால். "தொடைவிடை யூழாத்தொடைவிடைதுன்னி" என்பது, புறப்பொருள்வெண்பாமாலை (வாகை, 19). இலக்கணங்களான் அமைதல் - தராசுக்கும் சான்றோர்க்கும் இருக்கவேண்டிய லக்ஷணங்களோடு பொருந்தியிருத்தல்: அதிவியாப்தி அவியாத்தி அசம்பவம் என்னும் மூக்குற்றங்களினும்நீங்கிய தன்மைகளால் அமைதல் என்றுருமூளர். இருவழியும் - உபமானம் உபமேயம் என்னும் இரண்டிடத்தும்; கோல் சான்றோர் என்னும் இரண்டிடத்தும். ஏற்பன - ஏற்பவற்றை. "துலைகா வன்ன சமநிலை," "துலாக்கோலியல்பே தூக்குங்காலை, மிகினுங் குறையினு நில்லா தாகலும், ஐயத்தீர்த்தலும் நடுவுநிலைமையோ, டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே," "ஐயந் தீரப் பொருளுணர்த்தலு, மெய்ந் நடு நிலையும் மிகும் நிறைகோற்கே" என்பவற்றை இங்கே அறிக. முற்றுவமையணி. சமன் - ஸமம்: வடசொல். 'சமஞ்செய்து' என்றும் பாடம். (அ)

ककक. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

---

* தடை என்று பிரதிபேதம்.

(இ - ள்.) செப்பம் - நடுவுநிலைமையாவது,—சொல் கோட்டம் இல்லது - சொல்லின்கட் கோடுதலில்லாததாம்; (அஃது அன்னதாவது), உள் கோட்டம் இன்மை - மனத்தின்கட் கோட்டமின்மையை, ஒருதலை ஆ பெறின் - திண்ணிதாகப் பெறின்; (எ - று.)

சொல் - ஊழான் அறுத்துச்சொல்லுஞ் சொல்.

* இவையிரண்டு பாட்டானும், காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடு மாயின், அறங்கிடந்தவாறுசொல்லுதல் நடுவுநிலைமையாம்: எனவே,அதனோடு கூடாதாயின், அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்று என்பது † கூறப்பட்டது.

(கு - ரை.) அஃது அன்னதாவது - சொல்லிலேகோணலில்லாமல் நிற்பது நடுவுநிலைமை யாவது. கோட்டமின்மை - கோணுதலில்லாமை. திண்ணிதாக - உறுதியுடையதாக; நிச்சயமாக என்றபடி. ஊழான் அறுத்துச் சொல்லுஞ் சொல் - தருமசாஸ்திரமுறைப்படியே வரையறுத்துச் சொல்லுந் தீர்ப்பு. தருமசாஸ்திரவிதிப்படியே தீர்ப்புச்சொன்னாலும், சொல்பவனது மனத்திற் பக்ஷபாதத்தோடுகூடிய எண்ண மிருக்குமானால்,அது நடுவுநிலைமை யாக அங்கீகரிக்கப்படா தென்பது, கருத்து. கோட்டம்—கோடு - பகுதி, அம் - தொழிற்பெயர்விகுதி. மத்தியஸ்தனுயிருப்பவன் சொல்லுந் தீர்ப்பு, நீதி நூலுக்கு ஒத்ததாகவும் பக்ஷபாதமில்லாததாகவும் இருக்கவேண்டுமென்பதாம்.

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

(இ - ள்.) பிறஉம்-பிறர்பொருளையும், தம போல் - தம்பொருள்போல, பேணி—, செயின் - செய்யின், வாணிகம் செய்வார்க்கு—, வாணிகம் - (நன்றாய) வாணிகமாம்; (எ - று.)

பிறவும் தமபோற் செய்தலாவது - கொள்வது மிகையும் கொடுப்பது குறையு மாகாமல் ஒப்ப நாடிச் செய்தல்.

இப்பாட்டு மூன்றனுள், முன்னைய இரண்டும் - அவையத்தாரை நோக்கின; ஏனையது - வாணிகரை நோக்கிற்று: அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின்.

‡ இதனுல் நடுவுநிலைமை வகை கூறப்பட்டது.

(கு - ரை.) பேணிச்செய்தல் - பாதுகாத்து வர்த்தகஞ் செய்தல். வாணிகம் - வாணிஜ்யம் என்னும் வடமொழியின் திரிபு; வர்த்தக மென்று பொருள். வாணிகம் என்னுஞ் சொல் இரண்டனுள், பின்னது - பெயர்ப்பயனிலையாய் நின்றது. பிற - இடைச்சொல். உம்மை - எச்சம். தம - சுறிப்புவினையாலணையும்பெயர்; தாம்-பகுதி, சுறுகினது-விகாரம், அ-பலவின்பால் விகுதி. கொள்வது மிகை - தாம் கொள்ளுஞ் சரக்குத் தாம் கொடுக்கும்பொருட்கு

* இவையிரண்டுபாட்டானும் என்பது சிலபிரதியிலில்லை. † பெறப்பட்டதுஎன்று பிரதிபேதம். ‡ இத்தவாக்கியம், ஒருபிரதியிலுள்ளது.

மிகுதியாவது. கொடுப்பதுகுறை - தாம் கொடுக்குஞ்சரக்குத் தாம் வாங்கிக் கொள்ளும்பொருட்குக் குறைத்திடுவது: "கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉங்குறைகொடாது" என்பது, பட்டினப்பாலை(உக0). முன்னைய இரண்டும் - "சுமன்செய்து" என்னுங் குறளும், "சொற்கோட்டமில்லது" என்னுங் குறளும். அவையத்தார் - நியாயசபையார். ஏனையது - மற்றது: என்றது, "வாணிகஞ்செய்வார்க்கு" என்ற இக்குறளை. அவ்விரு திறத்தார்க்கும் - அவையத்தார் வாணிகர் என்ற இரண்டுபகுப்பார்க்கும். இவ்வதம்-நடுவுநிலைமை. வாணிகர் - வர்த்தகஞ்செய்யும் வைசியரும், சூத்திரரும்; தொல் காப்பியத்துப் பொருளதிகாரத்தில் "அறுவகைப் பட்ட பார்ப்பனப்பக்கமும்" என்னுஞ் சூத்திரத்தில் "இருமூன்று மரபி னேனோர் பக்கமும்" என்றதன் உரையில், ஆசிரியர்நச்சினார்க்கினியர் இத்திருக்குறளை 'வாணிகச்சிறப்பு இருவர்க்கும் கூறியது' என வரைந்திருத்தல் காண்க. இக்குறளுக்கு - பண்டங்களை மிகக்குறைத்தவிலைக்குவாங்கி மிகஉயர்த்தவிலைக்குவிற்று வியாபாரஞ் செய்வது வர்த்தகலக்ஷணமன் றென்பதும், அயலார்பொருளையும்வாங்கித் தம்பொருளைப்போலக் கருதி வியாபாரத்தால் விருத்திசெய்துதருவது தருமமென்பதும் கருத்தாகக் கொள்ளலுமாம். (க0)

கஙு - ஆம் அதிகாரம்.—அடக்கமுடைமை.

அஃதாவது - மெய்ம்மொழிமனங்கள் நீநெறிக்கட் செல்லாது அடங்குத லுடையனுதல். அஃது எதிலார்குற்றம்போல் தங்குற்றமுங்காணும் நடுவுநிலைமையுடையார்க்கு ஆதலின், இது, நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) மெய் மொழி மனங்கள் - மனோ வாக் காயங்கள்; இவை, திரிகரண மெனப்படும். நீநெறிக்கண் செல்லாது - பழியையும் பாவத்தையுந் தருகிற கெட்டவழியிற் செல்லாமல்; எனவே, அடக்கம் - மெய்யடக்கம், மொழியடக்கம், மனவடக்கம் என மூவகையாயிற்று. மெய்யடக்கமாவது - தீயதொழில்களைச் செய்யாமை; மொழியடக்கமாவது - தீயசொற்களைச் சொல்லாமை; மனவடக்கமாவது - தீயஎண்ணங்களை எண்ணுமை. அஃது - அவ்வடக்கமுடைமை: இது, நடுவுநிலைமையையுடையவருக்கே உரியதொரு குணமாதலால், அடக்கமுடைமையென்னும் அதிகாரம் நடுவுநிலைமை யென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்ட தென்க. எதிலார்குற்றம்போல் தம் குற்றமுங்காணும் நடுவுநிலைமையுடையார்-அயலாரிடத்துள்ள குற்றத்தைப் போலவே தம்மிடத்துள்ள குற்றத்தையும் ஒப்பஅறிகின்ற பக்ஷபாதமில்லாத தன்மையுடையவர். அடக்கம் - தொழிற்பெயர். உடைமை - பண்புப்பெயர்.

கஉக. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

(இ - ள்.) (ஒருவனை), அடக்கம்-அடக்கமாகிய அறம், அமரர் உள்உய்க்கும்-(பின்)தேவருலகத்து உய்க்கும்; அடங்காமை அடங்காமையாகிய பாவம், ஆர் இருள் உய்த்துவிடும்-(தங்குதற்கு)அரிய இருளின்கட் செலுத்தும்;(எ-று.)

'இருள்' என்பது - ஓர்நரகவிசேடம். "எல்லாம், பொருளிற் பிறந்து விடும்" என்பதுபோல, 'உய்த்துவிடும்' என்பது - ஒருசொல்லாய்நின்றது.

(கு ரை.) ஒருவனை - தன்னையுடைய ஒருவனை. பின் மறுமையில். உய்க்கும் - செலுத்தும். தங்குதல் - தரித்திருத்தல். ஓர்நரகவிசேடம் என்றது - எப்பொழுதும் மிக்க இருள்நிறைந்துள்ள அந்ததாமிஸ்ரம் என்னும் நரகவகையை. "எல்லாம், பொருளிற்பிறந்துவிடும்" என்னும் மேற்கோள், நான்மணிக்கடிகை - எ - ஆஞ் செய்யுளில் உள்ளது; எல்லாம் பொருளினால் உண்டாகும் என்பது, இதன்பொருள்; 'உய்த்துவிடும்' என்பதை - உய்த்து விடும் என இரண்டுசொல்லாகக்கொள்ளாமல், நின்றுவிடும், ஆகிவிடும் என்பனபோல ஒருசொல்லாகக் கொள்ளவேண்டுமென்க; இதில் விடுஎன்பது துணிவுப்பொருளைக் காட்டிற்று. அமரரென்னும் வடசொல்லுக்கு-(அமிருதத்தையுண்டதனால்) மரணமில்லாதவரென்றுபொருள். இனி, அமர் அருள் எனப் பிரித்து, சிறந்த (கடவுளினது) கருணையிடத்தே செலுத்துமென்றும் பொருள்கொள்ளலாம். ஆரிருள்-அருமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் ஆதிநீண்டு இடைநின்ற உகரமும்கெட்டு, இருள்என்பதனோடு புணர்ந்தது. அடக்கமாகிய புண்ணியத்தையுடையார் அக்நல்வினையின் பயனாற் சுவர்க்கவின்பம் பெறுவர்: அடங்காமையாகிய பாவத்தையுடையார் அத்தீவினையின்பயனால் நரகத்துன்பம் நுகர்வர் என்பது, கருத்து. (க)

கஉஉ. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதணினூங் கில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) உயிர்க்கு - உயிர்கட்கு, அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - அடக்கத்தின் மிக்க செல்வமில்லை; (ஆகலான்), அடக்கத்தை - அவ்வடக்கத்தை, பொருள் ஆ - உறுதிப்பொருளாகக்கொண்டு, காக்க - அழியாமற் காக்க; (எ - று.)

'உயிர்' என்பது - சாதியொருமை: அஃது - ஈண்டு, மக்களுயிர்மேல் நின்றது; அறிந்து அடங்கிப் பயன்கொள்வது அதுவே யாகலின்.

(கு - ரை.) ஈண்டு - இவ்விடத்தில். மக்கள் - மனிதர். அடக்கத்தாலுண்டாகும் நன்மையை அறிந்து அதனால் தான் அடங்கிச் சுவர்க்கமாகிய நல்லபயனைப் பெறுவதற்குரியது மனிதருயிரே யாதலால், இக்குறளில் 'உயிர்' என்பதற்கு - மனிதருயிர்எனப் பொருள் கொள்க. ஒருவனுக்குச் செல்வம்போல அடக்கம் இம்மைமறுமையின்பங்கட்கு ஏதுவாமென்பது, இதன் கருத்து. (உ)

கஉஊ. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(இ - ள்.) அறிவு அறிந்து - (அடங்குதலே நமக்கு) அறிவாவதென்று அறிந்து, ஆற்றின் - நெறியானே, (ஒருவன்), அடங்கப் பெறின்—, செறிவு - அவ்வடக்கம், அறிந்து - (நல்லோரான்) அறியப்பட்டு, சீர்மை பயக்கும்-(அவனுக்கு) விழுப்பத்தைக் கொடுக்கும்; (எ - று.)

அறிதலிரண்டனுள், முன்னது-செயப்பாட்டுவினை. இல்வாழ்வானுக்கு அடங்கும்நெறியாவது - மெய்ம்முதல் மூன்றும் தன்வயத்த வாதல்.

(கு - ரை.) அறிவாவது - அறிவின்பயனுகுவது; உபசாரவழக்கு. நெறியான்-நல்வழியால். 'செறிவறிந்து' என்பதிலுள்ள 'அறிந்து' என்னும் வினையெச்சம் - அகரச்சாரியையும் செயப்படுபொருளுணர்த்தும் படுவிகுதியுமொக்குமின்ற தென்றுயினும், செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினையென்றுயினுங் கொள்ளத்தக்கது. விழுப்பம் - புகழ். மெய்ம்முதல்மூன்றும் தன்வயத்தவாதல் - மெய் மொழி மனம் என்னும் மூன்றுகாரணங்களும் தனக்கு வசப்பட்டிருப்பன வாகுதல். செறிவு - தொழிற்பெயர். சீர்மை - சீரினது தன்மை. அறிவறிந்து என்பதற்கு - தன் அறிவினுல் தான் அறியவேண்டுவனவற்றை அறிந்து என்றும் பொருள்கொள்ளலாம். அடக்கம் புகழுக்குக் காரணமா மென்பது, இதன்கருத்து. பயக்கும், பய - பகுதி. (கூ)

கஉசு. நிலையிற் றிரியா தடங்கியான் நோற்றம்
மலையினு மாணப் பெரிது.

(இ - ள்.) நிலையின் - (இல்வாழ்க்கையாகிய தன்) நெறியின், திரியாது - வேறுபடாது நின்று, அடங்கியான்-அடங்கினவனது, தோற்றம்-உயர்ச்சி,—மலையின்உம் - மலையின் உயர்ச்சியினும், மாண - மிக, பெரிது—; (எ - று.)

திரியாது அடங்குதல் - பொறிகளாற் புலன்களே நுகராதின்றே அடங்குதல். மலை - ஆகுபெயர்.

(கு - ரை.) தன்நெறி - தனக்கு உரியநிலைமை. பொறிகளாற் புலன்களே நுகராதின்றே அடங்குதல் - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து இந்திரியங்களாலும், ஸ்பரிசம் ரசம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் ஐந்து விஷயங்களேயும் அனுபவித்துக்கொண்டே அடங்கியிருத்தல். ஐம்புலன்களே அனுபவிக்கவொட்டாமல் ஐம்பொறிகளே அடக்கித் துறவறத்திலேநின்று திரிகரணங்கள் அடங்குதலினும், இல்லறத்திலேயிருந்து எல்லாவின்பங்களேயும் அனுபவித்துக்கொண்டே அடங்குதல் மிகச்சிறந்த தென்பதாம். இது பற்றியே, திருமாலேயென்னுந் திவ்வியப்பிரபந்தத்தில் "காவலில் புலனே வைத்துக் கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து" என்னும் பாசுரத்துக்கு 'காவலில்லாதபடி இந்திரியங்களே வைத்துப் பாபராசியை வாஸனையோடே போக்கி' என்று வியாக்கியானமருளிச்செய்திருத்தல் காண்க. மலை - அதனது உயர்ச்சியைக் குறித்தலால், பொருளாகுபெயர். நிலையின், ஐந்தனுருபு - எல்லைப் பொருளது. தோற்றம் - தொழிற்பெயர். உம்மை - உயர்வுசிறப்பு. (ச)

கஉநி. எல்லார்க்கு நன்றும் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(இ - ள்.) பணிதல் - (பெருமிதமின்றி) அடங்குதல், எல்லார்க்கும்—, நன்று ஆம் - (ஒப்ப) நன்றே: (எனினும்), அவருள்உம் - அவ்வெல்லாருள்ளும், செல்வர்க்குஎ - செல்வமுடையார்க்கே, செல்வம் தகைத்து - வேறொரு செல்வமாஞ் சிறப்பினை யுடைத்து; (எ - று.)

பெருமிதத்தினைச்செய்யும் கல்வியும் குடிப்பிறப்பும் உடையார் அஃதின்றி அவைதம்மானே அடங்கியவழி அவ்வடக்கம் சிறந்துகாட்டாதாகலின், 'செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்றார். 'செல்வத்தகைத்து' என்பது, மெலிந்துநின்றது. பொதுவென்பாரையும் * உடம்பட்டுநின்றே சிறப்பாதல் கூறியவாறு.

இவையைந்துபாட்டானும், பொதுவகையான், அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(சு - ரை.) பெருமிதம் - செருக்கு, கருவம். ஒப்ப நன்றேயெனினும் - ஒருதன்மையாக நல்லதேயானாலும். வேறொருசெல்வம் - அச்செல்வத்தின் மேம்பட்டதொருசெல்வம். உடைத்து - உடையது. கல்வி, குடிப்பிறப்பு, செல்வம் இவற்றால் ஆகுஞ் செருக்குக்களே வித்யாமதம், குலமதம், தனமதம் என்னும் முக்குறும்பு என்பர். அஃது இன்றி - செருக்கில்லாமல். அவைதம்மானே-கல்வி குடிப்பிறப்புக்களால். செல்வத்தகைத்து-மெலித்தல் விகாரம். பொது என்பாரையும் உடம்பட்டு நின்றே சிறப்பாதல் கூறியவாறு - 'கல்வியுடையோர், குடிப்பிறப்புடையோர், செல்வமுடையோர் என்னும் மூன்று திறத்தார்க்கும் அடக்கமென்பது பொதுவானநற்குணம்' என்பவர்களின் கருத்தையும் ஒப்புக்கொண்டே, செல்வமுடையோர்க்கே அடக்கம் இன்றியமையாச்சிறப்புடையதெனத் தமதுகருத்தை வெளியிட்டபடி. பொருளில்லாத இடத்தில் செருக்கு மிகுதற்குஏது நிரம்பவில்லையாதலால், செருக்கு நிரம்புவதற்கு ஏதுவான பொருளையுடையோரிடத்தே அடக்கம் மேம்பட்டுத் தோன்றுமென்க. இனி, கல்வியும் செல்வமெனப்படுதலால், செல்வர்க்குஎன்பதற்கு - கல்வி பொருள் என்னும் இரண்டுசெல்வமும் முடையோர்க்கு எனப் பொருள் கூறுதலும் அமையும். ''கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார், குறைபிரக்து தம்முன்னர் நிற்பபோல் தாமும், தலைவணங்கித் தாழப் பெறின்,'' ''ஆக்கம் பெரியார் சிறியாரிடைப்பட்ட, மீச்செலவு காணி னணிதாழ்ப்'' என்னும் நீதிநெறி விளக்கச் செய்யுட்களை இங்கே அறிக. செல்வர்க்கே, எ - பிரிநிலை. (கு)

கஉசு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஆமை போல் - ஆமைபோல, (ஒருவன்), ஒருமையுள் - ஒரு பிறப்பின்கண், ஐந்து - ஐம்பொறிகளையும், அடக்கல் ஆற்றின் - அடக்கவல்லனாயின், (அவ்வன்மை அவனுக்கு), எழுமையும் - எழுபிறப்பின் கண்ணும், ஏமாப்பு உடைத்து - அரணுதலை யுடைத்து; (எ - று.)

ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம்புகுதாமல் அடக்கவேண்டுமென்பார், 'ஆமைபோல்' என்றார். ஒருமைக்கட் செய்த வினையின் பயன், †எழுமைக்கண்ணுந்தொடருமென்பது இதனுண் அறிக.

---

* பி - மீ: உடம்பட்டுச்சிறப்பாதல். † பி - மீ: எழுமையும்.

இதனுன், மெய்யடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) அரணதலையுடைத்து - துன்பம்வாராமற் காத்து இன்பந் தருதலையுடையது. ஐந்துஉறுப்பு - கால்கள்நான்கு, தலை ஒன்று ஆக ஐந்து அவயவங்கள். இடர்புகுதாமல் - தனக்குத் துன்பம் நேராமல். ஒருமைக்கண் - ஒருபிறப்பில். எழுமைக்கண்ணும் - பின்பு ஏழுபிறப்புக்களிலும். ஐந்து - எண்ணலளவாகுபெயர். எழுமையும், உம்மை - முற்று. இங்கே "ஆமை தன்னுறுப்போ ரைந்துந் தன்னுளே யடக்கு மாபோற், றீமைசெய் புலன்க ளைந்துந் தன்னுளே செறியச் சேர்த்தின், வாய்மையுண் ணிகழு மென்னே வழுத்தவும் படுகின் றனேற், றூய்மைசெய்தவர்க ளுளருஞ் சொல்லுவதவன்றன் சொல்லே" என்னுஞ் செய்யுளே உணர்க. "யதாஸம்ஹரதேசாயம் கூர்மோங்காநீவ ஸர்வஶः | இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்யஸ் தஸ்யப்ரஜ்ஞாப்ரதிஷ்டிதா" என்ற கீதை காணத்தக்கது. (சு)

கஉஎ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(இ - ள்.) யா காவார் ஆயின் உம் - (தம்மாற் காக்கப்படுவன) எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும், நா காக்க - நாஒன்றனையும் காக்க; காவாக்கால் - (அதனைக்) காவாராயின், சொல் இழுக்கு பட்டு - சொற்குற்றத்தின் கட் பட்டு; சோகாப்பர் - (தாமே) துன்புறுவர்; (எ - று.)

'யா' என்பது - அஃறிணைப்பன்மைவினுப்பெயர்; அஃது, ஈண்டு, எஞ்சாமையுணர்கின்றது. முற்றும்மை, விகாரத்தால் தொக்கது. சொற்குற்றம் - சொல்லின்கண் தோன்றும் குற்றம். 'அல்லாப்பர்,' 'செம்மாப்பர்' என்பனபோல, 'சோகாப்பர்' என்பது - ஒருசொல்.

(கு - ரை.) காக்கப்படுவன எல்லாவற்றையும் என்றது - ஐம்பொறிகளையும், மனத்தையும். முற்றும்மை, 'யா' என்பதன் பின்தொக்கது. நா - நாக்கு. அதனைக் காத்தலாவது - தீயசொற்களைச் சொல்லாதிருத்தல். பட்டு - அகப்பட்டு. எஞ்சாமை - குறையாமை. 'சோகாப்பர்' என்பதில் உள்ள சோகா என்னும் பகுதியை அலமா, செம்மா, இறுமா என்பனபோல ஒரு சொல்லாகக்கொள்ளவேண்டு மென்பது, பரிமேலழகர்மதம்; இனி, சோகம்ஆ அல்லது சோகம்யா என்பதன் விகாரமாகக் கொள்ளுதலும்ஒன்று. காவாக்கால் - எதிர்மறைவினையெச்சம். "ஆக்கப்படுக்கு மருந்தளவாய்ப் பெய்விக்கும், போக்கப்படுக்கும் புலநரகந் தூய்ப்பிக்கும், காக்கப் படுவனவும் இந்திரிய மைந்தினு, நாக்கல்லதில்லை நனிவெல்லுமாறே" என்பது, வளையாபதி. (எ)

கஉஅ. ஒன்ருனுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்ருகா தாகி விடும்.

(இ - ள்.) தீ சொல் பொருள் பயன் - தீயவாகிய சொற்களின்பொருள்களால் (பிறர்க்கு) வரும் துன்பம், ஒன்று ஆன்உம் - ஒன்றாயினும், உண்டு ஆயின் - (ஒருவன் பக்கல்) உண்டாவதாயின்,—(அவனுக்கு), நன்று - (பிற அறங்களான் உண்டான) நன்மை, ஆகாது ஆகிவிடும் - தீதாய்விடும்;(எ - று.)

தீச்சொல்ஆவன - தீங்குபயக்கும் பொய், குறளே, கடுஞ்சொல் என்பன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின் கண்ணே ஒன்றுயினும் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டாவதாயின் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) இக்குறளுக்கு இரண்டு உரை. முதலுரைக்குக் கருத்து- பொய், கோள், கடுஞ்சொல் என்னும் மூன்றுவகைத் தீயசொற்களில் யாதாயினும் ஒன்றை ஒருவன் சொல்லி அதனாற் பிறர்க்கு ஒருதுன்பத்தை விளைவிப்பானுயின், அவன் எவ்வளவுதருமசீலனுயிருந்தாலும், அவனுக்கு அத்தருமங்களினுலுண்டாகிற நன்மையெல்லாம் தீமையாய்முடியுமென்பது; இரண்டாமுரைக்குக் கருத்து - ஒருவன் தான்சொல்லுகிற மெய்யாகியசொல், புறங்கூறுதசொல், இன்சொல் என்னும் இந்நல்ல சொற்களினிடையே பொய், கோள், கடுஞ்சொல் என்கிற தீயசொற்களுள் ஒன்றைக் கலந்து சொல்வானுனாலும், முன்னும்பின்னுஞ் சொல்கிற அந்நல்லசொற்களால் வரும் நன்மை முழுவதும் தீமையா மென்பது. நல்லசொல்லையுந் தீயபயன்தராமற்சொல்க என்றவாறு. குறளே, கோள் என்பன - ஒருபொருட் சொற்கள்; அது-ஒருவன்மேற் புறத்தே பழிமொழிகூறுதல். ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம். ஆகிவிடும் - ஒருசொல். நன்று - பண்புப்பெயர். ஆகாது - எதிர்மறை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர். முன்னே 'நன்று' என வந்ததனுல், பின்னே 'ஆகாது' என்பது தீயதாயிற்று. (அ)

கஉசு. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே
நாவினுற் சுட்ட வடு.

(இ - ள்.) தீயினுல் சுட்ட புண் - (ஒருவனே ஒருவன்) தீயினுற் சுட்ட புண், உள் ஆறும் - (மெய்க்கட் கிடப்பினும்) மனத்தின் கண் (அப்பொழுதே) ஆறும்; (அவ்வாறன்றி), நாவினுல் சுட்ட வடு - (வெவ்வுரையுடைய)நாவினுற் சுட்ட வடு, ஆறாது-(அதன்கண்ணும் எஞ்ஞான்றும்) ஆறாது; (எ-று.)

ஆறிப்போதலால் தீயினுற் சுட்டதனை 'புண்' என்றும், *ஆறாது கிடத்தலான் நாவினுற்சுட்டதனை 'வடு' என்றும் கூறினுர். தீயும் வெவ்வுரையும் சுடுதற் றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையால் தீயினும் வெவ்வுரைகொடிதென்பது போதரலின், இது - குறிப்பான்வந்த வேற்றுமையணியலங்காரம்.

இவைமூன்றுபாட்டானும், மொழியடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்க்கட் கிடப்பினும் - உடம்பிலே காணப்பட்டிருந்தாலும். வெவ்வுரை - கொடுஞ்சொல். புண் - வீரணம். வடு - தழும்பு. அதன் கண்ணும்-மனத்தினிடத்தும். எஞ்ஞான்றும்-எக்காலத்தும். என்பது போதரலின் - என்னும்பொருள் தோன்றுதலினுல். வேற்றுமையலங்காரத்தினது இலக்கணம்-உபமான உபமேயங்களுள் யாதாயினு மொன்றை வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது விசேஷமுடையதாகச் சொல்வது; இதனை வடநூலார் வ்யதிரேகாலங்கார மென்பர்: இங்கே உபமானமாகிய

* ஆறுமையின்என்று பிரதிபேதம்.

தீயினும் உபமேயமாகிய கடுஞ்சொல்லுக்கு எப்பொழுதும் உள்ளாறுமையாகிய விசேடம் சொல்லப்பட்டது காண்க. தீயினும் கடுஞ்சொல் கொடியது என்னும் கருத்தை 'ஆறுதே, நாவினுற்சுட்ட வடு' என்னும் வாக்கியத்தினது குறிப்பினுற் பெறவைத்ததனால், 'குறிப்பான்வந்த வேற்றுமையணியலங்காரம்' எனப்பட்டது. சுட்ட என்பது - சுட்டதனை யாகிய எனப் பொருள்படுதலால், இறந்தகாலப் பெயரெச்சம் காரணப்பொருளது. ஏகாரம் - தேற்றம். "வாயினுற் சுட்ட வடு" எனப் பாடங் கொள்ளுதல், எதுகைத்தொடை மோனைத்தொடைகளுக்கு நன்குபொருந்து மென அறிக. (கூ)

கஙூo. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(இ - ள்.) கதம் காத்து - (மனத்தின்கண்) வெகுளி (தோன்றுமல்) காத்து, கற்று - கல்வியுடையனுய், அடங்கல் - அடக்குதலை, ஆற்றுவான் - வல்லவனது, செவ்வி - செவ்வியை, அறம் - அறக்கடவுள், பார்க்கும்-பாராகிற்கும்; ஆற்றின் - (அவனை அடையும்) நெறியின்கண், நுழைந்து-சென்று.

அடங்குதல் - மனம் புறத்துப்பரவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி-தன் குறைகூறுதற்கு ஏற்ற மனம்மொழிமெய்களினியனுங்காலம். இப்பெற்றியானே அறம் தானே சென்று அடையு மென்பதாம்.

இதனுன், மனவடக்கம் கூறப்பட்டது.

(கு - ரை.) வெகுளி-கோபம். செவ்வி - சமயம். அறக்கடவுள் - தருமதேவதை. பாராகிற்கும் - பார்க்கும். அடையும் நெறி - அடைவதற்கு ஏற்ற வழி. புறத்துப்பரவாது - தருமமல்லாதவழிகளிற் செல்லாமல். இப்பெற்றியானே - இக்குணமுடையவனே; மனவடக்கமுடையவனே. "தினமிறக்கக் கற்றலுஞ் சித்தியெல்லாம் பெற்றலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபராயே" என்பதை நோக்குக. கற்று, கல் - பகுதி. (கo)

கச - ஆம் அதிகாரம்—ஒழுக்கமுடைமை.

அஃதாவது - தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஏதப்பட்ட ஒழுக்கத்தினை உடையராதல். இது, மெய்ம்முதலிய அடங்கினர்க்கல்லது முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அடக்கமுடைமையின்பின் ஒழுக்கமுடைமையைவைத்தது, காரணகாரியசம்பந்தத்தா லென்க. ஒழுக்கம்-தொழிற்பெயர்; ஒழுகு - பகுதி.

கஙூக. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(இ - ள்.) ஒழுக்கம்—,விழுப்பம் தரலான் - (எல்லார்க்கும்) சிறப்பினைத் தருதலான், ஒழுக்கம் - அவ்வொழுக்கம்,—உயிரினும்—,ஓம்பப்படும் - பாதுகாக்கப்படும்; (எ - று.)

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின்,பொதுப்படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது: அதனால், அங்ஙனம் விழுப்பந்தருவதா

யது ஒழுக்கமென்பது பெற்றும். உயிர் எல்லாப்பொருளினும் சிறந்ததாயினும் ஒழுக்கம்போலவிழுப்பந்தாராமையின், 'உயிரினுமோம்பப்படும்'என்றார்.

(கு - ரை.) ஒப்ப - சமமாக. சுட்டு வருவிக்கப்பட்டது, இரண்டாவது ஒழுக்கம் என்பதில். அவ்வொழுக்கம் என்பது - எல்லார்க்குஞ் சிறப்பைத் தருவதாகிய நல்லொழுக்கம் என்றபடி. விழுப்பம் - உரிச்சொல். உயிரினுஞ் சிறந்தது ஒழுக்க மென்பது, கருத்து; உயிரைவிட்டாலும் விடலாம், ஒழுக்கத்தை விடலாகா தென்க: உயிர் நல்வினைக்குப்போலவே தீவினைக்கும் ஏதுவாம்; ஒழுக்கமோ ஒருபொழுதுந் தீவினைக்கு ஏதுவாகாது எப்பொழுதும் நல்வினைக்கே ஏதுவா மென்க. (க)

கஙஉ. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) ஒழுக்கம் - ஒழுக்கத்தினை, ஓம்பி - (ஒன்றானும் அழிவு படாமல்) பேணி, பரிந்து காக்க - வருந்தியும் காக்க: தெரிந்து - (அறங்கள் பலவற்றையும்) ஆராய்ந்து, ஓம்பி - (அவற்றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை) ஒருக்கி, தேரின்உம் - தேர்ந்தாலும், துணை-துணையாய் முடிவது, அஃதே - அவ்வொழுக்கமே, (ஆகலான்); (எ - று.)

'பரிந்தும்' என்னும் உம்மை, விகாரத்தால் தொக்கது.

இவையிரண்டு பாட்டானும், ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்றானும் - ஒன்றினாலும். பேணி - விரும்பி. ஆதலால் குச்சாலே, ஒதுவார்க்குணவு முதலியவாக மூப்பத்திரண்டுஅறங்கள் கூறப்படுவதனால் 'அறங்கள்பலவற்றையும்' என்றார். இருமை - இம்மை மறுமை என்னும் இரண்டு. ஒருக்கி - அடக்கி. தேர்ந்தாலும் - ஆலோசித்தாலும். பரிந்தும் என்ற உம்மை - உயர்வுசிறப்புப்பொருளது. அஃது என்பதில், ஆய்தம் மெய்போல ஒலித்துநின்றது. ஏ - பிரிநிலை. (உ)

கஙஊ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(இ - ள்.) (எல்லார்க்கும்), ஒழுக்கம் உடைமை - (தத்தம் வருணத்திற்கு ஏற்ற) ஒழுக்க முடைமை, குடிமை - குலனுடைமையாம்; இழுக்கம் - (அவ்வொழுக்கத்தில்) தவறுதல், இழிந்த பிறப்பு ஆய்விடும் - (அவ்வருணத்தில்) தாழ்ந்த வருணமாய்விடும்; (எ - று.)

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்த ராவ ராகலின் 'குடிமையாம்' என்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்தில்தவறத் தாழ்ந்தவருணத்த ராவ ராகலின் 'இழிந்தபிறப்பாய்விடும்' என்றுங் கூறினார். உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிது என்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ்விரைவுபற்றி, அவ்வேதுவாகிய வினைகளே பயனுக ஓதப்பட்டன.

(கு - ரை.) தத்தம் - தங்கள் தங்களுடைய. வருணம் - சாதி. உள்வழிப் படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிது - ஒழுக்கம் உண்டான பொழுது உண்டாகுங் குணத்தைக்காட்டிலும் ஒழுக்கம் இல்லாதபொழுது உண்டாகுங் குற்றம் அதிகமானது; ஒழுக்கமிருந்தாற் குலம் மேலாம்; ஒழுக் கங்கெட்டாற் சாதியே கீழாம் எனக் காண்க. பயன் இடையீடின்றி எய்து தலின் - குலனுடைமையும் தாழ்ந்த வருணமு மாகிய பிரயோஜனங்கள் கால தாமதமில்லாமல் உடனே உண்டாவதனால். அவ்வேதுவாகிய வினைகளே பய னாக ஓதப்பட்டன - குடிமைக்கும் இழிந்தபிறப்புக்கும் காரணமாகிய ஒழுக்க மூடைமையும் இழுக்கமும் ஆகிய தொழில்கள் தாமே குடிமையும் இழிந்த பிறப்பு மாகச் சொல்லப்பட்டன: உபசாரவழக்கு. இனி, இத்திருக்குறளினை - இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடு மாதலால் ஒழுக்கமுடைமை குடிமை என அன்வயித்து, உயர்ந்தசாதியிற் பிறந்தவராயினும் அச்சாதிக்குரியஒழுக்கத்தைக் கைவிட்டால், அது உடனே அச்சாதி தாழ்ந்தசாதியாவதற்குக் காரணமாகு மாதலால், ஒழுக்கமுடைமையே உயர்குடிப்பிறப்பாம் எனப் பொருள்கொள் ளினும் அமையும். இழுக்கம் என்னுந்தொழிற்பெயரில், இழுக்கு-பகுதி. (ஈ)

கஙஉ. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(இ - ள்.) ஒத்து - (கற்ற) வேதத்தினை, மறப்பின்உம் - மறந்தாலுமி னும், கொளல் ஆகும் - (வருணம் கெடாமையின் பின்னும் அஃது) ஓதிக் கொளலாம்; பார்ப்பான் - அந்தணனது, பிறப்பு - (உயர்ந்த) வருணம், ஒழு க்கம் குன்ற - (தன்) ஒழுக்கம் குன்ற, கெடும்—; (எ - று.)

மறந்தவழி இழிகுலத்தனு மாகலின், 'மறக்கலாகாது' என்னுங் கருத் தான், 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது, ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.

(கு - ரை.) வருணம் - பிராமணசாதி. குன்ற - குறைய. மறந்தவழி - மறந்தால். சிறப்புடை வருணம் - நான்குசாதிகளுள்ளுஞ் சிறந்ததான பிராமண சாதி. ஏனைய வருணம் - மற்றை க்ஷத்திரிய வைசிய சூத்திர சாதிகள். ஓதப்படுவதனால் வேதத்துக்கு 'ஒத்து' என்றும், அவ்வேதங்களின் பொருள் களையே மேற்கொண்டு பார்ப்பதனால் பிராமணர்க்கு 'பார்ப்பார்' என்றும் பெயர். ஒது என்னும் பகுதி செயப்படுபொருள்விகுதிபுணர்ந்துகெட்டுத் தன் ஒற்றுஇரட்டி 'ஒத்து' என நின்றது. குன்ற என்னும் செயவெனெச்சம் - காரணப்பொருளதாதலின், இறந்த காலம். கல்வியினும் ஒழுக்கம் சிறந்தது என்றவாறும். (உ)

கஙஎ. அழுக்கா றுடையான்க ணொக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(இ - ள்.) அழுக்காறு உடையான் கண் - அழுக்காறுடையான் மாட்டு, ஆக்கம் போன்று - ஆக்கம் (இல்லாதாப்) போல, ஒழுக்கம் இலான்கண் - ஒழுக்கமில்லாதவன் மாட்டும், உயர்வு - உயர்ச்சி, இல்லை—; (எ - று.)

உவமையான், ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சிஇல்லையென் பது பெற்றும்; என்னை? ‘‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற’’ மும் நல்கூர் தலின். உயர்வு - உயர்குலமாதல்.

(கு - ரை.) அழுக்காறுடையான்மாட்டு ஆக்கமில்லாதாப்போல-பொறு மையுடையவனிடத்துச் செல்வமில்லாதவாறுபோல. உவமையான் - அழுக் காறுடையான்கண் ஆக்கம் போன்று என்ற உபமானத்தால். ‘‘கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ, முண்பதூஉ மின்றிக் கெடும்’’ என்னும் கசுசு-வது திருக்குறளால், பொறுமையுடையவண்மாத்திரமேயன்றி அவ னது பந்துவர்க்கமும் உடுக்கஉடையும் உண்ண உணவு மில்லாமல் வறுமை யடையு மென்பதை அறிக. இங்ஙன் தானேயன்றித் தன்னுடைய சுற்றத் தாரும் உண்ணஉணவும் உடுக்க உடையும் இன்றிக்கெடும் பொறுமைப்படு பவனே உவமைகூறியதனால், ஒழுக்கமில்லாதவனே யன்றி அவனுடைய சுற்றத்தாரும் உயர்ச்சியின்றிக் கெடுவ ரென்பது பெறப்படு மென்க. என்னை-ஏனென்றால். நல்கூர்தலின் - வறுமையடைதலால். அழுக்காறு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அழுக்கறு - பகுதி: இது - ஒருசொல்; இனி, அழுக்கு அறுஎன்னும் இரண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்டு, எதிர்மறையிலக்கணையால், குற்றத்தை நீக்கு என்னும் பொருளைத் தராமல் குற்றத்தையுடையவனுகு எனப் பொருள்பட்டு, பொறுமையைக்குறித்த தென்றுங் கொள்ளலாம். உடையான்கண், இலான்கண்—கண் - ஏழனுருபு. போன்று, போல் - இடைச்சொல், முதனிலை. (இ)

கஙூசு. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) ஒழுக்கத்தின் ஒல்கார் - (செய்தற்குஅருமைநோக்கி)ஒழுக்கத் திற் சுருங்கார், உரவோர் - மனவலியுடையார்: இழுக்கத்தின் - அவ்விழுக் கத்தால், ஏதம் படுபாக்கு - (தமக்கு இழிகுலமாகிய) குற்றம் உண்டாம் ஆற் றை, அறிந்து—; (எ - று.)

ஒழுக்கத்திற்சுருக்கம், அதனை உடையார்மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, ‘உரவோர்’ என்றார்.

(கு - ரை.) செய்தற்கு அருமைநோக்கி - செய்வதற்கு அருமையாயிருக் கிறதென்று நினைத்து. அவ்விழுக்கத்தால் - அவ்வாசாரங் குறைதலால். உண் டாம் ஆறு - உண்டாகும்விதம். ஒழுக்கத்தினது சுருக்கத்தை அதனை உடை யவர்மேல் ஏற்றி, எதிர்மறையாக ‘ஒழுக்கத்தி னெல்கா ருரவோர்’ என்றார். விரதங்களாவன - இன்ன அறம் செய்வேனெனவும், இன்னபாவம் ஒழிவே னெனவும் தமதுசக்திக்குஏற்றபடி ஏற்படுத்திக் கொள்வன. உரவோர் என்ப தில், உரம் அல்லது உரவு - வலிமை. படுபாக்கு - படுதல்; தொழிற்பெயர்; பாக்கு - விகுதி. (சு)

கஙூஎ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

(இ - ள்.) (எல்லாரும்), ஒழுக்கத்தின் - ஒழுக்கத்தானே, மேன்மை - மேம்பாட்டை, எய்துவர்—; இழுக்கத்தின்-(அதனினின்று)இழுக்குதலானே, எய்தா பழி-(தாம்) எய்துதற்கு உரித்தல்லாத பழியை, எய்துவர்—; (எ-று.)

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்கு மென்று கொள்ளு மாகலின், 'எய்தாப்பழியெய்துவர்' என்றார்.

இவையைந்துபாட்டானும், ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும், இல் வழிப்படுங் குற்றமும் கூறப்பட்டன.

(கு - சை.) இழுக்குதல் - தவறுதல். எய்துதற்கு உரித்தல்லாத பழி- அடையத்தகுதியுடைய தல்லாத நிந்தை. ஒழுக்கத்திலே தவறினவர்மேல் பகைமையினாலே ஒருவன் அடாதபழியைச் சொல்வானாயினும், அதனையும் உலகத்தார் அவரது அநாசாரத்தைநோக்கி அவரிடத்து அடுக்குமென்று கொள்ளுவரென்க. எய்தா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். (எ)

கஉஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(இ - ள்.) (ஒருவனுக்கு), நல் ஒழுக்கம் - நல்ல ஒழுக்கம், நன்றிக்கு வித்து ஆகும் - அறத்திற்குக்காரணமாய் இருமையினும் இன்பம்பயக்கும்; தீ ஒழுக்கம் - தீயஒழுக்கம், என்றும் இடும்பை தரும்-(பாவத்திற்குக்காரண மாய்) இருமையினும் துன்பம் பயக்கும்; (எ - று.)

'நன்றிக்கு வித்தாகும்' என்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரண மாதலும், 'இடும்பைதரும்' என்றதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்றாம்; ஒன்றுரின்றே வேனையதை முடிக்கு மாகலின்.

இதனால், பின்விளைவு கூறப்பட்டது.

(கு - சை.) அறம் - புண்ணியம். பயக்கும் - உண்டாக்கும். 'நன்றிக்கு வித்தாகும்' என்ற காரணத்தால் 'இருமையினும் இன்பம்பயக்கும்' என்கிற காரியமும், 'இடும்பைதரும்'என்ற காரியத்தால் 'பாவத்திற்குக் காரணமாய்' என்கிற காரணமும் வருவித்து உரைக்கப்பட்டன. வேனையதை-மற்றொன்றை. முடிக்கும் - சித்திக்கச்செய்யும். பின்விளைவு - நல்லொழுக்கத்தினாலும் தீயொழுக்கத்தினாலும் மறுமையில்விளையும் பயன். வித்து - விதை; இங்கே, காரணமென்னும்பொருளில் வந்தது. என்றும் - எப்பொழுதும்; இம்மையி லும் மறுமையிலும். (அ)

கஉஆ. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(இ - ள்.) வழுக்கியும் - மறந்தும், தீய - தீயசொற்களை, வாயால்-(தம்) வாயால், சொலல் - சொல்லுந்தொழில்கள், ஒழுக்கம் உடையவர்க்கு—, ஒல்லா - முடியா; (எ - று.)

தீயசொற்களாவன - பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்ம்முதலியனவும், வருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பண்மையால், சொல்லுதற்

ருழில் பலவாயின. சொலல் - சாதியொருமை. 'சொலல்' எனவே அமைந் திருக்க 'வாயால்' என வேண்டாது கூறினர், 'நல்லசொற்கள் பயின்றது' எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு; இதனை வடநூலார், தாற்பரி யம் என்ப.

(கு - ரை.) பொய்ம்முதலியன என்றது - கோட்சொல்லையும் கடுஞ் சொல்லையும் குறித்து. அவற்றது - சொற்களது. சொலல் என்பது - சொல் லால் ஒருமைபோலத் தோன்றினும், பொருளாற் பன்மையாதலால், பால் பகாவஃறிணையின்பாற்பட்டு, 'ஒல்லா' என்னும் அஃறிணை யெதிர்மறைப் பன்மை வினைமுற்றைக் கொண்டது. ஏகாரம் - தேற்றம். தீய - பண்படியா ப்பிறந்த பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர். 'வழுக்கியும்' என்ற இழிவுசிறப்புஉம்மையால், நினைத்துச்சொல்லுதல் கூடாதென்பது தானே விளங்கும். ஒழுக்கமுடையவர் மறந்து சொன்னலும் பிறர்க்கு நன்மைதருஞ் சொற்களையே சொல்லுவர் என்பது, கருத்து. 'வாயால்' என்னும் அவசிய மில்லாதபதத்தைப் பிரயோகித்ததற்கு, நல்லசொற்கள்பயின்றதென்றலா கிய கருத்தைக் கூறினர்; கருக - ஆம் குறளிலும் இங்ஙனங் காண்க. தாற் பரியம்=தாத்பரியம். என்ப - என்றுசொல்லுவர். (கூ)

கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

(இ - ள்.) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் - உலகத்தோடு பொருந்த ஒழு குதலை, கல்லார் - கல்லாதார்,—பல கற்றஉம் - பலநூல்களையும் கற்ற ராயினும், அறிவு இலாதார்—; (எ - று.)

உலகத்தோடுபொருந்த ஒழுகுதலாவது - உயர்ந்தோர்பலரும் ஒழுகிய வாற்றான் ஒழுகுதல். அறநூல்சொல்லியவற்றுள் இக்காலத்திற்குஏலாதன வொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையும் அடங்க 'உலகத்தோடுஒட்ட' என்றும், கல்விக்குப்பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமு மாகலின் 'அவ்வொழுகுதலைக்கல்லாதார் பலகற்றும் அறி விலாதார்' என்றும் கூறினர். ஒழுகுதலைக்கற்றலாவது - அடிப்படுதல்.

இவையிரண்டுபாட்டானும், சொல்லானும் செயலானும் வரும் ஒழுக்க ங்களெல்லாம் ஒருவாற்றால் தொகுத்துக்கூறப்பட்டன.

(கு - ரை.) இங்கே, உலக மென்றது-உயர்ந்தவரை. கல்லாதார் - அறி யாதவர். ஒழுகிய ஆற்றான் - நடந்தவிதத்தால். ஏலாதன ஒழிந்து - பொருந் தாதவற்றை விட்டு. கொண்டு - ஏற்றுக்கொண்டு. அடிப்படுதல் - அப்பியசித் தல். ஒருவாற்றால் - ஒருவகையால். பல - வினையாலணையும்பெயர். "பழை யன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" ஆதலால், காலத்துக்கு ஏற்றபடி உலகநடையை அனுசரித்து ஒழுகவேண்டு மென்பது, இதன் கருத்து. "உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்,கூம்பலு மில்ல தறிவு" "எவ்வ துறைவ துலக முலகத்தோடு, அவ்வ துறைவ தறிவு" என மேல் அறி வுடைமையென்னும் அதிகாரத்திலும், "உலகத்தா ருண்டென்ப தில்லென்

பான் வையத்து, அலகையா வைக்கப் படும்" எனப் புல்லறிவாண்மையென் னும் அதிகாரத்திலும் வருதல் காண்க. (கo)

கரு - ஆம் அதிகாரம்.—பிறனில் விழையாமை.

அஃதாவது - காமமயக்கத்தாற் பிறனுடையஇல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வ தாகலின், ஒழுக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல் - இல்லாளுக்கு ஆகுபெயர். காமமயக்கத்தால் - சிற் றின்பத்தை விரும்புதலிலுள்ள புத்தியாரூட்டத்தினால். இஃது - பிறனில் விழையாமையென்ற இந்தக்குணம். ஒழுக்கமுடையார்மாட்டே - ஒழுக்க முடையாரிடத்திலேயே.

கசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத் தறம்பொருள் கண்டார்க ணில்.

(இ - ள்.) பிறன் பொருளாள் - பிறனுக்குப் பொருளாந்தன்மையை யுடையாளை, பெட்டு - காதலித்து, ஒழுகும், ஒழுகுகின்ற, பேதைமை - அறி யாமை,—ஞாலத்து - ஞாலத்தின்கண், அறம் பொருள் கண்டார்கண் - *அற நூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டு, இல் - இல்லை; (எ - று.)

பிறன்பொருள் - பிறனுடைமை. அறம் பொருள் என்பன-ஆகுபெயர். செவ்வெண்ணின்தொகை, † விகாரத்தாற் றொக்குநின்றது. இன்பம் ஒன் றையேநோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் 'பரதீயம்' என்று கூறுவராகலின், 'அறம்பொருள் கண்டார்க ணில்' என்றார்: எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையென்பது பெறப் பட்டது.

(கு - ரை.) மனைவி புத்திரர் பசு வீடுஎல்லாவற்றையும் தலைவனுடைய உடைமையென்றும், தலைவனே உடையவனென்றும் கூறுவது நூல்வழக்கு ஆதலால், மனைவியை 'பொருளாள்' என்றது: ஸ்வாமியென்றும் ஸ்வம்அல் லது ஸொத்துஎன்றும் வழங்குமாறுங் காண்க. பிறன்பொருளாள்-பிறனுக்கு உடைமையானவள்: எனவே, பிறனுடையமனைவியாவள். அறம் பொருள் என்ற காரியப்பெயர்கள் - அவற்றையுணர்த்தற்குக் கருவியாகிய நூல்களுக்கு ஆகிவந்தமையால், காரியவாகுபெயர்கள்: அறமும் பொருளும் என்று உம்மையை விரித்துக்கூறாது உம்மைதொக அறம்பொருள் எனக் கூறியது செவ்வெண்ணும். (செவ்வெண்ணுவது - எண்ணிடைச்சொற்கள் தொக்கு நிற்ப வருவது.) பெயர்ச்செவ்வெண் ணாதலால், அறம்பொருளிரண்டும்என்று இது தொகைபெற்றே வரவேண்டு மாதலால், அத்தொகை 'அறம்பொருள்' என்ற விடத்துச் செய்யுள்விகாரத்தால் தொக்குவந்ததென்க. இன்பநூல் - காமநூல்: வாத்ஸ்யாயநம் கொக்கோகம் போல்வன: இன்பம் ஒன் றையேநோக்கும் இன்பநூலுடையார் என்றதனால், அவர்கள் அறம்பொருள்

* பி - மீ: அறநூலும் பொருணூலுமாகிய இரண்டையும்.

† தொக்குநின்றதுஎன்று பிரதிபேதம்.

களைச் சிறிதுங் கருதாதவ ரென்றவாறாயிற்று. இத்தீயொழுக்கத்தைஎன்றது பிறனில்விழைதலே. பரகீயம்-பிறருக்குரியதுஎன்றுபொருள். பெண்டிஸ்வகீயா பரகீயா ஸாதாரணஸ்திரீஎன்று மூன்றுவகையாகப்பிரித்தலேயும், பிறர் மனைநயத்தலேப்பற்றி * பாரதாரிகபிரகரணத்திற் கூறியிருத்தலேயும் வாத்ஸ்யாயநசூத்திரத்திற் காணலாம். அப்பேதைமை - பிறர்மனைநயப்பதாகிய அந்தஅறியாமைக்குணம். பிறர்மனைவியை விரும்புவார் அறம்பொருள்களேயிழப்ப ரென்றவாறு. (க)

கசஉ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(இ - ள்.) அறன்கடை நின்றாருள் எல்லாம் - (காமம் காரணமாகப்) பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும், பிறன் கடை நின்றாரின் - பிறனில் லாளைக்காதலித்து அவன்வாயின்கட்சென்று நின்றார்போல, பேதையார்—, இல் - இல்லை; (எ - று.)

அறத்தினின்றீக்கப்பட்டமையின், 'அறன்கடை' என்றார். அறன்கடை நின்ற பெண்வழிச்செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பநுகர்வாரும் போல, அறமும் பொருளும் இழத்தலே யன்றி, பிறன்கடைநின்றார் அச்சத்தால் தாம் கருதிய இன்பமும் இழக்கின்றாராகலின், 'பேதையாரில்' என்றார்; எனவே, இன்பமும் இல்லை யென்பது பெறப்பட்டது.

(கு - ரை.) காமங்காரணமாகப் பாவத்தின்கண்நின்றாரெனப்பட்டவர்-பெண்வழிச்செல்வாரும், வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங்கூடி இன்பநுகர்வாரும், பிறனில்விழைவாரும். இக்நால்வருள் முதலிற்கூறிய மூவரும் காமங்காரணமாக அறம்பொருள்களேயே முக்கியமாகஇழக்கின்றார்கள்: பிறர்மனைவிழைவாரோ அந்தஇன்பத்தையும் அச்சத்தால் இழக்கின்றார்: இங்ஙன் இவர் பாவத்தைக் கட்டிக்கொள்வதோடு தாம் கருதிய இன்பத்தையும் பெறாதுஇழக்கின்றதனால், இவரைப்பற்றி, 'பிறன்கடைநின்றாரிற் பேதையாரில்' என்றார். ''காணிற்குடிப்பழியாங் கையுறிற்கால்குறையும், மாணின்மைசெய்யுங்கா லச்சமாம்—ணீரியத்,துன்பம் பயக்குமாற் றுச்சாரிதீண்ட, இன்பமெனைக்கெனைத்தாற்கூறு'', ''புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சம், தூய்க்குமிடத்தச்சம் தோன்றுமற்காப்பச்சம், எக்காலு மச்சந்தருமாலெவன்கொலோ,உட்கான்பிறனில்புகல்''என்ற நாலடிச்செய்யுள்கள் இங்குக் கருதத்தக்கன. அறன்கடை-பாவம்: அறத்தினின்று நீக்கப்பட்டு அறத்தின்பின்னே நிற்பதாதலின், பாவம் இப்பெயர் பெற்ற தென்க. 'அறன்கடைநின்ற' என்ற அடைமொழி, பெண்வழிச்செல்வார்முதலிய மூன்றிற்கும் சேர்த்தற்குரியது. பெண்வழிச்செல்வார் - தமதுவழியில் நடக்கவேண்டியவளான மனைவி செல்லும் வழியே தாம் நடப்பவர். வரைவின்மகளிர் -

* பாரதாரிகம் - பிறர்மனைவியைப்பற்றியது.

தம் இன்பத்தை இன்னுர்க்குத்தான் விற்பது என்று ஓர்வரம்புகொண்டுநட வாத மகளிர்: வேசையர். (உ)

கசஙூ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

(இ - ள்.) மன்ற தெளிந்தார் இல் - (தம்மை) ஐயுறுதாரில்லாள் கண்ணே, தீமை புரிந்து ஒழுகுவார் - பாவஞ்செய்தலே விரும்பியொழுகு வார்,—விளிந்தாரின் வேறு அல்லர் - உயிருடையரேனும் இறந்தாரே யாவர்; (எ - று.)

அறம்பொருளின்பங்களாகிய பயன் உயிர் எய்தாமையின் 'விளிந்தாரின் வேறல்லர்'என்றும், அவர் தீமைபுரிந்தொழுகுவது இல்லுடையவரதுதெளிவு பற்றியாகலின் 'தெளிந்தாரில்' என்றும் கூறினர்.

(கு - ரை.) ஐயுறுதார் - சந்தேகியாதவர். இல்லாள்கண் - மனைவியி னிடத்து. பாவஞ்செய்தல் - பிறர்மனைவியைச்சேர்தலாகிய பாவச்செய லைச்செய்தல். பிறனில்லவிரும்பிப்பாவஞ்செய்வோர் தாம் உயிருள்ளவராக இருந்தும் தம்முயிர் பெறவேண்டிய அறம்பொருளின்பங்களாகிய பயனை அடையாமையால், 'விளிந்தாரின் வேறல்லர்' என்றது. மன்றதெளிந்தார் - சிறிதும்ஐயுறுமல் தம்மை நல்லவரென்று நம்பியவர். பிறனில்விழைவார் தாம் தீமைபுரிவது இல்லுடையவரது தெளிவுபற்றியே யென்பதைப் புலப் படுத்த 'தெளிந்தாரில்' என்றார்: ஆகவே, நம்பிக்கைத்துரோகஞ்செய்பவர் இந்தப்பிறனில்விழைவார் என்றுகூறியவாறுமாயிற்று. மன்றஎன்பது நிச்சய மென்னும் பொருளுணர்த்தும் உரிச்சொல்: "மன்றவெண்திங்களவி தேற்றஞ் செய்யும்" என்பது, தொல்காப்பியம். இது, தெளிந்தார்க்கு அடையாய் [விசேஷணமாய்] வந்தது: மன்றவிளிந்தார் என்று கூட்டுவாரு முளர். (ஙூ)

கசஙூ. எனைத்துணைய ராயினு மென்னுந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

(இ - ள்.) எனை துணையர் ஆயின் உம்-எத்துணைப்பெருமையுடையரா யினும், என்ஆம் - (ஒருவர்க்கு) யாதாய்முடியும்? (காமமயக்கத்தால்), தினை துணை உம் - தினையளவும், தேரான் - (தம் பிழையை) ஓராது, பிறன் இல் புகல் - பிறனுடைய இல்லின்கட் புகுதல்; (எ - று.)

இந்திரன்போல எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்தல்நோக்கி, 'என்னும்' என்றார். "என்னீரதியாதீர்போல விவைகூறின், நின்னீர வல்ல நெடுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மையொருமை மயங்கிற்று. 'தேரான்பிறன்' என்பதனைத் தம்மை யையுறுத பிறன் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) பிறனுடையஇல்லின்கட்புகுதல் - பிறர்மனைவியைச்சேர்தல் என்றபடி. பிறர்மனையின்கட்சேர்ததனால் இந்திரன் எல்லாப்பெருமையும் இழந்து சிறுமையெய்திய வரலாறு, "ஐந்தவித்தாஞற்றல்" என்ற குறளினுரை யிற் காட்டப்பட்டது. என்ஆம் என்பது - என்னநற்பயனைத்தரும்? நற்பய

னைத்தராது மிக்கதீப்பயனைத்தரும் என்பதைக் காட்டிற்று. "என்னீரறியாதீர்" என்ற மேற்கோள் கலித்தொகையில் பாலைக்கலியில் 5-ஆம்பாட்டிலுள்ளது: இத்தமேற்கோளுக்குப்பொருள்:—(என்னை உடனழைத்துக்கொண்டு செல்லாமற்போனால் யான் உயிர்தாங்கியிருத்தலாற்றாது இறந்துபடுதலை) நீர் அறியாதிருந்தீர்போல (உடன்அழைத்துக்கொண்டு செல்லுதலைமறுத்த) இம் மொழிகளைக் கூறுதலாற் பெற்றதென்? நெடுந்தகாய்! (இம்மொழிகள்) நினக்கு உரிய நன்றாகியநீர்மைகளையுடையன அல்ல என்பது. இம்மேற்கோளுள், 'அறியாதீர்போல' என்று உயர்த்துச்சொல்லுதற்பொருட்டுவந்த பன்மை 'நீ' என்ற ஒருமையோடு மயங்கிநின்றாற்போன்று, இக்குறளில், 'எனைத்தூணையர்' என்று உயர்த்துச்சொல்லுதற்பொருட்டுவந்த பன்மை தேரான் என்னும் ஒருமையோடு மயங்கிநின்றதென்க. இவ்வாறுவருவதனை ஒருமைப்பன்மைமயக்கமெனக் கூறாமல் பால்வழுவமைதியென்பர்: நன்னூல்விருத்தியுரைகாரர் "எனைத்தூணைய ராயினு மென்னுந் தினைத்தூணையும், தேரான்பிறனில் புகல்—என்பது, செறலின் [கோபத்தினால்] பலர்பால் ஒருமைப்பாலாயிற்று" என்று கூறியுள்ளார். தேரான் - எதிர்மறையாண்பால் வினைமுற்று, எச்சப்பொருளில்வந்தது. இரண்டாமுரைக்கு—தேரான் (நீயகுணத்தை) அறிந்து (தன்னை) ஐயுறுதலனுகிய, பிறன் என்று பொருள்: இவ்வுரைக்கு, தேரான்என்பது வினையாலணையும்பெயர்: பிறன்என்பதற்கு அடைமொழியாய்நின்றதென்க. (சு)

கசடு. எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

(இ - ள்.) எளிது என - (எய்துதல்) எளிதுஎன்றுகருதி, (பின்விளைவு கருதாது), இல் இறப்பான் - பிறனில்லின்கண்இறப்பான், விளியாது-மாய்தலின்றி, எஞ்ஞான்றும்—, நிற்கும் - நிலைநிற்கும், பழி - குடிப்பழியினை, எய்தும்—; (எ - று.)

இல்லின்கணிறத்தல் - இல்லாள்கண் நெறிகடந்து சேறல்.

(கு - ரை.) எய்துதல் - பிறன்மனைவியையடைதல். பின்விளைவு - பிறன்தாரத்தை எய்தியபின்உண்டாகும் பகை பாவம் அச்சம் பழி என்பன: மேற்குறளைக் காண்க. இல்லாள்கண் நெறிகடந்துசேறல் - பிறன் மனைவியினிடத்து நீதிவரம்பிற்குக் கட்டுப்படுதலின்றி மீறிச்செல்லுதல். இறத்தல் - வரம்புமீறிச்செல்லுதல். (கு)

கசகசு. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ - ள்.) இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறிகடந்துசெல்வானிடத்து, பகை பாவம் அச்சம் பழி என நான்குஉம் - பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியுமென்னும் இந்நான்குகுற்றமும், இகவாஆம் - (ஒருகாலும்) நீங்காவாம்: (எ - று.)

எனவே, இருமையுமிழத்தல் பெற்றாம்.

இவைஆறுபாட்டானும், பிறனில்விழைவான்கட் குற்றம்கூறப்பட்டது.

(கு - ரை.) "பிறன்மூரம், நச்சுவார்ச்சேரும் பகைபழிபாவமென்று, அச்சத்தோடிங்நாற்பொருள்" என்றது, நாலடி. இருமை - இம்மைமறுமை என்ற இவற்றின் பயன். பகை அச்சம் குடிப்பழிஎன்பனவீளைதலால் இம்மைப்பயனேயிழத்தலும், பாவம்வீளைதலால் மறுமைப்பயனேயிழத்தலும் நேரு மென்பதை அறிந்தோ மென்க. பிறனில்விழைவான்கட் குற்றம் - பிறன் மனைவியைவிரும்பிச்செல்வோனிடம் நேர்படுங் குற்றம். (கூ)

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(இ - க்.) அறன் இயலான் இல்வாழ்வான் என்பான் - அறஞ்சிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்,—பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் - பிறனுக்குரிமைபூண்டு அவனுடையஇயல் பின்கண்ணேநிற்பாளது பெண்தன்மையை விரும்பாதவன்; (எ - று.)

ஆனுருபு, ஈண்டு உடனிகழ்ச்சிக்கண்வந்தது. இல்லறஞ்செய்வானென்னப்படுவான், அவனே யென்பதாம்.

(கு - ரை.) ஆனுருபு, 'இயலான்' என்ற இடத்திலுள்ளது. இலட்சுமணனேடு இராமன்வந்தான் என்றஇடத்து இராமனுடைய வருதல்தொழிலில் இலட்சுமணனுக்கும் உடனிகழ்ச்சி யேற்படுதல்போல, இங்கும் பிறனியலாள் பெண்மைநயவாதவனுடைய வாழ்த்தல்தொழிலில் அறனியலுக்கும் உடனிகழ்ச்சி யேற்படுதல் காண்க. ஆகவே, பிறனியலாள் பெண்மைநயவாதவன் வாழ்க்கையிலேயே அறன் இயலும்: பிறனியலாள் பெண்மைநயப்பவன் வாழ்க்கையிலோ அறன் இயலாதென்க: இவ்வாறுஎற்படுவதனால், இல்லறத்தை நடத்துபவனென்பான், பிறனில்விழையாதவனே யென்பது பெறப்படும். (எ)

கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றே வான்ற வொழுக்கு.

(இ - ள்.) பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை, சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனுமாம், நிரம்பிய ஒழுக்கமுமாம்; (எ - று.)

புறப்பகைகளையடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனை அடக்கிய ஆண்மையைப் பேராண்மை யென்றார். 'ஒன்றே' என்பது - எண்ணிடைச்சொல். செய்தற்கு அரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்கு மென்பதாம்.

(கு - ரை.) உட்கொள்ளாத - மனத்திலுல் விரும்பாத. புறப்பகையை வெல்வது ஆண்மை: அகப்பகையாகிய காமத்தை வெல்வதோ பேராண்மை யென்க. உட்பகை - வெளிப்படையாகவுள்ள பகைவர்க்குப் புகுதற்கு இடனை யுண்டாக்கிக்கொடுத்து அப்பகைவெல்லும் வரையிலும் நட்புப்போன்று உடனுய்நிற்கும் பகை: அவை காமம் வெகுளி கடும்பற்றுள்ளம் மானம் உவகை

மதம் என்று ஆறுவகைப்படும்: இவ்வாறனுள் மற்றவற்றிற்குங் காரணமாய் ஒழித்தற்கு அரிய தாதலால், 'உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின்' எனப்பட்டது. அறவினென்றே என்ற இடத்துள்ள ஒன்றே என்பது - அறனுமாம் ஒழுக்கமுமாம் என்று எண்ணுப்பொருள்பட்டு வந்ததனால், எண்ணிடைச்சொல். ஆன்ற - பெயரெச்சம்: இது, சான்ற என்பதன் மரூஉ. இதனை - பிறன்மனையாளை நயத்தலை. பிறர்மனைநயவாமையே அறனையும் ஒழுக்கத்தையும் உண்டாக்கு மென்பதாம். (அ)

கசகூ. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(இ - ள்.) நாம நீர் வைப்பின் - அச்சந்தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து, நலக்கு உரியார் யார் எனின் - எல்லாநன்மைகளும் எய்துதற்கு உரியார் யாவரெனின்,—பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனெருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார்; (எ - று.)

அகலம் ஆழம் பொருளுடைமை முதலியவற்றுள் அளவிடப்படாமையின், 'நாமநீர்' என்றார். உரிச்சொல்லீறு திரிந்து நின்றது. நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. இருமையினும் நன்மையெய்துவ ரென்பதாம்.

(கு - ரை.) பொருளுடைமை - சங்கு பவழம் முத்து முதலிய பொருள்களையுடைமை. கடல், அகலம் ஆழம் சங்குமுதலியபலவகைப்பொருள்என்ற இவற்றையுடைமையால் அச்சத்தைத் தரு மென்க. ''பேராமுருமென வரூஉங்கிளவி, ஆமுறைநான்கும் அச்சப்பொருள'' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி 'நாம்'என்று மகரவீறுனசொல்'நாம'என அகரவீறாக வந்ததனால், 'உரிச்சொல்லீறு திரிந்து நின்றது'என்றார். நலம் என்ற மகரவீற்றுச்சொல் வேற்றுமையுருபில் ''மஃகான்புள்ளிக்கத்தேசாரியை'' என்ற தொல்காப்பியத்தால், நலத்துக்கு என்று அத்துச்சாரியை பெற்று வரவேண்டியதாக இருக்க, அங்ஙன் வராது 'நலக்கு'என வந்ததனால், சாரியை செய்யுள்விகாரத்தால் தொக்கதாகும். 'நலக்குரியார்'எனப் பொதுப்படக் கூறியதனால், பிறன்மனைநயவாதார் இருமையின்பமும் பெறுவ ரென்று கூறியவாறாயிற்று. (கூ)

கரிo. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(இ - ள்.) அறன் வரையான் அல்ல செயின்உம் - (ஒருவன்) அறத்தை(த் தனக்கு) உரித்தாகச்செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—(அவனுக்கு), பிறன் வரையாள் - பிறனெல்லைக்கண் நிற்பாளது, பெண்மை - பெண்மையை, நயவாமை - விரும்பாமை (உண்டாயின்), (அது), நன்று—.

இக்குணமே மேற்பட்டுத் தோன்று மென்பதாம்.

இவை நான்குபாட்டானும் பிறனில்விழையாதான்கட் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) வரையான் - 'வரை' என்ற பகுதியினடியாப்பிறந்த எதிர்மறை முற்றெச்சம். 'அறன்' என்று முதலிற்கூறி, பிறகு 'அல்ல' எனக்

கூறியதனால், அச்சொல் அறனல்லாதவற்றை [பாவச்செயல்களை]க் காட்டும்: அஃறிணைப்பலவின்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர். செயினும், உம்மை - இழிவுசிறப்பு. பிறர்மனைநயவாமை யென்ற குணமொன்றுமே பாவச்செயல்களைச் செய்வானுடைய தீக்குணங்களை யெல்லாம் அடக்கித் தான் மேற்பட்டுத்தோன்று மென்றவாறு. விழையாதான்கண் - விரும்பாத வனிடத்தில். (கo)

கசு - ஆம் அதிகாரம்—பொறையுடைமை.

அஃதாவது - *காரணம்பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல். † நெறியினீங்கியசெய்தாரையும் பொறுக்கவேண்டு மென்றற்கு, இது, பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) மடமையானுதல் - அறியாமையாலாவது. மிகை செய்த வழி - குற்றஞ்செய்தவிடத்து. பொறை - தொழிற்பெயர்; பொறு - பகுதி, ஐ - விகுதி. நெறியின் நீங்கிய - வரம்புகடந்த செயல்களை. 'பிறர்மனைநயவாதவர் தீயதொழில்களைச் செய்யார்:ஒருகால்செய்யினும் அதனைப் பொறுத்தல் வேண்டும்'என்ற கருத்தால், பிறனில் விழையாமையின்பின் பொறையுடைமையை வைத்தா ரென்றலும் ஒன்று.

கநிக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

(இ - ள்.) அகழ்வாரை தாங்கும் நிலம் போல - (தன்னை) அகழ்வாரை (வீழாமல்) தாங்கும் நிலம்போல, தம்மை இகழ்வார் பொறுத்தல் - தம்மை அவமதிப்பாரைப் பொறுத்தல், தலை - தலையாய அறம்; (எ - று.)

இகழ்தல் - மிகையாயின செய்தலும், சொல்லுதலும்.

(கு - ரை.) அகழ்வார் - தோண்டுகிறவர். தாங்கும் - தரிக்கும். தலையாய - சிறந்த; உத்தமமான. மிகையாயின - குற்றமானவற்றை. 'அகழ்வாரைத் தாங்கு நிலம்போல' என்ற உவமையால், தம்மைக் கொலைசெய்வதையொத்த குற்றங்களைச் செய்பவர்களையும் பொறுத்துப் பாதுகாத்தல்வேண்டுமென அறிக. எல்லாவற்றையும் பொறுத்தலில் பூமி மிகச்சிறந்த தாதலை "ஸர்வம்ஸஹா" என்னும் அதன்வடமொழிப்பெயரானும் உணர்க; "க்ஷமயா ப்ருதிவீஸமஃ" என ஸ்ரீவால்மீகிபகவான் அருளிச்செய்திருத்தலுங் காண்க. உவமையணி. 'இகழ்வார்ப்பொறுத்தல்' என்றதில், உயர்திணையிடத்து ஐயுருபு தொக்கது. "மலை நீலம் பூவே துலாக்கோலென் றின்னர், உலவி லுணர்வுடையோர்," "நிலத்தி னியல்பே நினைக்குங் காலைப், பொறையுடைமையொடு செய்பாங்கமைந்தபின், வினைதல்வண்மையும் போய்ச்சார்ந்தோ

---

* பி - மீ: அறிந்தாதல். † பி - மீ: பிறனில்விழையாமைபோல, ஒரு தலையாகவேண்டுதலின் இதுவும் அதன்பின் வைக்கப்பட்டது.

ரை, இடுதலு மெடுத்தலு மின்னண மாக, இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே,'' ''தெரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும், பருவ முயற்சி யளவிற் பயத்தலும், மருவிய நன்னில மாண்பாகும்மே'' என்பவையும் உணரத்தக்கன. 'பொறுத்தா ரென்று இகழ்வாரில்லை: அதனைத் தலைமையாகக்கொள்வார் உலகத்தார்' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (க)

கநெ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(இ - ள்.) என்றும் இறப்பினை பொறுத்தல் - (பொறை நன்மூகலான்) தாம் ஒறுத்தற்கு இயன்றகாலத்தும் (பிறர்செய்த) மிகையைப் பொறுக்க; அதனை மறத்தல் அதனின்உம் நன்று - அதனை (உட்கொள்ளாது அப் பொழுதே) மறத்தல் (பெறின்) அப்பொறையினும் நன்று; (எ - று.)

'மிகை' என்றது, மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின், மறத்தலே 'அதனினும் நன்று' என்றார்.

(கு - ரை.) ஒறுத்தற்கு இயன்றகாலத்தும் - தண்டிக்கக்கூடியகாலத் திலும். அதனை உட்கொள்ளாது - அப்பிழையை மனத்திலே வையாமல். மேற்சொல்லிய இரண்டு - குற்றஞ்செய்தலும், குற்றஞ்சொல்லுதலும். பொறுக்குங்காலும் - பொறுக்கும் போதும். பொறுக்கும்போதும் குற்றத்தை மனத்திலெண்ணிப்பொறுக்கவேண்டும்: மறந்திட்டாலோ குற்றத்தை மனத் திலும் கொள்ளவேண்டிய தில்லை: ஆதலால், பொறுத்தலினும் மறத்தல் நன்றென்றார். இறப்பு - முறைமையைக்கடந்த ஒழுக்கம்: தொழிலாகு பெயர். பொறுத்தல் - உடன்பாட்டுவியங்கோள். இங்கு 'அதனை, மறத்த லதனினு நன்று' என்பதை, கீழ் கo஧-ஆம் குறளில் ''நன்றல்லது, அன்றே மறப்பது நன்று'' என்றதனோடு ஒப்பிடுக. (உ)

கநிசு. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(இ - ள்.) இன்மையுள் இன்மை - (ஒருவனுக்கு) வறுமையுள்வைத்து வறுமையாவது,—விருந்து ஓரால் - விருந்தினரை (ஏற்றுக்கொள்ளாது) நீக்குதல்; வன்மையுள் வன்மை - (அதுபோல) வன்மையுள்வைத்து * வன்மை யாவது,—மடவார் பொறை - † அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல்; (எ - று.)

இ஻ஃது, எடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொரு ளுடைமை யாகாதவாறுபோல, மடவார்ப்பொறையும் ‡மென்மையாகாதென் பது, கருத்து.

---

* பி - ம்: வலிமை.

†பி-ம்: அறியார்மாட்டுக்குற்றம்நிகழ்ந்துழிஅக்குற்றத்தைப்பொறுத்தல்.

‡ பி - ம்: மென்மையாகாதே வன்மையா மென்பது கருத்து.

(கு - ரை.) வறுமையுள்வைத்து - தரித்திரஞ்யிருக்குந்தன்மை பலவற்றுள்ளும். வைத்து - வாக்கியாலங்காரமாய்வரும் சொல்லிழுக்காடு. வறுமையென்பது ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களுள் ஒன்றும் இல்லாமை யாதலால், இன்மையெனப்பட்டது. வன்மை - வல்லமை. விருந்தொராால் - விருந்தினர்களே ஈக்குதல். பொருளுடைமைக்குப் பயன் விருந்தோம்புதலாதலாலும், வந்தவிருந்தினரை ஒருவுதல் அறனல்லாததாம் ஆதலாலும், அறனல்லாததான விருந்தொராலேப்புரிபவனுடைய செல்வ மூடைமை பொருளுடைமை யெனப்படா: வறுமை யெனப்படும். அது போலவே, மடவார்ப்பொறையும் மென்மையெனப்படா: வன்மையெனப் படும் என்பது கருத்து. இதனால், விருந்துவிலக்குதலின் மேற்பட்ட வறுமையும், ஒருவர்செய்த குற்றத்தைப் பொறுத்து அவரைப் பாதுகாத்தலின் மேற்பட்ட வல்லமையும் உலகத்தில் இல்லை யென்பதாம். விருந்தோம்பினவன் வேறுபொருளிலனாயினும் பொருளுடையனாக மதிக்கப் படுவன்; அதுபோலவே, பிழைசெய்தாரைப் பொறுத்தவன் ஐம்பொறியடக்கல் முதலிய வேறுவல்லமைகள் இல்லாதவனாயினும் எல்லாவல்லமைகளும் உடையவனாகவே நன்குமதிக்கப்படுவ னென்க. ஓரால் - தொழிற்பெயர்; ஒருவுஎன்பதன் மரூஉவாகிய ஒரு - பகுதி: ஆல் - தொழிற்பெயர்விகுதி: 'சுற்றந்தழால்' என்பதிற்போல. மடவார் - மடமையுடையார். இன்மையுள் இன்மை விருந்தொரால்—கீழ் விருந்தோம்பலென்னும் அதிகாரத்தில் "உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா, மடமை மடவார்க ணுண்டு" என்றதையும் நோக்குக. இன்மையுள் இன்மை-மிக்கவறுமை; வன்மையுள்வன்மை-மிக்கவன்மை; "செல்வத்துட் செல்வம்," "இன்பத்துள் இன்பம்," "துன்பத்துள் துன்பம்" என்பனபோலக் கொள்க. (கூ)

கநிசை. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ - ள்.) நிறை உடைமை நீங்காமை வேண்டின்-(ஒருவன்)சால்புடைமை (தன்கணின்று) நீங்காமை வேண்டுவனாயின், பொறை உடைமை போற்றி ஒழுகப்படும் - (அவனால்) பொறையுடைமை (தன்கண் அழியாமல்) காத்து ஒழுகப்படும்; (எ - று.)

பொறையுடையாற் கல்லது சால்பில்லை யென்பதாயிற்று.

இவை நான்குபாட்டானும்,பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நிறையுடைமை - எல்லா நற்குணங்களுங் குறைவுபடாமல் நிறைந்திருத்தலேயுடைமை. நிறை - முதனிலைத்தொழிற்பெயர்; குணபூர்த்தி. பொறுமையுடையவனே எல்லாநற்குணங்களும் நிறைந்தவ னென்றுகருத்து. நிறை - உறுதிப்பாடு என்றும் பொருள்கொள்ளலாம். 'நிறையென்பது, காப்பன காத்துக் கடிவனகடிந்து ஒழுகும் ஒழுக்கம்' என்பது, மணக்குடியருரை.

கநிநி. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(இ - ள்.) ஒறுத்தாரை - (பிறன் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறாது அவனை) ஒறுத்தாரை, ஒன்றுஆக வையார் - (அறிவுடையார்) ஒருபொருளாக மனத்துக்கொள்ளார்; பொறுத்தாரை - (அதனைப்) பொறுத்தாரை, பொன் போல் பொதிந்து வைப்பர் - பொன்போற் பொதிந்து கொள்வர்; (எ-று.)

ஒறுத்தவர் தாமும் அத்தீங்குசெய்து அவனை டொத்தலின், 'ஒன்றுக வையார்' என்றார். பொதிந்துவைத்தல் - சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல்.

(கு - ரை.) ஒறுத்தார் - கண்டித்தவர். ஒன்றுகவையார்-ஒருபொருளாக மதியார். பொதிந்து கொள்வர் - பத்திரமாய் மனத்தில் வைப்பர். அவனைடு-முதலில்தீங்குசெய்தவனைடு. ஏ - தேற்றம். (டு)

கருஙூ. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

(இ - ள்.) ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்குசெய்தவனை) ஒறுத்தார்க்கு (உண்டாவது), ஒரு நாளை இன்பம் - அவ்வொருநாளையின்பமே; பொறுத் தார்க்கு - (அதனைப்)பொறுத்தார்க்கு, பொன்றும் துணைஉம் புகழ் - (உலகம்) அழியுமளவும் புகழ் (உண்டாம்); (எ - று.)

ஒருநாளையின்பம் - அந்நாளொன்றினும் 'கருதியதுமுடித்தேம்' எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்று மாகலின், ஏற்புடைய 'உலகு' என்னுஞ் சொல் வருவித்து உரைக் கப்பட்டது.

(கு - ரை.) தருக்கியிருக்கும்-களித்திருக்கின்ற. 'பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்' என்றதனால், 'ஒறுத்தார்க்கொருநாளை யின்பம்' என்ற விடத்து 'பழியொடு பட்ட இன்பம்' என்க. நாளை—ஐ - சாரியை. ''ஒன்று வுலகத் தியற்கை புகழல்லாற், பொன்றுது நிற்பதொன் றில்'' ஆதலால், 'உல கம் பொன்றுந் துணையும் புகழ்'எனப்பட்டது. உண்டாமென்னும் வினை வரு விக்க, இரண்டு வாக்கியங்களையும் முடித்தல்வேண்டும். பொன்றுந்துணையும் என்பதற்கு-தாம் இறக்குமளவும் என்று பொருள்கூறுதல் சிறவாமை அறிக. 'ஒருநாளை யின்பம்' என்பதும், 'பொன்றுந் துணையும் புகழ்' என்பதும்-மணக் குடிய ருரையின்பாடம். 'இது, புகழுண்டாம் என்றது' என்பது, மணக் குடியருரை. (சு)

கருஎ. திறனல்ல தற்பிறர் செய்யினு நோதொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(இ - ள்.) திறன் அல்ல - செய்யத்தகாத கொடியவற்றை, தன் பிறர் செய்யின்உம்-தன்கட் பிறர் செய்தாராயினும், நோ தொந்து-(அவர்க்கு அதனால் வருந்) துன்பத்திற்கு நொந்து, அறன் அல்ல செய்யாமை - (தான்) அறனல் லாத செயல்களைச் செய்யாதிருத்தல், நன்று - (ஒருவனுக்கு) நன்று; (எ-று.)

உம்மை - சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது - ''உம்மை, யெரி வாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்று பரிதல்.

(கு - ரை.) செய்யாமை - அவரிடத்துச் செய்யாதிருப்பது. சிறப்பும்மை-இழிவுசிறப்பும்மை. ''உம்மை, யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்னும் மேற்கோள் - நாலடியாரில் ''தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—லும்மை, யெரிவாய்நிரயத்து வீழ்வர் கொலென்று, பரிவதூஉஞ் சான்றோர்கடன்'' என்ற செய்யுளில் உள்ளது; இச் செய்யுளுக்கு-ஒருதீங்குஞ்செய்யாத தம்மைப் பிறர் இகழ்ந்ததைத் தாம் பொறுப்பதுமாத்திரமேயல்லாமல் 'தம்மை நிந்தித்ததனாலாகிய தீவினையின் வினைவினால் மறுமையில் இவர் தீநிரம்பிய நரகத்தில்வீழ்வரே!' என்று இரங்குவதுஞ் சால்புடையோர்க்குக் கடமையாம் என்று பொருள். தோ - தொ என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'தோ நொந்து' என்பதற்கு - (தான் செய்யுந் தீங்குகளால் அவர்க்கு உண்டாகுந்) துன்பத்திற்கு வருந்தி என்றும் பொருள்கொள்ளலாம். தன் - ஏழாம் வேற்றுமைத்தொகை. (எ)

கறிஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

(இ - ள்.) மிகுதியான் - மனச்செருக்கால், மிக்கவை செய்தாரை - (தங்கண்) தீயவற்றைச்செய்தாரை, தாம் தம் தகுதியான் வென்றுவிடல் - தாம் தம்முடைய பொறையான் வென்றுவிடுக; (எ - று.)

தாமும் அவர்கண் தீயவற்றைச்செய்து தோலாது பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க வென்பதாம்.

இவைநான்குபாட்டானும், பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

(கு - ரை.) வென்றுவிடுக-ஜயித்துவிடக்கடவர். தோலாது - தோற்றுப் போகாமல். மிகுதி - முறைமைகடந்தது. மிக்கவை - முறைமை கடந்தவை. வென்றுவிடல் - 'அல்' ஈற்று உடன்பாட்டு வியங்கோள். தகுதி-தக்ககுணம். தமக்குத் தீங்குசெய்தவர்களுக்குத் தாமுந் தீங்குசெய்தால் தாமும் அவர்களோ யொத்துக்கீழ்ப்படுவர்; ஆதலால், அங்ஙனஞ்செய்யாமல் பொறுமையால் அவரினும் மேற்பட்டு அவரைவெல்லவேண்டு மென்பது கருத்து; ''வெல்வது, வேண்டின் வெகுளி விடல்'' என்றநான்மணிக்கடிகையையுங் காண்க. 'இது, பொறுத்தானென்று தோல்வியாகாது அதுதானேவெற்றியாமென்றது' என்பது, மணக்குடிய ருரைவாக்கியம். (அ)

கறிஆ. துறந்தாரிற் றூய்மை யுடைய நிறந்தார்வா
யின்னுச்சொ லோற்கிற் பவர்.

(இ - ள்.) துறந்தாரின் தூய்மை உடையர் - (இல்வாழ்க்கைக்கண் நின்றேயும்) துறந்தார்போலத் தூய்மையுடையார்: இறந்தார் வாய் இன்னுசொல் நோற்கிற்பவர் - நெறியைக்கடந்தார்வாய் இன்னுதசொல்லைப் பொறுப்பவர்.

தூய்மை - மனமாசின்மை. 'வாய்' என வேண்டாது கூறினார், 'தீய சொற்கள் பயின்றது' எனத் தாம் வேண்டியதன் இழிபு முடித்தற்கு.

(கு - ரை.) துறந்தார்-உலகியல்பையும் இல்லறவாழ்க்கையின் நிலையில் லாமையையும் அறிந்து கடவுளின்தன்மையைத்தெரிந்து வீடுஅடையும்பொருட்டுத் தேகஅபிமானம்முதலிய எல்லாவற்றையும் முழுவதும் விட்ட முனிவர். தூய்மை - பரிசுத்தகுணம்; மனத்தில் காமம் வெகுளி மயக்கம் என்னும் குற்றங்கள் இல்லாத தன்மை. நெறியைக்கடந்தார்வா யின்ஞதசொல் - முறைமைதவறினவரது வாயாற் சொல்லப்படுகிற இனிமையல்லாத சொல். நோற்கிற்பவர் - பலர்பால்வினையாலணையும் பெயர். 'இது, பற்றறத்துறந்தவரோடொப்பரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். துறந்தாரின், இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது: எல்லேப்பொருளதாகக் கொண்டு, துறந்தவரினுந் தூய்மையுடையரென்றலும் ஒன்று. வாய்ச்சொல் - கஙக - ஆம் குறளிலும் காண்க. (கூ)

ககூo. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

(இ - ள்.) உண்ணாது நோற்பார் - (விரதங்களான்) ஊணைத்தவிர்ந்து (உற்றநோயைப்) பொறுப்பார், பெரியர் - (எல்லாரினும்) பெரியர்; பிறர் சொல்லும் இன்னாசொல் நோற்பாரின் பின் - (அவர் பெரியராவது தம்மைப்) பிறர்சொல்லும் இன்னாதசொல்லைப் பொறுப்பாரிற் பின்; (எ - று.)

பிறர் - அறிவிலாதார். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற்றொடுகின்றே நோற்றலின், 'இன்னாச்சொல்நோற்பாரிற் பின்' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், பிறர்மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.

(கு - ரை.) ஊணைத்தவிர்ந்து - போஜனத்தைவிட்டு. உற்ற நோயை - பசி, தாகம் முதலியவற்றால் தம்மையடைந்த நோயை. துறந்தவர் யாவரினுஞ் சிறந்தவராதலை "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலா தார்" என்பது முதலிய நீத்தார்பெருமையென்னு மதிகாரத்துத் திருக்குறள்களால் அறிக. பொறுப்பாரிற்பின் - பொறுப்பவர்களின்பின். நோலாமைக்கு ஏதுவாகிய இருவகைப்பற்று - பொறுக்கமாட்டாமைக்குக் காரணமான அகப்பற்று புறப்பற்று என்னும் இருவகைப்பற்றுக்கள். அகப்பற்று - அகங்காரம். புறப்பற்று -மமகாரம். நோற்றலின் - பொறுத்தலால். மிகைக்கச் சொல்லியன - வரம்புகடக்கச் சொன்னவற்றை. இல்லறத்திலிருந்தே பற்றுக்கோவிடாமற் பொறுமையுடையவர், பற்றுக்களே விட்டுத் துறவறத்தையடைந்து பொறுமையுடையவரினும் மேம்பட்டவ ரென்று கருத்து. "ஆக்கவினைக்குறிப்பு ஆக்கமின்றியலா" என்னும் விதியினால், 'பெரியர்' என்னும் ஆக்கவினைக்குறிப்பு, 'ஆவர்' என்னும்ஆக்கச்சொல்வருவித்துமுடிக்கப்பட்டது. 'இது, தவம்பண்ணுவாரினும் பெரிய ரென்றது' என்பது, மணக்குடியருரை.

கள - ஆம் அதிகாரம்—அழுக்காறுமை.

இதனுள் 'அழுக்காறு' என்பது, ஒருசொல். அதற்குப்பொருள் மேலே உரைத்தாம். அச்சொல் - பின், அழுக்காற்றைச் செய்யாமை யென்னும்

பொருள்பட, எதிர்மறைஆகாரமும் மகரஒற்கார விகுதியும் பெற்று, 'அழுக்காறுமை' என நின்றது. இப்பொறுமையும் பொறைக்குமறுதலே யாகலின், இதனை விலக்குதற்கு, இது, பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) அழுக்காறு என்பதை - அழுக்கு ஆறு என இரண்டுசொல் லாகக் கொள்ளாமல், அழுக்கறு என்னும் முதனிலை திரிந்துவந்த தொழிற் பெயராகவாயினும் பண்புப்பெயராகவாயினும் கொள்ளவேண்டு மென்பார், 'ஒருசொல்' என்றார். மேலே உரைத்தாம் - "அழுக்கா றவாவெகுளி' என் னும் சூத்திரவாது குறளிற் கூறினேம்; அங்குக் கூறியபொருள் - பிறராக்கம் பொறுமை யென்பது. ஆக்கம் - செல்வம் முதலியன. அழுக்காறுமை - எதிர் மறைத்தொழிற்பெயர். அழுக்கறுமை யென்றிருப்பது, நலம். மறுதலை - எதிராயுள்ளது.

கசுக. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

(இ - ள்.) ஒருவன்—,தன் நெஞ்சத்து - தன் நெஞ்சத்தின்கண், அழுக் காறு இலாத - அழுக்காறென்னுங்குற்றம் இல்லாத, இயல்பு - இயல்பினை, ஒழுக்கு ஆறு ஆகொள்க-(தனக்கு ஓதிய) ஒழுக்கநெறியாகக் கொள்க;(எ-று.)

இயல்பு - அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மைபயத்த லின், ஒழுக்கநெறிபோல உயிரினும் ஓம்புக வென்பதாம்.

(கு - ரை.) இயல்பு - குணம்: ஓதிய-கசை-ஆம் அதிகாரத்திற் சொன்ன. பயத்தலின் - தருதலால். "ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம், உயிரினு மோம்பப் படும்" என்பதனை உட்கொண்டு, ஒழுக்கநெறியைப்போல் உயிரைக் காட்டிலுஞ் சிறந்ததாகக்கொண்டு பாதுகாக்க வேண்டு மென்றார். ஒழுக்கு ஆறு என்பதை - ஒழுக்கமாகியவழி எனப் பண்புத்தொகையாகவாயினும் ஒழுக்கத்தினதுவழியென ஆறும்வேற்றுமைத்தொகையாகவாயினுங்கொள்க. 'இது, அழுக்காறு தவிரவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரை. (க)

கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

(இ - ள்.) யார்மாட்டும்-யாவர்மாட்டும், அழுக்காற்றின் அன்மை - அழுக் காற்றினின்று நீங்குதலே, பெறின்-(ஒருவன்) பெறுமாயின்,—விழு பேற்றின் அஃது ஒப்பது இல்லை - (மற்றுஅவன்பெறும்) சீரியபேறுகளுள் அப்பேற் றினை ஒப்பது இல்லை; (எ - று.)

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற் றென்பார், 'யார்மாட்டும்' என்றார். அன்மை - வேறுதல்.

இவையிரண்டுபாட்டானும், அழுக்காறின்மையதுகுணம் கூறப்பட்டது.

(கு - ரை.) பெறும் - பெறுவான். மற்று - பின்பு. சீரியபேறுகளுள்- நல்ல பாக்கியங்களுள். அப்பேற்றினை - அழுக்காறில்லாமையை. பகைவர் மாட்டும் - பகைவரிடத்தும். ஒழிதற்பாற்று-நீங்கத்தக்கது. அன்மை - ஒரு

பொருளே மறுத்து அதற்கு இனமானதைச் சொல்வதென்றும், இன்மை-இல்லாததைச்சொல்வ தென்றும் வேறுபாடறிக. சீர்மையென்னும் பொருளுணர்த்துகிற விழுமமென்னும்உரிச்சொல், ஈறுதொக்கு 'பேறு' என்பதனோடு புணர்ந்தது. பேறு - பெறப்படுவது; செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்டுமுதனிலைதிரிந்தபெயர்; இன் - ஏழனுருபு. அஃதொப்பது-ஆய்தம், மெய்போல ஒலித்தது. ஒப்பது-பெயர். 'இது அழுக்காறு செய்யாமை எல்லா நன்மையினும் மிக்கது என்றது' என்பது, மணக்குடியருரை. (உ)

கசுஙூ. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

(இ - ள்.) அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - (மறுமைக்கும் இம்மைக்கும்)அறமும் செல்வமும் ஆகிய உறுப்புக்களே(த் தனக்கு) வேண்டா தாவெனன்று சொல்லப்படுவான்,—பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான்-பிறன்செல்வங் கண்டவழி (அதற்கு) உவவாது அழுக்காற்றைச் செய்வான்.

அழுக்கறுத்த லெனினும், அழுக்கா றெனினும் ஒக்கும். அழுக்காறு செய்யின், தனக்கே ஏதமா மென்பதாம்.

(கு - ரை.) பொருமைக்காரன், மறுமைக்குப்புண்ணியமும் இம்மைக்குச் செல்வமும் ஆகிய புருஷார்த்தங்களே விரும்பாதவ னென்க. பொருமைப் படுபவனுக்கு மறுமையிற் பாவமுண்டாவதனோடு இம்மையிற் செல்வமுமழியும் என்பது கருத்து. உவவாது-மகிழாமல். ஏதமாம் - கெடுதியாகும். 'இது, அழுக்காறுடையார்க்குப் புண்ணியமில்லையா மென்று கூறிற்று' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (ஙூ)

கசுசு. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) அழுக்காற்றின் - அழுக்காறுஎதுவாக, அல்லவை செய்யார் - அறனல்லவற்றைச் செய்யார் (அறிவுடையார்); இழுக்கு ஆற்றின் - அத்தீநெறியால், ஏதம் படுபாக்கு - (தமக்கு இருமையினும்) துன்பம் வருதலை, அறிந்து—; (எ - று.)

அறனல்லவையாவன - செல்வம் கல்வி முதலியன உடையார்கண் நீங்குசினேத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(கு - ரை.) அழுக்காற்றின், இழுக்காற்றின்என்ற சொற்களிலுள்ள ஐந்தனுருபுகள், ஏதுப்பொருளன. அறனல்லவை-பாவங்கள். அறிவுடையா ரென்பது - தோன்றுஎழுவாய். இழுக்காகியஆறுஎன்க; இழுக்கு - குற்றம், ஆறு - வழி. இருமையினுந் துன்பம் வருதல் - மறுமையில் நரகவேதனையும் இம்மையில் வறுமைத்துன்பமும் உண்டாதல். உடையார்கண் - உடையவரிடத்தில். படுபாக்கு, பாக்கு - தொழிற்பெயர்விகுதி. முதலியன என்ற தனுல், செல்வாக்கு ஆண்மை அதிகாரம் முதலியன கொள்க. (ச)

கசுஞ. அழுக்கா றுடையார்க் கதுசா லு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(இ - ள்.) (அழுக்காறு), ஒன்னூர் வழுக்கியும் - பகைவரை ஒழிந்தும், கேடு ஈன்பது - கேடு பயப்ப தொன்று; (ஆகலின்), அழுக்காறு உடையார்க்கு - அவ்வழுக்காறுடையார்க்கு, அது சாலும் - (பகைவர்வேண்டா, கேடு பயத்தற்கு) அதுதானே அமையும்; (எ - று.)

'அதுவே' என்னும் பிரிநிலையேகாரம், விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) அழுக்காறு பகைவரையொழித்துங் கேடுபயப்பதொன்று - பொருமையானது பகைவர்களில்லாமலே கெடுதியைத்தருவதொரு துர்க்குணமாம். அதுதானே அமையும் - அவ்வழுக்காறொன்றே போதும். பிரிநிலை ஏகாரம், பகைவர்களைப் பிரித்துநின்றது. ஒன்னூர்-ஒன்னூர் என்பதன் மரூஉ; எதிர்மறைவினையாலணையும்பெயர்: சேராதவ ரென்று பொருள்; எனவே, பகைவராயிற்று. உம்மை - சிறப்பு. ஈன்பது - எதிர்காலவினையாலணையும்பெயர்; தொழிற்பெயராக்கி, ஈன்பதற்கு அதுசாலு மெனினுமாம். 'இது, உயிர்க்கேடுவருமென்றுகூறிற்று' என்பது, மணக்குடிய ருரை. (நி)

ககசுசு. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற மூடுப்பதூஉ
மூண்பதூஉ மின்றிக் கெடும்.

(இ - ள்.) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - (ஒருவன் பிறர்க்குக்) கொடுப்பதன்கண் அழுக்காற்றைச்செய்வானது சுற்றம், உடுப்பது உம் உண்பதூஉம் இன்றி கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் இன்றிக் கெடும்; (எ - று.)

கொடுப்பதன்கண் அழுக்கறுத்தலாவது - கொடுக்கப்படும்பொருள்களைப் பற்றிப் பொருமைசெய்தல். 'சுற்றம் கெடும்' எனவே, அவன்கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறுபொருமை தன்பேற்றையெயன்றித் தன்சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

(கு - ரை.) சுற்றம்-பந்துவர்க்கம்; (சுப அசுப காலங்களில் ஒருவனைச்) சுற்றிநிற்பது: அம் - கருத்தாப்பொருள்விகுதி. உடுக்கப்படுவது - உடை. உண்ணப்படுவது - உணவு. இவ்விரண்டுமில்லாம லெனவே, மற்றைச் செல்வங்களை யிழத்தல் கூறவேண்டாதாயிற்று. ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு பொருள் கொடுப்பதைக்குறித்துப் பொருமைப்படுபவனது சுற்றங் கெடு மெனவே, அவன்கெடுதல் அருத்தாபத்தியாற் பெறப்பட்டது. கொடுப்பது-செயப்பாட்டுவினைப்பொருளில்வந்தசெய்வினைவினையாலணையும்பெயர்; உடுப்பது, உண்பது என்பனவும் இவ்வாறே: இவையெல்லாம் - சாதியொருமை. உடுப்பதூஉ முண்பதூஉமென்ற இடத்து இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில்நெடிலாய் அளபெடுத்தது; இன்னிசையளபெடை. இக்குறளின் கருத்தைப்பின்பற்றி, கம்பராமாயணத்தில் வேள்விப்படலத்தில் "எடுத்தொருவ ருக்கொருவ ரீவதனின் மூன்னே, தடுப்பதுநி னைக்கழகி தோதகைவில் வெள்ளி, கொடுப்பது விலக்குகொடியோயுனது சுற்ற, முடுப்பதுவு முண்பதுவுமின்றிவிடுகின்றாய்" என்றது. "ஈவது விலக்கேல்"

என்னும் ஒளவையார் வார்த்தையையும் அறிக. 'இது, 'நல்குரவுதருமென்றது' என்பது, மணக்குடிய ருரைவாக்கியம். (சு)

ககூஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(இ - ள்.) அழுக்காறு உடையானை - (பிறராக்கங்கண்டவழிப்) பொறுமையுடையானை, செய்யவள் - திருமகள், அவ்வித்து - (தானும்) பொறுது, தவ்வையை காட்டி விடும் - (தன்)தவ்வைக்குக் காட்டிநீங்கும்; (எ · று.)

தவ்வை - மூத்தவள். 'தவ்வையைக்காட்டி' என்பது, "அறிவுடையந் தண ணவரைக்காட் டென்றலே" என்பதுபோல, உருபுமயக்கம். மனத்தைக் கோடுவித்து அழுக்காறுடையனாயினானை யென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) திருமகள் - இலக்குமி. தன்தவ்வை - தனது தமக்கை. திருப்பாற்கடல் கடைந்தகாலத்து மூதேவி இலக்குமிக்கு முன்னே பிறந்தாள்; அதனால், இவர்களுக்கு முறையே மூத்தவளென்றும், இளையவளென்றும் பெயர். "அறிவுடையந்தண ணவரைக்காட் டென்றலே" என்னும் மேற்கோள் - கலித்தொகை, மருதம், எ - இல் உள்ளது; இதற்கு - அறிவுடைய அந்தணன் அவருக்குக் காண்பியென்று கூறினளேவென்று பொருள். 'தவ்வையைக் காட்டி' என்பதில், ஐயென்னும் இரண்டனுருபு - தனக்குரிய செயப்படுபொருளைத் தராமல், நான்காம்வேற்றுமைக்குரிய கோடற்பொருளைத் தந்ததனால், உருபுமயக்கம். அவ்வித்து - அவ்வியமென்னும் பெயர்ச் சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலவினையெச்சம்; பொறாமல் என்று பொருள். அவ்வியம் - ஔவியம்என்பதன்போலி அவ்வியம் என்பதற்கு - மனக்கோட்டமென்றும் பொருள் உண்டு ஆதலால், இரண்டாம்உரையில் அவ்வித்து - தன்மனத்தைக் கோணச்செய்து எனப்பட்டது. 'ஔவித்து' என்றும், 'தெளவை' என்றும் போலியில்லாமலும் பாடமுண்டு. செய்யவள் - செம்மைநிறமுடையவள்; செம்மையென்னும் பண்புப்பெயர் ஈறுபோய் முன்நின்றமெய்திரிந்த செய் - பகுதி. காட்டிவிடும் என்பன - இருசொல். உடையானை என்பதை உருபுமயக்கமாக்கி, பொறுமையுடையவனுக்கு இலக்குமி தன்னைக்காட்டாமல் மூதேவியைக் காட்டிவிடுவ ளென்றும் பொருள்கொள்ளலாம். 'தவ்வையைக் காட்டி விடும்' என்பதற்கு - 'தன் தவ்வையாகிய மூதேவியைக் காட்டி இவன்பாற்செல்லென்று போம்' என்பதும், 'இது, நல்குரவிற்குக் காரணங் கூறிற்று' என்பதும் - மணக்குடிய ருரைவாக்கியங்கள். (எ)

ககூஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(இ - ள்.) அழுக்காறு என ஒரு பாவி - அழுக்காறென்று (சொல்லப்பட்ட) ஒப்பில்லாத பாவி, திரு செற்று - (தன்னை உடையானை இம்மைக்கண்) செல்வத்தைக் கெடுத்து, தீ உழி உய்த்து விடும் - (மறுமைக்கண்) நரகத்திற் செலுத்திவிடும்; (எ - று.)

பண்பிற்குப் * பண்பு இல்லையேனும், தன்னை ஆக்கினானை இருமையும் கெடுத்தற்கொடுமைபற்றி, அழுக்காற்றினை 'பாவி' என்றார்; கொடியானை 'பாவி' என்னும் வழக்கு உண்மையின்.

இவை ஆறுபாட்டானும், அழுக்காறுடைமையதுகுற்றம் கூறப்பட்டது

(கு - ரை.) பாவியென்பது - கொடியதென்ற கருத்தைக் கொண்டது. பாவமுடையதெனப் பொருள் கூற லாகாது: ஏனெனில்?—அழுக்காறென்பது - பண்பு: அப்பண்பை 'பாவம்' எனப் பண்பாகக் கூறவேண்டும்: 'பாவி' எனப் பண்பியாகக்கூறின் அதற்கு ஒருபண்பு இருப்பதாய்விடும்: அங்ஙன் பண்புக்குஒருபண்பு ஒப்புக்கொள்வது நூல்வழக்கில் இல்லை யென்க. பண்புக்கும் ஒரு பண்பு உண்டு எனக் கொள்ளின், முடிவின்மை [அநவஸ்தா] என்ற குற்றம் வரு மென்பது, நூற்கொள்கை. எனஎன்னுஞ் செயவெனெச்சத்துக்கு-சொல்லப்பட்ட என முடிக்குஞ்சொல் வருவிக்கப்பட்டது. சாதாரணமான பாவம் இம்மையிற் பயனைப் பயவாது: மிகக்கொடியபாவமோ இம்மையில்தானே பயனைப் பயக்கும்: ஆதலால், 'ஒருபாவி' என்றதற்கு-'ஒப்பில்லாத பாவி' என்றார்; அழுக்காறு இம்மையிலும் செல்வத்தைக் கெடுக்குந் தீவினையாதலால். "அத்யுத்கடைஃ புண்யபாபைஃ இஹைவபலமஶ்நுதே" என்ற வடநூல்மேற்கோள் இங்குக் காணத்தக்கது. பண்பு - குணம். தன்னை ஆக்கினானை - பொருமையைச் செய்தவனை. உண்மையின் - இருத்தலால். பாவி - பாபீஎன்னும் வடமொழியின் திரிபு. செற்று - செறுஎன்னும் பகுதியடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம். தீயுழி - கொடியஇடம்; எரிவாய் வெம்மைகூர் நரகம். 'இது, செல்வங் கெடுத்தலேயன்றி நரகம்புகுவிக்கு மென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

ககஊ. அவ்வியங் நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(இ - ள்.) அவ்வியம் நெஞ்சத்தான் ஆக்கம்உம் - கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனது ஆக்கமும், செவ்வியான் கேடுஉம் - ஏனைச் செம்மையுடையவனது கேடும், (உளவாயின்), நினைக்கப்படும் - (அவை) ஆராயப்படும்; (எ - று.)

கோட்டம் - ஈண்டு அழுக்காறு. 'உளவாயின்' என்பது, எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமும் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையரால் 'இதற்கு ஏதுவாகிய பழவினை யாது?' என்று ஆராயப்படுதலின், 'நினைக்கப்படும்' என்றார். "இம்மைச் செய்தன யானறி நல்வினை, யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்திந், திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" என நினைக்கப்பட்டவாறு அறிக.

(கு - ரை.) கோட்டம் - கோணுதல். ஆக்கம்-ஐசுவரியம். ஏனை - மற்றை. செம்மையுடையவன் - மனத்திற் கோணலில்லாமையையுடையவன். கேடு -

* பி - ம்: பண்பி.

கெடுதி. ஈண்டு - இவ்விடத்தில். உளவாயின் - உள்ளனவானால். எஞ்சி - குறைத்து. இது, சொல்லெச்சம். பொருமையுடையவனுக்கு ஐசுவரியமும், அது இல்லாத நடுவுநிலைமையுடையவனுக்குத் தீமையும் உண்டாகாவாம்: ஒரு கால் உண்டாயின், முற்பிறப்பிற்செய்த ஊழ்வினையால் உண்டானவையாக அறியவேண்டு மென்பது, கருத்து. "இம்மைச் செய்தன" என்னும் மேற் கோள், சிலப்பதிகாரத்தில் மதுரைக்காண்டத்தில் அடைக்கலக்காதையில் 91-93 அடிகளாக உள்ளது; இதற்கு - யானறிய இப்பிறப்பில் நீ செய்தன வெல்லாம் நல்வினையாயிருக்கவும், அழகு மிக்க சிறந்த மாணிக்கக்கொழுந்து போன்ற மனைவியுடனே நீ இங்கே வந்து ஒருதுணையுமில்லாமல் தனியே அலைந்தது முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயன்தானே? என்று பொருள்: உழந்து போந்ததுஎன்பன, போந்து உழந்ததுஎன விகுதி பிரித்துக் கூட்டப் பட்டன. இது, மாதவியென்னும் வேசியைக் கூடிச் செல்வமனைத்தையும் இழந்து மனைவியாகிய கண்ணகியுடனே காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் மதுரைக்குவந்த கோவலனை நோக்கி அவனதுகண்பழகிய மாடலனென் னும் அந்தணன் கூறியது. "இந்த வூனைடுத்த, பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு, முன்செய்த தீவினையோ விங்ஙன்வந்து மூண்டதுவே" என்ற பட்டணத்துப் பிள்ளையார்பாடலையுங் காண்க. இவை யிரண்டும், செவ்வியான்கேடு ஆராயப்பட்டதற்கு உதாரணமாம்; அவ்விய நெஞ்சத்தானுக்கம் ஆராயப்பட்டதற்கு உதாரணம் வந்தவிடத்துக் காண்க. செவ்வி - பண்புப்பெயர். நினைக்கப்படும் என்பதற்கு - 'விசாரிக்கப்படும்' என்பது, மணக்குடியருரை. (கூ)

கஎ0. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

(இ - ள்.) அழுக்கற்று - அழுக்காற்றைச்செய்து, அகன்றார்உம் - பெரிய ராயினரும், இல்லை—; அஃது இல்லார் - அச்செயலிலாதார், பெருக்கத் தின் தீர்ந்தார்உம் - பெருக்கத்தின் நீங்கினரும், இல் - இல்லை; (எ - று.)

இவையிரண்டுபாட்டானும், கேடும் ஆக்கமும் வருதற்கு ஏது ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) அச்செயல் - அழுக்காறு. பெருக்கத்தின் - அபிவிருத்தியினி ன்றும். பொறுமையுடையவர் அழிவர், அது இல்லாதவர் விருத்தியடைவர் என்பது, கருத்து. உம்மைகள்இரண்டும் - முறையே உயர்வுசிறப்பு இழிவு சிறப்புக்களோடு எச்சப்பொருளன. : "அழுக்காறுடையான்கண்" என்று ஆராய்தலின் முன்புசொன்னதே பொருள்: இப்பொருள் கேடுண்டாகா தென்றது' என்பது, மணக்குடியருரை. (கo)

கஅ-ஆம் அதிகாரம் - வெஃகாமை.

அஃதாவது - பிறர்க்கு உரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடை மை கண்டவழிப் பொறுமையேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலும் குற்ற மென்றற்கு, இஃது, அழுக்காறுமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வெளவ - கைக்கொள்ள; அபகரிக்க. வெஃகல் - ஆசைப்பெருக்கம். 'வெஃகாமையாவது பிறர்பொருளை விரும்பாமை' என்பது, மணக்குடியருரை.

களக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ - ள்.) நடு இன்றி - (பிறர்க்கு உரியனகோடல் நமக்கு அறனன் றென்னும்) நடுவுநிலைமை இன்றி, நல் பொருள் வெஃகின்-(அவர்) நன்பொருளை (ஒருவன்) வெஃகுமாயின், (அவ்வெஃகுதல்),—குடி பொன்றி-(அவன்) குடியைக் கெடச்செய்து, குற்றம் உம் ஆங்கு எ தரும் - பலகுற்றங்களையும் அப்பொழுதே (அவனுக்குக்) கொடுக்கும்; (எ - று.)

குடியைவளரச்செய்து பலநன்மையும் பயக்கும் இயல்புபற்றிப் பொருள் வெஃகின்என்பார், 'நன்பொருள் வெஃகின்' என்றார். பொன்ற என்பது, 'பொன்றி'எனத் திரிந்துநின்றது; 'செய்து' என்பது, சொல்லெச்சம்.

(கு - ரை.) பிறர்க்குஉரியனகோடல் - அயலார்க்குஉரிய பொருள்களைக் கொள்ளுதல். நன்பொருள் - தருமவழியாற் சம்பாதிக்கப்பட்ட பொருளுமரம். பொன்ற - எச்சத்திரிபு; [நன். வினை. உள.] இதன்பின் 'செய்து' என்பது எஞ்சிநின்றது. சொல்லெச்சமாவது - சொல் குறைந்துநிற்பது. இங்கே, 'பொன்றுவித்து' என்பது-பிறவினைப்பொருளுணர்த்தும் வினவிகுதிதொக்கு 'பொன்றி'என நின்றதாகக்கொண்டார்,தொல்காப்பியச்சூத்திர விருத்திகாரர்; பிறவினைப்பொருளில்வந்த தன்வினை யென்க: இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் 'அந்தர்ப்பாவிதணிச்' எ ர்பர். 'இது, சந்தானநாசமூண்டா மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (க)

களஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்பார்
நடுவன்மை நாணு பவர்.

(இ - ள்.) படு பயன் வெஃகி - (பிறர்பொருளை வௌவினால் தமக்கு) வரும் பயனை விரும்பி, (அது வௌவுதற்கு), பழி படுவ செய்யார் - பழியின் கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார்; நடு அன்மை நாணுபவர் - நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர்; (எ - று.)

நடு - ஒருவன்பொருட்குப் பிறன் உரியனல்ல னென்னும் நடுவு.

(கு - ரை.) பயன்-சுகானுபவம் முதலியன. பழியின்கண்ணேபடுஞ் செயல்கள் - நிந்திக்கப்படுவனவற்றின்பாற் சேரும் தொழில்கள். நாணுதல்-அஞ்சுதல், செய்யக்கூசுதல். படுபயன் - எதிர்காலவினைத்தொகை. படுவ-பலவின்பால் வினையாலணையும்பெயர். 'இது, நடுவுநிலைமை வேண்டுபவர் செய்யாரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (உ)

களங. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(இ - ள்.) சிறு இன்பம் வெஃகி - (பிறர்பால் வௌவிய பொருளால் தாம் எய்தும்) நிலையில்லாத இன்பத்தை விரும்பி, அறன் அல்ல செய்யார்எ-

(அவர்மாட்டு) அறனல்லாத செயல்களைச் செய்யார்: மற்று இன்பம் வேண்டு பவர் - (அறத்தான்வரும்) நிலையுடைய இன்பத்தைக் காதலிப்பவர்; (எ - று.)

பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியு மென்பார், சிற்றின்பம்' என்றார். 'மற்றையின்பம்' என்பது, 'மற்றின்பம்' என நின்றது.

(கு - ரை.) இங்கே, நிலையுடைய இன்பம் - சுவர்க்க சுகஅநுபவம்; தாம் உள்ள அளவும் அழியாத ஸம்ஸாரசுகமுமாம். காதலிப்பவர் - விரும்புபவர். இக்குறளுக்கு - பேரின்பமாகிய மோக்ஷசுகத்தை அடைய விரும்புபவர் சிற் றின்பமாகிய காமசுகத்தைப் பெற விரும்பிப் பாவத்தொழில்களைச் செய்யார் எனப் பொருள்கொண்டால், 'பிறனில்விழையாமை,' 'வரைவின்மகளிர்', 'அ வாவறுத்தல்' என்னும் அதிகாரங்களுள் ஒன்றுக்கு உரியதாகி, இவ்வதிகாரத் தோடு பொருந்தா தாகலின், அங்ஙனம் பொருள்கூறலாகா தென அறிக. "மற்றென் கிளவி விஜமாற் றசைகிலை, யப்பாலிரண்டென மொழிமஞர் புலவர்," "மற்றைய தென்னுங் கிளவி தானே, சுட்டுகிலையொழிய வினங்குறித் தன்றே" என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களினால், மற்றுஎன்னும் இடைச் சொல்லுக்குப் பிறிதென்னும் பொருள் இல்லை யென்றும், அப்பொருள் மற்றை யென்னும் இடைச்சொல்லுக்கே உண்டென்றுந் தெரிதலால், 'மற்றையின்ப மென்பது மற்றின்பமென நின்றது' என்றார்; பின் னூல்செய்தவராகிய சென்னூ லாசிரியர் "விஜமாற் றசைகிலை பிறிதெனு மற்றே" எனச் சூத்திரஞ்செய்தது புதியனபுகுதலா மென்று உணர்க. ஏ-தேற்றம்; அசையுமாம். 'இது, வீடுபெற வேண்டுவார் செய்யா ரென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம்.(கூ)

களச. இலமென்று வெஃ்குதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(இ - ள்.) இலம் என்று - (யாம்) வறியம் என்று கருதி, வெஃ்குதல் செய்யார் - (அது தீர்த்தற்பொருட்டுப் பிறர்பொருளை) விரும்புதல் செய்யார்: புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்ற மில்லாத காட்சியினையுடையார்; (எ - று.)

வெல்லுதல்-பாவநெறிக்கட் செல்லவிடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமை இன்மையின், வெஃ்குதலும் இல்லையாயிற்று. புன்மை யில் காட்சி - பொருள்களைத் திரிபின்றி உணர்தல்.

(கு - ரை.) யாம் வறியம்-நாம் ஏழைமையுடையோம்; நுகரப்படும் பொரு ளொன்றும் உடையோமல்லோம். அது - வறுமை. காட்சி - அறிவு; தொழிற் பெயர். ஐம்புலன்களையும் பாவவழியிற்செல்லவிடாமல் அடக்கியவர்க்கு, அப் புலன்கள் அனுபவிக்கும்பொருள்கள் இல்லாமையாகிய வறுமை தோன்றா தென்க. திரிபின்றி-மாறுபாடில்லாமல்; மாறுபாடாவது,பழுதையைப் பாம்பென் றும், கானலை நீரென்றும், ஈப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றை மற்றொன்றாக அறிதல். ஐம்புலன்கள்-சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம்; இவை, முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப்படும்: இவை - செவி, மெய், கண், வாய், மூக்கு என்னும் ஐம்பொறிகளின் விஷயங்களாம்.

இங்கே பொறி புலனெனப்பட்டது. இலம் - எதிர்மறைத் தன்மைப்பன்மை முற்று. புலம்வென்றகாட்சி,புன்மையில் காட்சி யென்க. புலம்வென்ற காட்சி என்னுமிடத்து, புன்மையில் என்றது - இடைப்பிறவரல். இனி, புலம் வென்ற புன்மையில் காட்சி என்பதற்கு - ஐம்புலன்களாலும் வெல்லப்படுத லாகிய இழிவை உடைத்தாகாத அறிவென்றும் பொருள் கொள்ளலாம். 'இது, தெளிவுடையார் செய்யா ரென்றது' என்பது, மணக்குடியருரை.

களரி. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(இ - ள்.) அஃகி-நுண்ணிதாய், அகன்ற-எல்லாநூல்களினுஞ் சென்ற, அறிவு - (தம்) அறிவு, என் ஆம்.- என்னபயத்ததாம்? வெஃகி - (பொருளே) விரும்பி, யார்மாட்டும் - யாவர்மாட்டும், வெறிய-அறிவோடுபடாத செயல் களே, செயின் - (அறிவுடையார்) செய்வராயின்; (எ - று.)

யார்மாட்டும் வெறியசெய்தலாவது - தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமை யாகலின், 'அறிவென்னும்' என்றார்.

(கு - பை.) நுண்ணிதாய் - நுட்பமானதாய்; சூட்சுமமாய். நூல்கள் - சாஸ்திரங்கள். சென்ற - சென்றுவிசாலித்த. என்ன பயத்ததாம் - என்ன பயனை உடையதாகும்? படாத - பொருந்தாத. வெறிய - வெறுமையுடை யவை: அறிவுடன் கூடாதவை. இனி மயக்கத்தோடுகூடியவையெனினுமாம்: வெறி - மயக்கம். தக்கார் - மேன்மக்கள், யோக்கியர். தகாதார் - கீழ்மக்கள், அயோக்கியர். கடியன - வெறுக்கத்தக்கவை. யார்மாட்டு, மாட்டு - ஏழனுருபு. உம்மை - முற்று. வெறிய - பெயர். நுண்ணிதாகிப் பரந்த அறிவுடையா னெனினும் அதனைப் பயன் யாதாம்? எல்லார்மாட்டும் பொருளே விரும்பி ஈரமில்லாதனசெய்வனெயின் என்றவாறு. 'இது, அறிவுடையார் செய்யா ரென்றது' என்பது, மணக்குடியருரை. (கு)

களசு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(இ - ள்.) அருள் வெஃகி - அருளாகிய அறத்தை விரும்பி, ஆற்றின் கண் - (அதற்கு) வழியாகிய இல்லறத்தின்கண், நின்றான் - நின்றவன்,— பொருள் வெஃகி - (பிறர்) பொருளே அவாவி, பொல்லாத சூழ - (அதனை வருவிக்கும்) குற்றநெறிகளே எண்ண, கெடும்—; (எ - று.)

இல்லறநெறியால் அறிவுமுதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு 'ஆறு' என்றார். கெடுதல் - இரண்டுஅறமும் சேர இழத்தல். சூழ்ந்ததுணையானே கெடு மெனவே, செய்தாற்கெடுதல் சொல் லாமையே பெறப்பட்டது.

(கு - பை.) அருளாவது - ஒருசம்பந்தமுமில்லாமல் இயல்பாக எல்லா வுயிர்களின் மேலும் செல்வதாகிய கருணை. அருளாகியஅறம் என்றது; துற வறத்தை. துறவறத்திற்கு அருளுடைமை மிகச்சிறந்த விரத மாதலால், துற

வ்றம் 'அருள்' எனப்பட்டது; மேல் துறவறவியலின் முதலில் அருளுடைமை கூறப்படுமாறு அறிக. அதற்கு வழியாகிய - துறவறத்தையடைதற்கு மார்க்க மாகிய. அவாவி - விரும்பி. வருவிக்கும் - அபகரிக்கிற. கெடும்-கெடுவான். முதிர்த்துழியல்லது - முதிர்த்தாலல்லாமல். துறக்கப்படாமையின் - பொருட் பற்றைவிடமுடியாதாதலால். அதனை-இல்லறத்தை. இரண்டுஅறமுஞ் சேர இழத்தல் - துறவறம் இல்லறம் என்னும் இரண்டுதருமங்களையும் ஒருங்கே இழப்பது. சூழ்ந்த தூணையானே - ஆலோசித்த மாத்திரத்திலுலே. இனி, அருள்வெஃ்கி யாற்றின்கண்நின்றுன் என்பதற்கு - (கடவுளின்) கருணையை விரும்பி அதனைப் பெறும் வழியாகிய அறநிலையில் நின்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். பொல்லாத - பெயர். சூழ - காரணப்பொருளில் வந்த செய வெனெச்சம். 'இது, அருளுடையானுங் கெடுவ னென்றது' என்பது.மணக் குடியருரைவாக்கியம். (ஈ)

கஎஎ. வேண்டற்க வெஃ்கியா மாக்கம் விளவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(இ - ள்.) வெஃ்கி ஆம் ஆக்கம் - (பிறர்பொருளை) அவாவி(க்கொண்டி) அதனுலாகின்ற ஆக்கத்தை, வேண்டற்க - விரும்பாதொழிக: விளை வயின் - (பின்) அனுபவிக்குங்கால், பயன் - (அவ்வாக்கத்தின்) பயன், மாண்டற்கு அரிது ஆம் - நன்முத லில்லை யாகலான்; (எ - று.)

விளை, என்பது - முதனிலைத்தொழிற்பெயர்.

இவையேழுபாட்டானும் வெஃ்குதலின் குற்றம் கூறப்பட்டது.

(கு - பை.) அவாவி - விரும்பி. கொண்டி - கவர்ந்து. கால்-காலத்தில். மாண்டற்கு அரிதாம் - மாட்சிமைப்படுவதற்கு அரியதாம். விளை-பயன்விளை தல்; தொழிற்பெயர். விளை வயின் - நான்காம் வேற்றுமையுருபும் பயனு முடன்றொக்கதொகை: பயன் விளைதற்கு உரிய காலத்தில் எனவிரியும். இனி, விளைவயின் என்பது - விளையும்வயின் என எதிர்காலவினைத்தொகை யாகவுமாம். வேண்டற்க - எதிர்மறைவியங்கோள். அரிதுஎன்பதில், அரு மை - இன்மை குறித்தது; "உறற்பால, தீண்டா விடுத லரிது" என்ற இடத் திற்போல. காரணங்காட்டி விலக்கியதனுல், இப்பாட்டு 'ஏதுவிலக்கு' என் னும் அலங்காரத்தின்பாற் படு மென்பர். (எ)

கஎஅ. அஃ்காமை செல்வத்திற் கியாதெனின் வெஃ்காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(இ - ள்.) செல்வத்திற்கு - (சுருங்கன்மாலத்தர்கிய) செல்வத்திற்கு, அஃ்காமை - சுருங்காமைக்காரணம், யாது எனின் - யாதென்று (ஒருவன்) ஆராயின், பிறன் வேண்டும் கை பொருள் வெஃ்காமை - (அது) பிறன்வேண் டுங் கைப்பொருளை (த் தான்) வேண்டாமையாம்; (எ - று.)

அஃ்காமை-ஆகுபெயர். வெஃ்காதான்செல்வம் அஃ்காதென்பதாயிற்று.

(கு - பை.) சுருங்கன்மாலத்தாகிய-குறையுந்தன்மையையுடையதான. சுருங்காமைக்காரணம் - குறையாதிருத்தற்கு ஏது. அது - அக்காரணம்.

பிறன்வேண்டும் கைப்பொருளை - அயலானது அதீனமாயுள்ளதும் அதுபற்றி அவனுல் விரும்பப்படுவதுமான திரவியத்தை. அஃகாமைஎன்னும் எதிர் மறைத்தொழிற்பெயர், அதன்காரணமென்னும்பொருளைத் தந்ததனுல், காரிய வாகுபெயர். வெஃகாதான்செல்வம் அஃகாது - பிறன்பொருளைவிரும்பாதவ னது செல்வம் குறையாது. இனி, இக்குறளுக்கு - ஒருவன் தனதுசெல்வம் சுருங்காமலிருக்கும்பொருட்டுச் செய்யவேண்டுவது என்னவென்றுல் அயலா னுக்கு உரிய பொருளைத் தான் விரும்பாதிருத்தல்வேண்டும் என்று உரை கூறினுமாம். செல்வத்திற்கு + யாது = செல்வத்திற்கியாது; குற்றியலிகரம்; [நன். எழுத்து. ஈஅ, உயிரீறு. கச.] 'இது, செல்வமழியாது என்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

களக. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தங்கே திரு.

(இ - ள்.) அறன் அறிந்து - (இஃது) அறமென்று அறிந்து, வெஃகா- (பிறர்பொருளை) விரும்பாத, அறிவு உடையார் - அறிவுடையாரை, திரு - திருமகள், திறன் அறிந்து - (தான் அடைதற்கு ஆங்) கூற்றினை அறிந்து, ஆங்கே - அக்கூற்றுனே, சேரும் - சென்று அடையும்; (எ - று.)

அடைதற்கு ஆம் கூறு - காலமும் இடனும் செல்வியும் முதலாயின.

இவையிரண்டுபாட்டானும் வெஃகாமையின் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) இஃது - விரும்பாமை. அடைதற்கு ஆம் கூறு - அடைவ தற்குஏற்ற உபாயம். அக்கூற்றுனே சென்றுஅடையும் - அவ்வுபாயத்தாலே போய்ச் சேர்வள். செல்வி - மனமகிழ்ச்சியும், முகமலர்ச்சியும், இன்சொல் லும் உடையளு யிருக்குஞ் சமயம். ஆங்கே - அப்பொழுதே யென்றும் பொருள்கொள்ளலாம். 'இது, செல்வமுண்டாமென்றது' என்பது, மணக் குடியருரைவாக்கியம். (கூ)

கஅ0. இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) எண்ணுது - (பின்விளைவது) அறியாது, வெஃகின் - (ஒரு வன் பிறன்பொருளை) வௌவக்கருதின்,—(அக்கருத்து),—இறல் ஈனும் - (அவனுக்கு) இறுதியைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு - (அப் பொருளை) வேண்டாமை யென்னுஞ் செல்வம், விறல் ஈனும் - வெற்றியைப் பயக்கும்; (எ - று.)

பகையும் பாவமும் பெருக்கலின் 'இறலீனும்' என்றும், அப்பொருளை வேண்டி உழல்வோர்யாவரையுங் கீழ்ப்படுத்தலின் 'விறலீனும்' என்றுங் கூறி னுர். செருக்கு - ஆகுபெயர்.

இதனுன், அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

(கு - ரை.) பின்விளைவது-பின்புஉண்டாகும் பயனுகிய தீமை. இறுதி- நாசம்; இம்மையிற் பகைவராலும், மறுமையிற் பாவத்தாலும் எனக் காண்க.

பயக்கும் - தரும். உழல்வோர் - அலைபவர். செருக்கு - மனக்களிப்புக்குக் காரணமான செல்வத்தைக் குறித்ததனால், காரியவாகுபெயர். அவ்வீருமையும் - வெஃகுதலின்குற்றமும், வெஃகாமையின்குணமும். ஒருங்கு-ஒருசேர. இறல் - தொழிற்பெயர்; இறு - பகுதி. 'வேண்டாமையென்னுஞ் செருக்கு' என்றது, காரியத்தைக் காரணமாக உபசரித்தபடி. 'இது, உயிர்க்கேதுதரு மென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கo)

ககூ - ஆம் அதிகாரம்—புறங்கூறுமை.

அஃதாவது - காணுதவழிப் பிறரை இகழ்ந்துரையாமை. மொழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது, அழுக்காறுமைவெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) காணுதவழி - காணுதஇடத்தில். அழுக்காறும், வெஃகாமையும் - மனக்குற்றம். புறங்கூறல் - மொழிக்குற்றம். மனக்குற்றங் காரணமாகச் சொற்குற்றம் உண்டாவது, அதிகாரமுறைமைக்குக் காரணம்.

கஅக. அறங்கூ றல்ல செயினு மொருவன்
புறங்கூ றனென்ற லினிது.

(இ - ள்.) ஒருவன்—, அறம் கூறான் - அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது, அல்ல செயின் உம் - பாவங்களைச் செய்யுமாயினும், புறங்கூறான் என்றல் இனிது - (பிறனைப்) புறங்கூறுனென்று (உலகத்தாராற்) சொல்லப்படுதல் நன்று; (எ - று.)

புறங்கூறுமை, அக்குற்றங்களான் இழிக்கப்படாது மேற்பட்டுத்தோன்று மென்பதாம்.

இதனுன், அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) அக்குற்றங்கள் - தருமமென்பதை வாயினுற் சொல்லுவதுஞ் செய்யாமற் பாவஞ்செய்தலினு லாகிய குற்றங்கள். இழிக்கப்படாது - கீழ்ப்படுத்தப்படாமல். அவ்வறம் - புறங்கூறுமை. புறங்கூறுமை எல்லாக்குற்றங்களையும் அடக்கிவிடும் என்பது, கருத்து. அறங்கூறான் என்பதில்,கூறன்-வினைமுற்றுவினையெச்சம். என்றல் - செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை. 'இது, பாவஞ்செய்யினும் நன்மை பயக்கு மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். இனி, நல்ல எனப் பதம்பிரித்து, இக்குறளுக்கு-ஒருவன் (எவராலும்) ஒருதருமமும் (தனக்குச்) சொல்லவேண்டாதவனுய்(த் தானே எல்லாத்தருமங்களையும் அறிந்து) நல்வினைகளையே செய்துவந்தானுயினும் (அவனுக்கும் பிறனைப்) புறங்கூறனென்பது (அவ்வெல்லாத் தருமங்களினும்) நன்மைதருவதாம் என்றும் உரைகூறவும்இடமுண்டு: "தீய, புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும், அறங்கூற வேண்டா வவற்கு" என்னும் நாலடியார்ச்செய்யுளை நோக்குக. (க)

கஅஉ. அறனழீஇ இயல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(இ - ள்.) அறன் அழீஇ - அறமெனப்படுதான்று (இல்லையென) அழித்துச்சொல்லி, அல்லவை செய்தலின் - (அதன்மேற்) பாவங்களைச் செய்தலினும், தீது - தீமையுடைத்து: புறன் அழீஇ - (ஒருவனைக்) காணுதவழி (இகழ்ந்துரையால்) அழித்துச்சொல்லி, பொய்த்து நகை-(கண்டவழி அவனெதி) பொய்த்து நகுதல்; (எ - று.)

உரழ்ச்சி - நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல்-ஒளியைக்கோறல்.

(கு - ரை.) இகழ்ந்துரையால் அழித்துச்சொல்லி - நிந்தைமொழியால் அவன்புகழைக்கெடுத்துப்பேசி. பொய்த்துநகுதல்-பொய்யாய்நகைத்து வெளியன்பு பாராட்டுதல். செய்தலின் என்பதிலுள்ள இன்என்னும் ஐந்தனுருபு-காட்டிலும்என்னும் உறழ்ச்சிப்பொருள்பட நின்றது. அறனையழித்துச்சொல்லுதலினும் ஒருவனைப்புறங்கூறுதல் தீயதென்றும், அதன்மேற்பாவஞ்செய்தலினும் அதன்மேல் அவனெதி பொய்த்துநகுதல் தீயதென்றும் முறையே இயைத்துக் கருத்துக்கொள்க: முறைநிரல்நிறைப்பொருள்கோள்: அதனிலக்கணம் - வரிசையாகச்சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவற்றையும் முறையே சொல்லுதலாம். ஒளியைக்கோறல் - பெருமையைக்கெடுத்தல். அழியென்னும் பகுதி, அழித்து என்னும் வினையெச்சத்தின் பொருளைத் தரும்பொருட்டு, ஈண்டு அளபெடுத்ததனால், சொல்லிசையளபெடை. எ - தேற்றம். நகை - தொழிற்பெயர்; நகு - பகுதி, ஐ - விகுதி: நகை - பகுதியாயின், முதனிலைத்தொழிற்பெய ரென்க. அறனழீஇ என்பதற்கு - (பிறர்செய்யுந்) தருமங்களை அழித்து என்றும் பொருள் கொள்ளலாம். 'இது, பாவத்தினும் மிக்கபாவ மென்றது'என்பது, மணக்குடியருரை.

கஅஈ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(இ - ள்.) புறம் கூறி - (பிறனைக்) காணுதவழி இகழ்ந்துரைத்து, பொய்த்து - (கண்டவழி அவற்கு இனியனைப்) பொய்த்து, உயிர் வாழ்தலின்-(ஒருவன்) உயிர்வாழ்தலின், சாதல் - (அதுசெய்யாது) சாதல்,—அறம் கூறும் ஆக்கம் தரும் - (அவனுக்கு) அறநூல்கள்சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும்.

பின், புறங்கூறிப்பொய்த்தல் ஒழிதலின், 'சாதல் ஆக்கந்தரும்' என்றார். ஆக்கம் - அஃதெதிர்ந்தார் மறுமைக்கண் எய்துப் பயன். அறம்-ஆகுபெயர். தருமென்பது, இடவழுவமைதி.

(கு-ரை.) உயிர்வாழ்தலின்-ஜீவித்தலைக்காட்டிலும். பின்-இறந்தபின்பு. ஆக்கமாவது - புறங்கூறுமவிறந்தவர் மறுமையில் அடையும் இன்பம். அறம்-தருமசாஸ்திரத்தை உணர்த்தலால், காரியவாகுபெயர். 'அவனுக்குக் கொடுக்கும்' என்னுமல், "அவனுக்குத்தரும்" என்றது, இடவழுவமைதி; தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்தில் கிளவியாக்கத்தில் "அவற்றுள், தருசொல்வரு சொல் லாயிரு கிளவியுந், தன்மைமுன்னிலை யாயிரிடத்த"என்னுஞ் சூத்திரத்தின்படி தன்மைமுன்னிலைகளுக்கு உரிய தருசொல், அதற்குமாறாக இங்கே படர்க்கையிடத்துக்கு வந்தமையால் இடவழுவாகி, "செலவினும் வர

வினுந்தரலினுங் கொடையினும், நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னும், அம்மூ விடத்து மூரிய வென்ப'' என்னும் பொதுவிதியால் அமைக்கப்படுதலால், வழுவமைதியாயிற்று:''எனை யிரண்டு மேனை யிடத்த''என்னுஞ் சூத்திரத்தால், 'செல்'என்னும்வினையோடு 'கொடு' என்னும் வினையே, படர்க்கைக்கு உரியதாமாறு உணர்க. வழுவமைதியாவது - இலக்கணக்குற்றமுள்ளதாகக் காணப்பட்டாலும் முன்னோரால் அங்கீகரித்து அமைக்கப்பட்டது. அது செய்யாது-அங்ஙனம்வாழாமல். இனி, இக்குறளுக்கு - தற்கொலை செய்தலினும் புறங்கூறுதல் தீயதென்று கருத்து உரைத்தலுமாம். (ரு)

கஅசு. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ - ள்.) கண் நின்று-(ஒருவன்) எதிரே நின்று, கண் அற சொல்லின் உம் - கண்ணோட்டமறச் சொன்னலையினும், முன் இன்று-அவனெதிரின்றி, பின் நோக்கா சொல் - பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க - சொல்லாதொழிக; (எ - று.)

பின் - ஆகுபெயர். சொல்வான்தொழில், சொல்மேல் ஏற்றப்பட்டது.

இவை மூன்றுபாட்டானும், புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

(கு - ரை.) கண்ணோட்டமறச் சொன்னலையினும் - தாட்சிணியமில்லாமற் பேசினலும். பின்னோக்காச்சொல் - நிந்தைமொழி. பின் என்பது - பின் காலத்தில் உண்டாகுங் குற்றத்தைக் குறித்தலால், காலவாகுபெயர். பிற்பயனைநோக்காதவனது சொல்லை 'பின்னோக்காச்சொல்' என்றது - உபசார வழக்கு; 'பின்னோக்காச்சொல் என்பது-ஒருபொருளின்வினை மற்றோர்பொருளின்வினையான இலக்கணை' என்று பிரயோகவிவேகநூலாசிரியர்கூறியிருக்குமாறு அறிக. புறங்கூற்று - புறங்கூறுதல். கண் - ஒருவர்மேற் கண் சென்ற விடத்து உண்டாகிற முகதாட்சிணியத்தை இலக்கணையாற் குறித்தது. தன்னைவைபவனைப் பொருமல் தான் வைவதாயிருந்தாலும் எதிரிலே வைய வேண்டுமேயன்றிப் புறத்தே வசைகூறலாகா தென்பது, இதன்கருத்து. இன்று - எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம், ஈறுதிரிந்தது. இனி, இக்குறளுக்கு, முன் நின்று - தன்எதிரில் நின்று, (ஒருவன்), கண் இன்று - தாட்சிணியம் இல்லாமல், கண்அற - (தன்) பெருமை கெடும்படி, சொல்லின் உம் - பேசினலும், பின் - (அவனது எதிரிலேயன்றிப்) புறத்தே, நோக்கா சொல் - ஆராய்ச்சியில்லாதசொற்களை, சொல்லற்க-சொல்லாதொழிக என்று உரை கூறினும் அமையும். ஒருவன்கண்ணெதிரிலேநின்று தாட்சிணியமின்றிக் கடிஞ்சொற் கூறினலுங் கூறலாம்: அவனெதிரிலேயன்றிப் புறத்திலே பழிச்சொற் கூறலாகாது என்று இக்குறட்குப் பொருள்கூறவும் இடமுண்டு. 'இது, புறங்கூறுதல் தவிர்கவென்றது. இதனுல், கடியசொற்கூறலும் ஆகாதென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (ச)

கஅநி. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னண்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(இ - ள்.) அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை - (புறஞ்சொல்லு வானொருவன்) அறனே (நன்றென்று சொல்லினும் அது தன்மனத்தானுய்ச்) சொல்லுகின்றனல்ல னென்பது, புறம் சொல்லும் புன்மையால் காணப் படும் - (அவன்) புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும்; (எ - று.)

மனம் தீதாகலின், அச்சொல் கொள்ளப்படா தென்பதாம்.

(கு - ரை.) மனப்புன்மை - மனக்குற்றம். ஒருவனைக் கண்டவிடத்துப் புகழ்ந்துபேசிக் காணுதவிடத்து இகழ்ந்துபேசுபவன் 'தருமம் நல்லது' என்று பிரசித்தமான விஷயத்தைப் பிறனொருவனுடு எடுத்துச்சொன்னலும், கேட் பவன் இவனதுதன்மையை உள்ளபடி தெரிந்தவனுக இருந்தால், அவ்வார் த்தையைத் தனது முகமலர்ச்சியின்பொருட்டுக் கூறுவதாக நினைப்பானே யன்றி மனப்பூர்வமாகச்சொன்ன தென்று நினைக்கமாட்டா னென்பது, கரு த்து. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் - தருமத்தை நல்லதெனச் சொல்ல வேண்டுமென்னும் மனமுடையவன். இதனை 'நெஞ்சொ டறஞ்சொல் வான்' என வீருதிபிரித்துக் கூட்டுவர், பிரயோகவிவேகநூலார். இனி, இக் குறளுக்கு, புறங்கூறுபவனைத் தரும சிந்தையில்லாதவனுக அறியவேண்டு மென்று கருத்துப்பட உரைத்தலுமாம். 'இதனைச்சொல்லுவார் அறம் அறி யா ரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (நி)

கஅசு. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுங்
திறன்றெரிந்து கூறப் படும்.

(இ - ள்.) பிறன் பழி கூறுவான் - பிறனொருவன்பழியை (அவன்புற த்து)க் கூறுமவன்,—தன் பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந்திறமுடையவற்றைத் தெரிந்து (அவனுக்) கூறப் படும்; (எ - று.)

'புறத்து' என்பது, அதிகாரத்தாற் பெற்றும்; இது, வருகின்றவற்றிற் கும் ஒக்கும். திறன் - ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவன் இறந்துபட்டுஉளையுந்திறத்தனவாகிய பழிகளே நாடி எதிரேகூறுமாகலின், 'திறன்றெரிந்து கூறப்படும்' என்றார்.

(கு - ரை.) உளையுந்திறமுடையவை - வருத்தப்படுத்தும் வலிமையுடை யவை. தெரிந்து - ஆராய்ந்தறிந்து எடுத்து. புறங்கூறுமையென்னும் அதி காரத்துக்கு ஏற்ப, கூறுவான் என்றவிடத்து 'புறத்து' என்னுஞ்சொல் வரு விக்கப்பட்டது; அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனே 'ஆநுஷங்கிகம்' என் பர், வடநூலார். வருகின்றவற்றிற்கும் என்றது, மேல் "பகச் சொல்லி", "தூற்றுமரபினர்" என்றவை முதலிய இடங்களுக்கும். திறன் - வலிமையு டைய பழிச்சொற்களுக்குப் பண்பாகுபெயர். ஒருவனை மற்றொருவன் ஒரு

காற் புறங்கூறினால் அக்கூறப்பட்டவன் கூறியவன்மேல் பெரும்பழிகள் பல கூறி அவனுக்குப் பெருந்துன்பங்களே உண்டாக்கிவிடுவா னுதலாற் புறங்கூறலாகாதென்பது, கருத்து. இனி, இக்குறளுக்கு - பிறன்பழியைப் புறங்கூறுபவன் (அப்புறங்கூறுதலாகிய) தன்பழியை(ப் பெரியோர்யாவரும்) நீனைக்குந்தன்மையை ஆராய்ந்து கூறவேண்டு மென்றும் உரைகூறலாம்; இவ்வாறு தன்பழியை ஆராய்வானுயின் தானே புறங்கூறுனுகி நிற்பா னென்பது, கருத்து: புறங்கூறுதலாகிய தன்பழியைத் தானறிவானுயின் அவனுக்குத் தன்பழியே உயர்ந்துகாணப்படுமாதலாற் பிறன்பழியைக் கூறவேமாட்டா னென்க; இவ்வுரையில், உள்ளு மென்பது - எதிர்காலப்பெயரெச்சம். இக்குறளில், எதிர்மறைமுகத்தால், பிறனைப் புறத்தேபழிகூறுதவன் தானும் பிறராற் பழிகூறப்படான் என்னுங் கருத்துத் தோன்றுதல் காண்க. (சு)

கஅள. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ரு தவர்.

(இ - ள்.) பக சொல்லி - (தம்மைவிட்டு) நீங்குமாற்ருற் புறங்கூறி, கேளிர் பிரிப்பர் - (தம்) கேளிரையும் பிரியப்பண்ணுவர்: நக சொல்லி நட்பு ஆடல் தேற்ருதவர் - கூடிமகிழுமாறு (இனியசொற்களைச்) சொல்லி (அயலாரோடும்) நட்பாடலை அறியாதார்; (எ - று.)

சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. 'கேளிரையும் பிரிப்பர்' என்ற கருத்தான், 'அயலாரோடும்' என்பது வருவித்து உரைக்கப்பட்டது. அறிதல்-தமக்கு உறுதியென்று அறிதல். "கடியு,மிடந்தேற்ருள் சோர்ந்தனள்கை" என்புழிப்போல, தேற்ருமை - தன்வினையாய் நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவ ரென்பது கருத்து.

(சு - ரை.) நீங்குமாற்ருல் - பிரியும்படி. கேளிர்-சிநேகிதரும், சுற்றத்தாரும்: சூக்ஷமசமாசாரங்களைக் கேட்பவராதலால், 'கேளிர்' என்றுபெயர்: கேள்-பகுதி; இதனைக் கேண்மையென்னும் பண்புப்பெயரின்அடி யென்றுங் கொள்ளலாம்; இர் - பலர்பாற்பெயர்விகுதி. நட்பாடல் - சிநேகஞ் செய்தல். கேளிர் என்றவிடத்துத் தொகுத்தல்விகாரம் பெற்ற உம்மை - உயர்வு சிறப்புப்பொருளது. உறுதியென்று - நன்மையென்று. "கடியு, மிடந்தேற்ருள் சோர்ந்தனள் கை"என்னும் மேற்கோள் கலித்தொகை, மருதக்கலி, உள-இல் உள்ளது; இதற்கு - (வண்டுகளை) ஓட்டுமிடம் அறியாளாய்க் கைசோர்ந்தா ளென்று பொருள். தேற்ருமை யென்பதைத் தன்வினைக்கும் பிறவினைக்கும் பொது வென்ருயினும், தன்வினைப்பொருளில்வந்த பிறவினை யென்ரு யினும், தேருமை யென்பதன் விரித்தல்விகார மென்ருயினுங் கொள்க; "தேற்ருய் பெரும நின்பொய்யே"எனப் புறநானூற்றிலும், "வாளிஞற் பேசினல்லால் வாயிஞற்பேசல் தேற்றேன்" எனச் சிந்தாமணியிலுங் காண்க. இது 'நட்டவரையிழப்பரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (எ)

கஅஅ. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினை
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(இ - ள்.) துன்னியார் குற்றம்உம் தூற்றும் மரபினர் - (தம்மொடு) செறிந்தாரது குற்றத்தையும் (அவர்புறத்துத்) தூற்றும் இயல்பினையுடையார், எதிலார்மாட்டு என்னை கொல்-அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ?

தூற்றுதல் - பலரும்அறியப் பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணுமையின், 'என்னைகொல்' என்றார். செய்வது என்பது, சொல்லெச்சம். 'என்னர்கொல்' என்று பாடமோதி, எவ்வியல்பினராவ ரென்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) செறிந்தார் - கலந்தவர்; நண்பரும், உறவினரும். அதனிற் கொடியது பிறிதொன்று காணுமையின் - புறத்தே பழிகூறுதலினுங் கொடுமையுடையது வேறொன்று காணப்படாமையால். அயலாரிடத்திற் செய்யத்தகாதது இதுவென்று அவரால் நினைக்கப்படுவ தொன்றும் இல்லையென்பார் 'என்னைகொல்' என்ரு ரென்றுங் கொள்ளலாம். எவ்வியல்பினராவர் - எந்தக்குணத்தை யுடையவராவர்? குற்றமும், உம்மை - உயர்வுசிறப்பு. 'என்னர்' என்ற பாடத்திற்கு, அச்சொல் விளிவடியாப்பிறந்த பலர்பாற் குறிப்புமுற்று; ன் - சாரியை, மற்றொரு ன் - சந்தி: அன்னர், இன்னர்என்பவற்றிற்போல. எதிலார் - யாதொருசம்பந்தமுமில்லாதவர். புறங்கூறுபவர் மற்றெந்தத் தீவினைக்கும் அஞ்சா ரென்க. 'இது, யாவரோடும்பற்றில ரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (அ)

கஅகூ. அறனேக்கி யாற்றுங்கொல் வையம் புறனேக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(இ - ள்.) புறன் நோக்கி - (பிறர்) நீங்கினஅளவு பார்த்து, புல் சொல் உரைப்பான் - (அவர்)*பழிப்புரையை உரைப்பானது, பொறை-உடற்பாரத்தை, வையம் - நிலம், அறன் நோக்கி-(இக்கொடியதுபொறுத்தலே எனக்கு) அறமாவதென்று கருதி, ஆற்றும் கொல் - பொறுக்கின்றதுபோலும்; (எ-று.)

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும் இது பொறுத்தற்கரிது என்னுங் கருத்தால், 'அறனேக்கி யாற்றுங்கொல்' என்றார்.

இவை யைந்துபாட்டானும், புறங்கூறுவார்க்கு எய்துங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) நீங்கினஅளவு - நீங்கியசமயமாத்திரத்தை. அவர் பழிப்புரை - அவர்களுடையகுற்றங்களேக்காட்டுகிறநிந்தைச்சொல். உடற்பாரம் - உடம்பின்சுமை. இயல்பு - ஸர்வம்ஸஹாபான பூமிக்குச் சுபாவகுணம். கருக - ஆம் திருக்குறள் காண்க. பாவிகளுடைய உடம்பைப் பூமிதேவிக்குப் பார மென்பது, நூற்கொள்கை; ''தேமிசேர் தடங்கையினனே நினேப்பிலாவலிநெஞ்சுடைப், பூமிபாரங்கள்'' என்பது முதலியவற்றுல் அறிக. கொல் என்னும் இடைச்சொல், இங்கே தற்குறிப்பேற்றவணிக்கு உறுப்பாய் நின்றது. பொறை - பொறுக்கப்படுவது: பொறுத்தல் - சுமத்தல், ஐ - செயப்படுபொருள்விகுதி. புறங்கூறுவானுடம்பு பூமிக்குப் பாரமென்க.

* பி - மீ: பழித்துரையை.

ககூ0. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(இ - ள்.) ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பின் - (ஏதிலாரைப்புறங்கூறுவார் அதற்கு) அவர்குற்றம் (காணுமாறு) போல(ப் புறங்கூறலாகிய)தம் குற்றத்தையும் காணவல்லராயின், மன்னும் உயிர்க்கு (அவர்) நிலேபேறுடைய உயிர்க்கு, தீது உண்டு ஓ - வருவதொரு துன்பமுண்டோ?

நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமைநோக்கி 'காண்கிற்பின்' என்றும், கண்டவழிஒழிதலின் டாவம்இன்மை மாகவே வரும் பிறவிகளிலுந் துன்பமில்லே யென்பதுநோக்கி 'உயிர்க்குத் தீதுண்டோ' என்றும் கூறினர்.

இதனுன், புறங்கூற்றொழிதற்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமை - நடுவுநிலேமையிலே நின்று சமனுகக்காண்பதன் அருமை. ஒழிதலின்-புறங்கூறுதலே நீங்குதலால். 'காண்கிற்பின்' என்னும் எதிர்காலவினேயெச்சம், 'உண்டோ' என்கிற ஓகாரத்தைஈற்றிலேகொண்ட குறிப்புவினேகையக் கொண்டுமுடிந்தது. ஜீவாத்மாவும் பரமாத்மாவைப்போல நித்தியமாதலால், 'மன்னுமுயிர்' எனப்பட்டது.

உ0-ஆம் அதிகாரம்—பயனிலசொல்லாமை.

அஃதாவது - தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களேச் சொல்லாமை. பொய், குறளே, கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கண் நிகழும் பாவம்நான்கனுள், பொய் - துறந்தார்க்கல்லது ஒருதலேயாகக் கடிய லாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனேமூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளே புறங்கூறுமையானும் விலக்கி, நின்ற பயனில்சொல் இதனுன் விலக்குகின்ற ராகலின், இது, புறங்கூறுமையின்பின் வைக்கப்பட்டது.

(கு-ரை.) பயவாத-தராத. நிகழும் - உண்டாகும். சொல்லிற்றேன்றும் தீவினே பொய்முதலாக நான்குவகைப்படு மென்பது, "பொய்யேகுறளேகடுஞ் சொற்பயனில், சொல்லெனச் சொல்லிற் றேன்றுவ நான்கும்" என்னும் மணிமேகலேயிலுங் காணலாம்.பொய் துறந்தார்க்கல்லது ஒருதலேயாகக்கடியலாகாமையின்-பொய்யானது துறவறத்தார்க்கேயல்லாமல் இல்லறத்தார்க்கு முழுவதும்விலக்கப்படாமையால்; மணங்கூட்டுவிக்கும் பொருட்டும், ஊடலேத்தீர்த்தற்பொருட்டும், உயிர்க்கொலேயைவிலக்கும் பொருட்டும், எல்லாப்பொருளேயும் இழத்தலினின்றும் நீங்கும் பொருட்டும், மற்றுஞ்சில நன்மையின்பொருட்டும் இல்லறத்தவர் பொய்சொன்னலுஞ் சொல்லலாமென்பது, நூல்துணிபு. இதுபற்றியே இந்நூலாசிரியர் வாய்மையென்னும் அதிகாரத்தை இல்லறவியலில் வையாமல் துறவறவியலில்வைத்தது. ஏனேமூன்று - குறளே, கடுஞ்சொல், பயனில்சொல். இனியவைகூறல் - கீழ்ப் பத்தாமதிகாரம். இது - இவ்வதிகாரம். மொழிக்குற்றங்களுள் பயனில சொல்லுதல் புறங்கூறுதலுக்கு இனமாதலால், அதன்பின் வைக்கப்பட்டதென்க. பயன் பயம் என்பதன் ஈற்

றுப்போலி. இல - எதிர்மறைப் பலவின்பாற் பெயர். பயனில்லாத என்றுல், இன்மை - செயப்படுபொருள் குன்றியதும், பயனையுடைத்தாகாத என்றுல், இன்மை - செயப்படுபொருள் குன்றுததுமாம். பயனில்லாத சொற்களைச் சொல்லுங் காலத்திலே, பயனுடையசொற்களைச்சொல்லுதலும் பயனுடைய தொழில்களை யியற்றுதலுஞ் செய்தால், மிக்க புகழ்புண்ணியங்களை அடையலா மாதலால், அதற்கு விலக்கான பயனிலசொல்லுதல் குற்றமாயிற் றென்க.

ககூக. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(இ - ள்.) பல்லார் முனிய - (அறிவுடையார்)பலருங்கேட்டு வெறுப்ப, பயன் இல சொல்லுவான் - பயனிலவாகியசொற்களைச் சொல்லுவான், எல்லார்உம் எள்ளப்படும் - எல்லாராணும் இகழப்படும்; (எ - று.)

அறிவுடையார்பலரும் * வெறுப்பவே, ஒழிந்தாராணும் இகழப்படுதலின், 'எல்லாருமெள்ளப்படும்' என்றுர். மூன்றனுருபு, விகாரத்தால் தொக்கது.

(கு - ரை.) பயனே ஆராய்தற்குரியவர் அறிவுடையவராதலால், இங்கே 'பல்லார்' என்றது, அவர்மேல்நின்றது. ஒழிந்தாராணும் - அறிவில்லாதவர்களாலும். ஆன் என்னும் மூன்றுமுருபு தொக்கது, 'எல்லாரும்' என்றவிடத்தில். 'இது, பிறரால்இகழப்படுவனென்றது' என்பது, மணக்குடியருரை.

ககூஉ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(இ - ள்.) பயன் இல-பயனிலவாகிய சொற்களை, பல்லார் முன் சொல்லல் - (அறிவுடையார்) பலர் முன்பே (ஒருவன்) சொல்லுதல்,—நயன் இல - விருப்பமிலவாகிய செயல்களை, நட்டார்கண் செய்தலின் - (தன்) நட்டார் மாட்டுச் செய்தலினும், தீது—; (எ - று.)

விருப்பமில - வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக இகழற்பாடு பயக்கு மென்பதாம்.

(கு - ரை.) நட்டார் - நண்பர்; நள் - பகுதி. பயனில்லாதவற்றைச் சொல்லுதல் நண்பர்க்குத் தீங்குசெய்தலினும் அதிகதீங்கையைத் தரு மென்பது, கருத்து. இல - பெயர். முன் என்னும் இடைச்சொல் - இங்கே, இடப் பொருளது. 'இம்மை மறுமை யிரண்டின்கண்ணும் நீமைபயக்குமாறுயிற்று' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (உ)

ககூங. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு மூரை.

(இ - ள்.) பயன் இல - பயனிலவாகிய பொருள்களை, பாரித்து உரைக்கும் - (ஒருவன்) விரித்து உரைக்கும், உரை - உரைதானே,—நயன் இலன் என்பது சொல்லும் - (இவன்) தீதிலில னென்பதனை † உரைக்கும்; (எ - று.)

* பீ - மீ: கேட்டு வெறுப்பவே. † பீ - மீ: உணர்த்தும்.

உரையால் இவன் பயனிலனென்பது அறியலா மென்பார், அதனை உரைமே லேற்றி 'உரைசொல்லும்' என்றார்.

(கு - ரை.) பொருள்கள் - விஷயங்கள். விரித்து உரைக்கும் உரை - விவரித்துச் சொல்லுஞ் சொல். சொல்லும் - அறிவிக்கும். 'இம்மையின்கட் பிறரால் விரும்பப்படா ரென்று கூறப்பட்டது' என்பது, மணக்குடியருரை.

ககூச. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(இ - ள்.) பயன் சாரா - பயனெடுபடாத, பண்பு இல் சொல் - பண்பில் சொற்களை, பல்லாரகத்து - (ஒருவன்) பலரிடை(ச் சொல்லுமாயின்), (அவை), நயன் சாரா - (அவர்மாட்டு) நீதியோடுபடாவாய், நன்மையின் நீக்கும் - (அவனை) நற்குணங்களின் நீக்கும்; (எ - று.)

பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். 'சொல்லுமாயின்' என்பதும், 'அவர்மாட்டு' என்பதும் எச்சமாகவருவிக்கப்பட்டன.

(கு - ரை.) பயனெடுபடாத - பிரயோஜனத்தோடு கூடாத. பண்பில் சொற்கள் - குணமில்லாத வார்த்தைகள். பலரிடை-பலபேர்கடுவில். நீதி-முறைமை. படாஆய்-பொருந்தாதவையாய். மெய்ம்மை-உண்மை. 'முதலாய' என்றதனால், நீமைபயவாமை கேட்டாரைத்தன்வசப்படுத்தல் முதலியன கொள்க. எச்சம் - சொல்லெச்சம். சாரா என்னுஞ்சொல் இரண்டனுள் முன்னதை - எதிர்மறைப்பலவின்பால் முற்றெச்சமாகவாயினும், ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகவாயினுங் கொள்க. பின்னது - பெயரெச்சம். 'பல்லா ரகத்து' என்பதில் 'அகத்து' - ஏழனுருபு; "உள் அகம் புறம் இல் இடப்பொரு ளுருபே" என்பது காண்க. 'இது விரும்பப்படாமையுமன்றி நன்மையும் பயவாது என்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கூ)

ககூடு. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(இ - ள்.) பயன் இல - பயனிலவாகிய சொற்களை, நீர்மை உடையார் - இனியநீர்மையுடையார், சொலின் - சொல்லுவராயின்,—சீர்மை - (அவரது) விழுப்பமும், சிறப்பொடு - (அதனால்வரும்) நன்குமதிக்கற்பாடும், நீங்கும் - (உடனே) நீங்கும்; (எ - று.)

நீர்மை - நீரின்தன்மை. 'சொலின்' என்பது, சொல்லாமையை விளக்கிற்று.

(கு - ரை.) விழுப்பம் - புகழ். நன்கு மதிக்கற்பாடு - நன்றாகமதிக்கப் படுதல்: கௌரவம். "விழுமம் சீர்மையும் சிறப்பு மிடும்பையும்" என்னுஞ் சூத்திரத்தைக்கொண்டும், சீர்மையும் சிறப்பும் வேறுதலை அறிக. 'சிறப் பொடு' என்பதிலுள்ள 'ஒடு' என்னும் எண்ணிடைச்சொல்லை எடுத்துச் சீர்மையென்பதனோடுங் கூட்டுக. 'இது, நீர்மையுடையராயினும் எல்லாநன் மையும் பேரம்என்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். 'நீர்மை-நீரின்

தன்மை' என்றவிடத்து "தாழ்ந்து,சொற்படு சீதத்தொடு சுவையுடைத்தாய், இழிநிலஞ்சேர்ந் தாழ்வது நீர்" என்ற மணிமேகலையும், "நீ மூரணிய நீரும் என்ரூங், கைம்பெரும் பூதத் தியற்கைபோல,.....அளியு முடையோய்" என்ற புறநானூறும் அறியத்தக்கன. தண்மைக்கும், இனிமைக்கும், மிக வுதவுதற்கும் நீர் எடுத்துக்காட்டாம். (சு)

ககூசு. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனன்
மக்கட் பதடி யெனல்.

(இ - ள்.) பயன் இல் சொல் பாராட்டுவானை - பயனில்லாத சொற்க ளைப் பலகாலுஞ்சொல்லுவானை, மகன் எனல் - மகனென்று சொல்லற்க; மக்கள் பதடி எனல் - மக்களுட் பதரென்று சொல்லுக; (எ - று.)

'அல்' விகுதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டி னும் வந்தது. அறிவு என்னும் உள்ளீடு இன்மையின், 'மக்கட்பதடி' என்றார்.

இவையாறுபாட்டானும், பயனில்லாதசொற்களைச் சொல்லுதலின் குற் றம் கூறப்பட்டது.

(கு - ரை.) பாராட்டுதல்-மிகப்பயிலுதல். பலகாலும்-பலதரமும். மக னென்று சொல்லற்க - மனிதனென்று சொல்லவேண்டாம். மக்களுள்-மனி தர்களுள். பதர்-உள்ளீடில்லாத தானியம்; இங்கே, அதுபோலச் சாரமான அறிவு இல்லாதவன். எனல் என்னும் சொல்லெச்சம் - என்று சொல்ல என, சொல்என்னும் தன்னெச்சத்தைக் கொண்டது. இனி, ஒருவன் பேசும் பய னில்லாத சொற்களைக் கொண்டாடுபவனை மனிதனென்று எண்ணவேண் டா என்றும் உரைக்கலாம். 'இது, மக்கட்பண்பில னென்றவாறு' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (சு)

ககூஎ. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(இ - ள்.) நயன் இல - நீதியோடு படாத சொற்களை, சான்றோர்—, சொல்லின்உம் - சொன்னராயினும், சொல்லுக-அஃது அமையும்;பயன் இல சொல்லாமை - (அவர்) பயனில்லவற்றைச் சொல்லாமை (பெறின், அது), நன்று—; (எ - று.)

'சொல்லினும்' எனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றி னும் பயனில தீய வென்பதாம்.

(கு - ரை.) அமையும் - பொருத்தும். அநீதியானவார்த்தைகளினும் பய னில்லாதவார்த்தைகள் கொடியன என்பது கருத்து. இனி, இதற்கு, கடிஞ் சொற் சொல்லினும் பயனில்சொல் தீயதென்றுங் கருத்துக்கொள்ளலாம்; கடிஞ்சொல்லுஞ் சிறுபான்மை நன்மைபயக்கு மாதலின். 'இது, சான்றோர்க்கு ஆகா தென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (எ)

ககூஅ. அரும்பய னுய *மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

* பி - மீ:—அறிவுளர்.

(இ - ள்.) அரு பயன்-(அறிதற்கு) அரிய பயன்களே, ஆயும்-ஆராயவல்ல அறிவினர் - அறிவினையுடையார்,—பெரு பயன் இல்லாத சொல் - மிக்க பயனுடைய வல்லாத சொற்களே, சொல்லார்—; (எ - று.)

அறிதற்கு அரிய பயன்களாவன :- வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. 'பெரும்பயனில்லாத' எனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன.

(கு - ரை.) மிக்கபயனுடையவல்லாத - பெரும்பிரயோசனத்தை உடைத்தானவையல்லாத. வீடுபெறு - முத்திபெறுதல். மேற்கதிச்செலவு - சுவர்க்கம் முதலிய மேலானபதவிகளிற் செல்லுதல். முதலாயின என்றது, புகழ் முதலியவற்றை. 'வேறு கூறிய குற்றமெல்லாம் பயத்தலின், இதனை அறிவுடையார் கூறுரென்றது' என்பது, மணக்குடியருரை. (அ)

கஉஉ. பொருளுர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருளுர்ந்த
மாசறு காட்சி யவர்.

(இ - ள்.) பொருள் தீர்ந்த - பயனின் நீங்கிய சொற்களே, பொச்சாந்து உம் - மறந்தும், சொல்லார்—; மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தின் நீங்கிய தூய அறிவினையுடையார்; (எ - று.)

தூயஅறிவு - மெய்யறிவு. 'மருளுர்ந்த' என்னும் பெயரெச்சம், 'காட்சியவர்' என்னுங் குறிப்புப்பெயர் கொண்டது.

இவைமூன்றுபாட்டானும், பயனிலசொல்லாமையின் குணம் கூறப்பட்டது.

(கு - ரை.) தூய - குற்றமற்ற. மெய்யறிவாவது - பிறப்பு முத்திகளையும் அவற்றின்காரணங்களையும் சந்தேக விபரீதங்களின்றி உண்மையாக அறிதல்; இதனை வடநூலார் 'தத்வஜ்ஞாநம்' என்பர். மயக்காவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும் இத்தன்மையனவுஞ் சொல்லும் மயக்கநூல்வழக்குகளை மெய்ந்நூல்வழக்கென்று துணிதல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும், இவ்வாறே ஒன்றைப் பிறிதொன்முகத்துணிதலும், அது; மயக்கம், மருள், விபரீதவுணர்வு, அவித்தை என்பன - ஒருபொருட்சொற்கள். மாசு அறு காட்சி என்றது, கேவல அறிவை. மேல் மெய்யுணர்தலென்னும் அதிகாரத்தில் "மருணீங்கி, மாசறு காட்சி யவர்க்கு" என வருதலுங் காண்க. தீர்ந்த காட்சியவர் என்க. தீர்ந்த என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - பெயர். பின்னது - பெயரெச்சம். தீர்ந்த என்பது காட்சியவர்க்கு விசேஷணமே யன்றி, காட்சிக்கு விசேஷணமன் றென்க. குறிப்புப்பெயர் - குறிப்புவினையாலணையும் பெயர். பொச்சாந்து, பொச்சா - பகுதி; ஒருசொல். 'இது, தெளிவுடையார் கூறுரென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். (கூ)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(இ - ள்.) சொல்லில் - சொற்களில், பயன் உடைய - பயனுடைய சொற்களை, சொல்லுக—; சொல்லில் - சொற்களில், பயன் இலா சொல் - பயனில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லா தொழிக; (எ - று.)

'சொல்லில்' என்பது - இருவழியும் மிகையாயினும், சொற்போருட்பிற் வருநிலை யென்னும் அணியாகக்கி வந்தது; "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பதுபோல.

இதனுல், சொல்லப்படுவனவும், படாதனவும் நியமிக்கப்பட்டன.

(கு - ரை.) இருவழியும் மிகையாயினும் - இரண்டுவாக்கியங்களிலும் அவசியமில்லாமல் அதிகமாயிருப்பதாலுலும்: ஓரிடத்து இருந்தாற்போது மாலுலும் என்றபடி. வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலமுறை வருதல், சொற்பொருட்பின்வருநிலையணியாம்; "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற் றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" என்னும் காலடியார்ச்செய்யுளில், வைகலென்னுஞ்சொல் பலதரம்வருதல் காண்க. நியமிக்கப்பட்டன-வரையறுத்துச்சொல்லப்பட்டன. இனி, சொல்லின் என்று எடுத்து - சொல்லவேண்டுமாயின் என்றும், சொல்லுதலினுல் என்றும் பொருள் கூறினும் அமையும். உடைய-பெயர். படாதன-சொல்லப்படாதவை. 'சொல்லின்' என்பதற்கு - 'சொல்லுவதனுயின்' என்பது, மணக்குடியருரைவாக்கியம்.

உக - ஆம் அதிகாரம்— தீவினையச்சம்.

அஃதாவது - பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன், மெய்யின்கண்ணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்ற ராகலின், இது பயனிலசொல்லாமையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வினை - தொழில், கருமம்; அது - நல்வினை, தீவினை என இருவகைப்படும்: தீவினையச்சம் - பாபபயம். பாவங்களாயின - பாவத்தைத் தரக்கூடிய கொடுந்தொழில்களை. "அச்சக் கிளவிக்கு ஐந்து மிரண்டும், எச்சமிலவேபொருள்வயினுன" என ஆசிரியர் தொல்காப்பியனுர் கூறிய விதி பற்றி, தீவினையச்சம் என்பதை - தீவினையினின்று அஞ்சுதல் என ஐந்தாம் வேற்றுமையாகவேனும், தீவினையைஅஞ்சுதல்என இரண்டாம்வேற்றுமையாகவேனும் விரிக்கலாம்; தீவினைக்குஅஞ்சுதல் என நான்காம்வேற்றுமையாகவிரித்தல்,உலகவழக்காம். தீவினை-தீமையாகிய செயலெனப் பண்புத்தொகை. இதனுன் - இவ்வதிகாரத்தால். மெய்யின்கண் நிகழும் - உடம்பினுற் செய்யப்படுகின்ற. பயனிலசொல்லாமை, கீழ் இருபதாம் அதிகாரம். பயனிலசொல்லாமையென்னும் அதிகாரத்தின்பின் தீவினையச்சமென்னும் அதிகாரத்தை வைத்ததற்குக் காரணம்,மனத்தின்குற்றத்தைக் கீழ் அழுக்காறுமை வெஃகாமை என்னும் இரண்டுஅதிகாரங்களாற் கூறி, அதன்பின் வாக்கின் குற்றத்தைப் புறங்கூறுமை, பயனிலசொல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களாற் கூறியவர், அதன்பின் மிச்சமாய்நின்ற காயத்தின்குற்றத்தைக் கூறவேண்டுவது முறைமை யாதலா லென்க.

உ0க. தீவினையார் ரஞ்சார் விழுமியார் ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(இ - ள்.) தீவினை என்னும் செருக்கு - தீவினையென்றுசொல்லப்படும் மயக்கத்தை, தீவினையார் - (முன்செய்த) தீவினையுடையார், அஞ்சார்—; விழுமியார் - (அஃதுஇலராகிய) சீரியார், அஞ்சுவர்—; (எ - று.)

'தீவினையென்னுஞ்செருக்கு' என, காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. மேற்றொட்டுச்செய்து கைவந்தமையான் 'அஞ்சார்' என்றும், செய் தறியாமையான் 'அஞ்சுவர்' என்றும் கூறினர்.

(கு - ரை.) 'தீவினையென்னுஞ்செருக்கு' என்பதற்கு - பாவமாகிய அவித்யை யென்று பொருள்; இதிலே, தீவினை - அவித்யையின் பயனுதல் லால், காரியம். செருக்கு - அவிச்சை [மனமயக்கம்]; இது-காரணம்: காரிய மாகிய தீவினை, காரணமாகிய செருக்காகக் கூறப்பட்டது. இனி, தீவினை யென்னுஞ் செருக்கு என்பதற்கு - கொடுந்தொழில்செய்தலினுல் வருங் களிப்பு எனப் பொருள்கொண்டு, தீவினையென்னுங் காரணம் செருக்கென் னுங் காரியமாகக் கூறப்பட்டதென்றுரை, பிரயோகவிவேகநூலுடையார்; அதனை, அந்நூலில் ''மருளறு காரணம்'' என்னுஞ் செய்யுளின் உரையிற் காண்க. இவையெல்லாம் இலக்கணநூலில் உபசாரவழக்கு எனப்படும். (உப சாரவழக்காவது - காரணம் காரியமாகவும், காரியம் காரணமாகவும், குணம் குணியாகவும்,குணி குணமாகவும்,ஒருபொருளின்வினை மற்றொருபொருளின் வினையாகவும், இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேலாகவும், சினைவினை முதல்வினையாகவும், முதல்வினை சினைவினையாகவும் இவ்வாறு ஒன்றன்தன்மை மற்றொன்றில் ஏற்றிக் கூறப்படுதல்: இது, ஆகுபெயரென் கிற இலக்கணைக்கு இனமாம்;) இதனை வடநூலார் ஔபசாரிகப்ரயோகம் என்பர். அஃது இலர்-முன்செய்த தீவினையில்லாதவர். சீரியர்-சிறப்புடை யவர். மேல்தொட்டுச் செய்து கைவந்தமையான்-முற்பிறப்புக்களில் தொடங் கிச்செய்து பழக்கமாயிருத்தலால். விழுமியார் - விழுமம் என்னும் உரிச்சொல் லடியாகப்பிறந்த பலர்பாற்பெயர்: பகுதி, அம் கெட்டு 'விழும்'என நின்றது; இ - சாரியை, ய் - சந்தி, ஆர் - விகுதி. அஞ்சார், அஞ்சுவர் என்னும் இர ண்டுமுற்றுக்களுக்கும் செருக்கு என்னுஞ் செயப்படுபொருளை எடுத்துத் தனித்தனிச் சேர்த்துக்கொள்க. இது, கடைநிலைத்தீவகம். ஒருவன் ஒருபிறப் பிற் செய்யும் கல்வினைக்கு அவன் முற்பிறப்பிற்செய்துள்ள கல்வினையே காரணமாவதுபோல, ஒருவன் ஒருபிறப்பில் தீவினைசெய்தற்கும் அவன் முற் பிறப்பிற்செய்துள்ள தீவினையே காரணமாம்; கல்வினை செய்தற்கு முன்னைத் தீவினை காரணமாகாதவாறுபோல, தீவினைசெய்தற்கும் முன்னை கல்வினை காரணமாகாது என்பது கருத்து. இது, நூல்வழக்குக் கூறியது. இனி, இக் குறளுக்கு - 'கொடுந்தொழில்செய்பவர் பாவத்துக்கு அஞ்சார்; நற்றொழில் செய்பவர் அதற்கு அஞ்சுவர்' என, உலகவழக்கைக் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம். இதனால், விழுமியாரது குணமாகிய தீவினையச்சமே சிறப்பு

டைய தென்றதாயிற்று. முதலடியில் 'தீவினையார்' 'வீழுமியார்' எனவும், அஞ்சார்' 'அஞ்சுவர்' எனவும் மாறுபட்டசொற்கள் வந்தது, முரணேதோடை.

உ0உ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(இ - ள்.) தீயவை - (தனக்கு இன்பம்பயத்தலைக் கருதிச் செய்யுந்) தீவினைகள், தீய பயத்தலான் - (பின் அஃது ஒழித்துத்) துன்பமே பயத்தலான்,—தீயவை-(அத்தன்மையவாகிய) தீவினைகள், தீயின்உம் அஞ்சப்படும்-(ஒருவனுல்) தீயினும் அஞ்சப்படும்; (எ - று.)

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கு இன்மையின், *'தீயினும் அஞ்சப்படும்' என்றார்.

(கு - ரை.) தீவினைகள் - கொடுஞ்செயல்கள். தீய-கெட்டபயன்களை. பயத்தல் - தருதல். பின் - மறுமையில். அஃது - இன்பம். தீயினும்-அக்கினியினும் அதிகமாக. நெருப்பு எந்தக்காலத்தில் எந்த இடத்தில் எந்த உடம் பிற் படுமோ, அந்தக்காலத்தில் அந்த இடத்தில் அந்த உடம்பில்மாத்திரமே சுடும்; தீவினையோ, மறுமைக்காலத்திலும் வேறோர்உலகத்திலும் மற்றொரு சரீரத்திலும்போய் உயிரை வருத்தும்: ஆதலால், தீவினை தீயினுங் கொடிது என்பது கருத்து. இனி, அகமாகிய உயிரை வருத்துகின்ற தீவினைகள் புற மாகிய உடம்பை வருத்துகின்ற நெருப்பினும் பயங்கரமானவை என்றுங் கருத்துக்கொள்ளலாம். 'தொடிற்சுடுமென்று தீக்குஅஞ்சுதலினும் மிக அஞ் சப்படும்' என்பர் மணக்குடியர். உம்மை - இழிவுசிறப்பு. அஞ்சப்படும் - செய்யுமென்னும்வாய்பாட்டுச் செயப்பாட்டுவினைமுற்று; இது - இங்குப் பலவின்பாலுக்கு வந்தது. இரண்டாவதாய்நின்ற 'தீயவை' என்பது, அவ சியமில்லாமல் அதிகமாயிருப்பதாயினும், வந்த சொல்லும் பொருளும் பின் னும் பலமுறை வருகிற சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணியை நோக்கி வந்தது. 'தீயவை தீயினு மஞ்சப்படும்' என்பது, பிரதான வாக்கி யம்; 'தீயவைதீயபயத்தலான்' என்பது, காரணவாக்கியம்: ஏதுவணி. (உ)

உ0ங. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(இ - ள்.) அறிவினுள் எல்லாம் - (தமக்கு உறுதிநாடும்) அறிவுகளெல் லாவற்றுள்ளும், தலை என்ப - தலையாய அறிவென்று சொல்லுவர், (நல் லோர்): செறுவார்க்குஉம் - (தம்மைச்) செறுவார்மாட்டும், தீய தீவினைகளை, செய்யா விடல் - செய்யாது விடுதலை; (எ - று.)

விடுதற்குக்காரணமாகிய அறிவை 'விடுதல்' என்றும், 'செய்யத்தக்குழி யுஞ் செய்யாதொழியவே தமக்குத் துன்பம் வாராது' என உய்த்துணர்த லின், அதனை 'அறிவினுளெல்லாந் தலை' என்றுங் கூறினர். 'செய்யாது' என் பது, கடைக்குறைந்து நின்றது.

---

* பி - மீ: தீயினுமஞ்சப்படுவதாயிற்று.

இவைமூன்றுபாட்டானும், தீவினைக்கு அஞ்சவேண்டு மென்பது கூறப் பட்டது.

(கு ரை.) உறுதிநாடும்-நன்மையைத்தேடுகின்ற; 'எல்லாவற்றையும் அறியும்' என்பர் மணக்குடியர். தலைஆய - முதன்மையான. செறுவார் மாட்டும் - வருத்துபவரிடத்திலும்; தமக்குத் தீமைசெய்தார் விஷயத்திலும் என்ற படி. செய்யாதுவிடுதலை என்பது-செய்யாது விடுதற்குக்காரணமாகிய அறிவை என்றபடி; இங்கே காரியம் காரணமாக உபசரிக்கப்பட்டது: ஆனதுபற்றியே, செய்யாதுவிடுதலை 'சிறந்த அறிவின்பயன்' என்னுமல் 'அறிவினுளெல்லாந் தலை' என்றார். செய்யத்தக்குழி - செய்யத்தக்க இடம்; அதாவது - தம்மை வருத்துபவர்பக்கல். செய்யா-ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம்; (இவ் வாய்பாட்டுச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமும், உடன்பாட்டு இறந்தகால வினையெச்சமும், அஃறிணை யெதிர்மறைப் பலவின்பால்முற் றும், அத்தன்மைய வினையாலணையும்பெயரும், அம்முற்றெச்சமும், ஈறு கெட்ட எதிர்மறை ஒன்றன்பால்முற்றும் ஆகவும் வரும்: இங்குக்காட்டிய ஏழுவகைகளுள் முதல்மூன்றிலும் வருமொழிமுதல்வலி மிகும்; மற்றையவற் றில் மிகாது: இவையெல்லாம் இடம்நோக்கியும் பொருள்நோக்கியும்உணர்க.) தலைமையானதைத் தலையென்றது - பண்பாகுபெயர். தலை - உத்தமம்; உத் தம அங்கமாகிய சிரசுபோலச் சிறந்த தென்றுங் கொள்ளலாம். தீய-பெயர். நான்காம்வேற்றுமையின் பொருளாகிய ஏற்றுக்கொள்ளுதலும் ஏழாம்வேற் றுமையின் பொருளாகிய இடனுய்நிற்றலும் ஒருசாரொத்திருத்தலை நோக்கி, செறுவார்க்கும் என்னும் நான்காம்வேற்றுமையை 'செறுவார்மாட்டும்' என ஏழாம்வேற்றுமையாக விரித்தார்; இதனை உருபுமயக்கமெனினும் அமையும்: கொடைப்பொருளில் அல்லது பகைப்பொருளில் வந்த நான்காம்வேற்றுமை யெனினும் இழுக்காகாது. உம் - இழிவுசிறப்பு: இறந்ததுதழுவிய எச்சவும் மையாகக் கொண்டு, தம்மை வருத்துபவரல்லாதார்க்குச் செய்யாதொழிதலை யும் உடனமைத்தலும் ஒன்று. 'நல்லோர்' என்றது, தருமநூலுணர்ச்சியோடு உலகவழக்கறிதலு முடையாரை; இது, தோன்றா எழுவாய். (கூ)

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(இ - ள்.) (ஒருவன்), பிறன் கேடு - பிறனுக்குக் கேடுபயக்கும் வினை யை, மறந்துஉம்—, சூழற்க - எண்ணுதொழிக; சூழின் - எண்ணுவனுயின்,— சூழ்ந்தவன் கேடு - தனக்குக் கேடுபயக்கும்வினையை, அறம் - அறக்கடவுள், சூழும் - எண்ணும்; (எ - று.)

'கேடு' என்பன - ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானும் உடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படும் என்பது பெறப்பட் டது. அறக்கடவுள் எண்ணுதலாவது - அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை யெண்ணலும் ஆகா தென்பதாம்.

(கு - ரை.) கேடுபயக்கும் வினை - கெடுதியைத்தருந் தீத்தொழில். தனக்கு - எண்ணினவனுக்கு. அறக்கடவுள் - தருமதேவதை. கேடு-கெடுதியைத் தரும் வினைகளைக் குறித்தலால், காரியவாகுபெயர். ஒருமனிதன் மற்றொருவனுக்குத் தீங்குசெய்யநினைத்தால், நினைத்த அம்மனிதனுக்குத் தீங்குசெய்யத் தருமதேவதை கூடவே நினைக்கும்; இவற்றுள் மனிதனதுமுயற்சி இடையூற்றின் மிகுதியால் நிறைவேறுதாயினும், அல்லது நிறைவேறக் காலஞ்செல்லுமாயினும், தேவதையினது முயற்சி அங்ஙனந் தடைப்படாமல் உடனேநிறைவேறிவிடும். ஆதலால், ஒருவன் பிறனுக்குத் தீங்குநினைத்தமாத்திரத்திற் பாவம் உண்டாகி அதனால் தான் தீங்கையடைவா னென்பது தாற்பரியம். அவன் கெடத் தான் தீங்க - எண்ணியவன் கெடும்படி அவனைவிட்டுத் தான் விலக. எண்ணலுமாகாது என்றதனால், சொல்லுதலும் செய்தலு மாகாமை பெறப்பட்டது. 'மறத்தும்' என்றதனால், மறவாதிருக்கையில் எண்ணுதொழிய வேண்டுமென்பது தானே பெறப்படும். மறத்தும், உம் - இழிவுசிறப்பு. 'சூழ்' என்ற வினை, ஒருபொருளிலேயே பலமுறை வந்தது, சொற்பொருட்பின்வருநிலை. 'கெடுவான் கேடுநினைப்பான்' என்ற பழமொழி, இங்குக் கருதத்தக்கது. 'சூழ்வனுயின், அவனுற்சூழப்பட்டவன் அதன்மாறுகக் கேடுசூழ்வதன் முன்னே சூழ்ந்தவனுக்குக்கேட்டைத் தீமைசெய்தார்க்குத் தீமையபத்தலாகிய அறம் தானே சூழும் என்றவாறு; இது, தீமைநினையினும் கேடுதருமென்றது' என்பது, மணக்குடியருரை. (ச)

உ0நு. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) இலன் என்று - (யான்) வறியன் என்று கருதி, தீயவை செய்யற்க-(அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத்) தீவினைகளை (ஒருவன்) செய்யாதொழிக; செய்யின் - செய்வனுயின், பெயர்த்துமம் இலன் ஆகும் - பெயர்த்தும் வறியனுமாம்; (எ - று.)

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனு மென்பதாம். 'அன்'விகுதி-முன்தனித்தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை - "உளனு வெண்ணுயிரை யுண்டி" என்பதனுனும் அறிக. மற்று - அசைநிலை. 'இலம்' என்று பாடமோதுவாரும் உளர். 'பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின், அப்பொருளானேயன்றி நற்குணநற்செய்கைகளானும் வறியனும்' என்று உரைப்பாரும் உளர்.

(கு - ரை.) வறியன் - தரித்திரன். அது - வறுமை. பெயர்த்தும்-மறுபடியும். பிறவிதோறும் - அடுத்துவருகிற சன்மங்களிலெல்லாம்; ஒருபிறப்பிலே செய்த வினை ஏழேழு பிறப்புந் தொடரு மென்க. 'இலன்' என்னும் எதிர்மறைக்குறிப்பு வினைப்பகுபதங்கள் இரண்டனுள், முன்னது - தன்மையொருமை: 'அன்'விகுதி தன்மையொருமைக்குவருதல், புதியனபுகுதல்; இதற்கு விதி, தொல்காப்பியத்தில் இல்லை: உரையாசிரியர்கள் எதிரதுபோற்றலென்னும் உத்தியால் அமைத்திருக்கிறார்கள்; அவர்கருத்துப்பற்றி, பின்

னூலாராகிய நன்னூலார் விதி கூறினார்: அருமையாகவருவதற்கு இலக்கியத்தினின்று உதாரணங்காட்டுகிறார், "உளனு" என்று தொடங்கி; இம்மேற்கோள் - கலித்தொகை, குறிஞ்சிக்கலி, உஉ - ஆம் செய்யுளில் உள்ளது: இதற்குப் பொருள் - 'யான் சிறிது உயிருடனேயிருக்கும்படி என் உயிரை வாங்கிக்கொண்டு'என்று உரைத்தார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். உளனு-உள்ளேனுக; 'இலன்' என்று எதிர்மறையில் தன்மையொருமையில்'அன்'வந்தது போல, உடன்பாட்டில்வந்ததற்கும் ஆசிரியவசனம் எடுத்துக்காட்டியவாறு. இலன் ஆகும் - இல்லாதவனுவன்; இங்கே இலன் என்பது - ஆண்பாற் படர்க்கையொருமை. பெயர்த்து என்பது - மீண்டு என்னும் பொருளைத் தந்ததனால், மற்று என்பது அசைநிலையாயிற்று; 'மற்று' என்றதிலுள்ள உம்மையை எடுத்து 'பெயர்த்து' என்பதனோடு கூட்டுக. மற்றும்பெயர்த்து என்பதை ஒருபொருட்பன்மொழி யாகவுங் கொள்ளலாம். 'மற்றும் - மீண்டும், பெயர்த்து - வேறுபட்டு, இலன்ஆகும்' என்று பொருளுரைத்தார், இராமானுசகவிராயர். 'தனித்தன்மை' என்ற வாக்கியத்தின்பின் எழுதாமல் :மற்று-அசைநிலை' என்றதன்பின் 'இலம்என்று பாடமோதுவாருமுளர்' என்றெழுதியதனால், இரண்டடியிலும் 'இலம்' என்றுபாடமெனஅறிக. (இத்தப்பாடம் மணக்குடவருரையிலுள்ளது.) அப்பாடத்தில் முதலடியில் 'இலம்' என்பதற்கு - யாம் பொருளில்லோம் என்று பொருள்; இலம் - தனித்தன்மைப் பன்மை: ஒவ்வொருவனும் தன்னைப்பற்றித் தான் நினைக்கும்பொழுது பன்மையாக நினைத்தல் இயல்பு; இதனை நினைத்துப்பார்த்து அறிக. இரண்டாம் அடியில், இலம் ஆகும் என்பதற்கு - வறுமை உண்டாம் என்று பொருள்; இலம் - வறுமையுணர்த்தும் உரிச்சொல்: "இலம்பாடொற்க மாயிரண்டும் வறுமை" என்றார் தொல்காப்பியனார்; இச்சூத்திரத்தில் 'இலம்' என்பது உரிச்சொல்லேயொழிய 'இலம்பாடு' என்பது உரிச்சொல்லன்று என்பதை, இச்சூத்திரத்தின் உரையைக்கொண்டும், எழுத்ததிகாரத்தில் 'இலமென் கிளவிக்குப் படவரு காலை" என்ற சூத்திரத்தைக்கொண்டும் உணர்க. பெயர்த்து-இறந்தகால வினையெச்சம். இனி, 'இலனென்று' என்பதையும் படர்க்கையொருமையாகவே கொண்டு, இவன் பொருளில்லாதவனென்று அலட்சியஞ் செய்து வறியவனுக்குத் தீயவை செய்யற்க என்று உரைத்தலும் அமையும்.

உ0சு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னையடல் வேண்டா தான்.

(இ - ள்.) நோய் பால - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள், தன்னை—, அடல் - (பின் வந்து) வருத்துதலை, வேண்டாதான் - வேண்டாதவன்,—தீ பால - தீமைக்கூற்றவாகிய வினைகளை, தான்—, பிறர்கண் - பிறர்மாட்டு, செய்யற்க - செய்யாதொழிக; (எ - று.)

செய்யின், அப்பாவங்கள் அடுதல் ஒருதலை யென்பதாம்.

(கு - ரை.) கூற்ற - பகுதியுடையன. பின் - மறுமையில். அடுதல்-வருத்துதல். ஒருதலை - நிச்சயம். பால - பால் என்னும் பகுதியின் மேற் பிறந்த

பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். "மூழ்த்த பிணிகலிய மூன் செய்த வினையென்றே முனிவார் தாமும்" என்னும் இலக்கியத்தை நோக்கி, நோய்ப்பால என்பதற்கு - 'வியாதிபின்பகுதியிலுளாந் துன்பங்கள்' என்று பொருள்கொள்ளுதலும் அமையும்; 'இது, நோயுண்டா மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். அடல் - தொழிற்பெயர். வேண்டாதான் - எதிர் மறை வினையாலணையும்பெயர்; இதுவும், மேல் ஒன்பதாங்கவியும் ஒருகருத்தின் வகைப்பட்டன. (சு)

உ0ள. எனைப்பகை யுற்றூரு மூய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ - ள்.) எனை பகை உற்றூர்உம் - எத்துணைப் பெரிய பகையுடையாரும், உய்வர்-(அதனை ஒருவாற்றால்) தப்புவர்; (அவ்வாறன்றி), வினை பகை - தீவினையாகிய பகை, வீயாது - நீங்காது, பின் சென்று அடும் - புக்குழிப் புக்குக் கொல்லும்; (எ - று.)

"வீயா, தடம்பொதி நின்ற வுயிரு மில்லை" என்புழியும், வீயாமை - நீங்காமைக்கண் வந்தது.

(கு - ரை.) அதனை - அப்பகையை. ஒருவாற்றால் - ஒருவிதத்தால்; ஒரு ஆறு எனப்பிரிக்க. புக்குழிப்புக்கு - சென்றவிடத்திற் சென்று; சன்மந் தோறும் பின்தொடர்ந்து. வீயாது பின்சென்றடுதற்கு மேற்பாட்டில் உவமை கூறுவர். 'பல்லாவுளுப்த்து விடினுங் குழக்கன்று, வல்லதாந் தாய்காடிக் கோடலைத் - தொல்லைப், பழவினையு மன்னதகைத்தே தற்செய்த, கிழவனை நாடிக்கொளற்கு" என்னும் காலடியாரையும் அறிக. 'வீயாது' என்றுதொடங்கிய மேற்கோள் - புறநானூறு, நூசுஉ - ஆஞ் செய்யுளில் உள்ளது; அதற்கு நீங்காமல் உடம்புடனே எப்பொழுதுங்கூடிநின்ற உயிர் ஒன்றும்இல்லை என்று பொருள். நீங்காமைக்கண் - நீங்காமையென்னும் பொருளில். எனை - எத்தனை யென்பதன் மரூஉ. பகுதல் மனம்வேறுபடுதல் என்ற காரணத்தால் பகை என வந்த தென்பர். உற்றூர் - பெற்றவர்; உறு என்னுங் குறிவினைப் பகுதி, ஒற்றிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. உம் - இழிவுசிறப்பு. வீயாது - வீ என்னும் வினைப்பகுதியடியாப்பிறந்த எதிர்மறைவினையெச்சம். புறப் பகைகளினும் உட்பகையாகிய வினைக்கு உள்ள உறுதியை இதனுற் கூறினர். அடும் - வருத்து மென்றபடி. (எ)

உ0அ. தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(இ - ள்.) தீயவை செய்தார் - (பிறர்க்குத்) தீவினைகளைச் செய்தார், கெடுதல் - (தாம்) கெடுதல், (எத்தன்மைத்தெனின்),—நிழல் - (ஒருவன்) நிழல், தன்னை வீயாது-(தொடர்தாகப்போயும்) அவன்தன்னை விடாது (வந்து), அடி உறைந்தற்று - அடியின்கண் தங்கிய தன்மைத்து; (எ - று.)

இவ்வுவமையைத் தன்காலம்வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழி உருப்பதாய தீவினையைச்செய்தார் பின் அதனுற் கெடு

தற்கு உவமையாக்கி உரைப்பாரு மூளர்; அஃது உரையன் றென்பதற்கு, 'அடியுறைந்த நிழல் தன்னை வீந்தற்று' என்னுது 'வீயாதடியுறைந்தற்று' என்ற பாடமே கரியாயிற்று. மேல் ''வீயாது பின்சென் றடும்'' என்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினார்.

(சு - ரை.) அடியின்கண் - (நிழலுக்குரியவனது) பாதத்தில். ஒருவனது நிழல் அவன் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவுதூரஞ்சென்றாலும் அவனைவிடாமல் அவன்சென்றவிடமெல்லாந் தானுஞ்சென்றுகொண்டே வந்து அவனடியில்தங்குதல் தவறுதலுபோல, ஒருவன்செய்ததீவினை அவனுயிர் எவ்வளவுதூரஞ்சென்றாலும் தான் எவ்வளவுவிலகியதாகத் தோன்றினாலும் அவ்வுயிரைவிடாமல் அதுசென்றவிடமெல்லாஞ் சென்றுகொண்டே வந்து அவ்வுயிரைவருத்துதல் தவறுது என்பது, பரிமேலழகருரையின் கருத்து. வருந்துணையும் - வருமளவும். புலனுகாது - வெளிப்படாமல். அது வந்துழி - அக்காலம் வந்தவிடத்து. உருப்பது ஆய - வெளித்தோன்றுவதாகிய. பிறருரையின் கருத்து:—ஒருபொருளினது நிழல், வெயில் நிலா விளக்கொளி முதலியன வருமளவும் வெளிப்படாமல் அப்பொருளின் அடியைப் பற்றியிருந்து அச்சுடர்கள் வந்தவளவில் அதனைவிட்டு வெளிப்பட்டுத் தோன்றுதல்போல, ஒருவன் செய்த தீவினை பலித்தற்கு உரிய காலம் வருமட்டும் வெளிப்படாமல் உயிரைப்பற்றியிருந்து அக்காலம் வந்தபொழுது வெளிப்பட்டு அழிக்குமென்பதாம்; இங்ஙனம் உரைப்பதற்கு 'அடியி, லுறைந்த நிழல் தன்னை வீந்தற்று' எனப் பாடமிருந்தாலொழியப் பொருந்தாதென்று மறுத்தார் பரிமேலழகர்; 'அடியுறைந்தநிழல் தன்னைவீந்தற்று' என்பதற்கு - ஒருவனது பாதத்தின்கண் தங்கிய நிழல் அப்பாதத்தைவிட்டு வெளிப்பட்ட தன்மையது என்று பொருளாம். கரி - சாட்சி. 'மேல்' என்றுதொடங்கிய வாக்கியம், முதலுரைக்குச் சாதகமானது. உறைந்தற்று - உறைந்த அற்று எனப் பெயரெச்சவிகாரமாக வாயினும், உறைந்தால் அற்று என வினையெச்சத்திரிபாகவாயினும், உறைந்ததற்று எனத் தொழிற்பெயர்விகாரமாகவாயினுங் கொள்க. இத்திருக்குறளைத் தர்க்கத்தில் எடுத்துக்காட்டுப்போலிக்கு உதாரணமாகக்காட்டினர், வீரசோழியவுரையாசிரியர். கீழ்வந்த ''எனைப் பகை'' என்ற குறளில்''தீவினை வீயாது பின்சென்றடும்''என்றதனை, இத்திருக்குறளில் உவமையால் விளக்கினரென்க. உவமையணி. (அ)

உ0கூ. தன்னைத்தான் காதல னுயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(இ - ள்.) (ஒருவன்), தன்னைத் தான் காதலன் ஆயின் - தன்னைத் தான் காதல் செய்த னுடையனுயின், தீவினை பால் - தீவினையாகிய பகுதி, எனைத்து ஒன்றுமும் - எத்துணையுஞ் சிறிதொன்றுயினும், துன்னற்க - (பிறர்மாட்டுச்) செய்யாதொழிக; (எ - று.)

நல்வினை, தீவினை என வினைப்பகுதி இரண்டாகலின், 'தீவினைப்பால்' என்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம்பயத்தல் விளக்கினுராகலின், 'தன்னைத்தான் காதலனுயின்' என்றார்.

இவை ஆறுபாட்டானும், பிறர்க்குத் தீவினைசெய்யின் தாம் கெடுவ ரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) காதல்செய்தல் - விரும்புதல். 'தன்னேத்தான்காதலனாயின்' என்றது - தனக்கு ஒன்றுந் துன்பம்வராமல் இன்பமே வந்தடைய விரும்புவ னாயின் என்றபடி. பகுதி - பகுப்பு. தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கி யமை, கீழ் ஐந்துபாட்டுக்களிற் காண்க. காதலன் - குறிப்புவினையாலணை யும் பெயர்; காதலன் என்பது, விரும்புபவனெனப் பொருள்பட்டு, 'தன்னே' என்பதற்கு முடிக்குஞ்சொல்லாய் நின்றது. தன்னேக்காக்கவிரும்பினுற் பிற னுக்குத் தீமைசெய்யலாகாது என்பது கருத்து. (கூ)

உகo. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(இ - ள்.) மருங்கு ஓடி தீவினை செய்யான் எனின் - (ஒருவன் செந் நெறிக்கண் செல்லாது) கொடுநெறிக்கண் சென்று (பிறர்மாட்டுத்) தீவினை களைச் செய்யானாயின்,—அருங் கேடன் என்பது அறிக-(அவனை) அரிதாகிய கேட்டை யுடைய னென்ப தறிக; (எ - று.)

அருமை - இன்மை. அருங்கேடன் என்பதனை 'சென்று * சேக் கல்லாப் புள்ள வுள்ளி, லென்றூழ் வியன்குளம்" என்பதுபோலக் கொள்க. 'ஓடி' என்னும் வினையெச்சம், 'செய்யான்' என்னும் எதிர்மறைவினையுட் செய்த லோடு முடிந்தது.

இதனுன், தீவினைசெய்யாதவன் கேடில னென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) செந்நெறிக்கண் செல்லாது கொடுநெறிக்கண் சென்று சன் மார்க்கத்திற்போகாமல் துன்மார்க்கத்திற் போய்; 'மருங்கு'என்பதற்கு - 'பக் கத்திலே' என்று பொருளாதலால், 'நேர்வழியைவிட்டு விலகிக் கோணல் வழியிற் சென்று'என்று இங்ஙனம் உரைத்தார். நடுவுநிலை தவறி ஒருசார்பிற் சென்று என்றும் உரைக்கலாம்; 'ஒருமருங்கு ஓடி' என்பர் மணக்குடியர். ஓடுதல் - விரைந்து செல்லுதல். மருங்கோடுதல் தீவினைசெய்தற்குக்காரண மாதலின், 'ஓடி' என்பதற்கு 'செய்' என்னும் பகுதி முடிக்குஞ்சொல்லாம். என்பது அறிக - என்பதாக அறிக: என்று அறிக என்றபடி. அரிதாகிய - இல்லாத; அருமை - இன்மையாதலை "உறற்பால, தீண்டாவிடுத லரிது" என்ற நாலடியாரிலுங் காண்க. "சென்றுசேக்கல்லா" என்னும் மேற்கோள்- அகநானூறு சஉ-ஆம்செய்யுளி லுள்ளது; அதற்கு நீரில்லாமையாற் சென்று தங்காத பறவைகளையுடையவையாய் வெயிலினுல் உள்ளேஒன்றுமில்லாத பெரிய குளங்க ளென்று பொருள் காண்க; என்றூழ் - வெயில். 'அருங் கேடன்,' 'சென்றுசேர்கல்லாப் புள்ள' இவை-வடமொழிநடை. ('வீதராகः,' 'ஜிதேந்த்ரியः' என்றவற்றைக் காண்க.) இனி, இதனை 'கேடரியன்' என விகுதி பிரித்துக்கூட்டுவர், பிரயோக விவேகநூலார். (கo)

* பி - மீ: சேர்கல்லாப்.

உஉ - ஆம் அதிகாரம்—ஒப்புரவறிதல்.

அஃதாவது-உலகநடையினை அறிந்து செய்தல். உலகநடை வேதநடை போல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே அறிந்துசெய்யுந் தன்மைத் தாகலின், 'ஒப்புரவறிதல்' என்றார். மேல் மனமொழிமெய்களால் தவிரத்தகுவன கூறினர், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறுகின்றாராகலின், இது தீவினையச்சத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) உலகநடை - லோகத்திலுள்ள சனங்களினது நடத்தையின் இயற்கை: லௌகிகவியவகாரம். செய்தல் - உபகாரஞ்செய்தல். வேதநடை - வேதங்களிற்கூறிய வழிகளிலே நடத்தல்; வைதிகவொழுக்கம். அறநூல்களுள்-தருமசாஸ்திரங்களில். 'ஒப்புரவுசெய்தல்' என்னுமல் 'ஒப்புரவு அறிதல்' என்றதற்குக் காரணங் கூறுகிறார், 'உலகநடை வேதநடைபோல' என்று தொடங்கி. ஒப்புரவு என்பதை ஒப்பு உரவு எனப்பிரிக்க; உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்ததொழி லென்றபடி. மனம்மொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினர் - மனோவாக்குக் காயமென்னும் மூன்றுகரணங்களாலுஞ் செய்யத்தகாத [விலக்கத்தக்க] தொழில்களைக் கீழ் ஐந்து அதிகாரங்களாற் சொல்லியவர். எஞ்சிநின்றன - மிகுந்துநின்றவை; சொல்லவேண்டியவையாய்ச் சேஷித்தவை: மிச்சம். விதி விலக்கு என்னும் இரண்டில், மூன்றே விலக்கைக்கூறிவிட்டுப் பின்பு விதியைக் கூறுதல், அதிகாரமுறைமைக்குக் காரணம். 'ஒப்புரவறிதலாவது-இல்லென இரந்து வந்தார் யாவர்க்கும் வரையாது கொடுக்கும் ஆற்றலிலரெனினும் தம் அளவிற்கும் தம் வருவாயளவிற்கும் ஒக்கத் தக்கார்க்குத் தக்கன அறிந்து கொடுத்தல்' என்பர் மணக்குடியர்.

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டெண்ணுற்றுங் கொல்லோ வுலகு.

(இ - ள்.) மாரிமாட்டு - (தமக்கு நீர் உதவுகின்ற) மேகங்களினிடத்து, உலகு - உயிர்கள், என் ஆற்றும் - என்ன கைம்மாறு செய்யாகின்றன? (ஆகலான்), கடப்பாடு - (அம்மேகங்கள்போல்வார் செய்யும்)ஒப்புரவுகளும், கைம்மாறு வேண்டா - கைம்மாறு நோக்குவனவல்ல; (எ - று.)

'என் ஆற்றும்' என்ற வினு 'யாதும்ஆற்றா'என்பதுதோன்ற நிற்றலின், அது வருவித்து உரைக்கப்படும். தவிருந்தன்மையஅல்ல என்பது, 'கடப்பாடு' என்னும் பெயராலே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப் படுவனமேல் ஏற்றினர்.

(கு - ரை.) கைம்மாறு செய்யாகின்றன - பிரதியுபகாரம் பண்ணுகின்றன. கைம்மாறுநோக்குவனவல்ல - எதிருதவியை விரும்பாவாம். யாதும் ஆற்றா - ஒன்றையுஞ்செய்கின்றனவில்லை. அது - யாதும்ஆற்றாஎன்பது. தவிருந்தன்மைய அல்ல-ஒழிக்கத்தக்கனவல்ல;அவசியஞ்செய்யவேண்டும் கடமையுடையவை. கடப்பாடு கைம்மாறுவேண்டா என்றது - பிறர்க்கு உபகாரஞ்செய்பவர்கள் தாம் பிரதியுபகாரத்தைப்பெற அபேக்ஷியார் என்றபடி; இது, உபசாரவழக்கு. கடப்பாடு - கடமைப்படுதல்; கடம்படு என்னும் இர

ண்டுசொற்கள் சேர்ந்து ஒருசொல்தன்மைப்பட்ட 'கடப்படு' என்னும் பகுதி விகாரமடைந்த தொழிற்பெயர். கைம்மாற்றை எதிர்பார்த்துச்செய்யும் உதவியைக் கடப்பாடென்று பெயரிட்டுவழங்குதல் கூடாதென்க. கைம்மாறு- தாம் ஒருவர்க்குச்செய்த உபகாரம் அவர்கையினின்று மீண்டுந் தம்கைக்கு மாறுவது என்பதுபற்றி வந்த பெயர். 'என்' - இது வினுப்பொருளைக் காட்டிவிட்டதனால், கொல் ஓ என்னும் இரண்டும் - அசைநிலை. உலகு என்னும் பலபொருளொருசொல் சீவான்மாக்களை உணர்த்துதலை "உலகமுவப்ப வலனேர்பு திரிதரு" என்ற திருமுருகாற்றுப்படையினுங் காண்க. கைம்மாறு வேண்டாகடப்பாடு என்ற பொதுப்பொருளை, மாரிமாட்டென்ஞற்றுங் கொல்லோவுலகுஎன்ற சிறப்புப்பொருள் சமர்த்தித்து நின்றதனால், இது, **வேற்றுப்பொருள்வைப்பணி**. ஒப்புரவுசெய்யுங்கால் கைம்மாறுகருதிச் செய்யவேண்டா: எல்லார்க்கும் நல்வழிசுரக்கின்ற மாரிக்கு உலகம் கைம்மாறு செய்தலுண்டோ? என்றவாறு; 'கடப்பாடு-ஒப்புரவு. ஒப்புரவாவது - கைம்மாறுகருதாத கொடை என்றுகூறிற்று' என்பது, மணக்குடியருரை. (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(இ - ள்.) தக்கார்க்கு - தகுதியையுடையார்க்குஆயின், தாள் ஆற்றி தந்த பொருள் எல்லாம் - முயறலைச்செய்து ஈட்டிய பொருள்முழுதும், வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம்; (எ - று.)

பிறர்க்குஉதவாதார்பொருள்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்து இழத்தற்பொருட்டும் அன்றென்ப தாயிற்று.

(கு - ரை.) தகுதி - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களினுலாகிய யோக்கியதை. ஆயின்-ஆனுல்: இது வருவிக்கப்பட்டது. முயறல் - முயற்சி: பிரயத்தினம்; தொழிற்பெயர். ஈட்டிய - சேர்த்துவைத்த. பொருள் - செல்வம். வேளாண்மை, ஒப்புரவு, உதவி, உபகாரம் என்பன - ஒருபொருட் சொற்கள். செய்தற்பயத்தவாம் - செய்தலாகிய பிரயோசனத்தை யுடையனவாம். 'பொருட்டு' - பொருள் என்னும் பகுதியின்மேல் வந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று: நான்காம்வேற்றுமைச் சொல்லுருபாக வைத்து, செய்தலினிமித்தம் என்றலுமாம். பாடுபட்டுத்தேடியபொருளைப் புதைத்து வைத்து இழந்துபோகாமலும், தாம் மாத்திரமே அனுபவியாமலும் பிறர்க்கு உபகரிப்பவரே மேலோ ரென்று கருத்து. இனி, தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு என இயைத்து, ஒருவன் முயற்சியைச்செய்து தொகுத்த பொருள் முழுவதும் சான்றோர்க்கு உதவி செய்தற்காகவே என்றும் ஓர் உரை கூறலாம்: 'ஒருவன் முயன்று பொருளீட்டியதெல்லாம் தகுதியுடையார்க்கு உபகரித்தற்காக என்றவாறு; பொருளுண்டானுல், ஒப்புரவு செய்க என்றது' என்பது, மணக்குடியருரை. வேளாண்மை - பண்புப்பெயர்.

உகஊ. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(இ - ள்.) புத்தேள் உலகத்துஉம் - தேவருலகத்தும், ஈண்டுஉம் - இவ்வுலகத்தும், ஒப்புரவின் - ஒப்புரவுபோல, நல்ல பிற - நல்லன பிறசெயல்களோ, பெறல் - பெறுதல், அரிது—; (எ - று.)

ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லாரும் ஒருதன்மைய ராகலின், புத்தேளுலகத்து அரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்று இன்மையின், இவ்வுலகத்து அரிதாயிற்று. 'பெறற்கரிது' என்று பாடமோதி, 'பெறுதற்குக்காரணமரிது' என்று உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும், ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) பெறுதல் - (ஒருவன்) அடைதல். அரிது - அருமையானது. ஈவாரும் ஏற்பாரும் இன்றி-தானஞ்செய்பவர்களும் அதனைப் பெற்றுக்கொள்பவர்களும் இல்லாமல். யாவர்க்கும் - எல்லார்க்கும். ஒப்பது - உடன்படத்தக்கதாயிருப்பது. இதுபோல் - ஒப்புரவுபோல. ஈண்டு - சுட்டுநீண்டபெயர். ஒப்புரவின், இன் - ஐந்தனுருபு: உவமப்பொருவு; உறழ்பொருவாயின், ஒப்புரவினும் நல்ல என்று பொருள்படும். ஒப்புரவுக்கு ஒப்பில்லை யெனவே, உயர்வில்லையென்பது தானே விளங்கும். நல்ல-பலவின்பால்வினையாலணையும்பெயர். பிற - சுட்டடியாப்பிறந்த பலவின்பாற்பெயர்; விகுதிபுணர்ந்து கெட்டது. உம்மைகள் - எண்ணுப் பொருளன. தேவலோகத்திற் கொடுப்பவரும் வாங்குபவரும் இல்லாமல் எல்லாரும் ஒருதன்மையராதலை "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" எனப் பிறர் கூறியவாற்றாலும் அறிக. இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் ஒப்புரவின் நல்லபிறவில்லையென்பது, கருத்து. பெறற்கரிதுஎன்ற பாடத்திற்கும் கருத்து இதுவே. பெறற்குஎன்ற நான்கனுருபிற்குப் பொருட்டுப் பொருள் என்பார் 'பெறுதற்குக்காரணம்' எனப் பொருள் விரித்தார்: இலக்கணக்கொத்துக்காரர், இவ்வாறுவருமிடங்களிலெல்லாம் கருத்தாப்பொருள் என்று கொண்டு "ஒன்று மூன்று நான்காறெனு முருபொடு, வருமே வினைமுத லென வகுத்தனரே" என்று சூத்திரஞ்செய்துள்ளார். (கூ)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(இ - ள்.) உயிர் வாழ்வான் - உயிரோடுகூடி வாழ்வானுவான், ஒத்தது அறிவான் - உலகநடையினை அறிந்து செய்வான்; மற்றையான் - அஃது அறிந்து செய்யாதவன், செத்தாருள் வைக்கப்படும் - (உயிருடையனேயாயினும்) செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும்; (எ - று.)

உயிரின் அறிவுஞ் செயலுங் காணுமையின், 'செத்தாருள்வைக்கப்படும்' என்றார்.

இதனுன், உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) வாழ்வான் - வாழ்பவன். ஒத்தது - உலகத்தார் சம்மதித்து ஒழுகும் ஒழுக்கம்; "ஒப்புரவொழுகு", "தேசத்தோடொத்துவாழ்" என்றார்

ஔவையாரும்: "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலாதார்", "உலகந் தழீஇய தொட்பம்" என்ற திருக்குறளையும் காண்க. அறிதல் - அறிந்து செய்தலைக் குறிக்கும்; காரணம் காரியத்தின்மேல் நின்ற உபசாரவழக்கு. வைதிககாரியங்களில் வழுவினுல் அவ்வழுத்தீர்த்து உய்தற்கு யாதாயினும் ஒருபிராயச்சித்தம் உண்டு; உலகநடையை வழுவினாலோ அவ்வழுத்தீர்தற்கு ஒருவழியுமில்லை என்பது தாற்பரியம். உயிரின் அறிவும் செயலும் - உயிர்க்கு உரிய உணர்வும் செய்கையும். தீர்திறன் - தீரும் வழி. அறிவான், வாழ்வான், மற்றையான் - பெயர்கள். செத்தார், சா - பகுதி; உள் - ஏழனுருபு. 'ஒப்புரவறிபாதார் பிணத்தோடு ஒப்பரென்றது' என்பது, மணக்குடியருரை வாக்கியம். (சு)

உகரு. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(இ - ள்.) உலகு அவாம் - உலகநடையை விரும்பிச் செய்யும், பேர் அறிவு ஆளன்-பெரிய அறிவினை யுடையவனது, திரு-செல்வம்,—ஊருணி-ஊரின்வாழ்வார் தண்ணீருண்ணுங் குளம், நீர் நிறைந்து அற்று - நீர்நிறைந் தாற்போலும்; (எ - று.)

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவு மென்பதாம்.

(கு - ரை.) உலகு - உலகநடைக்குப் பொருளாகுபெயர். அவாம்-அவாவும் என்னும் செய்யுமெனெச்சம், ஈற்றுயிர்மெய்கெட்டு நின்றது; [நன். வினை. உஉ.] அறிவாளன் - அறிவையாள்பவன். ஊருணி - காரணப்பெயர்; 'ஊர்' - ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர்: உண் என்பது - உண்பன தின்பன பருகுவன நக்குவன எனப் பிரித்துக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அங்ஙனங்கூறுதவிடத்துப் பசி தாகந் தீர வாயால் உண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப்படுமாதலின் பொதுவினையுமா மாதலால், 'ஊர்பருகி' என்னுமல் 'ஊருணி' எனப்பட்டது: உண்ணப்படுவது என்று பொருளாதலால், இ - செயப்படுபொருள்விகுதி. 'ஊருணியில்நிறைந்த நீ ரற்று' என்னுது 'ஊருணிநீர்நிறைந்தற்று' என்றதில், குளமென்னும் இடத்து நிகழ்கின்ற நீரென்னும்பொருளின் நிறைதலாகிய தொழில் அதற்குஇடமாகிய குளத்தின்மேல் நின்றது காண்க. நெடிதுநின்று - நெடுங்காலம் நிலைபெற்று. பெருமை + அறிவு=பேரறிவு. உபமானம் உபமேயம் உவமவுருபு பொதுத்தன்மை என்னும் நான்கனுள் பொதுத்தன்மை தொக்கு வந்ததனால், தொகை யுவமையணி; வருமிரண்டுபாட்டுக்களும் இவ்வணியே. 'ஊருண்கின்றகேணி நீர்நிறைந்தாலொக்கும் உலகத்தாரெல்லாராலும் நச்சப்படுகின்ற பெரிய ஒப்புரவறிவானது செல்வம் என்றவாறு. இது, ஒப்புரவறிவார்க்கு உளதாகிய செல்வம் நச்சிச்சென்றூர்க்கு வேண்டியவாறு முகக்கலாமென்றது' என்பது, மணக்குடியருரை. (கு)

உகசு. பயன்மரா முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—,நயன் உடையான்கண் படின் - ஒப்புரவுசெய்வான்கண்ணே படுமாயின், (அது),—பயன் மரம் - பயன்படுமரம், உள்ஊர்-ஊர்நடுவே, பழுத்து அற்று - பழுத்தாற்போலும்; (எ - று.)

உலகநீதிபலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கு மென்பதாம்.

(கு - ரை.) படுமாயின் - உண்டானால். பயன் - பிரயோசனம். 'நயன்' என்பது, இங்கே ஒப்புரவை உணர்த்திற்று. ஊருள் என்பது உள்ளூர் என முன்பின்னாகத்தொக்குவந்த ஆறும்வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி யென்பர். ஆல் - ஈற்றசை. நயனுடையான் என்பதற்கு - நீதியை யழியான் என்றும் பொருள்கொள்ளலாம். "நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க, படுபேய் மன்னர் பலர்நச்சவாழ்வார், குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத் தூண்ணு மாக்க, ளிடுகாட்டுளேற்றைப் பேய்" என்னும் நாலடியார்ச் செய்யுளிலும் இக்கருத்துக் காண்க. இவ்வதிகாரத்தில் முதல் ஐந்து ஆறு இம் மூன்றுபாட்டுக்களின் கருத்தைத் தொகுத்துக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் "ஊருணி நிறையவு முதவுமாபோல், பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவுங், கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி, வார்புனல் பெருகவு மறுக்கின் றார்களியார்" எனக் கூறியவாறு உணர்க. "கற்றையுஞ் சுடர்மணி கனக மேனைய, பிற்றையென் னுதருள் பெரியர் வண்மைபோன், மற்றவ ணுள்ள பன்மரமுந் தம்பய, னெற்றையு முலப்புறு தீகை சான்றவே" என்னுங் கந்தபுராணச்செய்யுளையும் அறிக. (சு)

உகள. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(இ - ள்.) செல்வம்—, பெருந்தகையான்கண் - (ஒப்புரவுசெய்யும்) பெரியதகைமையையுடையான்கண்ணே, படின் - படுமாயின், (அஃது),—மருந்து ஆகி தப்பா மரத்து அற்று - (எல்லாவுறுப்பும் பிணிகட்கு) மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்; (எ - று.)

தப்புதலாவது - கோடற்கு அரியஇடங்களில்நின்றுதல், மறைத்து நின்றுதல், காலத்தான்வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது எல்லார்வருத்தமுந் தீர்க்கு மென்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) தகைமை - தன்மை. எல்லாவுறுப்பும் - கொழுந்து, இலை, பூ, பட்டை, வேர், காய், கனி, கொட்டை, கட்டை முதலியன. எல்லாவுறுப்பும் பிணிகட்குமருந்தாம் மரம் - வேம்புமுதலியன சில. தப்புதல்-பயன்படுவதில் தவறுதல். கோடற்கு அரிய இடங்களில் நிற்றல் - சென்று கொள்ளுதற்கு அருமையான செங்குத்தான மலை முதலிய இடங்களில் இருத்தல்.

மறைத்துநிற்றல் - சென்று கொள்ளுதற்கு அரியதல்லாத புழைக்கடைமுத லிய இடங்களிலிருந்தும் வேறுபொருள்கள் மறைக்க மறைந்துநிற்றல். காலத்தான் வேறுபடுதல் - ஒருகாலத்திலிருந்து மற்றொருகாலத்தில் இல்லா மற்போதல். யாதொருமாறுபாடுமில்லாமல் வெளிப்பட்டுநின்று, யாவரும் தனது கிளை இலை முதலிய உறுப்புக்களை முறித்தும் பறித்துஞ் செய்கின்ற தனதுகுறையையும் வருத்தத்தையும் நோக்காமலே அவர்களது நோய்களை மருந்துமரம் தீர்ப்பதுபோல, பெருந்தகையாளனுடைய செல்வமும் மாறுபா டொன்றும் இல்லாமல் எளிதாகவெளிப்பட்டுநின்று, கொடுக்கக்குறைவுபடுத லும் வருத்தமும் நோக்காமலே அனுபவித்தற்குரிய பற்பலபொருள்களை யும் உதவுதலில் தப்பாமல் அடைந்தவர்வருத்தங்களை யொழிக்கு மென்க. கடப் பாட்டாளன் - பிறர்க்கு உதவிசெய்பவன். பெருந்தகை - பெருமையாகிய தகையென விரியும்; பண்புத்தொகை. தகை - தகுதி, சற்குணம்: தகு-பகுதி, ஐ - விகுதி; இது - தொழிலடியாகப் பிறந்ததாயினும், பொருளாற் பண்புப் பெயர். ''அல்லலொருவர்க் கடைந்தக்கான் மற்றவர்க்கு, நல்லகிளைக ளெனப் படுவார் நல்ல, வினைமரபின் மற்றதனை கேக்குமதுவே, மனைமரமாய மருந்து'' என்ற பழமொழிச்செய்யுள் இங்கு உணரத்தக்கது. ஆல் - அசை. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ - ன்.) இடன் இல்பருவத்துஉம் - செல்வம் சுருங்கியகாலத்தும், ஒப் புரவிற்கு - ஒப்புரவு செய்தற்கு; ஒல்கார்-தளரார்: கடன் அறி காட்சியவர் - செய்யத்தகுவனவற்றை அறிக்த இயற்கையறிவுடையார்; (எ - று.)

பிறவெல்லாம் ஒழியினும் இஃது ஒழியார் என்பதாம்.

(கு - ரை.) பிறவெல்லாம் ஒழியினும் இஃது ஒழியார் - இடம்பொரு ளேவல்கள்யாவும் ஒழிந்தாலும் ஒப்புரவுசெய்தலை ஒழியார். கடன்-முறைமை. இடம் - செல்வம்; அது, 'இடன்' என நின்றது. இடமென்பது - செல்வ மென்னும் பொருளதாதலை மேல் இரவச்சமென்னும் அதிகாரத்தில் 'இடமில் லாக், காலு மிரவொல்லாச் சால்பு'' என்றவிடத்தும் காண்க. இல்பருவம் - பண்புத்தொகை. பருவத்தும், உம் - இழிவுசிறப்பு. ஒல்கார், ஒல்கு - பகுதி. கண் பொருள்களை எதிரிற் பார்த்தல்போல, அறிவு பொருள்களை ஊகித்துப் பார்த்தலால், 'காட்சி' யெனப்பட்டது. 'செல்வம் விரிவில்லாத காலத்தினும் ஒப்புரவுசெய்யவேண்டு மென்றது' என்பது, மணக்குடிய ருரை. (அ)

உகக. நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(இ - ள்.) நயன் உடையான் - ஒப்புரவுசெய்தலை யுடையான், நல்கூர் ந்தான் ஆதல் - நல்கூர்ந்தானுதலாவது,—செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - (தவிராது) செய்யும் நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்ய ப்பெறுது வருந்துகின்ற இயல்பாம்; (எ - று.)

தான் நுகர்வன நுகரப்பெறுமை யன்று என்பதாம்.

இவையிரண்டொட்டானும், வறுமையான் ஒப்புரவு ஒழிதற்பாற்றன்று என்பது கூறப்பட்டது.

(சு - ரை.) நல்கூர்ந்தாளுதல் - தரித்திரப்பட்டவனுதல்; நல்கு ஊர் என்னும் இரண்டுசொற்கள் நல்கூர் என ஒருசொல்லின்தன்மைப்பட்டுப் பகுதியாய் நின்று, பிறன் கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளச்செல் என்னும் பொருளதாய், வறுமைப்படுஎன்ற பொருளோக் குறித்தது. தவிராதுசெய்யும் நீர்மையையுடைய - தவறுமற்செய்யப்படுக் தன்மையையுடைய. அமைகலாஆறு - மனம் திருப்திப்பட்டிராத தன்மை. தான் நுகர்வன நுகரப்பெறுமையன்று - ஐம்பொறிகளாலும் அனுபவிக்கப்படும் பொருள்களுள் ஒன்றையுந் தான் அனுபவிக்கப்பெறுமை அவனுக்கு வறுமையன்று. ஒழிதற்பாற்று அன்று - நீங்குந் தன்மையையுடையதன்று. பிறர்க்கு உதவிசெய்பவன் அதனால் தனக்கு வறுமைநேர்ந்தாலும் அதற்கு வருந்தான்; பிறர்க்கு மீண்டும் உதவிசெய்தற்கு இல்லையேயென்று வருந்துவான் என்று கருத்து. 'இது, செல்வம் குறைபடினும் ஒப்புரவுசெய்வரென்றது' என்பது, மணக்குடியருரை வாக்கியம். செயும் - தொகுத்தல். நீர - பலவின்பாற்பெயர்; நீர்மை - பகுதி. நீரசெய்யாது - இரண்டாம்வேற்றுமைத்தொகை. அமைகலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (கூ)

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(இ - ள்.) ஒப்புரவினால் - ஒப்புரவுசெய்தலான், (ஒருவனுக்கு) கேடு வரும் - பொருட்கேடு வரும், எனின் - என்பா ருளராயின், அஃது - அக்கேடு, ஒருவன் விற்று கோள் தக்கது உடைத்து - தன்னை விற்றுயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து; (எ - று.)

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொருபொருள் இல்லையன்றே: இஃதாயின் அதுவுஞ் செய்யப்படும்: என்றது, புகழ்பயத்தல் நோக்கி.

இதனால், ஒப்புரவினாற் கெடுவது கேடன்று என்பது கூறப்பட்டது.

(சு - ரை.) என்பார் உளராயின் - என்று சொல்பவர் உண்டானால். விற்றாயினும் - விலையாகக் கொடுத்தாயினும். கொள்ளும் - வாங்கும். இல்லையன்றே, அன்றே - தேற்ற முணர்த்திற்று. இஃதாயின் - ஒப்புரவினால் வருங் கேடாயின். அதுவும் செய்யப்படும் - தன்னை விற்றுங் கொள்ளப்படும். இங்ஙனங்கூறியது, அவ்வொப்புரவுசெய்தலினாலுண்டாகும் பெரும் புகழைக் கருதி யென்க. 'விற்று' என்பதற்கு ஏற்ப, ஒருவன் என்பதற்கு - 'தன்னை' எனச் செயப்படுபொருளாக உரைகூறினார்: தன்னினுஞ் சிறந்த தொருபொருள் இல்லை யாதலின்; இதனால், பிறவற்றைவிற்றல் கூறாதே பெறப்பட்டது. ஈழ் ''கெடுவாகவையா துலகம் நடுவாக, நன்றிக்கட் டங்கியான் றாழ்வு'' என்றது, இங்கு உணரத்தக்கது. 'எனின்' என்றதனால், ஒப்புரவினாற் கெடுதிவாரா தென்பதும், அதனாற் கெடுதிவரு மென்பார் உலகத்தில் இல ரென்பதும் பெறப்படும். 'கேடன்று' என்றதனால், செல்வ

மென்று கருதப்படும் என்க. 'அஃதொருவன்' என்றவிடத்து - ஆய்தம் மெய் போல் ஒலித்தது. கோட்டக்கது - கொள்ளுதற்குத் தக்கதுஎன நான்காமுருபு விரிக்க. தக்கது - இறந்தகாலத்தொழிற்பெயர். 'ஒப்புரவுசெய்து அதனாலே பொருட்கேடு வந்ததென்றுசொல்லினும் அக்கேட்டைக் கேடாகச் சேர்த்துக் கொள்ளப்படாது: ஒன்றைவிற்று ஒன்றைக்கொள்கின்ற வாணிகமாகக்கொள்ளுந் தகுதியுடைத்து என்றவாறு. கெட்டானெயினும் அதனை ஆக்கமாகக் கொள்ளப்படும்: என்றது, பிற்பயப்பன நன்மையாதலான்' என்பது, மணக்குடியருரை. (கo)

உக - ஆம் அதிகாரம்—ஈகை.

அஃதாவது - வறியராய் எற்றூர்க்கு மாற்றுதுகொடுத்தல். இது மறுமை நோக்கிய தாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வறியராய் - தரித்திரராய். எற்றூர்க்கு-யாசித்தவர்களுக்கு. மாற்றுது - இல்லையென்று சொல்லாமல்; கைம்மாறுநோக்கியல்லாமல் என்றும் பொருள்படும். இம்மையைக் குறித்த ஒப்புரவறிதலின்பின் மறுமையைக்குறித்த ஈகையைவைத்தல், அதிகார அடைவுக்கு ஏது. ஈகை - தொழிற்பெயர்; ஈ - பகுதி, கை - விகுதி. ''ஈ தா கொடு வெனு மூன்று முறையே, இழிந்தோ னெப்போன் மிக்கோ னிரப்புரை'' என்றதனாலும், ஈதல் - தன்னிணுமிழிந்த பொருளில்லாதவனுக்கு அவனினுமுயர்ந்த பொருளுடையோன் ஒன்றைத் தானஞ்செய்தலாம் என்றறிக; 'ஈகையாவது - இல்லென இரந்து வந்தார்யாவர்க்கும் வரையாதுகொடுத்தல்' என்பர், மணக்குடியர்.

உஉக. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(இ - ள்.) வறியார்க்கு - ஒருபொருளும் இல்லாதார்க்கு, ஒன்று-(அவர் வேண்டியது) ஒன்றை, ஈவதுஎ - கொடுப்பதே, ஈகை - (பிறர்க்குக்) கொடுத்தலாவது; மற்று எல்லாம் - அஃது ஒழிந்த எல்லாக்கொடையும், குறி எதிர்ப்பை நீரது உடைத்து - குறியெதிர்ப்பைகொடுக்கும் நீர்மையை யுடைத்து.

ஒழிந்தகொடைகளாவன - வறியரல்லாதார்க்கு ஒருபயன்நோக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது-அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. 'நீரது'என்புழி, 'அது'என்பது-பகுதிப்பொருள்விகுதி. பின்னும் தன்பால் வருதலின், 'குறியெதிர்ப்பை நீரது உடைத்து' என்றார்.

இதனால், ஈகையது இலக்கணம் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்றை - ஒருபொருளை. அஃது ஒழிந்த - அங்ஙனங் கொடுத்தல் தவிர்ந்த. நீர்மை - தன்மை. நீர் - நீர்மையென்னும் பண்புப் பெயரின் விகாரம்: 'அது' என்பது, வேறுபொருளைத்தாராமல், மைவிகுதி போல அப்பகுதியின்பொருளையே தந்ததனால், பகுதிப்பொருள்விகுதியாம். பின்னும் தன்பால் வருதலின் - மீண்டும் தன்னிடத்து வருதலால். ''குறியெதிர்ப்பையென்பது - இறந்தகால வினைத்தொகைத்தொடர்மொழி. எதிர் காலத்திலே பெறும்படியாகக் குறித்த எதிர்ப்பை என விரியும்; எதிர்ப்பை

என்பதனுள், எதிர்-எதிர்காலம்: அது தொழிற்பெயராங்கால் இறப்பு, நிகழ்பு என்றாற்போலப் பகுதிப்பொருள்விகுதியோடுநின்று விகாரப்பட்டு "ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே" என்னுஞ் சூத்திரத்தால் ஐகாரத்தை ஈற்றிலே பெற்று, எதிர்காலத்திலே பெறும்படியாகக் குறித்து நிகழ்காலத்திலே இடப் படுகின்றதற்குப் பெயராய் வழங்கிவருகின்றது; 'அவன் எதிர்ப்பையிட்டு உறவாடினான்' என வழங்கிவருவதைச் செந்தமிழ்நாட்டு வழக்குநோக்கிக் காண்க: இது - கடன்கொடுத்தலினின்றும் வேறுபாடுடையது; இதனை இக்காலத்து 'வரிசை' என்றும் வழங்குவர்"—இது, இராமாநுசகவிராய ருரை. இரவல், கடன், எதிர்ப்பை என்பன ஒன்றோடொன்று பொருளிற் சிறிது வேறுபாடுடையன வென அறிக. செய்த உபகாரத்துக்குப் பிரதியுப காரம் வரவேண்டுமென்று நினைத்தால், கடன்கொடுத்து வாங்குகிறதுபோலே யாகுமென்க. 'இது, கொடுக்குங்கால் இல்லாதார்க்குக் கொடுக்கவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரைவாக்கியம். இத்திருக்குறளிற்கூறிய கருத்தை "ஏற்றகை மாற்றுமை யென்னுனுந் தாம் வரையா, ராற்றுதார்க் கீவதாமாண்கடன் - ஆற்றின், மலிகடற் றண்சேர்ப்ப மாரிவார்க் கீதல், பொலிகடனென்னும் பெயர்த்து" என நாலடியாரிலுங் காண்க. வறியார் - பண்படியாகப்பிறந்த பலர்பாற்பெயர். ஒன்று-எண்ணலளவாகுபெயர். ஈவது-எதிர்காலத்தொழிற்பெயர். ஏ - பிரிநிலை. மற்றையெல்லாம் என்பது, மற் றெல்லாம் என விகாரப்பட்டுநின்றது. எல்லாம் உடைத்து - பன்மையொரு மைமயக்கம்; [நன். பொது. 29.] வறியரல்லாதார் - செல்வமுடையோர். குறியெதிர்ப்பை நீர் - குறியெதிர்ப்பையினது நீர்மை; ஆறும்வேற்றுமைத் தொகை. குறியெதிர்ப்பையென்பது - குறித்த எதிர்ப்பையென இப்பொரு ளில்வருதலை "நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும், எல்லோர்க்குங் கொடு" எனப் புறநானூற்றிலுங் காண்க. (க)

உஉஉ. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(இ - ள்.) கொளல்-ஏற்றல், நல் ஆறு எனின்உம் - (வீட்டுலகிற்கு) நல்ல நெறி யென்பா ருளராயினும், ஈது - (அது) நீதி; மேல் உலகம் இல் எனின்உம் - (ஈந்தார்க்கு)அவ்வுலகெய்துதல் இல்லையென்பா ருளராயினும், ஈதலே நன்று—; (எ - று.)

'எனினும்' என்பது, இருவழியும் அங்ஙனங் கூறுவாரின்மை விளக்கி நின்றது. பிரிநிலையேகாரத்தால், பிறவறங்களின் ஈதல் சிறந்த தென்பது பெற்றும். நல்லதுகூறுவார் நீயதும் உடன்கூறினர்.

(கு - ரை.) ஏற்றல் - யாசித்தல். அவ்வுலகு எய்துதல் - முக்தியுலக மடைதல். இருவழியும் - இரண்டிடத்தும்; இரண்டு வாக்கியங்களிலும். பிரி நிலையேகாரம் - பலவற்றினின்று ஒன்றைப் பிரித்துக்காட்டிநிற்றற்பொருள தான ஏகாரம். நீயதை விளக்கினு லல்லது நல்லது விளங்கா தாதலால், இரண்டையும் உடன் கூறினர். யாசித்தல் நீயதாதலை, மேல் 'இரவச்சம்'

என்னும் அதிகாரத்தில் விரித்துக்கூறுவர். ஈதலே என்ற பிரிநிலை யேகாரத்தை எடுத்து 'கொளல்' என்பதனோடும் இயைத்தால், கொடியவையெல்லாவற்றினும் இரத்தல் கொடியதா மென்பதும் பெறப்படும்; "இன்னுமை வேண்டி னிரவெழுக," "இலமென்னும், வன்மையின் வன்பாட்டதில்," "இரத்தலி னின்னுத தில்லே" என்பன காண்க. 'இச்செய்யுளில் தீதென்றும் நன்றென்றும் வந்தமையான் முரணென்னும் அலங்காரமாயிற்று' என்பது, வீரசோழியவுரை. "இன்னுயிரேனுங், கொள்ளுதல்தீது கொடுப்பது நன்றுல்" என்பது கம்பராமாயணம். (உ)

உஉக. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ - ள்.) இலன் என்னும் எவ்வம் உரையாமை - '(யான்) வறியன்' என்று (இரப்பான்) சொல்லும் இளிவரவை(த் தான் பிறர்கட்) சொல்லாமையும், ஈதல் - (அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது) ஈதலும், (இவையிரண்டும்), உள - உளவாவன,—குலன் உடையான்கண்ஏ - குடிப்பிறந்தான்கண்ணே; (எ - று.)

மேல் "தீது" என்றது ஒழிதற்கும், "நன்று" என்றது செய்தற்கும் உரியவனே உணர்த்தியவாறு. இனி, 'இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்' என்பதற்கு - அவ்விளிவரவை (ஒருவன் தனக்குச்) சொல்வதற்கு முன்னே (அவன்குறிப்பறிந்து) கொடுத்தல் எனவும், அதனே(ப் பின்னும் பிறனெருவன்பாற் சென்று அவன்)உரையாவகையாற் கொடுத்தல் எனவும், (யான் இதுபொழுது) பொருளுடையேனல்லேனென(க் கரப்பார்)சொல்லும் இளிவரவைச் சொல்லாதுகொடுத்தல் எனவும் உரைப்பாருமுளர்; அவர், 'ஈதல்' என்பதனைப் பொருட்பண்மைபற்றிவந்த பண்மையாக உரைப்பர்.

(கு - ரை.) இப்பாட்டிற்கு நான்கு உரை. இளிவரவு - துயரமொழி. அதனே - அவ்விழிமொழியை. குடிப்பிறந்தான்கண்ணே - உயர்குடியிற் பிறந்தவனிடத்தே. மூன்றினபாட்டில் 'தீது'என்ற யாசகத்தை நீங்குதற்கும், 'நன்று'என்ற தானத்தைச் செய்தற்கும் உரியவன் யாரெனில்?—உயர்குடிப் பிறந்தவனென இதிற் கூறினர். இலன் என்பதற்கு இலக்கணம் - கீழ் உ0நி-ஆங்கவியின் கீழ்க் காண்க. எவ்வம்-துன்பம்; அதனேஉணர்த்தும்மொழிக்கு ஆகுபெயர். உரையாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். உரையாமை, ஈதல் என்பன, உள என்னும் அஃறிணைப்பன்மைக்குறிப்புமுற்றைக்கொண்டன. குலன் - குலம்என்பதன்போலி: னகரமே மகரத்தோடு மயங்கிவரு மென்பது ஒருசாரார்கொள்கை. பொதுப்படக் கூறியதனுல், நல்லகுலத்தை உணர்த்திற்று; (குணம், ஒழுக்கம், அறிவு முதலியவை பொதுப்படக்கூறினுல், பெரும்பாலும் நல்லவற்றையே குறிக்கும்.) ஏகாரம்-பிரிநிலை: ஆதலால், உயர்குடிப்பிறவாதானிடத்து இவ்விரண்டுகுணங்களுள் ஒன்று உண்டாயினும் உண்டாகுமேயன்றி இரண்டு முண்டாவது அருமை யென்பது கருத்தாம்.

குலனுடையான் - சாதியொருமை. இரண்டாவது உரைகீது-இல்லேனென்னும் வார்த்தையைத் தன்முன் ஒருவன்சொல்லாதபடி அவன்சொல்லுதற்கு முன்னே அவன்கருத்தைக் குறிப்பாலறிந்து கொடுத்த லென்றும், முன்ற முரைகீது - இல்லேனென்னும்வார்த்தையை யாசகன் தன்னிடந் தானம் வாங்கினபின்பும் வேறொருவனிடம்போய்ச் சொல்லாதபடி அவனது வறுமை நீங்கவும் அவனுக்குச் செல்வம்நிரம்பவுந் திருப்தியுண்டாகவுங் கொடுத்த லென்றும், நான்காமுரைகீது - இல்லே னென்று (இயல்வது கரப்பாராய) உலோபிகள் சொல்லும் வார்த்தையைத் தான் சொல்லாமற் கொடுத்த லென்றும் பொருள்; இவ்வுரைகளுக்கு, ஈதல் என்பது - பலர்க்குப் பலபொருளீத் தானஞ்செய்தல் பற்றிவந்த பன்மையை யுணர்த்தும் பால்பகாவஃறிணைப் பெய ராதலால், உள என்னும் பன்மைமுற்றைக் கொண்ட தென்க. உரையாமை - எதிர்மறைவினையெச்சம். இதுபொழுது - இப்பொழுதில். கரப்பார்-கொடுக்கக்கூடியபொருளைக் கொடாமல்மறைப்பவர். தன்னிடம் வந்து யாசித்தவன் இல்லேன் என்னும் இழிமொழியை அவனிடம்வந்து யாசிப்பவர்க்குச்சொல்லாமல் அவர்வேண்டுவனவெல்லாம் கொடுக்கும்படி அவனுக்கு நிரம்பப்பொருள்கொடுத்த லெனவும் பொருள்கொள்ளலாம். இனி, 'இலன்' என்பதை ஆண்பாற்படர்க்கை யொருமைவினைமுற்றாகக் கொண்டால், இவன் இல்லாதவ னென்னும் நிந்தைச்சொல்லே யாசகனுக்குறித்துத் தான் சொல்லாம லீதலென்றும், இவன் இல்லாதவனென்னும் இகழ்சொல்லைத் தன்னைக்குறித்து யாசகனுவது பிறராவது சொல்லாதபடி யீதலென்றும், தன்னிடம் வந்துபோன யாசகனைக்குறித்துப் பிறர் இவன் இல்லாதவ னென்று சொல்லாமற் பொருளால்மிக்கவனென்று சொல்லும்படி யீத லென்றும், இவன் நமது இல்லிடத்தே [வீட்டில்] வந்துள்ளானென்று இகழ்ந்து கூறாம லீத லென்றும் பொருள்படும். இன்னோரன்ன விசேஷார்த்தங்கள் பலவற்றையும் ஒருங்கே தருகின்ற சிறப்புப்பற்றி யன்றே, "கடுகைத்துளைத் தேழ்கடலைப்புகட்டிக், குறுகத் தறித்த குறள்" என இந்நூலின் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் விளங்கச் சிறப்பித்துக் கூறியது. குலனுடையான்என்பதில் - குலத்தையுடைமையாகப் பெற்றவ னென்னும் பொருளுந் தோன்றும். ஈதல்தொழில் ஒன்றுயினும் ஈயப்படும் பொருள்கள் பல வாதலால், அப்பொருளின்பன்மைபற்றி ஈதலும் இங்கே பலவாயின; அன்னதானம், கன்னிகாதானம், சொன்னதானம், பூதானம், கோதானம், வித்யாதானம் முதலிய பலவகைத்தானங்க ளென்றபடி. இலன் என்னுஞ் சொல்லே எவ்வமென்றது, அதனைச்சொல்வோருங் கேட்போருந் துன்புறுதலா லெனக் காண்க. முதலுரைக்கு 'உரைபாமையீதல்' என்னுஞ் செவ்வெண்ணின்ஈற்றில் 'இரண்டும்'என்னுந் தொகை விகாரத்தால் தொக்கது. "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில், லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கு ளுள்ள படி" என்னும் ஔவையார்பாடலுக்கும் இக்குறளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களை உய்த்து உணர்க.

இவ்வருமைத்திருக்குறளினது கருத்தின்பெருக்கத்தைத் தொகுத்துத் திருவாவடுதுறையாதீனத்துக் கச்சியப்பமுனிவர் விநாயகபுராணத்தில் அரசியற்கைப்படலத்திற் கூறியுள்ள செய்யுட்களைக் கீழே காண்க:—

கூஅ. ''இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங் கூரு
திரப்பினை நிரப்ப னன்ரு மதனினன் ரூவ தாகு
மிரப்பவ னிலனென் ரூர வியம்பிய வெவ்வஞ் சொல்லென்
நிரப்பினும் பிறர்பாற் கூரு நிரக்கமோ டுதன் மைந்தா.

கூக. அருத்தியி னிலனென் ஞமு னளித்தலு மிலனென் றப்பா
லுரைத்தில னுகச் சால வுதவலு மேற்கின் ரூனும்
வருத்துற விலனென் ஞமை வழங்கிட வரைவில் செல்வம்
பொருத்தலு மொன்றி னென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.

சo. நலமிகு செல்வம் பெற்றும் நல்குர வினரைக் காத்த
லிலனென மாதி சீர்த்தி யிலனெனைப் பிறர்சொ லெவ்வ
வலனுரைக் கஞ்சி யேனும் வறியனை யிலனென் றெள்ளா
தலர்புகழ் பயனும் வேண்டி னுக்கையு மளிக்க மைந்தா.'' (கூ)

உஉச. இன்ன திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

(ஐ - ள்.) இரக்கப்படுதல் - (இரத்தலேயன்றி) இரக்கப்படுதலும்; இன்னது - இனிதன்று; இரந்தவர் இன் முகம் காணும் அளவு - (ஒருபொருளே) இரந்தவர் (அதுபெற்றதனால்) இனிதாகிய (அவர்) முகங் காணுமளவும்.

எச்சவும்மையும் முற்றும்மையும், விகாரத்தால் தொக்கன. இரக்கப்படுதல் - இரப்பார்க்கு ஈவலென்று இருத்தல். அதனை 'இன்னது' என்றது, ''எல்லா, மிரப்பார்க்கொன் றீயாமை'' கூடுங்கொல்லோ என்னும் அச்சம் நோக்கி: எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டு மென்பது பெறப்பட்டது.

(கு - ரை.) 'இரக்கப்படுதலும்' என்கிற இறந்ததுதழுவிய எச்சவும்மையும், 'காணுமளவும்' என்கிற முற்றும்மையுந் தொக்கது - விகாரம். ஈவல் - (அவர்வேண்டுவதைக்) கொடுப்பேன். அதனை - இரக்கப்படுதலை. எல்லா மிரப்பார்க்கு ஒன்றீயாமை கூடுங்கொல்லோ என்னும் அச்சம் - 'தமக்கு வேண்டும் பலபொருள்களை இரப்பவர்கட்கு அப்பொருள்கள்பலவற்றுள் யாதானுமொன்றைக் கொடுக்கக்கூடாதிருக்கும்படியாய்விடுமோ?' என்று அதற்குக் குடிப்பிறந்தார் அஞ்சுதல். இம்மேற்கோள் - நாலடியாரில் ''கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம், சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம், இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம், மாணக் குடிப்பிறந்தார்'' என்பதி லுள்ளது. திருப்தியுண்டாகக் கொடுத்தல்வேண்டு மென்பது இதன்கருத்து. 'இது கொடுக்குங்கால் தாழாது கொடுக்கவேண்டு மென்றது' என்பர் மணக்குடியர். இப்பாட்டில் 'இரக்கப்படுதல்' என்பதைச் செயப்பாட்டுவினைத்தொழிற்பெயர்க்கு உதாரணங்காட்டினர் இலக்கணக் கொத்துநூலாசிரியர். (சு)

உஉடு. * ஆற்றுவா ராற்றல் பகியாற்ற லப்பகியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(இ - ள்.) ஆற்றுவார் ஆற்றல் - (தவத்தான்) வலியார்க்கு வலியாவது, பசி ஆற்றல் - (தம்மைஉற்ற) பசியைப் பொறுத்தல்: (அவ்வலிதான்), அ பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் - அங்ஙனம் பொறுத்தற்கு அரிய பசியை (ஈகையான்) ஒழிப்பாரது வலிக்குப் பின்; (எ - று.)

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதா ராற்றலின், தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பா ராற்றல் நன்று என்பதாம்.

(கு - ரை.) வலி - பலம்; வல்லமை. உற்ற - அடைந்த. அது - பசியை. ஆற்றலின் - வலிமையினும். ஆற்றல் - ஆற்றுஎன்னும் பகுதியின்மேல் வந்த தொழிற்பெயர். தவஞ்செய்பவர் உண்டிசுருக்கல் முதலியவற்றால் தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலை, மேல் "உற்றநோய் நோன்ற லுயிர்க்குறு கண் செய்யாமை, யற்றே தவத்திற் குரு" என்பதனாலும், துறவறத்தார்க்கு இல்லறத்தார் உண்டிமுதலியன உதவிப் பசிமுதலிய இடையூற்றினை ஒழித்தலை, மேல் "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும், நல்லாற்றி னின்ற துணை" என்றதனாலும் அறிக. "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார், பெருமை பிறங்கிற் றுலகு" என்றது முதலாகக் கீழ் 'நீத்தார்பெருமை' என்னும் அதிகாரத்திற் கூறிய முற்றத்துறந்தமுனிவரது பெருமையினும் தானஞ்செய்வாரதுபெருமையே மிக்கது என்பது கருத்து; எனவே, எல்லாப்பெருமையினும் இது சிறந்த தென்பதாம். 'நான்கு ஆச்சிரமிகளுள் வேதம்முதலியவற்றிற் சொல்லுகிற கர்மானுஷ்டானஞ்செய்கிற கிருகஸ்தன் மற்றை மூவரையும் பிக்ஷாகொடுத்துக்காக்கிறபடியால் உயர்ந்தவனென்று சொல்லப்படுகிறான்' என்பது மநுதருமசாஸ்திரம். இது, புனைந்துரைவகையால் ஈகைச்சிறப்புரைத்த தாதலின், "துறந்தார்பெருமை துணைக்கூறின் வையத்து, இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று", "செயற்கரிய செய்வார் பெரியர்", "தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்", "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல், மற்றையவர்கள்தவம்" என முன்னும் பின்னும் கூறுகிற நீத்தார்பெருமையோடு மாறுகொளக்கூறலாகாது. (நி)

உஉசு. அற்றூ ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றூன் பொருள்வைப் புழி.

(இ - ள்.) அற்றூர் - வறியாரது, அழி பசி - மிக்க பசியை, தீர்த்தல் - (அறன்நோக்கித்) தீர்க்க: பொருள் பெற்றூன் ஒருவன் - பொருள் பெற்றூனொருவன், வைப்பு உழி - (அதனைத் தனக்கு உதவு)வைக்கும்இடம், அஃது - அவ்வறம், (ஆகலான்); (எ - று.)

எல்லாநன்மைகளும் அழியவருதலின், 'அழிபசி' என்றூர். 'அறன்நோக்கி' என்பது, எஞ்சிநின்றது. அற்றூரழிபசிதீர்த்த பொருள் பின் தனக்கே வந்து உதவு மென்பதாம்.

---

* ஆற்றுவார்க்காற்றல்.

(கு - ரை.) அற்றார் - பொருள்களில்லாதவர். அழி பசி - எல்லா நன்மைகளையும் அழிக்கின்ற பசி: வினைத்தொகை; இங்கே பிறவினைப்பொருளது; அன்றிக்கே, எல்லாநன்மைகளும் அழிதற்குக்காரணமான பசியென்று காரியப்பொருளில்வந்த வினைத்தொகையெனவுங் கொள்ளலாம். பசி எல்லாநன்மைகளையும் அழித்தலே "மானங் குலம் கல்வி வண்மை யறிவுடைமை, தானச் தவ முயர்ச்சி தாளாண்மை - தேனின், கசிவுண்ட சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும், பசி வந்திடப் பறந்து போம்" என்பதனாலும் அறிக. அழிக்கும்பசி எனவே, மிக்கபசியென் றுயிற்று; அழித்தல் - வருத்துதலுமரம்; தொடும்பசி யென்க. அறன் நோக்கி - தருமத்தைப்பார்த்து; இது தருமமென்று எண்ணி. தீர்க்க - நீக்குக. தீர்த்தல் - வியங்கோள் வினைமுற்று. அதனை - அப்பொருளை. 'அறனெனக்கி' என்ற சொல்லெச்சம், வருவித்து முடிக்கப்பட்டது. பின் - மறுமையில். எழைகட்குப் பொருளைத் தானஞ் செய்தவன் அதன்பயனால் மறுமையில் இன்பமும் வருபிறப்பிற் பொருளுந் தவறுமற்பெறுவா னென்பது கருத்து. அஃதொருவன் - ஆய்தம் உயிர்போல ஒலித்தது. வைப்பு - வைத்தல்; தொழிற்பெயர். வைப்புழி என்பதை-வைத்தற்குரிய இடம் என நான்காம்வேற்றுமைத்தொகையாக விரிக்க. இனி, இக்குறளை ஒருவாக்கிய மாகக்கொண்டு,வறியவரதுபசியை யொழித்தலாகிய அத்தருமத்தை ஒருவன் பெற்றாலுயின் அவன் பொருளைச்சேமித்துவைக்கும் இடம்பெற்றான் என்றும் உரைக்கலாம். "வைத்தநனை வைப்பென் றுணரற்க தாமதனைத், துய்த்து வழங்கி யிருபாலும்—அத்தகத், தக்குழிநோக்கி யதஞ் செய்யினஃதன்றே, எய்ப்பினில் வைப்பென்பது" என்ற பழமொழிச்செய்யுளோடு இத்திருக்குறளை ஒப்பிடுக. 'பொருளற்றாரது குணங்களையழிக்கும் பசியைப்போக்குவதுசெய்யா ஒருவன் தான் தேடினபொருளை வைத்தற்குஇடம் பெற்றாலும் என்றவாறு: இது, பசுத்துண்ணப் பொருளழியா தென்றது' என்பர், மணக்குடியர். (கூ)

உஉஎ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுங்
தீப்பிணி தீண்ட லரிது.

(இ - ள்.) பாத்து ஊண் மரீஇயவனை - (எஞ்ஞான்றும்) பகுத்துஉண்டல் பயின்றவனை, பசி என்னும் தீ பிணி - பசி யென்று சொல்லப்படும் தீய நோய், தீண்டல் அரிது - தீண்டுதல் இல்லை; (எ - று.)

இவ்வுடம்பில்நின்று ஞானஒழுக்கங்களை அழித்து அதனால் வருமுடம்பு கட்குத் துன்பஞ் செய்தலின், 'தீப்பிணி' எனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானாகலின், பசிப்பிணி தணுகாது என்பதாம்.

இவை யாறுபாட்டானும், ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) எஞ்ஞான்றும் - எப்பொழுதும். பகுத்து உண்டல் - பிரமசாரி வானப்பிரஸ்தன் சன்னியாசி என்னும் மூன்று ஆச்சிரமத்தார்க்கும், அதிதி தரித்திரன் முதலானவர்க்கும், பித்ருக்கள் தேவர் விருத்தாளிகள் உற்வினர் முதலியோர்க்கும் தான் சம்பாதித்த பொருளைப் பங்கிட்டுக்கொடுத்துத் தானும் உண்ணுதல்; கீழ் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தில் "பழியஞ்

சிப் பாத்து ணுடைத்தாயின் வாழ்க்கை, வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்" என்ரூர். பயிலுதல் - பழகுதல். தீய - கொடிய. பசியென்கிற நோய்க்குத் தீமை - பலவன்மைகளையும் அழித்து, இம்மை மறுமை என்னு மிரண்டுக்குந் துன்பஞ்செய்வதாதல். மருத்துவன் - வைத்தியன்; மருந்தின்தன்மையை அறிந்து கொடுப்பவன். பிறர்க்கு இட்டு உண்ணும் ஈகையுடையாளுக்கு எப்பொழுதும் வறுமைநோய் சேரா தென்பது கருத்து. பாத்து - இறந்தகாலவினையெச்சம்: பகு என்பதன் மரூஉவாகிய பா - பகுதி. ஊண் - உண் என்னும் முதனிலைதிரிந்ததொழிற்பெயர். மருவியவன் என்பது, மரீஇயவன் என விகாரப்பட்டு அளபெடுத்தது; செல்லிசையளபெடை. தீப் பிணி - பண்புத்தொகை; தீமையாகிய பிணியென விரியும்: தீயோடொத்த பிணி யென விரித்து, உவமைத்தொகையெனவுங் கொள்ளலாம்: ஜாடராக்கினி எனப் பசிக்குப் பெயராதலால். தன்பசிநோயை எப்பொழுதும் ஒழித்தற்கு வேறொருவைத்தியனைத் தேடாமல் தானே ஒழித்துக்கொள்ளுதலால், கொடையாளியைக்குறித்து 'தனக்கு மருத்துவன் தானுகலின்' என்ரூர். "பிறர்க்குப் பிறர்செய்வதுண்டோ மற்றில்லை, தமக்கு மருத்துவர் தாம்" என்பது, பழமொழி. பிறர்பசியை ஒருபிறப்பில்ஒழித்தல், தன்பசியை எப்பிறப்பிலும் ஒழிக்கும் மருந்தா மென்க. (எ)

உஉஅ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றுமுகடமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

(இ - ள்.) தாம்—, உடைமை - உடைய பொருளை, வைத்து - (ஈயாது) வைத்து, இழக்கும் - (பின்) இழந்துபோம், வன்கணவர் - அருளிலாதார், ஈத்து - (வறியார்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து, உவக்கும் - (அவர்) உவத்தலான் (அருளுடையார்) எய்தும், இன்பம் - இன்பத்தினை, அறியார் கொல் - (கண்டு) அறியார்கொல்லோ? (எ - று.)

'உவக்கும்' என்பது, காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது, 'இன்பம்' என்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிதாராயின், தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்திழவார் என்பது கருத்து.

(கு - ரை.) வன்கண்மை-கொடுமை, அருளின்மை: அதனையுடையவர்-வன்கணவர். அவர் உவத்தலான் - யாசகர் மகிழ்தலால். எய்தும் - அடைகிற. உவக்கும் இன்பம் - உவத்தலாற்பெறும் இன்பம்; பெயரெச்சம் - காரணப் பொருளது. உடைமை - உடைத்தாயிருக்கும் பொருளுக்குப் பண்பாகு பெயர். பொருளைத் தேடி வைத்து இழப்பவர் கொடுத்தலாகிய இன்பத்தை அறியாரென்பது கருத்து; இதனால், திரவியஞ் சம்பாதித்தற்குப்பயன் பிறர்க்குக் தானஞ்செய்தலே யென்றும், அதனலாகுமின்பம் மற்றையெல்லாவின்பங்களினுஞ் சிறந்த தென்றும், தானஞ்செய்யாதவர்கட்கு ஈட்டல் காத்தல் முதலிய துன்பங்கள்மாத்திரம் உள்ளனவேயன்றி இன்பமென்பது சிறிதும் இல்லை யென்றும் அறிக. தாம் உடைமைவைத்து இழக்கும் வன்கணவர்—"உடாஅது முண்ணுதுந் தம்மூடம்பு செற்றுங், கெடாஅத கல்லறமுஞ் செய்யார் - கொடா அது, வைத்தீட்டிஞ ரிழப்பர் வான்றேய்மலே

நாட, வுய்த்தீட்டுந் தேனீக் கரி," "ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்" என்பன காண்க. 'இது, இடார் இழப்பர் என்றது' என்பர் மணக்குடியர். (அ)

உஉகூ. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(இ - ள்.) நிரப்பிய - (பொருட்குறை) நிரப்பவேண்டி, தாம்ஏ தமியர் உணல் - (வறியார்க்கு ஈயாது) தாமே தனித்துண்டல்,—இரத்தலின் இன்னாது - (ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று) இரத்தலினும் இன்னாது: மன்ற - ஒருதலையாக; (எ - று.)

பொருட்குறை நிரப்பலாவது - ஓரோ எண்களைக் குறித்து அத்துணை ஈட்டும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல்- பிறரை ஒழித்தல். இரத்தற்குஉன்னது அப்பொழுதைஇளிவரவே, பின் நல்குரவு இல்லை: தமியருண்டற்கு அவையிரண்டும் உளவாம் ஆகலின், 'இரத்தலின் இன்னாது' என்றார். 'நிரப்பிய' என்பதற்கு 'தேடிய உணவுகளை' என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) பிறர்பால் - அயலாரிடத்தில். இன்னாது - துன்பந்தருவது; இனிதாகாதது. ஒருதலையாக - நிச்சயமாக. ஓரோ எண்கள் - சிலதொகைகள்; ஆயிரம், பதினாயிரம், லட்சம் முதலிய கணக்குக்கள். அத்துணை ஈட்டும் என ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்கூட்டுதல் - அவ்வளவு சம்பாதிப்போமென்று சம்பாதித்தலையேமுக்கியமாகக்கொண்டு பேராசைப்பட்டுப் பிறர்க்குக்கொடுக்கக்கூடியதையுங் கொடாமல் உலோபஞ்செய்து பொருள் சேர்த்தல். இளிவரவு - ஈனத்தனம். நல்குரவு - வறுமை. அவைஇரண்டும்- ஈனத்தனமும், வறுமையும். 'இரத்தல் போல மெய்யாக இன்னாதாம், தேடின உணவைத் தாமே தமியராயிருந்து உண்டல் என்றவாறு' என்பர் மணக்குடியர். நிரப்பிய-செய்யிய என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; நிரம்பு என்பதன் பிறவினையாகிய நிரப்பு - பகுதி, இய - வினையெச்ச விகுதி. சம்பாதித்து நிறைத்துவைத்த உணவுகளை என்கிற இரண்டாவது உரையில், நிரப்பிய - இறந்தகாலப்பலவின்பால்வினையாலணையும்பெயர் நிரப்பியவுணல்- இரண்டாம்வேற்றுமைத்தொகை. இனி, நிரப்பிய - இறந்தகாலப்பெயரெச்சமெனக்கொண்டு, பொருள்களைநிறைத்துவைத்த தாம்மாத்திரமேஎன்றும் உரைக்கலாம். 'தாமே' - பிறரையொழித்தலால், ஏ - பிரிநிலை. தமியர் - தமி என்பதனடியாப் பிறந்த பலர்பாற்குறிப்புமுற்றெச்சம். மிகத் துன்பந்தருவதாகிய யாசித்தலினுந் துன்பந்தருவது; தானஞ்செய்யாமல் தானே தனித்துண்பது என்று கருத்து. "மருந்தே யாயினும் விருந்தோ டுண்" என்றதனாலும் தனித்து உண்பது தவறுதல் பெறப்படும். இரப்பவர்க்குச் செல்வமில்லையாயினும் சுற்றத்தா ருண்டு; பொருள்தேடிப் புதைப்பவர்க்குச் செல்வமுளதாயினும் இல்லாமையேற்படுவதோடு சுற்றத்தாருமில்லை யென்பது காண்க.

உஙo. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீதழி யியையாக் கடை.

(இ - ள்.) சாதலின் இன்னாதது இல்லை - (ஒருவர்க்குச்) சாதல்போல இன்னாதது (ஒன்று) இல்லை; அதனும்-அத்தன்மைத்தாகிய சாதலும், ஈதல் இயையாக்கடை-(வறியார்க்கு ஒன்று) ஈதல் முடியாதவழி, இனிது—; (எ-று.)

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், 'இனிது' என்றார்.

இவை மூன்றுபாட்டானும், ஈயாமையின் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) உடற் பொறை - உடம்பாகிய பாரம். பாவிகளுடைய உடம்பைப் பூமிபாரமென்பது, தூற்கொள்கை; "முற்றுமற்றொரோவழி" என்ற விதியால் அதுவென்னும் முற்றியலுகரத்தின்மேல் இழிவுசிறப்பும்மையின் உயிர் ஏறி அதும் என நின்று, பின் இன்னிசை நிறைக்கவேண்டிக் குறில் நெடிலாய் 'அதூஉம்' என அளபெடுத்தது. இயையாக்கடை-'கடை' என்னும் விகுதிபெற்றஎதிர்மறையெதிர்காலவினையெச்சம்: இயையா கடை என இருசொல்லாகவைத்து ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தொடராகக் கொள்ளலும் ஒன்று. ஒருபொருளைக் கேட்டவர்க்கு வைத்துக்கொண்டே கொடாமற்போவது மரணவேதனையினும் மிகக்கொடிதென்பது தாற்பரியம். 'ஈயாது வாழ்தலிற் சாதல் நன்று என்றது' என்பர், மணக்குடியர். (கo)

உச - ஆம் அதிகாரம்—புகழ்.

அஃதாவது - 'இல்வாழ்க்கை' முதல் 'ஈகை' ஈறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இல்வாழ்க்கை என்பது, இந்நூலின் ஐந்தாம் அதிகாரம்: அதுமுதல் இதுவரையிற் பத்தொன்பது அதிகாரங்களில் இல்லறவொழுக்கம் கூறப்பட்டது. வழுவாதார் - தவறுமல் நடந்தவர்கள். இம்மைப்பயன் - இப் பிறப்பிலடையும் பிரயோசனம். இவ்வுலகின் கண் நிகழ்ந்து - இந்தவுலகத்திற் பொருந்தி. இறவாதுநிற்கும் - என்றும் அழியாமலிருக்கிற.

உகக. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) ஈதல் - (வறியார்க்கு) ஈக; இசைபட வாழ்தல் - (அதனால்) புகழ் உண்டாக வாழ்க: அது அல்லது - அப்புகழல்லது, உயிர்க்கு - (மக்கள்) உயிர்க்கு, ஊதியம்-பயன், இல்லை (பிறிதொன்று) இல்லை,(ஆகலான்); (எ-று.)

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும், "உணவின் பிண்டம் உண்டி முதற்று" ஆகலின், ஈதல் சிறந்தது என்பதற்கு ஞாபகமாக, 'ஈதல்' என்றார். 'உயிர்க்கு' என்பது, பொதுப்படக் கூறினுரேனும் விலங்குயிர்கட்கு எலாமையின், மக்களுயிர்மேல் நின்றது.

(கு - ரை.) ஆண்மை - வீரத்தன்மை, பராக்கிரமம், பௌருஷம். "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" என்பது, புறநானூறு - கஅ - ஆஞ் செய்யுளில் உள்ளது; பரிமேலழகர், அந்வயத்தின்படி மாற்றிக்கூறினர். உட

வில் உயிர்நிலைத்திருத்தற்குக் காற்று முதலியவாகப் பலகாரணங்களிருப்பினும், சோறும் நீருமே சிறப்பானவை: "உண்டிகொடுத்தோ ருயிர்கொடுத்தோரே", "உணவெனப்படுவது நிலத்தொடுநீரே" என்பன காண்க: ஆகவே, அவ்வுண்டிக்குத் தட்டுதலுண்டாகாதபடி பொருளீட்டலே, கல்விமுதலிய மற்றையவற்றைக் காட்டிலும், புகழுண்டாதற்குச் சிறந்தகாரணமா மென்க. ஞாபகம் - நினைப்பு ஊட்டுவது. விலங்கு - மிருகம். ஏலாமையின் - ஈதலும் இசைபடவாழ்தலும் பொருந்தாமையால். மனிதசன்மத்திற் பிறந்ததற்குப் பயன் ஈந்துபுகழ்பெறுதலேயா மென்பது இதன்கருத்து. 'இது, புகழுண்டா மாறு கூறிற்று' என்பர் மணக்குடியர். ஈதல், வாழ்தல் - 'தல்' ஈற்று உடன் பாட்டு வியங்கோள்கள். இவற்றுக்கு - 'மனிதர்' எனத் தோன்ருஎழுவாய் வருவிக்க. இப்பாட்டு, பரிமேலழகர்கருத்தின்படி மூன்றுவாக்கியம். இதனை ஒரேவாக்கியமாகக்கொண்டு, பிறர்க்கு ஈதலினும் புகழ்பெறவாழ்தலாகிய அத்தொழிலல்லது உயிர்க்கு லாபம் வேறில்லையென்றும் உரைக்கலாம். (க)

உகூ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.

(இ - ள்.) (உலகத்து), உரைப்பார் - (ஒன்று) உரைப்பார், உரைப்பவை எல்லாம் - உரைப்பனவெல்லாம், — இரப்பார்க்கு - (வறுமையான்) இரப் பார்க்கு, ஒன்று - (அவர் வேண்டியது) ஒன்றை, ஈவார்மேல் - ஈவார்கண், நிற்கும் —, புகழ் - புகழாம்; (எ - று.)

புகழ்தான், உரையும் பாட்டும் என இருவகைப்படும்; அவற்றுள் 'உரை ப்பாருரைப்பவை' என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாராயினும், இனம்பற்றி, புலவர்க்கே உரிய செய்யுளும் கொள்ளப்படும்: படவே, 'பாடு வார்பாடுவனவெல்லாம் புகழாம்' என்பதுஉம் பெற்றும். ஈதற்காரணஞ்சிறந் தமை, இதனுள்ளுங் காண்க. இதனை 'பிறர்மேலும் நிற்குமென்பார்தாம் எல் லாஞ் சொல்லுக; புகழ் ஈவார்மேல் நிற்கும்' என்று உரைப்பாரு மூளர்; அது புகழதுசிறப்பு நோக்காமை யறிக.

(கு - ரை.) உரைப்பார் உரைப்பவை - சொல்லுவார் சொல்லுவன. வழக்கு - உலகவழக்கு; அதாவது உரை. இனம் - ஒருவருக்கமாயிருத்தல். "ஒருமொழி யொழி தன்னினங் கொளற்குரித்தே" என்ற உபலக்ஷண விதியை இங்கே அறிக. ஈதற்காரணம் சிறந்தமை-புகழின்காரணமாகிய கல்வி முதலிய பலவற்றுள் ஈதலாகியகாரணம் சிறந்ததாதல். இதனுள்ளும்-மேற் பாட்டில்மாத்திரமேயன்றி இப்பாட்டிலும். இரண்டாமுரையில்-'உரைப்பாரு ரைப்பவையெல்லாம்' என்றது வரையில் ஒருவாக்கியமும், மற்றது ஒருவாக் கியமு மெனக் காண்க: சொல்லுகஎன்று முற்றுவருவிக்க. பிறர்மேலும் - கல்வி ஆண்மைமுதலியனவுடைய மற்றையார்மீதும். அவ்வுரை புகழின்சிறப் பைக் குறியாமல் ஈகையின்சிறப்பையே குறித்தலாற் பொருந்தா தென்ருர். 'உரைப்பவையெல்லாம் புகழ்' என்பதில் புகழுக்குச் சிறப்பும், 'ஈவார்மேல் தான் புகழ் நிற்கும்' என்ற உரையில் ஈவாரின்மேன்மையைத் தெரிவித்தல்

மூலமாக ஈகைக்குச் சிறப்பும் தோன்றுதல் காண்க. 'இரப்பார்க்கொன் றீவார்மேனின்றும்' என்ற இடைப்பிறவரல், புகழ்க்குச் சிறந்தகாரண மின்ன தென்பதை நன்குவிளக்க வந்தது. உலகத்தில் பேசுவார் பேசுபவையும், பாடுவார் பாடுபவையும், கொடையாளிகளின் புகழே என்பது கருத்து. புகழ் உரையும் பாட்டுமென இருவகைப்படுதலை "வேற்றுமை யில்லா விழுத் தினைப் பிறந்து, வீற்றிருந்தோரை யெண்ணுங் காலை, உரையும் பாட்டு முடையோர் சிலரே, மரையிலைபோல மாய்ந்தின்னோர் பலரே" என்னும் புறநானூற்றைக்கொண்டும் அறிக. (உ)

உஉ. ஒன்ற வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில்.

(இ - ள்.) ஒன்று ஆ - (தனக்கு) இணை இன்றாக, உயர்ந்த - ஓங்கிய, புகழ் அல்லால் - புகழல்லது, உலகத்து—, பொன்றாது நிற்பது - இறவாது நிற்பது, ஒன்று - பிறிதொன்று, இல் - இல்லை; (எ- று.)

இணை இன்றாக ஓங்குதலாவது - கொடுத்தற்கு அரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னைஒப்பதின்றித் தானே உயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவ தென்பதாம். இனி, 'ஒன்ற' என்பதற்கு - ஒருவார்த்தையாக(ச் சொல்லின்) எனவும், ஒரு தலையாகப்பொன்றாது நிற்பது எனவும் உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும், புகழது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒன்ற - ஒப்பற்றதாக. ஆ - ஆகவென்பதன்விகாரம். இறவாது - அழியாமல். உயிரைக்கொடுத்ததற்குத் தலைசிறுனிவரும், உறுப் பைக்கொடுத்ததற்குச் சிபிசக்கரவர்த்தியும், பொருளைக்கொடுத்ததற்குக் கர்ண னும் முதலியோரை உதாரணமாகக்கொண்டு, அவர்கள்புகழ் இப்பொழுதும் எங்கும் பிரசித்தமாய் வழங்கிவருவதைக் காண்க. செய்யப்படுவது - சம்பா திக்கத்தக்கது. உலகத்து அழியாதுநிற்பது புகழே என்று கூறியதனால் அதுவே தேடுதற்கு உரியதாமென்றவாறு: "சாதல்வந் தடுத்தகாலுந் தனக் கொருசாதலின்றிப், பூதலமிறக்குங்காறும் புகழுடம்பிருக்கும்" என்றது காண்க. இரண்டாம்உரையில் சொல்லின் என்பது - இசையெச்சம். மூன் றும்உரையில், ஒன்ற - நிச்சயமாக என்று பொருள். முதலுரைகீத, ஒன்ற உயர்ந்த என இயையும். ஒன்று - ஏகம், அத்விதீயம். இனி, ஒன்ற என் பதை - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாகக்கொண்டு, உலக மென்பத னோடு இயைத்து, எப்பொருள்களும் நிலைத்தலில்லாத இவ்வுலகத்திலே புக ழல்லது நிலைத்துநிற்பது வேறில்லை யென்றும் உரைக்கலாம். ஆதாரமாகிய உலகம் அழிய ஆதேயமாகிய புகழும் அழிதல் கூடு மாதலால், 'உலகத்துநிற் பது' என்றார். புகழினது அழிவின்மையை "இந்நிலத்து, மன்னுதல் வேண்டி னிசைநடுக" எனப் பிறர்கூறியவாற்றாலும் அறிக. அல்லால்-எதிர் மறைவினையெச்சம். நற்கருமங்களின் பயனும் மறுமையிலுண்டாகின்ற இன் பங்கள் அழிந்தாலும் இம்மையிலுண்டாகிற புகழ் அழியாமை காண்க. உயர்

ந்த புகழல்லது இவ்வுலகத்துக் கெடாது நிற்பது பிறிதில்லை என்ற வாறு. இது, மற்றுள்ள பொருள்போலன்றி அழியாது நிற்கு மென்றது' என்பது, மணக்குடியருரை. (கூ)

உகூச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

(இ - ள்.) (ஒருவன்), நிலம் வரை - நிலவெல்லைக்கண்ணே, நீள் புகழ்- பொன்றுதல் நிற்கும் புகழை, ஆற்றின் - செய்யுமாயின், புத்தேள் உலகு - புத்தேளுலகம், புலவரை போற்றுது - (அவனையல்லது) தன்னை எய்தினின்ற ஞானிகளைப் பேணுது; (எ - று.)

புகழுடம்பான் இவ்வுலகும், புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே எய்தாமையின், 'புலவரைப்போற்றுது' என்றார். அவன் இரண்டு உலகும் ஒருங்கு எய்துதல், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வானவூர்தி, யெய்துபவென்ப தஞ் செய்வினை முடித்து" எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது.

(கு - ரை.) நிலவரை - நிலஎல்லைக்கண்: நிலத்தின் எல்லையென உடைமையும் உடையதும் வேறுகாத ஒற்றுமைக்கிழமைப்பொருளில்வந்த ஆறும் வேற்றுமைத்தொகை: பூமியினிடத்தில். நீள்புகழ் - நீளும்புகழ் என எதிர்காலவினைத்தொகை; நெடுங்காலம் நிற்கும் புகழ் என்றவாறு: இனி, நீட்சியாகிய புகழ்எனப் பண்புத்தொகையாகக் கொண்டால், பெருங்கீர்த்தியென்று ஆகும். செய்யுமாயின் - உண்டாக்குவனுளனால், சம்பாதித்தால். புத்தேள் உலகு - தேவலோகம். ஞானிகளைப் பேணுது - தத்துவஞானமுடையவரை விரும்பிநன்குமதியாது; என்றது - இம்மையிற் புகழையீட்டாமல் அறிவை மாத்திரம்பெற்று யோகமுயற்சியால் மறுமையில் தேவசரீரத்தைப் பெற்றவர்களினும் இம்மையிற் புகழையும் ஈட்டித் தானம்முதலியவற்றின்பயனால் மறுமையில் தேவசரீரத்தையும் பெற்றவர்கட்குச் சுவர்க்கலோகத்தில் மிக்க சிறப்பு நடக்கு மென்பது கருத்து. இம்மையில், உடம்பு இரண்டு: பூதவுடம்பும் புகழுடம்பும்என: பூதவுடம்பாவது - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையா லுண்டான சரீரம்; புகழுடம்பாவது- கீர்த்தியால் என்றும் பெயர்நிலைபெற்றிருத்தல்: பூதவுடம்புக்கு அழிவு உண்டு; புகழுடம்புக்கோ அது இல்லை. தேவவுடம்பு - தேஜோமயமானது; இதற்கும் அழிவுண்டு. இவற்றுள் பூதவுடம்பைமாத்திரம் பெற்றுநின்ற மண்ணுலகத்தாரினும், தேவவுடம்பை மாத்திரம் பெற்றுநின்ற விண்ணுலகத்தாரினும், புகழுடம்பு தேவவுடம்பு என்னும் இரண்டையும் இரண்டுலகத்திலே ஏககாலத்திற் பெற்றவர்களின் பெருமை சிறந்ததாதல் காண்க.ஒருங்கே எய்தாமையின் - தத்துவஞானிகள் ஒருசேர அடையாமையால். "புலவர்பாடும்" என்னும் மேற்கோள் - புறநானூறு, உள - ஆம் பாட்டில் உள்ளது: 'புலவராற்பாடப்படும் புகழையுடையோர் ஆகாயத்தின்கண் பாகனைச் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவர்' என்று சொல்லுவர் அறிவுடையோர்,

தாம்செய்யும் நல்வினையை முடித்து' என்று உரை; தாஞ்செய்வினை முடித்து வானவூர்தியெய்துப என்று அன்வயம். இதனால், புகழுடையவன் தேவலோகத்தையும் அடைதல் விளங்குகின்றது. பிறர்என்றது - அப்பாட்டுப்பாடிய உறையூர் முதுகண்ணன்சாத்தனாரை. புலம் அல்லது புலமை - அறிவு; அதனையுடைய ஞானிகள், புலவர்; இது - விபுதர் என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. 'புலவர் என்றார், தேவரை; அவர் புலனுடையராதலால். இது தேவருலகம் போற்றுமென்றது' என்பது, மணக்குடியருரை.(ச)

உரு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
விழுத்தகர்க் கல்லா லரிது.

(இ - ள்.) நத்தம் (ஆகும்) கேடுஉம் - (புகழுடம்பிற்கு) ஆக்கமாகும் கேடும், உளது ஆகும் சாக்காடுஉம் - (புகழுடம்பு) உளதாகுஞ் சாக்காடும்,—விழுத்தகர்க்கு அல்லால் - சதுரப்பாடுஉடையார்க்கல்லது, அரிது - இல்லை; (எ-று.)

நத்து என்னுந் தொழிற்பெயர், விகாரத்தால் 'நத்து' என்று ஆய், பின் 'அம்' என்னும் பகுதிப்பொருள்விகுதிபெற்று, 'நத்தம்' என்று ஆயிற்று. 'போல்' என்பது - ஈண்டு உரையசை. 'ஆகும்' என்பதனை மூன்றும் கூட்டி, 'அரிது' என்பதனைத் தனித்தனிக் கூட்டி உரைக்க. ஆக்கமாகும் கேடாவது-புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது-புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுன் நிலையின எய்துவார் விழுத்தகராகலின், 'விழுத்தகர்க்கு அல்லால் அரிது' என்றார்.

இவையிரண்டுபாட்டானும், புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடு-கீர்த்தி விருத்தியடைதற்குக் காரணமான செல்வச்செலவு. புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடு - கீர்த்தி நிலைத்திருக்க மரணமடைதல். சாக்காடு - சாவு; தொழிற்பெயர்: காடு-விகுதி. சதுரப்பாடு உடையார் - சாமர்த்தியமுடையவர். தொழிற்பெயர் - வினைப் பகுதி யென்றபடி; விகாரம் - இங்கே, வலித்தல். பொருத்து திருத்து என்னும் பகுதிகள் பொருத்தம் திருத்தம் என நிற்றல்போல, நத்து என்னும் பகுதி நத்தம் என நின்றது: பகுதியே தொழிற்பெயர்ப்பொருளதாதலால், அம் - பகுதிப்பொருள்விகுதி யென்றார். ஈண்டு - இங்கே. 'போல்' - ஒப்பில்போலி; உவமைப்பொருளுணர்த்தாத 'போல்' என்னுஞ் சொல்; "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்" என்னுந் தொல்காப்பியத்தால் இது உரையசைப்பொருளாய்நின்றது: உரையசையாவது-சிறிதுபொருளுணர்த்தி வாக்கியத்தை அலங்கரித்துநிற்பது: வாக்கியாலங்கார மென்பர் வடநூலார். "நெருப்பழற்சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம், எரிப்பச்சுட் டெவ்வ நோயாக்கும்" என்பது காண்க. நத்தம்போற் கேடு - வளர்தல்போலக் கெடுதல்; புகழ்வளரச் செல்வங்குறைதல் என்றபடி. செல்வமெய்த - சிறப்பையடைய. நல்கூர்தல் - வறுமைப்படுதல். நிலையில்லாத செல்வத்தையும் உடம்பையுங் கொண்டு நிலையான புகழைப் பெறுவது மிக்க சாம

ர்ததிய மென்பது கருத்து. "வீந்தவரென்பவர் வீந்தவரேனும், ஈந்தவரல்ல திருந்தவர் யாரே" என்பர் கம்பரும். வித்து - ஞானம்; அது - வித் என்னும் வடமொழியின் திரிபு: அதனை மனத்தி லுடையவர், வித்தகர்: வித்தகத்தர் என்ற வடசொல்லின் திரிபு என்பாரு முளர். (இ)

உருக. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(இ - ள்.) தோன்றின் - (மக்களாய்ப்) பிறக்கின், புகழொடு தோன்றுக - புகழ்க்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அஃது இலார் - அக்குணம் இலாதார், தோன்றலின் - (மக்களாய்ப்) பிறத்தலின், தோன்றாமை - விலங்காய்ப் பிறத்தல், நன்று—; (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். 'அஃதிலார்' என்றமையின் 'மக்களாய்,' என்பதூஉம், 'மக்களாய்ப்பிறவாமை' என்ற அருத்தாபத்தியான் 'விலங்காய்ப் பிறத்தல்' என்பதூஉம் பெற்றும். இகழ்வார் இன்மையின், 'நன்று' என்றார்.

(கு - ரை.) பிறக்கின் - பிறந்தால். புகழ் என்பது - இங்கே, புகழ்க்குக் காரணமான நற்குணத்தைக் குறித்தலினால், காரியவாகுபெயர். 'அஃதிலார்' என உயர்திணைப்பலர்பாலாற் கூறினமையால், 'தோன்றின்' என்றவிடத்து 'மக்களாய்' என வருவித்து உரைக்கப்பட்டது. அருத்தாபத்தியாவது-இன்ன படியில்லாவிட்டால் இன்னபடிகூடாது என்ற வாய்பாடுதோன்ற, வெளிப் படையாகவன்றிச் சொல்லின் குறிப்பினால் பொருள் தோன்றுவது: இது குறிப்பெச்சத்தி லடங்கும். 'மக்களாய்ப்பிறவாமை' என்றதனால் மக்களினும் வேறான 'விலங்காய்ப்பிறத்தல்' என்பது குறிப்பிக்கப்பட்டவாறு காண்க. தொல்காப்பியனார் "எடுத்த மொழியினுஞ் செப்பலுமுரித்தே" என்று கூறியதில் இது அடங்குமென்பர், சிலர். 'பிறக்கின் புகழுண்டாகப் பிறக்க, அஃதிலார் பிறக்குமதிற் பிறவாமை நன்று என்றவாறு. இது, புகழ்படவாழவேண்டு மென்றது' என்பது, மணக்குடியருரை. அஃதிலார் என்றதில், ஆய்தம் மெய்போ லொலித்தது. மனிதனை நற்குணமில்லாவிட்டால் இகழ்ந்து பேசுவார்கள்; விலங்குசாதியாய்ப்பிறந்தால் இகழார்களென்றவாறு.

உருஎ. புகழ்படவாழாதார் தம்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(இ - ள்.) புகழ் பட வாழாதார் - (தமக்குப்) புக ழுண்டாக வாழமாட்டாதார், (அதுபற்றிப் பிறர் இகழ்ந்தவழி), தம் நோவார் - (இவ்விகழ்ச்சி நம் மாட்டாமையான் வந்ததென்று) தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது—, எவன் - என்கருதி? (எ - று.)

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறர் இகழ்தல் ஒருதலை யாகலின், 'இகழ்வாரை' என்றார்.

(கு - ரை.) புகழ்படவாழாதார் - தருமமார்க்கத்திலேநின்று முயற்சி செய்து தொகுத்துவைத்த நற்பொருளினாலே தென்புலத்தார்முதல் இறந்தார் கடையாக மேலே சொல்லப்பட்டவர்களைப் பாதுகாத்து அதனாலே

தமக்குப் புகழுண்டாக இல்லறத்திலே இனிதுவாழாதவர். பிறர் இகழ்ந்த வழி - அப்படிவாழ்வார் கண்டு நிந்தித்தபொழுது. இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே - இந்நிந்தை நாம் புகழ்படவாழாததனாலே வந்ததென்று தம்மை நொந்துகொள்ளாதவர்களாய்.நோவது-வெறுப்பது. என்கருதி - யாதுபயனே யுத்தேசித்து? என்றது, பேதைமையென்றபடி. நோவார் - எதிர்மறைமுற்றெச்சம். இகழ்வார் - இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமாகவந்த வழுவமைதி. புகழ்பெறுதவர் தம்மைப் பிறர் இகழ்ந்தால் அவர் இகழ்ந்தது பிழையன்றுஎனக் கருதி அதற்கு எது தமது குற்றமேயென அறிந்து தம்மைத் தாம் வெறுத்துக்கொள்ளவேண்டும்; அதனைவிடு, அவர் தம்மைநிந்தித்தது தாம் இனியாயினும் புகழ்படவாழ்தற்கு ஏதுவாகிய உபதேசமாமெனக் கொள்வது, விசேஷம்: அங்ஙனங்கருதாது அவரையிகழ்வது, தாம் புகழ்படவாழாத குற்றத்தின்மேலும் தம்மை நிந்தித்துப்புத்திசொன்னவரை நொந்துகொண்ட குற்றமும் வருதற்கு ஏதுவென்க. 'புகழ்படவாழமாட்டாதார் இகழப்படுவர் என்றவாறு' என்பர் மணக்குடியர்.

உஉஅ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறுஅ விடின்.

(இ - ள்.) இசை என்னும் எச்சம் பெறுஅ விடின் - புகழென்னும் எச்சம் (பெறலாயிருக்க, அது) பெறுதொழிவாராயின், வையத்தார்க்கு எல்லாம் - வையகத்தோர்க்கெல்லாம், வசை என்ப - (அதுதானே) வசையென்று சொல்லுவர், (நல்லோர்); (எ - று.)

'எச்சம்' என்றார், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாதுநிற்றலின். இகழப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டா வென்பது கருத்து.

(சு - ரை.) புகழ் என்னும் - புகழென்று சிறப்பித்துச்சொல்லப்படும். எச்சம் - சேஷித்திருப்பது; எஞ்சு - பகுதி, அம் - கருத்தாப்பொருள் விகுதி, வலித்தல் - விகாரம். வையகத்தோர்க்கெல்லாம் - நிலவுலகத்திலுள்ளவரெல்லார்க்கும். வசை - நிந்தை. புகழ்ச்சியைப் பெறுமற்போலுலும் இகழ்ச்சியைப்பெறுதிருத்தல் கூடாதோ எனின், ஒளியின்மையே இருளாய் முடிதல் போலப் புகழ்ச்சியின்மையே பெரியஇகழ்ச்சியாதலின் கூடாது என்பது கருத்து. பெறுஅ - மொழியிறுதியிற் செய்யுளோசை நிறைத்தற்கு வந்த அளபெடை; ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம். இனி, இசை யென்னு மெச்சம் பெறுவிடின் என்பதற்கு - (இல்வாழ்க்கையென்னும் மனைவியைத் தழுவிப்) புகழ் என்னும் பிள்ளையைப் பெறுவிட்டால் என்னும் பொருளுரைக்கலாம். வையத்தார்க்கெல்லாம்வசை யென்பதற்கு - உலகத்தார்க்கெல்லாம் கேரும் நிந்தை யென்றும், உலகத்தாரெல்லாராலுஞ் சொல்லப்படும் நிந்தை யென்றுங் கருத்துக்கொள்க. 'உலகத்தார்க்கெல்லாம் புகழாகியவழிபடு பெறுவிடின் அப்பெறுமைதானே வசையா மென்றுசொல்வர் என்றவாறு. மேல் 'புகழில்லாதாரை இகழ்ப' என்றார்; 'அவர் குற்றமில்லாராயின் இகழப்படுவரோ?'என்றார்க்கு, 'வேறு குற்றம் வேண்டா: புகழின்மைதானே அமையும்' என்றது' என்பது, மணக்குடியருரை. (அ)

உருகூ. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(இ - ள்.) இசை - புகழ், இலா - இல்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த - சுமந்த, நிலம்—,—வசை இலா - பழிப்பில்லாத, வள் - வளப்பத்தையுடைய, பயன் - விளையுள், குன்றும்—; (எ - று.)

உயிர் உண்டாயினும் அதனாற் பயன்கொள்ளாமையின் 'யாக்கை' எனவும், அது நிலத்திற்குப் பொறை யாகலின் 'பொறுத்த' எனவுங் கூறினார். விளையுள் குன்றுதற்கு ஏது, பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. 'குன்றும்' என, இடத்துங்கிழப்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது.

இவை நான்குபாட்டானும், புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - சை.) விளையுள்-நெல் முதலியவற்றின் விளைவு. குன்றும்-குறையும். பொறை - பாரம். நிலமென்னும் இடத்திற் பொருந்திய பயனென்னும் பொருளினது குன்றுதல் என்னுந் தொழிலை அந்த நிலமென்னும் இடத்தின்மே லேற்றி 'நிலம் பயன்குன்றும்' எனப்பட்டது; நிலத்திற் பயன் குன்றும் என்று சொல்வது, நேர். வண்பயன் - வண்மையாகிய பயன் எனப் பண்புத்தொகை. யாக்கை - ரஸம், ரக்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை என்னும் ஏழுதாதுக்களாலும் யாக்கப்பட்டது என உடம்புக்குக் காரணப்பெயர்; யாத்தல் - கட்டுதல். புகழ்க்குக் காரணமான நற்குணநற் செய்கைகளில்லாதவர்க ளுள்ளவிடத்தில் பூமி வளங்குறைவுபடுதலை "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந், தவமிலா ரில்வழி யில்லை," "நிலத்தியல்பு, வானமுரைத்து விடும்" என்பன கொண்டும் அறிக. 'இது புகழில்லாதான் இருந்த விடம் விளைவு குன்றும் என்றது' என்பர் மணக்குடியர்.(கூ)

உசூ. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

(இ - ள்.) வசை ஒழிய வாழ்வார்எ - (தம்மாட்டு) வசை உண்டாகாமல் வாழ்வாரே, வாழ்வார் - உயிர்வாழ்வாராவார்; இசை ஒழிய வாழ்வார்எ - புகழ் உண்டாகாமல் வாழ்வாரே, வாழாதவர் - இறந்தாராவார்; (எ - று.)

'வசையொழிதலாவது - இசையென்னும் எச்சம் பெறுதல்' ஆயினமையின், இசை யொழிதலாவது - வசைபெறுதலாயிற்று. மேல் 'இசையிலா யாக்கை' என்றதனை விளக்கியவாறு.

இதனுள், இவ்விரண்டும் உடன்கூறப்பட்டன.

மறுமைப்பயன், "வானுறையுந், தெய்வத்துள் வைக்கப்படும்" என மேலே கூறப்பட்டது. படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும், தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி, மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம், இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்; ஆராய்ந்து அறிந்து அடக்கிக்கொள்க: யாம் உரைப்பிற் பெருகும்.

(கு - ரை.) வசை - இகழ்ச்சிச்சொல். 'இசைபெற', 'வசைபெற' என்றுசொல்லவந்தவர் அருத்தாபத்தியால் 'வசையொழிய', 'இசையொழிய' என்றுரல்லது அவையிரண்டும் முன்புஉளவாய்ப் பின்புஇங்க என்றுரல்லர். 'வசையொழிதலாவது' என்ற வாக்கியத்தின் கருத்தைக் கீழ் "வசையென்ப வையத்தார்க் கெல்லாம்" என்னுந் திருக்குறளைக்கொண்டு அறிக; புகழ் பெறுதலே பழியின்மை, புகழ்பெறுமையே பழி என்றவாறும். "இசையொ ழிய வாழ்வாரே வாழாதவர்" என்றதனால், 'புகழில்லாதவர் உற்றறிபுலனென் றுமில்லாத ஜடப்பொருளோடி ஒப்பர்' என்று கூறி, கீழ்ப்பாட்டில் 'இசையிலராயாக்கை' என்றதன் இகழ்ச்சியை வெளிப்படுத்தினர். 'இது, புகழில்லார் பிணத்தோடொப்பர் என்றது' என்பர் மணக்குடியர். இவ்வி ரண்டும் - புகழுடையாரதுமேன்மையும், புகழில்லாதாரது கீழ்மையும்.

இவ்வதிகாரத்தால், இல்லறத்திற்கு இம்மைப்பயன் புகழ் எனப்பட்டது; இல்லறத்திற்கு மறுமையிலடையும் பயன், கீழ் இல்வாழ்க்கையென்னும் அதிகாரத்தில் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய் வத்துள் வைக்கப்படும்" என்றதனால், இல்லறத்தோடுகூடிவாழுமியல்பினால் நிலவுலகத்தில் வாழ்பவன் பின் அவ்வறப்பயனைச் சுவர்க்கத்தில் அனுபவித் தல் நிச்சயமாதலின் தேவலோகத்தில் வசிக்குந்தேவரு ளொருவனுக வைத்து ணன்குமதிக்கப்படுவா ணென்று கூறப்பட்டது: அப்பாட்டின் உரையில் 'இதனுன் இல்லிலேயது மறுமைப்பயன் கூறப்பட்டது; இம்மைப்பயன் புகழ்: அதனை இறுதிக்கட் கூறுப' என்று கூறிப்போந்ததை இங்கே அநுவதித் தார். போகம் - சுகானுபவம்.

மனு - அவராற் செய்யப்பட்ட தருமசாஸ்திரத்துக்குக் கருத்தாவாகு பெயர். அறநூல்-தருமசாஸ்திரம். இல்லறங்கள்-கிருகஸ்தாச்சிரமதருமங்கள். மற்றொன்றுவிரித்தல்என்னுங்குற்றம் நேருமென்றுஅஞ்சி இங்ஙனங்கூறினர்.

இல்லறவியல் முற்றிற்று.

இரண்டாவது

துறவறவியல்.

இனி, முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது - மேற்கூறிய இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசு தீர்ந்து அந்தக்காரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுன் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞான மும் என இருவகைப்படும்.

வி ர த ம்.

அவற்றுள் விரதங்களாவன - இன்ன அறம் செய்வல் எனவும், இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம்ஆற்றலுக்குஏற்ப வரைந்துகொள்வன. அவை காம வரம்பிலவாகலின் பெருகு மென்று அஞ்சி, அவைதம்முள்ளே பலவற்

றையும் அகப்படித்து நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றற் ஈண்டுக் கூறுவர்ன் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

(கு - ரை.) முறையானே - இல்லறம் துறவறம் என முன்னேசொல்லி நிறுத்திய கிரமத்தின்படியே. கூறிய - சொல்ல. அறிவுடையாராய் - உலகியலையும் இல்லறவாழ்க்கையின் நிலையில்லாமையையும் கடவுளின் தன்மையையும் அறிந்து. பிறப்பினை அஞ்சி - மீண்டும் சன்மமெடுத்தற்குப் பயப்பட்டு. வீடுபேற்றின் பொருட்டு - முத்தியையடையும்பொருட்டு. துறந்தார் - தேக அபிமானம் முதலிய எல்லாப்பற்றுக்களையும் முழுவதுமாய்விட்டவர். வினைமாசு தீர்ந்து-கருமசம்பந்தத்தாலாகிய குற்றம் நீங்கி; விரதங்களின் பயன், கருமந் தொலைத்தலும் ஞானம்உதித்தலு மென்க. அந்தக்கரணம் - அகத்து உறுப்பு; அது, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என நால்வகைப்படுதலால், பன்மையாகக்கூறினர். தூயவாதற்பொருட்டு-பரிசுத்தியுடையனவாதற்கு. காக்கப்படும்-தவறுமலதுட்டிக்கப்படும். அவற்றுள்-விரதங்களால். அவை-அந்தக் கரணங்கள். தூயவாயவழி-பரிசுத்தியுடையனவானபோது. உதிப்பது-உண்டாவது.

செய்வல் - செய்வேன். ஒழிவல் - நீங்குவேன். தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்வன - தமதுசக்திக்குத் தக்கபடி ஏற்படுத்திக்கொள்பவை. வரம்புஇல - அளவில்லாதன. பெருகும் - அவற்றையெல்லாங்கூறின் நூல் விரிந்துபோம். அகப்படித்து - உள்ளடக்கி. கூறுவான் - சொல்ல. முதற்கண் - முதலில். இதுமுதற் பதின்மூன்று அதிகாரங்களில் துறவறம் கூறப்படுகின்றது; அவற்றில் இதுமுதல் ஒன்பது அதிகாரங்களில் விரதங்களும், அடுத்த நான்கு அதிகாரங்களில் ஞானமும் கூறப்படும்.

உரு - ஆம் அதிகாரம்—அருளுடைமை.

அஃதாவது - தொடர்புபற்றுது இயல்பாக எல்லா வுயிர்கள்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் * சிறத்தலின், முற்படக் கூறப்பட்டது.

(கு - ரை.) தொடர்பு (மனைவி மக்கள் பந்து மித்திரர் என்றாற்போன்ற) சம்பந்தம். இல்லறத்திற்கு அன்புடைமை சிறந்த குணமாதலே முன்கூறிப் போந்தா ராதலால், அதனை இங்கு உவமையாக்கினர். இது-அருளுடைமை. முன் - முதலில். 'அருளுடைமையாவது - யாதானும் ஓர் உயிர் இடர்ப்படின் அதற்குத் தன்னுயிர்க்கு உற்ற துன்பத்திலுல் வருந்துமாறுபோல வருந்தும் ஈரமுடைமை' என்பர் மணக்குடியர்.

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

(இ - ள்.) செல்வத்துள் செல்வம் - செல்வங்கள்பலவற்றுள்ளும் (ஆராய்ந்தெடுக்கப்பட்ட) செல்வமாவது,—அருள் செல்வம்-அருளான்வருஞ் செல்வம்: பொருள் செல்வம் - (அஃது ஒழிந்த) பொருளான்வருஞ் செல்வங்கள், பூரியார்கண்உம் - இழிந்தார்கண்ணும், உள - உளவாம், (ஆகலான்); (எ-று.)

* பி - ம்: சிறந்தமையின், முன்.

அருளான்வருஞ் செல்வமாவது - உயிர்களேஓம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனைநீசர்கண்ணும் உளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பில என்பதாம்.

(கு - ரை.) அருளான்வருஞ் செல்வம் - அருள் காரணமாகத்தோன்றும் மேம்பாடு. இழிந்தார்கண்ணும் - கீழ்மக்களிடத்தும். ஓம்பி - பாதுகாத்து. அவ்வறத்தான்மேம்படுதல் - அங்ஙனம்பாதுகாத்தலாகிய தருமத்தாற் சிறப் படைதல். நீசர் - தாழ்ந்தவர். அருளாகிய செல்வம் அறிவுமுதலியவற்றால் உயர்ந்தோரிடத்துமாத்திரமே உண்டாகி அவருயிரையும் பிறவுயிர்களனைத் தையும் பாதுகாத்தற்கு ஏதுவாம்; பொருளாகிய செல்வம் அறிவுமுதலியன இல்லாத தாழ்ந்தோரிடத்தும் உண்டாகி அவர்களுயிரையும் பிறவுயிர்களை யும் பாதுகாக்க உதவாமற்போம்; ஆதலால், பொருளினும் அருளே சிறந்தது என்பது கருத்து. உம் - இழிவுசிறப்பு. இத்திருக்குறளை 'இன்னதல்லதிது வெனமொழிதல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமாகக்காட்டினர், வீர சோழியவுரைகாரர். (க)

உசஉ. நல்லாற்று ணுடி யருளாள்க பல்லாற்றுந்
தேரினு மஃதே துணை.

(இ - ள்.) நல் ஆற்றான் நாடி - (அளவைகளானும் பொருந்துமாற்று னும்) நன்றான நெறியிலே (சின்று நமக்குத்துணையாம் அறம் யாதென்று) ஆராய்ந்து, அருள் ஆள்க - அருளுடையராக; பல் ஆற்றான் - (ஒன்றை ஒன்று ஒவ்வாத) சமயநெறிகள் எல்லாவற்றானும், தேரின்உம் - ஆராய்ந்தா லும், துணை - துணையாவது, அஃதுஎ - அவ்வருளே, (பிறிதில்லை); (எ - று.)

அளவைகளாவன - பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அநுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமும் என மூன்று; ஒப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம்அன்றியின் இதுகூடாது என்று உணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையும் என இவற்றையுங் கூட்டி ஆறென்பாரும் உளர்: இவையும் ஒருவாற்றான் அவற் றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறுவது - 'இது கூடும், இதுகூடாது' எனத் தன்கண்ணே தோன்றுவது; இதனை வட நூலார் 'யுக்தி' என்ப. 'ஆற்றான்' என்பது - வேற்றுமைமயக்கம். ஒன்றை ஒன்று ஒவ்வாமையாவது - மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள்மாறுகோடல். அன்னவாயினும், அருள்துணை யென்றற்கண் ஒக்கு மென்பதாம். உயிரைவிட்டுநீங்காது இருமையினும் உதவலின், 'துணை' என்றார்.

இவை யிரண்டுபாட்டானும், அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நன்றான நெறி - சன்மார்க்கம். அளவைகளானும் பொருந் மாற்றானும் ஆராய்ந்து என இயையும். ஆராய்தல் - ஆலோசித்து அறிதல். நமக்குத் துணையாம் அறம் - நமது உயிர்க்கு உதவியாகுந் தருமம். அருள் ஆள்க - அருளுடைமையென்னும் விரதத்தையே உறுதிப்பொருளாகத்

கொண்டு காக்க. சமயநெறிகள் - மதவழிகள். அளவைகள் - ஒருபொருளின் உண்மையை அளவிட்டறிதற்குக் கருவியான பிரமாணங்கள்: அவை எட்டுவகைப்படும்; அவையாவன - பிரதியட்சம், அநுமானம், உபமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகியம், சம்பவம் என்பன. அவற்றுள், காணல் - பிரதியட்சம்; புகையைக் கண்டு நெருப்பு உண்டெனல் - அநுமானம்; மரை பசுப்போல் எனல் - உபமானம்; பெரியோர்வாய்ச்சொல் - ஆகமம்; 'பகலுண்ணுன் பருத்திருப்பான்' என்றவிடத்து 'இரவில் ஒளித்துஉண்பான்' என உணர்தல் - அருத்தாபத்தி; 'மூன்னுமில்லை, பின்னுமில்லை, ஒன்றினுன்றில்லை, ஒருகாலத்தும்இல்லை' எனல் - அபாவம்; இம்மரத்திற் பேயுளதென்பது - ஐதிகியம்; ஆயிரத்தில் நூறு உண்டெனல் - சம்பவம்; இவற்றுள் ஐதிகியம், சம்பவம் என்பவற்றைப் பலர் வேறுபிரமாணங்களாகக் கொள்ளார். இவைஎட்டையும் காட்சி, அநுமானம், ஆகமம் என்னும் மூன்றில் அடக்குவர்; உபமானம் பிரதியட்சத்திலும், அருத்தாபத்தியும் சம்பவமும் அநுமானத்திலும், ஐதிகியம் ஆகமத்திலும், அபாவம் மூன்றிலும் அடக்கப்படும்: இதன்விரிவைத் தருக்கநூல்களிற் காணலாம். பொறிகளாற் காணுங் காட்சி - மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் பஞ்சஇந்திரியங்களினுலும் அறியும் அறிவு; இது, பிரதியட்சமெனப்படும். குறிகளான் உய்த்து உணர்தல் - அடையாளங்களால் ஆராய்ந்து அறிதல். கருத்தாமொழி - கடவுளின் வாக்கியம். ஆகமம் என்றது - கடவுளால் நேரேவெளிவிடப்பட்ட வேதங்களும், அவனருள்வழிப்பட்டோரால் வெளிவிடப்பட்ட ஸ்மிருதி இதிகாச புராணங்களும் முதலியவற்றை; இது, சப்தப்பிரமாணமெனவும் படும். மாறுஆய - எதிரான. இன்மை-அபாவம். ஒருவாற்றுன் - ஒருவகையால். கருத்து - சித்தாந்தம். ஆற்றுன் - ஆற்றில்என்று பொருள்: மூன்றும்வேற்றுமையுருபு ஏழாம்வேற்றுமையிடப்பொருளில்வந்ததனுல் உருபுமயக்கம். பொருள்கள் - பதார்த்தங்கள்; இவை, பிரமாணங்களைக்கொண்டு அளவிட்டு அறியப்படுதலால், பிரமேயமெனப்படும். மாறுகோடல் - பேதங்கொள்ளுதல். அன்னவாயினும் - அப்படிப்பட்டவையாஞலும். இருமையினும் - இம்மை மறுமை யென்னும் இரண்டிடத்தும். எவ்வளவு ஆலோசித்துப்பார்த்தாலும் எல்லாச்சமயத்தாராலும் உயிர்க்கு இம்மைமறுமைகளில் உறுதிதருவதாகவிரும்பி யொப்புக்கொள்ளப்படுவது அருளே யாதலால், உயிர்க்கு உறுதி வேண்டுபவர் அருளுடையராக என்பது கருத்து. 'நல்வழியாலேநாடி அருளேயுண்டாக்குக: பல்வழியினும் ஓடி ஆராயினும் தமக்கு அருளேதுணையாம் என்றவாறு. 'நல்வழியால்' என்றது, அருளுடைமையுண்டாகப் பலஅறங்களேயுஞ் செய்க என்றவாறு. இது அருளுடைமை வேண்டுமென்றது' என்பது, மணக்குடியுரை. 'அஃதே' என்னும் பிரிநிலையேகாரத்தால், வேறில்லையென்பது பெறப்பட்டது. அஃது - ஆய்தம் இங்கு மெய்போல நின்றது. (உ).

உசாத. அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னு வுலகம் புகல்.

(இ - ள்.) இருள் சேர்ந்த-இருள்செறிந்த, இன்ஞ உலகம் - துன்பவுலகத்துள், புகல் - சென்றுபுகுதல்,—அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு-அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு, இல்லை—; (எ - று.)

'இருள்செறிந்த துன்பவுலகம்' என்றது, திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கட் புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின் 'உலகம்' எனப்பட்டது.

(கு - ரை.) செறிந்த - நிறைந்த. துன்பவுலகம் - நரகம். திணிதல்-நிறைந்து அடர்தல். இருள்செறிந்த இன்ஞவுலகம் - எப்பொழுதும் மிக்க இருள் நிறைந்து அதிபயங்கரமாகவுள்ள அந்ததாமிஸ்ரம் என்னும் நரகபேதம். கீழ் அடக்கமுடைமை யென்ற அதிகாரத்தில் "ஆரிருளுய்த்துவிடும்" என்பதற்கு—'தங்குதற்கரிய இருளின்கண் செலுத்தும்' என்று பொழிப்புரையும், 'இருள் என்பது - ஓர்நரகவிசேடம்' என்று விசேடவுரையும் உரைத்தவாறும் காண்க. அருளுடையார்க்கு நரகவேதனையில்லை யென்பது கருத்து. 'இது, நரகம்புகார் என்றது' என்பர். மணக்குடியர். (கூ)

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(இ - ள்) மன் - நிலைபேறுடைய, உயிர் - உயிர்களை, ஓம்பி - பேணி, அருள் ஆள்வார்கு - (அவற்றின்கண்) அருளுடையரானவர்க்கு, தன் உயிர் அஞ்சும் வினை - தன்உயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள், இல்-உளவாகா, என்ப - என்று சொல்லுவர், (அறிந்தோர்); (எ - று)

உயிர்களெல்லாம் நித்தமாகலின், 'மன்னுயிர்' என்றார். அஞ்சுதல் - துன்பம்நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்திஞனென் கொலைமுதலிய பாவங்கள் செய்யா னெனவே, மறுமைக்கண் நரகம்புகாமைக்கு ஏது கூறியவாறுயிற்று.

(கு - ரை.) பேணி - பாதுகாத்து. நித்தம் - நித்தியம்; என்றும் ஒருபடிப்பட இருப்பது. பரமாத்மாவைப் போலவே ஜீவாத்மாவும் நித்தியமென்பது நூல்துணிபு. வினையென்னும் பொதுமொழி, 'தன்னுயி ரஞ்சும்' என்ற விசேஷணத்தால், தீவினையெனச் சிறப்பை யுணர்த்திற்று. அஞ்சும் வினை - அஞ்சுதற்குக் காரணமாகிய வினை யெனப் பொருள்படுதலால், பெயரெச்சம் காரியப்பொருளது. தன்னுயிர் - உடைமையும் உடையதும் வேறுகாத ஒற்றுமைக் கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத்தொகை. அன்ன அறத்திஞனென் - அருளுடைமையாகிய அந்தத்தருமத்தை யுடையவன். மன்னுயிர் - இரண்டனுருபும் பயனுந் தொக்கதொகை. நிலைபெற்றஉயிர் என வினைத்தொகையுமாம். 'என்ப' என்னும் பலர்பால்முற்றுக்கு, 'அறிந்தோர்' என்பது, தோன்றுஎழுவாய். அருளுடையார் தீவினைசெய்யா ரென்பது இதன்கருத்து. கீழ்ப்பாட்டிற் கூறிய சித்தாந்தத்துக்கு இப்பாட்டு ஏது. இவை யிரண்டு பாட்டுக்களாலும், அருளுடையார்க்கு மறுமையில் துன்பமின்மை கூறப்பட்டது; இம்மையில் துன்பமின்மை அடுத்தபாட்டாற் கூறப்படும். 'இது, தீமைவாரா தென்றது' என்பர் மணக்குடியர். (எ)

உசநு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

(இ - ள்.) அருள் ஆள்வார்க்கு - அருளுடையார்க்கு, அல்லல் இல்லை - (இம்மையினும்) ஒருதுன்பம் உண்டாகாது; (அதற்கு), வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் - காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார், கரி - சான்று; (எ - று.)

சான்றுவார் - தாம் கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லல் உண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவார் இன்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்று என்பார், 'வளிவழங்கு மல்லன் மா ஞாலங் கரி' என்றார்: எனவே, 'இம்மைக்கண் என்பது' பெற்றும். ஞாலம் - ஆகுபெயர்.

இவை மூன்றுபாட்டானும், அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது.

(கு - ரை.) அதற்கு-இம்மையினும் ஒருதுன்பம் உண்டாகாதென்பதற்கு. ஞாலம் - நிலவுலகம். இயங்குகின்ற - சஞ்சரித்தற்கிடமான. சான்று - சாட்சியாவர். தேறிய - ஐயந்திரிபில்லாமல் அறிந்த. தேற்றுதல் - அங்ஙனம் அறிவித்தல். இன்மைமுகத்தான் - இல்லாமையாயிலாக: அருளுடையார் (துன்பமடைந்ததாக எப்போதும் எங்கும்காணப்படாமையையே) காரணமாகக் கொண்டு, ஞாலம் கரியென்ற ரென்க. ஞாலம் - பூமியில் வாழ்வார்க்கு இடவாகுபெயர். ஞாலம் கரியாவது, இம்மைக்கண்ணேயா மென்க. அத்துணையுடையார்க்கு - அருளாகிய துணையையுடையவர்களுக்கு. வளிவழங்கும் ஞாலம் - பெயரெச்சம் இடப்பெயர்கொண்டது. வழங்கும் மல்லல் மா என்னும் மூன்றும் ஞாலத்துக்கு அடைமொழி. அத்துணை - அருளாகிய அந்தத்துணை. 'அருளுடையார்க்கு அல்லலின்மை உலகத்தார்மாட்டே காணப்படுமென்றது' என்பர், மணக்குடியர். (ங)

உசசு. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(இ - ள்.) அருள் நீங்கி - (உயிர்கள்மாட்டுச் செய்யப்படும்) அருளைத் தவிர்ந்து, அல்லவை செய்து ஒழுகுவார் - (தவிரப்படுங்) கொடுமைகளைச் செய்து ஒழுகுவாரை, பொருள் நீங்கி பொச்சாந்தார் என்பர் - (முன்னும்) உறுதிப்பொருளைச் செய்யாது (தாம் துன்புறுகின்றமையை) மறந்தவர் என்று சொல்லுவர், (நல்லோர்); (எ - று.)

உறுதிப்பொருள் - அறம். துன்புறுதல் - பிறவித்துன்பம் மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின் அவ்வாறு ஒழுகாரென்பது கருத்து.

(கு - ரை.) உயிர்கள்மாட்டு - பிராணிகளிடத்து முன்னும் - முற்பிறப்பிலும். உறுதிப்பொருள் - புருஷார்த்தம்; இங்கே, அவைநான்கனுள் முதலாவதான தருமம். துன்புறுகின்றமையை - வருத்தமடைகின்றதை. பிறவித்துன்பம் மூன்று முன்னர்க்கூறப்பட்டன. மறந்திலராயின் - உறுதிப்பொருளைச்

செய்யாது தாம் துன்புறுகின்றமையை மறவாதவரா யிருத்தல். அவ்வாறு ஒழுகார் - அருளைத்தவிர்ந்து தவிரப்படுங் கொடுமைகளைச்செய்யார். பொச்சாந்தார், பொச்சா - பகுதி. 'முன்னே அருள்' என்றதனால், பின்னே 'அல்லவை' என்றது -கொடுந்தொழில்களாயிற்று. தாம் அனுபவிக்கும் பிறவித்துன்பத்தை அறியாதவர்களே பிறவுயிர்களிடத்து அருளின்றியொழுகுவார்: அறிந்தவர்களோ அத்துன்பம் ஒழியும்பொருட்டு அருளுடையராவரென்றதாம். 'என்பர்' என்னும்வினைமுற்றுக்கு, 'நல்லோர்' என்பது தோன்றுஎழுவாய்; 'ஒழுகுவார்' என்பது, செயப்படுபொருள்: இதில் உயர்திணையில் இரண்டாம்வேற்றுமையுருபு இறுதியில் தொக்கது. இனி, 'என்பர்' என்பதைச் செயப்பாட்டுவினைப்பொருளில் வந்த செப்வினையாகக் கொண்டு, அருளினின்று நீங்கி அறமல்லவற்றைச் செய்தொழுகுபவர் முற்பிறப்பிலும் உறுதிப்பொருளினின்று நீங்கி மறந்தவரெனப்படுவர் என்றும் உரைக்கலாம். 'முற்பிறப்பின்கண் அருளினின்று நீங்கி அல்லாதவற்றைச் செய்தொழுகின் அவர்கள் இப்பிறப்பின்கண் பொருளினின்று நீங்கி மறவியுமுடையவ ரென்று சொல்லுக என்றவாறு. இது, பொருளில்லையா மென்றது' என்பது, மணக்குடியருரை. (சு)

உசள. அருளிலார்க் கவ்வுலக மில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலக * மில்லாகி யாங்கு.

(இ - ள்.) அருள் இலார்க்கு - (உயிர்கள்மேல்) அருளில்லாதார்க்கு, அ உலகம் - வீட்டுலகத்து இன்பம், இல்லை—; பொருள் இலார்க்கு - பொருளில்லாதார்க்கு, இ உலகம் - இவ்வுலகத்து இன்பம், இல் ஆகி ஆங்கு - இல்லையாயினுற்போல; (எ - று.)

'அவ்வுலகம்,' 'இவ்வுலகம்' என்பன - ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பங்கட்குப் பொருள் காரணமானுற்போல, அவ்வுலகத்து இன்பங்கட்கு அருள் காரண மென்பதாயிற்று.

(கு - ரை.) பொருள் - செல்வம். அவ்வுலகம் இவ்வுலகம் என்பவை - அந்தந்த வுலகத்து அனுபவிக்கப்படும் இன்பங்களைக் குறித்தலால், இடவாகுபெயர்; அ, இ என்னும் சுட்டிடைச்சொற்கள்-முறையே தூரத்திலும் சமீபத்திலு முள்ள பொருள்களைக் குறிப்பனவாதலால், முத்தியையும் பூமியையும் உணர்த்தின. ''பொருளுடையான் கண்ணதே போகம் அறனும், அருளுடையான் கண்ணதே யாகும்'' என்றதனோடு இக்குறளினை ஒப்பிடுக. 'ஆனல்' என்னும் எதிர்காலவினையெச்சம், 'ஆகி' என இறந்தகாலவினையெச்சமாகத் திரிந்தது: எச்சத்திரிபு. ஆங்கு - உவமவுருபு. 'இல்லாகியாங்கு, என்பதுவே சரியான பாடமாதலே, இலக்கணக்கொத்தில் ''பகுபதத்திலக்கணம்'' என்னுஞ்சூத்திரத்தில் 'ஆகியாங்கு' என இதனையேஉதாரணமெடுத்துக்காட்

*'இல்லாகியாங்கு' என்று சிலர் கூறும் பாடத்துக்கு - இல்லையாயினுற் போல என்று பொருள்படாமையும், நிலைமொழிவருமொழிகள் ஏற்படாமையும் முதலிய குற்றங்களை உய்த்து உணர்ந்து அதனை விலக்குக.

டியிருத்தலாலறியலாம். இத்திருக்குறளினைப் பொருட்படலத்தில் முதுமை யென்னுங் காஞ்சித்திணைப்பொருள்துறைக்கும், அலங்காரப்படலத்தில் தற்கத்திலெடுத்துக்காட்டுப்போலிக்கும் உதாரணங் காட்டினர் வீரசோழியவுரை காரர். உவமையணி. 'அருளில்லாதார் சுவர்க்கம்புகார் என்றது' என்பர் மணக்குடியர். (எ)

உசஅ. பொருளற்றூர் பூப்ப தொருகா லருளற்று
ரற்றூர்மற் றூத லரிது.

(இ - ள்.) பொருள் அற்றூர் - (ஊழான்) வறியராயினர், ஒரு கால் பூப்பர் - (அது நீங்கிப் பின்) ஒருகாலத்துச் செல்வத்தாற்) பொலிவர்; (அவ்வாறன்றி), அருள் அற்றூர் அற்றூர் - அருளிலாதார் (பாவம் அருமையின்) அழிந்தாரே; மற்று ஆதல் அரிது - பின் ஒருகாலத்தும் ஆதல் இல்லை; (எ - று.)

மற்று - வினைமாற்றின்கண் வந்தது. மேல் பொருளின்மையோடு ஒருவாற்றான் ஒப்புமைகூறினு ராகலின், அதுமறுத்து, பிறவாற்றான் அதனினும் கொடிதென்பது கூறியவாறு.

(கு - சை.) ஊழான்-விதியால். ஊழாவது-நல்வினையின்பயனுகிய இன்பமும், தீவினையின்பயனுகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. அது - வறுமை. பொலிவர் - விளங்குவர். அவ்வாறன்றி - வறியராயினர் வறுமைநீங்கி ஒருகாலத்திற் செல்வத்தாற் பொலிவதுபோலல்லாமல். அருமையின் - நீங்காமையால். ஆதல் இல்லை - விருத்தியடைதல் இல்லை. 'மற்று' என்னும் இடைச்சொல், 'அற்றூர்' என்னும் வினையை மாற்றி 'அழியாமல்' என்னும் பொருளைத் தந்ததனால், வினைமாற்றுயிற்று. மேல் - மூன்றினகுறளில். 'அற்றூர்' என்னுஞ் சொல்மூன்றனுள், முன்னது இரண்டும்-வினையாலணையும்பெயர்; பின்னது-வினைமுற்று. வினைமுற்றாகிய 'அற்றூர்' என்பது - தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி: [நன். பொது. நூ.] முன்செய்த தீவினையால் தரித்திரரானவர்கள் அந்தத்தரித்திரம்போய்ப் பிறகு ஒருகாலத்திலே ஐசுவரியவான்களாகக்கூடும்; அருளில்லாதவர்களோ, பாவம் தொலையாமல் அழிந்து நரகத்திலே போகிறதல்லாமல் பின்னையொருகாலத்தும் பாவம்போய்ப் புண்ணியவான்களாகிற தில்லை யென்றவாறு. ஒருகால் மீண்டும் ஆக்கம்பெறும் பொருளின்மையினும், எக்காலமும் ஆக்கம்பெறுத அருளின்மை மிகக்கொடிய தென்க: வேற்றுமையணி. பொருளில்லாதார் ஒருகாலத்தே பொருளுடையவராகவுங் கூடும்; அருளில்லாதார் கெட்டால் பின்பு ஆக்கமுண்டாகாது என்றவாறு. 'இது' பொருளின்மையே யன்றி எல்லாக்கேடும் உண்டாம் என்றது' என்பது மணக்குடியருரை. (அ)

உசக. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூற் றேறி
னருளாதான் செய்யு மறம்.

(இ - ள்.) அருளாதான் செய்யும் அறம் - (உயிர்கள்மாட்டு) அருள்செய்யாதவன் செய்யும் அறத்தை, தேறின் - ஆராயின், தெருளாதான் மெய்

பொருள் கண்டு அற்று - ஞானமில்லாதவன் (ஒருகால்) மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும்; (எ - று.)

மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற்சொல்லும் பொருள். நிலைபெற்றஞான மில்லாதவன் இடையே மெய்ப்பொருளை யுணர்ந்தால் அதனைத் தன்ஞான மின்மையால் தானே அழித்துவிடும்; அதுபோல, அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன் அருளாமையால் தானே அழித்துவிடுமென்ப தாயிற்று: ஆகவே, பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றும்.

இவை நான்குபாட்டானும், அத்துணையில்லாதார்க்கு வருங் குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) மெய்ப்பொருள் - தத்துவசாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட உண்மையான விஷயம். நிலைபெற்ற - நிடமான. இடையே - நடுவிலே. அருளாதான் - அருளில்லாதான். அத்துணை - அருளாகியதுணை. நூற்பொ ருளை அறிதற்கு அறிவுபோல, அறஞ்செய்தற்கு அருள் இன்றியமையாக் காரண மென்பது கருத்து. உவமையணி. 'அறஞ்செய்யவும் மாட்டார் என் றது' என்பர், மணக்குடியர். (கூ)

உரு0. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.

(இ - ள்.) வலியார்முன் தன்னை நினைக்க - (தன்னின்) வலியார் (தன் னைநலியவரும்பொழுது) அவர்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க: தன்னின் மெலியார்மேல் தான் செல்லும் இடத்து - (அருளில்லாதவன்) தன் னின் எளியார்மேல் தான் (நலியச்) செல்லும்பொழுது; (எ - று.)

'மெலியார்' எனச் சிறப்புடைய * உயர்திணைமேற் கூறினு ராயினும், ஈனை அஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே, இவ்வுயிர்க்கும் அவ் வாறே அச்சமாமென்று அறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து.

இதனால், அருள்பிறத்தற்கு உபாயம் கூறப்பட்டது.

(கு - ரை.) தன்னின் வலியார் - தன்னைக்காட்டிலும் பலசாலிகள். நலிய - வருத்துதற்கு. "ஒருமொழி யொழி தன் னினங் கொளற்கு உரித்தே" என்ற சூத்திரத்திற் கூறிய உபலக்ஷணவித்தியால், 'மெலியார்மேல்' என்பதற்கு, "மெலியவற்றின்மேல் என்றுங் கருத்துக்கொண்டார்; இதனால், மேல் 'புலான் மறுத்தல்' என்னும் அதிகாரத்துக்குத் தோற்றுவாய் செய்கிறார். எவ்வுயிர்க் குந் தீங்குசெய்யாமையே அருள் என்றபடி. அதனை-வலியார்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையை. அதன்மேல் - அந்தப்பிராணியினிடத்து. இவ்வுயிர்க் கும் - நாம் வருத்தப்புகும் இந்தப்பிராணிக்கும். முன் - இடமுன். (கo)

* பி-மீ: உயர்திணையே.

உசு - ஆம் அதிகாரம்.—புலான்மறுத்தல்.

அஃதாவது - ஊனுண்டலை ஒழிதல். * கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனுல் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்கு உடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றுதலின், அதனை விலக்குதற்கு, இஃது, அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(சு - ரை.) ஊனுண்டல்-மாமிசபோசனம். ஒழிதல்-நீக்குதல்; செய்யாதிருத்தல்: விலக்குதல். கொலைப்பாவம் - பிராணிகளைக்கொல்லுதலால் வருந் தீவினை. அதற்கு - கொலைப்பாவத்துக்கு. அதனுல் - கொலைப்பாவத்தால். அதன் - கொலைப்பாவத்தின். ஒருங்கு உடைத்தாய - ஒருசேர உடைய தான. இயைவதன்று - பொருந்துவதன்று. ஒருவன் இறைச்சியை யுண்ணுவானுயின் அது, மீண்டும் பலபிராணிகளை வதைத்தற்குக் காரணமும், முன்னே சில பிராணிகளை வதைத்ததனுலாகிய காரியமும் ஆமெனக் காண்க. இவ்வதிகாரத்தை அருளுடைமையின்பின் வைத்ததற்குக் காரணம் - அருளுடையவர் பிராணிகளைக்கொன்று ஊன்தின்னுர்; அருளில்லாதவரோ கொன்றுதின்பர்: ஆதலால், அருளுடைமையின் பயன் புலான்மறுத்தல் என்பதுபற்றியாகும். புலால் - ஊன். மறுத்தல் - உண்ணுதவிர்தல்.

உறுக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ணுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(இ - ள்.) தன் ஊன் பெருக்கற்கு - தன் உடம்பை வீக்குதற்பொருட்டு, தான் பிறிது ஊன் உண்பான் - தான் பிறிதோருயிரின் (உடம்பைத்) தின்பவன்,—எங்ஙனம் - எவ்வகையான், ஆளும் - நடத்தும், அருள் - அருளினை?

பயனில்லாத ஊன்பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமைசெய்வானே அறிவில்லாதகொடியோன் என்றவாருயிற்று. 'எங்ஙன மாளு மருள்' என்பது, ஆளானென்பது பயப்ப நின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

(சு - ரை.) வீக்குதல் - பருக்கச்செய்தல். ஊன் - உடம்பு. எங்ஙனம் என்னும் வினு, இங்கு எதிர்மறை குறித்துநின்றது. ஊன், ன் - சாரியை; "ஊவெ னெருபெயர் ஆவொடு சிவணும்" என்னுந் தொல்காப்பியத்தால் அறிக. பெருக்கற்கு - 'ரு' விகுதிகாலங்காட்டும் எதிர்காலவினையெச்சம்; பெருக்கல் என்னுந் தொழிற்பெயரின்மேல் வந்த நான்காம்வேற்றுமை யெனினும் தவருகாது. "ஆத்மவத் ஸர்வபூதாநி" என்றபடி தன்னுயிரைப்போலவே எல்லாவுயிர்களையுங் கருதவேண்டுவது கடமையாயிருக்க அது செய்யாமல், தன்னுயிரையே தான் விரும்பி அதனைப்போஷித்தற்காகப் பிறவுயிரை வதைப்பவன் ஒருகாலும் அருளுடையவனென்று சொல்லத்தக்கவனல்ல னென்பது கருத்து. 'ஊனுண்ண அருள்கெடுமோ? என்றூர்க்குக் கூறப்பட்

* பி - மீ: அருளுடைமைக்கு மாருங் கொலைபிறத்தலுந் தூய்தன்மையும் நோக்கிப் புலாலுணவு மறுத்தல் கூறினர்; அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

டது' என்பர், மணக்குடியர். ''ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே'' என்றது, இனியவைகூற்பது. (க)

உறிஉ. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(இ - ள்.) பொருள் ஆட்சி - பொருளாற் பயன்கோடல், போற்றாதார்க்கு - (அதனைப்) பாதுகாவாதார்க்கு, இல்லை—; ஆங்கு - அதுபோல, அருள் ஆட்சி - அருளாற் பயன்கோடல், ஊன் தின்பவர்க்கு - ஊன் தின்பவர்க்கு, இல்லை—; (எ - று.)

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயன் இழத்தற்கு ஊன்தினல் காரண மென்பதாயிற்று.

* ஊன்தின்றூராயினும் உயிர்கட்கு ஒருதீங்கும்நினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லை யென்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவை யிரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - சை.) கோடல் - கொள்ளுதல். அதனை - பொருளை. பொருட்பயன் - பொருளாலடையும் பயன். அருட்பயன் - அருளாலடையும் பயன். அருளாடற்கு இழுக்குஇல்லை - அருளுடையராதற்குக் தடையில்லை. அஃது - இழுக்கு; குறைவு. மாமிசபோசனஞ்செய்பவர் பிறவுயிர்களிடத்து அருளுடையவராக வெளிக்குக் காட்டினலும் உண்மையாக உள்ளோக்குமிடத்து அவர்கட்கு அருளென்பது சிறிதுமில்லை யென்பது கருத்து. உவமையணி. ஆங்கு - உவமவுருபு. 'ஊனுண்ண அருட்கேடு வரு மென்றூர்' என்பர், மணக்குடியர். பிராணிகளைக் கொல்லாமல் மாமிசம் டையாது: பிராணிகளைக் கொல்லுகிறவர்கட்குத் தயையில்லை: தயையில்லாதவன் என்ன தருமஞ்செய்தாலும் தவஞ்செய்தாலும் ஒருபயனுமில்லாமல் சாம்பலிலேவார்த்த நெய்போலவா மென்க. (உ)

உறிஊ. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தொன்ற
றுடல்சுவை யுண்டார் மனம்.

(இ - ள்.) படை கொண்டார் நெஞ்சம் போல் - கொலைக்கருவியை (த் தம் கையிற்) கொண்டவர்மனம் (அதனுற்செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறு) போல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் - பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் மனம், நன்று ஊக்காது - (அவ்வூனையே நோக்குவதல்லது) அருளை நோக்காது; (எ - று.)

சுவைபட உண்டல் - காயங்களான் இனியசுவைத்தாக்கி உண்டல்.

இதனுல், ஊன்தின்றூர்மனம் தீங்குநினைத்தல் உவமவளவையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு - சை.) கொலைக்கருவி - ஆயுதம். சுவைபட - இனியருசிஉண்டாக. காயங்கள் - இன்சுவையை உண்டாக்கித்தரும்பொருட்டுச் சேர்க்கப்படுகிற பலபொருள்கள்; காரசாரங்கள். உவம வளவை - உபமானப் பிரமாணம்; மேலது - முன்னே சொன்ன அருளில்லாமை. படை-படுத்தற்குக்கருவி

* பி-ம்: இவை யிரண்டுபாட்டானும், அருளுக்குமாறுதல் கூறப்பட்டது.

யானது; படுத்தல் - கொல்லுதல்; ஐ - கருவிப்பொருள்விகுதி. ஈன்று - நல்ல குணமாகிய அருள்: ஒன்றன்பாற்குபிப்பு வினையாலணையும்பெயர். ஊக்குதல் - முக்கியமாகக்கருதுதல். ஒன்று - எண்ணலளவாகுபெயர்; ஒருபிராணியைக் குறித்தலால். மனம் - மகஸ். வடசொற்றிரிபு. ஊன்தின்பவரதுமனம் அருளை நினைத்தலுஞ் செய்யாதென்பது கருத்து. உவமையணி. (ஈ)

உரிசை. அருளல்லதி யாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(இ - ள்.) அருள் யாது எனின் கொல்லாமை—; (அருள்) அல்லது (யாது எனின்) கோறல்—; (ஆகலான்), அ ஊன் தினல் - அக்கோறலான் வந்த ஊனைத் தின்கை, பொருள் அல்லது - பாவம்; (எ - று.)

உபசாரவழக்கால் 'கொல்லாமை, கோறல்' ஆகியகாரியங்களை 'அருள், அல்லது' எனக் காரணங்களாக்கியும், 'ஊன்தின்கை' ஆகிய காரணத்தை 'பாவம்' எனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது - கொடுமை. சிறப்பு பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் 'பொருளல்லது' எனப்பட்டது. 'கோறல்' என முன் நின்றமையின், 'அவ் வூன்' என்றார். இனி, இதனை இவ்வாறன்றி 'அருளல்லது' என்பதனை ஒன்றாக்கி, 'கொல்லாமை கோறல்' என்பதற்கு, 'கொல்லாமையென்னும் விரதத்தை அழித்தல்' என்று உரைப் பாரு மூளர்.

(கு - ரை.) அருளல்லது - கருணைப்பண்பல்லாதது. கோறல் - கொல்லுதல். யாதெனின் என்னும் வினாவைப் பின்னும் எடுத்துக்கூட்டுக; அன்றி, அருளும் அல்லதும் யாதெனில், முறையே கொல்லாமையும் கோறலுமாம் என இயைக்கவுமாம்: இது, முறைநிரனிறைப்பொருள்கோளாம். 'அருளின் காரியம் - கொல்லாமை; அருளில்லாமையின் காரியம் - கொல்லுதல்: ஆதலால், மாமிசபோசனம் பாவத்துக்குக் காரணம்' என்று சொல்லவேண்டியவர் இங்ஙனஞ் சொன்னது, காரியத்தைக் காரணமாகவும் காரணத்தைக் காரியமாகவுங் கூறுவதோர் உபசாரவழக்கென்னும் இலக்கணம்பற்றியென்க. அறம்பொருளின்பம்வீடென்னும் புருஷார்த்தங்கள் நான்கும் உறுதிப்பொருளெனப்படுமாதலால், இங்கே அறத்தைப் பொருளென்றுரைனைக் கொள்ளினும் அமையும்; கீழ் அதிகாரத்தின் ஆரும்பாட்டிலுங் காண்க. பொருளல்லது - தருமமல்லாதது; எனவே, தீவினையாயிற்று. அவ்வூன் என்பது - அந்தக்கோறலான்வந்த ஊன்என்ற பொருளை யுணர்த்திற்று. அல்லதியாது குற்றியலிகரம். கோறல் தொழிற்பெயர். 'அருளல்லது யாதெனில் கொல்லாமையைச் சிதைத்தல்: பொருளல்லது யாதெனில் அவ்வூனைத் தின்றல் என்றவாறு: இது, அருள்கெடுத்தலேயன்றி அதனையுண்டதனாற் பெறுவ தொரு பயனுமில்லை என்றவாறு' என்பது, மணக்குடியருரை. (உ)

உரிரி. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்யா தளறு.

(இ - ள்.) உயிர் நிலை - ஒருசாருயிர் (உடம்பின்கண்ணே) நிற்றல், (ஊன்) உண்ணுமை உள்ளது - ஊனுண்ணுமையென்கின்ற அறத்தின்கண்

ணது; ஊன் உண்ணை - (அங்ஙிலேகுலேய ஒருவன்) அதனை உண்ணுமாயின், அளறு அண்ணுத்தல் செய்யாது - (அவனை வீழுங்கிய) நிரயம் (பின்உமிழ்தற்கு) அங்காவாது; (எ - று.)

உண்ணப்படும்விலங்குகள் அதனுல் தேய்ந்து சிலவாக, ஏனைய பலவாய் வருதலின், 'உண்ணுமையுள்ள துயிர்ஙிலே' என்ருர். 'உண்ணின்' என்பது, 'உண்ண' எனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்துள் அழுந்து மென்பதாம்.

'கொலேப்பாவம் கொன்ருர்மேல் நிற்றலின், பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லே' என்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருசார்உயிர் - மிருகங்கள், பட்சிகள், நீர்வாழ்வன என்ற இவற்றுட் சிலவகைகள். அங்ஙிலேகுலேய - அங்ஙனம் உயிர் உடம்பில்நிற்றல் அழியும்படி. அதனை - அவ்வுடம்பை. வீழுங்கிய-மறுமையிலுட்கொண்ட. நிரயம் - நரகம். பின்உமிழ்தற்கு அங்காவாது - பின்பு அவனை வெளிவிடுதற்கு வாய் திறவாது. ஊன்தின்பவன், ஆழ்வயிற்றடக்கி மீட்டுமிழ்தலா வெரிவாய் வெம்மைகூர்நரக மகடவனென்பது கருத்து. தேவர்,மக்கள், விலங்கு, நரகர் என்னும் நால்வகைக்கதிகளுள் விலங்ஙிலே பறவைகளும் நீர்வாழ்வனவும் அடங்குதலால், 'உண்ணப்படும் விலங்குகள்' என்ருர். ஏனைய பலவாய் வருதல் - மற்றையனவாகிய மனிதருடம்புகள் அதிகமாய்வளர்ந்து மிகுதல். உண்ணுமையுள்ள துயிர்ஙிலே யென்பதற்குக் கருத்து, மாமிசபோசனஞ்செய்தல் கொலேத்தொழிலின்றி முடியா தென்பது; உயிர் நற்கதியடையும் நிலேமை ஊனுண்ணுமையினுலுள்ளது என்றும் உரைக்கலாம். உண்ண - எச்சத் திரிபு; [ஙன். வினை. உஎ.] தாவேகொன்றுதின்னுமற்போனலும் பிறன் கொன்று தந்ததை யுண்பதும் பாவமே; அவன்கொல்லுதற்கு இவன்போலியர் தின்பரென்னும் உறுதியானஎண்ணமே காரண மாதலின், என்பது இதன் பயன். இது பற்றியே "அலேப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம், வீலேப்பாலிற் கொண்டீன் மிசைதலுங் குற்றஞ், சொலற்பால வல்லாத சொல்லுகலுங் குற்றங், கொலேப்பாலுங் குற்றமே யாம்" என்ருர், நான்மணிக்கடிகையிலும். அஃது - கொலேப்பாவம். நிலே - தொழிற்பெயர்; நில் - பகுதி. ஐ - விகுதி. இப் பாட்டில் இடையிலேநின்ற 'ஊன்' என்ற சொல் 'ஊனுண்ணுமை, என முன்னும் 'ஊனுண்ண' எனப் பின்னுஞ் சென்றுகூடுதலால், தாப்பிசைப்பொருள்கோள்; இதனை மத்திமதீப மென்றுங் கூறுவர். அண்ணுத்தல், அண்ணு - பகுதி; இது, ஒருசொல்: இறுமா, சோகா என்பன போல. அளறு - நரகக்குழி. (டு)

உருசு. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலேப்பொருட்டா லூன்றருவா ரில்.

(இ - ள்.) தினல் பொருட்டால் - (பேதைமைகாரணமாக வல்லது) ஊன்தின்கைகாரணமாக, உலகு - உலகம், கொல்லாது எனின் - கொல்லா

தாயின், வீலை பொருட்டால் ஊன் தருவார் - பொருள் காரணமாக ஊன் விற்பார், யார்உம் - யாவரும், இல் - இல்லை; (எ - று.)

'உலகு' என்பது - ஈண்டு, உயிர்ப்பண்மைமேல் நின்றது.

'பின்நிகழுந் தின்னை முன்நிகழுவ் கொலைக்குக் காரண மாகாமையின், தின்பார்க்குக் காரணத்தான் வரும் பாவம் இல்லை' என்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

(கு - ரை.) பேதைமை காரணமாகவல்லது ஊன்தின்னை காரணமாக உலகம் கொல்லாதாயின் - அறிபாமைபற்றிக் கொன்றுற்கொன்ற தல்லது மாமிசபோசனத்திற்காக உலகத்திலுள்ளோர் பலஉயிர்களைக் கொலைசெய்யா ராயின். வீலைப்பொருட்டு - கிரயமாகக்கொடுக்குந் திரவியத்திற்காக. உயிர்ப் பண்மைமேல் - பலஉயிர்களென்னும்பொருளில். 'காரணம் காரியம் என் னும் இரண்டனுள் காரணம் முற்பட்டிருப்பதுங் காரியம் பிற்பட்டிருப்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளு மிலக்கணமா மாதலால், ஒருவன் முன்னே செய் கிற கொலைத்தொழிலுக்கு மற்றொருவன் பின்னே ஊன்தின்பது கர்ணமா காது; ஆதலால், கொலைப்பாவம் கொன்றவனைச் சேருமே யல்லது பின்பு அதனிறைச்சியைத் தின்றவனைச் சேராது: ஆதலின், தானே கொன்றுதின் னக்கூடாதேயல்லது பிறன் கொன்று விற்றதை வீலைகொடுத்துவாங்கித் தின் னத் தடையில்லை' என்று வாதஞ்செய்பவனை நோக்கி, 'இவன்வாங்குவான் என்னும் நம்பிக்கையே கொலைஞன் கொல்வதற்குக் காரணமாதலால், கொலைப் பாவம் ஊன்தின்பவனையுஞ் சேரும்' என்று நியாயங்காட்டித் தம்கருத்தை நிலைநிறுத்தினர். இவன் தின்னுதற்கு வாங்குவா னல்ல னுயின் அவன் கொன்றுவிற்றல்செய்யான் என்றது, அருத்தாபத்திப் பிரமாணம். 'ஆல்' இர ண்டும் - அசைகள். யாரும், உம் - முற்றப்பொருளது. மேலது - முன்னிர ண்டு பாட்டுக்களிற் சொன்னது; பாவமுண்டென்பது. ஊனை வாங்குவா னில் லையாயின் விற்பாரில்லை யென்று கருத்து. 'கொன்றுதின்னுது வீலைக்குக் கொள்வார்க்குக் குற்றமென்னை? என்றார்க்கு, 'அதனாலும் கொலைப்பாவம் வரும்' என்று கூறப்பட்டது' என்பர், மணக்குடியர். (சு)

உரை. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) புலால் - புலாலாவது, பிறிது ஒன்றன் புண் - பிறிதோருடம் பின் புண்; அது உணர்வார் பெறின் - அது (தூய்து அன்மை) அறிவா ரைப் பெறின், உண்ணுமை வேண்டும்-(அதனை) உண்ணுதொழியல்வேண்டும்.

'அஃது' என்னல்வேண்டும் ஆய்தம், விகாரத்தால் தொக்கது. அம் மெய்ம்மை உணராமையின் அதனை உண்கின்றாரென்பதாம்.

பொருத்துமாற்றாலும் புலாலுண்டல் இழிந்ததென்பது, இதனுற் கூறப் பட்டது.

(கு - ரை.) அது தூய்து அன்மை - அவ்விறைச்சி சுத்தமுடையதல்லா மை. அறிவாரைப்பெறின் என்றதனால், அவ்வுண்மையையறிந்தால் உண்

ணுரென்பது கருத்து. அறிதலின் அருமை தோன்ற, 'பெறின்' என்றார். அஃது இஃது உஃது என ஆய்தத்தொடர்க்குற்றியலுகரமாகவருஞ் சுட்டுப் பெயர் வேறென்றும், அது இது உது என முற்றியலுகரமாகவருஞ் சுட்டுப் பெயர் வேறென்றும், அவற்றுள் அது என்பது அதனை அதனெடு என இவைமுதலாக அன்சாரியை வருமிடத்துமாத்திரமே உகரங்கெடு மென்றும், சிறப்புவிதியிற்சொல்லாத மற்றை உயிர்முதல்மொழிகள் வந்து புணரும் போது உகரங்கெடாமல் உடம்படுமெய்பெற்றேவரு மென்றும், அஃது என் பது குற்றியலுகரமாதலால் வருமொழிமுதலிலுயிர்வரும்பொழுது ஆய்தங் கெடாது குற்றியலுகரம் வருமொழியுயிரேற இடங்கொடுக்குமென்றும், வரு மொழிமுதலில் மெய்யெழுத்து முதன்மொழி வரும்பொழுது மாத்திரமே ஆய்தங்கெட்டு அது என நிற்கு மென்றும், தொல்காப்பியத்தின் எழுத்ததி காரச் சூத்திரங்களிலும் அவற்றின்உரையிலும் விளங்குதலால், இங்கே 'அதுணர்வார்'என்னுந் தொடரில் அஃதென்பது அதுவெனநின்றது,தொகுத் தல் என்னுஞ் செய்யுள்விகாரம் எனக் கொண்டார்; இங்ஙனன்றி அது என்று முற்றியலுகரமாகக்கொண்டால் 'அதுவுணர்வார்' என வரவேண்டுதலாலும், அஃதென்பது உயிர்முதல்மொழிப்புணர்ச்சியில் ஆய்தங்கெடுதற்கு விதி யின்மையாலும், இது, புணர்ச்சிவிகாரத்தில் அடங்காதாகும்: இனி, "மூன் னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி, மன்னல் வேண்டு மல்வழி யான" என்னுஞ் சூத்திரத்து இலேசினுல் அஃது என்பது அது என நின்றதென்று கொள்ளு தலும் ஒன்று. பொருத்துமாற்றலும் - யுக்தியினுலும். அளபெடை, செய்யு ளோசைநிறைக்க வந்தது. 'இது, புலால்மறுத்தல்வேண்டு மென்பதூஉம், அது தீயதாமென்பதூஉம் கூறிற்று' என்பர் மணக்குடியர். (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

(இ - ள்.) செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தின், தலைப்பிரிந்த - நீங் கிய, காட்சியார் - அறிவினையுடையார்,—உயிரின் தலைப்பிரிந்த ஊன் - ஓர் உயிரின் நீங்கிவந்த ஊனை, உண்ணுர்—; (எ - று.)

தலைப்பிரிவு என்பது - ஒருசொல். பிணம் என ஊனின்மெய்ம்மை தானே உணர்தலின், 'உண்ணுர்' என்றார்.

(கு - சை.) மயக்கம் - விபரீதஞானம். மெய்ம்மை - உண்மையானதன் மை. ஐயம் திரிபு அறியாமை யென்னும் மூன்றுகுற்றங்களும் நீங்கிய பரி சுத்தமான புத்தியையுடையவர்கள் பிணந்தின்னுரென்பது இதன் கருத்து. 'தலை' என்பது - உபசர்க்கமாய், 'பிரி' என்னும் வினைச்சொல்லோடு வந்தது; கைகூடல், கால்சித்தல், கண்ணுறுதல், மேற்கொள்ளுதல் என்பனவற்றில் கை, கால், கண், மேல் என்பனபோல. 'மேற்கூறிய குற்றமெல்லாம் பயத்த லின், அதனைத் தெளிவுடையா ருண்ணு ரென்றது' என்பர் மணக்குடியர்.

உருக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

(இ - ள்.) அவி சொரிந்து - (தீயின்கண் செய்யும்முதலிய) அவிகளைச் சொரிந்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம்வேள்விவேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை - ஒருவிலங்கின் உயிரைப் போக்கி (அதுகின்ற ஊனை) உண்ணுமை, நன்று—; (எ - று.)

அவ்வேள்விகளான்வரும் பயனினும் இவ்விரதத்தான்வரும் பயனே பெரிது என்பதாம்.

(கு - ரை.) தீயின்கண் - நெருப்பிலே. அவி - மந்திரபூர்வமாகத் தேவர்க்கு இடும் உணவு; ஹவிஸ்என்னும் வடமொழியின் திரிபு. சொரிந்து - பெய்து; போகட்டு. வேள்வி - யாகம். ஆயிரம் என்பது, பலவென்னுமாத்திரையாய் நின்றது; இவ்வெண்ணுப்பெயர், இவ்வெண்ணுடைய யாகங்களைக் குறித்தலால், எண்ணலளவாகுபெயர். வேட்டலினும் - ஓமஞ்செய்தலினும். செகுத்தல் - உடம்பினின்று ஒழித்தல். 'நூறுவருஷகாலம் வருஷந்தோறும் அசுவமேதயாகஞ்செய்த பயனும் மாமிசபோசனஞ் செய்யாத பயனும் சமம்' என்றும், 'காய் கிழங்கு முதலியவற்றை உண்டு விரதங்காக்கிறதனலும் அடையப்படமாட்டாது, புலால்மறுத்தலாலுளதாம்பயன்' என்றும் மநுதருமசாஸ்திரத்திற் கூறியுள்ளவற்றைக் கருதி இங்ஙனங் கூறினர். 'நன்றுகிய வேட்டலினும் உயிர்செகுத்துண்ணுமை நன்று' என்று கூறியதனால், இவ்வாசிரியர் வேள்வியை உடன்பட்டவரேயன்றி, விலக்கியவராகார்: வேள்வி நன்று என்று உடன்படாராயின், ஆயிரம்வேட்டலின் உயிர்செகுத்துண்ணுமை நன்று என்று கூறுரென்க. நல்லதொன்றைக் கூறி அதைக்காட்டிலும் இது நன்று என்று கூறுதல் முறையே யன்றி, தீயதொன்றைக் கூறி அதைக் காட்டிலும் இது நன்று என்று கூறுதல் வழக்கமில்லை யென்பதறிக. (கூ)

உசுo. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(இ - ள்.) கொல்லான் - (ஒருயிரையும்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும்—, கைகூப்பி - கைகுவித்து, தொழும்—; (எ - று.)

இவ்விரண்டு அறமும் ஒருங்கு உடையார்க்கு அல்லது ஒன்றே உடையார்க்கு அதனாற் பயனில்லை யாகலின், கொல்லாமையும் உடன்கூறினர். இப்பேரருளுடையான் மறுமைக்கண் தேவரின்மிக்கானு மென அப்பயனது பெருமை கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், ஊனுண்ணுமையது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) தொழும் - வணங்கும். இவ்விரண்டறம்-கொல்லாமையும், புலான்மறுத்தலும். தானே கொன்று தானே தின்னுதல், பிறர்கொன்றதைத் தான்தின்னுதல், தான்தின்னுமல் பிறர்க்குத் தின்னக்கொன்று கொடுத்தல் என்னும் இம்மூன்றும் குற்றமா மென்பதை இதனா லறிக. தேவரின்மிக்கான் - தேவர்களினுஞ் சிறந்தவன். பிறவுயிர்களுக்குத் தீங்குசெய்யாதவனை அந்தன்றியைக்கருதி அவ்வுயிர்கள் தொழவேண்டுவது முறைமையேயாம். கூப்பு - கும்பு என்பதன் பிறவினை; குவியச்செய் என்று பொருள்.

கீழ்ப்பாட்டில் புலான்மறுத்தல் என்னும் விரதத்துக்குத் தேவர்களோநோக்கிச் செய்யுங் கருமத்தினுஞ் சிறப்புக்கூறி, இப்பாட்டில் அவ்விரதமுடையானுக்கு அக்கருமத்தைப்பெறுந் தேவர்களினுஞ் சிறப்புக் கூறுகின்ரு ரென்க. எல்லாவுயிரில் தேவரும் சேர்வ ராதலால், தேவரும் புலாலுண்ணுனைத் தொழுவ ரென்பது, கூறியவாருயிற்று. (கo)

உஎ - ஆம் அதிகாரம்—தவம்.

அஃதாவது - மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலைநிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றுல் தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறஉயிர்களை ஓம்புதல். புலால்மறுத்து உயிர்கள்மேல் அருள்முதிர்ந்துழிச் செய்யப்படுவ தாகலின், இது, புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தவம் - தபஸ்: வடமொழி. பொறிவழி - மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் பஞ்சஇந்திரியங்களின் வழியாக ஸ்பர்சம் ரஸம் ரூபம் கந்தம் சப்தம் என்னும் பஞ்சவிஷயங்களிலே. உண்டி-உணவு. கோடைக்கண் - கிரீஷ்மகாலத்தில்; அணிமாதமும் ஆடிமாதமுமாகிய முதுவேனிற்பருவத்தில். கோடை - கடுவெயிற்காலம். வெயில்நிலை - சூரியகிரணம் படுமிடம். மாரி - மழை. நீர்நிலை - ஏரி, ஆறு, குளம், மடு, கிணறு, வாவி முதலியன. ஓம்புதல் - பாதுகாத்தல்; துன்பஞ்செய்யாதிருத்தல். அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவது - கருணைமிகுந்தபொழுது தவம் செய்தற்குரியது. உண்டிசுருக்கல் - காய் கனி கிழங்கு சருகுவருக்கங்களை உண்டும், ஒருகா லன்னம்புசித்தும், நீர்பருகியும், காற்றுநுகர்ந்தும், ஒன்றும் உண்ணுமலும் எனக் காண்க.

உசுக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.

(இ - ள்.) தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு, உற்ற நோய் நோன்றல் - (உண்டிசுருக்கல் முதலியவற்றுல் தம்உயிர்க்கு) வருந் துன்பங்களைப் பொறுத்தலும், உயிர்க்கு உறுகண் செய்யாமை - (தாம் பிற) உயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையும், (ஆகிய), அற்று - அவ்வளவிற்று; (எ - று.)

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், 'அற்றே' எனத் தேற்றேகாரங் கொடுத்தார். 'தவத்திற்கு உரு அற்று' என்பது, 'யாஅயது கோடுகூரிது' என்பதனை 'யாஅைக்குக் கோடு கூரிது' என்ருற்போல ஆருவ தன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம்.

இதனுல், தவத்தினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) உரு=ரூபம்: வடமொழி. மற்றுள்ளன-தவத்தின் அங்கங்கள். தேற்றேகாரம் - நிச்சயப்பொருளைத்தரும் ஏ என்னும் இடைச்சொல்.

கோடி-தந்தம். ஆறும்வேற்றுமையுருபுக்கு நான்காம்வேற்றுமையுருபு வந்தது; உருபுமயக்கம். ஆறுவதன்பொருள் - கிழமைப்பொருளென்னுஞ் சம்பந்தப் பொருள். நோன்றல், நோல் அல்லது நோன் - பகுதி. (க)

உசுஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(இ - ள்.) தவம்உம் தவம் உடையார்க்கு ஆகும் - (பயனேயன்றித்) தவம்தானும் உண்டாவது முன்தவமுடையார்க்கே; (ஆகலான்), அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம் (ஆகும்) - அத்தவத்தை அம் முற்றவ மில்லாதார் முயல்வது பயனில்முயற்சியாம்; (எ - று.)

பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் 'தவ முடையார்க்கு ஆகும்' என்றும், அஃது இலாதார்க்கு அவை இன்மையான் முடிவுபோகாமையின் 'அவமாம்' என்றுங் கூறினர்.

(கு - பை.) பயனே அன்றி-பலனேயல்லாமல். முன்தவம் உடையார்க்கே-முற்பிறப்பிற்செய்த தவத்தை யுடையவர்கட்குமாத்திரமே. முற்பிறப்பில் தவஞ்செய்யாமல் இப்பிறப்பில் தவத்திற்கு உரிய முயற்சிசெய்யத் தொடங் கியவர்கட்குத் தவம் கைகூடாது. உண்டாவது - இடையூறில்லாமல் நிறைவேறுவது. மேற்கொள்வது - பூண்டுகொள்வது. அவம்-வீண். முயல் வது - யத்தனிப்பது. பரிசயத்தால் - முற்பழக்கத்தினால். அறிவு - ஞானம். ஆற்றல் - வல்லமை. முடிவு போக்கலின் - (தவத்தை) நிறைவேறச் செய்தலி னால். அஃது இலாதார்க்கு - அத்தமுன்தவமில்லாதவர்கட்கு. அவை இன் மையான் - அறிவு ஆற்றல் என்னும் இரண்டும் இல்லாமையால். முடிவு போகாமையின் - தவம் நிறைவேறுமையால். அஃதிலார் - ஆய்தம் மெய் போல ஒலித்தது. பயனேயன்றித் தவந்தானும் என நிற்றலால் தவமும் என்ற உம்மை - இறந்ததுதழுவியது; இழிவுசிறப்புமாம். நன்மைசெய்தற் குப் பாவம் காரணமாகமாட்டாமையால், நன்மையே காரணம் என்பதாம். (உ)

உசுங. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(இ - ள்.) மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றிநிற்பார்,—துறந் தார்க்கு துப்புரவு வேண்டி - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலே விருப்பி, தவம் மறந்தார் கொல் - (தாம்) தவஞ்செய்தலே மறந்தார் போலும்; (எ - று.)

துப்புரவு - அனுபவிக்கப்படுவன. வேண்டியவேண்டியாங்கு எய்தற் பயத்த தாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தை, தாஞ் செய்யும் தானத்தின்மேல் விருப்பமிகுதியான் மறந்தார்போலும்: எனவே, தானத்தின் தவம் மிக்க தென்பது பெற்றாம்.

(கு - பை.) பற்றி - விடாமற்பிடித்து. துறந்தார்க்கு - புறமாகிய செல்வ த்தினிடத்து உண்டாகிற எனதென்னும் புறப்பற்றையும் [மகாரத்தை யும்] அகமாகிய உடம்பினிடத்து உண்டாகிற யானென்னும் அகப்பற்றையும்

[அகங்காரத்தையும்] விட்டவர்கட்கு; சன்னியாசிகட்கு. உண்டியும் - உணவும். மருந்தும் - ஔஷதமும். உறையுளும் - இருப்பிடமும். உதவல் - கொடுக்கவேண்டுதல். தூப்புரவு-பஞ்சஇந்திரியங்களிஞலுங் கொள்ளப்படுபவை. வேண்டியவேண்டியாங்கு எய்தற் பயத்ததாகலின் - விரும்பினவையெல்லாவற்றையும் விரும்பியபடியே பெறுதலாகிய பயனையுடையதாதலால். ''வேண்டியவேண்டியாங்கெய்தலால்'' என்பது - இவ்வதிகாரத்தில் ஐந்தாம்பாட்டு. மறந்தார்கொல், கொல் - தற்குறிப்பேற்றவணியின் உருபு. பலவகைக் கைங்கரியங்களைச் செய்து உபசரிப்பவர் இல்லறத்தாரும், அங்ஙனம் உபசரிக்கப்படுபவர் துறவறத்தாரு மாதலால், இல்லறத்தினும் துறவறம் சிறந்தது என்பது இதன்கருத்து. உபகாரஞ்செய்வது இல்லறத்தார்க்குக் கடமையாதல்போலத் துறவறத்தார்க்குத் தவஞ்செய்வது கடமையா மென அறிக. (ஈ)

உசுச. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(இ - ள்.) ஒன்னுர் தெறல்உம் - (தம் அறத்திற்குப்) பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கல்உம் - (அதனை) உவந்தாரை உயர்த்தலும், (ஆகிய இவ்விரண்டையும்), எண்ணின் - (தவஞ்செய்வார்) நினைப்பாராயின்,—தவத்தான் வரும் - (அவர்) தவவலியான் (அவை அவர்க்கு) உளவாம்; (ஈ - று.)

முற்றத்துறந்தார்க்கு ஒன்னுரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற்கு ஏற்றி உரைக்கப்பட்டது. 'எண்ணின்' என்றதனுன், அவர்க்கு அவை எண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னுர் பெரியராயினும் உவந்தார் சிறியராயினும் கேடும் ஆக்கமும் நினைந்த துணையானே வந்துதிற்கு மெனத் தவஞ்செய்வார்மேலிட்டுத் தவத்தினது ஆற்றல் கூறியவாறு.

(கு - ரை.) தம்அறம் - துறவறத்தின் அங்கங்கள். பகை-விரோதம். அதனைஉவந்தார் - துறவறமாகிய தமதுஒழுக்கத்தைக் கண்டு மகிழ்ந்தவர். உயர்த்தல் - விருத்திசெய்தல். தவவலி - தபோபலம். அவை - ஒன்னுர்த் தெறல் உவந்தாரையாக்கல் ஆகிய அவ்விரண்டும். ஒன்னுர் - பகைவர். உவந்தார் - நண்பர். உண்மை - இருத்தல். ஒன்னுர்என்பதற்கு - தமக்குப் பகைவரென்று பொருள்கூருமல் தம் அறத்திற்குப்பகைவ ரென்றும், உவந்தார்என்பதற்கு - தமக்குஉதவியரென்று பொருள்கூருமல் தம்அறத்தை உவந்தா ரென்றும் பொருள்கூறியதற்குக் காரணங் கூறியது, 'முற்றத்துறந்தார்க்கு' என்று தொடங்கிய வாக்கியம். அவர்க்கு - துறந்தவர்க்கு. அவை எண்ணுமை - சாபஅநுக்கிரகங்களைக் கருதாமை. ஆற்றல் - பெருமை. எண்ணின் - ஆலோசிக்குமிடத்து, இவ்விரண்டும் தவத்தால் வரும் என்றும் உரைக்கலாம். தன்னினும் மிகமேம்பட்டவர்களைச் சினந்து வேரோடழித்தலும் தன்னினும் மிகக்கீழ்ப்பட்டவர்களை விரும்பி மிகவிருத்திசெய்தலும் ஆகிய மேன்மை துறவறத்தார்க்கே யன்றி இல்லறத்தார்க்குக் கிடையா தென்பது கருத்து. (உ)

உசுரு. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(இ - ள்.) வேண்டிய வேண்டியஆங்கு எய்தலால் - (முயன்றால் மறுமைக்கண் தாம்) வேண்டியபயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய் தவம் - செய்யப்படுவதாய தவம், ஈண்டு முயலப்படும் - இம்மைக்கண் (அறிவுடையோரான்) முயலப்படும்; (எ - று.)

'ஈண்டு' என்பதனான், 'மறுமைக்கண்' என்பது பெற்றாம். மேற்கதி வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படா என்பதாம்.

இவை ஈரன்கு பாட்டானுங், தவத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) முயன்றால் - தவத்தைத்தொடங்கிச்செய்தால். ஈண்டு-இவ்வுலகத்தில். மேற்கதி - சுவர்க்கம்முதலிய உயர்ந்த பதவிகள். வீடுபேறு - முத்தியடைதல். எய்தப்படா - அடையப்படமாட்டா. வேண்டிய - பலவின்பாலிறந்தகால வினையாலணையும்பெயர். வேண்டியவாங்கு - வேண்டியாங்கு எனப் பெயரெச்சவீறு தொகுத்தல்விகாரம். செய்தவம் - செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த வினைத்தொகை. இல்லறத்தார்க்கு இம்மைப் பயனுகிய புகழ் எளிதிற் கைகூடுமே யல்லது மறுமைப்பயன்கள் துறவறத்தார்க்குப்போல நினைத்தபடி பெறமுடியா வென்பது இதன்கருத்து. "ஆக்கமுங் திறலுஞ் சீரு மாயவு நலனு மேலா, மூக்கமும் வீடு மெல்லாங் தவத்தினு தூற்ற மன்றே, நோக்குறுமிந்நாள் காறு நோற்கலா தினைய வெல்லாம், போக்குவ தென்னை கொல்லோ புகலுதி யிகலும் வேலோய்" என்னுங் கந்தபுராணச்செய்யுளை இங்கே அறிக. இத்திருக்குறள், இறையனாரகப்பொருளுரையில் முதற் சூத்திரவுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது. (டு)

உசுசு. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(இ - ள்.) தம் கருமம் செய்வார் - தங்கருமஞ் செய்வாராவார், தவம் செய்வார் - (துறந்து) தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் - அவரை ஒழிந்த பொருளின்பங்களைச் செய்வார், ஆசையுள் பட்டு - (அவற்றின்கண்) ஆசையாகிய வலையுட்பட்டு, அவம் செய்வார் - (தமக்குக்) கேடுசெய்வார்.

அஃதாமாய் மூவகைத்துன்பத்தினாய் உயிரின்வேறுய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாதுதவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணிமூப்பு இறப்புக்களான் அஞ்சியாகத் துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம்பிறந்து வீடுபெறு மாகலின் தவஞ்செய்வாரை 'தங்கருமஞ் செய்வார்' என்றும், கணத்துள் அழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ் செய்துகோடலின் அல்லாதாரை 'அவஞ்செய்வார்' என்றும் கூறினர். மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) கருமம் - தொழில். பொருளின்பங்கள் - அர்த்தகாமங்கள். வலையுட்பட்டு - வலையிலே அகப்பட்டுச் சிக்கிக்கொண்டு. தமக்குக் கேடுசெய்வார் - தங்கட்குத் தாங்களே கெடுதி செய்துகொள்பவர்கள். அஃதாம் -

நிலையில்லாதது; நித்யம் என்பதன் எதிர்மறை. மூவகைத் துன்பத்தகாய் - தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றிவருவனவும், தெய்வத்தைப் பற்றிவருவனவும் என்ற மூன்றவகைப்பட்டதுன்பங்களையுடையதாகி. ஒழியாது - விடாமல். பிணி - நோய். மூப்பு - முதுமை, கிழத்தனம். இறப்பு - மரணம். அஞ்தியாக - முதலில்லாமல்; நெடுங்காலமாக. ஞானம் பிறந்து - தத்துவஞானம் உண்டாகப்பெற்று. கணத்துள் - கூணப்பொழுதிலே. சிற்றின்பம் - மானவியர்முதலியோரால் இம்மைமறுமைகளில் வருகிற அற்பசுகம்; பரமபதத்துப் பெறும் நிரதிசயப்பேரின்ப மல்லாதது. டல பிறவியும் - அனேகம்பிரப்புக்களிலெல்லாம். செய்துகோடலின் - செய்து கொள்ளுதலால். அல்லாதார் - தவஞ்செய்யாதவர். பிறவித்துன்பத்தை யொழித்துப் பேரின்பத்தைத் தருதலால் தவஞ்செய்தலைத் தங்கருமஞ்செய்த லென்றும், மற்றைப் பொருளின்பங்களைக்குறித்த முயற்சிகளெல்லாம் அத்துன்பத்தை மிகுமாறுசெய்து கேடுதருதலால் தவஞ்செய்யாமையை அவஞ் செய்தலென்றங் கூறினர். கருமம் - கர்மம்; வடசொல். தவஞ்செய்தலென்னும் வினையை மாற்றித் தவஞ்செய்யாதனென்னும்வினையைத் தந்ததனால், மற்று என்னும் இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளது. ஆசையுள், உள் - எழுவாய். தவஞ்செய்பவர் நித்தியப்பொருளையடைவ ரென்பது கருத்து.

உசுஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(இ - ள்.) சுட (சுட) சுடரும் பொன் போல் (தீயின்கண் ஓடும்) பொன்னுக்கு (அது) சுடச்சுட (த் தன்னைநெகவந்த குற்றம் நீங்கி) ஒளிமிகுமாறு போல,—நோற்கிற்பவர்க்கு - தவஞ்செய்யவல்லார்க்கு, துன்பம் - (அதனால் வருந்) துன்பம், சுட சுட - வருத்த வருத்த, ஒளி விடும் - (தம்மோடுகலந்த பாவம் நீங்கி) ஞானம் மிகும்; (எ - று.)

'சுடச்சுடரும் பொன்போல்' என்றாராயினும், கருத்துநோக்கி, இவ்வாறு உரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின், 'ஒளி' * என்றார்.

(கு - சை.) ஓடும்-உருக்கிப் புடம்வைக்கப்படுகிற. அது சுடச்சுட-நெருப்புத் தபிக்கத் தபிக்க. குற்றம் - மாசு. அதனால்வருந் துன்பம் - உண்டி சுருக்கல் முதலியன. சுடச் சுடரும் பொன்போல் - நெருப்புத் தபிக்க அதனல்விளங்குஞ் சுவர்ணம்போல. ஒளி - ஞானவொளி. விடுதல் - வெளிவீசுதல்; விளங்குதல். ஒளி - பிரகாசம். பொருள்கள் - பதார்த்தங்கள். 'சுடச்சுட' எனப் பின் உபமேயத்திலே அடுக்கிநிற்பதனால், முன் உபமானத்திலும் 'சுட' என ஒன்று வருவித்து 'சுடச்சுட' என அடுக்காக உரைக்கப்பட்டது. நோற்கிற்பவர், இல் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை. புடம் அதிகமாக அதிகமாகப் பொன் மாற்றுயர்ந்து பிரகாசிப்பதுபோலத் தவவருத்தம் அதிகமாக அதிகமாகப் பெருமையுயர்ந்து மனிதர் ஞானம்பெறுவ ரென்பது இதன்கருத்து. உவமையணி; ஒளி என்பதிற் சிலேடையை அங்கமாகக் கொண்டு

* பி - மீ: எனப்பட்டது.

வந்தது. மநுஸ்மிருதியில் ஆறாவது அத்தியாயத்தில் எக - வது சுலோகத்தில் 'நெருப்பிலெரிக்கப்படுகிற பொன் முதலியவற்றின் மாசுகள் ஒழிவது போல இந்திரியங்களின் குற்றங்கள் பிராணயாமத்தால் ஒழிகின்றன' என இக்கருத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. (எ)

உசுஅ. தன்னுயிர் தானறப் பெற்றூனே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(இ - ள்.) தன் உயிர் - தன் உயிரை, தான் —, அற-(தனக்கு) உரித்தாக, பெற்றூனே - பெற்றவனே, ஏனைய மன் உயிர் எல்லாம் - அது பெறாதனவாகிய மன்னுயிர்களெல்லாம், தொழும் —; (எ - று.)

தனக்கு உரித்தாதல் - தவமாகிய தன்கருமஞ் செய்தல். அதனினூங்கும் பெறுதற்கரியது இன்மையின், 'பெற்றூனே' என்றார். 'அதுபெறாதன' என்றது, ஆசையுட்பட்டு அவஞ்செய்யும் உயிர்களே. சாபமும் அருளும் ஆகிய இரண்டு ஆற்றலும் உடைமையின், 'தொழும்' என்றார்.

(கு - ரை.) அறப் பெறுதல் - ஸ்வாதந்திரியம் நீங்கி ஐம்பொறி முதலியபிறவற்றுக்கு அதீனமாகாமல் முழுவதும் தனக்கே அதீனமாகப் பெறுதல். உரித்தாக - உரியதாக. அது பெறாதனவாகிய - தன் னுயிரைத் தான் அறப்பெறாத. ஏனைய - மற்றைய. மன் உயிர்-நிலைபெற்ற பிராணிகள். அதனின் ஊங்கு - அத்தவஞ்செய்தலினும் மேலாக. பாவஞ்செய்த எல்லாவுயிர்களையும் வீரூத்த அதிகாரிகள் உளராதலால், அந்த உயிர்களெல்லாம் அவ்வதிகாரிகட்கு உரிமைபூண்டிகிற்கும்; தன்கருமஞ்செய்யுந் துறவறத்தானுக்கோ பாவமில்லை யாதலால், தன்உயிர் தனக்கேஉரிமைபூண்டுகிற்கு மென்க. எல்லாவுயிர்களும் தன்னைபேதொழத்தக்க சாபாநுக்கிரக சக்தி தவமுடையானுக்கு உண்டா மென்பதாம். (அ)

உசுஉ. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட்ட வர்க்கு.

(இ ள்.) கூற்றம் - கூற்றத்தை, குதித்தல்உம் - கடத்தலும், கைகூடும் - உண்டாவதாம்: நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான்வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு; (எ - று.)

சிறப்பும்மை, அதுகூடாமை விளக்கிற்று; 'மன்னுயி ரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடும்' என, எச்சவும்மையாக உரைப்பினும் அமையும். ஆற்றல் - சாப அருள்கள்.

இவை நான்குபாட்டானும், தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) கூற்றத்தைக் கடத்தலும் - யாவராலுங் கடக்கமுடியாத யமனையும் அதிக்கிரமித்து விடுதலும். ஆற்றல் - திறமை. தலைப்பட்டார்-மேற்கொண்டவர்; கூடியவர். 'குதித்தலும்' என்ற உயர்வுசிறப்பும்மை, கூற்றங் கடத்தல் கைகூட லரி தென்பதை விளக்கிநின்றது. கூற்றம் - பிராணிகளுடைய உயிரையும் உடலையும் வேறுபிரித்துக் கூறுபடுத்துங் கடவுள். எச்சவும்மை - எஞ்சிநின்ற [சொல்லப்படாமற் குறைந்துநின்ற] பொருளைத் தரு

கிற 'உம்' என்னும் இடைச்சொல்; இது - இங்கே, இறந்ததுதழுவிய எச்சம். சாப அருள்கள் - சபிக்கவும் அநுக்கிரகிக்கவும் உள்ள சக்திகள். தவத்தில் தலைமைபெற்றவர்க்கு யமனேவெல்லுதலுங் கூடுதலே, மார்க்கண்டேயன் சுவேதன் முதலியோரது வரலாறுகளிற் காண்க. (கூ)

உஎ0. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(இ - ள்.) இலர் பலர் ஆகிய காரணம் - (உலகத்துச் செல்வர்கள்சில ராக) நல்கூர்வார் பலராதற்குக் காரணம் (யாதெனின் அது),—நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - தவஞ்செய்வார்சிலராக அதுசெய்யாதார் பல ராதல்; (எ - று.)

செல்வம் நல்குரவு என்பன - ஈண்டு, அறிவினது உண்மை இன்மை களேயுங் குறித்துநின்றன; என்னே? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றுராகலின். 'நோற்பார் சிலர்' எனக் காரணங்கூறிணையான், காரியம் வருவித்துரைக்கப்பட்டது.

தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமும் இல்லை எனை, இதனுன் அவ ரது தாழ்வு கூறப்பட்டது.

(கு - ரை.) நல்கூர்வார் - வறுமையாளர். இப்பாட்டினுரையிற் காட் டிய மேற்கோள் - நாலடியாரில் அறிவின்மையென்னும் அதிகாரத்தில் முதற்பாட்டி லுள்ளது; நுட்பமான அறிவில்லாமையானது தரித்திரமாம்: அப்படிப்பட்டஅறிவை யுடைமைமிகவும் வளர்ந்த பெரிய சம்பத்தாம் என்பது இதன்பொருள். 'நோற்பார் சிலர்' என்றதனுல், செல்வர்சில ரென்பது வருவிக்கப்பட்டது. ஆகிய - செய்யியவென்னும் வினையெச்சம். இக்குறள் ஏதுவின்முடித்தலென்னுந் தந்திரவுத்திக்கு உதாரணமா மென்பது, வீர சோழியவுரை. ஒருபிறப்பில் தவஞ்செய்தவர்களே மறுபிறப்பிற் செல்வ முடையவ ராவர்: அப்பிறப்பில் தவஞ்செய்யாதவரோ மறுபிறப்பிற் செல்வ முடையவராகாரென்பது கருத்து. மறுமைப்பேரின்பத்தைமாத்திரமேயன்றி இம்மைச்சிற்றின்பத்தையுந் தரவல்ல பெருமை தவத்திற்கு உண்டுஎன்பது, இதனுற் கூறப்பட்டது. (கo)

உஅ - ஆம் அதிகாரம்—கூடாவொழுக்கம்.

அஃதாவது - தாம் விட்ட காமஇன்பத்தை * உரணின்மையின் பின் னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடு பொருந் தாததாய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு, இது, தவத்தின்பின் வைக் கப்பட்டது.

(கு - ரை.) கூடாவொழுக்கம்-தகாதநடத்தை. விட்ட-நீக்கின. உரண் இன்மையின் - மனவுறுதி யில்லாமையினுல். பின்னும்விரும்புமாறு தோன்ற-மீண்டும் விரும்பும்படிதோன்ற. இக்கெட்டவொழுக்கம் தவத்திற்குத் தகாத தாதலால், இவ்வதிகாரம் தவமென்பதன்பின் வைக்கப்பட்டது.

* பி - மீ: வாதனையின்.

உஎக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(இ - ள்.) வஞ்சம் மனத்தான் - வஞ்சம்பொருந்திய மனத்தையுடைய வனது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கத்தை, பூதங்கள் ஐந்தும்-(உடம் பாய் அவனுெடுகலந்து நிற்கின்ற) பூதங்களைந்தும், (கண்டு), அகத்துஎ நகும் - தம்முள்ளே நகும்; (எ - று.)

காமம் தன்கண்ணேதோன்றி நலியாநிற்கவும் அதனது இன்மை கூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் 'வஞ்சமனம்' என்றும், அந்நலிவு பொறுக்க மாட்டாது ஒழுகுங் களவொழுக்கத்தை 'படிற்றொழுக்கம்' என்றும், உல கத்துக் களவுடையார் பிறர்அறியாமற்செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங் கள் சான்றுகலின் அவ்வொழுக்கத்தையும் அவன்மறைக்கின்ற ஆற்றையும் அறிந்து அவன் அறியாமல் தம்முள்ளே நகுதலின் 'அகத்தேநகும்' என்றுங் கூறினர். செய்த குற்றம் மறையா தாகலின், அவ்வொழுக்கம் ஆகாது என் பது கருத்து.

(கு - ரை.) வஞ்சம் - தன்னே உண்மையான தவவொழுக்கமுடைய வனைப் பிறரை யெண்ணுவிக்கவேண்டுமென்னும் எண்ணம். படிற்றொழுக் கம்-படிறுகிய வொழுக்க மென இருபெயரொட்டு; திருட்டுத்தனமான நடத் தை யென்க: படிற்றோடுகூடிய வொழுக்கமென்றல், மூன்றும் வேற்றுமை யுருபும்பயனுமுடன்தொக்க தொகையாம். பூதங்கள் ஐந்து - நிலம், நீர் முதலியன. "வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும், வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த, எங்கு முளனெருவன் காணுங்கொ லென்றஞ்சி, அங்கங் குலைவ தறிவு" எனப் பின்னேர் கூறியவாறுங் காண்க. நலியாநிற்கவும் - வருத்தவும். அதனது இன்மை - அவ்வாசையினது இல்லாமை. அந்நலிவு - காமவருத்தம். களவுடையார் - வஞ்சகர். ஐம்பெரும் பூதங்கள் - பஞ்சமகாபூதங்கள். நகும் - பரிகசித்துச்சிரிக்கும். ஐந்தும், உம் - முற்றும்மை; இறந்ததுதழுவியஎச்சவும்மையாகக்கொண்டு, புறத்துள்ளார் வெளிப்படையாக நகைசெய்வதுமன்றி யென்பது குறைந்துநின்ற தெனி னும் அமையும். பஞ்சபூதங்களும் அறிந்திடச் செய்யுந் தீமையைப் பிற ரறியாரென்று கருதும் பேதைமையை நோக்கி அப்பஞ்சபூதங்கள் அவன் தானும் அறியாவகை தமக்குள்ளே நகுமென்க. 'அஞ்சும்'என்று போலியான பாடம், எதுகைநயத்துக்குச் சிறக்கும். (க)

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(இ - ள்.) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - (ஒருவனுக்கு) வான்போல் உயர்ந்த தவவேடம் என்னபயனைச் செய்யும்? தான் அறி குற் றம் - தான் குற்றமென்று அறிந்த அதன்கண்ணே, தன் நெஞ்சம் - தன் நெஞ்சு, படின் - தாழுமாயின்; (எ - று.)

'வானுயர்தோற்றம்' என்பது, "வான்றோய்குடி" என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாதுசெய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றம் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்திற்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை யென்பதாம்.

(கு - ரை.) வான்போல் உயர்ந்த - ஆகாயம்போல உயர்ச்சிபெற்ற. தவ வேடம் - தவத்துக்கு உரிய வேஷம்; வேடம் - வெளிக்கோலம். அதன்கண் - கூடாவொழுக்கத்தில்; காம வின்பத்தில். தாழும்-இறங்கும்: தங்கும்; இழிவு பெறும். இலக்கணவழக்கு-லக்ஷணப்ரயோகம்; அஃதாவது-ஒருசொல் உரிய பொருளைவிட்டு அப்பொருளுக்கு இனமானபொருளை உணர்த்துவது: இங்கே 'வானுயர்தோற்றம்' என்பது - ஆகாயத்தின்உயர்ச்சிபோல மேன்மைபெற்ற காட்சி யெனப் பொருள்பட்டதனால், இங்ஙனங் கூறப்பட்டது. "வான்தோய்குடி" என்னும் மேற்கோள், நாலடியாரில் குடிப்பிறப்பு என்னும் அதிகாரத்தில் இரண்டாஞ்செய்யுளில் உள்ளது; அதற்கு - உயர்ச்சியால் ஆகாயத்தை அளாவிய நற்குலமென்று பொருள்; கீர்த்தியால் மேலுலகத்தை அளாவிய குடியென்றும் பொருள்கொள்ளலாமாதலால், இங்கே 'வானுயர் தோற்றம்' என்பதற்கும் - புகழினால் தேவலோகமட்டுமுயர்ந்த துறவறவடிவ மென்றுமாம். கழுவப்படாமையின் - பிராயச்சித்தம் முதலியவற்றால் ஒழித்துப் பரிசுத்தமாகச் செய்யப்படாமையால். புறத்தார் - அயலார். வெருட்டுதல் - அஞ்சச்செய்தல். 'தெரியாமற்செய்த குற்றத்திற்குமாத்திரமே பரிகாரம் உண்டு; தெரிந்துசெய்ததற்கோ அது இல்லை' என்பது, தருமசாஸ்திரக் கொள்கை. அறிகுற்றம், உயர்தோற்றம் - வினைத்தொகைகள். (உ)

உஎந. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(இ - ள்.) வலி இல் நிலைமையான் வல் உருவம் - (மனத்தைத் தன் வழிப்படுத்தும்) வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார்வேடத்தைக்கொண்டு (தான்) அதன் வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்து அற்று - பசு(காவலர் கடியாமல்)புலியின் தோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும்; (எ - று.)

இல்பொருளுவமை. "வலியினிலைமையான்' என்ற அடையானும், 'மேய்ந்தற்று' என்னுந் தொழிலுவமையானும், 'வல்லுருவத்தோடு மனவழிப்படுதல்' என்றது பெற்றமும். காவலர் கடியாமை - 'புலி புல் தின்னாது' என்பதனாலும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன், அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமை யாயிற்று. இவ்வாறு தனக்கு உரிய இல்லாளையுந் துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங் கொண்டு நின்றவன் மனவழிப்படுதலாவது - தன்மனம் ஓடியவழியே ஓடி ம்றைந்து பிறர்க்குஉரிய மகளிரை விழைதலாம்; அவ்வாறுதல், 'பெற்றம் தனக்கு உரிய புல்லே விட்டுப் பிறர்க்கு உரிய பைங்கூழை மேய்ந்தாற்போலும்' என்ற உவமையான் அறிக.

(கு - ரை.) வலி - இந்திரியங்கிரகசக்தி. இல்நிலைமை - பண்புத் தொகை. அதன் வழிப்படுதல் - (தவநெறியைவிட்டு விலகி) மனம் போன வழியிலே நடத்தல். வலியையுடையாரது உருவம், இங்கு 'வல்லுருவம்' எனப்பட்டது. உருவம் - ரூபம் என்ற வடமொழியின் திரிபு. பசு, இயற்கையில் வலிமையில்லாதது. காவலர் கடியாமல்-பயிரைக்காத்துக்கொண்டிருப்பவர்கள் தன்னை அதட்டி ஓட்டாமல் அஞ்சிஓடிப்போம்படி. புலி, இயற்கையில் வலிமையுடையது. அடை - விசேஷணம்; அடுத்துவருவது: இதனால் அடுக்கப்படும் மொழி, அடைகொளி எனப்படும்; அது - விசேஷ்யம். தொழிலுவமை - செய்கை பற்றிவந்த உபமானம். 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது' என்பது, பழமொழி; "பல்பொறிய, செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம், பைங்கட் புனத்த பைங்கூழ்", "இடுக்கண் தலைவந்தக் கண்ணு மரிமா, கொடிப்புற் கறிக்குமோ மற்று" என்பனவுங் காண்க. அன்ன-அத்தன்மையனவான. அயிராமை - (தவத்தவர் காமம்முதலான சென்பதனாலும், அவர்களிடத்துப் பயத்தாலும் அவர்களது ஒழுக்கவிஷயத்திற்) சந்தேகப்படாமை. இல்லாள் - மனைவி. விழைதல் - விரும்புதல். இவ்வாறுகூறவே, மனமடங்கப்பெறாதவன் மனமடங்கினவர்வேடத்தைப் பூண்டு அவர்க்குரிய விரதாநுஷ்டானங்களை விட்டு இல்லறத்தார்க்கு உரிய சிற்றின்பங்களை அநுபவித்தல், பசு புலித்தோலைப்போர்த்து அதற்குரியஊனைத் தின்னுமல், பிறர்க்குரிய பயிரை மேய்ந்ததுபோலு மென்பதாம். பசுவை 'பெற்றம்' என்பது - கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டனுள் தென்பாண்டிநாட்டினின்று செந்தமிழில்வந்துவழங்கிய திசைச்சொல். இவ்வுவமையை மாற்றி வில்லிபுத்தூராழ்வார் "நின்று பெருந் தவமுயல்வோர் தாங்கள் கொண்ட நினைவொழியப் புறத்தொன்று நினைவ ரோசொல், பொன்றிடினு மீயறியப் பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வரோ புரிவி லாதார்" எனக் கூறியிருக்குமாற்றையும் அறிக. (கூ)

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ - ள்.) தவம் மறைத்து அல்லவை செய்தல் - (அவ் வலியில்நிலைமையான்) தவவேடத்தின்கண்ணே மறைத்துநின்று தவமல்லவற்றைச் செய்தல்,—வேட்டுவன் புதல் மறைத்து புள் சிமிழ்த்து அற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைத்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும்; (எ - று.)

தவம் - ஆகுபெயர். தவமல்லவற்றைச்செய்தலாவது - பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்து ஆக்குதல்; இதுவும், இத்தொழிலுவமையான் அறிக.

(கு - ரை.) வலியில்நிலைமையான் - மனமடங்காதவன். தவமல்லவற்றை - பாவத்தொழில்களை. வேட்டுவன் - வேடன்; வேடுஎன்னுந் தொழிலையுடையவன்: வேடு, வேட்டை, வேட்டம் என்பன - ஒருபொருளன; அஃதாவது - மிருகங்களையும் பறவைகளையும் பிடித்தலும் கொல்லுதலும். புதல்-செடியடர்த்தி; இதுவே ஈற்றுப்போலியாய்ப் புதர் எனவும் வழங்கும். புட்

கள் - பறவைகள். பிணித்தல் - பிடித்தல். தவம் - தவவேடத்தை யுணர்த்தியதனால், ஆகுபெயர்; ஒன்றன்பெயர் மற்றொன்றற்கு ஆகுகிற பெயர், ஆகுபெயர். தன் வயத்து ஆக்குதல் - தன்வசப்படுத்திக்கொள்ளுதல். "கேட்டியா லத்தணை கேடிலா வெம்பி ரான்றன், மாட்டொருசிறிதமன்பு மனத்திடை நிகழ்ந்த தில்லை, காட்டுறு புள்ளின் சூழல் கவருவான் புதன்மேற் கொண்ட, வேட்டுவ னியல்போன் மேலோன் வேடநீகொண்டதன்மை" என்னுங் கந்தபுராணச்செய்யுளுக்கு ஏற்ப, புதல் மறைத்து என்பதற்கு - தான் மேற்கொண்ட புதரிலே மறைந்திருந்து என்றுங் கருத்துக்கொள்ளலாம்; தழைகளை அடர்த்தியாகக் கூண்டுபோலக் கட்டி அதனுள்ளே தான் மறைந்து நின்று அதனைச்சுமந்துசென்று அதனை உண்மையான புதலென்று கருதி அதில்வந்துசேரும் பறவைகளைப் பிடித்தல் வேடனியல்பு. (சு)

உஎடு. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.

(இ - ள்.) (தம்மைப் பிறர் நன்குமதித்தற்பொருட்டு), பற்று அற்றேம் என்பார் - (யாம்) பற்று அற்றேம் என்று சொல்வாரது, படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கம்,—(அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமாயினும்), எற்று எற்று என்று - (பின்) 'என்செய்தேம்! என்செய்தேம்!!' என்று(தாமே) இரங்கும்வகை, (அவர்க்கு), ஏதம் பலவும் தரும் - பலதுன்பங்களையும் கொடுக்கும்; (எ - று.)

சொல்லளவல்லது பற்று அறுமையின் 'பற்றற்றே மென்பார்' என்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன்விளைவின்கண் 'அந்தோ! வினையே' என்று * அழுவா ராகலின் 'எற்றெற்று' என்றுங் கூறினர்.

இவையைந்துபாட்டானும், கூடாவொழுக்கத்தின் இழுக்கங்கூறப்பட்டது.

(கு - ரை.) பற்று அற்றேம் - ஆசைகளை முழுதும் நீங்கினேம். படிற்றொழுக்கம் - திருட்டுநடத்தை. எற்று - எப்படிப்பட்டது; வினைவடியாப் பிறந்த ஒன்பன்பாற்குறிப்புமுற்று; அடுக்கு, இரங்கல்பற்றியது. அதன்விளைவின்கண் - அப்பாவத்தின்பயனை அநுபவிக்கநேருங்காலத்து. அந்தோ - ஐயோ! வினையே - கருமமே. "அந்தோவினையேயென் றழுவாட்கண்டும், நண்ணன்மின்செல்வ நமரங்காணல்லறமே நினைமின்கண்டீர்" என்பது,சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உள. இழுக்கம் - குற்றம். கூடாவொழுக்கம் தாமே அநுதாபப்படுவதற்குக்காரணமாமாதலால், விலக்கத்தக்கது என்றவாறு.

உஎசு. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணு ரில்.

(இ - ள்.) நெஞ்சின் துறவார்-நெஞ்சால் பற்றறுதுவைத்து, துறந்தார் போல் - பற்றற்றார்போன்று, வஞ்சித்து - (தானஞ்செய்வாரை) வஞ்சித்து,

* பி - மீ: அழுங்குவார்.

வாழ்வாரின் - வாழுமவர்போல, வன்கணர் - வன்கண்மையை யுடையார், இல் - (உலகத்து) இல்லை; (எ - று.)

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது - 'யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னது ஈதும்' என்று அறியாதுஈந்தாரை அதுகொண்டு இழிபிறப்பின ராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் ''அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினு லலறு முந்நீர்த், தடங்கட னடுவுட் டீவு பல வுள வவற்றுட் டோன்றி, யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்தனி மாந்தி வாழ்வர், மடங்கலஞ் சீற்றத்துப்பின் மானவேன்மன்னரேறே'' என்பதனுன் அறிக. தமக்குஆவனசெய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், 'வன்கணரில்' என்றார்.

(கு - ரை.) நெஞ்சின் - ஐந்தாம்வேற்றுமை, கருவிப்பொருள்; கருவிப் பொருளும் ஏதுப்பொருளி லடங்கும்: இனி, ஏழாம்வேற்றுமைச் சினையிடமான பிறிதின்கிழமையாக்கொள்ளினும் அமையும். தானஞ்செய்வார் - இல்லறத்தார். வஞ்சித்து - மயக்கி. வன்கண்மை - கொடுமை. இவ்வருந்தவர் - பிறர்செய்தற்குஅருமையான தவத்தைச் செய்துள்ள இவர்கள். இன்னது ஈதும் - இப்பொருளைத் தானஞ் செய்வோம். அதுகொண்டு - அதனுல்; அல்லது, அவர்கொடுத்த அப்பொருளைத் தாம் பெற்றுக் கொண்டு. இழிபிறப்பினராக்குதல் - அவர்கட்கு ஒருநற்பயனுமில்லாமற்செய்தலுமன்றி அவர்களை இழிவான பிறப்பை அடைபவராகவுஞ் செய்தல். ''அடங்கலர்க்கு'' என்னும் மேற்கோள் - சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், தானப்பயன், பதினுன்காம்பாட்டு: இது, கொடியவர்க்கீந்த தானத்திற்குப் பயன்கூறுகிறது: இதற்குப் பொருள் - சிங்கம்போன்ற கோபத்தையும் வலிமையையும் பெருமையையுடைய வேலாயுதத்தையு முடைய அரசர்கட்குச் சிங்கம்போன்றவனே! ஐம்பொறிகளுமடங்காதவர்கட்கு ஒருவர் தானஞ்செய்தால் அவர்கள் கொடுத்த தானத்தின் பயனுலே ஒலிக்கின்ற மூன்று நீரையுடைய பெரிய கடலினிடையே யுள்ள பலதீவுகளிலே மக்களுடம்பும் விலங்கின்முகமுமாய் உருவேறுபட்டுத் தோன்றி உதிர்கிறகனியையுண்டு வாழ்வ ரென்பதாம். ஆவனசெய்தார்-உபகாரஞ்செய்தவர்கள். ஆகாதன விளைத்தல் - அபகாரஞ்செய்தல். ''எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு''என்றதில் நன்றிமறத்தலின் கொடுமை கூறப்பட்டுள்ளது: 'அந்நன்றிமறத்தலோடு ஈன்மைசெய்தார்க்குத்தீமையுஞ் செய்கின்ற இவர்கள்கொடுமைக்கு எல்லையில்லை'என்பார் 'வன்கணரில்' என்றார்.

உளை. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(இ - ள்.) குன்றி புறம் கண்டு அனையர் ஏன்னும்-குன்றிமணியின் புறத்தைக் கண்டாற்போல வேடத்தாற் செம்மையுடைய ராயினும், குன்றி மூக்கின் அகம் கரியார் - அதன்மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை, உடைத்து—, (உலகம்); (எ - று.)

குன்றி - ஆகுபெயர். செம்மை, கருமை என்பன - பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்தினும் அறியாமையினும் சென்றன வாயினும், பண்பாதல் ஒத்தலின், இவை பண்புவமை; ''கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமே'' என்பதும் அது.

(கு - ரை.) புறம் மேலிடம். குன்றியென்னுங் கொடியின்பெயர், அதன் மணியைக் குறித்ததனால், பொருளாகுபெயர். பொருளின்கண்-உபமேயத்தில்; தவநெறிநின்றவர்கள்பக்கல். செப்பம் - நல்லொழுக்கம். பண்பு - குணம். ''கூழின்மலிமனம்'' என்னும் மேற்கோள் - திருச்சிற்றம்பலக்கோவையார், ஊஉ - ஆஞ் செய்யுளி லுள்ளது; (பரமசிவனது திருச்சிற்றம்பலத்தை விரும்பாத) உணவாற் செருக்கும் மனம்போல ஒருகாலக்கொருகால் நிறம் பெற்று இருளுகின்றகுயில்களென்று பொருள். மேற்கோளில்'இருளாகின்ற' என்பது-உபமானத்திற்கு அஜ்ஞானமடைகின்ற என்றும், உபமேயத்திற்குக் கறுக்கின்ற என்றுஞ் சிலேடையாகப் பொருள் தந்ததுபோல, இப்பாட்டில் 'காரியார்' என்பது - உபமானத்துக்குக் கருநிறமடைத்தவரென்னும் பொருளையும், உபமேயத்துக்கு அஜ்ஞானமடைந்தவரென்னும் பொருளையுங் கொடுத்தது; சிலேடைபற்றி வந்த உவமையணி. உலகத்தில் உள்ளும் புறமும் ஒத்த துறவறத்தவர் சிலரே, வெளியிற் காஷாய தண்டமுதலிய வேஷங்களோடு கூடி மனத்திற் கெட்ட எண்ணமுடையவர்களோ பலர் என்பது இதன் கருத்து. எனும் - எனினும் என்பதன் மரூஉ. (எ)

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(இ - ள்.) மாசு மனத்தது ஆக-மாசு (தம்) மனத்தின்கண்ணதாக, மாண்டார் - (பிறர்க்குத் தவத்தான்) மாட்சிமையுடையராய், நீர் ஆடி - நீரின் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் - (தாம் அதன்கண்ணே) மறைந்து செல்லும், மாந்தர்—, பலர் - (உலகத்துப்) பலர்; (எ - று.)

மாசு - காம வெகுளி மயக்கங்கள்: அவைபோதற்கு அன்றி மாண்டா ரென்று பிறர்கருதுதற்கு நீராடுதலான், அத்தொழிலை அவர்மறைதற்கு இடனாக்கினார். இனி, 'மாண்டார்நீராடி' என்பதற்கு, மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையராய் என்று உரைப்பாரு முளர்.

இவை மூன்றுபாட்டானும் அவ்வொழுக்கமுடையாரது குற்றமும், அவரை அறிந்து நீக்கல்வேண்டு மென்பதும் கூறப்பட்டன.

(கு - ரை.) மாசு - குற்றம். மாண்டார்-மாட்சிமையுடையோர் என்னும் பொருளில், மாண் என்னும் பண்படி - பகுதி. நீர் ஜலத்தைக்குறிக்கும் போது, நீரம் என்னும் வடமொழியின் திரிபென்ப; குணத்தைக் குறிக்கும் போது, நீர்மையென்னும் பண்புப்பெயரின் விகாரம். அதன்கண்ணே - அத்தவவேஷத்திலே. மயக்கம் - அவித்யை. அவை போதற்கு அன்றி - அக்குற்றங்கள் நீங்குதற்கு அல்லாமல். மாண்டாரென்று - சிறந்ததவவொழுக்கத்தாரென்று. மாட்சிமை - பெருமை. நீர்மை - குணம். மனத்தது - ஒன்றன்பாற்

குறிப்புவினையாலணையும்பெயர். உள்ளத்திலழுக்கிருக்க அதனை யொழிக்கா மல் மறைக்கும்பொருட்டு உடலழுக்கைக் கழுவி வெளிவேஷம் போடுஞ் சங்கியாசிகள் பலரென்பது, இதன்பொருள்: அன்னாரையறிந்து நீக்கவேண்டு மென்பது, கருத்து. (அ)

உஎக. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(இ - ள்.) கணை - அம்பு, கொடிது - (வடிவாற் செவ்விதாயினும் செய லாற்) கொடிது: யாழ் கோடு செவ்விது - யாழ் கோட்டால் (வளைந்ததாயி னும் செயலாற்) செவ்விது; ஆங்கு அன்ன - அவ்வகையே தவஞ்செய்வா ரையும் கொடியர் செவ்வியர் என்பது, வினை படு பாலால் கொளல் - (வடி வாற் கொள்ளாது அவர்)செயல் பட்ட கூற்றானே அறிந்து கொள்க; (எ-று.)

கணைக்குச் செயல் - கொலை. யாழுக்குச் செயல் - இசையால் இன்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயின் கொடியரெனவும், அறமாயின் செவ்வியரெனவும் கொள்க என்பதாம்.

இதனுள், அவரை அறியுமாறு கூறப்பட்டது.

(கு - பை.) அம்பு - பாணம். வடிவால்-உருவத்தினால். செவ்விது நே ர்மையுடையது; கோணுதலில்லாதது. கொடிது - பிறர்க்குத்துன்பத்தருவது. யாழ் - வீணை. கோடு - வீணைதண்டம். செவ்விது - பிறர்க்குஇன்பத்தருவது. அன்ன - கொடுமையுடையராதலும் செம்மையுடையராதலு மாகியவற்றை. அவர்செயல்பட்டகூற்றான் - அவர்களது தொழில்நடந்தவகையால். உலகத் தில் வேஷத்தால் நல்லவர்களாய் ஒழுக்கத்தால் தீயவர்களும், வேஷத்தால் தீயவர்களாய் ஒழுக்கத்தால் நல்லவர்களும் இருத்தல் கூடும்; ஆதலால், அவ ரவரது செய்கையைக்கொண்டல்லாமல் வேஷத்தைக்கொண்டே உயர்வு தாழ்வுகளை நிச்சயிக்கலாகாது என்பது, இதன்கருத்து. இதனை 'கணைகொ டிது யாழ்கோடு செவ்விது' என்னும் உவமையால் விளக்கினர். கொடிது, செவ்விது என்பவற்றில் இரண்டுபொருள் கொள்ளப்பட்டன: சிலேடை. கொடியாழ்-குற்றியலிகரம். செவ்விது-ஒன்றன்பாற்குறிப்புமுற்று. ஆங்கு-உவமவுருபு; இடைச்சொல். அன்ன - பலவின்பாற்குறிப்புவினையாலணை யும்பெயர். கொளல் - உடன்பாட்டு வியங்கோள். (கூ)

உஅ0. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(இ - ள்.) (தவஞ்செய்வார்க்கு),—மழித்தல்உம் - (தலைமயிரை) மழித்த லும், நீட்டல்உம் - சடையாக்கலும், (ஆகிய வேடமும்), வேண்டா—: உலகம் பழித்தது ஒழித்துவிடின் - உயர்ந்தோர் (தவத்திற்கு ஆகாது என்று) குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின்; (எ - று.)

* பறித்தலும் மழித்தலுள் அடங்கும். 'மழித்தல்' என்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர்.

* பறித்தலும் மழித்தலுளடங்குமென்றவாக்கியம் சிலபிரதியிலில்லை.

இதனுன், கூடாவொழுக்கம் இல்லாதார்க்கு வேடமும் வேண்டா என அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) மழித்தல் - மொட்டையடித்தல்; சிரைத்தல். உலகம்பழித்தது - காமம். கடிந்துவிடின் - நீக்கிவிடுவாராயின். துறவடையுங்காலத்துத் தலைமயிரைச் சிரைப்பித்துக்கொள்ளாமல் ஒவ்வொன்றுகப்பிடுங்கியெடுக்கச் செய்தல், ஜைநமதசம்பிரதாயம்; இதனையும் அடக்கும்பொருட்டு, 'பறித்தலும் மழித்தலுள் அடங்கும்' என்றார். அவர்கள் மயிர்பறித்தலை ''மணியியல் ஈப்பிடச் சிவக்கும் வாணுத, லணியிருங் கூந்தலை யளவை மார்கடாம், பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்னரூற், றுணிபொருள் சித்தியாத் துறத்தல் மேயினர்'' என்னுஞ் சீவகசிந்தாமணியாலும் அறிக. வேண்டா - வேண்டும் என்னும் வியங்கோளின் எதிர்மறை; செய்வினை செயப்பாட்டு வினைப் பொருளில்வந்த எதிர்மறைப்பலவின்பால் வினைமுற்றெனவுங் கொள்ளலாம். பழித்தது - இறந்தகாலவினையாலணையும்பெயர். தவவிரோதமானசெயல் கனா அகத்தில் விட்டிட்டவர்க்குப் புறத்தில் வேடம் வேண்டுவதில்லை யென்பது, இதன் கருத்து. மழித்தலும் நீட்டலும் என்பன - காஷாயம் தண்டம் முதலிய மற்றைத்தவவேடங்கட்குமு உபலக்ஷணம். (கo)

உக - ஆம் அதிகாரம்—கள்ளாமை.

அஃதாவது - பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடொத்தலின், 'கள்ளாமை' என்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையான் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின், அதனைக் கருதியவழியும் பெரியதோர் இழுக்காம் ஆகலின், இது, துறவறமாயிற்று. புறத்துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தேபோந்து * பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி அதுதன்னையும் வஞ்சித்துக் கொள்ள்க்கருதுதல் அவர்க்குப் பெரியதோர் இழுக்காதல் அறிக. இவ்வாறு 'வாய்மை' முதல் 'கொல்லாமை' ஈறுய நான்குஅதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றிநிகழுங்குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது, காமம்பற்றிநிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

(கு-ரை.) கள்ளாமை-திருடினையாமை. தமரோடு-தம்மவர்களுடன்; சுற்றத்தார் நண்பர் முதலியோருடனே. கோடற்கு - கொள்ளுதற்கு. அங்ஙனங் கொள்ளினும்-வஞ்சித்துப்பெற்றாலும். அதனை-களவை. புறத்து-வெளியில்; தவத்தையொழிந்த விஷயாந்தரங்களில். ஒருதலைப்பட்டு-ஒன்றினிடத்தேபற்றியிருந்து. நோக்கற்பாலதாய-கருதவேண்டுவதான. அஃது ஒழிந்து - அந்நல் நெறியைவிட்டு. புறத்தே போந்து - வெளியிலே சென்று. பஃறலைப்பட்டு -

* பி - மீ: பலதலைப்பட்டு.

பலவிடயங்களிலும் அகப்பட்டுக்கொண்டு. உடம்பின்பொருட்டுப் பொருளே நோக்குதல் - தம்முடலைப்பாதுகாக்கும்பொருட்டுச் செல்வத்தை வேணுமென்று கருதுதல்: இங்ஙன்பொருளே வேண்டுமென்று கருதுதலே, இழுக்காம். அதுதன்னையும் - தம்முடம்பைக் காக்கும்பொருட்டு வேணுமென்று கருதவுங் கூடாத அப்பொருளையும். பெரியதோர் இழுக்கு - பெருங்குற்றம். வாய்மைமுதல் கொல்லாமைமீறிய - வாய்மை வெகுளாமை இன்னுஞ் செய்யாமை கொல்லாமை என்கிற. களவு, பொய்பேசுதல், வெகுளுதல், கொடுந்தொழில், கொல்லுதல் என்னுமிவற்றைச் செய்தவிடத்து இல்லறத்தார்க்குக் குற்றமுண்டாம்; துறவறத்தார்க்கோ இவற்றை நினைத்தமாத்திரத்தில்தானே பெருங்குற்றம் நேரும்; அதனால், கள்ளாமைமுதலிய இவ்வதிகாரங்கள் இல்லறவியலில் வைக்கப்படாமல் துறவறவியலில் வைக்கப்பட்டன என்றும், இவற்றுக்கு இக்குற்றங்களைச் செய்யநினையாமையென்று பொருள்கொள்ளவேண்டியதாயிற்று என்றுங் கூறியதாயிற்று. ஒருவன் உறவினருடனே சண்டையிட்டு விடமுண்டுசாவேன் என்னும் மனமுடையவனுய் நஞ்சுகூட்டி வைத்து விலக்குவாரில்லாதபொழுது உண்பேனென்று நின்றவிடத்து அருளுடையாளனொருவன் அதனைக்கண்டு இவன் இதனையுண்டு இறவாதபடி கொண்டுபோய்க் கொட்டிவிடுவேனென்று அவன்காணுமல் கொண்டுசொரிந்திட, அவனும் ஐனநீக்கத்தில்நஞ்சுண்டுசாகச்சென்றவன் அதுகாணுஞ்சாவுநீங்கினுனுகு மாதலால், அவன் அக்களவினுற் பிறனைப்பிழைப்பித்தமையால் நற்கதியிற் செல்வான்; இதுபோன்ற களவுகள் இல்லறத்தார்க்காயின் நன்மை பயப்பனவாம்: ஆதலால், கள்ளாமை துறவறத்தில் வைக்கப்பட்டதென்க.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

(இ - ள்.) எள்ளாமை வேண்டுவான் என்பான் - (வீட்டினை) இகழாது விரும்புவான் (இவன்) என்று (துவத்தோரான்) நன்குமதிக்கப்படுவான்,— எனைத்து ஒன்றுஉம் கள்ளாமை - யாதொருபொருளையும் (பிறரை) வஞ்சித்துக் கொள்ளக்கருதாவகை,தன் நெஞ்சு காக்க-தன்நெஞ்சினைக் காக்க;(எ-று.)

'எள்ளாது' என்னும் எதிர்மறைவினையெச்சம், 'எள்ளாமை' எனத் திரிந்துநின்றது. வீட்டினை இகழ்தலாவது - காட்சியே அளவையாவது என்றும், நிலம் நீர் தீ வளி எனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சிவிசேடத்தால் தோன்றிப் பிரிவால் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு-மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டு அழியுமென்றும், இறந்த உயிர் பின்பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவன வென்றுஞ் சொல்லும் உலோகாயதம் முதலிய சமயத்து மயக்கநூல்களைத் தெளிந்து அவற்றிற்கு ஏற்ப ஒழுகுதல். ஞானத்திற்கு ஏதுவாய மெய்த்தூற் பொருளேயேனும் ஆசிரியனை வழிபட்டுஅன்றி அவனை வஞ்சித்துக்கொள்ளின், அதுவும் களவாம் ஆகலின், 'எனைத்தொன்றும்' என்றுர். 'நெஞ்சு கள்

ளாமற் காக்க' எனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதல் என்பது பெற்றாம்.

(கு - ரை.) வீட்டினை - முத்தியுலகத்தை. காக்க - பாதுகாக்கக்கடவன்: அடக்கக்கடவன். 'இப்பாட்டில் எள்ளாமை யென்பதை, தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின்வினையையும் கொண்டு முடிதற்கு ஏற்ற முக்காலத்துக்கும்பொதுவான எள்ளவென்னுஞ் செயவெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளலாகாது; தன்கருத்தாவின் வினையைமாத்திரமே கொண்டு முடிதற்கு ஏற்ற இறந்தகால மாகிய எள்ளி என்னுஞ் செய்தெனெச்சத்தின் எதிர்மறையாகக் கொள்ளவேண்டும்: ஏனெனில், வேண்டுவா னென்னும் தன்கருத்தாவின்வினையைக் கொண்டுமுடிதலால்' என்பார், 'எள்ளாது என்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமை யெனத் திரிந்துநின்றது' என்றார்; இதனை ''பெயரெஞ்சுகிளவியும் வினையெஞ்சுகிளவியும், எதிர்மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியா'' என்னுந் தொல்காப்பிய வினையியற் சூத்திரத்துச் சேனாவரையருரையை நோக்கி உணர்க: இதனால், எள்ளாமை யென்பது தன்வினைமுதல்வினையையும், கள்ளாமை யென்பது பிறவினைமுதல்வினையையுங் கொண்டு முடிதலாகிய வேறுபாட்டையுங் காண்க. இனி, இவற்றை எதிர்மறைத் தொழிற் பெயராகக் கொண்டு, பிறராலிகழப்படாமையைவிரும்புபவனென்பவன் யாதொன்றையுங் களவுசெய்யாமையாகிய அறத்திலே தன்மனத்தை நிலைநிறுத்துக என்று பொருள்கொள்ளலுமாம். எள்ளாமை என்னும் வினைக்கு, வீட்டினை என்னும் செயப்படுபொருள் வருவித்துக்கொண்டார். வேண்டுவான் - வகரவிடைநிலை, காலமுணர்த்தாமல் தன்மையுணர்த்திற்று. என்பான் என்ற பெயர், சிறப்புத்தோன்ற நின்றது. காக்க - வியங்கோள். 'காட்சியே' என்பதுமுதல் 'சொல்லும்' என்றதுவரையில் லோகாயதமதசித்தாந்தம். லோகாயதம் என்பது, புறச்சமயங்களுள் ஒன்று. அம்மதத்தார்க்குச் சார்வாகர் என்றும், பார்ஹஸ்பத்யர் என்றும் பெயர்கள் உண்டு. அவர்கள் மதத்தில் பிரதியக்ஷமொன்றே பிரமாணமாக அங்கீகரிக்கப்படுகிறது; மற்றை அநுமானம்முதலியன ஒப்புக்கொள்ளப்படுகின்றனவில்லை. அவர்களுட்பெரும் பாலார் ஆகாயத்தைத் தனியே ஒருபூதமாக எண்ணுவதில்லை; மற்றைநான்கு பூதங்களின் அபாவத்தையே ஆகாசமாகக்கருதுவர். வெற்றிலைபாக்குச் சுண்ணும்புகளின் சேர்க்கையால் ஒருவகைச்செம்மைநிறம் உண்டாவது போலப் பிருதிவிமுதலிய நான்குபூதங்களின் சேர்க்கையாலே அவற்றின் காரியமாகிய உடம்பில் உணர்ச்சி உதிக்கு மென்பார்கள்; அதுவே அவர்கட்கு ஆத்மாவாகும். இங்ஙனம் உயிர் உடம்பினின்றும் வேறுபட்டதாதையாலே, பிராணவாயு பிரிதலா லிறந்து எரிக்கப்பட்டாவது புதைக்கப்பட்டாவது அழிந்துபோன உடம்பு மீண்டும் பிறக்கமாட்டாது என்று கூறி, மறுபிறப்பைமறுப்பார்கள்;மயில்கள் இயற்கையிலே அழகியனவாயிருப்பனபோலவும், குயில்கள் இயல்பிலே இனிமையாகக்கூவுவனபோலவும் பிராணிகட்குச் சுவபாவத்திலேயே இன்பம் ஏற்படுகின்றது என்பதும், தன்பழமும் இப்

படிப்பட்டதேயென்பதும்அவர்கொள்கை. அவர்கள்சித்தாந்தத்தில் சுவர்க்கம் நரகம் பரமபதம் முதலிய பரலோகங்கள் கிடையா; இவையெல்லாம் மூடர் களாற் பிறரை மயக்கும்பொருட்டு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன என்பர். வயிறுநிரம்பத் திருப்தியாக நல்லுணவுகளே உண்பதும், பதினாறு பிராய முள்ள இளமங்கையரைச் சேர்தலும், மூடிப்பமூடித்துப் பூசுபூசி உடுப்ப உடுத்தலுமே அவர்கட்குச் சுவர்க்கம்; சத்துருக்களாலும் வியாதி முதலியவற் றாலும் வருந்துவதே நரகம்; மரணமே மோக்ஷம். இவ்வாறு யாவரும் எளிதில் இனியதென்று ஒப்புக்கொள்ளும்படி சொல்லி லோகத்திற் பரவிய மதமா னதுபற்றியே, இதற்கு, லோகாயத மென்று பெயர். 'முதலிய' என்றதனால், ஜைநம், பௌத்தம், நையாயிகம், வைசேடிகம், சாங்கியம், மாயாவாதம், பாஸ் கரம், ஏகாநயம் முதலியன கொள்க. இம்மதங்களின் சொரூபம் இத்தன்மை யதென்பதை வடமொழியிற் பிரஸ்தாநத்ரயபாஷ்யங்களிலும், சங்கராசாரியரால் இயற்றப்பட்ட ஸர்வஸித்தாந்தஸங்க்ரஹமென்னும் நூலிலும் பரக்கக்காண லாம். தமிழிற் சிவஞானசித்தியாரும், அதனுரையும் முதலியவற்றிற் சுருக்க மாகக் கூறப்பட்டுள்ளன. நம்பிள்ளையென்கிற பூர்வாசாரியர் மூப்பத்தாறாயிரப் படியென்கிற திருவாய்மொழியியாக்கியானத்தின் முதலில் "லோகாயதிகன், 'ப்ருதிவ்யாதிபூதங்கள் நாலினுடைய கூட்டாவாலேசைதந்யமென்று ஒரு தர்மம் பிறக்கும்; அதுக்கு உண்டான சுகதுக்கங்கள் ஸ்வர்க்கநரகங்கள்; அவற் றினுடைய பிரிவிலே சைதந்யம் நசிக்கும்; அவ்வருகு ஒன்றுமில்லை' (என்றான்) என்பது அவனுடையசித்தாந்தம்" என்று தொடங்கிச் சுருக்கமாகவும் தெளி வாகவும் அருளிச்செய்திருக்கிறார். காட்சியே அளவையாவது - பிரதியக்ஷம் ஒன்றே பிரமாணமாகுவது. வளி - காற்று. அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றி - பூதங்களின் ஒருவகைக்கூட்டத்தா லுண்டாகி. பிரிவால் மாய்வ தாய - அவை தனித்தனிபிரிதலினால் ஒழிவதான. மதுவின்கண் களிப்புப் போல - கள்ளினிடத்தே மதர்ப்புத்தன்மை போல. "கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்புகா, உடைந்தசங்கி லோசையும் உயிர்களும் மூடல்புகா, வடிந்தவேரடியினி லுதிர்ந்தபூ மரம் புகா, இறந்துபோன மானிட ரினிப்பிறப்ப தில்லையே" என்னும் பாட்டு, இறந்தஉயிர் பின்பிறவாமை யைக் கூறும். ஒருவனுற் செய்யப்படுவது - தெய்வத்தாற்செய்யப்படுவதன்று. தெளிந்த-மெய்ந்நூல் வழக்கென்று நம்பி. மெய்ந்நூற்பொருள் - தத்துவசாஸ் திரஅர்த்தம். ஆசிரியன் - குரு. வழிபட்டு அன்றி - உபசரித்தல்லாமல். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் * கொள்வே மெனல்.

(இ-ள்.) உள்ளத்தால் உள்ளல்உம்-(குற்றங்களைத் தன்) நெஞ்சால் கருது தலும், தீது - (துறந்தார்க்குப்) பாவம்; (ஆதலால்), பிறன் பொருளை - பிறனொருவன்பொருளை, கள்ளத்தால் - (அவன்) அறியாவகையால், கொள் வேம்எனல் - வஞ்சித்துக்கொள்வேம் என்று கருதற்க; (எ - று.)

* பி - ம்: கள்வேமெனல்.

'உள்ளத்தால்' என வேண்டாதுகூறினர், அவருள்ளம் ஏனையோருள் ளம்போலாது சிறப்புடைத்து என்பது முடித்தற்கு. 'உள்ளலும்' என்பது, இழிவுசிறப்புஉம்மை. 'அல்' விகுதி-வியங்கோள் எதிர்மறைக்கண் வந்தது.

இவை யிரண்டுபாட்டானும், இக்நடைக்குக் களவாவது இதுவென்ப தூஉம், அது கடியப்படுவ தென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) கருதற்க - எண்ணுதொழிக. ஏனையோருள்ளம் போலாது - மற்றை இல்லறத்தார்மனம்போ லாகாமல். 'உள்ளத்தால்' என்னும் அவசிய மில்லாத பதத்தைப் பிரயோகித்ததற்கு, 'அவருள்ளம் ஏனையோருள்ளம் போலாது சிறப்புடைத்து' என்றலாகிய கருத்தைக் கூறினர். உள்ளம் - ஒன்றை நினைத்தற்குக் கருவியாதலால், மூன்றுமுருபு - கருவிப்பொருளது. "பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்" என்பதிற்போல, எனல் - எதிர்மறைவியங்கோள். இக்நடை - துறவறநடத்தை. கடியப்படுவது-விலக் கத்தக்கது. நினைத்தற்கருவியாதலாலும், அகத்துறுப்பாதலாலும், உள்ள மென்று மனத்திற்குப் பெயர். ஏ - தேற்றம். கள்ளம்-தொழிற்பெயர்: வஞ் சனை. இனி, இத்திருக்குறளுக்கு—பிறன்பொருளை யென்பதை மத்திம தீபமாகக்கொண்டு, தவஞ்செய்வோர் தம்உயிரை நாடாமல் பிறன்பொருளை நினைப்பதுங் குற்றம்; அதன்மேலும் அதனை வஞ்சனையாற் கவர்தற்கு உடன்பட்டு வாயாற்சொல்லுதல் பெருங்குற்றம்: ஆதலால் அவ்வாறு சொல் லாதொழிக என்று பொருள்கொள்ளினும் அமையும். இனி, இதனை ஒரு வாக்கியமாகவே கொண்டு, 'எனல்'என்பதைத் தொழிற்பெயராகவைத்து, பிறன்பொருளைக் கள்ளத்தாற்கொள்ளவே மென்பதை உள்ளத்தால் எண்ணு தலுந் தீது என்று முடித்தலும் ஒன்று. (உ)

உஅசு. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ - ள்.) களவினுல் ஆகிய ஆக்கம்-களவினுல் உளதாகிய பொருள்,—ஆவது போல - வளர்வதுபோலத் தோன்றி, அளவு இறந்து - (தன்)எல்லை யைக்கடந்து, கெடும்—; (எ - று.)

ஆக்கத்திற்கு ஏதுவாகலின், 'ஆக்கம்' எனப்பட்டது. எல்லையைக்கட ந்து கெடுதலாவது - தான் போங்கால், பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன்கொண்டு போதல். 'அளவறிந்து' என்று பாட மோதி, (அவர் பயன்கொள்ளும்)அளவு அறிந்து (அவ்வளவிற்கு உதவாது) கெடும் என்று உரைப்பாரு முளர்.

(கு - ரை.) களவினுல் - திருடுதலால். பொருள் - செல்வம். ஆக்கம்-ஆகுதல், அபிவிருத்தி, மேன்மைபெறுதல்; அதற்குக் காரணமான செல் வத்தை ஆக்கமென்றது, காரியவாகுபெயர். இனி, சம்பாதிக்கப்பட்டதுஎனச் செல்வத்திற்கு ஆக்கமென்பது காரணப்பெயரெனினும் அமையும். போங் கால் - அழியும்பொழுது. நிறுத்தி - வைத்துவிட்டு. செய்த - முன்செய் துள்ள. அவர் - களவுசெய்தவர். (ஈ)

உஅச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ - ள்.) களவின்கண்-(பிறர்பொருளை) வஞ்சித்துக் கோடற்கண்ணே, கன்றிய - மிக்க, காதல் - வேட்கை,—(அப்பொழுது இனிதுபோலத் தோன்றி), விளைவின்கண் - (தாள்) பயன்கொடுக்கும்பொழுது, வீயா விழுமம் தரும் - தொலையாத இடும்பையைக் கொடுக்கும்; (எ - று.)

* கன்றியகாதல் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனுற் பாவமும் பழியும் பயந்தே விடுதலின், 'வீயாவிழுமந்தரும்' என்றார்.

இவையிரண்டுபோட்டானும், அது கடியப்படுதற்குக் காரணங் கூறப் பட்டது.

(கு - சை.) கோடல் - கொள்ளுதல். மிக்க வேட்கை - மிகுந்த ஆசை. தொலையாத இடும்பை - நீங்காத துன்பம். பயில்வித்து - பழகச்செய்து. அது கடியப்படுதற்கு - களவு நீக்கப்படுதற்கு. விளைவு - விளைதல்: விளையுங் காலத்துக்கு ஆகுபெயர். அவனுக்குக் கொடுக்கும் என்னுது அவனுக்குத் தரும் என்றது, இடவழுவமைதி யென்னலாம்; இது, கீழ்ப் புறங்கூறுமை என்ற அதிகாரத்தில் "அறங்கூறுமாக்கந்தரும்" என்றதன் விசேடவுரையில் விவரிக்கப்பட்டது. (சு)

உஅடு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(இ - ள்.) அருள் கருதி - அருளினது உயர்ச்சியை அறிந்து, அன்பு உடையர் ஆதல் - (அதன்மேல்) அன்புடையராய் ஒழுகுதல்,—பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்கண் இல் - பிறர்பொருளை (வஞ்சித்துக்கொள்ள)க்கருதி (அவரது) சோர்வுபார்ப்பார்மாட்டு உண்டாகாது; (எ - று.)

தமக்குஉரியபொருளையும் அதனதுகுற்றம்நோக்கித் துறந்துபோந்தவர் பின் பிறர்க்குஉரியபொருளை நன்குமதித்து அதனைவஞ்சித்துக்கோடற்குஅவரதுசோர்வுபார்க்கும் மருட்சியராஞல், அவர்மாட்டு, உயிர்கள்மேல் அருள் செய்தல் நமக்குஉறுதி யென்றுஅறிந்து அவ்வருளின்வழுவாதுஒழுகுந் தெருட்சி கூடாதென்பதாம்.

(கு - சை.) உயர்ச்சி - மேன்மை. அதன்மேல்-அருளின்மேல். சோர்வு-மறந்திருக்குஞ் சமயம். பார்ப்பார் - எதிர்பார்ப்பவர்கள். அதனதுகுற்றம்-நிலையாமை, ஈட்டுதல்முதலியதொழில்களினுல்துன்பமுடைமை முதலிய அந்தச்செல்வத்தினிடமுள்ள குறைகள். மருட்சியர் - அறிவு மயக்கமுடையவர். வழுவாது - நீங்காமல். தெருட்சி - தெளிந்த அறிவு. பொச்சாப்பு என்னுந் தொழிற்பெயரில், பொச்சா - பகுதி, பு - விகுதி. (டு)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

---

* பி - ம்: கன்றுதலான். (ஆசை) அதிகப்படுதலினுல் என்று இதன் பொருள்.

(இ - ள்.) அளவின்கண் நின்று - (உயிர்முதலியவற்றை) அளத்தலாகிய நெறியின்கணின்று, ஒழுகல் ஆற்றார் - (அதற்குஏற்ப) ஒழுகமாட்டார், களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார்; (எ - று.)

உயிர்முதலியவற்றை அளத்தலாவது - காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான், உயிர்ப்பொருளையும், அதற்கு அணுகியாய்வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்றுள் அது நாற்கதியுட் பிறந்து இறந்து * வருந்தலையும், அதுசெய்யாமல் அவற்றைக்கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றுள் ஆஃது எய்தும் வீட்டினையும் அளந்து உள்ளவாறு அறிதல்; ‡ இதனை ஆருகதர் 'தருமத்தியானம்' என்ப. அதற்குஏற்பஒழுகுதலாவது - அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றின் நீங்கி நல்லனவற்றின்வழி நிற்றல்.

(கு - ரை.) அளத்தல் - ஆராய்ந்துவரையறுத்துஅறிதல். நெறியின் கண் - ஞானவழியில். அதற்குஏற்ப - ஞானநெறிக்குப் பொருந்த. ஒழுகல் - நடத்தல். அளவைகளான் - பிரமாணங்களைக்கொண்டு. உயிர்ப்பொருளையும் - ஆத்மாவாகியபதார்த்தத்தையும். நல்வினைதீவினைக் குற்றவிளைவு- புண்ணியபாவங்களாகிய கொடிய கருமங்களின் நிகழ்ச்சி; நல்வினை தீவினைக்கு உற்ற விளைவு என்றும் பிரிப்பர். அது - அவ்வுயிர். நாற்கதி - மக்கள், தேவர், நரகர், விலங்கு என்னும் நால்வகைப்பிறப்புக்கள். எழுவகைப் பிறப்புக்களுள் ஒழிந்த மூன்றும் விலங்குகதியில் அடங்குமென அறிக. அது செய்யாமல் - பிறந்திறந்துவருந்தாமல். அவற்றை - கருமங்களை. யோகம் - யமம் நியமம் முதலிய எட்டு உறுப்புக்களோடு கூடிய தவம். அவற்றுள் - யோகஞானங்களால். அஃது - உயிர். எய்தும் - அடையும். ஆருகதர் - அருகனைத்தெய்வமாகக்கொண்டமதத்திலிருப்பவர்; சமணர்: ஜைநர். என்ப - என்று சொல்வர். களவில் கருத்துடைய துறவறத்தார் ஞானநெறியிலொழுகாரென்பது இதன்கருத்து. (சு)

உஅள. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.

(இ - ள்.) களவு என்னும்-களவு என்று சொல்லப்படுகின்ற, கார் அறிவு ஆண்மை - இருண்ட அறிவினையுடையராதல்,—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்-(உயிர் முதலிபவற்றை) அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கண் இல்லை; (எ - று.)

இருள் - மயக்கம். கரியத்தைக் காரணமாக உபசரித்து 'களவென்னுங் காரறிவாண்மை' என்றும், காரணத்தைக் காரியமாக்கி 'அளவென்னு மாற்றல்' என்றுங் கூறினர்.

களவும் துறவும் இருளும்ஒளியும்போலத் தம்முள் மாறுகலின் ஒருங்கு நில்லா என்பது, இவைமூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

---

* பீ-மீ: வருதல். ‡ 'இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப' என்ற இவ்வாக்கியம், சிலஏட்டுப்பிரதிகளி லில்லை.

(கு - ரை.) காரறிவாண்மை - அஞ்ஞாநத்தை ஆளுகை. ஆண்மை - ஆளுந்தன்மை. அளத்த லென்னும் பெருமை - ஆராய்தலென்கிற வல்லமை. 'களவென்னுங் காரறிவு' என்றதில், காரறிவு - காரணம்: களவு - காரியம்; அளவென்னு மாற்றல் என்றதில், அளவு - காரணம்; ஆற்றல் - காரியம்: எவ்வாறெனில், காரறிவினுற் களவுசெய்தலும், அளத்தலினுற் பெருமையுண்டாதலுங் கூடுதலா லென்க. களவுக்குக்காரணமான காரறிவாண்மையைக் களவென்னுங்காரறிவாண்மை யென்றும், அளத்தலினுலாகிய ஆற்றலை அளவென்னுமாற்ற லென்றுங் கூறியது, உபசாரவழக்கு. தம்மூள் மாறு - தமக்குள் விரோதி. ஒருங்குகில்லா - ஓரிடத்திற் சேர்ந்துநிற்கமாட்டா. (எ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(இ - ள்.) அளவு அறிந்தார் நெஞ்சத்து - அவ் வளத்தலையே பயின்றவர் நெஞ்சத்து, அறம் போல - அறம் (நிலைபெற்றுற்) போல, நிற்கும் - நிலைபெறும்: களவு அறிந்தார் நெஞ்சில் - களவையே பயின்றவர் நெஞ்சத்து, கரவு வஞ்சனை; (எ - று.)

உயிர்முதலியவற்றை அளந்து அறிந்தார்க்குத் துறவறஞ் சலியாதுநிற்கு மென்பது இவ்வுவமையாற் பெற்றும்.

களவோடு மாறின்றி நிற்பது, இதனுற் கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்வளத்தலையேபயின்றவர்நெஞ்சத்து - தத்துவஆராய்ச்சியையே பழகியவரது மனத்தில். அறம் - துறவறம். சலியாது - அசையாமல்; மாறுபடாமல். இவ்வுவமையால் - அறம்போல என்ற உவமையால். மாறின்றி நிற்பது - வேறுபடாமற் கூடியிருப்பது; அது, வஞ்சனை. உவமையணி. (அ)

உஅசு. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர்.

(இ - ள்.) அளவு அல்ல-அவ் வள வல்லாத தீயநினைவுகளை, *செய்துநினைத்து, ஆங்கே - அப்பொழுதே, வீவர் - கெடுவர்: களவு அல்ல மற்றைய தேற்றாதவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர்; (எ - று.)

தீய நினைவுக ளாவன - பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனையால் அது கொள்ளுமாறும், கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் முதலாயின. நினைத்தலும் செய்த லாகலின் 'செய்து' என்றும், அஃது உள்ள அறங்களைப்போக்கிக் கரந்த சொற்செயல்களைப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் 'ஆங்கேவீவர்' என்றுங் கூறினர். மற்றையவாவன - துறந்தார்க்கு உணவாக ஓதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும் இல்வாழ்வார்செய்யுந் தானங்களுமாம். தேற்றாமை-அவற்றையே நுகர்ந்து அவ்வளவால் நிறைந்திருத்தலை அறியாமை.

---

* செய்தாங்கேஎன்பதற்கு, நினைத்தபொழுதேஎன்று ஒருபிரதியிலுரை காண்கின்றது.

இதனுன், கள்வார் கெடுமாறு கூறப்பட்டது.

(கு - ரை.) அவ்வளவல்லாத - காட்சிமுதலியஅளவைகளான் உயிர்முத லியவற்றை ஆராய்ந்து உள்ளாவாறுஅறிதலே ஒழிந்த. பிறவற்றை - மற்றை நல்வழிகளை. அது - அப்பொருளை. கொண்டவதனுல் தாம் புலன்களை நுகருமாறும் - அப்படிக் கொள்ளையிடப்பட்டபொருளினுல் தாம் பஞ்சேந் திரியவிஷயசுகங்களை அனுபவிக்கும் விதமும். நினைத்தலென்பது சிறப்பு வினையும் செய்தலென்பது பொதுவினையுமாதல்பற்றி நினைத்தலிலும் செய்த லுள்ளதனுல், 'நினைத்தலும் செய்தலாகலின்' என்றார்: இனி, நினைத்த லும் செய்தலாகலின் என்பதற்கு - நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின் என்று பொருள் விரிப்பாருமுளர். அஃது-அந்தத் தீயநினைப்பு. கரந்த சொற் செயல்களைப் புகுவித்து - வஞ்சனையான சொல்லையுந் தொழிலையும் உண்டா கச்செய்து. கெடுக்கும் - அந்நினைவுடையாரை அழிக்கும். அவற்றையே நுக ர்ந்து - காய்கனிமுதலியவற்றையேயுண்டு. அவ்வளவால் - காட்சிமுதலியன கொண்டு உயிர்முதலியவற்றை ஆராய்ந்தறிதலாகிய நல்வழியால்: அம்மாத் திரத்தால் என்றலுமுண்டு நிறைந்திருத்தல் - திருப்தியடைந்திருத்தல். கள்வார் - திருடுபவர். களவல்ல மற்றைய தேற்றாதவர் - களவொன்றையே அறிந்தவ ரென்றபடி. அளவல்ல என்றது - அக்களவின் உபாயம் வழி பலன் முதலிய வகைகளை. ஆங்கே என்ற ஏகாரம், தவறுமல் வீவரென்பதை விளக்கிற்று. அல்ல என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - வினையா லணையும்பெயர்; பின்னதைக் குறிப்புப் பெயரெச்சமாகவேனும், வினையா லணையும்பெயராகவேனுங் கொள்ளலாம். (கூ)

உகூ0. கள்வார்க்குத் தள்ளு மூயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ - ள்.) கள்வார்க்கு-களவினைப் பயில்வார்க்கு, உயிர்நிலை - (தம்மின் வேறல்லாத)உடம்பும், தள்ளும் - தவறும்; கள்ளார்க்கு - அதுசெய்யாதார்க்கு, புத்தேள் உலகு - (நெடுஞ்சேணதாகிய) புத்தேளுலகும், தள்ளாது - தவறுது.

உயிர் நிற்றற்கு இடனுகலின், 'உயிர்நிலை' எனப்பட்டது. சிறப்பு உம் மைகள் இரண்டும், விகாரத்தால் தொக்கன. இம்மையினும் அரசனுல் ஒறு க்கப்படுதலின் 'உயிர்நிலையுந் தள்ளும்' என்றும், மறுமையினும் தேவராதல் கூடுதலின் 'புத்தேளுலகுந் தள்ளாது' என்றுங் கூறினர். "மற்றது, தள்ளி னுந் தள்ளாமை நீர்த்து" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதல் அறிக. இதற்குப் பிறவாறு உரைப்பாரு முளர்.

இதனுன், இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) களவினைப்பயிலும் அஜ்ஞானிகட்கு ஆன்மா வேறு உடல் வேறு என்கிற உணர்ச்சி யில்லாமையால், 'தம்மின்வேறல்லாத உடம்பும்' என்றார். தவறும் - பயனின்றிஒழியும். அது - களவு. நெடுஞ்சேணதாகிய - (தம்மின்வேறுபட்டு) வெகுதூரத்திலிருக்கிற. புத்தேளுலகு - தேவலோகம். உயிர்நிலை - உடம்பு. சிறப்பு உம்மைகள் - உயிர்நிலையும், புத்தேளுலகும் என

முறையே இழிவுஉயர்வுசிறப்புப்பொருள்களோத் தரும் உம்மைகள். அவை தொக்கது, செய்யுள்விகாரம். இம்மையினும் - இப்பிறப்பிலும். ஒறுக்கப் படுதலின் - தண்டிக்கப்படுதலால். ''மற்றது'' என்னும் மேற்கோள் - இந் நூலின் அறுபதாம்அதிகாரத்தில் ஆரும்பாட்டி லுள்ளது; உயர்ச்சி (விதி வசத்தால் கைகூடாமல்) தவறிப்போனலும், (அவ்வுயர்ச்சியைப் பெறவேண்டு மென்னும் எண்ணம்) தவருமைத்தன்மையுடையது என்று பொருள். என் புழியும் - என்னுமிடத்தும். இப்பொருட்டு - தவறுதலென்னும் இப்பொருளே யுடையது. இருவர்பயன் - கள்வரது பயனும், கள்ளாதவரது பயனும். களவு செய்யக்கருதுபவர் இம்மையில் இராசதண்டனையையும் மறுமையில் நரக வேதனையையும் பெறுவர்; கள்ளாதவர் அவற்றைப்பெறுமல் இராசமரியாதை யையும் சுவர்க்க வின்பத்தையும் பெறுவ ரென்பது இதன்கருத்து. 'கள்வார்க் குத் தள்ளும் உயிர்நிலை' என்றதனுல் 'கள்ளார்க்கு உயிர்நிலை தள்ளாது'என்ப தும், 'கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு' என்றதனுல் 'கள்வார்க்குப் புத் தேளுலகு தள்ளும்' என்பதும் அருத்தாபத்திவகையால் அமைக்கப்பட்டன. 'இதற்குப் பிறவாறு உரைப்பாரு முளர்' என்றதனுல், கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும் என்பதற்கு - திருடுமவர்கட்குப் புகழுடம்பு விட்டுவிலகு மென்றும், திருடர்க்குப் பிராணயாமமுதலிய யோகவுறுப்புக்கள் கைகூடாவென்றும், கள்ளர்க்கு இம்மையிற் சீவனம்மாத்திரமே இயலினும் இயலும் [மறுமை யின்பமோ இயலாது] என்றும், கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு என்ப தற்கு - திருடாதவர்கட்குப் புண்ணியம் ஒழியாதாதலால் அவர்களோத் தேவ லோகம் ஒருபொழுதும் நீக்காது என்றும் உரைகொள்ளலாம். (கo)

கூo - ஆம் அதிகாரம்—வாய்மை.

அஃதாவது-மெய்யினதுதன்மை. பெரும்பான்மையும் காமமும் பொரு ளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது, கூடாவொழுக்கங் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வாய்மை-பண்புப்பெயர்: சத்தியம். நிகழ்வது-உண்டாவது. காமம்பற்றிய கூடாவொழுக்கமும் பொருள்பற்றிய களவும் ஆகிய இரண்டின் குற்றத்தையுங் கூறியபின், அந்தக் காமம் பொருள் என்னும் இரண்டுபற்றி யும் உண்டாகிற பொய்யின் குற்றத்தைக் கூறுவது அதிகாரமுறைமை.

உகூக. வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ - ள்.) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், (அது),—தீமை யாது ஒன்றுமும் இலாத சொலல் - (பிறிதோருயிர்க்குத்) தீங்கு சிறிதும்பயவாத சொற்களைச் சொல்லுதல்; (எ - று.)

தீமை யாதொன்றும் இலாத என இயையும். 'எனப்படுவது' என்பது, ''ஊரெனப்படுவது உறையூர்''என்றுற்போல நின்றது. இதனுன், நிகழ்ந்தது

கூறலென்பது நீக்கப்பட்டது; அதுதானும், தீங்குபயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பின் பொய்ம்மையா மென்பது கருத்து.

(கு - ரை.) வினவின் - கேள்விகேட்டால். பயவாத - தராத. நின்றது - சிறப்புத்தோன்றநின்றது. பயப்பின் - தீங்குவிளைத்தால். உள்ளதை உள்ளபடி சொல்லுதல் மாத்திரமே மெய்ம்மையாகாது; பிறர்க்கு நன்மைபயக்கும் நிகழ்ந்ததுகூறலும் தீங்குதராத நிகழாததுகூறலுமே மெய்ம்மையா மென்றபடி. இலாத - பெயர். நிகழ்ந்ததுகூறல் - யதார்த்தவாதம். (க)

உகூஉ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(இ - ள்.) (பிறர்க்கு), புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்கு மாயின், பொய்ம்மையும் - பொய்ம்மைச் சொற்களும், வாய்மை இடத்த - மெய்ம்மைச்சொற்களின்பாலவாம்; (எ - று.)

குற்றந்தீர்ந்த நன்மை - அறம். அதனைப்பயத்தலாவது - கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோர் உயிர்*சொற்களின் பொய்ம்மையானே அதனின்நீங்கி இன்புறுதல். நிகழாததுகூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மையாம் என்பது கருத்து.

இவையிரண்டுபோட்டானும், 'தீங்குபயவாத நிகழ்ந்தது கூறலும்,நன்மை பயக்கும் நிகழாததுகூறலும்-மெய்ம்மை' எனவும், 'நன்மைபயவாத நிகழாதது கூறலும், தீங்குபயக்கும் நிகழ்ந்ததுகூறலும்-பொய்ம்மை' எனவும் அவற்றது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) குற்றந்தீர்ந்த நன்மையைப்பயக்கும்-பழிபாவங்களைத் தராத தருமத்தைக் கொடுக்கும். மெய்ம்மைச்சொற்களின்பால - சத்தியவார்த்தைகளிற் சேர்ந்தன. கேடாதல் சாக்காடாதல் எய்தநின்றது-கெடுதியையாவது மரணத்தையாவது அடையநின்றதாகிய. அதனின் - அத்துன்பத்தினின்றும். நிகழாததுகூறல் - நடவாததைச்சொல்லுதல். நிகழாததுகூறுதல்மாத்திரமே பொய்ம்மையாகாது; பிறர்க்குத் தீமைபயக்கும் நிகழ்ந்தது கூறலும், நன்மைபயவாத நிகழாததுகூறலுமே பொய்ம்மையா மென்றபடி: இவற்றிற்கு மாறுனை மெய்ம்மையென்க. இங்ஙனங் கூறியது, 'மணங்கூட்டுவித்தல் முதலிய சில நன்மையின்பொருட்டுப் பொய்சொன்னலுஞ் சொல்லலாம்' என்னும் நூற்றுணிபை யுட்கொண்டு. "மெய்ம்மையே யொருவர்க் குற்ற விபத்தினை மீட்கு மாயிற், பொய்ம்மையு மெய்ம்மை போலப் புண்ணியம் பயக்குமாதோ" என்னும் மகாபாரதத்தையும் அறிக. இறையனாரகப்பொருளுரையில் நக்கீரர், பழியும்பாவமும் பயவாத பொய் பொய் யாகா தென்பதற்கு இத்திருக்குறளையே மேற்கோளாகக் காட்டினார். பொய்ம்மையென்னும் பால்பகாவஃறிணைப்பெயர், 'இடத்த' என்னும் பலவின்பால்முற்றைக் கொண்டது. (உ)

உகூங. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

* பி - மீ: அச்சொற்களின்.

(இ - ள்.) (ஒருவன்), தன் நெஞ்சு அறிவது - தன்நெஞ்சு அறிவது ஒன்றனே, பொய்யற்க - (பிறர் அறிந்திலரென்று) பொய்யாதொழிக; பொய்த்த பின் - பொய்த்தானுயின், தன் நெஞ்சுஎ-(அதனே அறிந்த) தன்நெஞ்சே, தன்னே சுடும்-(அப்பாவத்திற்குக் காரியாய்நின்று) தன்னே (அதன்பயனுய) துன்பத்தை எய்துவிக்கும்; (எ - று.)

நெஞ்சுகரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார், தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினேகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவாம், நெஞ்சத்திற் குறுகிய காரியில்லே யாகலின்" என்பதனு லும் அறிக.

பொய் மறையாமையின் அதுகூறலாகாதென்பது, இதனுற்கூறப்பட்டது.

(கு - ரை.) பொய்யாது - பொய்சொல்லாமல். பொய்த்தானுயின் - பொய்சொன்னுல். காரி - சாட்சி. எய்துவிக்கும் - அடையச்செய்யும். சுடும்- வருத்து மென்றபடி. "கண்டவரில்லென" என்னும் மேற்கோள் - கலித் தொகை, நெய்தற்கலி, அ-ஆம் பாட்டிலுள்ளது; (இதற்குப்பொருள்):—உணராதார் - அறியாதவர்கள்,—தங்காது - (தம்மனம் இது செய்யலாகாதென்று) மீளாதே, தகைவு இன்றி - வேறுவிலக்குவாருமில்லாமல், உலகத்துள் கண்டவர் இல் என - உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதி, தாம் செய்யும் - தாங்கள் செய்கிற, வினைகளுள் - தீவினைகளுள், நெஞ்சு அறிந்த கொடியவை - (தாம்) நெஞ்சறியவேசெய்த கொடிய தீவினைகளே, மறைப்பவும் - (பின்பு பிறரறியாமல்) மறைத்தார்களாயினும், மறையாஆம் - (அவை) மறையமாட்டாவாகும்: (ஏனெனின்),—நெஞ்சத்தின் குறுகிய காரி இல்லை - (தாம்செய்தமையை அறிந்திருக்கின்ற தம்முடைய) நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சாட்சி வேறு இல்லே, ஆகலின்-ஆகையினுல்; (என்றவாறு.)'மறையாவாம்' என்றவிடத்து 'அறிபவர்' என்று கலித்தொகை நச்சினுர்க்கினியருரையின் பாடம். ஒருவன் தன் மனச்சாட்சிக்கு மாறுகப் பொய் கூறலாகாது; கூறினுல், பின்பு தானே பச்சாத்தாபமடைதற்குக் காரணமாகுமென்பது கருத்து. "தன்னேத் தானெஞ்சங்காரியாகத்தானடங்கின், பின்னேத் தானெய் தாப்பயனில்லே" என்றது, பழமொழி. (ங)

உகூச. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா மூளன்.

(இ - ள்.) (ஒருவன்), உள்ளத்தால் - (தன்) உள்ளத்திற்குஎற்ப, பொய்யாது - பொய்கூருது, ஒழுகின் - ஒழுகுவனுயின், (அவன்),—உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் - உயர்ந்தோர் உள்ளத்தின்க ணெல்லாம், உளன் - உளனும்; (எ - று.)

'உள்ளத்தால்' என்பது, வேற்றுமைமயக்கம். பொய்கூருது ஒழுகுதலாவது-மெய்கூறி ஒழுகுதல். அவனது அறத்தினது அருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனேயே நினேப்ப ரென்பதாம்.

இதனுன், இம்மைப்பயன் கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளம் - மனம். உள்ளத்தால் என்பதில், கருவிகருத்தாப் பொருள்களில் வருதற்குரிய'ஆல்'என்னும்மூன்றும்வேற்றுமையுருபு,கொள்ளுதற்பொருட்குரிய நான்காம்வேற்றுமையின் பொருளில் வந்ததனால், வேற்றுமைமயக்கம். மெய்ம்மையே பேசுபவன் உயர்ந்தோரெல்லாராலும் நன்கு மதிக்கப்படுவானென்பது இதன்கருத்து. இம்மைப் பயன் - இம்மையிலடையும் பயன். 'உள்ளத்தாற் பொய்யாது' என்றதனால், துறவறத்தார்க்கு வாய்மை பொய்சொல்லக்கருதாமை யென்று ஆகும். (சு)

உகூடு. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(இ - ள்.) மனத்தொடு வாய்மை மொழியின் - (ஒருவன் தன்)மனத்தோடு (பொருந்த) வாய்மையைச் சொல்வானாயின், (அவன்),—தவத்தொடு தானம் செய்வாரின் தலை - தவமும் தானமும் (ஒருங்கு)செய்வாரினுஞ் சிறப்புடையன்: (எ - று.)

மனத்தொடு பொருந்துதல் - மனத்திற்கு ஏறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்து என்பதாம்.

(கு - ரை.) ஏறுதல்-ஒத்திருத்தல். புறமாகிய மெய்யால் செய்யுமவை - வெளியாகிய உடம்பினுற்செய்யப்படுவனவாகிய தவமும் தானமும். அகமாகிய - உள்ளுறுப்பாகிய. செய்யுமது-மெய்யைப் பொருந்தப் பேசுவது. துறவறத்திற்குச் சிறத்தலால் தவமும், இல்லறத்திற்குச் சிறத்தலால் தானமும் கூறினுரென்று கொண்டு, மனப்பூர்வமாக மெய்யையே பேசுபவன் இல்லறத்தார் யாவரினும் துறவறத்தார் யாவரினும் உத்தம னென்பது கருத்தென்னலுமாம். (ரு)

உகூசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(இ - ள்.) பொய்யாமை அன்ன புகழ் இல்லை - (ஒருவனுக்கு இம்மைக்குப்) பொய்யாமையை ஒத்த புகழ்க்காரணம் இல்லை;ஈய்யாமை எல்லா அறமும் தரும் - (மறுமைக்கு) மெய்வருந்தாமல் (அவனுக்கு) எல்லா அறங்களையும் (தானே) கொடுக்கும்: (எ - று.)

புகழ் - ஈண்டு, ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றினும், துறவறத்திற்கு உண்மைமை முதலியவற்றினும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள்புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானே தரு மென்பார், 'எய்யாமை யெல்லாவறமுந் தரும்' என்றார்.

(கு - ரை.) புகழ்க்காரணம் - புகழுக்கு ஏது. புகழ் என்பது - அதன் ஏதுவாகிய பொய்பேசாமையைக் குறித்தலால், காரியவாகுபெயர். மெய் - உடம்பு. ஈண்டு - இங்கே. பொருள்கூட்டல் - திரவியசம்பாதனம். அன்றே - தேற்றம். பொய்யாமை - எதிர்மறைத்தொழிற்பெயர். எய்யாமை - எதிர்மறைவினையெச்சம். உம்மை - முற்றுப்பொருளது. இனி, ''எய்யாமையே

அறியாமையே" என்று தொல்காப்பியனுர் 'எய்யாமையென்னும் உரிச்சொல் அறியாமையையுணர்த்தும்' எனக் கூறியிருத்தலால், பொய்யாமையாகிய அறம் ஒன்றுதானே ஒருவனுக்கு மற்றைஅனைத்தறங்களின் பயனையும் எவரு மறியாதபடி தானே கொணர்ந்துகொடுக்கு மென்றுமாம். (சு)

உகூஎ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(இ - ள்.) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - (ஒருவன்) பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனுயின், பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - (அவன்) பிறஅறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று; (எ - று.)

அடுக்கு இரண்டனுள், முதலது - இடைவிடாமைமேற்று; ஏனையது - தணிவின் மேற்று. 'பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையாற் சிலதவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின்பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவருமற்செய்தல் நன்று' என்பார், 'செய்யாமைசெய்யாமை நன்று' என்ருர். இதனை இவ்வாறு அன்றி, 'பொய்யாமையைப் பொய்யாமற்செய்யின் பிறஅறஞ்செய்கை நன்று' எனப் பொழிப்பாக்கி, 'பொய்கூறிற் பிறஅறஞ்செய்கை நன்ருகாது' என்பது அதனுற்போந்த பொருளாக்கி உரைப்பாரு முளர்.

பிறஅறங்களெல்லாந் தரும் பயனைத் தானேதரும் ஆற்றலுடைத்து எனமறுமைப்பயனது மிகுதி, இவைமூன்றுபாட்டானும் கூறப்பட்டது.

(கு - ரை.) பொய்யாமை - பொய்கூருமை. முதலது - பொய்யாமை பொய்யாமை என்றஅடுக்கு. மேற்று - அப்பொருளின் மேலது. ஏனையது - மற்றையது; செய்யாமைசெய்யாமை என்பது. மேற்கொண்டு - செய்யத் தலைப்பட்டு. தரவற்றாய - கொடுக்கவல்லதான. பொய்யாமல் - தவருமல். இரண்டாமுரைக்கு: செய்யாமை செய்யாமை-செய்யாமையைச் செய்யாமை: செய்தல் என்று பொருள்: இரண்டுஎதிர்மறை, உடன்பாடுஉணர்த்தின. பொழிப்பு - தொகுதிப்பொருள். போந்த - கிடைத்த. (எ)

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

(இ - ள்.) புறம் தூய்மை - (ஒருவனுக்கு) உடம்பு தூய்தாந்தன்மை, நீரான் அமையும் நீரானேஉண்டாம்: (அதுபோல), அகம் தூய்மை - மனம் தூய்தாந்தன்மை, வாய்மையான் காணப்படும்-வாய்மையான் உண்டாம்; (எ-று).

காணப்படுவது உள்ளதாகலின், 'உண்டாம்' என்று உரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் - வாலாமைநீங்குதல். மனம்தூய்தாதல் - மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணம் இல்லாதாப்போல அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணம் இல்லே * யென்பதாம். இதனுனே, துறந்தார்க்கு இரண்டுதூய்மையும் வேண்டு மென்பதூஉம் பெற்ரும்.

* பி - மீ: என்றவாருயிற்று.

(கு - ரை.) தூய்தாந்தன்மை - பரிசுத்தமாகுதல். உள்ளதே காணப்படுவ தன்றி இல்லாதது காணப்படாதாதலால், உளதாமென்னவேண்டியஇடத்துக் காணப்படுமென்றார். வாலாமை - அசுத்தி; அழுக்கு. மனம் தூய்தாதல் - அறி யாமை நீங்குதல். மெய்யுணர்தல் - தத்துவஞானம். இரண்டு தூய்மை-புறந் தூய்மையும், அகந்தூய்மையும். எடுத்துக்காட்டுவமையணி. "சேய்மையண் மையிலுயிர்க்கொருதுணையெனச் சிறந்த, வாய்மையா லகந்தூய்மையா மற்றி லேபுறத்தைத், தூய்மைசெய்வது நீரலாற்சொல்லின் வேறுளதோ" என்று இச் செய்யுளையொட்டி அரிச்சந்திரபுராணச் செய்யுள் வந்துள்ளது. (அ)

கூகூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(இ - ள்.) எல்லா விளக்குமும் - (புறத்திருள்கடியும்) உலகத்தார்விளக் குக்களெல்லாம், விளக்கு அல்ல - விளக்காகா; சான்றோர்க்கு - (துறவான்) அமைந்தார்க்கு, விளக்கு - விளக்காவது,—பொய்யா விளக்குஏ - (மனத்து இருள்கடியும்) பொய்யாமையாகிய விளக்கே; (எ - று.)

உலகத்தார்விளக்காவன - ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின், 'பொய்யாவிளக்கே விளக்கு' என்றார். அவ்விரு ளாவது - அறியாமை. 'பொய்யாதவிளக்கு' என்பது, குறைந்துநின்றது; பொய்கூறுமையாகிய விளக்கு என்றவாறு. இனி, இதற்கு - கல்வி முதலிய வற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு விளக்க மாவது, பொய்யாமையான்வரும் * விளக்கமே என்று உரைப்பாருமுளர்.

(கு - ரை.) புறத்து இருள் கடியும் - வெளியிருளைப்போக்குகின்ற. உல கத்தார் விளக்குக்கள்-சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் மூச்சுடர்கள்; பொருள்களை விளங்கச்செய்வதனால், விளக்கு என்று பெயர். துறவான் அமைந்தார் - துறவறவொழுக்கத்தான் மிக்கவர். மனத்து இருள் - அஜ்ஞா னம். ஞாயிறு - சூரியன். திங்கள் - சந்திரன். மனத்திருளை 'அவ்விருள்' என்று சுட்டினார். பொய்யா-ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். விளக்கம்- ஒளி, புகழ், தெளிவு. வீரசோழியவுரையில், இடையினவெதுகைக்கு இக் குறள் உதாரணம். (கூ)

கூ00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(இ - ள்.) யாம் மெய் ஆ கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், எனைத்து ஒன்றுமும் - யாதொருதன்மையானும், வாய்மை யின் நல்ல பிற - வாய்மையின் மிக்கனவாகச்சொல்லப்பட்ட பிற அறங்கள், இல்லை—; (எ - று.)

மெய் உணர்த்துவனவற்றை 'மெய்' என்றார். அவையாவன - தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை உள்ளவாறுணரவல்லராய்க் காம வெகு ளிகளின்மையின் அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும்வல்லராய இறைவர்

* பி - மீ: விளக்கமே விளக்கம்.

அருளான் உலகத்தார் உறுதியெய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது என்பதாம்.

இவை மூன்றுபாட்டானும், இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

(கு - ரை.) தத்துவமுணர்த்தும் நூல்களே 'மெய்' என்றது, காரியவாகு பெயர். அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய்என்றஇடத்து, தீத்தார்பெருமையென்ற அதிகாரத்திலே 'அவ்வறமுதற்பொருளே உள்ளவா றுணர்த்துவார் அவராகலின்' என்று பரிமேலழகருரைத்தது காணத்தக்கது. இறைவர் - கடவுள்போல்வார்: தத்துவஞானிகள். உறுதியெய்துதற்பொருட்டு - நன்மைபெறும்பொருட்டு. அவை எல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது - அந்த ஆகமங்களெல்லாவற்றிலும் வாய்மையே மிக்கநலமுடையதென்பது ஒத்திருந்தது. இவ்வறம் - மெய்ம்மை. தலைமை - உயர்வு. (கo)

ஙக - ஆம் அதிகாரம்—வெகுளாமை.

அஃதாவது - சினத்தைச்செய்தற்குக்காரணம் ஒருவன்மாட்டு உளதாய விடத்தும் அதனைச் செய்யாமை. இது, *பொய்ம்மை முதலியனபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) வெகுளாமை - கோபியாமை; எதிர்மறைதொழிற்பெயர். சினம் - கோபம். அதனை - கோபத்தை. பொய்ம்மைமுதலியனபற்றி நிகழ்வதாய வெகுளியை விலக்கலின் - பிறரிடத்துப் பொய் முதலிய குற்றங்களைக் கண்டபொழுது அவைகாரணமாக அவர்மேலுண்டாகுங் கோபத்தை நீக்கவேண்டுமென்று கூறுதலால். இது - இவ்வதிகாரம். பிறனொருவன் சத்தியம் முதலிய விரதங்களைத் தவறக் கண்டாலும் அக்குற்றங்காரணமாக அவன்மேற் கோபித்து அதனால் தனது சாந்தகுணத்தைத் தவிரக்கூடாதென்பதற்கு, இவ்வதிகாரம் வாய்மையின்பின் வைக்கப்பட்டதென்க. இங்கே வெகுளாமை என்பதற்கு - கோபங்கொள்ளக்கருதாமையென்றுபொருள் கொள்க; மேலதிகாரங்களாகிய 'இன்னாசெய்யாமை', 'கொல்லாமை' என்பவற்றிற்கும் - துன்பந்தருங்காரியங்களைச் செய்யக்கருதாமை, கொல்லக்கருதாமை என்றே பொருள். கள்ளாமை என்னும் அதிகாரத்தில் அதன் பொருளை விவரிக்குமிடத்துப் பரிமேலழகர் கூறியிருப்பது காண்க. களவு, பொய்பேசுதல், வெகுளுதல், கொடுந்தொழில், கொல்லுதல் என்னும் இவற்றைச்செய்தவிடத்தே இல்லறத்தார்க்குக் குற்றமுண்டாம்: துறவறத்தார்க்கோ இவற்றை நினைத்தமாத்திரத்திலும் பெருங்குற்றம் நேரும்; அதனால், கள்ளாமை முதலிய இவ்வதிகாரங்கள் இல்லறவியலில் வைக்கப்படாமல் துறவறவியலில் வைக்கப்பட்டன வென்க. இதனால், கீழ் இல்லறவியலிற் கூறப்பட்ட 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தோடு, இவ்வதிகாரத்துக்கு, கோபஞ் செய்யாமையும் சினத்தையே அடியோடு நினையாமையுமாகிய பொருள்வேறுபாடு காண்க. கீழ் 'அறன்வலியுறுத்தல்' என்னும்அதிகாரத்தில் "அழுக்கா

---

* பி - மீ: பொய்ம்மைபற்றி.

றவா வெகுளி யின்னுச்சொல் நான்கும், இழுக்காவியன்ற தறம்'' என்ற தனால், இருவகையறத்திற்கும் பொதுப்பட வெகுளி பெருங்குற்றமாத லறிக.

ஊ0க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

(இ - ள்.) சினம் செல் இடத்து காப்பான் - (தன்) சினம் பலிக்கு மிடத்து (அதனை எழாமல்) தடுப்பானே,—காப்பான்-(அருளால்) தடுப்பானுவான்; அல் இடத்து - (ஏனைப்) பலியாதவிடத்து, காக்கின் என் - (அதனைத்) தடுத்தாலென்? காவாக்கால் என் - தடாதொழிந்தாலென்? (எ - று.)

'செல்லிடம்', 'அல்லிடம்' என்றது - தவத்தால் தன்னின்மெலியாரையும், வலியாரையும். 'வலியார்மேற் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர்தீங்கு இன்மையின், காத்தவழியும் அறனில்லை' என்பார், 'காக்கினென் காவாக்காலென்' என்றார்.

இதனுன், வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

(கு - ரை.) எழாமல் - உண்டாகவொட்டாமல். ஏனை - மற்றை. செல்லிடம் - எதிர்காலங்கருதிய வினைத்தொகை. காப்பான் என்னும் வினையாலணையும்பெயர் இரண்டனுள், முன்னது - எழுவாய்; பின்னது - பயனிலை. அல்லிடம் - பண்புத்தொகை. முன் 'செல்லிடம்' என வந்ததனுல், அல்லிடம் - செல்லுதலல்லாதவிட மென்றபடி. 'காக்கினென் காவாக்காலென்' என்பதிலுள்ள 'என்' என்னும் பயனிலைகளுக்கு, முறையே, வருவதோர்அறமும், வருவதொருதீங்கும் என எழுவாய் வருவிக்க. (க)

ஊ0உ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

(இ - ள்.) சினம் - (ஒருவன்) வெகுளி, செல்லா இடத்து - தன்னின் வலியார்மேல், (எழின்), தீது-(தனக்கே) தீதாம்; செல் இடத்துஉம்-(மற்றை) எளியார்மேல் எழினும், அதனின் தீய பிற இல் - அதனின்தீயன பிறஇல்லை.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான்வரும் ஏதமே: ஏனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலின், 'அதனிற்றீயனபிறஇல்லை' என்றார். ஓரிடத்தும் ஆகாது என்பதாம்.

(கு - ரை.) தீதாம் - கொடியபயனே விளைப்பதாம். இம்மைக்கண் - இப்பிறப்பில். அவர் - தன்னின் வலியார். ஏதம் - தண்டனைமுதலிய துன்பம். ஏனையது - மற்றது; மெலியாரிடத்துச்செய்த கோபம். மறுமைக்கட் பாவமும்பயத்தலின் - இவ்வுடம்புநீங்கினபின்வரும்நிலையில் அனுபவிக்குமாறு பாவத்தையுந் தருதலால். செல்லிடத்தும், உம்மை - இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. இல்என்னும்பயனிலைக்குத் தீயஎன்பது - எழுவாய்; பிற என்பதுஎழுவாய்எனின், தீயஎன்பதைப் பெயரெச்சமாக்கொள்ளலாம். (உ)

ஊ0ஊ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனுன் வரும்.

(இ-ள்.) யார்மாட்டும்-யாவர்மாட்டும், வெகுளியை மறத்தல்-வெகுளியை ஒழிக: (ஒருவனுக்கு), தீய பிறத்தல் - தீயன (எல்லாம்) உளவாதல், அதனான் வரும்—: (ஆகலான்); (எ - று.)

வலியார், ஒப்பார், எளியார் என்னும் மூவர்மாட்டும் ஆகாமையின் 'யார்மாட்டும்' என்றும், மனத்தால் துறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் 'தீயபிறத்தல் அதனான் வரும்' என்றுங் கூறினார்.

(கு - ரை.) யாவர்மாட்டும் - எல்லோரிடத்தும். மறத்தல் - நினையாதொழிக; 'தல்'விகுதிபெற்ற வியங்கோள். அதனான் - அக்கோபங்காரணமாக. மூவர்மாட்டும் - மூத்திறத்தாரிடத்தும். சிந்தை - நினைப்பு. "பெரியவர்தம்மைக்காய்ந்தான் பிறங்கல்வியதோலொப்பான், புரிவனபுரியப்பட்டுப்புலம்புவன் ஒத்தார்க்காய்ந்தான், எரிநரகத்தில்வீழ்வன் இழிந்தவர்க்காய்ந்தானென்றுல், ஒருவர்தம்மிடத்துஞ் சீற்றமுறுமையே நன்றுமாதோ" என்பதனால், வலியார் ஒப்பார் எளியார் என்னும் மூவரிடத்துஞ் செய்யுங் கோபத்தா லுண்டாகும் பலன்களை அறிக. முன்வாக்கியத்துக்குப் பின்வாக்கியம் காரணம். (சு)

சுo. சினையு மூவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு மூளவோ பிற.

(இ - ள்.) (துறந்தார்க்கு), சினைஉம் உவகைஉம் கொல்லும் சினத்தின்-(அருளான்உளவாய முகத்தின்கண்) சினையையும் (மனத்தின்கண்) உவகையையும் கொன்றுகொண்டெழுகின்ற சினமேயல்லது, பிற பகைஉம் உளஓ - (அதனிற்) பிறவாய பகைகளும் உளவோ? [இல்லை]; (எ - று.)

துறவால் புறப்பகையிலராயினும் உட்பகையாய்நின்று அருள்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமும் எய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகை இல்லையாயிற்று.

இவைமூன்றுபாட்டானும், வெகுளியது தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) உளவாய - உள்ளனவான. முகத்தின்கண் சினை-முகமலர்ச்சி. உவகை - மகிழ்ச்சி. கொன்றுகொண்டு - அழித்துக்கொண்டு. புறப்பகை-வெளியேசுழ்ந்துநிற்கும்பகைவர். காமம், கோபம் முதலிய ஆறுதீக்குணங்களும் உட்பகையெனப்படும். உட்பகை - மனத்தில்நிகழுங் கொடுங்குணம். நட்பு - நினைகுணம். எய்துவித்தல் - அடைவித்தல். பகையுமூளவோ, உம்மை - இழிவுசிறப்பு. ஓ - எதிர்மறை. (சு).

சுoடு. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

(இ - ள்.) தன்னை தான் காக்கின்-தன்னைத் தான் (துன்பம்எய்தாமல்) காக்கநினைத்தானாயின், சினம் காக்க - (தன்மனத்துச்) சினம் (வராமல்) காக்க; காவாக்கால் - காவானாயின், சினம் - அச்சினம், தன்னை கொல்லும் - தன்னையேகெடுக்கும் கடுந்துன்பங்களை எய்துவிக்கும்; (எ - று.)

வேண்டிய வேண்டியாங்குஎய்தற்பயத்ததாய தவத்தைப் பிறர்மேற்சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கு எய்துதலின், 'தன்னையே கொல்லும்' என்றார். ''கொல்லச் சுரப்பதாங்கீழ்''என்புழிப்போல, கொலைச்சொல்-ஈண்டு, துன்பமிகுதிஉணர்த்திநின்றது.

(கு - ரை.) எய்தாமல் - அடையாமல். காக்க - காக்கக்கடவன்; வியங்கோள் வினைமுற்று. ''வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ, மீண்டு முயலப்படும்'' என்றார், கீழ் 'தவம்' என்னும் அதிகாரத்தில்: ''ஆக்கமுங் கிறலுஞ்சீரு மாயுவு நலனு மேலா, மூக்கமும் வீடு மெல்லாந் தவத்தின தூற்ற மன்றே'' என்பது கந்தபுராணம். கோபங்கொண்டு சாபங்கொடுத்தால் செய்த தவம் அழிந்துபோ மென்பது நூற்றுணிபு: ''தீபமொத்தொளிர் தபோதனர்களுஞ் சினமெனும், பாவமுற்றயலுளோர் பதைபதைத்துயிரிறச், சாபமிட்டனையர் தம்தவமும் விட்டிடுவரே'' என்ற பிரபோதசந்திரோதயம் இங்குக் காணத்தக்கது. 'அத்தவத்துன்பம் எய்துதலின்' என்றது, தவஞ் செய்கையில் பசிமுதலியவற்றைப் பொறுத்து அடைந்த துன்பமெல்லாம் வீணாதலின். 'பழையபிறவித்துன்பமும் எய்துதலின்' என்றது, பிறவித் துன்பத்தை யொழிக்கக்கூடிய தவத்தைப் பிறன்மேற்சாபமிட்டதனால் இழந்துவிடவே, அப்பிறப்புத்துன்பம் ஒழிக்கப்படாமையின். ஒருங்கு - ஒருசேர. ''கொல்லச்சுரப்பதாங்கீழ்'' என்பது - நாலடியாரில் ஈயாமையென்ற அதிகாரத்தில் ''இரவலர்கன்றுக'' என்ற செய்யுளில் உள்ளது: தன்னை மிகவுந்துன்பப்படுத்தப் பயன்தருவது கீழ்மக்களின்தன்மையாமென்பது, இம்மேற்கோளின் பொருள். தன்னையே - சினத்தைச்செய்த தன்னையே; ஏ - உயர்வுசிறப்பு. (இ)

கூ0சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

(இ - ள்.) சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி-சினமென்னும் நெருப்பு, இனம் என்னும் ஏமம் புணையை சுடும் - (தனக்குஇடமானவரையேயன்றி) அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும்; (எ - று.)

'சேர்ந்தாரைக்கொல்லி' என்பது - எதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந்தொழிலது என்றவாறு. 'சேர்ந்தாரை' என உயர்திணைப் பன்மைமேல்வைத்து, ஏனைநான்குபாலும் தம்கருத்தோடுகூடிய பொருளாற்றலாற் கொண்டார்; ஈண்டு உருவகஞ்செய்கின்றது துறந்தார்சினத்தையேயாகலின். 'சினமென்னும்நெருப்பு' என்ற விதப்பு - 'உலகத்து நெருப்புச் சுடுவது தான் சேர்ந்த இடத்தையே: இந்நெருப்புச் சேராத இடத்தையுஞ் சுடும்'என்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டு 'இனம்' என்றது-முற்றத் துறந்த தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிபயக்கும் மொழிகளே இனியவாகச்சொல்லுவாரை. உருவகமே கோக்கி 'சுடும்' என்னுந் தொழில் கொடுத்தாராயினும், 'அகற்றும்' என்பது பொருளாகக் கொள்க. ஏமப்புணை-ஏமத்தையுபதேசிக்கும் புணை. 'இனமென்னு மேமப்புணை' என்ற

ஏகதேச வுருவகத்தால், 'பிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங்கரை ஏற்று கின்ற' என வருவித்து உரைக்க. எச்ச வும்மை, விகாரத்தால் தொக்கது; தன்னையும் வீழ்த்து எடுப்பாரையும் அகற்றும் என்பதாம்.

(கு - ரை.) இடமானவரையேயன்றி - தனக்குஆதாரமாக இருப்பவ ரான கோபங்கொண்டவரை(ச் சுடுவது)மாத்திரமே யல்லாமல். இனம் - சுற்றவருக்கம். ஏமப்புணை - இரட்சகத்தோணி. சேர்ந்தாரைக்கொல்லி என் பது-'ஆஸ்ரயாஸன்' என்னும் (அக்கினியின்) வடமொழிப்பெயரின் பொருள் கொண்டது. எதுப்பெயர் - காரணம்பற்றிவரும்பெயர். சேர்ந்தாரை'என்ற பலர்பால், மற்றை நான்குபால்களுக்கும் உபலக்ஷணம். செய்பவன்கருவி", "செய்வதாதி," 'நஞ்சுண்டவன் சாவான்' என்றவிடங்களிலும், ஒருபால் ஒழிந்த தன் இனமாகிய பால்களைக் கொள்வது காண்க: [நன். பொது. எ.] உயர்திணைப்பன்மை - பலர்பால். ஏனைநான்குபால் - ஆண் பெண் ஒன்று பல என்னும் மற்றைப்பால்கள். தம்கருத்தோடுகூடியபொருளாற்றல் - தம் மனத்திற்கொண்ட பொருளைக் குறிப்பிக்குஞ் சக்தி உருவகஞ்செய்தல் - ஒரு பொருளினிடத்து மற்றொரு பொருளின் தன்மையை ஏற்றிக்கூறுதல். 'ஈண்டு உருவகஞ்செய்கின்றது துறத்தார்எனத்தையே யாகலின்' என்பது, உயர்தி ணைப்பன்மைமேல்வைத்து 'சேர்ந்தாரை'என்று கூறியதற்குக்காரணம்: இனி 'இனமென்னும்நெருப்பு' என்று தொடங்கும் பின்வாக்கியத்திற்குக் காரணம் என்றும், 'சேர்ந்தாரை' என்று தொடங்கின முன்வாக்கியத்துக்குக் காரண மன்று என்றுங் கொள்வாருமுளர். விதப்பு - புதுமைதோன்ற எடுத்துக் கூறு வது. வேற்றுமை - வேறுபாடு. முற்றத் துறந்து - எல்லாப்பற்றுக்களையும் அற விட்டு. உருவகம் - ரூபகாலங்காரம். அகற்றும் - நீக்கும், விலக்கும். ஏமத்தை - இதமான பொருள்களை; பேரின்ப நிலையைப்பற்றியவற்றை. புணை - தெப் பம். ஞானோபதேசிகளைமட்டும் புணையென்று உருவகப்படுத்தி, பிறவியைக் கடலாகவும், மோட்சத்தைக் கரையாகவும் உருவகப்படுத்தாதது, ஏகதேச வுருவகம்; இதனால் வருவிக்கப்பட்ட தொடர் - 'ஏமப்புணை' என்பதற்கு அடைமொழி. இறந்ததுதழுவிய எச்சவும்மை தொகுத்தலென்னுஞ்செய்யுள் விகாரப்பட்டது, 'ஏமப்புணையை' என்பதன் இறுதியில். கோபம், தன்னைக் கொண்டவரை இம்மை மறுமைத் துன்பங்களில் அடைவித்து அழிப்ப தோடு, அவர்க்கு இதமொழியெடுத்துக்கூறி அவரையீடேற்றவல்ல நல் லோரை அவரிடத்தினின்று நீங்குவித்தலுஞ் செய்யு மென்பது கருத்து. நெருப்பிற்குச் சேராதவிடத்தையுஞ் சுடுதலையும், மரக்கலத்திற்கு இதோப தேசஞ்செய்தலையும் அதிகமாகச்சொல்லுதலால், மிகையோற்றுமையுநவிற் வணி. சேர்ந்தாரைக்கொல்லி என்பதில், இ - கருத்தாப்பொருள்விகுதி; "நூற்றுவரைக்கொல்லி" என்னுஞ் சிந்தாமணியிற்போல. ஏமம் - இன்பம்; இன்பத்தைத்தரும் மொழிக்குக் காரியவாகுபெயர்: இதனை ஹேமம் என்னும் வடசொல்லின் திரிபாகக் கொண்டு, உவமவாகுபெயராய், பொன்போலரிய மொழி யென்றுங் கொள்ளலாம். புணை - மரப்பலகைகளைக்கொண்டு புணை க்கப்படுவ தெனக் காரணப்பெயர். இனமென்னுஞ் சேர்ந்தாரைக்கொல்லி,

இனமென்னு மேமப்புணை என, உருவகப்பொருளே விளக்கும் 'என்னும்' என்கிற உருபு விரிந்துநின்றமையின், இது - விரியுருவகமெனப்படும். (சு)

ங0எ. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(இ - ள்.) சினத்தை பொருள் என்று கொண்டவன் - சினத்தை(த் தன் ஆற்றல் உணர்த்துவதோர்) குணம் என்று (தன்கட்) கொண்டவன், கேடு - (அவ்வாற்றல்) இழத்தல், நிலத்து அறைந்தான் கைபிழையாத அற்று - நிலத்தின்கண் அறைந்தவன்கை (அந்நிலத்தையுறுதல்) தப்பாத ஆறுபோலத் தப்பாது.

வைசேடிகர்-பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என் பனவற்றை 'அறுவகைப்பொருள்' என்றாற்போல, ஈண்டு, குணம் 'பொருள்' எனப்பட்டது. * 'பிழையாதவற்று' என்பது, குறைந்து நின்றது.

இவைமூன்றுபாட்டானும், வெகுண்டார்க்குவருந் தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) ஆற்றல் உணர்த்துவது - வல்லமையைத் தெரிவிப்பதாகிய. கேடு - (பின்பு அதனாற்) கெடுதல். அறைந்தவன்கை - அடித்தவனது கை. உறுதல் - அடைதல். வைசேடிகர் - தர்க்கநூலார். வைசேடிகம் - வைதிக சாஸ்திரம் ஆறனுள் ஒன்று; அவை - மீமாம்ஸை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் எனப்படும். பொருள்-வஸ்து. பண்பு-குணம். தொழில்-செய்கை. சாதி - இனம், பொதுமை. விசேடம்-சிறப்பு. இயைபு - ஒற்றுமை, சம்பந்தம். 'திரவியம், குணம், கருமம், சாமாந்தியம், விசேடம், சமவாயம் எனப் பதார்த்தங்கள் ஆறு' என்பது வைசேடிகர் கொள்கை; (இவ்வாறனையே பொருள்முதலிய என இங்குக்குறித்தது.) இனி, இவற்றின் எதிராகிய இன்மையென்கிற அபாவத்தையுங் கூட்டிப் பதார்த்தங்கள் ஏழென்பர், ஒருசார் நியாயநூலார். பொருளெனினுந் திரவியமெனினும், தொழிலெனினுங் கருமமெனினும், சாதியெனினுஞ் சாமாந்தியமெனினும், இயைபெனினுஞ் சமவாயமெனினும் ஒக்கும். ஈண்டு - இங்கே. குணம் - இனமாகிய பண்பு. பிழையாதற்று - பிழையாதவற்று: தொகுத்தல்விகாரம்; இனி, பிழையாது அற்று என்றே கொண்டு, பிழையாது என்பதை எதிர்மறைத் தொழிற்பெயராகவைத்து, தவறுமைபோலும்என்று உரைத்தலும்பொருந்தும்.

ங0அ. இணரெரி தோய்வன்ன வின்னு செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(இ - ள்.) இணர் எரி தோய்வு அன்ன - பலசுடரையுடைத்தாய பேரெரி (வந்து) தோய்ந்தாலொத்த, இன்னு-இன்னுதவற்றை, செயின்-உம்-(ஒருவன்) செய்தானாயினும், வெகுளாமை - (அவனை) வெகுளாமை, புணரின் - (ஒருவற்குக்) கூடுமாயின், நன்று - (அது) நன்று; (எ - று.)

இன்னுமையின்மிகுதி தோன்ற 'இணரெரி' என்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற 'இன்னு' என்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்கு மென்பது தோன்ற 'புணரின்' என்றும் கூறினர்.

* பி - ம்: 'பிழையாததற்று'

இதனுன், வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) இணர் - பூங்கொத்து; இங்கே சுவாலைத்தொகுதியை இலக்கணையால் உணர்த்திற்று. உடைத்தாய - உடையதான. தோய்ந்தால்-மேற் படிந்தால். இன்னுதவற்றை - துன்பங்களே. அச்செயல் - கொடுஞ்செய்கைகள். மூனிவரையும் வெகுள்விக்கும் - பொறுமைமிகுந்த தவத்தோரையும் கோபிக்கச்செய்யும். எரிவது, எரி; வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்ட காரணப்பெயர். செயினும், உம்மை - இழிவுசிறப்பு. புணரின்என்பது, அப்பெருங்குணம்பொருந்துதலின் அருமைதோன்ற நின்றது. (அ)

ஈ0கூ. உள்ளிய வெல்லா முடனெய்து மூள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(இ - ள்.) (தவஞ்செய்யுமவன்), உள்ளத்தால் - (தன்) மனத்தால், வெகுளி - வெகுளியை, உள்ளான் எனின் - (ஒருகாலும்) நினையாஞையின், உள்ளிய எல்லாம் - (தான்) கருதிய பேறுஎல்லாம், உடன் எய்தும்-ஒருங்கே பெறும்; (எ - று.)

'உள்ளத்தால்' என வேண்டாது கூறிய அதனுன், அருளுடையுள்ள மென்பது முடிந்தது. அதனுன் உள்ளாமையாவது - அவ்வருளாகியபகையை வளர்த்து அதனுன் முற்றக்கடிதல். இம்மை, மறுமை, வீடு என்பன வேறு வேறு திறத்தனவாயினும் அவையெல்லாம் இவ்வொன்றுனே எய்து மென்பார், * 'உள்ளியவெல்லா முடன்எய்தும்' என்றார்.

இதனுன், வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஒருகாலும் - ஒருபொழுதிலும். பேறு எல்லாம் - பாக்கியங்களேயெல்லாம். பெறும் - பெறுவான். வேண்டாதுகூறிய அதனுன் - அவசியமில்லாமற்சொன்ன அக்காரணத்தால். பொருள்நிரம்பினபாடல்களில் ஏதாவது ஒரு அவசியமில்லாத பதம் காணப்பட்டால், அதனுல் யாதாயினும் ஒருவிசேஷஅருத்தங் கொள்ளுதல், மரபு; அந்தப்படி 'உள்ளுதல்' என்ற வினைக்கு அவசியமில்லாது மூன்வந்த 'உள்ளத்தால்'என்ற சொல்லுக்கு - அருளுடையஉள்ளமென்ற விசேஷப்பொருள் கொண்டார்; கீழ் "தீய, வழுக்கியும்வாயாற்சொலல்", "இறந்தார்வா, யின்னுச்சொல்நோற்கிற் பவர்" என்ற விடங்களில், 'வாய்' என்றதற்கு இங்ஙனமே விசேடப் பொருள் கொண்டவாறு காண்க. முடிந்தது - எற்பட்டது. அதனுன் உள்ளாமை - அம்மனத்தால்நினையாமை. பகை - சினத்திற்குப் பகையாயுள்ளது. அதனுன் முற்றக் கடிதல் - அவ்வருளால் அச்சினம்முழுவதையும் நீக்கிவிடுதல். வேறுவேறுதிறத்தன - வெவ்வேறுவகைபையுடையன. இவ்வொன்றுனே எய்தும் - வெகுளாமையென்னும் இவ்வொருகுணத்தாலே அடைவான். வெகுளாதார் - கோபியாதவர். எய்தும் - செய்யுமென்முற்று ஆண் பாலுக்குவந்தது. உள்ளம்என்பது - உள்ளிடத்தேயுள்ள உறுப்பென்றுவது,

* பீ - மீ: உள்ளியதெல்லாம்.

உள்ளுதற்குக் கருவியான தென்ருவது, காரணப்பெயராம்; உள்ளுதல் - நினைத்தல். உள்ளான் - எதிர்மறையாண்பால்வினைமுற்று. (கூ)

ஈகஂ. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(இ - ள்.) இறந்தார் - (சினத்தின்கண்ணே) மிக்கார், இறந்தார் அனையர் - (உயிருடையராயினும்)செத்தாரோடு ஒப்பர்; சினத்தை துறந்தார்—, துறந்தார் துணை - (சாதல்தன்மையராயினும் அதனை)ஒழிந்தாரளவினர்; (எ - று.)

மிக்கசினத்தையுடையார்க்கு ஞானம்எய்துதற்குஉரிய உயிர் நின்றதாயினும் கலக்கத்தான் அஃது எய்தாமை ஒருதலையாகலின், அவரை 'இறந்தாரனையர்' என்றும்; சினத்தைவிட்டார்க்குச் சாக்காடெய்துதற்குஉரியபாக்கை நின்றதாயினும் ஞானத்தான் வீடுபெறுதல் ஒருதலை யாகவின், அவரை * 'வீடுபெற்ருரோடொப்பர்' என்றுங் கூறினர். துறந்தார்துணை - பன்மை யொருமைமயக்கம்.

இதனுன், அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) அதனை ஒழிந்தாரளவினர் - மரணத்தை ஒழிந்தவர் [முத்தி பெற்றவர்] போன்றவர். கலக்கத்தான் அஃது எய்தாமை ஒருதலையாகலின் - மனக்கலக்கத்தால் அந்தஞானத்தை அடையாமை நிச்சயமாதலால். அவரை - நினைம்மிக்கவரை. சாக்காடு - மரணம். யாக்கை - உடம்பு. சாக்காடெய்துதற்குரியயாக்கை - நிலையில்லாதஉடம்பு. வீடுபெறுதல் - முத்தியடைதல். முத்திபெற்றவர்க்குப் பிறப்பு இறப்புக்கள் இல்லை யாதலின், அவரை '(இறத்தலைத்)துறந்தார்' என்றது. துறந்தார்துணையென்பதன்கருத்துப்பொருள், வீடுபெற்றவரோடொப்பரென்பது. இவ்வுடம்பு இருக்கையிலேயே வீடுபெற்றவரோடொப்பரென்றது, ஜீவன்முக்திநிலைய ராவர் என்றவாறு. துறந்தார்என்னும் பன்மைவினையாலணையும்பெயரோடு துணைஎன்னும் ஒருமைப்பெயர் தழுவக்கூறப்பட்டது,பன்மையொருமைமயக்கம் என்க; [நன். பொது. உக.] அவ்விருவர்பயனும்-வெகுண்டவர்பயனும், வெகுளாதார் பயனும். செய்யுளிலுள்ள இறந்தார் என்ற சொல் இரண்டனுள், முன்னது-மிக்காரென்றபொருளது. அனையர்என்னுங் குறிப்புமுற்றில், ஐ -சாரியை. இத்திருக்குறளை "அடுக்கல்லவையு மடுக்கவைபோல்வரும், அவ்வடுக்கணியி னுளளவிலையென்க" என்றதற்கு உதாரணமெடுத்துக்காட்டினர், இலக்கணக் கொத்துநூலுடையார். (கஂ)

ஈஉ - ஆம் அதிகாரம்—இன்ஞசெய்யாமை.

அஃதாவது - தனக்கு ஒருபயன்நோக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்ஞதவற்றைச் செய்யாமை. இன்ஞசெய்தல் வெகுளியொழியவும் நிகழும் என்பது அறிவித்தற்கு, இது, வெகுளாமையின் பின் வைக்கப்பட்டது.

---

* பி - மீ: 'துறந்தார்துணை'

(கு - ரை.) இன்னுசெய்யாமை - இரண்டனுருபுத்தொகை. கீழ் இருபத்தொன்பதாம் அதிகாரத்தின் முதலில் பரிமேலழகர் கூறியபடி, இதற்கு-ஒருபிராணிக்குந் தீயவற்றைச்செய்ய நினையாமை யென்று பொருள். கோபத்தைவிட்ட முனிவர்களும் யாதாயினும் ஒருபிரயோசனத்தைக் கருதியாவது, முன்னே மனத்திற்பொருந்தியுள்ள வைரத்தைப்பற்றியாவது, அஜாக்கிரதையினுலாவது பிறிதோருயிர்க்குத் துன்பத்தைச்செய்தல் கூடும்; அதனை விலக்கும்பொருட்டு இவ்வதிகாரம் 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தின் பின் நிறுத்தப்பட்டது. இன்ன துன்பம் எனக் குறியாமையின், 'இன்னு' எனப் பன்மையாக்கூறினது; ஒன்றைத்துணியாதவிடத்துப் பன்மையாக் கூறுதல், ஒருமரபு: இதனைச் சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையாரிலம்பகத்தில் "செருநிலத்திவனேவென்றீர் திருவினுக்குரியீரென்றான்" என்றதன்பின் "தனிக்கயத்துழக்கிவென்றீர் தையலேச்சார்மினென்றான்" என்றவிடத்து 'துணியலாகாமையின் பன்மையாற் கூறினான்'என ஆசிரியர் நச்சினார்க்கினியருரைத்ததனு லறிக. செற்றம் - வைரம். சோர்வு - மறதி.

ஙகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றூர் கோள்.

(இ - ள்.) சிறப்பு ஈனும் - (யோகமாகிய) சிறப்புத் தரும், செல்வம்-(அணிமா முதலிய) செல்வங்களை, பெறின்உம் - (பிறர்க்குஇன்னுசெய்து) பெறலாமாயினும், பிறர்க்கு இன்னு செய்யாமை - அதனைச்செய்யாமை, மாசு அற்றூர் கோள்-(ஆகமங்கள்கூறியஆற்றான்) *மனந்தூயாரது துணிவு; (எ-று.)

உம்மை, பெருமைமேற்று. சிறப்புடையதனை 'சிறப்பு' என்றும், அதன் பயிற்சியான் வாயுவைவென்று எய்தப்படுதலின் எட்டுச்சித்திகளையும் 'சிறப்பீனுஞ்செல்வம்' என்றும், காமம் வெகுளி மயக்கம் என்னுங் குற்றங்கள் அற்றமையான் 'மாசற்றூர்' என்றுங் கூறினர்.

இதனுன், தமக்குஒருபயன்நோக்கிச்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) யோகமாகிய சிறப்புத் தரும் - சிறப்பையுடைய யோக நிலையிற் பயில்வதனுற் கொடுக்கப்படுகிற. பிராணவாயுவையடக்கி வசப்படுத்திச் சிறத்தலையுடைய யோகத்தைச் சிறப்பென்றது, தொழிலாகுபெயர். அணிமாமுதலிய எட்டுச்சித்திகள் இவையென்பதும், அவை இன்னபடியின என்பதும், "எண்குணத்தான்" என்றதன்குறிப்பிற் கூறப்பட்டன. இவை - யோகத்தின்பயனுக வருவன வாதலால், சிறப்பீனுஞ்செல்வமெனப்பட்டன. ஆகமங்கள் கூறிய ஆற்றான் - சாஸ்திரங்கள் சொன்ன வழியால். மனந்தூயார் - நெஞ்சம் பரிசுத்தியடைந்தவர். துணிவு - சித்தாந்தம்; தேர்ந்த கருத்து. கோள் - கொள்கை. பெறினும் என்றதிலுள்ள உம்மை - உயர்வு சிறப்பு; அது - இன்னுசெய்தலால் சிறப்பீனுஞ் செல்வங்களைப் பெறுதல் முடியா தென்ற எதிர்மறைக்கருத்தை விளக்கும். அதன்பயிற்சி - யோகப் பழக்கம். வாயுவைவென்று - பிராணயாமத்தால் சுவாசபந்தஞ்செய்து.

* பி - ம்: மாசற்றூர்யாவர்க்கும்.

சிறப்பு ஈனும் செல்வம் - சிறப்பைத்தருஞ் செல்வ மென்றுமாம். எய்தப் படுதலின் - அடையப்படுதலால். மாசு அற்றூர் - குற்றம்நீங்கியவர். செய்தல் - தீங்குசெய்தல். ஈனும்என்ற எதிர்காலப்பெயரெச்சத்தில், ஈன் - பகுதி. பிறர்க்குஎனச் சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக்கூறினாராயினும், உபலக்ஷணத்தால், மற்றைய அஃறிணையுயிர்களுங் கொள்ளப்படும். (க)

ஈகஉ. கறுத்தின்ஞ செய்தவக் கண்ணு மறுத்தின்ஞ
செய்யாமை மாசற்றூர் கோள்.

(இ - ன்.) கறுத்து - *(தம்மேல்) செற்றங்கொண்டு, இன்ஞ செய்த அக் கண்உம் - (ஒருவன்) இன்ஞதவற்றைச் செய்தவிடத்தும், மறுத்து - மீண்டு, இன்ஞ செய்யாமை - (தாம் அவனுக்கு) இன்ஞதவற்றைச் செய்யாமையும், மாசு அற்றூர் கோள் - அவரது துணிவு; (எ - று.)

இறந்ததழீஇயஎச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. அவ்வின்ஞதவற்றை உட்கொள்ளாதுவிடுதல் செயற்பாலதென்பதாம்.

(கு - ரை.) செற்றம் - கோபம். கறுத்து - கோபித்து: கறுத்தல்-கோபமாகிய குறிப்புப்பொருளேயுணர்த்தும் உரிச்சொல்: நிறவேறுபாட்டையுணர்த்துங் கருமைசெம்மையென்னும் பண்புப்பெயர்கள் விகாரப்பட்டுக் கறுத்தல் சிவத்தல் எனத் தொழிற்படும்பொழுது அக்குணப்பொருளோடு இக்கோபப் பொருளேயுங் குறிக்கு மென அறிக. அவரது - ஆகமங்கள் கூறியவாற்றுன் மனந்தூயாரது. உம்மை தொகுத்தல்விகாரப்பட்டது, 'மறுத்தின்ஞ செய்யாமை' என்றதன்பின்; அது, "சிறப்பீனுஞ் செல்வம்பெறினும் பிறர்க்கின்ஞ செய்யாமை"யேன்றி, எனக் கீழ்க்கவியை நோக்கியதனால், இறந்தது தழுவியஎச்சவும்மையாயிற்று. "நன்றல்ல, தன்றேமறப்பது ஈன்று" என்றபடி அவன் செய்த தீங்குகளே மனத்தில்வையாமல் மறந்துவிடுதலே செய்யத்தக்க தென்க. செய்த அக்கண்ணும் - பண்ணின அவ்விடத்தும்; உம்மை - இழிவுசிறப்பு. இதனால், கறுத்து இன்ஞ செய்யாதவிடத்து இன்ஞ செய்யாமை மாசற்றூர்கோளென்பது தானே விளங்கும். மறுத்து - செய்ததீங்கிற்கு எதிர்த்தீங்காய். "உபகாரஞ் செய்ததனையோராதே தங்கண், அபகார மாற்றச்செயினும்—உபகாரம், தாஞ்செய்வதல்லால் தவற்றினால் தீங்கூக்கல், வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்" என்றது காலடியார்.

ஈகஈ. செய்யாமற் செற்றூர்க்கு மின்ஞத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

(இ - ன்.) செய்யாமல் செற்றூர்க்கு உம் - (தான் முன்பு ஓர்இன்ஞமை) செய்யாதிருக்க(த் † தன்மேல்) செற்றங்கொண்டவர்க்கும், இன்ஞத செய்தபின் - இன்ஞதவற்றை(த் துறந்தவன்) செய்யுமாயின், (அச்செயல், அவனுக்கு), உய்யா விழுமம் தரும் - கடக்கமுடியாதஇடும்பையைக்கொடுக்கும்.

அவ்விடும்பையாவது - தவம்இழந்து பழியும் பாவமும் எய்துதல்.

* பீ - மீ: தம்மொடு † பீ - மீ: தன்னைச்செற்றூர்க்கும்

(கு - ரை.) துறந்தவன் - துறவறத்தான். அச்செயல் - தீங்குசெய்த அச்செயல். அவனுக்கு - துறந்தவனுக்கு. கடக்கமுடியாத இடும்பை - நீக்கக்கூடாத துன்பம். செற்றார்க்கும், உம்மை - இழிவுசிறப்பு. இதனால், செறுதவர்க்கு இன்னுதசெய்தல் உய்யாவிழுமந்தரு மென்பது தானே விளங்கும். இன்னுத - எதிர்மறைப் பலவின்பால் வினையாலணையும்பெயர். செய்த பின் - எதிர்காலவினையெச்சம்; பின் - காலங்காட்டும்விகுதி. தரும் என்பது - இடைவழுவமைதி. செற்றார் - இறந்தகாலப்பலர்பால்வினையாலணையும் பெயர்; செறுஎன்ற பகுதி யொற்றிரட்டி இறந்தகாலங்காட்டிற்று. 'தரும்' என்னும்பயனிலைக்கு 'இன்னுசெயல்' என்பது தோன்றுழிவாய். (கூ)

நகச. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ - ள்.) இன்னு செய்தாரை - (தமக்கு) இன்னுதவற்றைச்செய்தாரை, ஒறுத்தல் - (துறந்தோர்) ஒறுத்தலாவது, அவர் நாண நல் நயம் செய்து விடல் - அவர்தாமே நாணுமாறு (அவர்க்கு) இனியஉவகைகளைச் செய்து (அவ்விரண்டனையும்) மறத்தல்; (எ - று.)

மறவாவழிப் பின்னும்வந்து இலைக்கு மாகலின், மறக்கற்பால வாயின. அவரை வெல்லும்உபாயம் கூறியவாறு.

இவைமூன்றுபாட்டானும், செற்றம்பற்றிச்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) ஒறுத்தல் - தண்டித்தல். அவர் தாமே நாணுமாறு - அவ்வின்னு செய்தவரே வெட்கம் அடையும்படி. உவகைகள் - சந்தோஷகரமான செய்கைகள். அவ்விரண்டனையும் - அவர்செய்த இன்னுதன, தாம் செய்தஇனிய என்னும் இரண்டையும். இவ்விரண்டையும் மறவாவிட்டால் மறுபடி மறுபடி கோபம் மூண்டு வளரும். மறக்கற்பால - மறக்கத்தக்கவை. இந்தநீதிபற்றியே நான்மணிக்கடிகையில் "வெல்வது, வேண்டின் வெகுளி விடல்" என்றது. அவரை - இன்னுசெய்தவரை. நாணஎன்னுஞ் செயவெனெச்சம் - காரியப்பொருளதாதலின், எதிர்காலத்தது; நாணுதல் - காரியமும், நன்னயஞ்செய்தல் - காரணமுமாம். நயம் - நன்மை; நல்லனவற்றிற்குப் பண்பாகுபெயர். செய்துவிடல் என்ற தொடர் - செய்து விடல் என இரண்டாகக் கொள்ளப்பட்டது. ஒறுத்தல், விடல் என்னுந் தொழிற்பெயர்களுள், முன்னது - எழுவாயும், பின்னது - பயனிலையுமாம். விடல் - நெஞ்சினின்று போகுமாறு செய்தல். (கூ)

நகந. அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றுக் கடை.

(இ - ள்.) (துறந்தார்க்கு), அறிவினுள் ஆகுவது உண்டோ - (உயிர் முதலியவற்றை உள்ளவாறுஅறிந்த) அறிவினுள் ஆவதொருபயன் உண்டோ? பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றுக்கடை - பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்உயிர்க்குவந்தன போலக் (குறிக்கொண்டு) காவாவிடத்து; (எ - று.)

குறிக்கொண்டுகாத்தலாவது - நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தம்தொழில்களாலும் பிறவாற்றாலும் உயிர்கள் உறுவன வற்றை முன்னேயறிந்து உரூமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம்புடையவற்றைப்பற்றி வருதலின் பொதுப்பட 'பிறிதினேய்' என்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கு இன்ஞசெய்தலாம் என்று அறிந்து காத்தல்வேண்டு மாகலின் 'அதுசெய்யாவழி அறிவாற் பயனில்லை' என்றுங் கூறினார்.

இதனால், சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது.

(கு - ரை.) உயிர்முதலியவற்றை - சிவான்மா பரமான்மா முதலிய தத்துவப்பொருள்களே. உள்ளவாறு - உள்ளபடி, ஐயந்திரிபில்லாமல். அறிந்த அறிவு-தத்துவஞானம். குறிக்கொண்டு - கவனம்வைத்து. பிறவாற்றாலும்-வேறுவகைகளாலும்; வேறுவகைகள் - அவ்வவ்வுயிர்களின் பகையுயிர்கள் முதலியவற்றால் ஆகுவன. உறுவனவற்றை - அடையுந் தீங்குகளே. உரூமல்-அடையாதபடி. காத்தல் - இரட்சித்தல். அஃறிணைக்கண் - விலங்கு பறவை முதலிய தாழ்ந்த பகுப்புயிர்களுள். நுண்ணியவுடம்பு உடையவற்றை-சிறிய வுடம்புள்ள எறும்பு, ஈ, புழு முதலிய பிராணிகளே. மறப்பான்-நமதுசோர்வால். நமக்கு இன்ஞசெய்தலாம் - இன்ஞசெய்தலாலாம் பழிபாவங்கள் நமக்கு நேரும். அறிவினான், ஆன் - மூன்றனுருபு, இன் - சாரியை. ஆகுவது-எதிர்காலவினையாலணையும்பெயர்: இதில், ஆகு - பகுதியென்றுவது: ஆ - பகுதி, கு - சாரியை யென்றுவது கொள்க. ஓ - எதிர்மறை. பிறிது - பிறஎன்னும் இடைச்சொல்லடியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்: இது சாதியொருமை. பிறிதினேய் - ஆறும்வேற்றுமைத் தொகை; இன் - சாரியை. போற்றுக்கடை - எதிர்மறை யெதிர்காலவினையெச்சம். "என்றும், பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றியனறிதல், சான்றவர்க்கெல்லாங் கடன்" என்ற கலித்தொகையில் இக்குறளின்பொருள் காணத்தக்கது. (கி)

ங்உகஉ. இன்ஞ வெனத்தா னுணர்ந்தவை துன்ஞமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(இ - ள்.) இன்ஞ என தான் உணர்ந்தவை-(* இவை மக்கட்கு) இன்ஞ தன என (அனுமானத்தால்) தான் அறிந்தவற்றை, பிறன்கண் செயல்-பிறன் மாட்டுச் செய்தலே, துன்ஞமை - மேவாமை, வேண்டும் - (துறந்தவனுக்கு) வேண்டும்; (எ - று.)

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை † காட்சியளவையான் அறியப்படாமை அறிக. அறமும் பாவமும் உளவாவது மனம்உளனுயவழி யாகலான், 'உணர்ந்தவை' என்றார்.

(கு - ரை.) அனுமானம் - புகையைக்கண்டு நெருப்புஉண்டென்பது போல, ஒன்றைக்கொண்டு ஊகித்தறிதல். பிறன்மாட்டு - அயலானிடத்தில்.

---

* பி - மீ: மக்கள்தமக்கு இன்ஞதனைன மனத்தாற் முனறிந்தவற்றை.

† பி - மீ: காட்சியளவையானறிக.

மேவாமை - பொருந்தாமை. காட்சியளவை - பிரதியட்சப்பிரமாணம்; அதர் வது - கண்ணற் காணுதல். உயிரினது குணமாகிய இன்பமும் துன்பமும் பிரதியட்சத்தி லறியப்படாதனவாதலால், துன்பந்தருந் தீவினைச்செயல்களை 'உணர்ந்தவை' என்றார். அறமும் பாவமும் - நல்வினை தீவினைகள். உளவா வது - உள்ளனவாவது. மனம் உளுறுயவழி என்பதற்கு - நெஞ்சறிந்து செய்தவிடத்து என்று கருத்துக்கொள்க. உணர்ந்தவை - பலவின்பால் வினையாலணையும்பெயர். துன்னுமை - எழுவாய்; வேண்டும் - பயனிலை. (சு)

ஈகள. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணுசெய் யாமை தலை.

(இ - ள்.) மனத்தான் ஆம் மாணு - மனத்தோடு உளவாகின்ற இன்னுத செயல்களை, எ ஞான்றும்-எக்காலத்தும், யார்க்குமும்-யாவர்க்கும், எனைத்து ஆன்றும் - சிறிதாயினும், செய்யாமை—, தலை - தலையாயஅறம்; (எ - று.)

ஈண்டு, மனத்தான் ஆகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்ற லுண்டாயகாலத்தும் ஆகாமையின் 'எஞ்ஞான்றும்' என்றும், எளியார்க்கும் ஆகாமையின் 'யார்க்கும்' என்றும், செயல்சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் 'எனைத்தானும்' என்றும் கூறினார்.

(கு - ரை.) மனத்தோடு உளவாகின்ற - நெஞ்சறிந்துசெய்யப்படுகிற. தலையாய அறம் - முதன்மையானதருமம். ஈண்டு - இவ்விடத்தில்: 'மனத் தானுமாணு' என்றதில். ஆற்றல் - வல்லமை. ஆகாமையின் - செய்யலா காமையின். ஆனும் - ஆயினும் என்பதன் விகாரம்; உம் - இழிவுசிறப்பு. எஞ்ஞான்றும், யார்க்கும் என்றவற்றில், உம்மைகள் - முற்றுப்பொருளன; இச்சொற்களில், எகரவினவும், யாவினவும் - எஞ்சாமையுணர்த்தும். மனத் தான், ஆன் - மூன்றனுருபு. மாணு - எதிர்மறைப்பலவின்பால்வினையா லணையும்பெயர். மனத்தானும் மாணுதனசெய்பலாகாதெனக் கருத்துக் காண்டலும்ஒன்று. (எ)

ஈகஅ. தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

(இ - ள்.) தன் உயிர்க்கு இன்னுமை அறிவான் - (பிறர்செய்யும் இன் னுதன) தன்உயிர்க்கு இன்னுவாந்தன்மையை அனுபவித்து அறிகின்றவன், மன் உயிர்க்கு தான் இன்னு செயல் - நிலைபேறுடைய (பிற) உயிர்கட்குத் தான் அவற்றைச்செய்தல், என்கொல்ஓ - என்னகாரணத்தான்? (எ - று.)

இவ்வாறே இவை பிறஉயிர்க்கும்இன்னு என்பது * அனுமானத்தான் அறிந்தவைத்துச் செய்கின்ற † பாவம் கழுவப்படாமையின், 'இன்னுதன யான் வருந்தப் பின்னேவந்து ‡ வருத்தும்' என்பது ஆகமத்தானும் அறிந்து ஒழியற்பாலன் என்பது தோன்ற 'தான்' என்றும், அத்தன்மையான் ஒழியா மைக்குக் காரணம் மயக்கம் என்பதுதோன்ற 'என்கொலோ' என்றுங் கூறினார்.

---

* பி - மீ: அனுமானத்தானும். † பி - மீ: இப்பாவம்.
‡ பி - மீ: உருத்தரும்.

இவைமூன்றுபாட்டானும், பொதுவகையான் விலக்கப்பட்டது.

(கு - ரை.) இன்ஞவாந்தன்மை-துன்பந்தருதல். நிலைபேறு-நிலைபெறுதல். அவற்றை - இன்ஞதவற்றை. அறிந்துவைத்துச் செய்கின்ற - அறிந்தும் செய்யப்படுகிற. கழுவப்படாமையின் - பிராயச்சித்தங்களாற் போக்கப்படாமையால்; அபுத்திபூர்வமாகச்செய்த தீவினைக்குப் பிராயச்சித்தம் உண்டு, புத்திபூர்வமாகச் செய்ததற்குப் பிராயச்சித்தமில்லை யென்க. பிராயச்சித்தத்திற்குக் கழுவாய் என்று ஒருபெயர் உள்ளதாதலின், 'கழுவப்படாமையின்' எனப்பட்டது. இன்ஞதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்தும் - யான் பிறர்க்குச்செய்த தீங்குகள் யானே வருந்தும்படி மறுமையில்வந்து என்னை வருத்தப்படுத்தும். ஆகமத்தானும் - சாஸ்திரக்கொள்கையாலும். ஆகமம் - பிரமாணங்களில் ஒன்று. ஒழியற்பாலன்-நீங்கத்தக்கவன். மயக்கம்-நல்லுணர்வின்மை, அவித்யை. பொதுவகையான் - பயன்நோக்கிச்செய்தல், வைரம்பற்றிச் செய்தல், சோர்வாற்செய்தல் என்னும் மூவகைக்கும் பொதுப்பட. அறிவான் - வினையாலணையும்பெயர். என்-எவன்என்னும் அஃறிணைப் பொதுக்குறிப்புமுற்றின் விகாரம்; இதுவே விஞப்பொருளுணர்த்தியதனால், கொல் ஓ இரண்டும் - அசை: ஓகாரத்தை இரக்கப்பொருளதாகவுங் கொள்ளலாம். மன்னுயிர் - வினைத்தொகை; நிலைபெறும் உயிரென்க. "இன்சொலினிதீன்றல் காண்பானெவன்கொலோ, வன்சொல்வழங்குவது" என்றதனோடு இதனை ஒப்பிடுக. தன்னுயிரைப்போலவே பிறவுயிர்களையும் பாவிக்கவேண்டுமென்பது, தூற்றுணிபு. இத்திருக்குறளை நவரசங்களுள் சாந்தமென்னும் ரசத்திற்கு உதாரணமெடுத்துக்காட்டினர் வீரசோழிய வுரையாசிரியர். "தன்னுயிர்தான்பரிந்தோம்புமாறுபோன், மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமே, லின்னுயிர்க்கிறைவனு யின்பமூர்த்தியாய்ப், பொன்னுயி ராய்ப் பிறந்துயர்ந்துபோகுமே" என்னுஞ் சீவகசிந்தாமணியை இங்கே அறிக.

ஈகஈ. பிறர்க்கின்ஞ மூற்பகற் செய்யிற் றமக்கின்ஞ
பிற்பகற் ரூமே வரும்.

(இ - ள்.) (துறந்தவர்), பிறர்க்கு இன்ஞ முன் பகல் செய்யின் - பிறர்க்கு இன்ஞதனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின், தமக்கு இன்ஞ பின் பகல் தாமே வரும் - தமக்கு இன்ஞதன அதன்பிற்கூற்றின்கண் (அஃதுசெய்யாமல்) தாமே வரும்; (எ - று.)

'மூற்பகல்', 'பிற்பகல்' என்பன - பின்முன்ஞகத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. தவம் * அழிதலின், அங்ஙனம் கடிதினும் எளிதினும் வரும்; அதனுன் அவைசெய்யற்க என்பதாம். இனி, 'தானேவரும்' என்பது பாடமாயின் அச்செயல்தானே தமக்கு இன்ஞதனவாய்வரும் என உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்து உரைக்க.

(கு - ரை.) மூற்கூற்றின்கண் - முன்பாகத்தில். பகல்முன், பகற்பின் என்னும் ஆறும்வேற்றுமைத்தொகைகள் - மூற்பகல் பிற்பகல் என முன்பின்

* பி - ம்: இழத்தலின்.

ஞைத் தொக்கன; இது, இலக்கணப்போலியெனப்படும். இங்கு முற்பகல் பிற்பகல் என்பன - சரியாக அத்தக்காலத்தையே குறிப்பனவல்லாமல் பக லென்பதுபோலுது குறிப்பது: என்றாலும், முன் பின்என்பன ஒன்ற னுடைய முற்கூறு பிற்கூறுஎன்றே பொருள்படுதலறிக. "முற்பகற் செய் யிற் பிற்பகல் விளையும்" என்பது ஔவையார் அமுதமொழி; "நெடியது காண்கலாய் நீயினியை நெஞ்சே, கொடியதுகூறினுப் மன்ற - அடியுளே, முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற்பகற் கண்டு விடும்" என்பது பழமொழி: "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு, பிற் பகற்காண்குறூஉம்" என்பது சிலப்பதிகாரம். தவம் அழிதலின் - இன்னுதன செய்தகாரணத்தால் தன்னுடையதவம் அழிந்துவிடுதலால். கடிதினும் வரும் - விரைவிலும்வரும். அதனுன் அவைசெய்யற்க-ஆதலாற் பிறன்கேடு செய்யாதிருக்க. 'தானேவரும்' என்ற பாடத்துக்கு - பிறர்க்கு இன்னு முற்பகலிற் செய்யின் அச்செயல்தானே பிற்பகலில் தமக்கு இன்னு தனவாய் வரு மென்க. இங்கே 'தானேவரும்' என்ற பாடத்துக்கு உபசார வழக்கு என்றது - பிறர்க்கு இன்னுசெய்தல் தனக்கு இன்னுதவற்றிற்குக் காரணமா மென்று சொல்லவேண்டியதை அங்ஙனஞ் சொல்லாமல், பிறர்க் கின்னு செய்தல்தானே தமக்கு இன்னுதனவாய் வரு மெனக் காரணத்திடத் தில் காரியத்தின்தன்மையை ஏற்றிக்கூறியதை. ஆக்கம் வருவித்தல் - 'தமக்கின்னு' என்றதில்; [நன் - வினை - உரு]: ஆய் என்பது - ஆக்கச் சொல். இனி, முன் உரைக்கு - "தமக்கின்னு" என்பதிலுள்ள இன்னு - எழுவாய்; வரும் - பயனிலை. பின் உரைக்கு - செய்யின் என்கிற எச்சத்தி னின்று கொள்ளப்பட்ட செய்தல் - எழுவாய்; இன்னுவாய்வரும்என்பது - பயனிலை. இக்குறளை 'பிறதூன்முடித்தது தானுடன்படுதல்' என்னுந் தந்திரவுத்தி யென்பர் வீரசோழியவுரைகாரர். 'பகலினுடைய முன் - முன் பகல்; இது - முன்பதம் எழுவாய்வேற்றுமையாதலின், எழுவாய் வேற் றுமைத் தற்புருடனும்' என்பதும் அவ்வுரையிற் கண்டது. இக்குறளில் 'இன்னு தாமேவரும் எனச் செயப்படுபொருள் தேற்றத்தோடு வினை முதலாய்ச் செயப்படுபொருள்குன்றியவினைகொண்டது' என்பது இலக்க ணக்கொத்துரை. இதில் 'இன்னு தாமே வரும்' எனச் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச்சொல்லோடு வருங் கருமத்தைக் கருமகர்த்தாவென் பர், என்பது பிரயோகவிவேகவுரைகாரர்: முற்பகல், பிற்பகல் என்பன - பிரதமாதற்புருட னெனவும் அதில் வரும். (கூ)

கூஉ0. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

(இ - ள்.) நோய் எல்லாம் - இன்னுதன எல்லாம், நோய் செய்தார்மேல ஆம் - (பிறிதோருயிர்க்கு) இன்னுதனசெய்தார்மேலவாம்; (அதனுல்), நோய் இன்மை வேண்டுபவர் - (தம்உயிர்க்கு) இன்னுதன வேண்டாதார், நோய் செய்யார் - (பிறிதோருயிர்க்கு) இன்னுதன செய்யார்; (எ - று.)

உயிர்நிலத்து வினைவித்து இட்டபார்க்குவிளைவும் அதுவேயாகலின், 'நோ யெல்லா நோய்செய்தார்மேலவாம்'என்றார். இது-சொற்பொருட்பின்வருநிலை.

இவையிரண்டுபோட்டானும், அதுசெய்தார்க்குவருந்தீங்கு கூறப்பட்டது.

(கு - ரை.) இன்னுதனஎல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னுதனசெய்தார் மேலவாம் - வேறொருபிராணிக்குத் தீங்குசெய்தவர்க்கே பலவகைத்தீங்கு களும் வரும். உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும்அதுவே - உயிராகியநிலத்தில் வினையாகிய விதையை இட்டார்க்கு அதற்குஏற்ற விளைவே விளையும் என்பது பொருள்; உவர்நிலத்து விளைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே என்ற பிரதிபேதத்துக்கு - உவர்க்களத்தில் உப்புவிளையமுயற்சி செய்தவர்க்குப் பயன் உப்பாகவேயிருக்கும்; இவ்வாறே பிறர்க்குத் தீங்கு செய்தவர்க்குப்பயனும் தீங்காகவேயிருக்கும் என்பது, பொருள். சீவகசிந்தா மணியில் முத்தியிலம்பகத்தில் ''வெவ்வினை செய்யுமாந்த ருயிரெனு நிலத்து வித்தி,யவ்வினை விளையு ளுண்ணு மவ்விடத்தவர்கள் துன்பம்''என 'தீவினை யைச் செய்யும் மாந்தர் தமது உயிரென்னும் நிலத்தே அத்தீவினையை விதைத்து அத்தீவினையின் பயனை நுகரும் அந்நரகத்திடத்தே அந்நரகர் ப்படுந் துன்பம்' என்று கூறியுள்ளதனால், 'உவர்நிலத்துவிளைவித்திட்டார்க்கு' என்றதனினும் 'உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு' என்பது சிறக்கு மென அறிக. சோற்போருட்பின்வந்நிலையணியாவது - பொருள்வேறுபடாது ஒரு சொல் மீண்டும் மீண்டும் ஒருசெய்யுளில் வருவது; இதனை வடநூலார் உபயாவ்ருத்திதீபக மென்பர்: இக்குறளில் நோய் என்ற ஒரு சொல், இன்னுதன என்ற பொருளிற் பலகால்வந்தது காண்க. அது செய் தார்க்கு - தீங்குசெய்தவர்க்கு. நோய் என்பது - பால்பகா வஃறிணைப்பெய ராதலால், எல்லாம் என்னும் பன்மைப்பெயரோடு தொடர்ந்தது. மேல - பலவின்பாற்குறிப்புவினையாலணையும்பெயர். பின்வாக்கியத்திற்கு முன் வாக்கியம் காரணம். மேற் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் ''தீயவை தீய பயத்தலாற்றீயவை, தீயினுமஞ்சப்படும்'', ''தீப்பாலதான்பிறர்கட் செய் யற்கநோய்ப்பால, தன்னையடல்வேண்டாதான்'', 'தன்னைத்தான் காதலனு யினைனைத் தொன்றும், துன்னற்க தீவினைப்பால்'' என்ற குறள்களோடு இதனை ஒப்பிடுக. (கo)

நூநூ - ஆம் அதிகாரம்—கொல்லாமை.

அஃதாவது - ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையனஈறுய உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்களெல்லா வற்றினுஞ் சிறப்புடைத்தாய், கூறுதஅறங்களையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(கு - ரை.) ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையன ஈறுய உயிர்கள்- ஐயறிவுடையனவும், நாலறிவுடையனவும்,மூவறிவுடையனவும், ஈரறிவுடை யனவும், ஓரறிவுடையனவும் ஆகிய பிராணிகள். ஓரறிவுயிர்கள்-முறையே மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிய ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை ஆகிய ஐம்புலன்களில் ஸ்பரிச அறிவை மாத்திரமுடைய புல், மரம், புதல், கொடி, புழு முதலியன. ஈரறிவுயிர்கள்-

ஸ்பரிசம், ரசம் என்னும் இரண்டு அறிவையுடைய சிப்பி, சங்கு, கிளிஞ்சில் முதலியன. மூவறிவுயிர்கள் - ஸ்பரிசம், ரசம், கந்தம் என்னும் மூன்று அறிவையுடைய செல், எறும்பு, ஈசல், அட்டை முதலியன. நாலறிவுயிர்கள் - ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம் என்னும் நான்கு அறிவையுடைய தும்பி, வண்டு, நண்டு, தேனீ முதலியன. ஐயறிவுயிர்கள் - கீழ்க்கூறிய நான்கோடு சப்தமும் ஆகிய ஐந்து அறிவையுமுடைய தேவர், மனிதர், நரகர், மிருகம், பறவை, பாம்பு முதலியன. "ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே, இரண்டறிவதுவே யதனெடு நாவே, மூன்றறிவதுவே யவற்றெடுமூக்கே, நான்கறிவதுவே யவற்றெடு கண்ணே, ஐந்தறிவதுவே யவற்றெடுசெவியே, ஆறறிவதுவே யவற்றெடு மனனே, நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே", "புல்லுமரனு மோரறி வினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே", "நத்துமுரணுமீரறிவினவே, பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே", "சிதலுமெறும்பு மூவறிவினவே, பிறவு முளவே யக்கிளைப்பிறப்பே", "நண்டுந்தும்பியு நான்கறிவினவே, பிறவு முளவேயக்கிளைப் பிறப்பே", "மாவுமாக்களுமையறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே", "மக்கள்தாமேயாறறிவுயிரே, பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே" என்றார், ஆசிரியர் தொல்காப்பியனார். ஓரறிவுடையன முதலாக வன்றி ஐயறிவுடையன முதலாகக் கூறினார், சிறப்புநோக்கி. சோர்ந்தும் - மறந்தும்; துறவறத்துக்குரிய விரதங்க ளெல்லாவற்றுள்ளுஞ் சிறப்புடைய தாதலின், கொல்லாமையை இறுதியில் வைத்தார். கூறுத அறங்களையும் அகப்படுத்துநிற்றலின் என்றது - இந்தக் கொல்லாமை யென்னுங் அற மொன்று ஒருவனிடத்து உள்ளதாயின் அவனிடத்து மற்றையதருமங்கள் இல்லாவிடினும் குற்றமில்லை யென்பதும், இவ்விரதமொன்று இல்லையாயின் மற்றையறங்கள் இருந்தும் பயனில்லை என்பதும் தூற்றுணிபாதலால். இன்ஞதசெயல்களுள் கொலை முதன்மையான தாதலின், இன்ஞசெய்யாமை என்னும் அதிகாரத்தின்பின் கொல்லாமையென்னும்அதிகாரம் வைக்கப் பட்டதென்றுங் கூறலாம்.

ஈஉக. அறவிணை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவிணை யெல்லாந் தரும்.

(இ - ள்.) அறம் வினை யாது எனின்-அறங்களெல்லா மாகிய செய்கை யாதென்று வினவின், கொல்லாமை - (அஃது ஓருயிரையும்) கொல்லாமை யாம்; கோறல் - (அவற்றைக்)கொல்லுதல், பிற வினை யெல்லாம் தரும் - பாவச்செய்கைகளெல்லாவற்றையும் (தானே) தரும் (ஆதலான்;) (எ - று.)

அறம் - சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலு மாகலின், கொல்லாமையை 'அறவினை' என்றார். ஈண்டு 'பிறவினை' என்றது, அவற்றின் வினைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பம், ஏனைப்பாவங்க ளெல்லாங் கூடியும் விளைக்கமாட்டா * என்பதாம். கொல்லாமைதானே பிற அறங்களெல்லாவற்றின்பயனையுந்தரும் என்று மேற்கோள் கூறி, அதற்கு எது எதிர்மறைமுகத்தாற் கூறியவா ருயிற்று.

* பி - ம்: என்றவாறு.

(கு - ரை.) அறம்என்பது - ஈறுதோன்றாத சாதியொருமை. 'அறமாவது - மனுமுதலியநூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்' என்று உரைப்பாயிரத்தில் அறத்திற்கு இலக்கணங்கூறியதற்கு ஏற்ப, 'விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின்' என்றார். கீழ் அறவினை என வந்ததனால், பிறவினையென்றது - நல்வினையினும் வேறாகிய தீவினைகளையுணர்த்தும். அவற்றின்விளைவை - அந்தத்தீயகாரியங்களின்பயனாகிய பாவங்களை: பிறவினையென்றது - அவற்றின்விளைவுக்கு, ஆகுபெயர். எனைப் பாவங்கள் - கொலையொழிந்த மற்றையனவான பிறர்மனைநயத்தல், கள் பருகுதல், திருடுதல், சூதாடல் முதலிய பாவச்செயல்கள். அறவினை கொல்லாமை யென்பதற்கு - கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று கருத்தாதலால், 'கொல்லாமை தானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந்தருமென்று மேற்கோள்கூறி' என்றது. மேற்கோள் - சித்தாந்தம்: பட்சமெனினுமாம். 'அறவினையென்பது கொல்லாமை' என்ற இந்தக்கொள்கையைச் சாதிக்கும்படி ஏது கூறவேண்டுமிடத்து, 'கோறல் பிறவினையெல்லாந் தரும்' என்று, கொல்லாமைக்கு எதிர்மறையான கோறலென்பது தீவினைப்பயனை விளைத்தலைக் கூறியது காண்க; பட்சத்தை ஏதுவால் சாதித்தல், தருக்கநூல்முறை. எதிர்மறையேது - வியதிரேகவேது எனப்படும். "ஆனையடியுளடங்காவடியில்லை, தானதுபோனிற்கின்றதன்மைதான்—ஊனுயிரைக், கொல்லாவறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு, மெல்லாவறமுமிசைத்து" என்றது காண்க. 'கோறல் பிறவினையெல்லாந்தரும் - இது, பாவகருத்தா' என்பது பிரயோகவிவேகம். இக்குறளை 'தொகுத்துக்காட்டல்' என்னுந் தந்திரவுத்திக்கு உதாரணங் காட்டினார், வீரசோழியவுரைகாரர். 'கொல்லாமை அறவினையெல்லாந் தரும், கோறல் பிறவினையெல்லாந்தரும் - இவை, தொழிற்பெயர்க் கருத்தா' என்பது - இலக்கணக்கொத்துரை. (க)

கூஉஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(இ - ள்.) பகுத்து உண்டு - (உண்பதனைப் பகித்தஉயிர்கட்குப்) பகுத்துக் கொடுத்து உண்டு, பல் உயிர் ஓம்புதல்-ஐவகையுயிர்களையும் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - அறநூலுடையார் (துறந்தார்க்குத்) தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறம்; (எ - று.)

'பல்லுயிரும்' என்னும் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. ஓம்புதல் - சோர்ந்தும் கொலைவாராமற் குறிக்கொண்டுகாத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையாவுறுப்பாகலின், அச்சிறப்புத் தோன்ற அதனை இறந்தகாலவினையெச்சத்தாற் கூறினர். எல்லாநூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பாகலின், ஈண்டும் பொதுப்பட 'நூலோர்'என்றும்; அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான், 'இது தலையாய அறம்' என்றுங் கூறினர்.

(கு - ரை.) ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங், கைம்புலத்தாறோம்பல்தலை'' என்கிற நீதி இல்லறத்தார்க்கே யாதலின், இங்கே 'பகுத்துஉண்டு' என்பதற்கு - துறவறவியலுக்குஏற்ப 'பசித்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துஉண்டு' என்று உரைக்கப்பட்டது. பல்லுயிர் - ஐவகை யுயிர்: ஓரறிவுயிர்முதல் ஐயறிவுயிரீறுனவை; ஈற்றில், முற்றும்மைதொக்கது விகாரம். ஓம்புதல் - காத்தல். அறநூலுடையார் - தருமசாஸ்திரத்துக் குரியவர். தொகுத்த - திரட்டிக்கூறின. அதற்கு - காத்தற்கு. இன்றியமை யாஉறுப்பு - இல்லாமல்முடியாத [இருந்தேதீரவேண்டிய] அவயவம்; அவசிய மானஅங்கம். ''உண்பொழுது நீராடி யுண்டலும்'' என்னுமிடத்து 'நீராடி' என்னும் இறந்தகாலவினையெச்சம் 'உண்டல்'என்னும்வினைக்கு அவசியமான அங்கமாவதுபோல, இங்கே 'பகுத்துண்டு' என்னும் இறந்தகாலவினையெச் சம் பல்லுயிரோம்புதல் என்னும்வினைக்கு அவசியமான அங்கமென அறிக. எல்லார்க்கும் - எல்லாமதத்தார்க்கும். ''ஒன்றே பொருளென்பவேறென்ப வேறெனின், அன்றென்ப வாறுசமயத்தார்-நன்றென, வெப்பாலவருமியை பவேவள்ளுவனார், முப்பால்மொழிந்தமொழி''என்னுந் திருவள்ளுவமாலைச் செய்யுளாலும், எல்லார்க்கும்பொதுப்படக்கூறுதல் இவர்க்கு இயல்பாதல் அறிக. அவர்எல்லார்க்கும் ஒப்ப மூடிதலான்-வெவ்வேறுவகைப்பட்ட அந்த எல்லாமதத்தார்க்கும் இக்கொல்லாமையாகியவிரதம் வேறுபாடின்றி உடன் பாடாயிருத்தலால். (உ)

உஉங. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(இ - ள்.) ஒன்று ஆக நல்லது கொல்லாமை - (நூலோர்தொகுத்த அறங்களுள் தன்னோடு இணையொப்பதின்றித்) தானேயாக நல்லது கொல் லாமை; மற்று பொய்யாமை அதன்பின் சார நன்று - அஃது ஒழிந்தால் பொய்யாமை அதன்பின்னே நிற்க நன்று; (எ - று.)

'நூலோர்தொகுத்த அறங்களுள்' என்பது, அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும், மேல் ''பொய்யாமை பொய்யாமை யாற் றின்'' எனவும், ''யாமெய்யாக் கண்டவற்று ளில்லே'' எனவும் கூறினராக லின், இரண்டுஅறத்துள்ளும் யாதுசிறந்தது என்று ஐயம் நிகழுமன்றே: அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன்பின்சாரப் பொய்யாமைநன்று'என்றார்; மூற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனே 'பின்சாரநன்று' என்றது, நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும் தீமைபயக்கும்வழி மெய்யும் * பொய்யாயும் இதனேப்பற்ற அது திரிந்துவருதலான் எனஉணர்க.

இவைமூன்றுபாட்டானும், இவ்வறத்தினதுசிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) நூலோர் - தருமசாஸ்திரமுடையோர். தன்னோடு இணை யொப்பது இன்றி - தனக்குச் சமானமாகச்சொல்லுமாறு ஒத்திருப்பது வேறொன்று மில்லாமல். அஃது ஒழிந்தால் · அதனைவிட்டு இரண்டாவதை

* பி - மீ: பொய்யாயும் திரிந்துவருதலான்.

ஆர்ய்த்தெர்டங்கினுல். பொய்யாமை - பொய்கூறுமை. தீழ்ச்செய்யுளில் வந்த தொடரே இங்கே வருவிக்கப்பட்டதனுல், 'நூலோர்தொகுத்த அறங்க ளென்பது அதிகாரத்தான் வந்தது' என்றூர். "பொய்யர்மை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று", "யாமெய்யாக்கண்ட வற்றுளில்லை யெனைத்தோன்றும், வாய்மையினல்லபிற" என்பன - முன் வாய்மையென்னும் அதிகாரத்திற் கூறியவை. இரண்டு அறத்துள்ளும் - கொல்லாமை, பொய்யாமை என்னும் இரண்டுதருமங்களுள். ஐயம் நிகழு மன்றே - சந்தேகந் தோன்றுமன்றே? மாறுகொளக்கூறலென்னுங் குற்றம் நூலில்வாராதிருக்குமாறு இங்ஙனங் கூறினரென்க. முன்சொன்ன விதியி னும் பின்சொல்லும் விதி சிறப்புடைய தென்பது நூற்கொள்கை. "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்," "பொய்ம்மையும்வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்" என்ற படி நிகழாதது கூறுதலும் நன்மைதந்தால் உண்மையாகவும், நிகழ்ந்ததுகூறு தலுந் தீமைதந்தால் பொய்ம்மையாகவும் பயனேநோக்கி இங்ஙனம் வாய்மை யின்தன்மை மாறுபடும்; கொல்லாமையோ, அங்ஙனம் மாறுபடாது: ஆதலின், பொய்யாமையினுங் கொல்லாமை மேலானது எனக் காண்க. பொய்போலக் கொலை நன்மைபயந்தாலும் குணமாகாது, குற்றமேயாம்; கொல்லாமை தீமை தந்தாலுங் குற்றமாகாது, குணமேயா மென்க. இதனைப்பற்ற அதுநிரித்து வருதலான் - கொல்லாமையோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துப் பொய்யாமை மாறுபட்டுவருதலால்: பயனேநோக்கக் காரணத்தின்தன்மை மாறுபடுதலா லென்றலும் உண்டு. இவ்வறத்தினது - கொல்லாமையினது. ஒன்று - ஒப் பற்றது. மற்று - வினைமாற்று. "கொல்லா நலத்தது நோன்மை" என்பர், மேல் 'சான்றாண்மை' என்னும் அதிகாரத்தும். (ங)

ஙஉச. நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(இ - ள்.) நல் ஆறு எனப்படுவது யாது எனின் - (மேற்கதி வீடுபேறு கட்கு) நல்லநெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், (அஃது), யாது ஒன்றுமெம் கொல்லாமை சூழும் நெறி-யாதோருயிரையுங் கொல்லாமை யாகிய அறத்தினைக் காக்கக்கருதும் நெறி; (எ - று.)

'யாதொன்றும்' என்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் - வழுவாமற் காத்தல்.

இதனுன், இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) மேற்கதி - சுவர்க்கம் முதலிய மேலான பதவிகள். வீடு பேறு - முத்தியையடைதல். நெறி - வழி. வினவின் - கேட்டால். அஃது - நல்லநெறி. கருதும் - எண்ணும். ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு-புல் மரம் முதலியவற்றையும் உள்ளிடுதற்பொருட்டு. வழுவாமல் - தவருமல். எனப் படுவது + யாது = எனப்படுவதியாது; குற்றியலிகரம்: அலகுபெறவில்லை. யாதொன்றும், உம்மை - இழிவுசிறப்பு. (ச)

நூஉடு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(இ - ள்.) நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - (பிறப்புநின்ற) நிலையை அஞ்சி(ப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையை)த் துறந்தாரெல்லாருள்ளும், கொலை அஞ்சி கொல்லாமை சூழ்வான் - கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன், தலை - உயர்ந்தவன்; (எ - று.)

பிறப்புநின்றநிலையாவது - இயங்குவ நிற்பவென்னும் இருவகைப்பிறப்பினும் இன்பமென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டாற் பலவா மாகலின், 'நீத்தாரெல்லாம்' என்றார்.

இதனால், இவ்வறம்மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது.

(கு - ரை.) மனைவாழ்க்கை - இல்லறவாழ்வு. இயங்குவ - சஞ்சரிக்குமுயிர்கள்; இவை - ஜங்கமமெனவும், சரமெனவும்படும். நிற்ப - சஞ்சரித்தலில்லாத உயிர்கள்; இவை - ஸ்தாவரமெனவும், அசரமெனவும்படும். நால்வகைத்தோற்றத்து எழுவகைப் பிறப்பின் ஐவகை யுயிர்களும் இத்தச் சரம் அசரம் என்னும் இருவகையில் அடங்குதலால், 'இருவகைப்பிறப்பு' என்றார். "தேவரேதாமுமாகித் தேவரால் தெழிக்கப்பட்டும், ஏவல்செய்திறைஞ்சிக் கேட்டு மணிகமாப்பணிகள்செய்தும், நோவதுபெரிதுந்துன்பம் நோயினுட் பிறத்தல் துன்பம், யாவதுந்துன்பம் மன்னுயாக்கைகொண்டவர்கட்கென்றான்" என்ற சிந்தாமணிச்செய்யுளாலும் எல்லாப்பிறப்புந் துன்பமேதருவனவாதல் காண்க. சமயவேறுபாடு - மதபேதம். குடீசகம் வெகூதகம் ஹம்ஸம் பாமஹம்ஸம் என்று ஏகதண்ட சந்நியாசம் திரிதண்ட சந்நியாசமென்று துறவில் பலவகைக் கூறப்படுவதால், துறவு ஒன்றேயாயினும் சமயவேறுபாட்டாற் பலவா மென்றார் ரென்னலாம். (நு)

நூஉசு. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

(இ - ள்.) கொல்லாமை - கொல்லாமையை, மேற்கொண்டு - (விரதமாக) மேற்கொண்டு, ஒழுகுவான் - ஒழுகுவானது, வாழ்நாள்மேல் - வாழ்நாளின்மேல், உயிர் உண்ணும் கூற்று செல்லாது—; (எ - று.)

மிகப்பெரியஅறஞ்செய்தாரும் மிகப்பெரியபாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மைதன்னுள்ளே அவற்றின்பயன் அனுபவிப்பாரென்னும் அறநூல் துணிபுபற்றி, இப்பேரறஞ்செய்தான்தானும் கொல்லப்படான்; படாஞ்சுகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றியெய்து மென்பார், 'வாழ்நாள்மேற் கூற்றுச் செல்லாது' என்றார்; செல்லாதாகவே, காலம் நீட்டிக்கும்: நீட்டித்தால், ஞானம்பிறந்து உயிர் வீடுபெறும் என்பது கருத்து.

இதனால், அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(கு - ரை.) ஒழுகுவானது - நடப்பவனுடைய. வாழ்நாள் - ஆயுள்நாள். உயிர்உண்ணும்கூற்று செல்லாது - உயிரை உடம்பினின்று கவருந்தன்மை

யுள்ள யமன் கொலைகுறித்துச் செல்லான். 'தேவர்களே இருதிணையாலுஞ் சொல்லலாம்' என்பது இலக்கணமாதலால், 'கூற்று செல்லாது' என இங்கு அஃறிணையாற்கூறினர். முறையானன்றி என்பதற்கு - மறுமையிலல்லாமல் என்று கருத்து. 'அதிக நல்வினையாலும், அதிகதீவினையாலும் இம்மையிலேயே பயன் அனுபவிக்கப்படும்' என்பது-தருமசாஸ்திரக்கொள்கை. இப்பேரறஞ்செய்தான் தானும்-கொல்லாவிரதம்மேற்கொண்டவனும். கொல்லாமையைச்செய்தல் - நிவ்ருத்திதர்மம். அடியிற்கட்டியவாழ்நாள் - படைப்புக்காலத்தில் இவ்வளவென்று வரையறுத்த ஜீவகாலம். இடையூறின்றி எய்தும் - தடையின்றி [நடுவிற்குறைதலில்லாமல்] நிலைபெறும். காலம் - ஆயுட்காலம். நீட்டிக்கும் - வளரும். அவர்க்கு - கொல்லாவிரதத்தார்க்கு. "வேள்வி வாய்க்கண்படுத்தும் வெவ்வினைசெயாடவர்கை, வாளின்வாய்க்கண்படுத்தும் வாரணத்தினீருரிபோல், கோளிமிழ்புநீள்வலைவாய்க் கண்படுத்து மின்னணமே, நாளுலப்பித்திட்டார் நமரலாதாரெல்லாம்" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளிலும் இக்கருத்து விளங்குதல் காண்க. (சு)

நூஉள. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(இ - ள்.) தன் உயிர் நீப்பின்உம் - (அதுசெய்யாவழித்) தன்உயிர் (உடம்பின்) நீங்கிப்போமாயினும், தான் பிறிது இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோர்இன்னுயிரை (அதனுடம்பின்) நீக்குந்தொழிலைச் செய்யற்க; (எ - று.)

'தன்னை அது கொல்லினும் தான் அதனைக் கொல்லற்க'என்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனி, 'தன்உயிர்நீப்பினும்' என்றதற்கு - (சாந்தியாகச்செய்யாதவழித்) தன்உயிர் போமாயினு மென்று உரைப்பாரு முளர்; பிறர்செய்தலும் ஆகாமையின், அஃது உரையன்மை அறிக.

(கு - ரை.) அது செய்யாவழி - கொலையைச் செய்யாதபொழுது. உடம்பின் - உடம்பினின்று. பிறிதோர் இன்னுயிரை - மற்றொருபிராணியின் இனியஉயிரை. எந்தப்பிராணிக்கும் உயிரினும்இனியது வேறின்மைதலால், இன்னுயி ரென்றார். அது - பிறிதொருபிராணி. கொலையுண்டவழி-தான் ஒன்றினாற்கொல்லப்பட்டு இறக்தவிடத்து. தேய்தல் - குறைதல். கொன்றவழி - தான் ஒருபிராணியைக் கொன்றபொழுது. தன்னைக்கொல்லவரும் உயிரையுந் தான் கொல்லலாகா தென்பது, முதலுரைக்குக்கருத்து. இரண்டாமுரைக்குக்கருத்து - தன்உயிரை இறவாமற் காக்கும்பொருட்டுத் தோஷசாந்தியாக வேறொருபிராணியைக்கொன்று பலியிடுதலும் ஆகா தென்பதாம்; இங்ஙனம் பொருள்படவேண்டுமாஞல், 'தான்' என்ற சொல் இருத்தல்கூடாது. ஏனென்றால், 'தன்னுயிர்போகாதிருத்தற்காகத் தானே பிறிதின்னுயிர்நீக்கும் வினைசெய்யற்க' என்ற இதில், தன்னுயிர்போகாதிருத்தற்காகப் பிறர் பிறிதின்னுயிர்நீக்கும் வினைசெய்யலா மென்பது ஏற்படுமன்றே? அங்

ஈனம் தன்பொருட்டாகப் பிறர் பிறிதின்னுயிர்கீக்கும் வினைசெய்தலும் ஆசிரியர்க்கு உடன்பாடு அன்று: ஆதலால், அங்ஙனம் பொருள்கூறுதல் ஆசிரியர்க்கு உடம்பாடன்று என்று மறுத்தார், பரிமேலழகர். பீப்பின்என்னும் எதிர்காலவினையெச்சத்தில், நீ - பகுதி. உம்மை - இழிவு சிறப்பு. இத்திருக்குறளை 'மறுத்தல்' என்னும் மதத்திற்கு உதாரணங்காட்டினர் வீர சோழியவுரைகாரர். (எ)

நூஉ அ. நன்றுகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றுகு மாக்கங் கடை.

(இ - ள்.) நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனின்உம் - (தேவர்பொருட்டு வேள்விக்கட் கொன்றால்) இன்பம்மிகுஞ் செல்வம் பெரிதா மென்று (இல்வாழ்வார்க்குக்) கூறப்பட்டதாயினும், சான்றோர்க்கு கொன்று ஆகும் ஆக்கம் கடை - (துறவான்) அமைந்தார்க்கு (ஓருயிரைக்) கொல்ல வருஞ் செல்வம் கடை; (எ - று.)

இன்பம்மிகுஞ் செல்வ மாவது - தாமுந் தேவராய்த் துறக்கத்துச் சென்று எய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கு ஏதுவாகலானும், வீடாகிய ஈறில்இன்பமெய்துவார்க்குக் கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகா தென்றமையின், விதிவிலக்குக்கள் தம்முள் மலையாமை விளக்கியவா றுயிற்று. இஃது, இல்லற மன்மைக்குக் காரணம்.

இவையிரண்டுபோட்டானும், கொலையது குற்றம் கூறப்பட்டது.

(கு - ரை.) வேள்விக்கண் - யாகத்தில். இன்பம்மிகுஞ் செல்வம் - சிற்றின்பவனுபவம் மிகுதற்கிடமான செல்வம். துறவான் அமைந்தார் - துறவறத்துக்குரிய இலக்கணத்தால் நிறைந்தவர். கொல்லவரும்செல்வம்-கொல்லுதலால் உளதாகுஞ் செல்வம். கடை - இழிவானது. துறக்கத்துச்சென்று எய்தும் - சுவர்க்கத்திற் போயடையும். அது சிறிதாகலானும் - அச்செல்வம் சிற்றின்பத்தையே தருவதாய் அற்பமாதலாலும். பின்னும் - மறுபடி. ஏது-காரணம். இருவினையுமற்று முத்திபெற்றவர்க்குமாத்திரம் பிறப்புஇன்றே யொழிய வினைப்பயன்களால் சுவர்க்க நரக மடைபவர்க்கு மீண்டும் இங்குப் பிறத்தல் உண்டுஆதலால், 'பின்னும்பிறத்தற்கு ஏதுவாகலானும்' எனப்பட்டது. இங்குச்செய்த புண்ணியத்தால் மேலுலகஞ்சென்று தேவகதியையடைந்து இன்பமனுபவிப்பவர், அப்புண்ணியம் முடிந்தவாறே தேவகதியையிழந்து மீண்டும் இங்குப் பிறப்ப ரென்க. வீடாகிய ஈறில்இன்பம் எய்துவார்க்கு - முத்தியாகிய அழிதலில்லாதபேரின்பத்தை அடையுந் துறவறத்தார்க்கு. 'எவ்வுயிரையுங் கொல்லுதலாகாது' என்ற பொதுவிதியின்மேற் சிறப்புவிதியாக 'யாகத்திற் பசுவைக் கொல்லலாம்' என்று தருமசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பதோடு, இங்குத் துறவறவியலில் 'எவ்வுயிரையுங் கொல்லலாகாது' என்ற விலக்குப் பொருந்துமாறு என்னையெனின்,—யாகத்திற் பசுவைக்கொல்லுதல் சுவர்க்கச்சிற்றின்பமடையக்கருதும் இல்லறத்தார்

க்கு ஒக்குமாயினும், முத்திப்பேரின்பமடையக்கருதுந் துறவறத்தார்க்கு ஒவ்வாது என ஒன்றோடொன்று மாறுபடாதபடி கூறியவாறு. இது, இக்குறளில் 'சான்றோர்க்கு' என்ற சொல்லால் விளக்கப்பட்டது. இஃது - கொல்லாமை. கீழ்க்குறித்த காரணம்பற்றியே இக்கொல்லாமை யென்னும் அதிகாரம், இல்லறவியலில் வைக்கப்படாது துறவறவியலில் வைக்கப்பட்டது. நன்று - நல்லது; இன்பம்: ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். நன்றாகும் ஆக்கம் - பெயரெச்சம் காரியப்பொருளது; 'நோய்தீருமருந்து' என்றவிடத்துப்போல. காரணப்பொருளதாகிய கொல்லவென்னுஞ் செயவெனெச்சம், கொன்றனைத் நிரிந்து நின்றது. (அ)

ஈஉஊ. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(இ - ள்.) கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலையுடைய ராகிய மாந்தர், புன்மை தெரிவார் அகத்து புலை வினையர் - (அத்தொழிலின்) கீழ்மையை (அறியாத நெஞ்சத்தராயினும்) அறிவார்நெஞ்சத்துப் புலைத்தொழிலினர்; (எ - று.)

'கொலைவினையர்' என்றதனுன், வேள்விக்கட் கொலையன்மை அறிக. 'புலைவினையர்' என்றது - தொழிலாற் புலைய ரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவர் என்பதாம்.

(கு - ரை.) கீழ்மை - இழிவானதன்மை. புலைத்தொழிலினர் - சண்டாளர்க்குரிய இழிதொழி லுடையவர். இங்கேகுறித்தது யாகத்தில் ஒவ்வொரு சமயத்தில்நேரும் கொலையன்று என்பதை 'கொலைவினையர்' என அதனையே தொழிலாகவுடையவ ரென்பதனுல் விளக்கினர். தொழிலாற்புலையர்-கருமசண்டாளர். கொல்லுதல்செய்பவர் மறுமையில் நரகத்தன்பமடைவரென்பது மாத்திரமே யன்றி இம்மையிலுங் கீழ்ச்சாதிப்பண்படைவர் என்பது, இக்குறளில் விளக்கப்பட்டது. 'மாக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வு மாத்திரமேயுடையராய் மனவுணர்ச்சியில்லாத விலங்குபோன்ற அவிவேகிகளான ஒருசார் மானிடங்கள்' என்பதனுலால் 'கொலைவினையராகியமாக்கள்' எனப்பட்டது. (கூ)

ஈஉO. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(இ - ள்.) செயிர் உடம்பின் செல்லா தீ வாழ்க்கையவர் - (நோக்கலாகா) நோயுடம்புடனே வறுமைகூர்ந்த இழிதொழில்வாழ்க்கையினையுடையாரை, உயிர் உடம்பின் நீக்கியார் என்ப - (இவர் முற்பிறப்பின்கண்) உயிர்களை (அவை நின்ற)உடம்பினின்று நீக்கினவ ரென்றுசொல்லுவர் (வினைவிளைவுகளை அறிந்தோர்); (எ - று.)

செல்லாவாழ்க்கை, தீவாழ்க்கை எனக் கூட்டுக. செயிருடம்பினராதல் "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித், துக்கத்தொழுநோ யெழுபவே" என்பதனுனும் அறிக. மறுமைக்கண் இவையும் எய்துவ ரென்பதாம்.

இவையிரண்டுபோட்டானும், கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

அருளுடைமை முதற்கொல்லாமை ஈறுகச்சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும்; அஃது அறிந்து அடக்கிக்கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

(கு - ரை.) நோக்கலாகா - பார்க்கவுங்கூடாமல் அருவருப்பைத்தருகிற. நோயுடம்பு - வியாதியையுடைய சரீரம். வறுமைகூர்ந்த - தரித்திரத் தன்மைமிகுந்த. இழிதொழில்வாழ்க்கையினை யுடையார் - இழிவான வேலை செய்து சீவிப்பவர். செயிர் - குற்றம்; நோய். இங்கு, செயிருடம்பின் என்பதை மூன்றும்வேற்றுமையுடனிகழ்ச்சிப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமையென்றுவது, இன்சாரியையைபெற்ற மூன்றும்வேற்றுமைத் தொகையென்றுவது கொள்க; இது-'வாழ்க்கையவர்' என்பதில் விரிக்கப்பட்ட'உடையார்' என்பதைக் கொண்டுமுடியும். செல்லாமை என்றது-வறுமையையும், இதனுடன்பாடாகியசெல்லுதல்என்பது - செல்வத்தையும் உணர்த்தும்; இதனை "செல்லாவிடத்துங் குடிப்பிறந்தார் செய்வன, செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்" என நாலடியாரிலுங் காண்க. தீவாழ்க்கை - தீமையைத் தருமவாழ்வு. "அக்கேபோல்" என்னும் மேற்கோள் - நாலடியார் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தில் உள்ளது; இதன்பிற்பாகம் "அக்கால், அலவனைக்காதலித்துக்கான் முரித்துத்தின்ற, பழவினைவந்தடைந்தக்கால்" என்பது: முற்பிறப்பில்கண்டைவிரும்பிக் காலையொடித்து அதனைத் தின்றதலுவாகிய பழையகருமம் வந்துசேர்ந்தால் அதன்பயனுல் அவர் பிற்பிறப்பில் சங்குமணிபோல உள்ளங்கைமாத்திரம்நிற்க விரல்களெல்லாம் அழுகிவிழுந்து இவ்வாறு துக்கத்தைத்தருகிற குட்டநோயுண்டாகப்பெறுவர் என்பது-பொருள். என்பர் என்பதற்கு - 'வினைவிளைவுகளையறிந்தோர்' என்ற எழுவாய் வருவிக்க; இனி, என்பர் என்பதைச் செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினையாக் கொண்டு, செயிருடம்பிற்செல்லாத் தீவாழ்க்கையவர் உயிருடம்பினீக்கியார் எனப்படுவர் எனினுமாம். ஈண்டு உரைப்பிற் பெருகுமென விடுத்தது, 'மிகைபடக்கூறல்' என்னுங் குற்றத்திற்கு அஞ்சி யென்க. (கo)

ஞானம்.

இனி, அவற்றின் பயனுகிய ஞானங் கூறிய தொடங்கினுர். ஞானமாவது - வீடுபயக்கும்உணர்வு. அது, நிலையாமை முதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கு அதிகாரத்துள் அடக்கப்பட்டது.

(கு - ரை.) ஐஞ்ஞாகம் - வடசொல். அவற்றின் - கள்ளாமை முதலிய அந்த விரதங்களின். கூறிய - சொல்ல. நான்கு அதிகாரம்-நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் என்பன. விரதங்களால் வினைமாசு தீர்ந்து அந்தக்காரணங்கள் பரிசுத்தமானவிடத்து ஞானம் உதிப்பதாதலால், இது விரதத்தின்பின் வைக்கப்பட்டது; விரதம் காரணமாய்முந்தினதும், ஞானம் காரியமாய்ப் பிந்தினதுமாம்.

நச - ஆம் அதிகாரம்—நிலையாமை.

அவற்றுள், நிலையாமையாவது - தோற்றமுடையன யாவும் நிலையுதலில வாந்தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற்புனல்போலத்தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டுவருதலாற் கணக்தோறும் பிறந்து இறக்கு மென்பாரும், ஒருவாற்றான்வேறுபடுதலும் ஒருவாற்றான்வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும்நிலையாமையும் ஒருங்கேயுடைய வென்பாரும் எனப் பொருட்பெற்றிகூறுவார் பலதிறத்தாரவர்; அவரெல்லார்க்கும் அவற்றதுநிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடா தாகலின், இது முன் வைக்கப்பட்டது.

(கு - ரை.) தோற்றமுடையன யாவும் - கண்ணுக்குத்தோன்றும் பொருள்களெல்லாம்; அவை செல்வம், உடம்புமுதலியன. தோற்றம் - உண்டாதலுமாம். நிலையுதல் இலவாம் - நிலைபெறுதலில்லாதனவாம்: அழியுந்தன்மையனவாகும். "இளமையுநில்லா யாக்கையுநில்லா, வளமையவான் பெருஞ் செல்வமுநில்லா" என்பது மணிமேகலை. மயங்கியவழி - அவித்தையினால் அறிவுமயக்கமடைந்தவிடத்து. பேய்த்தேரிற் புனல்போலத் தோன்றி-கானலினிடத்து நீரின்தன்மைபோலப் பிரமத்தினுற் காணப்பட்டு; கானல் - நீர் போலுதலை "கானகத்தியங்கிய கழுதின் தேர்க்தலும், தானகத்தெழுதலால் தலைக்கொண் டோடிப்போய், மேனியிர்ந் தெழுந்திடின் விசும்பும் வேமெனு, வானவர்க்கிரங்கிநீர்வளைந்த தொத்ததே" என்னுங் கம்பராமாயணத்தாலு மறிக: சிலப்பதிகாரத்தில் கானலை "நிறைநீர்வேலி" எனக் கூறியிருத்தலுங் காண்க. மெய்யுணர்ந்தவழி - தத்துவஞானமுண்டானவிடத்து. கயிற்றில் அரவுபோலக் கெடுதலின் - கயிற்றினிடத்தில் பிரமத்தால்தோன்றும் பாம்பின்தன்மைபோல அழிதலால். மதிமயக்கத்தால் கானல் நீராகக்காணப்படுவதுபோல, அவித்தையினாலே பரமான்மா ஒன்றே பலசீவான்மாக்களும் அவற்றுக்கு ஆதாரமான பிரபஞ்சமு மாகக் காணப்பட்டு, விபரீதஞானத்தாற் கயிற்றினிடத்துத் தோன்றிய பாம்பின்தன்மை அவ்விபரீதஞானமொழிந்து ஆய்ந்து நோக்கியவிடத்து மாறிக் கயிறு கயிறேயாய் விளங்குவதுபோல, அவித்தை யொழிந்து தத்துவஞானம்பெற்றவிடத்துப் பிறதோற்றங்கள்மறைந்து பரமான்மாவொன்றே இயற்கையாய்க் காணப்படுதலின், கட்புலப்படும் பிரபஞ்சத்தோற்றங்கள்யாவும் பொய் யென்பது - அத்துவைதசமயக்கோட்பாடு; "நீர்பூத்தபரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை, நீர்பூத்ததென வுலகம் நிறைந் தொளிர் தன்பாற் றோன்ற" என்றார் பாகவதநூலுடையாரும். வளர்ச்சி முதலிய நிலைமைகள் பேதப்படுதலால் எல்லாப்பொருளும் ஒவ்வொருகணத்திலும் பிறந்து இறந்துவரு மென்பது - பௌத்தசமயத்துள் ஒருசாரார் கொள்கை. ஒருவாற்றான் - ஒருவகையால்; ஒரு ஆறு எனப்பிரிக்க. மண் குடமாகுந்தன்மையால் வேறுபடுதலையும் நிலையாமையையும், மண்ணுபிருக்குந் தன்மையால் வேறுபடாமையையும் நிலத்தலையும் தன்னில் ஒருங்கே

யுடையதாம்; இங்ஙனமே எல்லாப் பொருள்களும் என்பது - ஒருசார் ஆருகத சமயக்கொள்கை. பொருட்பெற்றிகூறுவார் - பொருள்களின் தன்மையைச் சொல்லுபவர். பலதிறத்தர் - பலவகையர். அவற்றது - அப்பொருள்களின். இஃது உணர்ந்துழி அல்லது - இந்நிலையாமையை அறிந்தவிடத்தல்லாமல். பற்றுவிடாது - ஆசைநீங்காது. இறுதிவாக்கியம் - ஞானமென்னுந்தலைப்பின் முதலில் துறவு என்னும் அதிகாரத்தின் முன் நிலையாமையென்னும் இவ்வதிகாரத்தை வைத்ததற்குக் காரணம்;இங்ஙனமே நாலடியாரிலும் அறத்துப் பாலில் துறவறவியலின் முதலில் செல்வம் இளமை உடம்பு இவற்றின் நிலையாமையைக்கூறும் அதிகாரங்களை வைத்தவாறுங் காண்க. உடம்பாடெனினும், உடன்பாடெனினும் ஒக்கும்; சம்மதமென்று பொருள்.

நஙக. நில்லா தவற்றை நிலையின வென்றுணருந்
புல்லறி வாண்மை கடை.

(இ - ள்.) நில்லாதவற்றை-நிலையுதலிலவாகியபொருள்களை, நிலையின என்று-நிலையுதலுடையவென்று,உணரும்-கருதுகின்ற, புல் அறிவு ஆண்மை-புல்லிய அறிவினை யுடையராதல், கடை - (துறந்தார்க்கு) இழிபு; (எ - று.)

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற்கு ஏதுவாகலின், அது வீடெய்துவார்க்கு இழுக்கென்பது இதனுற்கூறப்பட்டது. இனி, புல்லறிவாளர் பெரும் பான்மையும் பற்றுச்செய்வது சிற்றின்பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தின் கண்ணும் அதனை அனுபவிக்கும் யாக்கையின்கண்ணு மாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றதுநிலையாமையை விதந்துகூறுப.

(கு - ரை.) புல்லிய-இழிவான. இழிபு-தாழ்வு. தோற்றம் - உண்டாகை. இழுக்கு-குற்றம். யாக்கை - உடம்பு. வருகின்ற பாட்டுக்களான் - இவ்வதிகாரத்தின் மற்றையொன்பதுபாடல்களாலும். அவற்றுள் முந்தியஇரண்டுபாடல்கள் செல்வநிலையாமையையும், பிந்திய ஏழுபாடல்கள் யாக்கைநிலையாமையையுங் கூறும். உடம்புக்கு வயது இவ்வளவென்று ஒருகாலநியமமுள்ளதனாலும், அப்படிப்பட்டநியமமுஞ் செல்வத்திற்கு இல்லாமையினாலும், செல்வநிலையாமை முன்னும், யாக்கைநிலையாமை பின்னுங் கூறப்படும். விதந்துகூறுப-பிரித்தெடுத்துக்கூறுவர். புல்லறிவு - சிற்றுணர்வு, அற்பபுத்தி. (க)

நஙஉ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(இ - ள்.) பெருஞ் செல்வம் - (ஒருவன்மாட்டுப்)பெரிய செல்வம் (வருதல்), கூத்து ஆட்டு அவை குழாத்து அற்று - கூத்தாடுதல்செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்; போக்குஉம் - (அதனது) போகலும், அது விளிந்து அற்று - (அக்கூத்தாட்டு முடிந்தவழி) அக்குழாம் போயினாற்போலும்; (எ - று.)

பெருஞ்செல்வ மெனவே, துறக்கச்செல்வமும் அடங்கிற்று. 'போக்கும்' என்ற எச்ச வும்மையான், வருதலென்பது பெற்றாம். அக்குழாம் கூத்தாட்டுக்

காரணமாக அரங்கின்கண் பஃறிறத்தால் தானே வந்து அக்காரணம் போய வழித் தானும் போமாறுபோல, செல்வமும் ஒருவன்கல்வினைகாரணமாக அவன்மாட்டுப் பஃறிறத்தால் தானே வந்து அக்காரணம்போயவழித் தானும் போ மென்றதாயிற்று.

(கு - ரை.) ஒருவன்மாட்டு - ஒருவனிடத்து. கூத்தாடுதல்செய்கின்ற அரங்கின்கண் - நாடகசாலையில். குழாம் - கூட்டம். அதனதுபோகலும் - செல்வம் அவனைவிட்டு ஒழிதலும். அக்குழாம் போயிஞற் போலும் - அவ் விடத்தைவிட்டு அக்கூட்டம் கலைந்தாற்போலும். எச்சவும்மை - இறந்தது தழுவிய எச்சப்பொருள் தரும் 'உம்' என்னும் இடைச்சொல். பஃறிறத்தால்- பலவழியால்: பல் திறம் எனப்பிரிக்க. அக்காரணம் - கூத்தாட்டு. பஃறிறத் தால் - பலவகையால். அக்காரணம் - நல்வினை. கூத்து - தொழிலுணர் த்தும் பகாப்பதமாகிய பெயர். ஆட்டு - ஆடுஎன்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். அவை - ஸபா: வடமொழித் திரிபு. ஆட்டவை - ஆடுதலை யுடைய அவை யென இரண்டனுருபும்பயனுமுடன் தொக்கதொகையாகப் பொருட்புணர்ச்சியுரைக்க; ஆடுதற்கு இடமான அவை யென்பது கருத்து. குழாம் + அத்து = குழாத்து; "அத்தினகரமகரமுனையில்லை" என்றதன் உப லட்சணத்தால், மவ்வீறுற்றழிந்துநின்ற ஆகாரத்தின்முன்னும் அத்துச்சாரி யையின் முதல்அகரங் கெட்ட தென்க. ஏ - தேற்றம்; அசையுமாம். விளிந் தற்று - விளிந்தால்என்னும் எதிர்காலவினையெச்சம் விளிந்துஎன இறந்த காலவினையெச்சமாத்திரிந்தது; விளிந்ததற்று எனத் தொழிற்பெயர் தொகுத் தல்விகாரப்பட்டதாகவுங் கொள்ளலாம். இக்கவி - உவமையணி. (உ)

நாநாந. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ரூ
லற்குப வாங்கே செயல்.

(இ - ள்.) அற்கா இயல்பிற்று செல்வம் - நில்லாத இயல்பினையுடைத் துச் செல்வம்; அது பெற்றூல் - அதனைப் பெற்றால், அற்குப - (அதனைற்) செய்யப்படும் அறங்களை, ஆங்கே - அப்பெற்றபொழுதே, செயல் - செய்க.

அல்கா என்பது, திரிந்துநின்றது. ஊழ் உள்வழியல்லது துறந்தாராற் பெறப்படாமையின் 'அதுபெற்றூல்' என்றும், அஃதுஇல்வழி நில்லாமையின் 'ஆங்கே' என்றுங் கூறினர். அதனைற்செய்யப்படும் அறங்களாவன - பயன்நோ க்காது * செய்யப்படுங் கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடு பயத்தலின், அவற்றை 'அற்குப' என்றும், 'செய்க' என்றுங் கூறினர்.

இவையிரண்டுபாட்டானும், செல்வநிலையாமை கூறப்பட்டது.

(கு - ரை.) அப்பெற்றபொழுதே-செல்வம்பெற்ற அப்பொழுதே. 'ஊழ் உள்வழியல்லது துறந்தாராற் பெறப்படாமையின்' என்றது - துறந்தவர்க் குப் பொருள்வருவாய்க்கு வேண்டும் முயற்சி யின்றூதல்பற்றி விதிவசத்தால் மாத்திரமே அவர்க்குச் செல்வம்வருதல் கூடி மாதலின். அதுபெற்றூல் என்

* பி - ம்: செய்யும்.

றது, செல்வம்பெறுதலின் அருமை தோன்றநின்றது. அஃது இல்வழிநில்லாமையின் - அந்நல்வினைப்பயன் நீங்கியவிடத்துப் பொருள் நில்லாதுநீங்குமாதலின். பயன்நோக்காது - காமியமாக வல்லாமல். கடவுட்பூசை - தேவதாராதநம். அற்கா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; அல்குஎன்பது திரிந்த அற்கு - பகுதி. அற்குப - அல்குப: நிலைத்திருப்பவை: பலவின்பாலெதிர்காலவினையாலணையும்பெயர்; ஆங்கே, ஏகாரம் - தாமதிக்கக்கூடாமையைக் குறிக்கும். செயல் - உடன்பாட்டுவியங்கோள். (கூ)

கூகூ. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(இ - ள்.) நாள் என ஒன்று போல் காட்டி - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோல (த் தன்னை)க் காட்டி, ஈரும் - ஈர்ந்துசெல்கின்ற, வாளது - வாளினதுவாயது, உயிர்—:உணர்வார் பெறின் - (அஃது) உணர்வாரைப் பெறின்; (எ - று.)

காலமென்னும் அருவப்பொருள் உலகியல் * நடத்தற்பொருட்டு ஆதித்தன்முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுங்கூறுபடாமையின் 'நாளெனவொன்றுபோல்' என்றும், அதுதன்னை வாளென்றுணர்மாட்டாதார் †தமக்குப்பொழுதுபோகாகின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலின் 'காட்டி' என்றும், இடைவிடாது ஈர்தலான் 'வாளின் வாயது' என்றும், அஃதுஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் 'உணர்வார்ப்பெறின்' என்றுங் கூறினார். 'உயிர்' என்னுஞ் சாதியொருமைப்பெயர், ஈண்டு உடம்பின்மேல்நின்றது: ஈரப்படுவது அதுவேயாகலின். வாள் என்பது, ஆகுபெயர். இனி, இதனை - நாளென்பது ஒருபொருள்போலத்தோன்றி உயிரைஈர்வதொருவாளாம் என்று உரைப்பாரு மூளர்; என என்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற்காட்டி யென்பதற்கு ஓர்பொருட்சிறப்பு இன்மையானும், அதுவென்பது குற்றியலுகரமன்மையானும், அஃதுஉரையன்மை அறிக.

(கு - ரை.) அறுக்கப்படுவது - பிரித்துஎண்ணப்படுவது. ஈர்ந்துசெல்கின்ற - அறுத்துக்கழிகின்ற. வாளினதுவாயது - வாளின்வாயிலுள்ளது. அஃது - அந்நிலைமையை. அருவப்பொருள் - ரூபமில்லாத பதார்த்தம். உலகியல்நடத்தற்பொருட்டு - உலகத்துநிகழ்ச்சிகள்நடக்கும்பொருட்டு. ஆதித்தன்முதலிய அளவைகளால் - சூரியன்முதலான அளக்குங்கருவிகளால்.. சூரியன்காலத்தையளக்குங்கருவியாதலே "வாழ்நாட்கலகாவயங்கொளிமண்டிலம், வீழ்நாட்படாஅதெழுதலால்", "தோற்றஞ்சால்ஞாயிறு நாழியாவைகலுங், கூற்றமளக்குநாளுண்ணும்" என்றவற்றிலுங் காண்க. ஒருசூரியோதயந்தொடங்கிப் பின்வருஞ் சூரியோதயமளவிற் கழிந்த காலம் ஒருநாளென்றும், அப்படிப்பட்டநாள் மூப்பதுகொண்டது ஒருமாதமென்றும், அம்

* பி - மீ: நடாத்தற்பொருட்டு † பி - ம்: நமக்கு

மாதம்பன்னிரண்டுகொண்டது ஓர்வருடமென்றும் இவ்வாறு சூரியன்கருவி யாக எண்ணி நாள்கணக்கிட்டு அகண்டமாகியகாலத்தைக் கூறுபடுத்திவழங்கு மாறு காண்க. முதலிய என்றது - மற்றைக்கிரகங்களையும், நட்சத்திரங்களை யும். கூறுபட்டது - பகுப்புக்கொண்டது. இனி, நாளென்னவொன்றுபோற் காட்டி என்பதற்கு - நாளென்று ஒன்றைத் தன்னைக்காட்டி யென்று உரைத்து, போல் என்பதை ஒப்பில்போலியாய் உரையசையெனவுங் கொள் ளலாம். அதுதன்னை - காலத்தை. அவிவேகிகள் நாட்கழிவுக்குவருந்தாமல் மகிழ்தலே "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாள் மேல் வைகுதல், வைகலை வைத்துணரா தார்" என்னும் நாலடியாராலும் உணர்க. ஈர்தல்- அறுத்தல். அஃது - காலமாகிய வாள். உடம்புக்கு அழிவு உண்டே யொழிய உயிருக்கு அழிவுஇல்லையாதலால், இங்கு உயிர் என்றது - உடம்பிற்கு இலக் கணையென்க; இது-தானியாகுபெயர்: "அச்சேத்யோயம் [இந்தஆன்மா அறு க்கமுடியாதது]" என்றது, ஸ்ரீபகவத்கீதை. ஈரப்படுவது அதுவே-அறுக்கப் படுவது உடம்பே. வாள் என்பது - வாளின்வாய்க்கு, முதலாகுபெயர். முத லுரைகித்து, உயிர்-எழுவாய்; வாளதுஎன்னும் ஒன்றன்பாற்குறிப்புமுற்று - பய னிலை; என என்னும் இடைச்சொல், காட்டியென்னும் வினையெச்சத்தைக் கொண்டது. பிற்றினைஉரைக்கு, எனஎன்பது-எழுவாயும்,வாள்என்பது-வினை முற்றுமாதல்வேண்டும். அவ்வுரையைப் பல காரணங்காட்டி மறுக்கிறார்: என என்பது-இடைச்சொல்லாதலால், பெயர்ச்சொல்போல வாள்என்பதற் குக் கருத்தாவாகநில்லாதென்பது, முதற்காரணம். இரண்டாவது காரணம் - முதலுரையில் நாளெனவொன்றுபோற்காட்டி என்பதற்கு விசேடவுரை இருப்பதுபோல் விசேடவுரையில்லாமை: இது,வெளிப்படை. ஞான்றவதுகார ணம் - அதுஉணர்வார்ப்பெறின் என எடுத்து, அதனையறிவாரைப்பெற்றால் என்னவேண்டும்: 'அது உணர்வார்'என்று எடுக்குமிடத்து அது என்பது முற்றியலுகரமாதலின், உயிர்முதல்மொழிப்புணர்ச்சியில் அதுவுணர்வார் என உடம்படுமெய்பெற்றுவரவேண்டுமேயன்றி அதுணர்வார் என வருதற்கு விதி யில்லாமை என்பது. முதலுரைகித்து-வாளது என்பது ஒருசொல்லாய் உயிர்த் தொடர்க்குற்றியலுகரமாதலால்,உயிர்வரக்குற்றியலுகரத்தின்மேல் அவ்வுயிர் சேர்ந்திடுதற்குத் தடையில்லையென்க. ஒன்று-ஒருகாலவரையறையைக் குறித் தலால், எண்ணலளவையாகுபெயர். உணர்வார்ப்பெறின்-உயர்திணையிடத்து இரண்டனுருபு தொக்கது. ஆராய்ந்து உண்மைநோக்குமிடத்து, காலத்துக்கு வசப்பட்டுள்ளது உயிருடம்பின்வாழ்க்கையென்பது விளங்கும்என்று கருத்து. திருச்சந்தவிருத்தத்தில் திருமழிசையாழ்வாரும் "வாள்களாகி நாள்கள் செல்ல" என இங்ஙனம் நாளே வாளாக உருவகப்படுத்தி அருளிச்செய்திருத் தல் காண்க. இக்குறளால், உடம்புகளுக்கு அளவுசெய்யப்பட்ட நாள் கழி கிற விதம் சொல்லப்பட்டது. (க)

ஊஊடு. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(இ - ள்.) நா செற்று - (உரையாடாவண்ணம்)நாவை அடக்கி, விக்குள் மேல்வாரா முன் - விக்குள் எழுவதற்கு முன்னே, நல் வினை - (வீட்டிற்கு ஏதுவாகிய) அறம், மேற்சென்று செய்யப்படும் - விரைந்து செய்யப்படும்.

மேல்நோக்கிவருதல் ஒருதலையாகலானும் வந்துழிச் * செய்தலேயன்றிச் சொல்லலும்ஆகாமையானும் 'வாராமுன்' என்றும், அதுதான் இன்னபொழுது வரு மென்ப தின்மையின் 'மேற்சென்று' என்றுங் கூறினர். மேற்சேறல் - மண்டுதல். நல்வினைசெய்யுமாற்றின்மேல்வைத்து நிலையாமை கூறியவாறு.

(கு - பை.)உரையாடாவண்ணம்-வார்த்தையெழாதபடி. நாவை-நாக்கை. விக்குள் - விக்கல்; தொழிற்பெயர். எழுதல்-மேல்நோக்கிவருதல். வீட்டிற்கு ஏதுவாகிய அறம் - துறவறம். ஒருதலை - நிச்சயம். வந்துழி - விக்கல்வந்த பொழுது. செய்தலேயன்றிச் சொல்லலும் ஆகாமையானும் - அறஞ்செய்தல் அசாத்தியமென்பதுமாத்திரமே யன்றி அறஞ்செய்யவேண்டுமென்று வாயாற்சொல்லுதலும் அசாத்தியமாதலாலும். நாச்செற்று விக்குள் மேல்வாரா முன் - மரணவேதனை வருதற்குமுன் என்றபடி. அதுதான் - அம்மரண வேதனைதான். இன்மையின் - தெரியாதாதலால் என்றபடி. மேற்சேறல், மண்டுதல் - தூரிதப்படுதல். இங்கே நல்வினையென்றது, அழியுந்தன்மையன வான சுவர்க்கவின்பம் முதலிய காமியபலன்களைத் தரும் யாகம்முதலிய வற்றை யன்று; முத்தியடைதற்கு நேரேவழியாகிய யோகஞானங்களை யென்க. செய்யும்ஆறு - செய்யும்விதம். நிலையாமை - யாக்கைநிலையாமை. "மேலெழுந்தோர் வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினை யுள்ளெழவாங்கிக், காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக்கண்ணுறக்கமதாவதன்முன்னம்,மூலமாகிய வொற்றையெழுத்தை மூன்றுமாத்திரையுள்ளெழ வாங்கி, வேலைவண்ணனை மேவுதிராகில்விண்ணகத்தினில்மேவலுமாமே" என்றார் பெரியாழ்வாரும்.இக் குறளால்,ஆயுள்நாள்கழியுங்காலத்து உண்டாகும் நிலைமை சொல்லப்பட்டது.

குகூ. நெருநல் உளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(இ - ள்.) 'ஒருவன் நெருநல் உளன்-ஒருவன் † நெருநல்உளனாயினன், (அவனே) இன்று இல்லை - இன்று இல்லையாயினன்', என்னும் - என்றுசொல்லும், பெருமை - நிலையாமைமிகுதி, உடைத்து—: இ உலகு - இவ்வுலகம்.

ஈண்டு, உண்மை பிறத்தலையும், இன்மை-இறத்தலையும் உணர்த்தினின்றன. அவை பெண்பாற்கும் ‡ உளவாயினும், சிறப்புப்பற்றி § ஆண்பாற்கே கூறினர். இந்நிலையாமையே உலகின் மிக்க தென்பதாம்.

(கு - பை.) நெருநல் - நேற்றைத்தினம். இன்று - இன்றைத்தினம். 'உளனொருவன்' என்ற ஆண்பால் - மற்றைப்பால்களுக்கும் உபலக்ஷணம். பெருமையென்பது அதிகாரத்தால், நிலையாமைமிகுதியைக் குறித்தது.

---

* பி - ம்: செயலே
† பி - ம்: நெருநற்றுளனாயினன்,
‡ பி - ம்: உரிய
§ பி - ம்: ஆண்பாலையே.

உண்மை - உளன்என்பதன் பகுதி. இன்மை - இல்லைஎன்பதில் உள்ளது. அவை - பிறத்தலும் இறத்தலும். நெருநல், இன்று - ஏழாம்வேற்றுமைப் பொருளுணரநின்ற இடைச்சொற்கள். "புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி, இன்னினியேசெய்க வறவினை - இன்னினியே, நின்ரு னிருந்தான்கிடந்தான் தன்கேளலறச், சென்ரு னெனப்படுதலான்" என்னும் காலடியையும், "காலைச்செய்வோமென்றதைக் கடைப்பிடித்துச், சாலச்செய்வாரேதலைப்படுவார் - மாலை, கிடந்தானெழுதலரிதான்மற்றன் கொ, லறங்காலைச்செய்யாதவாறு" என்னும் அறநெறிச்சாரத்தையும் இங்கே அறிக. யாக்கைநிலையாமைகூறியது, இது. "மின்னின்னிலையில, மன்னுயி ராக்கைகள்" என்ரூர் பெரியாரும். (சு)

நூகள. ஒருபொழுதும் வாழ்ல கறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(இ - ள்.) ஒரு பொழுதுஉம் - ஒருபொழுதளவும், வாழ்வது - (தம்உடம்பும் உயிரும்)இயைந்திருத்தலை, அறியார் - தெளியமாட்டார்; (மாட்டாதுவைத்தும்), கோடிஉம் அல்ல பல - கோடியளவுமன்றி அதனினும்பலவாய நினைவுகளை, கருதுப - நினையாநிற்பர், (அறிவிலாதார்); (எ - று.)

இழிவுசிறப்பும்மையால், பொழுதென்பது - ஈண்டுக் கணத்தின்மேல் நின்றது. காரணமாகியவினையின் அளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃது அறியப்படாதாயிற்று. பலவாயநினைவுகளாவன - பொறிகளால் நுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாம் முயலுமாறும், அவற்றிற்குவரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப்பிறர்கொள்ளாமற்காக்குமாறும், அதனுன் நட்டாரை ஆக்குமாறும், கள்ளாரை அழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின்மேல்வைத்து நிலையாமைகூறியவாறு. இனி,'கருதுப'என்பதனை அஃறிணைப்பன்மைப்பெயராக்கி உரைப்பாருமுளர்.

(கு - ரை.) இயைந்திருத்தல் - கூடியிருத்தல். வாழ்வது - சீவித்திருப்பது. தெளியமாட்டார் - உண்மையாய் அறியமாட்டார். கோடி - நூறுலட்சம். "எண்பதுகோடிநினைந்தெண்ணுவன"என்ரூர் ஔவையாரும். கணம்-கூணம். வினை - ஊழ்வினை. அஃது - வாழ்நாளின்அளவு. "வினைப்போகமே யொரு தேகங்கண்டாய் வினைதானுழிந்தால், தினைப்போதளவு நில்லாதுகண்டாய்" என்ற பட்டினத்தடிகள்வாக்கு இங்கே காணத்தக்கது. பொருள் - செல்வம். அவற்றைத் தாம் முயலும் ஆறும் - அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும். இடையூறு-தடை, விக்கினம். பொருள் கடைக்கூட்டும் ஆறும்-செல்வத்தைச் சேர்க்கும்விதமும். அதனுன் நட்டாரை ஆக்கும் ஆறும் - அச்செல்வத்தால் நினைகிதர்களை வளர்க்கும் விதமும். நள்ளாரை - பகைவர்களை. பரிமேலழகருரைக்கு 'அறிவிலாதார்' - தோன்ரு எழுவாய்; அறியார், கருதுப - உயர்திணைப்பலர்பால்முற்றுக்கள்; பயனிலை; வாழ்வது, பல - செயப்படுபொருள்.

பிறருரைக்கு, எதிர்காலப்பலவின்பால்வினையாலணையும்பெயரான கருதுப - எழுவாய்; பல - வினைமுற்று. கருதுப - எண்ணுவன என்க. கோடியும், உம்மை - உயர்வுசிறப்பு; எண்ணின்பெருமையைக் குறித்தலால். அல்ல, பல - பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர்கள். இக்குறளால், உடம்புகள் ஒருகணமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொல்லப்பட்டது. (எ)

கூகூ அ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றேறு
யுடம்போ டுயிரிடை நட்பு.

(இ - ள்.) குடம்பை தனித்து ஒழிய-(முன் தனியாத) முட்டை தனித்துக்கிடப்ப, புள் - (அதனுள்இருந்த) புள்ளு, பறந்து அற்று - (பருவம்வந்துழிப்) பறந்துபோந் தன்மைத்து: உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு; (எ - று.)

'தனித்தொழிய' என்றதனுன்;முன்தனியாமை பெற்றும்: அஃதாவது-கருவுக் தானும் ஒன்றுரூய்ப்பிறந்து வேறுந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்: அதனுல், அஃது உடம்பிற்கு உவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற் போகலின், புள் உயிர்க்கு உவமையாயிற்று. மூட்டையுட்பிறப்பன பிறவும் உளவேனும்,புள்ளேயே கூறினுர்,பறந்துபோதற்கிழிலான் உயிரோடுஒப்புமையெய்துவது அதுவேயாகலின். 'நட்பு' என்பது - ஈண்டுக் குறிப்புமொழியாய், நட்பின்றிப்போதலுணர்த்திநின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின், வினைவயத்தாற்கூடிய தல்லது நட்பிலவென்பது அறிக. இனி, 'குடம்பை' என்பதற்கு - கூடென்று உரைப்பாரு முளர்; அது புள்ளுடன் தோன்றுமையானும், அதன்கண் அது மீண்டுபுகுதலுடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக.

(கு - ரை.) முன் தனியாத - முன்னேதனித்திராத. அதனுள் - முட்டையினுள். புள்ளு-பறவை. பருவம் - காலம். கரு - முட்டையினுட்பொருள். அஃதாவது - தனியாமையாவது. தானும் என்றது-முட்டையை. கரு ஜந்துவாகவெளிப்படும் வரையும் அந்தக்கருவுக்கு முட்டை யாதாரமாகு மென்க. அதற்கு - கருவிற்கு. உள்ளிருக்கும் கரு - உடம்பினுள்ளிருக்கும் உயிருக்கும், கருவுக்கு ஆதாரமாகும் முட்டை-உயிருக்குஆதாரமான உடம்புக்கும் உவமையாம். அதனுள்வேற்றுமைஇன்றிநின்றே - அம்முட்டையினுள் பேதமில்லாமல் வாழ்ந்திருந்தே. பின் புகாமற்போகலின் - பின்பு பறவை முட்டையினுள் நுழையாமற் போவதனுல். பிறவும் - வேறுபிராணிகளும். அதுவே - பறவையே. நட்பு என்பது - ஈங்கு நட்பில்லாமையைக் குறிப்பித்தல், முதலடியில்வந்த உபமானத்தினுற் பெறப்படு மென்க; இது - எதிர்மறையிலக்கணை. சேதனம் - அறிவுடையது. அரு - அரூபம்; வடிவில்லாதது. நித்தம் - நித்யம்: என்றும் ஒருபடியாய் அழிவில்லாம லுள்ளது. அசேதனம்-அறிவில்லாதது. உரு - ரூபம்; வடிவுள்ளது. அநித்தம் - அநித்யம்; நிலையில்லாதது. தம்முள் மாறு - ஒன்றுடொன்று மாறுபாடுடையது. வினைவயத்

தால் - விதிவசத்தால். அது - கூடு. அதன்கண் - கூட்டினுள். அது-பறவை. மீண்டுபுகுதல் - மறுபடிநுழைதல். "குடம்பை முட்டையுங் கூடுமாகும்" என்ற பிங்கலந்தையால், குடம்பையென்பது இருபொருளதாதல் பெறப்படும். ஒருசாரார், முட்டையின்கீங்கிய பார்ப்பு உடனே பறவாமையாலும், யாக்கை உருச்சிதையாததுபோலாது முட்டை உருச்சிதைதலாலும், சாவித் திரியின்வரத்தாற் சத்தியவானுயிர்போலச் சிறுபான்மை கீங்கியவுயிர் யாக்கையிற் சேர்தலாலும், "கூடுவிட்டிங்காவிதான் போயினபின்" என்றவிடத்துக் கூடுஎன்று யாக்கையையே வழங்கியிருத்தலாலும் இங்குக் குடம்பையென்பதற்குக் கூடு என்றே பொருளென்றுசாதிப்பர்; அன்னூர், "கேளாதே வந்து கிளைகள்யிற்றேன்றி, வாளாதேபோவரான் மாந்தர்கள் - கேளாதே, சேக்கைமரஞ்ஞெழியச் சேணீங்குபுட்போல, யாக்கைதமர்க்கொழியநீத்து" என்ற நாலடியாரைத் தம்முரைக்கு மேற்கோளாகக் காட்டுவர். உவமையணி. இக்குறளால், உடம்புகள் உயிர்கீங்கியவிடத்துக் கிடக்குமாறு சொல்லப்பட்டது. (அ)

கூகூ. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(இ - ன்.)சாக்காடு - (ஒருவனுக்குச்) சாக்காடு(வருதல்), உறங்குவது போலும் - உறக்கம்வருதலோடு ஒக்கும்; பிறப்பு - (அதன்பின்) பிறப்பு (வருதல்), உறங்கி விழிப்பது போலும் - உறங்கிவிழித்தல் வருதலோடு ஒக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்குஇயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றுற்போலச் சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன்கூறப்பட்டது.

(கு - பை.) சாக்காடு-இறத்தல். கடிதின் - விரைவில். நிலையாமையென்னும் இவ்வதிகாரத்திற் கூறத்தக்க இறத்தலோடு பிறத்தலையும் உடன்கூறியது, நிலையாமையே நிச்சயமாகுந்தன்மையை அறிவித்தற்பொருட்டு. உவமையணி. இக்குறளால், இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருதல் சொல்லப்பட்டது. இக்குறளை "பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலு, முறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்" என்ற மணிமேகலையடிகளோடு ஒப்பிடுக. (கூ)

கூசo. புக்கில மைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சில் லிருந்த வுயிர்க்கு.

(இ - ன்.) உடம்பினுள் - (வாதம்முதலியவற்றின்இல்லாய) உடம்புகளுள், துச்சில் இருந்த-ஒதுக்கிருந்தேபோந்த, உயிர்க்கு,—புக்கில் அமைந்தின்று கொல்-(எஞ்ஞான்றும்) இருப்பதோரில் (இதுகாறும்) அமைந்ததில்லைபோலும்.

அந்நோய்கள் இருக்கஅமைந்தஞான்று இருந்தும் வெகுண்டஞான்று போயும் ஒருடம்பினும் நிலைபெறுது வருதலால், 'துச்சிலிருந்த' என்றார். பின் புறப்படாது புக்கேவிடும்இல் அமைந்ததாயின் பிறரிற்களுள் * ஒதுக்கிரா

* பி - ம்: துச்சில்.

தென்பதாம்; ஆகவே, உயிரோடுகூடிநிற்பது ஒருடம்புமில்லை யென்பது பெறப்பட்டது.

இவையேழுபாட்டானும், முறையே, யாக்கைகட்கு வரைந்தகாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாம் நிலைமையும், அவை ஒரோவழிப் பிறந்த வளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறிவருமாறும், அவைதாம் உயிர்க்கு உரியஅன்மையும் என்றிவற்றால் யாக்கைநிலையாமை கூறியவாறு கண்டுகொள்க.

(கு - ரை.) வாதம் - வாயு. முதலிய என்றது - பித்தம், சிலேட்டுமம் என்றவற்றை; மேல் 'மருந்து'என்னும் அதிகாரத்தில் "தூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்று" என்றது காண்க. இல் - இடம். துச்சில் - ஒதுக்கிடம். இதுகாறும் - இதுவரையிலும். அந்நோய்கள் இருக்க அமைந்தஞான்று இருந்தும் - வாதம் பித்தம் முதலியவற்றாலாகும் நோய்கள் தான் உடம்பினுளிருக்க உடன்பட்டிருக்குமளவும் உயிராகிய தான் அங்குக் குடியிருந்தும். வெகுண்டஞான்று போயும் - அந்நோய்கள் அங்கிருக்க உடன்படாமற் கோபித்தபொழுது தான் அங்கிருந்து குடிநீங்கிப்போயும். வெகுண்டஞான்றுதத்தம் நிலையில்நில்லாதனவாய் வருத்தும்பொழுது. பின் புறப்படாது புக்கேவிடும் இல் - பின்புகுடிநீக்கவேண்டாமல் எப்பொழுதுங் குடிபுகுந்தேயிருக்கத்தக்கதொரு வீடு. பிறர் இற்கள் - வாதம்முதலியவற்றின் வீடுகள். இக்குறளால், எவ்வுடம்பும் உயிருக்குச்சொந்தமானதன் றென்பது சொல்லப்பட்டது.

ஏழுபாட்டானும் - "நாளெனவொன்றுபோல்"என்ற செய்யுள்முதல் முறையே இச்செய்யுள்வரையில். யாக்கைகட்குவரைந்தநாள் - உடம்புகளுக்கு இவ்வளவென்று அளவுசெய்யப்பட்ட நாள். ஒரோவழி - சிலவிடத்து. தெளியப்படாமை - நம்பப்படாமை. கிடக்கும்ஆறு-இருக்கும் நிலைமை. அவை தாம் உயிர்க்குரிய அன்மை-உடம்புகள்தாம் உயிருக்குச் சொந்தமானவையல்ல என்பது. புக்கில்என்பதைப் புக்கவில் என்பதன் தொகுத்தலாகவாயினும், புகில்என்பதன் விரித்தலாகவாயினுங் கொள்க. அமைந்தின்று-அமைந்தின்று என்பதன் விகாரம். "கொல்லே ஐயம்"என்ற சூத்திரத்தின் ஒன்றென முடித்தலால் "இதனளவுண்டுகொல் மதிவல்லோர்க்கே" எனத் தூணிவின் கண்ஐயம்சிறிதுநினைத்தலும் கொல்என்னும் இடைச்சொற்குக் கொள்ளப்பட்டவாறு காண்க; இங்கு, கொல் - அப்பொருளது. ஓ - அசை. துச்சில் - துச்சவில்: துச்சம் - அற்பம், நிலையற்றது: வடசொல். துஞ்சுஇல் என்பதன். வலித்தலாகக்கொண்டு, அழியுந்தன்மையதானவீடெனினும் அமையும். (கo)

நடு - ஆம் அதிகாரம்—துறவு.

அஃதாவது-புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாய பற்றினை அவற்றதுநிலையாமைநோக்கி விடுதல். அதிகாரமுறைமையும் இதனுளே விளங்கும்.

(கு - ரை.) புறமாகிய செல்வத்தின் கண்ணும்-வெளிவளமாகிய செல்வத்தினிடத்தும். அகமாகிய யாக்கையின் கண்ணும் - உள்வளமாகிய உடம்பினிடத்தும். பற்று - ஆசை. முன்னது-புறப்பற்றென்றும், மமகாரமென்றும்; பின்னது - அகப்பற்றென்றும், அஹங்காரமென்றும் கூறப்படும். அவற்றது - செல்வம் யாக்கைகளின். நிலையாமையையுணர்ந்தால் பற்றுவிடுதல் கூடுமாதலின், நிலையாமை யென்னும் அதிகாரத்தின்பின் துறவுஎன்னும் அதிகாரம் நிறுத்தப்பட்டது.

கூசக. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(இ - ள்.) யாதனின் யாதனின் நீங்கியான் - (ஒருவன்) யாதொரு பொருளின் யாதொருபொருளின் நீங்கினான்: அதனின் அதனின் ஓதல் இலன் - (அவன்) அப்பொருளால் அப்பொருளால் துன்பமெய்துத லிலன்.

அடுக்குக்கள் பன்மைகுறித்துநின்றன. நீங்குதல் - துறத்தல். ஈண்டு 'துன்பம்' என்றது - இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும் காத்தலானும் இழத்தலானும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களையுமாம். எல்லாப்பொருளையும் ஒருங்கேவிடுதல் *தலைமை: அஃதன்றி ஒரொன்றுகவிடினும் அவற்றான் வருந் துன்பம் இலனுமென்பது கருத்து.

(கு - ரை.) யாதொருபொருளின் - எந்தப்பொருளினின்றும். யாதனின் என்றவிடத்து, இன்னுருபு - நீக்கப்பொருளையும், அதனின் என்றவிடத்து, இன்னுருபு - ஏதுப்பொருளையும் உடையது. அடுக்குக்கள் - யாதனின் யாதனின், அதனின் அதனின் என்றவிடத்து உள்ளவை. அவற்றை - அப்பொருள்களை. "ஈட்டலுந் துன்பமற்றீட்டியவொண்பொருளைக், காத்தலுமாங் கே கடுந்துன்பம்—காத்தல், குறைபடிற்றுன்பங்கெடிற்றுன்பந்துன்பக், குறை பதிமற்றைப்பொருள்" என்றார் பிறரும். விடுதல் - துறத்தல். அஃதன்றி - அவ்வாறல்லாமல். இவ்வதிகாரத்தில் முதல்நான்குகவிகள், பொருளிற் பற்றுவிடுதலைக் கூறும். (க)

கூசஉ. வேண்டிணுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(இ - ள்.) துறந்தபின் - (எல்லாப் பொருள்களையுந்) துறந்தால், ஈண்டு இயல் பால - (ஒருவர்க்கு) இம்மைக்கண்ணே உளவரம்முறைமையையுடைய இன்பங்கள், பல—; வேண்டின் - (அவ்வின்பங்களை) வேண்டின், உண்டாக துறக்க - (அவற்றைக் காலம்) பெறத் துறக்க; (எ - று.)

அவ்வின்பங்களாவன - அப்பொருள்கள்காரணமாக மனமொழிமெய்கள் அலையாது நிற்றலானும், அவை கண்ணெறிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கண் துறந்தான் அவற்றைநெடுங்காலம்எய்துமாகலின், 'உண்டாகத் துறக்க' என்றார். இன்பங்களென்பதும், கால மென்பதும், வருவிக்கப்

* தலை: அஃதன்றி ஒரோவொன்றுக.

பட்டன. இம்மைக்கண் துன்பங்களிலவாதலேயன்றி இன்பங்களுளவாதலு முண்டி என்பதாம்.

(கு - ரை.) துறந்தபின் - பற்றறவிட்டால்; இது - ஒருவகை எதிர் காலவினையெச்சம். உளவாம்முறைமையையுடைய - உண்டாகுங் கிரமத்தை யுடைய. வேண்டின் - விரும்பினால். காலம்பெற - இளமையிலேயே. துறக்க - விடக்கடவன். அவை நன்னெறிக்கட்சேறலானும் - அம்மூன்றுகரணங்களும் சன்மார்க்கத்திலே செல்லுதலாலும். இளமைக்கண் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்தும் - இளம்பிராயத்திலேயே பொருள்களிற் பற்றுவிட்டுத் துற வறத்தை யடைந்தவன் அவ்வின்பங்களை வெகுகாலம் அடைவான். இன்பங் கள் என்பது வேண்டின்என்பதன் முன்பும், காலம்என்பது - உண்டாக என்ப தன் முன்பும் வருவிக்கப்பட்டன. இயற்பால - இயலும்பான்மையுடையன; இய லுதல் - உண்டாதல். பால - பலவின்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். "கரைவருமென்றெண்ணி நல்லறிவாளர், குழவியிடத்தேதுறந்தார்," "மற் றறிவாநல்வினை யாமிளையமென்னாது, கைத்துண்டாம்போழ்தே கரவாதறஞ் செய்மின்" என்னும் காலடியாரினாலும் இளமையில்துறத்தல் சிறப்பென்ப தறிக. துறவினால் துன்பம் நீங்குவதன்றி இம்மையிலும் இன்பங்களுளவா மென்றவாறு. (உ)

ஈசஈ. அடல்வேண்டு * மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(இ - ள்.) ஐந்தின் புலத்தை அடல் வேண்டும் - (வீடெய்துவார்க்குச் செவிமுதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசைமுதலிய) ஐம்புலன்களையுங் கெடுத்தல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும் - (கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத்) தாம் படைத்தபொருள் முழுதையும் ஒருங்கேவிடுதல் வேண்டும்; (எ - று.)

'புலம்' என்றது, அவற்றைநுகர்தலே. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கள்மேலல்லது வீட்டுநெறியாகியயோக ஞானங்களிற் செலுத்தாமையின், அதனை அடல்வேண்டுமென்றும்; அஃது அப்பொருள்கள்மேற் செல்லின் அத்துகர்ச்சி விறகுபெற்றதழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லாமொருங்குவிடல் வேண்டுமென்றுங் கூறினார்.

(கு - ரை.) வீடெய்துவார்க்கு - முத்திபெறவேண்டுபவர்களுக்கு. செவி முதலிய ஐம்பொறிகள் - செவி, மெய் (தோல்), கண், வாய், மூக்கு என்னும் பஞ்சேந்திரியங்கள். இவற்றிற்கு உரியவாய ஓசைமுதலிய ஐம்புலன்கள் - முறையே சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன. கெடுத்தல்வேண் டும் - அடக்குதல்தகுதி. கெடுக்குங்கால் - அங்ஙனம் அடக்கும்பொழுது. அவ் வற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் - அந்த ஓசைமுதலிய ஐம்புலன்களையும் அனுபவிப்பதற்காகத் தாம் விரும்பிச்சேர்த்த

* பி - மி: ஐந்தின்.

எல்லாப்பொருள்களையும். அது-அந்தவிஷயானுபவம். அது, மனத்தை, பிறர்க்குத்துன்பஞ்செய்தலாலும் தீவினைகளாலுமே அடையக்கூடிய பொருள்களின்மேலே செலுத்துமே யொழிய, மூத்திரவழியாகிய யோகப்பயிற்சியிலும் ஞானநிலையிலுஞ் செலுத்தாது. அதனை - ஐம்புலநுகர்ச்சியை. அஃது - மனம். அந்நுகர்ச்சி - அவ்விஷயானுபவம். மூலுகுவ தல்லது-மேன்மேல் வளர்வதேயொழிய. அடப்படாமையின் பின்பு அழிக்கப்படாமையால். ஐக்து - ஐம்பொறிக்கு எண்ணலளவையாகுபெயர்; ஒருங்கு - எஞ்சாமைப்பொருள் குறிக்கும் இடைச்சொல். விறகை எடுத்துவிட்டால் நெருப்புத் தானே அடங்குதல்போல, பொருள்களைத் துறந்தால் ஐம்புலநுகர்ச்சி தானே அழியுமென்ற கருத்து விளங்கும். வீடுபெறவிரும்புவார்க்கு ஐம்புலநுகர்ச்சியொழியவேண்டுமென்றது, இது. (கூ)

கூசஅ. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

(இ - ள்.) ஒன்று இன்மை - (பற்றப்படுவது) ஒருபொருளும் இல்லாமை, நோன்பிற்கு - தவஞ்செய்வார்க்கு, இயல்பு ஆகும் - இயல்பாம்; உடைமை பெயர்த்து மற்றுஉம் மயல் ஆகும் - (அஃதன்றி ஒன்றுயினும்) உடைமை (அத்தவத்தைப்) போக்குதலான் மீண்டும் மயங்குதற்கு ஏதுவாம்.

இழிவுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. நோன்பு என்பதூஉம், மயல் என்பதூஉம் - ஆகுபெயர். 'பெயர்த்தலான்' என்பது, திரிக்துநின்றது. நோன்பைப்பெயர்த்தலான் என வேற்றுமைப்படுத்துக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும்விட்டு ஒருபொருளை விடாதவழியும், அதுசார்பாக விட்டன வெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையீடாய் மனக்கலக்கஞ்செய்யுமென்பது கருத்து.

இவைதான்குபாட்டானும்,எனதென்னும்புறப்பற்றுவிடுதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பற்றப்படுவது - விரும்பப்படுவது. இயல்பு - சுபாவகுணம். அஃதன்றி - அப்படியல்லாமல். ஒன்றுயினும் உடைமை - ஒருபொருளையாயினும் பற்றுவிடாமலுடைத்தாயிருத்தல். போக்குதலான் என்பதை 'பேர்க்குதலான்'என்று படித்தும் பொருள்கொள்ளலாம். மீண்டும்மயங்குதல் - மறுபடியும் அவித்யைக்கு உட்படுதல். இழிவுசிறப்பும்மை தொகுத்தல்விகாரப்பட்டது, 'ஒன்று' என்பதன் இறுதியில்; அது, அவ்வெண்ணினது சிறுமையை விளக்கிற்று. நோன்பு என்பது - தவத்தையுடையார்க்குப் பண்பாகுபெயரும், மயல் என்பது-மயங்குதற்குக்காரணமாயிருப்பதற்குக் காரியவாகுபெயருமாம்.இனி, 'நோன்பிற்கு இயல்பாகும்'என்பதற்கு-தவத்திற்கு இலக்கணமாகுமென்றுமாம். பெயர்த்து-பெயர்க்க: செய்வினைச்சத்தின் திரிபென்பார், 'பெயர்த்தலான்'எனப்பது திரிந்துநின்றது' என்று ரென்க. மயலாதற்குக் காரணம், பெயர்த்தல். பெயர்த்தலென்னும்வினைக்கு 'நோன்பை' என்று செயப்படுபொருள் சேர்க்க. நோன்பிற்கு என்பதனை மீட்டுங்கூட்டுகையில், இரண்டனுருபுகொடுத்துக்கூட்டுக என்பார், 'வேற்றுமைப்படுத்துக்கூட்டுக' என்றுரென்க, அதுசார்பாக - அந்தப்பொருள் ஆதாரமாக. விட்டனவெல்

லாம் - விட்டபொருள்களியாவும். இடையீடாய் - தடையாகி. எனதென்னும் புறப்பற்று - புறமாகியசெல்வத்தை என்னுடையதென்று அபிமானிக்கிற ஆசை. ஒன்று - எண்ணலளவாகுபெயர். ஒன்றென்பதனை உடைமையென்பதனோடுங கூட்டுக. மற்றுஎன்னும் இடைச்சொல், இங்கே பின் என்னும் பொருளது. நோன்பு - (எல்லாத்துன்பங்களையும்) பொறுத்தலையுடைய தெனத் தவத்திற்குக் காரணப்பெயர். (ச)

ஈசரி. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
இற்றூர்க் குடம்பு மிகை.

(இ - ள்.) பிறப்பு அறுக்கல் உற்றூர்க்கு - பிறப்பு அறுத்தலை மேற்கொண்டார்க்கு, உடம்புமிகை - (அதற்குக்கருவியாகிய) உடம்பும் மிகையாம்; (ஆனபின்), மற்றுமும் தொடர்ப்பாடு எவன் - அதற்குமேலே இயைபில்லனவுஞ் சில தொடர்ப்பாடுஉளவாதல் என்னும்? (எ - று.)

'உடம்பு' என்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப்படும்; அவற்றுள், அருவுடம்பாவது - பத்துவகையிந்திரியவுணர்வோடும் ஐவகைவாயுக்களோடுங் காமவினைவிளைவுகளோடுங் கூடிய மனம்: இது, நுண்ணுடம்பெனவும்படும். இதன்கட்பற்று நிலையாமையுணர்ந்த நுணையான் விடாமையின், விடுதற்குஉபாயம்முன்னர்க்கூறுப. இவ்வுடம்புகளால் துன்பம் இடையறுதலருதலுணர்ந்து இவற்றுன் ஆய கட்டினை இமைப்பொழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், 'உடம்புமிகை' என்றார். இன்பத்துன்பங்களான் உயிரோடு ஒற்றுமை யெய்தலின், இவ்வுடம்புகளும் யானெனப்படும்.

இதனுன், அகப்பற்றுவிடுதல் கூறப்பட்டது.

(கு - ரை.) பிறப்பு அறுத்தலை மேற்கொண்டார்க்கு - மறுபடியும் பிறப்புத் தமக்கு இல்லாதபடி ஒழித்து முத்திபெறவேண்டுமென்னும் எண்ணத்தை முக்கியமாக ஏற்றுக்கொண்ட துறவறத்தார்க்கு. அதற்குக் கருவியாகிய - பிறப்பறுத்தற்குக் காரணமான; பிறப்பிற்குக் காரணமான என்றுங்கொள்ளலாம். மிகையாம் - மிகுதியாம்: அவசியமானதன்றும். அதற்குமேலே - அவ்வுடம்புமாத்திரமேயன்றி மேலும். இயைபில்லனவுஞ் சிலதொடர்ப்பாடு - சம்பந்தமில்லாத சிலபொருள்களும் விடாது தொடர்ந்து நிற்றல். என்னும் - தகுதியன்று என்றபடி. 'உடம்பு' என்ற பொதுமையான் - 'உடம்பு' எனப் பொதுப்படக்கூறியதனுல். உருவுடம்பு - ரூபமூர்த்த சரீரம்; அது-பஞ்சபூதசம்பந்தத்தாலாகி இருபத்துநான்குதத்துவங்களை யுடைய இவ்வுடம்பு: ஸ்தூலசரீர மெனப்படும். அருவுடம்பு - அரூபமானசரீரம்; ஸூக்ஷ்ம சரீரமெனப்படும்: அந்த அருவுடம்பில் பத்துவகையிந்திரியவுணர்வோடு மனமும் ஆன்மாவைப்பற்றியிருக்குமென்க. பத்துவகை இந்திரியவுணர்வு - மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியமைந்து, வாக்கு பாணி பாதம் பாயுர் உபத்தம் என்னுங் கருமேந்திரியமைந்து இப்பத்தின் அறிவுகள். ஐவகை வாயுக்கள் - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்பன. "சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயு பிராணனெனப்படும்:

அஃது ஒன்றுயினும் உபாதிவேறுபாட்டால் பிராணன் அபானன் முதலிய பெயர்பெறும்'' என்றது, தருக்கசங்கிரகம். காமவினைவிளைவுகள் - ஆசையும் கருமபலன்களும். நுண்ணுடம்பு - சூக்குமசரீரம். ''ஞானேந்திரியகர்மேந்திரியங்கள் பத்து, பிராணன் ஐந்து, மனம் புத்தி இத்தப் பதினேழுடன்கூடியது சூட்சுமதேகம்'' என்கின்றது, சாரீரகோபநிஷத்து. இதன்கட் பற்று - இந்த நுண்ணுடம்பினிடத்து ஆசை. நிலையாமை யுணர்ந்த தூயோன் வீடாமையின் - யாக்கைநிலையாமையை அறிந்தமாத்திரத்தாலே நீங்காதாதலால். வீடுதற்குஉபாயம் முன்னர்க்கூறுப - இவ்வுடம்பினிடத்தும் பற்றுநீங்குதற்கு உபாயத்தை முன்னே சொல்லுவர். 'முன்னர்' என்றது, இவ்வதிகாரத்திற் பத்தாம்பாட்டை; அதில் இவ்வுபற்றுவிடுதற்கு உபாயங் கூறப்படுதல் காண்க. புறப்பற்றுவிடுதற்குஉபாயம் இவ்வதிகாரத்தின் மூன்றும்பாட்டிற் கூறப்பட்டது. இடையுறுது - நடுவில்நீங்காமல். இவற்றுள் ஆய கட்டினை - இவ்விருவகையுடம்புகளாலும் ஆகிய பந்தத்தை. வீட்டின்கண்ணே விரைதலின் - முத்திநெறியிலே தூரிதப்பட்டுச் செல்லவேண்டுதலால். இன்பதுன்பங்களான் உயிரோடு ஒற்றுமையெய்துதலின் - இன்பத்தையுந் துன்பத்தையும் அநுபவித்தலில் உடம்பு உயிருடன் ஒருமைப்பட்டிருத்தலால். தொடர்ப்பாடு - தொடர்ப்படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். உடம்பும், உம்மை - உயர்வுசிறப்பு. மிகுதலையுடையது, மிகை. (டு)

ஈசசு. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(இ - ள்.) யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - (தானல்லாத உடம்பை) யானென்றும் (தன்னுடனியைபில்லாதபொருளை) எனதென்றுங் கருதி (அவற்றின்கண்) பற்றுச்செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை எய்தும்; (எ - று.)

மயக்கம் - அறியாமை. அதனைக் கெடுத்தலாவது - தேசிகர்பாற்பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யான் எனது அன்மை தெளிந்து அவற்றின்கட்பற்றை விடுதல். சிறப்பும்மைவிகாரத்தால்தொக்கது.

இதனுள், இருவகைப்பற்றினையும்விட்டார்க்கே வீடுஉளதென்பது கூறப்பட்டது.

(சு - ரை.) இயைபு - சம்பந்தம். எனது - என்னுடையது. அவற்றின்கண் - உடம்பினிடத்துஞ் செல்வத்தினிடத்தும். மயக்கம் - அறிவுமயங்குதல். கெடுப்பான் - ஒழிப்பவன். வானோர்க்கும் எய்தற்கு அரிய - தேவர்களுக்கும் அடைதற்குமுடியாத. எய்தும் - அடைவான். புகும் - செய்யுமென்னும்முற்று, இங்கு ஆண்பாலுக்கு வந்தது. தேசிகர்பாற்பெற்ற உறுதிமொழிகளானும் - சிறந்தஞானசார்யர்களிடங்கேட்ட உபதேசவார்த்தைகளாலும். யோகப்பயிற்சி - யோகாப்பியாசம். அவை யான் எனது அன்மை தெளிந்து - அவ்வுடம்பும் செல்வமும் முறையே யானும் எனதும் ஆகாமையை ஐயக்திரிபில்லாமல் அறிந்து. சிறப்பும்மை - உயர்வுசிறப்புமை. அது தொகுத்தல்

விகாரப்பட்டது, 'வாளுேர்க்கு' என்னுமிடத்தில். இருவகைப்பற்று - அகப் பற்றுப் புறப்பற்றுக்கள். "கீர்நுமதென்றிவை, வேர்முதன் மாய்த்திறை, சேர்மி னுயிர்க்கத, னேர்நிறையில்லே" என்னும் பாசுரத்தின்பொருளே இங்கே உணர்க. எனது - குறிப்புவினேயாலணேயும்பெயர். (சு)

நூசஎ. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினேப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(இ - ள்.) பற்றினே - இருவகைப்பற்றினேயும், பற்றி - இறுகப்பற்றி, விடாஅதவர்க்கு - விடாதாரை, இடும்பைகள் - பிறவித்துன்பங்கள், பற்றி - இறுகப்பற்றி, விடாஅ—; (எ - று.)

இறுகப்பற்றுதல் - காதல்கூர்தல். 'விடாஅதவர்க்கு' என்பது, வேற் றுமைமயக்கம்.

இதனுல், இவைவிடாதார்க்கு வீடில்லே யென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) இறுகப்பற்றி - உறுதியாகப் பிடித்துக்கொண்டு. காதல்கூர் தல் - மிகுதியாக ஆசைசெய்தல். விடாதவர்க்கு - 'விடாதாரை' என இரண் டாம் வேற்றுமைக்குரிய செயப்படுபொருள்கொண்டது, உருபுமயக்கம்; இவை- இருவகைப் பற்றுக்கள். அளவெடைகள், செய்யுளோசைநிறைக்கவந்தன. (எ)

நூசஅ. தலேப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலேப்பட்டார் மற்றைய வர்.

(இ - ள்.) தீர துறந்தார் - மூற்றத்துறந்தார், தலேப்பட்டார் - (வீட் டினேத்) தலேப்பட்டார்; மற்றையவர் - அங்ஙனந்துறவாதார், மயங்கி வலே பட்டார் - மயங்கி(ப் பிறப்பாகிய) வலேயுட்பட்டார்; (எ - று.)

மூற்றத்துறத்தலாவது-பொருள்களேயும் இருவகையுடம்பினேயும் உவர் த்துப் பற்றறவிடுதல். அங்ஙனந் துறவாமையாவது - அவற்றுள் யாதானு மொன்றின்கட் றிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றி 'தலேப்பட்டார்' என்றும், பொய்ந்நெறிகண்டே பிறப்புவலேயுள் அகப்படுதலின் 'மயங்கி' என் றுங் கூறினர்.

(கு - ரை.) மூற்றத்துறந்தார் - பற்றுக்களே முழுவதும் விட்டவர். வீட் டினேத்தலேப்பட்டார் - மூத்திலேய அடைந்தவராவர். மயங்கி - அவிச்சைக்கு உட்பட்டு. பிறப்பைவலேயென்றது,உயிரை நீங்காமல் தன்னுள்ளே பந்தப்படுத் தலால். வலேயுட்பட்டார் - வலேயினுள் அகப்பட்டவராவர். இருவகையுடம்பு - உருவுடம்பும் அருவுடம்பும். உவர்த்து - வெறுத்து. தலேப்படுவார்என எதிர் காலத்தாற் சொல்லவேண்டியதை இறந்தகாலத்தாற் சொன்னது, தெளிவு [நிச்சயம்] பற்றிவந்த காலவழுவமைதி. தீர - மிச்சமில்லாமல் ஒழிய; நீங்க என்றுங் கொள்ளலாம். பொய்ந்நெறிகண்டே - பொய்வழியென்று அறிந்தே. பொய்ந்நெறி யென்றது, மூத்திக்கு வழியல்லாததனே. (அ)

நூசசு. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்றை
நிலேயாமை காணப் படும்.

(இ - ள்.) பற்று அற்றகண் ஏ - (ஒருவன்) இருவகைப்பற்றும் அற்றபொழுதே, பிறப்பு அறுக்கும் - (அப்பற்றறுதி) அவன்பிறப்பை அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் - அவை யருதபொழுது (அவற்றுற் பிறக்திறக்துவருகின்ற) நிலையாமை காணப்படும்; (எ - று.)

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதாம் முறைமைபற்றி, 'பற்றற்றகண்ணே' என்றார்; "அற்றது பற்றெனி, லுற்றது வீடு" என்பதூஉம் அதுபற்றி வந்தது.

இவையிரண்டொட்டானும், அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன.

(கு - ரை.) அற்றபொழுதே-நீங்கின அக்காலத்திலேயே. அப்பற்றறுதி-அந்தப் பற்று நீங்குதல். அவன்பிறப்பை அறுக்கும் - அவனை முத்தியடைவிக்கும் என்றபடி. மற்று - இங்கே, எதிர்மறையானதை யுணர்த்திய தனால், வினைமாற்றுப் பொருளது. அவை - இருவகைப்பற்று. அவற்றால் - பற்றுக்களால். காணப்படும் - தோன்றும். நிலையாமை - யாக்கைநிலையின்மை. காரணம் பிறப்புக்குக்காரணம், பற்று. காரியம் - பற்றின்காரியமான பிறப்பு. "அற்றதுபற்றெனி, லுற்றதுவீடியிற்" என்னும்மேற்கோள் - திருவாய்மொழி, மூதற்பத்து, இரண்டாவது திருவாய்மொழியின் ஐந்தாம்பாட்டி லுள்ளது; பற்றுஅற்றதெனில் உயிர் வீடுஉற்றது-பற்றுநீங்கிற்றலின் உயிர் முத்தியடைந்தது என்பது பொருள். அதுபற்றி - அம்முறைமைபற்றி. அவ்விருமையும் - பற்றுவிட்டார்க்கு வீடு உண்டென்பதும், பற்றுவிடாதார்க்கு வீடு இல்லையென்பதுமாகிய அவ்விரண்டுதன்மையும். அற்றகண் - பெயரெச்சத்தொடர்: அதனால், அற்றக்கண் என வலி மிகவில்லை. கண் - இடம்; இடத்தையுணர்த்தினும் சொற்களெல்லாம், வேண்டியபோது காலத்தையும் உணர்த்தும். ஏகாரம் - விரைவுவிளக்கிநின்றது. 'மற்று நிலையாமை காணப்படும்' என்ற இரண்டாம்வாக்கியத்துக்கு - பற்றறுவிட்டாற் பிறப்பொழியா தென்பது கருத்து. முதல்வாக்கியத்தில், அறுக்கும் பயனிலை, பிறப்பு - செயப்படுபொருள், பற்றறுதி - தோன்றுவழுவாய். (கூ)

ஊரு. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(இ - ள்.) பற்று அற்றான் பற்றினை பற்றுக - (எல்லாப்பொருளையும் பற்றிநின்றே) பற்றற்ற இறைவன் (ஓதிய) வீட்டுநெறியை (இதுவேகன்னெறியென்று) மனத்துக்கொள்க; அ பற்றை பற்றுக பற்று விடற்கு - (கொண்டு) அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற்செய்க (விடாதுவந்த)பற்று விடுதற்கு.

கடவுள்வாழ்த்திற்கு ஏற்ப, ஈண்டும் பொதுவகையால் 'பற்றற்றான்' என்றார். 'பற்றற்றான்பற்று' என்புழி, ஆறாவது - செய்யுட்கிழமைக்கண் வந்தது. ஆண்டு 'பற்று' என்றது - பற்றப்படுவதனை. அதன்கண் உபாயமென்றது - தியான சமாதிகளை. விடாதுவந்த பற்று என்பது, அநாதியாய்வரும் உடம்பிற்பற்றினை.

அகப்பற்றுவிடுதற்கு உபாயம் இதனுள் கூறப்பட்டது.

(கு - சை.) எல்லாப்பொருளையும் பற்றினின்றே பற்றற்ற இறைவன் - உடம்பினு ளிருந்து தொழில்செய்விக்கின்ற உயிருக்கு அவ்வுடம்பின் குணமான கருமை செம்மை பெருமை சிறுமை வளர்ச்சி தேய்வு முதலிய வற்றின் தொடர்ச்சி இல்லாதவாறுபோல, அச்சீவான்மாவினு ளிருந்து தொழில் செய்விக்கின்ற பரமான்மாவுக்கும் அவ்வுயிரின் குணங்களாகிய நல்வினை தீவினை முதலியவற்றில் யாதொருசம்பந்தமு மில்லை யென அறிக; இவ்வுண்மை, "யாவையும் யவருந்தாமு யவரவர் சமயந்தோறும், தோய்விலன் புலனைந்துக்குஞ் சொலப்படா னுணர்வின்மூர்த்தி, யாவிசேருயிரி னுள்ளா லாதுமோர்பற்றிலாத, பாவனையதனைக்கூடி லவனையுங்கூடலாமே" என்ற திருவாய்மொழிப்பாசுரத்தாலும் விளங்கும்: "தோய்க்கும் பொருளனைத்துக் தோயாதுநின்ற சுடரே" எனக் கூறுவர் கம்பரும். இறைவன் ஓதிய - கடவுள் கூறின. வீட்டுநெறி - மோட்சமார்க்கம். அதன் கண் உபாயத்தை - அவ்விறைவனுலிற்கூறிய மூத்தியடையும் வழியை. இந்நூலின் முதலிற் கடவுள்வாழ்த்து எல்லாமதங்களுக்கும் பொதுவாகக் கூறப்பட்டதனை அவ்வதிகாரத்தில் வந்த "ஆதிபகவன்", "வாலறிவன்" முதலிய கடவுளின் திருநாமங்களாலும், அவற்றின் உரையாலும் அறிக. பற்றற் றுன்பற்று என்றவிடத்துத் தொக்குநின்ற ஆறும்வேற்றுமை - செய்யுட்கிழமையாகிய பிறிதின்கிழமைப்பொருளது; 'கபிலரகவல்', 'கம்பராமாயணம்' என்றவற்றிற்போல. இறைவனுரைத்திய வீட்டுநெறி - வைஷ்ணவத்திற் பாஞ்சராத்திரமும், சைவத்தில் ஆகமங்களும், ஜைனத்தில் பரமாகமமும் போல்வன. 'அப்பற்று' என்பதிலுள்ள பற்று - பற்றப்படுவதாகிய மூத்திநெறியைக் குறிக்கும். தியானம் - கடவுளை இடையறாது சிந்தித்தல். சமாதி - யோகத்தில் அசைவற்றிற்றல்; இவை - யோகத்தின் எட்டு அங்கங்களிற் சேர்த்தவை. ஐம்புலனடக்கி யோகஞ்சேர்தல்-தியானம்: இந்திரியம்முதலிய தத்துவசேஷ்டைகட்கு ஏதுவாய யாக்கையுள்ளின்று அவற்றைநீங்குகூடினும் அவற்றிற்பற்றின்றியிருக்கும் ஆன்மாவாகிய தன்னைக் காண்டல் - சமாதி என்பர். அநாதியாய்வரும்-பழமையாய்வருகிற. பரிமேலழகருரைப்படி இக்குறளில் அகப்பற்றுவிடுதற்குமாத்திரமே காரணங்கூறப்படுதலை, 'பற்றுவிடற்கு' என்பதற்கு-அநாதியாய்வரும் உடம்பிற்பற்றுவிடுதற்கு என்று உரைத்ததனாலறிக. ஆகவே, அகப்பற்றுஎன்றவிடத்து அப்பற்று என்றபாடம் சிறவாது. பற்றுவிடுதற்கு உபாயமாக அடையத்தக்கவன் என்ற கருத்துப்படக் கடவுளைப் பற்றற்றான் என்றது - கருத்துடையடைகொளியணி. இச்செய்யுளில், 'பற்று' என்ற ஒரு சொல் பலமுறை வந்தது, சொற்பின்வருநிலையணி. விடற்கு - எதிர்காலவினையெச்சம்: இதனைத் தொழிற்பெயர்மேல் வந்த நான்கனுருபாகக்கொள்ளலாகாது: ஒருகாலத்தைக் காட்டுதலால். பற்று என்றது - முத்திநெறியைக் குறிக்கும்போது, செயப்படுபொருள்விருதி புணர்ந்துகெட்ட பெயர்; விருப்பத்தைக்குறிக்கும்போது, முதனிலைத்தொழிற் பெயர். இக்குறளைச் சொற்செறிவுடைமையாற் சிலிட்டமென்னும் உயிருக்கு உதாரணங் காட்டினர், வீரசோழியவுரைகாரர். (கo)

நூ - ஆம் அதிகாரம்—மெய்யுணர்தல்.

அஃதாவது பிறப்புவீடுகளையும் அவற்றின்காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல்; இதனை வடநூலார் 'தத்துவ ஞானம்' என்ப. இதுவும் பற்றற்றான்பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணவொற்றுமைபற்றி, துறவின்பின் வைக்கப்பட்டது.

(கு - ரை.) பிறப்பு வீடுகள் - ஐம்மமும், முக்தியும். அவற்றின்காரணம்-பிறப்புக்குக்காரணமாகிய அவித்தையும், முத்திக்குக் காரணமாகிய ஞானமும். விபரீத ஐயங்களான் அன்றி - திரிபுசந்தேகங்களினு லல்லாமல்: திரிபு - ஒன்றை மற்றொன்றாக மாறுபடஅறிதல்: ஐயம் - இதுவோ அதுவோ என ஒருபொருளில் துணிவுபிறவாமலிருத்தல். இது-மெய்யுணர்ச்சி. பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவது - கடவுள்கூறின முத்திநெறியை விடாது கொண்டவிடத்து உண்டாவது. மெய்யுணர்தலாகியஇதுவும் துறவினைப்போலவே பற்றற்றான்பற்றினைப் பற்றுதலின் காரியமே[பயனே] யாதலால், இது அதன்பின் வைக்கப்பட்டதென்க. மெய்யுணர்தல்-மெய்யால்உணர்தல் என மூன்றும்வேற்றுமைத்தொகையாகவாவது, மெய்யாகியஅறிவு எனப் பண்புத்தொகையாகவாவது கொள்க;மெய்யையுணர்தல் என இரண்டாம்வேற்றுமைத்தொகையாகவுங் கொள்ளலாம். காரணவொற்றுமை-துறவுக்குப்போலவே மெய்யுணர்தலுக்கும் பற்றற்றான்பற்று காரணமாயிருக்கின்ற ஒற்றுமை: காரணமென்றது-இங்கே, மூவகைக்காரணங்களுள் நிமித்தகாரணத்தை.

நூநிக. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளாணு மாணப் பிறப்பு.

(இ - ள்.) பொருள் அல்லவற்றை - மெய்ப்பொருளல்லவற்றை, பொருள் என்று உணரும் - மெய்ப்பொருளென்று உணரும், மருளான் - விபரீதவுணர்வானே, ஆம் - உளதாம்: மாணு பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு.

அவ்விபரீதவுணர்வாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் இல்லையெனவும் மற்றும்இத்தன்மையவுஞ்சொல்லும் மயக்கநூல்வழக்குகளை மெய்ந்நூல்வழக்கெனத் துணிதல்; குற்றியை மகனென்றும், இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் துணிதலும் அது: மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன - ஒருபொருட்கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப்பிறப்பினும் உள்ளது துன்பமேயாகலின், 'மாணுப்பிறப்பு' என்றார்.

∴ இதனான், பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சையென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - ரை.) விபரீதவுணர்வானே - திரிபறிவால். மயக்கநூல்வழக்குக்கள்-அறிவுக்கு மயக்கத்தைத் தரும் நூல்களின் கொள்கைகள். இத்தன்மையவும் என்று கூறியதில், 'ஆகாயமென்பது ஒன்றில்லையெனவும், பூதங்களின் கூட்டரவால் உயிரென்பதுஒன்றுதோன்றி அவற்றின்பிரிவாலழியுமெனவும், காட்சியன்றி வேறுஅளவை யில்லை யெனவும் பிறவும் கூறுதல் அடங்கும்.

மெய்ந்நூல் வழக்கு-தத்துவசாஸ்திரசித்தாந்தம். குற்றி-மரக்கட்டை. மகன் - மனிதன். ஒருபொருட்கிளவி - ஒருபொருளையே யுணர்த்துஞ்சொல். நரகர்-பாதாளலோகத்தில் நரகத்தில் வசிப்பவர். விலங்கு - மிருகங்கள்; இதில்-பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவும் அடங்கும். அதற்கு முதற் காரணம் - பிறப்புக்குப் பிரதானமான காரணம். மயக்கநூல் வழக்குக்கள் - உலோகாயதம் முதலிய பொய்ம்மதங்களின்சம்பந்தமான சாஸ்திரங்களின் கொள்கைகள். 'திரிபுணர்வும் உணர்வேயெனப்படும்: உணர்வென்னும்பொது மைநோக்கு: சந்தனமுங்காஞ்சிரையும் மரமெனப்பட்டதுபோல'என்பது நூற் கொள்கையாதலால், விபரீதவுணர்வெனப்பட்டது. "திரிவாக்கோடலொன் றையொன்றென்றல், விரிகதிரிப்பியைவெள்ளியென்றுள்ளல், தேராது தெளிதல்செண்டுவெளியில், ஓராதுதறியைமகனெனவுணர்தல்" என்பது, மணிமேகலை. (க)

உரை. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(இ - ள்.) மருள் நீங்கி - அவிச்சையின் நீங்கி, மாசு அறு காட்சியவர் க்கு - மெய்யுணர்வுடையராயினார்க்கு, (அம்மெய்யுணர்வு), இருள் நீங்கி இன் பம் பயக்கும் - பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும்; (எ - று.)

இருள் - நரகம்; அஃது - ஆகுபெயராய், காரணத்தின்மேல் நின்றது. 'நீங்கி' எனத் தொடைநோக்கி மெலித்துநின்றது; நீங்க என்பதன் திரிபெனி னும் அமையும். 'மருள்நீங்கி' என்னும் வினையெச்சம், 'காட்சியவர்' என்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. 'மாசறுகாட்சி' என்றது,கேவலவுணர்வினை.

இதனுன், வீடாவது நிரதிசயவின்ப மென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் * கேவலப்பொருளுணர்வென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - ரை.) அவிச்சையின் - விபரீதஞானத்தினின்று. இருள் - அந்த காரமயமான அந்ததாமிஸ்ரம் எனப்படும் நரகம்: இக்குறளில், இருள் - நரகத் துக்குக் காரணமான பிறப்பிற்குக் காரியவாதுபெயர். நீங்கி - நீக்கியென் பதன் மெலித்தல்; இதனை நீங்கவென்னும்வினையெச்சந் திரிந்ததாகக் கொள் ளின், அச்செயவெனெச்சம் உடனிகழ்ச்சிப்பொருளதென்க. 'தொடை நோக்கி' என்றது, "இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி" என்றவிடத்து "ஒருஉவாமிருசீரிடையிட்டது" என்றபடி இருசீரிடையிட்டு முதற்சீரும் நான்காஞ்சீரும் எதுகைவாதத்தொடுத்த ஒருஉவெதுகைத்தொடை யா மாதலா லென்க. மாசு அறு காட்சி - குற்றமில்லாத அறிவு. 'மருணீங்கி' என்பதில், நீங்கி என்பதற்கு முடிக்குஞ்சொல் - 'காட்சியவர்' என்பதில் விரிகிற உடை யவர் என்பது; இனி, 'மாசறு' என்பதிலுள்ள அறு என்றலுமாம். கேவல வுணர்வு - பரம்பொருளறிவு. நிரதிசய வின்பம் - தனக்குமேம்பட்டதோரின் பத்தையுடைத்தாகாத பேரின்பம். நிமித்தகாரணம் - குடத்திற்குக் குயவன் போலக் காரியத்தில் அணுவர்த்தியில்லாத காரணம். கேவலப்பொருள்-பரம் பொருள். 'பயக்கும்' என்பதற்கு மாசறுகாட்சியவர் என்னுங் குறிப்புவினை யாலணையும்பெயரினின்று எடுத்துக்கொள்ளப்பட்ட மாசறுகாட்சியென்பது-

* பீ - ம்: கேவலப்பொருளென்பதூஉம்

எழுவாய். 'முதனிலையுமன்றித் தொழிற்பெயர் பிரிந்து வினைமுதலாதலுங் கொள்க; அது ''இருணீங்கியின்பம்பயக்குமருணீங்கி, மாசறுகாட்சியவர்க்கு'' —'அக்காட்சி' என்பதனைற் காண்க' என்பது இலக்கணக்கொத்துரை. (உ)

நூருநூ. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(இ - ள்.) ஐயத்தின் நீங்கி - ஐயத்தினின்று நீங்கி, தெளிந்தார்க்கு - மெய்யுணர்ந்தார்க்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து - (எய்தி நின்ற) நிலவுலகத்தினும் (எய்தக்கடவதாய) வீட்டுலகம் நணித்தாதலுடைத்து.

ஐயமாவது - பலதலையாய உணர்வு; 'அஃதாவது - மறுபிறப்பும் இருவினைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ?'என ஒன்றில் துணிவுபிறவாது நிற்றல்: 'பேய்த்தேரோ புனலோ? கயிறே அரவோ?' எனத் துணியாதுநிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதம் கூளாந்து தம்மதநிறுத்தல் எல்லாச்சமய நூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாதுமெய்யென நிகழும் ஐயத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம்அனுபவத்தால் நீக்கி மெய்யுணர்வா ராகலின், அவரை 'ஐயத்தின்நீங்கித்தெளிந்தார்' என்றும்; அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டுவரவரப் பண்டையுலகியலுணர்வு தூர்ந்துவரு மாகலின், அதனைப் பயன்மேலிட்டு 'வையத்தின்வான நணிய துடைத்து' என்றுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக்காரண மாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) ஐயம் - சந்தேகம். எய்தி - அடைந்து. எய்தக்கடவதாய - அடையப்போவதாகிய. நணித்தாதல் உடைத்து-சமீபத்தில் இருத்தலுடையது. பலதலையாய உணர்வு - பலவகைப்பட்ட அறிவு. 'ஐயம் என்பது - ஒருபொருள்மேல் இருபொருள் தன்மை கருதிவரும் மனத்தடுமாற்றம்' என்பர். ஒருவாற்றால் பிறர்மதம் கூளாந்து தம் மதம் நிறுத்தல் - ஒருவகையாலே அயலார்கொள்கையை மறுத்துத் தமது கொள்கையை நிலைநிறுத்துதல். எல்லாச் சமயநூல்கட்கும் - மதக்கிரந்தங்களெல்லாவற்றிற்கும். அவை- அந்தந்தச் சாஸ்திரங்கள். பொருள் - அர்த்தம். யாது மெய் என நிகழும் - 'எது உண்மையோ?'என்று உண்டாகிற. யோகமுதிர்ச்சியுடையார் - யோகப் பயிற்சியில் முதிர்ந்தவர். தம் அனுபவம் - யோகநிலையின் முதிர்ச்சியில் தாம் கண்ட காட்சி. அவரை - யோகமுதிர்ச்சியுடையாரை. அவர்க்கு - யோகமுதிர்ச்சியுடையார்க்கு. அடிப்பட்டுவரவர - நிலைபூன்றி வரவர. பண்டையுலகியலுணர்வு - பழமையான உலகநடவடிக்கையறிவு. தூர்ந்து வரும் - குறைவுபட்டுவரும். அதனைப் பயன்மேலிட்டு - முத்திஞானம் மிகுந்து இவ்வுலகஞானங் குறைதலே அதன்பயனுகிய இவ்வுலகம் தூரமாதலும் முத்திசமீபமாதலும் என்பதன்மே லேற்றி. ஐயத்தின் - இன்னுருபு, நீக்கம். வையத்தின் - இன்னுருபு, எல்லை. நணியது-ஒன்றன்பால் வினையாலணையும்பெயர். ''ஐய மென்ப தொன்றைநிச்சயியாது, மையிற் றறியோ மகனே வென்றல்'' என்பது மணிமேகலை. (ரு)

நூருசு. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லாத வர்க்கு.

(இ - ள்.) ஐ உணர்வு - (செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான்) ஐந்தாகிய உணர்வு, எய்தியக்கண்உம் - (அவற்றைவிட்டுத்) தன்வயத்ததாய வழியும், பயம் இன்றுஎ - (அதனுற்) பயன் இல்லையேயாம்: மெய் உணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினைஉணர்தல் இல்லாதார்க்கு; (எ - று.)

ஐந்தாகிய உணர்வு - மனம்; அஃது எய்துதலாவது - மடங்கி ஒருதலைப் பட்டுத் தாரணைக்கண் நிற்றல். அங்ஙனம் நின்றவழியும் வீடுபயவாமையின், 'பயமின்று' என்றார். சிறப்பும்மை, எய்துதற்கருமை விளக்கிநின்றது.

இவையிரண்டுபாட்டானும், மெய்யுணர்வுடையார்க்கே வீடு உளதென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) செல்லப்படுகின்ற - மனத்துக்குவிஷயமாய் அனுபவிக்கப் படுகிற. புலன்கள் வேறுபாட்டால் ஐந்தாகிய - ஓசைமுதலிய விஷயபேதங்க ளால் ஐந்துவகைப்பட்ட. அவற்றைவிட்டுத் தன்வயத்ததாயவழியும் - அப் புலன்களுக்கு வசப்படுதலை யொழித்து தனக்கு வசப்பட்டதான் விடத்தும். அஃது - மனம். மடங்கி ஒருதலைப்பட்டு - விஷயங்களிற் செல்லாமல் மீண்டு ஒருவழிப்பட்டு. தாரணை - யோகத்தின் ஒரு அங்கம்; அது - கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றுள் ஒன்றில் எப்பொழுதுஞ் சித்தைவைத் திருத்தல். மெய்யுணர்வில்லாவிடின் மனம் வசப்பட்டுநின்றாலும் முத்தியுண்டாகா தென்க. சிறப்பும்மை - 'எய்தியக்கண்ணும்' என்பதிலுள்ளது. எய்துதற்கு அருமை - மனம்வசப்படுவது அருமையென்பதை. உணர்வு-அறிதலையுடைய மனத்திற்குத் தொழிலாகுபெயர். எய்தியக்கண் - எதிர்காலவினையெச்சம். பயம்=பயன். எ - தேற்றம். (சு)

ஈறுதரு. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) எப்பொருள் எத்தன்மைத்து ஆயின்உம் - யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது - (அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது) அப்பொருளின்கணின்று மெய்யாகியபொருளைக் காண்பதே, அறிவு - மெய்யுணர்வாவது; (எ - று.)

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டுவழங்குகின்ற கற்பனை களைக் கழித்து நின்றஉண்மையைக் காண்பது என்றவா றாயிற்று; அஃதாவது - 'கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை' என்றவழி, அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதோர் குடியும், வேழநோக்கினையுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோர் இயற் பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதோர் சிறப்புப்பெயரும் ஒரு பொருளின்கட் கற்பனை யாகலின், அவ்வாறு உணராது நிலம்முதல் உயிர்ஈறாகிய தத்துவங்களின்தொகுதி யென உணர்ந்து அவற்றை நிலமுதலாகத் தத்தங்காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரணகாரியங்களிரண்டு மின்றி முடிவாய்நிற்பதனை உணர்தலாம். 'எப்பொருள்' என்ற பொதுமையான், இயங்குதிணையும் நிலைத்திணையு மாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே உணரப்படும்.

இதனுன், மெய்யுணர்வினது இலக்கணங் கூறப்பட்டது.

(கு - ரை.) யாதொருபொருள் - ஏதேனும் ஒருபொருள். யாதோர் இயல்பிற்ருய்த்தோன்றினும் - எந்தத்தன்மையுடையதாய்க் காணப்பட்டாலும். அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது - அத்தோற்றத்தைக்கண்டு நீங்காமல். கற்பனை - இல்லதைஉள்ளதாய் உண்டுசெய்தல். கழித்து - ஒழித்து. கோ-ஈத்திரியசாதியான். சேரமான் - சேரர்குலத்திற்பிறந்தவன். யானைக் கட்சேஎய் - யானையினது கண்ணேக்கம்போலுங் கம்பீரமான பார்வையையுடைய சேயென்னும்பெயருடையான். மாந்தரஞ்சொலிரும்பொறை-மக்கள் புகழும் அழகியபுகழ்ச்சொல்லின் பெரியசுமையையுடையவன். 'மாந்தரஞ் சேரலிரும்பொறை' எனவும் படிக்கலாம்: அப்பொழுது மாந்தரஞ்சேரலென்றும், இரும்பொன்றையென்றும் இரண்டுபெயராக எடுக்கவேண்டும்; மாந்தரஞ் சேரல் என்பதற்கு - மனிதர்க்குள் அழகையுடைய சேர னென்பதும், இரும்பொறை என்பதற்கு - மிக்கபெருமைக்குணமுடையவனென்பதும் பொருள்போலும். சேரன்என்பது சேரல் என வழங்குதலே "குடக்கோச்சேர லிளங்கோவடிகட்கு" எனச் சிலப்பதிகாரத்திலுங் காண்க. இரும்பொறையென் பது சேரரில்ஒருசாராரார்க்குவழங்குதலேயும்அறிக. "வேழநோக்கின் விறல்வெஞ் சேஎய்" என்றும், "ஓம்பாதீயுமாற்றலெங்கோ, மாந்தரஞ்சொலிரும்பொறை" என்றும் புறநானூற்றிற் காண்க. ஒருபொருளின்கண் - ஒருயிரோடுகூடிய ஒருடம்பினிடத்து. நிலம் முதல் உயிர் ஈறுகிய தத்துவங்கள் - நிலம் நீர் தீ காற்று வானம் என்னும் பஞ்சபூதங்கள் முதலிய இவ்விருபத்தைந்து தத்துவங்கள்; இருபத்தைந்து மல்லது உலகெனப் பிறிதொன்று இல்லையென்பது உண்மையென்பார், 'தத்துவங்களின்தொகுதி யென உணர்ந்து' என்றார்; இதுபற்றியே, "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரி வான் கட்டே யுலகு" எனக் கீழ் 'நீத்தார்பெருமை' என்னும் அதிகாரத்திற் கூறியதும். ஆதியிற் பரமாத்மாவினிடத்தினின்று பிரகிருதியும் புருஷனும் உண்டாகிச் சேர, அப்பொழுது பிரகிருதியினின்று மகத்தத்துவமும், பின்பு அதினின்று அகங்காரமும், பின்பு அதினின்று சப்தமும், சப்தத்தினின்று ஆகாசமும், ஆகாசத்தினின்று ஸ்பர்சமும், ஸ்பர்சத்தினின்று வாயுவும், வாயுவினின்று ரூபமும், ரூபத்தினின்று அக்கினியும், அக்கினியினின்று ரசமும், ரசத்தினின்று ஜலமும், ஜலத்தினின்று கந்தமும், கந்தத்தினின்று பூமியும் உண்டாயினவென்றும், அகங்காரம்—சாத்துவிகம் ராஜஸம் தாமஸம் என மூவகைப்படுமென்றும், தன்மாத்திரைகளும் பூதங்களும்—தாமசாகங்காரத்தின் காரிய மென்றும், மனம்—சாத்துவிகாகங்காரத்தினின்று உண்டான தென்றும், பஞ்சஞானேந்திரியங்களும் பஞ்சகருமேந்திரியங்களும்—ராஜசாகங்காரத்தில் தோன்றியவை யென்றும் அறிக. இங்ஙனம் எந்தப்பொருளினின்று எந்தப்பொருள் உண்டாயிற்றே அந்தக் காரியப்பொருளைக் காரணப்பொருளில் அடக்கிக்கொண்டே சென்றால் எல்லாத்தத்துவங்களும் நீங்க, பெயர் சாதி முதலான கற்பனைகளில்லாமல் எப்பொழுது மிருத்தலேயே சுபாவமாக்கொண்டதாய், அறிதற்குரியதாய், ஞானசொரூபியாய், ஜீவாத்மா

வுக்கு மேற்பட்டதாய், எல்லாவற்றிற்கும் ஆகாரமான பரமாத்மாவின் சொரூபம் விளங்கக் காணலாம். இக்குறளே மேல் 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் ''எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருள், மெய்ப் பொருள் காண்ப தறிவு'' என்பதனோடு ஒப்பிடுக. இக்குறளை, 'விழுமியதுபயத் தல்' என்னும் அழகுக்கு உதாரணங் காட்டினர், வீரசோழியவுரைகாரர். அறிவுக்கு மேற்கோளாகக்காட்டினர், இறையனாரகப்பொருளுரையில் நக்கீ ரர். ஐங்கமம் - இயங்குதிணை. (நு)

நூநுசு. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(இ - ள்.) ஈண்டு - இம்மக்கட்பிறப்பின்கண்ணே, கற்று - (உபதேச மொழிகளே அனுபவமுடையதேசிகர்பால்) கேட்டு, மெய் பொருள் கண் டார் - (அதனால்) மெய்ப்பொருளை உணர்ந்தவர், மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர்-மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்; (எ - று.)

'கற்று' என்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், 'ஈண்டு' என்றதனால் வீடுபேற்றிற்குரியமக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற் றும். ஈண்டுவாராநெறி - வீட்டுநெறி.

வீட்டிற்குநிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை - கேள்வி, விமரிசம், பாவனை என்பன: அவற்றுள் கேள்வி இதனாற் கூறப்பட்டது.

(கு - ரை.) இம்மக்கட்பிறப்பின்கண்ணே - இத்தமனிதசன்மத்திலேயே. அனுபவம்-தாம் கண்டு பழகுதல். தேசிகர்பால் - ஆசிரியரிடத்தில். இப்பிறப் பின்கண் வாராத நெறி-மூத்திவழி. கற்று என்றதனால்-கற்று எனப் பொதுப் படக் கூறியதனால். பலர்பக்கலினும் - பலரிடத்தும். பயிறலும் - நூற்பொரு ளைக்கேட்டுப் பழகுதலும். ''அரிதரிதுமானிடராதலரிது'' என்றார் ஔவை யாரும். ''அரிதாற்,பெரியயோனிகள் பிழைத்திவண்மானிடம்பெறலே,'' ''அரு மையினெய்தும்யாக்கையும்'' என்ற சிந்தாமணியாலும் மக்கட்பிறப்புப் பெற லரியதாத லுணர்க. முதற்பொருள் - தலைமைப்பொருள். கேள்வியெனினும், சிரவணமெனினும் ஒக்கும். விமரிசம்-ஆராய்ச்சி. பாவனை-கண்டுதெளிதல்.(சு)

நூநுள. ஓர்த்துள்ள மூள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(இ - ள்.) உள்ளம் ஒருதலை ஆ ஓர்த்து உள்ளது உணரின் - (அங்ஙனங் கேட்ட உபதேசமொழிப்பொருளை) ஒருவனுள்ளம் (அளவைகளானும் பொரு ந்துமாற்றானும்) தெளிய ஆராய்ந்து (அதனால்) முதற்பொருளை உணரு மாயின், பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா-(அவனுக்கு) மாறிப் பிறப்பு(உள தாக) நினைக்கவேண்டா; (எ - று.)

ஒருதலையா ஓர்த்து என இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே உரைத்தாம்.

இதனால், விமரிசம் கூறப்பட்டது.

(கு - ரை.) உள்ளம் - மனம். அளவைகளானும் - பிரதியக்ஷம் முதலிய பிரமாணங்களாலும். பொருந்துமாற்றானும் யுக்தியினாலும். அதனுன் - அவ் வாராய்ச்சியால். மாறி - மீண்டு. ஒருதலையா ஓர்த்து - நிச்சயமாக அறிந்து. இயையும் - தொடரும். 'அளவைகளும் பொருந்துமாறும் மேலேயுரைத்தாம்' என்றது - கீழ் 'அருளுடைமை' என்னும் அதிகாரத்தில் ''நல்லாற்றானுடி யருளாள்க'' என்றதன் உரையில். ஓர்த்து - இது, ஓர்ந்து எனவும் வரும். உள்ளது - அழிவற்றது; முதற்பொருள்; ஒன்றன்பாற்குறிப்புவினையாலணையும் பெயர். உள்ள - செயவெனெச்சம். 'உள்ளவேண்டா' என்பதை ஒருசொல்லாகக்கொண்டு பிறப்பு என்பதை எழுவாயாக் கொள்க: இனி, உள்ளவென்னும் வினையெச்சத்தைத் தொழிற்பெயர்போலப் பாவித்து, 'வேண்டா' என்பதற்கு எழுவாயாக்கினுமாம். விமரிசமெனினும், சிந்தித்தலெனினும், மநநமெனினும் ஒக்கும். (எ)

நூநிஅ. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(இ - ள்.) பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம் பொருள் காண்பது - மீட்டிற்கு நிமித்தகாரணமாய செவ்விய பொருளைக் காண்பதே, அறிவு - (ஒருவர்க்கு) மெய்யுணர்வாவது; (எ - று.)

'பிறப்பென்னும்பேதைமை'எனவும்'சிறப்பென்னுஞ்செம்பொருள்' எனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக்குற்றங்களுள் அவிச்சை ஏனையநான்கிற்குங் காரணமாத லுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்கூறினர். எல்லாப்பொருளினுஞ்சிறந்ததாகலான், வீடு 'சிறப்பு' எனப்பட்டது. தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னைஒன்றுங்கலத்தல் இன்மையின் தூய்தாய், தான் எல்லாவற்றையுங் கலந்துநிற்கின்ற முதற்பொருள், விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனை 'செம்பொருள்' என்றார்; மேல் 'மெய்ப்பொருள்' எனவும், 'உள்ளது' எனவும் கூறியதூஉம் இதுபற்றியென உணர்க. அதனைக் காண்கையாவது - உயிர் தன் அவிச்சைகெட்டு அதனோடு ஒற்றுமையுற இடைவிடாதுபாவித்தல்; இதனைச் சமாதியெனவும், சுக்கிலத்தியானமெனவும் கூறுப. 'உயிர் உடம்பின்நீங்குங் காலத்து அதனுன் யாதொன்று பாவிக்கப்பட்டது,அஃது அதுவாய்த்தோன்றும்'என்பது எல்லாஆகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப்பொருளையே பாவித்தல்*வேண்டும்: அதனுன், அதனை முன்னேபயிறலாய இதனின் மிக்க உபாயமில்லை யென்பது அறிக.

இதனுன், பாவனை கூறப்பட்டது.

---

* பி - மீ: வேண்டுதலான், அதனை

(கு - ரை.) சிறப்பு - எல்லாவற்றினுஞ் சிறத்தலையுடைய வீட்டுக்குத் தொழிலாகுபெயர். பிறப்பென்னும்பேதைமை - பிறப்பிற்குக் காரணமான பேதைமை, சிறப்பென்னுஞ்செம்பொருள் - சிறப்புக்குக்காரணமான செம் பொருள். இவற்றில், பிறப்பு சிறப்புக்கள் - பேதைமை செம்பொருள்களின் பய ஞதலால் காரியம்: பேதைமையும் செம்பொருளுங் காரணம்: காரிய மாகிய பிறப்புக் காரணமாகிய பேதைமையாகவும், காரியமாகியசிறப்புக் காரணமாகிய செம்பொருளாகவும் கூறப்பட்டன. குற்றங்கள் ஐந்து, கீழ் அறன்வலியுறுத்தலில் "வீழ்தாள்" என்ற குறளினுரையிற் கூறப்பட்டன. இவற்றுள், அவிச்சை மற்றைநான்கிற்குங் காரணமாதல், மேல் "காமம் வெகுளி மயக்கம்" என்ற குறளினுரையில் விளங்கும்; மற்றைநான்கு - அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பன. தோற்றக்கேடுகள் - பிறப்பு இறப்புக்கள். கோன்மை - அளவிறந்தபெருமை. மூதற்பொருள் - பரம்பொருள். விகாரமின்றி - வேறுபடுதலில்லாமல். மேல் - மூன்னிரண்டு பாடல்களில். உயிர் - சீவான்மா. அதனோடு - பரமான்மாவோடு. பாவித்த லெனினும், பாவனையெனினும், தெளிதலெனினும், நிதித்தியாசனமெனி னும் ஒக்கும். "இணரெரிமுழக்கமன்ன சுக்கிலத்தியானமென்னும், கணை யெறிந்துகைப்ப வீழ்ந்து காற்படைசூழப்பட்டார்" என்ற சீவகசிந்தாமணி காண்க. பாவிக்கப்பட்டது - இடைவிடாதுஎண்ணப்பட்டதோ. அஃது - அவ் வுயிர். அதுவாய் - அந்தப் பாவிக்கப்பட்டபொருளாய். ஆகமம் - கடவுள்வாக் காகிய சாஸ்திரங்கள். அக்காலத்து - மரணகாலத்தில். பிறப்பிற்கேதுவாகிய பாவனை - பிரபஞ்சநினைவு. கேவலப்பொருளையேபாவித்தல் - பரமாத்மாவி னையே தியானித்தல். அதனை - அப்பிரஹ்மபாவனையை. பயிறல்-பழகுதல்.

ஈருகூ. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(இ - ள்.) (ஒருவன்), சார்பு உணர்ந்து - (எல்லாப்பொருட்குஞ்) சார் பாய அச்செம்பொருளை உணர்ந்து, சார்பு கெட - இருவகைப்பற்றும் அற, ஒழுகின்-ஒழுகவல்லனுயின்,—சார்தரும் நோய்-(அவனை முன்)சாரக்கடவன வாய்நின்ற துன்பங்கள்,—அழித்து மற்று சார்தரா - (அவ்வுணர்வொழுக்க ங்களை) அழித்துப் பின் சாரமாட்டா; (எ - று.)

ஆருபெயரால், சாரும்இடத்தையும், சார்வனவற்றையும் 'சார்பு' என் ரூர். ஈண்டு, ஒழுக்கமென்றது - யோகமெறியொழுகுதலை; அஃது - இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும்: அவற்றின்பரப்பெல்லாம், ஈண்டு உரைப்பிற் பெரு கும்: யோகநூல்களுட் காண்க. மற்றுச்சார்தரா என இயையும். சாரக்கட வனவாய்நின்ற துன்பங்களாவன - பிறப்பு அநாதியாய்வருதலின் உயிரான் அளவின்றிஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்தஉடம்புகளான் அனு பவித்தனவும் பிறந்தஉடம்பான்மூகந்துநின்றனவும் ஒழியப் பின்னும் அனு பவிக்கக்கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின்முன் இருள்போல ஞான யோகங்களின்முன்னர்க் கெடுதலான், 'அழித்துச்சார்தரா' என்ரூர்; இதனை

ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப்பிற்குக்காரண மாகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது.

மேல் மூன்றுஉபாயத்தானும் பரம்பொருளை உணரப் பிறப்புஅறு மென்றார்; அஃதுஅறும்வழிக் கிடந்தது்பங்களெல்லாம் என்செய்யு மென்னுங் கடாவை ஆசங்கித்து, அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையஉயிரைச் சாரமாட்டாமையானும், வேறுசார்பின்மையானுங் கெட்டுவிடு மென்பது இதனாற் கூறப்பட்டது.

(சு - ரை.) சார்பாய - ஆதாரமான. அச்செம்பொருளை - அந்தப்பிரஹ்மத்தை. அற - நீங்க. மூன் - இனி. பின் - பின்பு. சார்பு என்னுஞ்சொல் இரண்டனுள், முன்னது - சார்தற்குரிய இடமாகிய பரம்பொருளையும், பின்னது - ஒருயிரைச்சார்தலையுடைய இருவகைப்பற்றுக்களையுங் குறித்தன; தொழிலாகுபெயர். யோகநெறியாகிய இயமம் முதலியவற்றைப்பற்றி "செயற்கரிய" என்ற குறளினுரைக்குறிப்பிற் கூறப்பட்டன: ஆங்குக் காண்க. இருப்பு ஆசனம் என்பனவும், உயிர்நிலை வளிநிலை பிராணயாமம் என்பனவும், மனவொருக்கம் தொகைநிலை பிரத்தியாகாரம் என்பனவும், தாரணை பொறைநிலை என்பனவும், தியானம் நினைதல் என்பனவும் ஒருபொருளன. அளவின்றி நாட்டப்பட்ட - அளவில்லாமற்செய்து சேர்க்கப்பட்ட. இவை - சஞ்சிதகர்ம மெனப்படும். மூஙந்துநின்றன-அனுபவிக்க ஏற்றுக்கொள்ளப்பட்டு நின்றவை; இவை - பிராரப்தகர்மமெனப்படும். பின்னும் - இனிவரும் உடம்புகளால். ஆருகதர் - அருகனேத்தெய்வமாகவுடையவர். இதனை - மெய்ப்பொருளை யறிந்து இருவகைப்பற்றுங்கெட நடப்பவனைப் பிராரப்தகர்மமொழிந்த கர்மங்கள் அணுகாதநிலையை. இங்கே நல்வினையென்றது, சுவர்க்க வின்பம் முதலிய காமியபலன்களைத் தருவனவான யாகம் முதலியவற்றை. அந்த நல்வினையும் தீவினையும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுறுத்துதலில், பொன்விலங்கும் இருப்புவிலங்கும்போலத் தம்முள் ஒப்பனவா மென்க. நோய் என்பதில், புண்ணியம் பாவம் என்னும் இரண்டின்பயனும் அடங்கும். மேல் - முன்னையமூன்றுபாடல்களில். மூன்றுஉபாயம் - கேள்விமுதலியன. அஃது-பிறப்பு. கடாவை - வினாவை. ஆசங்கித்து - தானாக எழுப்பி. சார்பின்மையானும் - ஆதாரமில்லாமையானும். இச்செய்யுளில் மற்றென்னும் இடைச்சொல், பின் என்னும் பொருளது. (கூ)

நூசூ0. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்.

(இ - ள்.) காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றின் நாமம் கெட - (ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு) விழைவு வெறுப்பு அவிச்சை என்னும்இக்குற்றங்கள் மூன்றனுடைய பெயருங்கூடக் கெடுதலான், நோய் கெடும் - (அவற்றின்காரியமாய) வினைப்பயன்கள் உளவாகா; (எ - று.)

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யான்என மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டும்என்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்

கட் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட்செல்லுங் கோபமும் என வடநூலார் குற்றம்ஐந்தென்றார்; இவர் அவற்றுள் அகங்காரம் அவிச் சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான், மூன்றென்றார். இடையறாத ஞானயோகங்களின் மூன்னர் இக்குற்றங்கள்மூன்றும் காட்டுத்தீமுன்னர்ப் பஞ்சுத்துய் போலு மாகலின், அம்மிகுதிதோன்ற, 'இவைமூன்றின்நாமங்கெட' என்றார். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெட என்பது - எச்சத்திரிபு. நோய் என்பது - சாதியொருமை.

காரணமாய * குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய வினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களும் இல்லையென்பது இதனாற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல்வரக்கடவ துன்பங்களும் இலவாகல் மெய்யுணர்வின்பய னாகலின், இவையிரண்டுபாட்டும் இவ்வதிகாரத்த வாயின. இவ்வாற்றானே, மெய்யுணர்ந்தார்க்கு நிற்பன எடுத்தஉடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம்.

(கு - ரை.) விழைவு - விருப்பு. அவற்றின் - இக்குற்றங்களின். அவா - விருப்பம். அதன் மறுதலைக்கண் - தான்விரும்பியதற்குஎதிராயிருப்பதில். இக்குற்றங்கள் - முறையே வடமொழியில் அவித்யா, அஸ்மிதா, ராகம், அபிநிவேசம், த்வேஷம் என்னும் பஞ்சகிலேச மெனப்படும். காமம், ஆசை, அபிநிவேசம் என்பனவும், வெகுளி கோபம் த்வேஷம் என்பனவும், மயக்கம், அவித்தை என்பனவும் - ஒருபொருளன. பஞ்சுத்துய் - பஞ்சிற்பிறுடர் நூனி. அம்மிகுதி - ஞானயோகங்களின் சிறப்புமிகுதியும், குற்றங்களின் இழிவுமிகுதியும். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது, நாமம் என்பதன் இறுதியில். கெட்டால்என்பது கெட எனத் திரிந்தது என்பார், 'கெட என்பது எச்சத்திரிபு' என்றார். வரக்கடவ துன்பங்கள், ஆகாமியமெனப்படும். இவையிரண்டுபாட்டும் - கூ, கo - ஆம் பாடல்கள். இவ்வாற்றானே - இந்தவழியால். நிற்பன - இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவனவாய்நிற்பன. அது - உடம்பு. அதுகொண்ட வினைப்பயன்களுமே - பிராரப்தகர்மமயனும் மாத்திரமே. மெய்யுணர்ந்தவர் இப்பிறப்பில் இனிக் கருமஞ்செய்யார்; அவர்க்கு மீண்டும் பிறப்பில்லை; முந்தியசன்மங்களிற் செய்த கருமங்களுள் முந்தின பிறப்புக்களில் அனுபவித்தவை முன்னமே கழிந்தன; அவைபோகமிச்சமாகவுள்ளவற்றுள் இப்பிறப்பில் அனுபவிக்க ஏற்பட்டவற்றில் மெய்யுணர்தற்குமுன் கழிந்தவைபோக மற்றவைமாத்திரமே மெய்யுணர்ந்தபின்பும் இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவனவாய்நிற்கும்; மற்றை யாவும் ஒழியும் எனக் கருத்தைத் தெளிக: (ஒழிவது, கல்வினை அவருடைய நண்பரையும் தீவினை அவருடைய பகைவரையுஞ் சேர்தலாலென்ப.) எனவே, சஞ்சிதம்கழிய, ஆகாமியம் இன்றாக, பிராரப்தம்மாத்திரமே நிற்கும் என்பது-தேர்ந்தபொருள். காமம் வெகுளி மயக்கம் - பெயர்ச்செவ்வெண்; இது, மூன்று என்னுந் தொகை பெற்றுவந்தது. காரணகாரியசம்பந்தம்பற்றி, மயக்கம் காமம் வெகுளி யென்பதே முறையாயினும், இங்குச்செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார். (கo)

* பி - மீ: அக்குற்றங்களைக்...இருவினைகளை.

ங.எ - ஆம் அதிகாரம்—அவாவறுத்தல்.

அஃதாவது - முன்னும் பின்னும் வினைத்தொடர்பறுத்தார்க்கு நடுவு நின்றவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனை பற்றி ஒரோவழித் துறக்கப்பட்டபுலன்கள்மேற் பழையபயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே: அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வான் அறுத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(கு - ரை.) முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு - சஞ்சிதமும் ஆகாமியமுமாகிய கருமங்களின் சம்பந்தத்தை யொழித்தவர்க்கு. நடுவு நின்றவுடம்பும் அதுகொண்டவினைப் பயன்களும்-மெய்யுணர்ந்தகாலத்துள்ள இப்பிறப்பும், அதில் அனுபவிக்கவேண்டிய பிராரப்தகருமப் பயன்களும். வேதனைபற்றி-தீவினைப்பயனையனுபவித்தலினாலான துன்பத்தினால். வேதனை பற்றி நினைவுசெல்லும் என இயையும். ஒரோவழி - சிலசமயத்தில். பழைய பயிற்சிவயத்தான்-பழமையான பழக்கவசத்தால்; இது, வாசனையெனப்படும். அவிச்சையென-அவித்தையின்பாற்பட்டு. பிறவிக்கு வித்தாம்-பிறப்பிற்கு மூலகாரணமாம். மெய்ப்பொருளுணர்வு - பரம்பொருளைத் தியானித்தல். மெய்யுணர்தல் அவாவறுத்தற்குக் காரண மாதலின், அக்காரணகாரியமுறைபற்றி மெய்யுணர்வின்பின் அவாவறுத்தல் வைக்கப்பட்டதென்க. அவாவறுத்தல் - இரண்டாம்வேற்றுமைத்தொகை. 'அவாவாவது-பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல்நிகழும் ஆசை' என்பர்.

ங.சுக. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

(இ - ள்.) எல்லா உயிர்க்குமெ எஞ்ஞான்றுமெ தவாஅ பிறப்பு ஈனும் வித்து - எல்லாவுயிர்கட்கும் எக்காலத்துங் கெடாதுவருகின்ற பிறப்பினை விளைக்கும் வித்து, அவா என்ப - அவா என்றுசொல்லுவர், (நூலோர்).

உடம்புநீங்கிப்போங்காலத்து அடுத்த வினையும், அதுகாட்டுங் கதிநிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனை 'பிறப்பீனும்வித்து' என்றும்; கதிவயத்தானுள்ள தாய அவ்வுயிர்வேறுபாட்டினும் அவை தன்மைநிரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி என்னுங் காலவேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின், 'எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றும்' என்றும்; இஃது எல்லாச்சமயங்கட்கும் ஒத்தலான், 'என்ப' என்றுங் கூறினார்.

இதனான், பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

(கு - ரை.) விளைக்கும்வித்து - உண்டாக்குகிற விதை; மூலகாரணம். 'நூலோர்' - தோன்றுமெழுவாய் அடுத்த வினையும் - வரும்பிறப்பில் அனுபவி

க்கவேண்டிய கருமமும். அது காட்டுங் கதிநியித்தங்களும் - அக்கருமம் காண் பிக்கிற மக்கட்கதி, விலங்குகதி முதலியனவும், அவற்றையடையுங்காரணங் களும். கதிக்கண்-கதியினிடத்து. முறையே - ஒன்றன்பின் ஒன்றாய். உதிப்ப- உண்டாக. மோகம் - இது, பொருளின்உண்மையையறைத்து விபரீதஞான மூண்டாக்குவது. ''ஆர்வவேராரிந் தச்சணந்திபோய்'' எனச் சிந்தாமணியாரும் ஆசையைப் பிறப்பிற்கு வேர் எனக் கூறியிருப்பதை அறிக. கதிவயத்தான் உளதாய அவ்வுயிர்வேறுபாட்டினும் - மக்கட்கதி முதலிய பலவகைப்பிறப்புக் களே யடைதலாற் பலவகைப்பட்ட எல்லாவுயிர்களினிடத்தும். அவை - அக் கதிகள். தன்மைதிரியும் - குணம்மாறுபடும். உற்சர்ப்பிணியாவது - உலகம் வாழ்நாள் போகம் முதலானவற்றுள் வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவ சர்ப்பிணியாவது அவற்றுள் தேய்பிறைபோலச் சுருங்குங்காலம். 'காலம் நித் தியமாகையால் அழியாமலிருக்கும் இயல்பினையுடையதாகி உத்ஸர்ப்பிணிஅவ ஸர்ப்பிணிஎன்று இருவகைப்படும்; இவற்றுள், அவஸர்ப்பிணிகாலம்-நன்னற்கா லம்,நற்காலம்,நற்றீக்காலம், தீநற்காலம், தீக்காலம்,தீத்தீக்காலம் என்றுசொல் லப்பட்ட ஆறுவகையினை யுடையது; இப்படியே, உத்ஸர்ப்பிணிகாலமும் இந்த ஆறுவகையினைக் கீழ்மேலாகவுடையது; இந்த உத்ஸர்ப்பிணிகாலம், தீத்தீக்காலந்தொடங்கி நடக்கும்; இந்தக்காலத்தில் பிராணிகளுக்கு ஆயுளும் சரீரவுயர்வும் முதலியன சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல வளர்ந்துகொண் டேவரும்; நன்னற்காலந் தொடங்கி நடக்கும் அவஸர்ப்பிணிகாலத்திலோ வெனின், பிராணிகளுக்கு ஆயுளும் சரீரவுயர்வும் முதலியன அபரபட்சத் துச் சந்திரன்போலக் குறைந்துகொண்டேவரும்; இப்பொழுது நடக்கிறது, அவஸர்ப்பிணியின் ஐந்தாங்காலமாகிய தீக்காலம்; உத்ஸர்ப்பிணி யென்பதற்கு- வளருங்காலமென்றும், அவஸர்ப்பிணியென்பதற்கு - குறையுங்காலமென்றும் அருத்தமாம்; இவ்விரண்டுகாலமும் ஒருதரம் நடந்துமுடிந்தால், அதுஓர்யுக மாம்' என்பது - ஜைநசமயக்கொள்கை. அதுவித்தாதல்-அவா பிறப்பிற்குக் காரணமாதல். வேறுபடாமையின் - வித்திபாசப்படாததனால். இஃது-அவா பிறப்பிற்குவித்தென்பது. உம்மைகள் இரண்டும் - முற்றுப்பொருளன. தவா- றுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம்; அளபெடை ஓசைநிறைத்தற்குவந்தது. அவாவைமாத்திரம் வித்தாகஉருவகப்படுத்தி, பிறப்பைப்பயிராக உருவகப் படுத்தாதது - ஏகதேசஉருவகவணி. (க)

நஉஉ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ - ள்.) வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - (பிறப்புத் துன்பமாத லறிந்தவன் ஒன்றை) வேண்டிற் பிறவாமையை வேண்டும்; அது வேண் டாமை வேண்ட வரும் - அப்பிறவாமைதான் (ஒருபொருளேயும்) அவாவா மையை வேண்ட (அவனுக்குத் தானே) உண்டாம்; (எ - று.)

அநாதியாகத் தான் பிறப்புப்பிணிமூப்புஇறப்புக்களால் துன்பமுற்றுவரு கின்றமையை உணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணே யாகலின் 'பிற

வாமையையேண்டும்' என்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளே அவாவின் அது பிறப்பீனும்வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே வீளைத்தலின் 'அது வேண்டாமைவேண்ட வரும்' என்றுங் கூறினர். பிற வாமையின் சிறப்புக்கூறிப் பின் அதுவரும்வழி கூறத் தொடங்குகின்றமை யின், மற்று - வினைமாற்றின்கண் வந்தது.

(கு - ரை.) வேண்டும் - விரும்புவான். அவாவாமை - ஆசைப்படாமை. இன்பத்தின்கண்ணே - இன்பத்தினிடத்திலேயே (உண்டாம்). ஈண்டைச் சிற் றின்பம்கருதி - இவ்வுலகத்து அற்பசுகத்தை ஒருபொருளாகநினைத்து. அவா வின் - விரும்பினால். வினைத்தலின் - உண்டாக்குதலால். அதுவரும்வழி - பிற வாமையுண்டாகும் உபாயம். கால்-காலம் என்பதன் கடைக்குறை. 'வேண்டும்' என்னுஞ் செய்யுமென்முற்றுக்கு - 'பிறப்புத்துன்பமாதலறிந்தவன்' என்பது- தோன்ற எழுவாய். சொற்பொருட்பின்வருநிலை. (உ)

ஈசுஈ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(இ - ள்.) வேண்டாமை அன்ன விழு செல்வம் - (ஒருபொருளேயும்) அவாவாமையை ஒக்கும் விழுமிய செல்வம், ஈண்டு இல்லை - (காணப்படுகின்ற) இவ்வுலகின்கண் இல்லை; (இனி, அவ்வளவேயன்றி), ஆண்டுமம் - (கேட்கப்படு கின்ற) துறக்கத்தின்கண்ணும், அஃது ஒப்பது இல் - அதனை ஒப்பது இல்லை.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேல்நோக்கக் கீழாதலுடை மையின், தனக்குமேலில்லாத வேண்டாமையை 'விழுச்செல்வம்' என்றும், அதற்கு இரண்டுலகினும் ஒப்பதில்லை யென்றுங் கூறினர். ஆகமவளவை போலாது காட்சியளவை எல்லாரானுந் தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது.

பிறவாமைக்குவழியாமெனவும் விழுச்செல்வமாமெனவும், வேண்டா மையின்சிறப்பு, இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) விழுமிய - சிறப்புடைய. கேட்கப்படுகின்ற - காணப்படாத என்றபடி. அதனை ஒப்பது - அவாவாமையையொக்கும் வேறுசிறந்தபொருள். மேன்மேல் நோக்க-ஒன்றுக்குமேல்ஒன்றைப் பார்த்துக்கொண்டேபோக. கீழா தல் உடைமையின்-தனக்குமேற்பட்டதற்குத் தான் கீழ்ப்படுத லுடைமையால். இரண்டுலகினும் - பூலோகத்திலும், சுவர்க்கலோகத்திலும். ஆகமவளவை போலாது - சாஸ்திரப்பிரமாணம்போலாகாமல். காட்சியளவை - பிரதியட்சப் பிரமாணம். தெளியப்படுதலின் - சந்தேகமில்லாமல் அறிந்தநம்பப்படுதலால். வகுத்து - பிரித்து. 'முற்கூறப்பட்டது' என்றது, 'ஈண்டில்லை' என்றதை. ஆண்டும், உம்மை - இறந்ததுதழுவிய எச்சம்; உயர்வு சிறப்பாகவுங் கொள்ள லாம். அஃது என்பதன் ஆய்தம், அங்கு உயிர்போல ஒலித்தது. (ஈ)

ஈசுஉ. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(இ - ள்.) தூஉய்மை என்பது அவாஇன்மை-(ஒருவர்க்கு) வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அது வாஅய்மை வேண்ட வரும் - அவ் வவாவில்லாமைதான் மெய்ம்மையைவேண்டத் தானேயுண்டாம்; (எ - று.)

வீடாவது உயிர்அவிச்சைமுதலிய மாசுநீங்குத லாகலின் அதனை 'தூய்மை' என்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்து 'தூய்மை யென்ப தவா வின்மை' என்றும், மெய்ம்மையையுடைய பரத்தை ஆருபெயரான் 'மெய் ம்மை' என்றுங் கூறினர். மற்று - மேலையதுபோல வினைமாற்றின்கண்வந் தது. வேண்டுதல் - இடைவிடாதுபாவித்தல்.

அவாவறுத்தல் வீட்டிற்குப்பரம்பரையானன்றிநேரேதுஎன்பதூஉம், அது வரும் வழியும் இதனுற் கூறப்பட்டன.

(கு - ரை.) தூய்மை - பரிசுத்தத்தன்மை; அதனையுடைய முத்திக்குப் பண்பாகுபெயர். வாய்மை, மெய்ம்மை - உண்மை; இவையும், உண்மையான தன்மையையுடைய பரம்பொருளுக்குப் பண்பாகுபெயர். வேண்ட - விரும் புதலால். தூய்மை - காரியம், அவாவின்மை - காரணம். 'தூய்மைக்குக்காரண மும் அவாவின்மை' என்று சொல்லவேண்டுவதை 'தூய்மையென்ப தவா வின்மை' எனக் காரணம் காரியமாகவே சொல்லப்பட்டது - உபசார வழக்கு. பரம் - கடவுள். மேலையதுபோல - இவ்வதிகாரத்தில் இரண்டாம் பாட்டிலுள்ளதுபோல. முதல்வாக்கியத்தில் முத்திக்குக்காரணம் இன்ன தென்றுகூறி, பின்வாக்கியத்தில் அக்காரணமுண்டாகும் உபாயம் கூறத் தொடங்குகின்றமையின், இடையில்வந்த மற்று என்னும் இடைச்சொல் - வினைமாற்றுப்பொருளதாம். பரம்பரையானன்றி - முறையே காரணமாவ தல்லாமல். அதுவரும்வழி - அவாவின்மையுண்டாகும் உபாயம். என்பது - செயப்படுபொருள் கருத்தாப்போலக் கூறப்பட்டது: செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளில்வந்ததென்க. இது "ஊரெனப்படுவது உறையூர்" என்பது போலச் சிறப்புத்தோன்ற நிற்கும். அளபெடை - இரண்டடியிலுஞ் செய்யு ளோசைநிறைப்பது: எதுகையில் அளபெடைவந்தது, அளபுத்தொடையாம்.

ஙசுஞி. அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர்.

(இ - ள்.) அற்றவர் என்பார் - (பிறவி) அற்றவரென்று சொல்லப்படு வார்,—அவா அற்றூர் - (அதற்கு நேரேதுவாகிய)அவா அற்றவர்கள்; மற் றையார் - (பிறவாதுக்களற்று) அஃதொன்றும் அறாதவர்கள், அற்று ஆக அற் றது இலர் - (அவற்றுற் சிலதுண்பங்கள் அற்றதல்லது) அவர்போற் பிறவி அற்றிலர்; (எ - று.)

இதனுன், அவாவறுத்தாரதுசிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத் தானுங் கூறப்பட்டது.

(கு - ரை.) அதற்கு - பிறவிக்கு. பிற எதுக்களற்று - மற்றை மண் பெண் பொன் முதலிய அவாவப்படும்பொருள்க ளொழிந்து; வெகுளிமுதலிய பிற

குற்றங்களொழிந்தென்றுங் கொள்ளலாம். அஃதொன்றும் - பொருள்களில் ஆசைமாத்திரம். அற்று ஆக - அவாவற்றவரைப்போன்ற அப்படிப்பட்ட தன்மை தம்மிடத்திலுள்ளதாக. அற்றது இலர் - பிறவியற்றதில்லாதவராவர். விதிமுகத்தானும் - உடன்பாட்டுவகையாலும். விதிமுகத்தாற் கூறினது - "அற்றவரென்பா ரவாவற்றூர்" என்ற முதல்வாக்கியம். எதிர்மறைமுகத்தாற் கூறினது - "மற்றையாரற்றாகவற்றதிலர்" என்ற இரண்டாம்வாக்கியம். அற்றவர் என்பது - தெளிவுபற்றிவந்த காலவழுவமைதி. அற்றதிலர் - உயர்திணை தொடர்ந்த அஃறிணைத்தொழிற்பெயர் அவ்வுயர்திணைமுடிபையே கொண்டது, திணைவழுவமைதி; [நன். பொது. உசு.] அற்று - அவ்வளவினது: சுட்டடியாப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். (டு)

உசுசு. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(இ-ள்.) ஒருவனை-(மெய்யுணர்தல் ஈறுகிய காரணங்களெல்லாம் எய்தி அவற்றுன்வீடெய்தற்பாலனாய) ஒருவனை, வஞ்சிப்பது - மறவிவழியாற்புகுந்து (பின்னும் பிறப்பின்கண்ணேவீழ்த்துக்)கெடுக்கவல்லது, அவா—; அஞ்சுவதுஎ அறன் - (ஆகலான், அவ்வவாவை) அஞ்சிக்காப்பதே துறவறமாவது.

'ஒரும்' என்பன - அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மைவேண்டலை ஒழிந்து பராக்காற் காவாஞாயின், அஃது இடமாக அவன் அறியாமற் புகுந்து, பழையஇயற்கையாய்நின்று, பிறப்பினை உண்டாக்குதலான், அதனை 'வஞ்சிப்பது' என்றார். காத்தலாவது - வாய்மைவேண்டலை இடைவிடாதுபயின்று, அதுசெய்யாமற் பரிகரித்தல்.

இதனுன், அவாவின்குற்றமும், அதனைக்காப்பதே அறமென்பதூஉம் கூறப்பட்டன.

(கு - ரை.) மெய்யுணர்தல் ஈறுகிய காரணங்களெல்லாம் எய்தி - நிலையாமையறிதல், துறவு, மெய்யுணர்தல் என்கிற முத்திபெறுதற்குரிய காரணங்கள்யாவும் பொருந்தி. மறவிவழியாற் புகுந்து - (அவன்) சோர்ந்திருக்கிறசமயம்பார்த்து நுழைந்து. காப்பதே - தடுப்பதே. ஒரும் என்பது அசைநிலையாய்வருதல், "இளந்தவல்லவேறுபிறதோன்றினுங், இளந்தவற்றியலாலுணர்ந்தனர்கொளலே" என்னுந் தொல்காப்பிய விடைச்சொல்லியற்புறனடைச்சூத்திரத்து உரையில் அமைக்கப்பட்டது. போந்த - வந்த. வாய்மைவேண்டலை ஒழிந்து - பாம்பொருளைவிரும்புதலை விட்டு. பிரபஞ்சவிஷயத்தில் அறிவுசெலுத்துதல், பராக்கு எனப்படும்: 'பராக்கால்'என்பதற்கு-கருத்துப்பொருளாக, சோர்வினால் அல்லது அஜாக்கிரதையினாலென்று உரைப்பர். காவாஞாயின் - அவ்வாசையைத் தடுக்காமற்போவாஞாஞல். அஃது இடமாக - அதுவேவழியாக. பழைய இயற்கையாய்நின்று - முன்னேயபடியாய்நின்று. அதனை - அங்ஙனம் அவா ஒருவனைக்கெடுக்கும்நிலையை. பயின்று - பழகி. அது செய்யாமல் பரிகரித்தல் - ஆசை தன்னைக்கெடாதபடி நீக்குதல். அதனைக்காப்பதே - ஆசையைத்தடுப்பதே. பிரிநிலையோடு தேற்றப்பொரு

ஞணர்த்தும் 'அறனே' என்னும் ஏகாரம், பிரித்து 'அஞ்சுவது' என்பதனோடு கூட்டப்பட்டது. இப்பாட்டில் முன்வாக்கியத்திற்கூறிய சித்தாந்தத்திற்குப் பின் வாக்கியம் காரணம். (சு)

நசுஎ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

(இ - ள்.) அவாவினை ஆற்ற அறுப்பின்-(ஒருவன்) அவாவினை (அஞ்சித்) துவரச்செடிக்கவல்லனுயின், தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் - (அவனுக்குக்) கெடாமைக்கு ஏதுவாகிய வினை தான் விரும்புநெறியானே உண்டாம்; (எ - று.)

கெடாமை - பிறவித்துன்பங்களான் அழியாமை. அதற்கு ஏதுவாகிய வினை என்றது, மேற்சொல்லிய துறவறங்களை. வினை - சாதியொருமை. தான் விரும்பும்நெறி-மெய்வருந்தாநெறி. அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு அறஞ்செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து.

இதனுன், அவாவறுத்தற்சிறப்புக் கூறப்பட்டது.

(கு - ரை.) துவர-முழுவதும். கெடாமை - அழியாது முத்திபெறுதல். தான்விரும்புநெறியானே-அவன்வேண்டியவழியால்: மிகவளியவழியாய் என்றபடி. துறவறங்கள்-விரதமும் ஞானமும். மெய்வருந்தாநெறி-உடம்புவருந்த வேண்டாதவழி. முற்ற - முழுவதும். ஆற்ற - நன்றாய். (எ)

நசுஅ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேடற்
றவாஅது மேன்மேல் வரும்.

(இ - ள்.) அவா இல்லார்க்கு - அவாஇல்லாதார்க்கு, துன்பம் இல் ஆகும் - (வரக்கடவதொரு)துன்பமும் இல்லை; அஃது உண்டுஎல் - (ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாம்இன்றி)அஃதுஒன்றும் உண்டாயின், தவாஅது மேல்மேல் வரும் - (அதனுனே எல்லாத்துன்பங்களும்) முடிவின்றி இடைவிடாமல் வரும்; (எ - று.)

உடம்பு முகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்ட தாகலின், ஈண்டு 'துன்பம்' என்றது - இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. 'தவாஅது மேன்மேல் வரும்' என்றதனுன், மூவகைத்துன்பங்களுமென்பது பெற்றும்.

இதனுன், அவாவே துன்பத்திற்குக்காரணமென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) பிறகாரணங்கள் - கோபம்முதலிய மற்றைப்பிறவிக்காரணங்கள். அஃதுஒன்றும் உண்டாயின் - ஆசையொன்றுமாத்திரம் இருக்குமாஞல். முடிவின்றி - ஒழிதலில்லாமல், எல்லையில்லாமல். முகந்துநின்ற துன்பம் - இப்பிறப்பில் அனுபவிக்கக்கடவதாக அமைந்த பிராரப்த கருமப்பயனுகிய துன்பம். முன்பே - முற்பிறப்பிலே. முன்பேசெய்துகொண்டதாகலின் - சஞ்சிதகருமத்திலிருந்து எடுத்துக்கொண்டதாதலால் என்றபடி. இது

பொழுது - இப்பிறப்பில். இதுபொழுதுசெய்துகொள்வன, ஆகாமியகர்மமாகும். ழவகைத்துன்பங்கள் என்றது சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம்என்பவற்றை. மூவகைத்துன்பம் என்பதற்கு ஆத்யாத்மிகம் முதலிய மூன்றுவகைப் பிறவித்துன்பங்களென்றலு முண்டு. அஃது - இங்கு ஆய்தம் மெய்போல் ஒலித்தது. தவாஅது - அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. மேன்மேல் - அடிக்கு, இடைவிடாமை குறிக்கும். இரண்டாம்வாக்கியத்திலுள்ள 'வரும்' என்பதற்கும், முதல்வாக்கியத்திலுள்ள 'துன்பம்'என்பதே எழுவாய்.

கூசுசூ. இன்ப மிடையரு நீண்டு மவாவென்னுங்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(இ - ள்.) அவா என்னும் - அவா என்று சொல்லப்படுகின்ற, துன்பத்துள் துன்பம் - மிக்கதுன்பம், கெடின் - (ஒருவற்குக்) கெடுமாயின், ஈண்டுஉம் இன்பம் இடை அரிது - (அவன் வீடுபெற்றவழியேயன்றி) உடம்போடு நின்றவழியும் இன்பம் இடையரிது; (எ - று.)

துன்பத்துள்துன்பம் - ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருந் துன்பம். விளைவின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து 'அவாவென்னுந் துன்பத்துள்துன்பம்' என்றும், அதுகெட்டார்க்கு மனந் தடுமாறுது நிரம்பிநிற்றலான் 'ஈண்டுமின்பமிடையரிது' என்றுங் கூறினர். இனி, 'ஈண்டும்' என்பதற்கு - பெருகும் என்று உரைப்பாரும் உளர்.

இதனுன், அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடுநின்றே எய்துவரென்பது கூறப்பட்டது.

(கு - ரை.) ஈண்டும் - இம்மையிலும் என்றபடி. இடையரிது - நடுவில் நீங்காது. ஏனை - மற்றை. இன்பத்துக்குந் துன்பத்துக்கும் அனுபவத்தில் எவ்வளவு வித்தியாசமுண்டோ, அவ்வளவுபேதம் மற்றைத்துன்பங்களினும் இவ்வவாவாந்துன்பத்துக்குக் கொடுமையி லுள்ள தென்க. துன்பத்துள்துன்பம் - துன்பங்களுள்ளுங் கொடிய துன்பம். விளைவின்கண்ணே யன்றி - பயனனுபவிக்குமிடத்துமாத்திரமே யல்லாமல். தோற்றத்தின் கண்ணும்-தோன்றும்பொழுதும். மற்றையபிறவிக்காரணங்களெல்லாம் அப்பொழுதே [இம்மையிலே]துன்பந்தருவன வாகாமல், பின்பு [மறுமையில்] பயன் தரும்பொழுது துன்பமாய் முடியும்; இவ்வவாவோ தோன்றினதுமுதல் இம்மையிலேயே துன்பந்தருவ தென்க. இங்கு அவாவாகியகாரணம் துன்பமாகியகாரியமாக அபேதப்படக்கூறப்பட்டது, உபசாரவழக்கு. அது கெட்டார்க்கு-அவா அற்றவர்க்கு. தடுமாறுது - கண்டபொருள்களிலும் அலையாமல். நிரம்பிநிற்றலான் - திருப்தியடைந்துநிற்பதனால். முதலுரைக்கு, அரிது - எதிர்மறைவினைமுற்று: ஈண்டு - இகரச்சுட்டடியாப்பிறந்து ஏழாம்வேற்றுமையிடப்பொருள் குறிக்கும் இடைச்சொல்; உம்மை - எச்சப்பொருளது. இரண்டாமுரைக்கு, அரிது-எதிர்மறைவினையெச்சம்; ஈண்டும் - செய்யுமென்முற்று. வீட்டின்பம்

உடம்பொடு நின்றே எய்துவர் - முத்தியுலகத்து நிரதிசயப்பேரின்பத்தை இவ்வுடம்போடு கூடிநின்றபோதும் [இம்மையிலும்] அடைவர். துன்பத்துள் துன்பம் - "இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந், துன்பத்துள் துன்பங் கெடின்" என்பதிற்போலக் காண்க. (கூ)

ஈஎ0. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(இ - ள்.) ஆரா - (ஒருகாலும்) நிரம்பாத, இயற்கை - இயல்பினையுடைய, அவா - அவாவினை, நீப்பின் - (ஒருவன்) நீக்குமாயின், அ நிலைஏ பேரா இயற்கை தரும் - (அந்நீப்பு அவனுக்கு) அப்பொழுதே (எஞ்ஞான்றும்) ஒருநிலைமையனும் இயல்பைக் கொடுக்கும்; (எ - று.)

நிரம்பாமையாவது - தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய பொருள்களை வேண்டி மேன்மேல்வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்க தென்பது கருத்து. களிப்புக்கவர்ச்சிகளும் பிறப்புப்பிணிமூப்புஇறப்புக்களும் முதலாயின இன்றி உயிர் நிரதிசய இன்பத்ததாய் நிற்றலின், வீட்டினை 'பேராவியற்கை' என்றும்;அஃது அவா நீத்த வழிப்பெறுதல் ஒருதலையாகலின், 'அந்நிலையேதரும்' என்றுங்கூறினார்; "நன்றாஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லா நீத், தொன்றாக்கிடந்தவரும் பெரும்பா ழுலப்பிலதனையுணர்ந்துணர்ந்து, சென்றாங்கின்பத்துன் பங்கள் செற்றுக்களைந்துபசையற்று, லன்றேயப்போதேவீடு மதுவே வீடு வீடாமே" என்பதூஉம் இக்கருத்தேபற்றிவந்தது: இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்த னென்ப.

இதனுள்,வீடாவது இது வென்பதூஉம், அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதே உளதா மென்பதூஉங் கூறப்பட்டன.

(கு - சை.) ஒருகாலும் நிரம்பாத - எப்பொழுதுந்திருப்தியடையாத. நீக்குமாயின் - நீக்குவானாஞல். அந்நீப்பு - ஆசையைநீக்கிநின்ற அந்நிலைமை. எஞ்ஞான்றும் ஒருநிலைமையனும் இயல்பை - எப்பொழுதும் மாறுபடாது அழிவின்றியிருக்கும் முத்திநிலையை. தாமே யன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதனவாய - செல்வந் தாமேயல்லாமல் அவற்றின்பயனாஞ சிற்றின்பங்களும் நிலைத்திராவாதலால் விரும்பத்தகாதவையான. பொருள்களில் ஆசைவைத்துக்கொண்டேபோஞல் எவ்வளவுபொருள் கிடைப்பினும் திருப்தியுண்டாகாதபடி அவ்வாசை மேன்மேல்வளர்தல்பற்றி அவ்வாசையின் முடிவு எப்பொழுதும் அத்திருப்தியே யாதலால், ஆசையை முதலிலேயே விட்டுவிடவேண்டு மென்பதாம். "களிப்புங்கவர்வு மற்றப் பிறப்புப்பிணிமூப்பிறப்பற்று, ஒளிக்கொண்டசோதியமா யுடன்கூடுவ தென்றுகொலோ" (திருவாய்மொழி, 2, 3, 10) என்றது கொண்டு "களிப்புக்கவர்ச்சிகளும்" என்ற வாக்கியம் தொடங்கியுள்ளது. களிப்பு - கருதிய விஷயம் கிடைத்தஞலான மகிழ்ச்சி. கவர்ச்சி - அதுகிடையாதபோது மனத்தைக்கவர்ந்த நிலை: துன்பமென்றபடி. பிறப்பு - களிப்புக்கவர்வுகட்குக் காரணமான

பிறவி. நிரதிசய இன்பத்ததாய் - தனக்குமேம்பட்ட இன்பமொன்றில் லாத பேரின்பத்தையுடையதாய். பேராவியற்கை - மாறுபடாத இயல்பு. அஃது - அம்முத்தியை. "நன்முஞானங்கடந்து" என்னும் மேற்கோள் - திருவாய்மொழி, 8, 8, 6. அறிவுக்குப்புலப்படுகிற ஐம்புலன்களையும் நன் முகக்கழித்துச் சென்று அவற்றிற்குக்காரணமான ஐம்பொறிகளையும் தலை யெடாதபடிசெய்து ஆன்மாவோடுஒற்றுமைப்பட்டுள்ள கடத்தற்காரிதான பரப்பையுடைய அழிதலில்லாத பிரகிருதியின்சொரூபத்தை மிக அறிந்து அதற்கும்அப்பாற்சென்று இன்பதுன்பங்களுக்குக்காரணமான புண்ணியபாப கருமங்களை விட்டொழித்து அவற்றிலுண்டான ருசிவாசனைகளும் ஒழிந்தால், அந்தாளிலே அம்முகூர்த்தத்தில்தானே முத்தியும் உண்டாய்விடுவது; அந்தப் பற்றறுதியே ஆத்மானுபவரூபமான மோகூமும். பகவதநுபவரூபமான மோகூமுமாகும் என்பது இதன்பொருள். சீவன்முக்தன் - பிழைத்திருக்கை யிலேயே முத்திபெற்றவன்; துறந்தஞானமடைந்து பிறப்பறுகிறவன். இது- இன்னது. அஃது - வீடு. அப்பொழுதே - அவாவறுத்தபொழுதே. அக் நிலையே, ஏகாரம் - காலதாமசமின்மையை விளக்கும்; தேற்றப்பொருளதாக வும், பிரிநிலைப்பொருளதாகவுங் கொள்ளலாம். (கo)

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றான், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறம் கூறினார்; இனி, பொருளும் இன்பமும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

(கு - ரை.) இவ்வாற்றான் - கீழ் மூப்பத்தைந்து அதிகாரங்களிற் கூறிய இவ்வகையால். மறுமை - இறந்தபின்வரும்நிலை. பயத்தல்-தருதல். கூறுவார்- சொல்லுபவர். அவற்றின் - பொருளின்பங்களின். ஊழ் - சஞ்சாந்தரகர்மம், பழவினை. வலி - உறுதி. "வீடொன்றுபாயிரகாண்குவிளங்கறம், நாடியழப் பத்து முன்றெளிநூழ்-****வள்ளுவர்சொன்னவகை" என்று திருவள்ளுவ மாலையிற் கூறிபிருத்தலால், கீழ் அதிகாரத்தோடு அறத்துப்பால் முற்றப் பெற்ற தென்றும், ஊழ் என்னும் இவ்வதிகாரம் அறத்துப்பாலிலும் பொருட் பாலிலும் சேராமல் இடையில் தனியேநிற்ப தென்றும் அறியப்படுகிறது; இனி, அந்நூலிலேயே "அறநான்கறிபொருளேழொன்று காமத், திறமூன் றெனப் பகுதிசெய்து" என்று கூறினபடி பாயிரம், இல்லறம், துறவறம், ஊழ் என அறத்துப்பாலினுட்பிரிவுகள் நான்காகக் கொள்ளுதலு மொன்று. இந்த ஊழ் என்ற அதிகாரம் அறத்துப்பாலிற்சேர்ந்த தென்பதே பரிமேலழ கர் கொள்கையென்பது, மேற் பெறப்படும்.

ஈஅ - ஆம் அதிகாரம்.—ஊழ்.

அஃதாவது-இருவினைப்பயன் செய்தவினையேசென்று அடைதற்கு ஏது வாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன- ஒருபொருட்கிளவி. இது - பொருளின்பங்க ளிரண்டற்கும் பொதுவாய்

ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடை மையானும், அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(கு - ரை.) இருவினைப்பயன் - புண்ணியம் பாவம் என்னும் இரண்டு வகைக்கருமங்களின் பலன். அது செய்தவனையே விடாது சென்று அடை தலை "பல்லாவுளுப்புவிடினுங்குழக்கன்று, வல்லதாய் தாய்நாடிக்கோட லைத் - தொல்லைப், பழவினையுமன்னதைத்தே தற்செய்த, கிழவனைநாடிக் கொளற்கு" என்னும் நாலடியாரினாலும் அறிக. நியதி - தவறுமுறைமை. இது - ஊழ். இயைபு - சம்பந்தம். இறுதிக்கண் - முடிவில். ஒருவன்செய்த அறத்தால் விளையும் பயனும் ஊழ்வினை யாருதலால், 'அறத்தோடு இயைபு டைமையானும்' என்றது.

ஈஎக. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(இ - ள்.) (ஒருவற்கு), கை பொருள் ஆகு ஊழால் - கைப்பொருள் ஆதற்குக்காரணமாகிய ஊழால், அசைவு இன்மை தோன்றும் - முயற்சி உண்டாம்; போகு ஊழால் - (அஃது) அழிதற்குக்காரணமாகிய ஊழால், மடி தோன்றும் - மடிஉண்டாம்; (எ - று.)

ஆகூழ், போகூழ்என்னும் வினைத்தொகைகள் - எதிர்காலத்தான் விரிக்க ப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு - மடி. பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாய முயற்சிமடிகளையும் தானே தோற்றுவிக்கு மென்பது கருத்து.

(கு - ரை.) கைப்பொருள் ஆதற்கு - கையிற்பொருளுண்டாகி வளர் தற்கு. அஃது - கைப்பொருள். மடி, சோம்பல், அசைவு என்பன - ஒரு பொருட்சொற்கள். ஆகுஊழ் - ஆகுதற்குக் காரணமாகும் ஊழ்,போகுஊழ்- போகுதற்குக்காரணமாகும் ஊழ் என விரியும். ஆகூழ் - நல்வினைப்பயன். போகூழ்-தீவினைப்பயன். அசைவின்மை-சோம்பலில்லாமை. கைப்பொருள் என்பது, மத்திமதீபமாய் இரண்டுவாக்கியத்திலுஞ் சென்றுதொடரும். "புத் நிஃ கர்மாநுஸாரிணீ" என்றபடி அவ்வவ்வினைப்பயன்படி மடிமையின்மையி லும் மடிமையிலும் அறிவுசெல்லுமென்க. பொருளின் ஆக்க அழிவுகட்குத் துணைக்காரணமாகிய முயற்சி மடிகளையும்-பொருளின் ஆக்கத்துக்குக் காரண மான முயற்சியையும், பொருளின் அழிவுக்குக்காரணமான மடியையும் என்க. தானே - ஊழ்வினைதானே. (க)

ஈஎஉ. பேதைப் படுக்கு மிழவு ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை.

(இ - ள்.) இழவு ஊழ் (உற்றக்கடை) - (ஒருவனுக்கு எல்லா அறிவும் உளவாயினும்)கைப்பொருளிழத்தற்கு ஏதுவாகிய ஊழ் வந்தவிடத்து, அறிவு பேதைப்படுக்கும் - (அஃது) அதனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ் உற்றக்

கடை- (இனி அவனறிவுசுருங்கியிருப்பினும்) கைப்பொருள் ஆதற்குஏதுவாகிய ஊழ்வந்தவிடத்து, (அறிவு) அகற்றும் - (அஃது) அதனைவிரிக்கும்; (எ - று.)

'கைப்பொருள்' என்பது, அதிகாரத்தான்வந்தது. 'இழவூழ்,' 'ஆகலூழ்' என்பன இரண்டும்-வேற்றுமைத்தொகை. 'உற்றக்கடை' என்பது, மூன்றும் கூட்டப்பட்டது. இயற்கையாஞய அறிவினையும் வேறுபடுக்குமென்பதாம்.

(கு - ரை.) அஃது அதனைப் பேதையாக்கும்-அத்தீயூழ் அந்நல்லறிவை மந்தமாகச்செய்யும். அஃது அதனைவிரிக்கும் - அந்நல்லூழ் அச்சிற்றறிவைப் பெருகச்செய்யும். இவ்வதிகாரத்தின் முதற்பாட்டிலிருந்து 'கைப்பொருள்' என்பது, இரண்டாம்பாட்டிற்கு வருவிக்கப்பட்டது. இழவூழ், ஆகலூழ் - நான்காம்வேற்றுமை யுருபும்பயனுந்தொக்கதொகைகள். மூன்றும் கூட்டப்பட்டது - 'இழவூழ்' என்பதன் இறுதியிலும் எடுத்துச்சேர்க்கப்பட்டது. அறிவு - மந்திமதீபம். உற்றக்கடை - எதிர்காலவினையெச்சம். அகற்றும் - பரவச்செய்யும்: அகற்று - 'அகல்' என்பதன் பிறவினை. (உ)

கூஎஙு. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

(இ - ள்.) நுண்ணிய நூல் பல கற்பின்உம்- (பேதைப்படுக்கும்ஊழுடையான் ஒருவன்) நுண்ணிய பொருள்களை உணர்த்தும் நூல் பலவற்றையுங் கற்றாலுமினும், மற்றுஉம் தன் உண்மை அறிவே மிகும்-(அவனுக்குப்) பின்னுந் தன்னை ஆளாஞகிய பேதைமையுணர்வே மேற்படும்; (எ - று.)

பொருளின் நுண்மை, நூலின்மே லேற்றப்பட்டது. மேற்படுதல்-கல்வியறிவைப் பின்னிரங்குதற்கு ஆக்கிச் செயலுக்குத் தான் முற்படுதல். "காதன்மிக்குழிக் கற்றவுங் கைகொடா, வாதல் கண்ணகத் தஞ்சனம்போலுமால்" என்பதும் அது. செயற்கையான்ஆயஅறிவையுங் கீழ்ப்படுத்து மென்பதாம்.

(கு - ரை.) பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் - அறிவில்லாதவனாகச் செய்யும்விதி வந்து அடுத்தவனாகிய ஒருவன். பேதைமையுணர்வு-அறிவின்மை. மேற்படும் - அதிகப்பட்டுநிற்கும். நுண்ணியநூல் - பொருள்கள் நுட்பமாயிருக்கப்பெற்ற நூல்: இடத்துநிகழ்பொருளின்குணம் இடத்தின் மேலேற்றிக் கூறப்பட்டது. பின் இரங்குதற்கு ஆக்கி - ஒருகாரியத்தை ஆராயாது செய்துவிட்டபின்பு அதன்தகுதியின்மையை நினைத்து அறிந்து 'அந்தோ! இதுசெய்தோமே!' என்று மனந்தவித்தற்கு உபயோகப்படச்செய்து. பின் இரங்குதல் - கழிவிரக்கம்; பச்சாத்தாபம். செயலுக்குத் தான் முற்படுதல் - தொழில்செய்வதற்கு விதியறிவே காரணமாதல். "காதன்மிக்குழி" என்னும் மேற்கோள் - சீவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், எசு - ஆம் கவியிலுள்ளது; ஆசைமிக்கவிடத்து(த் தன்பத்திற்குத் துணையென்று) கற்ற கல்வியும் (பிறர்குற்றம் நீக்குதற்கு உதவுதலன்றி என்குற்றம் நீக்குதற்கு) உதவாதொழிதல் கண்ணினுட்கிடந்த அஞ்சனத்தை யொக்கும் என்று பொருள்: கண்ணினுட்கிடந்த அஞ்சனம் அதற்குப் பயன் கொடாததுபோல,

கல்வி நெஞ்சிற்கிடந்தும் பயன்தந்ததில்லே யென்க. இம்மேற்கோளில், காதலாகிய விதிவிவு முற்பட்டுக் கல்வியாகிய செயற்கையறிவு பிற்பட்டவாறு காண்க. செயற்கையாஞகிய அறிவு-கல்வியறிவு. கற்பினும், உம்மை-உயர்வுசிறப்பு. மற்றும், உம்மை - இறந்ததுதழுவியவெச்சம்; படித்தற்கு முன்னல்லாமற் பின்புமென்க. அறிவே, ஏ - பிரிநிலேயோடு தேற்றம். மேல் கல்வியென்னும் அதிகாரத்தில் ''தொட்டனேத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனேத் தூறு மறிவு'' என்பது ஊழ் மாறுகொள்ளாதபொழு தாகலின், அதனேடு இது முரண்படாதாம். (ரு)

ருஎச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(இ - ள்.) உலகத்து இயற்கை - உலகத்து (ஊழினுனைய) இயற்கை, இரு வேறு - இரண்டுகூறு; (ஆகலான்), திரு வேறு தெள்ளியர் ஆதல்உம் வேறு - செல்வமுடையராதலும்வேறு அறிவுடையராதலும்வேறு; (எ - று.)

செல்வத்தினேப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனேயார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்கு ஆகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆகாது, செல்வமுடையராதற்கு ஆகும் ஊழ் அறிவுடையராதற்கு ஆகாது: என்றதாயிற்று. ஆகவே, செல்வஞ்செய்யுங்கால் அறிவாகிய துணேக்காரணமும் வேண்டா வென்பது பெற்றும்.

(கு - ரை.) கூறு - பகுப்பு. பயன்கோடல் - செல்வத்தாலாகும் பயனேக் கொள்ளுதல். அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே - அறிவுடையார்க்கு மாத்திரமே கூடிய காரிய மன்றே? வறியர் - பொருளில்லாதவர். ஏனேயார் - மற்றையோர்; இங்கு அறிவில்லாதவர். காண்டலான் - காணுதலால். செய்யுங்கால் - சம்பாதிக்குமிடத்து. அறிவுவேண்டாமை நல்லூழுடையானுக்கென்க. ஆதலும் என்ற உம்மை - இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. (ச)

ருஎந. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(இ - ள்.) செல்வம் செயற்கு - செல்வத்தை ஆக்குதற்கு, நல்லவை எல்லாம் தீயஆம் - நல்லவையெல்லாம் தீயவாய்அழிக்கும்; தீயஉம் நல்லஆம் - (அதுவேயன்றித்) தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும்: (ஊழ்வயத்தான்).

நல்லவை, தீயவை என்பன - காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. 'ஊழான்' என்பது, அதிகாரத்தாற் பெற்றும். அழிக்கும்ஊழ் உற்றவழிக் காலம்முதலிய நல்லவாயினும் அழியும்: ஆக்கும்ஊழ் உற்றவழி அவைதீயவாயினும் ஆகு மென்ப தாயிற்று. ஆகவே, காலம்முதலிய துணேக்காரணங்களேயும் வேறுபடுக்கு மென்பது பெற்றும்.

(கு - ரை.) ஆக்குதற்கு - சம்பாதித்தற்கு. ஊழ்வயத்தான் - விதிவசத்தால். அதிகாரத்தால்-இது ஊழ்என்னும் அதிகாரமாதலால். வேறுபடுக்கும் -

பேதப்படச்செய்யும். பெற்றும் - பெற்றேம். அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. உம்மை-இறந்ததுதழுவியஎச்சம். (இ)

கூஎசு. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

(இ - ள்.) பால் அல்ல பரியின்உம் ஆகா ஆம் - (தமக்கு) ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும் (தம்மிடத்து) நில்லாவாம்; தம உய்த்து சொரியின்உம் போகா - (ஊழால்)தமவாகியபொருள்கள் (புறத்தே) கொண்டு போய்ச் சொரிந்தாலும் (தம்மைவிட்டுப்) போகா; (எ - று.)

பொருள்களின்நிலையும் போக்கும் ஊழினென்ஆவதல்லது காப்புஇகழ்ச்சி களான் ஆகா என்பதாம்.

இவைஆறுபாட்டானும்,பொருட்குக்காரணமாயஊழின்வலிகூறப்பட்டது.

(கு - ரை.) தமவாகிய - தமக்குஉரியனவான. புறத்தே - வெளியிலே. சொரிந்தாலும்-கொட்டிவிடப்பட்டாலும். நிலையும் போக்கும்-நிற்பதும் நீங்கு வதும். காப்பு - காத்தல். இகழ்ச்சி - காத்தலேயிகழ்தல்; காவாமை. பரியினும் என்ற உம்மை - உயர்வுசிறப்பு. சொரியினும் என்ற உம்மை - இழிவுசிறப்பு. பின்னே ஆம் என வந்ததனால், ஆகா என்பது - வினையாலணையும் பெயர். போகா என்பது - வினைமுற்று. தம - பலவின்பாற்குறிப்பு வினையாலணை யும்பெயர். அல்ல - பெயர். (சு)

கூஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(இ - ள்.) கோடி தொகுத்தார்க்குஉம் - (ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள்) கோடியை (முயன்று) தொகுத்தார்க்கும், வகுத்தான் வகுத்த வகை அல்லால் துய்த்தல் அரிது - தெய்வம்வகுத்தவகையானல்லது நுகர் தல் உண்டாகாது; (எ - று.)

ஓருயிர்செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ் வுயிர்க்கே வகுத்தலின், 'வகுத்தான்' என்றார். "இசைத்தலுமரியவேறிடத் தான"என்பதனுள் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத் தார்க்கும் என்றமையான், உம்மை - எச்சவும்மை. வெறுமுயற்சிகளால் பொருள்களைப் படைத்த லல்லது நுகர்தலாகாது, அதற்கு ஊழ் வேண்டு மென்பதாயிற்று.

(கு - ரை.) கோடியை முயன்று தொகுத்தார்க்கும் - மிகப்பலவற்றை முயற்சிசெய்து சேர்த்து வைத்தவர்களுக்கும். தெய்வம் வகுத்தவகையா னல்லது - விதிஏற்படுத்தினபடியா லல்லாமல், 'கைக்கெட்டினதும் வாய்க்கெட்

டாது' என்றபடி, "இசைத்தலும்" என்னும் இலக்கணவிதி, தொல்காப்பியத் துச் சொல்லதிகாரத்துக் கிளவியாக்கத்திலுள்ளது; "காலமுலகமுயிரே யுடம்பே, பால்வரைதெய்வம் வினையேயூதம், ஞாயிறு திங்கள்சொல்லென வரூஉம், ஆயீரைந்தொடு பிறவுமன்ன, ஆவயின் வரூஉங்கிளவியெல்லாம், பால்பிரிந்திசையாவுயர்திணைமேன" என்ற சூத்திரத்தால், காலம் முதலாகப் பால்வரைதெய்வம் இடையாகச் சொல் இறுதியாக இச்சூத்திரத்துக் கூறப் பட்ட பத்தும் அத்தன்மையன பிறவும் உயர்திணைப்பொருளின்மேல் நிற்பன வாயினும் சொல்லின்தன்மைபற்றி அஃறிணைப்பாலாயிசைக்கு மென்று பொதுவிதிகூறி, "இசைத்தலுமுரிய வேறிடத்தான" என்னும் இப்புற னடைச்சூத்திரத்தால், இச்சொற்கள் ஈறுதிரிந்துவாய்பாடுவேறுபட்டவிடத்து உயர்திணையா யிசைத்தலுமுரிய என்று கூறப்பட்ட சிறப்பு விதியின்படி, இங்கே விதித்தெய்வம் அஃறிணையாச்சொல்லப்படாமல், 'வகுத்தான்' என உயர்திணையாண்பாலாற் கூறப்பட்டதென்க. தொகுத்தார்க்கும் என்ற இடத்து உம்மை - இறந்தது தழுவிய எச்சவும்மை; இனி, உயர்வுசிறப் பாகவுங்கொள்ளலாம். பிரயத்தினமாத்திரத்தால் திரவியம் சம்பாதித்தல் மாத்திரம் ஒருகால் கூடினுங் கூடும்; அதனை யனுபவித்தலோ ஊழாலன்றிக் கூடாது என்பது கருத்து. இங்கே, 'பரிமேலழகர் பயன்வினை வெறுவினை என இரண்டுகொண்டு, பயன்வினையைப் பலவிடத்தினும் பலவாக விரித்து, வெறுவினையை "வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி" என்பதனுட் கொண்டார்' என்ற இலக்கணக்கொத்து உரையை அறிக. (எ)

உசஅ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின்.

(இ - ள்.) துப்புரவு இல்லார் - (வறுமையால்) நுகர்ச்சியில்லாதார், துறப்பார் - துறக்கும் கருத்துடையராவர்: உறற்பால ஊட்டா கழியும் எனின் - (ஊழ்கள்) உறுதற்பாலவாயதுன்பங்களே உறுவியாதொழியுமாயின்.

'துறப்பார்' என்பது, ஆற்று எதிர்காலமுற்றுச்சொல். தம்மால்விடப் பெறுவன தாமே விடப்பெற்றுவைத்துங் கருத்துவேறுபாட்டால் துன்பமுறு கின்றது ஊழின்வலியானென்பது எஞ்சி நிற்றலின், மன் - ஒழியிசைக்கண் வந்தது.

(கு - ரை.) வறுமையான் நுகர்ச்சியில்லாதார்-இல்லாமையாற் பொருளை யனுபவிக்குந்தன்மை யில்லாதவர். துறக்கும் - துறவறமடையும். உறுதற் பால வாய - அடைந்தேதீரவேண்டுவனவான. உறுவியாதொழியுமாயின் - அடைவிக்காமல் நீங்குமாஞல். எஞ்சிநிற்றலின் - குறைந்து நிற்றலால். தம் மால் விடப்பெறுவன - தாமே விடவேண்டியவையான செல்வம்முதலிய

பொருள்கள். தாமே விடப்பெற்றுவைத்தும் - வறுமையால் தாமேநீங்கியிருந்தும். கருத்து வேறுபாட்டால் - துறக்குங்கருத்து உண்டாகாமையால். துன்பம் உறுகின்றது - பிறவித்துன்பமடைவது. உலகத்தில் பொருளுள்ளவர்கள் அப்பொருளினிடத்திற்பற்றும் அப்பொருளாற் பயனனுபவித்தலில் விருப்பமும் உடையவர்களாயிருந்தாலும், இயற்கையிற் பொருளில்லாதவர்கள் அப்பொருளிற் பற்றும் இன்பநுகர்ச்சியில் விருப்பமுமில்லாமல் துறவறத்தையடைந்திருத்தல் கூடுமன்றே? அங்ஙனம் உலகத்தில் வறியவரெல்லாரும் துறவாமைக்குக்காரணம் அவர்களறிவை அவர்கள்விதியானது துறவிற் செல்லவொட்டாது தடுத்துப் பொருட்பற்றிற் செலுத்தி அவர்களைப் பிறவித்துன்பமடைவிக்கின்றதென இங்ஙனம் ஒழியிசைப்பொருளின்கருத்தையுணர்க. ஒழியிசைக்கண்-ஒழியிசைப்பொருளில். துப்பு-அனுபவித்தல், உரவு-வலிமை; இவ்விருசொற்கள், வேற்றுமைத்தொகையால் தொடர்ந்து, துப்புரவு என ஒருசொல்தன்மைப்பட்டு, அனுபவித்தற்கேற்ற சிறப்புடையபொருள்களைனக் காரணக்குறியாய்நிற்கும்; ஊட்டா - ஊட்டாதனவாய்: எதிர்மறைப் பலவின்பால்வினைமுற்றுவினையெச்சம். (அ)

நடுகூ. நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
வல்லற் படுவ தெவன்.

(இ - ள்.) நன்று ஆம் கால் நல்ல ஆ காண்பவர்-நல்வினைவிளையுங்கால் (அதன்விளைவாய இன்பங்களைத் துடைக்குந் திறன் நாடாது இவை) நல்ல வென்று இயைந்து அனுபவிப்பார், அன்று ஆம் கால் அல்லல் படுவது-ஏனைத் தீவினைவிளையுங்கால் (அதன்விளைவாயதுன்பங்களையும் அவ்வாறு அனுபவியாது துடைக்குந்திறன்நாடி) அல்லலுழப்பது, எவன் - என்கருதி? (எ - று.)

தாமே முன் செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும் இரண்டும் இயைந்து அனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்து அனுபவித்து ஏனையதற்கு அதுசெய்யாது வருந்துதல் அறிவன்று என்பதாம்.

இவைமூன்றுபாட்டானும், இன்பதுன்பங்கட்குக்காரணமாய ஊழின் வலி கூறப்பட்டது.

(கு - ரை.) விளையுங்கால் - பயன்தருமிடத்து. அதன்விளைவாய - அந்நல்வினைப்பயனை. துடைக்குந்திறன் நாடாது - போக்கும்வகைதேடாமல். இயைந்து-சம்மதித்து. அவ்வாறு-துடைக்குந்திறன்நாடாது இயைந்து. அல்லலுழப்பது-மிகுந்ததுன்பப்படுவது. தாமே முன்செய்துகொண்டமை யானும்-நல்வினைபோலத் தீவினையும் முன் தம்மாலேசெய்து வைக்கப்பட்டதாதலாலும். ஊட்டாது கழியாமையானும்-விதிகள் தத்தம்பயன்களை அனுபவிப்பியா

மல் நீங்காவாதலாலும். இரண்டும் - இருவகைவினைப்பயனும். அனுபவிக்கற் பால - அனுபவிக்கத்தக்கன. ஒன்றற்கு - நல்வினைப்பயனுக்கு. ஏனையதற்கு - தீவினைப்பயனுக்கு. அது செய்யாது - இயைந்து அனுபவியாமல். (கூ)

கூ அ0. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ - ள்.) மற்று ஒன்று சூழின்உம் - (தன்னைவிலக்குதற்பொருட்டுத் தனக்கு) மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும், தான் முந்துறும் - தான் (அவ்வுபாயமேயானும் பிறிதொன்றனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின்) மூற்பட்டுநிற்கும்; (அதனால்), ஊழின் பெரு வலி யா உள - ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள? (எ - று.)

பெருவலி - ஆகுபெயர். சூழ்தல் - பலருடனும் பழுதற எண்ணுதல். செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடா தென்றமையின், உம்மை-எச்சவும்மை. எல்லாம்வழியாக வருதலுடைமையின், ஊழே வலியதென்பதாம்.

இதனால், அவ்விருவகைஊழின்வலியும் பொதுவாகக் கூறப்பட்டது.

(கு - ரை.) தன்னை - ஊழை. தனக்கு - ஊழுக்கு. மறுதலையாவது - எதிராகுவது. சூழினும் - ஆராய்ந்துசெய்தாலும். தான் - அவ்வூழ்தான். பிறிதொன்றனும் - வேறொருகாரியமாயினும். அச்சூழ்ச்சியின் - அவ்வாலோசனையின். யாவுள - எவையுமில்லையென, எதிர்மறைப் பொருள்குறிக்கும். பெருவலி - பெரியவலியை யுடையவற்றைக் குறித்தலால், அடையடுத்த பண்பாகுபெயர்; பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யெனினும் இழுக்காகாது: ஒருவகையால்அன்மொழித்தொகை ஆகுபெயரில் அடங்குவதுபற்றி, 'பெருவலி - ஆகுபெயர்' என்றார். சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லார்'அருந்திறல்-[இராமன்] அன்மொழித்தொகையாகுபெயர்' என்பதும் இதுபற்றியேயாதல்வேண்டும். பலருடனும் - உயர்ந்தவர்பலரோடும் என்க. பழுதற - குற்றமில்லாமல், ஐயந்திரிபொழிய வென்க. செய்தற்கேயன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாது - அதைவிலக்கும் உபாயத்தைச் செய்வதற்குமாத்திரமே யல்லாமல் எண்ணுவதற்குஞ் சமயங்கொடாது. எச்சவும்மை-இறந்தது தழுவிய எச்சப்பொருள்தரும் உம்மை. எல்லாம் வழியாக - எல்லாவழியாலும். யா - அஃறிணைப்பன்மைவினாப்பெயர். ஊழின் - ஐந்தாம் வேற்றுமை, ஒப்புப்பொருள். ஒன்று - ஆகுபெயர். இருவகை ஊழ் - பொருட்குக்காரணமான ஊழும், இன்பத்துன்பங்கட்குக்காரணமான ஊழும். (கo)

அறத்துப்பால் முற்றிற்று.

திருக்குறள் அறத்துப்பாலின் செய்யுண் முதற்குறிப்பகராதி.

[எண் - பக்கவெண்.]

அஃகாமை 117
அஃகியகன் 116
அகரமுதல 6
அகழ்வாரை 102
அகனமர்ந்தீ 65
அகனமர்ந்து 61
அஞ்சுவதோரு 265
அடக்கமமர 84
அடல்வேண்டி 244
அந்தணரென் 30
அமிழ்தினு 50
அருங்கேட 138
அருட்செல்வ 164
அரும்பயனுயு 128
அருளல்லதி 174
அருளிலார் 169
அருள்கருதி 198
அருள்சேர்ந்த 166
அருள்வெஃகி 116
அல்லலருளாள்வா 168
அல்லவைதேய 67
அவாவில்லார்க் 266
அவாவினை 266
அவாவென்ப 261
அவிசொரிந் 177
அவ்வித்தழுக் 111
அவ்வியநெஞ்சத் 112
அழுக்கற்றகன்ரு 113
அழுக்காறவ 32
அழுக்காறுடையார்க் 109
அழுக்காறுடையான் 92
அழுக்காறெனு 111
அழுக்காற்றினல் 109
அளவல்லசெய் 200
அளவறிந்தார் 200
அளவின்க 198
அறங்கூரு 119
அறஞ்சொல்லு 122
அறத்தாறிது 34
அறத்தாற்றி 40
அறத்தான்வருவ 35
அறத்திற்கே 57
அறத்தினூஉ 31
அறவாழியந்தண 12
அறவினையா 224
அறனழீஇ 119
அறனறிந்து 118
அறனுக்கம் 109
அறனியலா 100
அறனெனப் 41
அறனேக்கி 124
அறன்கடை 97
அறன்வரையா 101
அறிவினுளுருவ 218
அறிவினுளெல் 132
அற்காவியல் 235
அற்றவரென் 264
அற்றுரழிபகி 151
அன்பகத்தில்லா 58
அன்பிலாரெல் 55
அன்பிற்கு 54
அன்பின்வழிய 59
அன்பீனுமார்வ 56
அன்புமறனு 39
அன்புற்றமர்ந்த 56
அன்போடியை 55
அன்றறிவா 33
ஆகூழாற் 270
ஆராவியற்கை 268
ஆற்றினெழுக்க 41
ஆற்றுவாராற்றல் 151
இடனில்பருவத் 144
இணரெரிதோய் 213
இயல்பாகு 245
இயல்பிலு 40
இரத்தலி 154
இருணீங்கி 252
இருந்தோம்பி 60
இருமைவகை 23
இருவேறுலகத் 272
இருள்சேரிரு 10
இலமென்னுவெஃ 115
இலர்பலராகிய 185
இலனென்றதீயவை 134
இலனென்னுமெவ் 148
இல்லதெனில்ல 43
இல்வாழ்வா 37
இறந்தாரிறந்தா 215
இறலீனு 118
இனியவுளவாக 69
இனைத்துணைத் 62
இன்சொலாலீர 64
இன்சொலினிதீன்ற 68
இன்பமிடையரு 267
இன்மையுளின்மை 103
இன்னுசெய்தார்க்கு 218
இன்னுதிரக்கப் 150
இன்னுவெனத் 219
ஈதலிசைபட 155
ஈத்துவக்கு 153
ஈன்றபொழுதிற் 52
உடைமையு 63
உண்ணுதுநோற்பார் 107
உண்ணுமையுள்ள 174
உண்ணுமைவேண்டு 176
உதவிவரைத் 72
உயிருடம்பினீக்கியா 231
உரனென்னுந் 23
உரைப்பாருரைப்ப 156
உலகத்தோடொட்ட 95
உள்ளத்தாலுள்ள 196
உள்ளத்தாற் 204
உள்ளியவெல்லா 214
உறங்குவது 241
உற்றநோய் 179
ஊருணிநீர் 142
ஊழிற்பெருவலி 276
எக்கன்றி 76
எப்பொருளெத் 254
எல்லார்க்குநன்ரும் 86
எல்லாவிளக்கும் 207
எழுபிறப்புந் 48
எழுமையெழுபிறப் 74
எளிதென 99
எள்ளாமை 194
எனைத்தானு 220
எனைத்துணைய 98
எனைப்பகையுற்ரு 136
என்பிலதனை 57
ஏதிலார்குற்ற 125
ஏரினுழாஅ 17
ஐந்தவித்தானுற்றல் 24

ஐயத்தினீங்கி 253
ஐயுணர்வெய்தியக் 253
ஒக்கத்தறிவா 141
ஒப்புரவினுன் 145
ஒருபொழுதும் 239
ஒருமையுளாமைபோ 87
ஒல்லும்வகையா 31
ஒழுக்கத்தினெய்து 93
ஒழுக்கத்தினெல்கா 93
ஒழுக்கத்துநீத்தார் 21
ஒழுக்கமுடைமை 91
ஒழுக்கமுடையவர்க் 94
ஒழுக்கம்விழுப்பந் 90
ஒழுக்காருக் 108
ஒறுத்தாரை 104
ஒறுத்தார்க் 105
ஒன்முகமல்லது 226
ஒன்முவுலகத் 157
ஒன்முனுக் 88
ஒன்னர்த்தெறலு 181
ஓர்த்துள்ள 256
கணைகொடிது 192
கண்ணின்று 121
கதங்காத்து 90
களவிலுலாகிய 197
களவின்கட் 198
களவென்னுங் 199
கள்வார்க்கு 201
கறுத்தின்னு 217
கற்றதனலாய 7
கற்றீண்டு 256
காக்கபொருளா 85
காமம்வெகுளி 259
காலத்தினுற் 71
குடம்பைதனித் 240
குணமென்னுங் 29
குழலினிதி 50
கூத்தாட்டவைக் 234
கூற்றங்குதித்தலும் 184
கெடுப்பதூஉங் 17
கெடுவல்யா 80
கெடுவாக 81
கேடும்பெருக்கமு 79
கைம்மாறவேண்டா 139
கொடுப்பதழுக்கறுப் 110
கொலைவினைய 231
கொல்லாமைமேற் 228
கொல்லான்புலாலை 178
கொன்றன்ன 75
கோளில்பொறியிற் 13
சமன்செய்து 81
சாதலினின்னுத 154
சார்புணர்த்து 258
சிறப்பீனுஞ்செல்வமு 30
சிறப்பீனுஞ்செல்வம் 214
சிறப்பொடு 19
சிறுமையுணீங்கிய 68
சிறைகாக்குங் 46
சிற்றின்பம் 114
சினத்தைப் 213
சினமென்னுஞ் 211
சீர்மைசிறப்பொடு 127
சுடச்சுடரும் 183
சுவையொளி 26
சேப்பமுடையா 78
செயற்கரிய 25
செயற்பால 36
செயிரிற்றலைப் 177
செய்யாமற்செய்த 70
செய்யாமற்செற்றூர்க் 217
செல்லாவிடத்துச் 209
செல்லிடத்துக் 209
செல்வீருங் 62
செறிவறிந் 85
சொல்லுகசொல்லி 129
சொற்கோட்ட 82
தகுதியென 77
தக்கார்தகவில 79
தந்தைமகற் 51
தம்பொருளென்ப 49
தம்மிற்றம் 51
தலைப்பட்டார் 248
தவஞ்செய்வார் 182
தவமறைந் 188
தவமுந்தவ 180
தற்காத்துத் 45
தனக்குவமையில்லா 12
தன்னுயிர்க்கின்னு 220
தன்னுயிர்தானறப் 184
தன்னுயிர்நீப்பினு 229
தன்னூன்பெருக்க 172
தன்னெஞ்சறிவ 203
தன்னைத்தான்காக் 210
தன்னைத்தான்காதல 137
தூவாற்றித் 140
தானந்தவ 19
தீநட்ல 105
தினற்பொருட்டாற் 175
தினைத்துணைநன்றி 72
நீப்பிலதான் 135
நீயவைசெய்தார் 136
நீயவைநீய 132
நீயினுற்சுட்ட 89
நிலினையாரஞ்சார் 131
நுப்பார்க்குத் 16
நுறந்தாரிற்நூய்மை 106
நுறந்தார்க்குத் 180
நுறந்தார்க்குந் 38
நுறந்தார்பெருமை 22
நுறப்பார்மற் 274
நுன்புநூலுந் 66
நுன்னியார் 123
நூஉய்மையென்ப 263
நெய்வந்தொழாஅள் 44
நெருளாதான் 170
நென்புலத்தார் 38
நோன்றிற் 160
நகையுமுவகை 210
நடுவின்றிநன் 114
நத்தம்போற் 159
நயனிலசொல் 128
நயனிலனென்பது 126
நயனீன்று 67
நயனுடையா 144
நயன்சாரா 127
நலக்குரியார் 101
நல்லவையெல்லாஅ 272
நல்லாரெனப்படுவ 227
நல்லாரெனினு 147
நல்லாற்முளுடி 165
நன்முகுமாக்கம் 230
நன்முங்கானல்லவாக் 275
நன்றிக்குவித் 94
நன்றிமறப்பது 75
நன்றேதரினு 78
நாச்செற்று 237
நாளெனவொன்று 236
நிலவரைநீள்புக 158

கிலேயஞ்சி 228
கிலேயிற்றிரியா 86
கில்லாதவற்றை 234
கிறைமொழி 28
கிறையுடைமை 104
நீரின்றமையா 20
நுண்ணியநூல் 271
நெஞ்சிற்நுறவார் 184
நெடுங்கடலுக் 18
நெருநலுள 238
நோயெல்லா 222
பகச்சொல்லி 123
பகுத்துண்டு 225
பகைபாவமச்ச 99
படுபயன் 114
படைகொண்டார் 173
பணிவுடைய 66
பயனில 126
பயனில்சொற் 128
பயன்மரமு 143
பயன்றூக்கா 71
பரிந்தோம்பிக் 91
பரிந்தோம்பிப் 63
பரியினுமாகா 273
பல்லார்முனிய 126
பழியஞ்சிப் 39
பற்றற்றகண்ணே 248
பற்றற்றேமென்பார் 189
பற்றிவிடாஅ 248
பற்றுகபற்றற்றான் 249
பாத்துண்மரீ இ 152
பிறப்பெண்ணும் 257
பிறர்க்கின்னு 221
பிறவிப்பெருங் 14
பிறன்பழிகூறுவான் 122
பிறன்பொருளாட் 96
பிறன்மனை 100
புகழ்படவாழாதார் 160
புகழ்புரிந் 46
புக்கிலமைந் 241
புத்தேளுலகத் 140
புறங்குன்றி 190
புறங்கூறிப் 120
புறத்துறுப்பெல்லா 58
புறந்தூய்மை 206
பெண்ணிற் 44
பெறுமவற்றுள் 48
பெற்றூர்பெறிற் 46
பேதைப்படுக்கு 270
பொய்ம்மையும் 203
பொய்யாமைபொ 206
பொய்யாமையன்ன 205
பொருடூர்ந்த 129
பொருணீங்கிப் 168
பொருளல்லவற்றை 251
பொருளற்றூர் 170
பொருளாட்சி 173
பொறிவாயி 11
பொறுத்தலிறப்பினை 103
மகன்றக்கைக் 52
மக்கண்மெய் 50
மங்கலமென்ப 47
மருந்தாகித் 143
மலர்மிசையேகினுன் 8
மழித்தலுநீட்டலு 192
மறத்தல்வெகுளி 209
மறந்தும்பிறன் 133
மறப்பினு 92
மறவற்கமாசற் 73
மற்றுந்தொடர்ப்பா 246
மனத்ததுமாசாக 191
மனத்துக்கண் 32
மனத்தொடு 205
மனைத்தக்க 42
மனைமாட்சி 43
மன்னுயிரோம்பி 167
மிகுதியான்மிக்கவை 106
முகத்தானமர்ந் 66
மோப்பக்குழையு 64
யாகாவாராயினு 88
யாதனின் 243
யாமெய்யாக் 207
யானெனதென் 247
வகுத்தான்வகுத்த 273
வசையிலாவண்பய 162
வசையென்ப 161
வசையொழிய 162
வஞ்சமனத்தான் 186
வருவிருந்து 61
வலியார்முற் 171
வலியினிலைமையா 187
வழியார்க்கொன் 146
வாணிகஞ்செய் 83
வாய்மையெனப் 202
வானின்றுலகம் 15
வானுயர்தோற்ற 186
விசும்பிற்றுளி 18
விண்ணின்று 16
வித்துமிடல் 61
விருந்துபுறத்ததா 60
விழுப்பேற்றி 108
விளிக்தாரின் 98
வீணுள்டடா 34
வேண்டற்க 117
வேண்டாமை 263
வேண்டியவேண்டி 182
வேண்டினு 243
வேண்டுங் 262
வேண்டுதல் 9
வையத்துள் 42

திருக்குறள் அறத்துப்பால்மூலமும்பரிமேலழகருரையும்

என்ற இவற்றின்

அரும்பதம் முதலியவற்றின் அகராதி.

[எண் - செய்யுளினெண்.]

அஃகாமை-சுருங்காமை, 178
அஃகி-நுண்ணிதாய், 175
அகங்காரம்அவிச்சையிலடங்கும், 360
அகப்பற்று, 21
அகழ்வாரைநிலந்தாங்குதல் × இகழ்வாரைத்தாம்பொறுத்தல், 151
அசைகிலை, 2
அசைவின்மை-முயற்சி, 371
அடிப்படுதல்-அப்பியசித்தல், 140
அணிமாமுதலியன, 9
அணியாவது பணிவும் இன்சொல்லுமே: அணிகலன் அணியாகா, 95
அண்ணுத்தல்-காய்திறத்தல், 255
அதுணர்வார்-ஆய்தம் விகாரத்தால் தொக்கது, 257
அமர்த்து-விரும்பி, 93
அமைந்தின்று, 340
அரிது-இல்லை, 7
அருங்கேடன், 210
அருத்தாபத்தி, 236, 242
அருவுடம்பு, 345
அருளல்லது-கொடுமை, 254
அருளறுதல் பொருளறுதலினும் கொடிது, 248
அருளற்றூர் அழித்தவரே, 248
அருளாட்சி ஊன்றின்பவர்க்கில்லை × பொருளாட்சிபோற்றுதார்க்கில்லை, 252
அருளாதான் அறஞ்செய்தல் × தெருளாதான் மெய்ப்பொருள் காணுதல், 249
அருளாள்வார்க்கு இம்மைத்துன்பம் இல்லை, 245
அருளிலார்க்கவ்வுலகமில் × பொருளிலார்க்கிவ்வுலகமில், 247
அருளுடையார்க்குநரகில்லை, 243
அருள்-துறவறம், 176
அருள்கருதியன்புடையாதல், 285
அருள்துணை, 242
அருள்பிறத்தற்கு உபாயம் வலியார்முன் தன்னை நினைத்தல், 250
அருள்பொருளீனுஞ்சிறந்தது, 241
அல்-வியங்கோளுடன்பாடு எதிர்மறைகளில்வரும், 196
அல்லசெயினும் புறங்கூறுனென்றல் இனிது, 181
அல்லசெய்வார்க்கும் பிறர்மனை நயத்தல் கூடாது: அல்ல-பாவம், 150
அல்லல்-துன்பம், 245
அல்லவை-கொடுமை, 246
அல்லவைதேய்தல், 96
அவசர்ப்பிணி, 361
அவம்-வீண், 262: கேடு, 266
அவாப்பிறப்பீனும்வித்து, 361
அவாய்நிலை, 15
அவாவற்றூரே பிறவியற்றூர், 365
அவாவில்லாவிடின் துன்பம் இல்லை, 368
அவாவுதல்ஆசைக்கண்ணடங்கும்,360
அவி, 259
அவிச்சை அகங்காரம் அவாமுதலியனான்கிற்குங்காரணம், 360
அவ்விந்து-பொருது: மனத்தைக் கோணுதல் செய்து: 167
அழுக்கறுப்பான் அறனுக்கம்வேண்டாதான், 163
அழுக்கறுப்பான்சுற்றமும்கெடும், 166
அழுக்காருமை, 17-அதி. அவதாரிகை
அழுக்காறிலாத வியல்பை ஒழுக்கம்போல் உயிரினும்மேலாகக்கொள்க, 161
அழுக்காறு-அழுக்கறுத்தல், 135, 163
அழுக்காறு இம்மையிலேயே செல்வத்தைக்கெடுக்கும், 168
அழுக்காறுடையான்கணுக்கமில்லை × ஒழுக்கமிலான்கணுயர்வில்லை, 135
அழுக்காறு பகைவரில்லாதார்க்கும் கேடு பயக்கும், 165

அழுக்காறெனவொருபாவி, 168
அளவு, 287
அளவை, 242
அளறு-நரகம், 255
அறங்காய்தல், 77
அறமாகத்திருவள்ளுவர் கொண்டது ஒழுக்கமே, உரைப்பாயிரம்.
அறமேபொன்றுத்துணை, 36
அறம்-அறநூல்கள், 183
அறம் இன்னதென்பது, உரைப்பாயிரம்.
அறம் ஈதலிலில்லை: முகனமர்ந்து இன்சொற்சொல்லின்கண்ணது, 93
அறம், ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைத்து: உரைப்பாயிரம்.
அறம் கற்றடங்கலாற்றுவான் செவ்வி பார்க்கும், 130
அறம் பொருளெனப்படுதல், 254
அறவாழியந்தணன், 8
அறவினைகொல்லாமை, 321
அறனழீஇ-அறனென்ப தொன்றில்லை யென்று அழித்துச்சொல்லி, 182
அறனெனப்பட்டதில் வாழ்க்கை, 49
அறனேக்கிப்போலும் வையம் புறங்கூழுவான் பொறையை ஆற்றுதல், 189
அறன்கடை நின்றூர் கால்வகையர்: அறன்கடை-பாவம், 142
அறிதற்கு அரியபயன்-வீடுபேறு மேற் செலவு முதலியன, 198
அறிவாலம்பொறியடக்கினவன் மோட்சமடைவன், 24
அற்கா-நில்லாத, 333
அற்றூர்-வறியார், 226: அழிந்தார், 248
அனிச்சம் மோப்பக்குழையும் × விருந்துமுகந்திரிந்து நோக்கக்குழையும், 90
அனுமானம், 1
அனுவாதம் வழிமொழிதலெனப்படும், 32
அன்பிலதனை யறங்காய்தல் × என்பிலதனைவெயில்காய்தல், 77
அன்பில்லாருடம்பு என்புதோல்போர்த்த: உயிருள்ளனவாகா, 80
அன்பில்லாவுயிர் இல்லறத்துவாழ்தல் × வன்பாற்கண் வற்றன்மரக்தளிர்த்தல், 78
அன்பிலுலருள்பிறத்தல், 8-அதி.அவதாரிகை. (அருள், அளி-பரியாயம்.)
அன்புகாட்சியளவைக்குஎய்தாது அனுமானவளவையான்வெளிப்படும், 71
அன்புக்கும் அருளுக்கும் வேறுபாடு உண்டு, 8-அதி. அவதாரிகை
அன்புசெய்தற்காகவே உயிர் உடலைப் பெற்றது, 73 [72
அன்புடையார்என்புமுரியர் பிறர்க்கு,
அன்புள்ளதே உடம்பு, 80
அன்பையடைக்குந்தாழ் இல்லை, 71
அன்மை-வேறுதல், நீக்குதல், 162
'அன்'விகுதி தனித்தன்மையினும் படர்க்கையொருமையினும்வருதல், 205
அன்று, 108
ஆகுபெயர்-66, 73, 75, 88, 90, 124, 141, 180, 183, (பின்-ஆகுபெயர்) 184: 204, 236, 247, 274, 277, 296, 334, 344, 352, 364, 380
ஆகுலம் - ஆடம்பரம், 34
ஆகூழ், 371
ஆக்கம்-மேன்மேலுயர்தல், 31: செல்வம், 112, 283: மறுமையிலடையும் பயன், 183
ஆங்கு-ஏழுதலைத் தொழிலுவமத்தின் கண்வந்த செரல், 15: அசை, 43
ஆட்சி பயன்கோடல், 252
ஆதல்-விருத்தியடைதல், 248
ஆமை அடக்கமுடையார்க்கு உபமானம், 126
ஆரா-கிரம்பாத, 370
ஆருயிர்-பிறப்பினது அருமை பிறந்த உயிரின்மேல் ஏற்றப்பட்டது, 73
ஆர்வம்-அன்புகூர்ந்தரப்படுவது, 74
ஆர்வலர்-அன்புடையார், 71
ஆல்-அசை: ("இன்சொலால்"-) 91
ஆறு-பயன், 37
ஆற்றல்-ஒத்தல், 101: வலிமை, 225, பெருமை, 287
ஆற்றின்-வழியில்: செய்தால்: 46
ஆற்றுதல்-பொறுத்தல், 189: வலியராதல், 225.
ஆனுருபு உடனிகழ்ச்சி, 39, 147: தொழப்பொருளது, 111

ஆன்ற-நிரம்பிய, 148
இசைபெருயாக்கையால் நிலம் பயன் குன்றும், 239
இசையில்லாமையே வசை, 238
இடத்துங்கிழ்பொருளின்தொழில் இடத்தின்மேலேற்றப்படுதல், 215, 239
இடவழுவமைதி - (வருவிருந்து) 86: (தருமென்பது) 183
இடன்-செல்வம், 218
இடும்பை-பிறவித்துன்பம், 4
இணரெரிதோய்வன்னவின்ஞ,(இணர்-கொத்தானசுடர்), 308 [25
இந்திரன் ஐந்தவித்தாஞற்றற்குக்காரி, இந்திரன் பிறர்மனைநயந்து சிறுமையெய்தியது, 144 [326
இம்மையிற்ருனே பயனனுபவிப்பார், இயலுதல்-இடையருது நடத்தல், 35
இரக்கப்படுதல் இன்ஞது, 224 [229
இரத்தலின் தமியருணல்இன்ஞது, இருபிறப்பாளர்மூவர், 7 அதி. அவதாரிகை.
இருமை-இரண்டு, 23
இருவகைப்பற்று, 246 [351
இருவினைக்குக்காரணம் அவித்தை, 5, இருவேறுலகத்தியற்கை, 374
இருளால் இருவினைசேரும், 5
இருள்-அவிச்சை, மயக்கம், 5, 227: நரகவிசேடம், 121: நரகம், பிறப்பிற்கு ஆகுபெயர்: 352
இருள்சேர்ந்த வின்ஞுலகம், 243
இலக்கணைவழக்கு, 272
இலமென்றுவெஃகுதல்செய்யார், 174
இலவாறுமை யுணர்த்தும் உரிச்சொல், 205
இலர்-வறியவர், 270
இல்-மனைவி, 143
இல்பொருளுவமை, 273
இல்லல்ல-இரண்டு எதிர்மறை உடன்பாடாதல், 115
இல்லறஞ்செய்வான் பிறனில் விழையாதானே, 147
இல்லறத்தார்க்குரியநற்குணங்கள், 51
இல்லறத்திற்கு இம்மைமறுமைப்பயன் புகழும் தேவருலகிற்போகமும், 240
இல்லறமே புறத்தாற்றினும் பயனுடைத்து, 46
இல்லறம் இன்னதென்பது, உரைப்பாயிரம்.
இல்லறம் வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இனிது நடவாது, 8-அதி. அவதாரிகை.
இல்லிருந்து வாழ்வது விருந்தோம்பி வேளாண்மைசெய்ய, 81
இல்லென்றல் பயன்படாமையால், 52
இல்வாழ்க்கைக்குப் பண்பு அன்பு, பயன் அறன், 45
இல்வாழ்வானடக்கம் மலையினுயர்ச்சியினும் மிக்கது, 124
இல்வாழ்வானஞ்செய்தற்கு இடம், தென்புலத்தார் முதலிய ஐந்து, 43
இல்வாழ்வானுக்கு மறுமைப் பயன் தேவகதியடைதல், 50
இல்வாழ்வான் மற்றைமூவர்க்கும் நல்லொழுக்கத்திற்குத்துணை, 41
இழவூழ்-போகூழ், 372
இழிந்தபிறப்பு-இழுக்கம், 133
இழுக்கா-கடிந்து, 35: தவறுத, 48
இழுக்காறு-தீநெறி, 164
இழுக்கு-குற்றம், 127
இறத்தல்-நெறிகடந்துசேறல், 145
இறந்தகாலவினையெச்சத்தால் இன்றியமையாவுறுப்பினைக்கூறுதல், 322
இறந்தாரை யெண்ணுதல் × துறந்தார் பெருமை துணைக்கூறுதல், 22
இறப்பு-வரம்புகடந்தசெயல், குற்றம், 152
இறல்-இறுதி, 180
இறுகப்பற்றுதல்-காதல்கூர்தல், 347
இனியவுளவாக இன்ஞதகூறல் × கனியிருப்பக்காய்கவர்தல், 100
இன்சொல் இருமையுந்தரும், 98
இன்பதூலுடையார் பிறர்மனைவிழைதலையுங்கொள்வர், 141
இன்முகமும் இன்சொல்லும் ஈகையின்ன்று, 92
இன்மை-வறுமை, 89
இன்மைக்குக்காரணம் சோலாமை,270
இன்மையுளின்மை, 153
இன்ஞசெய்தாரையொறுத்தல் நன்னயஞ்செய்தலே, 314
இன்ஞசெய்தார்க்கும் இன்ஞசெய்யாமை, 312

இன்னுச்சொற்பொறுப்பார் உண்ணுது
கோற்பாரினும் பெரியர், 160; துறக்
தார்போலத்தூயர், 159
இன்னுவென அறிந்தவற்றைப் பிறன்
கட் செய்யலாகாது, 316
ஈண்டுதல்-பெருகுதல், 369
ஈதல் நன்று: கொளல்தீது, 222
ஈரம்-அன்பு, 91
உடம்பும் மிகையாம் பிறப்பறுக்கலுற்
றூர்க்கு, 345
உடம்பொடுபுணர்த்தல், 27
உடலின்தன்மை, 260
உடல்கொடுத்தமைபற்றிவரும்புகழ்,
233
உடற்றும்-வருத்தும், 13
உடைமை மயல், 344
உடைமையுளின்மை விருந்தோம்ப
லோம்பாமடமை, 89
உடைமைவைத்திழப்பவர் ஈத்துவக்கு
மின்பமறியார், 228
உட்பகை-148
உண்டாகத்துறக்க, 342
உபசரித்தல், 89, 201, 287, 358,
364, 369
உபசாரவழக்கு - (பொருள்செய்தோ
ரைப் பொருளென்றது) 63, 73,
201, 254, 319
உபலட்சணம், 9
உயர்திணையில் வைத்துக்கூறுவது சிற
ப்பிஞல்: 12
உயற்பாலது-ஒழியற்பாலது, 40
உயிர்கொடுத்தமைபற்றிவரும்புகழ்,
233
உயிர்க்குணங்கள் காட்சியளவையா
னறியப்படா, 316
உயிர்நிலை - (உயிர்நின்ற) உடம்பு, 80,
290
உயிர் நீங்குங்காலத்து அதஞற்பாவிக்
கப்பட்டதாக அதுதோன்றும், 358
உயிர்முதலியவற்றையளத்தல், 286
உயிர்வாழ்வான் ஒத்ததறிவான், 214
உய்தி-பாவத்தினின்று நீங்கும்வழி,
பிராயசித்தம், 110
உய்த்துவிடும் ஒருசொல், 121
உய்யாவிழுமம், 313
உய்வு-பிராயச்சித்தம், 110
உரன்-திண்மை, அறிவு, 24
உரிமைப்பொருள்-முருகனது குறி
ஞ்சிநிலம், 63
உருபுமயக்கம், 167: ("தவ்வையைக்
காட்டி".)
உருவுடம்பு, 345 [233
உலகத்துப் பொன்றுதுறைபது புகழே,
உலகத்தோடொட்டவொழுகுதலைக் கல்
லாதார் அறிவிலார், 140
உலகம்-உயிர், 11
உலகவர்மறிவாளன்றிரு × நீர் நிறைந்த
ஊருணி, 25
உலகியல்-பொருளின்பங்கள், 20
உலகு-உயிர், 211 [281
உலோகாயதம் முதலிய சமயத்துநூல்,
உவர்ப்பு-வெறுப்பு, 21: மெய்ப்பொரு
ளை அறிந்து இருவகைப்பற்றும் அற்
றவனைப்பிரார்த்தமொழிய மற்றைக்
கருமங்கள் அணுகாதனிலை, 3[illegible]
உளதாகுஞ்சாக்காடு-புகழுடம்பு [illegible]க்கப்
பூதவுடம்பு இறத்தல், 235
உள்ளதுணர்வார்க்குப் பிறப்பு இல்லை,
(உள்ளது-முதற்பொருள்) 357
உள்ளத்தாற் பொய்யாமை யாவரும்
மதிப்பர், 294
உள்ளம், 309
உள்ளிய-நினைத்த, 309
உறுகண்-துன்பம், 261
உற்சர்ப்பிணி, 361
ஊக்காது-நோக்காது, 253
ஊங்கு-உயர்வுஇழிவு எல்லைப்பொரு
ளில் வரும் இடைச்சொல், 31
ஊதியம், 231
ஊழ்வலிது, 380 [251
ஊனுண்பார்க்கு அருள் தோன்றுது,
ஊன்றின்மை கொலைக்குக் காரணம்,
256 [251
எங்ஙனமாருமருள்-இகழ்ச்சிக் குறிப்பு,
எச்சத்திரிபு, 360
எச்சம்-சந்ததி, 112; மிஞ்சிநிற்பது, 238
எஞ்சல், 44
எடுத்துக்காட்டுவமை, 1, 153
எடுப்பது-காப்பது, 15
எண்குணத்தான், 9 [321
எதிர்மறைமுகத்தாலேது கூறுதல்,
எய்யாமை - வருந்தாமல், 296

எல்லா நூல்களினும் நல்லன வெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல், 322
எவன்-அஃறிணையிருபாலுக்கும்பொதுவான வினாப்பெயர் இன்மைகுறித்தது, 2
எவ்வம்-இளிவரவு, 223
எழிலி-மேகம், 17
எழுபிறப்பு, 62
எழுமை யெழுபிறப்பு, 107
ஏனப்படுவது, 291
ஏனைத்தானும்-சிறிதும், 317
என்பான்-செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது: செயப்பாட்டு வினைவிகுதி தொக்குவந்ததென்றலுமுண்டு; 41
என்பிலதனை வெயில்காய்தல் × அன்பிலதனையறங்காய்தல், 77
என்பு-உடம்புக்கு ஆகுபெயர், 72
ஏகதேசவுருவகம், 8, 24, 306
ஏதம்-குற்றம், 136
ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காணின் தீதில்லை, 190
ஏதுப்பெயர், 30
ஏமப்புணை-ஏமத்தை உபதேசிக்கும் புணை, 306 [126
ஏமாப்பு-வலியாதல், அரணாதல், 112
ஐந்தவித்தாலெழுக்கநெறி, 6
ஐந்தன்புலம், 343
ஐம்புலத்தாறு, 43
ஐம்பெருவேள்வி, 87
ஐயவுணர்வு பிறப்பிற்குக்காரணம், 353
ஐயுணர்வு, 354
ஐவகைக்குற்றம், 358 [தார்: 43
ஒக்கல்-மனமொத்திருப்பவர், சுற்றத்தார்
ஒட்ட-பொருந்த, 140
ஒப்புரவினால் வருங் கேடு கொள்ளத் தக்கது, 220
ஒப்புரவு, 22-அதி. அவதாரிகை.
ஒப்புரவுசெய்வார்க்கு அதனைச்செய்ய முடியாமை நல்குரவு, 219
ஓரால்-நீக்குதல், 153
ஒருகணப்போது வாழ்வோமென்பதும் தெரியாது, 337
ஒருதலையா-தெளிய, 357
ஒருதாமோயின்பம், 156
ஒல்கார்-தளரார், 218
ஒல்குதல்-சுருங்குதல், 136
ஒல்லுதல்-இயலுதல், 33
ஒழுக்கத்தின்கணின்று துறத்தல், 21
ஒழுக்கமின்னதென்பது உரைப்பாயிரம். [135, 137
ஒழுக்கமுயர்வுக்குக் காரணம், 131,
ஒழுக்கமுயிரினுமோம்பப்படும், 131
ஒழுக்கம் நன்றிக்கு வித்து, 138
ஒழுக்கி-நடக்கச்செய்து, 48
ஒழுக்கு-நீரோடி யொழுகுதல், நல்நடத்தை, 20
ஒளி-தேஜசு, அறிவு, 267
ஒறுத்தல்-தண்டித்தல், 155
ஒன்றனுடல் சுவையுண்டார்மனம் × படைகொண்டார் நெஞ்சம், 253
ஒன்றுகவையார், 155
ஒன்றே-எண்ணிடைச்சொல், 148
ஒன்னர்-பகைவர், 165
ஓத்து வேதம், 134
ஓம்பி-அடக்கி, 132
ஓம்புதல்-வழுவாமற் செய்தல், 43: குறிக்கொண்டு காத்தல், 322
ஓரும்-அசைநிலை, 40, 366
ஓர்த்து-ஆராய்ந்து, 357
ஔவையுண்டகெல்லிக்கனி, 100
கடப்பாடு - ஒப்புரவு, 211
கடல்நீர்மைகுன்றுதல் - நீர்வாழுயிர்கள் பிறவாமையும், முத்துமுதலியன பிறவாமையுமாம், 17
கடனறிகாட்சியவர், 218
கடை - வாயில், 142: இழிவு, 328
கடையிலாவறிவு முதலிய எட்டுக்குணங்கள், 9 [279
கணைகொடிது யாழ்கோடு செவ்விது,
கண் - எதிர், கண்ணோட்டம், 184
கதம் - கோபம், 130
கரி - சாட்சி, 245
கருதுபபல, 337
கருமை - அறியாமை, 277
களவல்ல மற்றையதேற்றாதவர் தீயநினைவால் வீவர், 289
களவறிந்தார் நெஞ்சிற்கரவு × அளவறிந்தார் நெஞ்சிலறம், 288
களவிலாலானவாக்கம் ஆவதுபோலக் கெடும், 283

கள்வுங் துறவும் ஒருங்கு கில்லா, 287
கள்வார்க்குயிர்கிலையும் தளரும், 290
கள்ளகினைத்தலும் தீது, 282
கறுத்து - கோபித்து, 312
கற்பனை: ஒருபொருளைப்பற்றிப் பல வழங்குதல், 355
கற்புடையார்க்குத் தெய்வம் ஏவல் செய்யும், 55
கற்றதனலாகியபயன் கடவுளின்நற் றாள் தொழுதல், 2
கனியிருப்பக் காய்கவர்தல் × இனிய வுளவாக இன்னுத கூறல், 100
கன்றிய - மிக்க, 284
காட்சி - அறிவு, 174
காட்டிவிடும் - இருசொல், 167
காட்டுதல் - பயனுணர்த்துதல், 28
காணப்படும் - உண்டாம், 298
காதலன் - விரும்புபவன், குறிப்பு வினையாலணையும்பெயர், 209
காத்தல் - தடுத்தல், 29 [228
காரணத்தின்கண்வந்த பெயரெச்சம், காரணப்பெயர் காரியத்தின்மேல் நிற் றல், 62, 65
காரறிவாண்மை, 287
காலத்தினுற் செய்தகன்றி, 102
காலம் நாளெனக்காட்டி உயிரீறும் வா ள், 334
குடம்பைக்கும் புட்குமுள்ளதொடர்பே உடம்புக்கும் உயிருக்குமுள்ள தொ டர்பு, 337
குடிமை-ஒழுக்கமுடைமை, 133
குணப்பெயர்குணியின்மேல்நிற்றல், 53
குதித்தல் - கடத்தல், 269
குறிப்புப்பெயர் - குறிப்பு வினையா லணையும்பெயர், 199
குறிப்பெச்சம், 66, 85, 117
குறியெதிர்ப்பை, 221
குற்றத்தை மறத்தல் பொறையினும் நன்று, 152
குற்றம் ஐந்து பஞ்சகிலேசம், 38, (குற் றம்மூன்று,) 360 [தல், 29
குன்றுகக் குணத்தை உருவகஞ்செய் குன்றிபுறங் கண்டனையர், 277
குன்றிமூக்கிலகங்காரியார், 277
கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேட மும்வேண்டா, 280
கூத்தாட்டவைக் குழாம் × பெருஞ் செல்வம், 332
கூற்றங்குதித்தலும்கூடும், 269
கூற்று கொல்லாமைமேற்கொண்டொ ழுகுவான் வாழ்நாள்மேற்செல்லா து, 326
கெடு - வறுமை, மூதனிலைத் தொழிற் பெயர், 117
கேடும்பெருக்கமும் பழவினையாலமைந் து கிடைப்பவை, 115
கேண்மை - நட்பு, 106
கேளிர், 187
கேள்வி, 356
கைம்மாறு, 211
கொடிதுசெல்விது கிலேடை, 279
கொலைவினையர் இம்மைக்கண்ணும் கீழ்மையெய்துவர், 329
கொல் - துணிவின்கண் சிறிது ஐயம் கினைத்தற்பொருளது, 340
கொல்லாமைக்குப்பின் தான் பொய்யா மை, 323
கொல்லாமையறமாவது விலக்கியதொ ழிதலும் அறமாதலால், 321
கொல்லுதல் - அழித்தல், 304: மிக்க துன்பங்களையுண்டாக்குதல், 305
கொன்றவர் மறுமையில் செயிருடம் பினரும் கீவாழ்க்கையினரு மாவர், 320
கொன்றன்னவின்னு, 109
கோச்சேரமான் யானைக்கட்சேய்மாக் தரஞ்சொலிரும்பொறை, 355
கோடு - (வீணை) தண்டம், 279
கோட்டம் - கோணுதல், 119
கோள் - கொள்ளுதல், 9
கோறல் - கொலை, 321
சமாதி, 358
சாக்காடு × உறங்குவது, 339
சாதல் ஈதலியையாதபோது இனிது, 230
சாதியொருமை, 29, 43, 122, 139, 321, 334, 360, 367
சார்பு - துணை, 76: செம்பொருள், இருவகைப்பற்று, 359
சாவாமருந்து, 82
சான்றோர்க்குக் கொன்றாரு மாக்கங் கடை, 328

சான்றோர்க்கு, கோடாமை முதலிய வற்றிற் கோல் உவமம், 118
சிபிசக்கரவர்த்திகதை, 72
சிமிழ்த்தல்-பிணித்தல், 274
சிறப்பீனுஞ்செல்வம் அணிமா முதலியன, 311
சிறப்பு-கைமித்திகவுத்ஸவம், 18 மோட்சம், வீடு, 31, 358; துறக்கவின்பம், 75; யோகம், 313
சிறுமை-நோய், துன்பம், 98
சிறைக்காப்பு - சிறையாற் காத்தல்; (சிறை-மதிலும் வாயில்காவலும்,) 57
சிற்றின்பம்-நிலையில்லாத இன்பம், 173
சினங்காத்தல்-தன்னைக்காத்தல், 305
சினத்தைக்கொண்டவன் கேடு × நிலத் தறைந்தான் கை நிலத்துறுதல், 307
சினந் தன்னையே கொல்லும், 305
சினந் துறந்தார் இறப்பும்றவர், 310
சினமென்னுங் குணத்தைப் பொரு ளென்றது, 307 [304
சினம் நகையும் உவகையுங்கொல்லும், சினம்பகை, 304 [310
சினம்மிக்கவர் இறந்தவரோடொப்பர், சீர்மை-புகழ், 123
சீவந்முத்தன், 370
சுக்கிலத்தியானம், 358
சுடச்சுடரும் பொன் × துன்பஞ்சுட நோற்கிற்பவர், 267
சுடும்-வருத்தும், 293
சுற்றம், 166
சூழ்தல்-கருதுதல், 324 [259
செருத்தல்-உடம்பினின்று ஒழித்தல், செத்தாருள் வைக்கப்படுவான் ஒத்த தறியான், 214
செப்பம்-நடுவுநிலைமை, 112 119
செம்பொருள்-அறம், 91: முதற் பொருள், 358
செம்மை-செப்பம், 277
செயப்பாட்டுவினை செய்வினையாகவரு வது, 123
செயற்கரிய, 26
செயற்கெளிய, 26
செயிர் குற்றம், 258
செயிருடம்பு, 320 [110
செய்க்கன்றி கோறலுக்கு உய்வில்லை, செய்யவள்-இலக்குமி, 167
செய்யாமற் செற்றோர், 313
செய்யாவென்னும் வாய்பாட்டுச்சொல் எழுவகையாகவரும், 203
செய்யாள்-இலக்குமி, 84
செய்யுட்கிழமை, 6
செருக்கு-செல்வம், ஆகுபெயர்: 180; அவிச்சை, மயக்கம், 201, 346
செல்லாவாழ்க்கை-வறுமை வாழ்க்கை, 330
செல்லிடத்துவெகுளி எழின் அதனிற் றீய பிறஇல், 302
செல்லிடம்-பலிக்குமிடம், 301
செல்வஞ்செய்தலில் நல்வினை தீயவினை மாறுபடுதல், 375 [333
செல்வம்பெற்றபோதே அறஞ்செய்க, செல்வம்வெஃகாதானுக்கு அஃகாது, 178
செல்வர்க்கே பணிவுசெல்வம், 125
செவ்வியான்கேடு நினைக்கப்படும், 169
செவ்வெண், 141
செறிவு-அடக்கம், 123
செறுவார்க்குந்தீய செய்யாமை தலையறிவு, 203
செற்றோர்-சினங்கொண்டவர், 313
செற்று-அடக்கி, 335
சேர்தல்-இடைவிடாதுநினைத்தல், 3
சேர்ந்தாரைக்கொல்லி, 306
சொல்-புகழ், 56
சொல்லெச்சம், 10, 37, 58, 171, 188, 194
சொற்குணம் இனிமை மெய்ம்மைமுதலியன, 194
சொற்பொருட்பின்வருநிலையணி, 200
சோகாதல்-துன்புறுதல், 127
சோர்வு-மறவி, 56
ஞாலம், 245
ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையானே இருவினைத்துன்பம் அணுகாது கெடும், 339
ஞானயோகங்களின்முன் காமம்முதலிய காட்டித்தீமுன்னர்ப் பஞ்சுத்துய்போலும், 360 [114
தகவிலர் - நடுவுநிலைமையில்லாதவர்; தகுதி-நடுவுநிலைமை, பண்பாகுபெயர், 111: பொறுமை, 158
தகை-நன்மை, 56

தக்கார் தகவிலரையறியும் உபாயம், 114 [17
தடிந்து-குறைத்து, முகந்து என்றபடி: தண்டம் இன்னதென்பது, உரைப் பாயிரம்.
தத்துவஞானம், 36-அதி. அவதாரிகை
தத்துவம்இருபத்தைந்து, 27
தந்தைமகற்காற்றம்நன்றி, 67
தந்மாத்திரை, 27
தப்புதல்-பயன்படாமை, 217
தமசொரியிலும்போகா, 376
தமியருணலின்னாது, 229 [237
தம்மைநோவாதுபிறரைநோவதெவன்,
தருமத்தியானம், 286
தலைப்படுவர்-அடைவர், 356
தலைப்பிரிந்த-நீங்கிய, 258
தலைப்பிரியா, 97 [266
தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வார்,
தவத்தால்ஒன்ஞரைத்தெழலும் உவர் காரையாக்கலுமாம், 264
தவத்திற்குரு-வேற்றுமையமக்கம், 261
தவத்திற்குருவுற்ற நோய்நோன்றலும் உயிர்க்குறுகண்செய்யாமையும், 261
தவமறைந்தல்லவைசெய்தல் × புதன் மறைந்துபுட்சிமிழ்த்தல், 274
தவம்இத்தன்மைத்தென்றல், 19
தவம்தவமுடையார்க்காகும், 262
தவம்துறவறத்தின்மேலது, 19
தவாவினை-துறவறம், 367
தவ்வை-தமக்கை, 167
தள்ளுதல்-தவறுதல், 290
தன்னுயிர்போவதானாலும் பிறிதுயிரைக்கொல்லலாகாது, 327
தன்னை வைபவனையும் புறங்கூறலாகாது, 184
தாபதபக்கம், 26
தாழ்வு வறுமை, 117
தாள்-முயற்சி, 212
தானஞ்செய்வாரை வஞ்சித்தல், 276
தானந்தவஞ்செய்தலிலும், உள்ளத் தொடு வாய்மைமொழிதல்தலை, 295
தானம் இத்தன்மைத்தெனல், (இங்குத் தானம் இல்லறத்தின்மேலது) 19
திரு-செல்வம், 168
திருவுக்கும் தெள்ளியராதற்குங் காரணம், 374
திறனல்ல-செய்யத்தகாதவை, 157
திறன்-கூறு, 179: வலிமையுடையவை, 186
தினை சிறுமைக்குக்காட்டும் அளவை, 104, 144
தீச்சொல், 128
தீப்பிணிப்பசி, 227
தீயநினைவுகள், 289
தீயவை-துன்பம், 62
தீயவை செய்தாரைக்கெடுத்தலில் தவறுது × நிழல்அடியில்தங்குதலில் தவறுது: 208
தீயவையிலஞ்சுதற்குக்காரணம், 205
தீயுழி-நரகம், 168 [206
தீவினைசெய்பவனைப் பாவங்கள் சுடும்,
தீவினைதீயினுமஞ்சப்படும், 202
தீவினையெண்ணுமாகாது, 204
துச்சில்-ஒதுக்கு, 340
துணிவு-சித்தாந்தம், 21
துணை-அளவு, 22: தகுதி, 87
துப்பார்-உண்பார், 12
துப்பு-நன்மை, உணவு, 12: பற்றுக்கோடு, 106
துப்புரவு-அனுபவிக்கப்படுவன; உண்டிமுதலியன: நுகர்ச்சி: 263, 378
துவ்வாதவர்-நல்கூர்ந்தார், 42
துவ்வாமை-நல்குரவு, 94
துறக்கம்-சுவர்க்கம், 75
துறந்தார்-அகதிகள், 42: சாதல்நீங்கினவர், 310
துறந்தார்துணை - பன்மையொருமை மயக்கம், 310
துறந்தால்இம்மையில் இன்பம்பல, 342
துறவறம் அவாவையஞ்சுவதே, 366
துறவறம் கூடாவொழுக்கமில்லாத போது இல்லறத்தைப்போல் நல்லது, 49
துன்பத்துட்டின்பம்அவா, 369
துன்பம்-சஞ்சிதம் முதலியன, 366
துன்னற்க-செய்யாதொழிக, 209
துன்னியார் நெருங்கினவர், 188
தூய்மை-மனமாசின்மை, 159
தூய்மையென்பதவாவின்மை;தூய்மை-வீடு: 364
தூற்றுதல்-பலருமறியப்பரப்புதல், 188
தெருளாதான் மெய்ப்பொருள் காணு

தல் × அருளாதான் அரஞ்செய்தல், 249
தெளிந்தாரிற் றீமைபுரிந்தொழுகுவார் விளிந்தாரே, 143
தெளிந்தார்க்குவானம் நணியது, 353
தென்புலத்தார், 43
தேவருலகத்து ஏற்பாரும் கொள்வாரு மின்றி எல்லாரும் ஒருதன்மைய ராவர், 213
தேற்றமை தன்வினை, 187 [றல், 345
தொடர்ப்பாடு - மனம் தொடர்ந்துநிற்
தொழுது - தொழாதின்று என்பதன் திரிபு; இதிற் பிரயோகவிவேகதூ லாரின்கருத்து வேறு, 55
தோற்றம்-உயர்ச்சி, 124: வேடம், 272
நடுவன்மைநாணுபவர் பண்பல்லசெய் யார், 172
நடுவு, நடு-நடுவுநிலைமை, 113, 117
நடுவுநிலைமைகோணுதல் கேட்டையறி விக்கும் உற்பாதம், 116
நட்பாடறேற்றுதவர் புறங்கூறிக்கேளி ர்ப்பிரிப்பர், 187
நத்தம்-ஆக்கம்: நத்துஎன்னும் முதனி லைத்தொழிற்பெயர் 'அம்'என்ற பகு திப்பொருள் விகுதிபெற்றது, 235
நயனுடையான்செல்வம் × உள்ளூர்ப் பழுத்தபயன்மரம், 216: நயன்-ஒப் புரவு.
நயன்-நீதி, (உலகத்தோடு பொருந்து தல், 97: அன்புள்ளசெய்கை, 103 வீருப்பம், 192
நலக்கு=நலத்துக்கு, 149
நல்கூர்ந்தான், 219 [96
நல்லவை-நன்மைபயக்குஞ் சொற்கள்,
நல்லாறு கொல்லாமைசூழ்தல், 324
நல்வினைக்குமகிழ்பவர் தீவினைக்குஎன் அல்லற்படுவது, 379
நன்றி-அறம், 97; உபகாரம், 102
நன்றிமறத்தலாகாது, 108
நன்றியுள்ளுதல் இன்னுதனமறக்கும் உபாயம், 109
நன்று-அறம், 38; நன்மை, 108: அரு ள், 253: இன்பம், 328.
நாமநீர்-கடல், 149
நிரப்பிய, 229
நிரனிறை, 45, 182
நிலத்தறைந்தான் கைநிலத்தையுறுதல் × சினங்கொண்டவன்கெடுதல், 307
நிலமுதலியபூதசுத்துவம், 355
நிலை - ஆச்சிரமம், 124: பிறப்புநின்ற நிலைமை, 325
நிலையில்லாததை நிலையினவென்றுணர் தல் புல்லறிவாண்மை, 331
நிறை-நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத் தல், 57: குணங்கள் நிறைந்திருக் கை, 154
நிறைமொழி-28
நீங்குதல்-செய்யாது தவிர்தல், 246
நீட்டல்-சடையாகத் திரித்தல், 280
நீத்தார்-துறந்தார், 325
நீந்தல்-கடத்தல், 8
நீராற்புறந்தூய்மை × வாய்மையாலகந் தூய்மை, 298
நீர்மை - தன்மை, 17: நீரின்றன்மை; தண்மை இனிமைமிகவுதவுகைஎன் பன, 195
நெஞ்சம் குற்றமுள்ளதாயின் வேடத் தாற்பயனில்லை, 272
நெஞ்சறிவது பொய்யற்க, 293
நெஞ்சுகரி, 293
நெடுநல், 336
நோ-துன்பம், 157 [360
நோய்-இன்னுதன,320: வினைப்பயன்,
நோன்பிற்கு இயல்பு ஒன்றின்மை,344
நோன்மை-பொறுமை, 48
நோன்றல்-பொறுத்தல், 261
பகச்சொல்வி, 187
பகவன் ஆறுகுணங்களையுடையவன், 1
பகுதி-பகுப்பு, 111
பகுதி வினையெச்சப்பொருள்படுதல், 3
பசிபாத்தூண்மரீஇயவனைத்தீண்டாது, 227
பசிமாற்றுவாராற்றலிற்பின் ஆற்றுவா ராற்றல், 225
பஞ்சக்கிலேசம் குற்றமைந்து, 38
படிறின்மை - வாய்மை, 91 [275
படிற்றொழுக்கம்-கள்ளவடத்தை, 271,
படின்-தாழின், 272
படுபாக்கு, 136, 164
படைகொண்டார் நெஞ்சம் × ஒன்றனு டல் சுவையுண்டார்மனம், (படை-கொலைக்கருவி) 253

பண்பிற்குப்பண்பு இல்லை, 168
பயனிலசொல்லல் கட்டார்கண் கயனில சொல்லுதலிற்றீது, 192
பயனிலசொல்லுவாரைப்பல்லார் முனிவர், 191
பயனில கயனிலவற்றினும்தீய, 197
பயனில்சொல் நன்மையினீக்கும், 194
பயன்-நன்மை, 97
பரகீயம், 141
பராக்கு, 366
பரிந்து-வருந்தி, 88
பருவந்து-வருந்தி, 83
பலவாயநினைவு, 337
பழி-அதருமம், தீவினை, 40: பாவம், 44: நிந்தை, 137
பற்றற்றகண்ணேபிறப்பறுக்கும், 349
பற்றற்றான் பற்று, (பற்று-அவா, பற்றப்படுவதாகிய முத்தி நெறி) 350
பற்றுஅற்றால் மோட்சம் கிடைக்கும், 346
பற்றுவிடார்க்கு இடும்பைவிடா, 347
பனுவல்-நூல், 21 [104
பனை-பெருமைக்குக் காட்டும் அளவை,
பன்மையாக்கூறுவது ஒன்றைத்துணியாதபோது,32-அதி. அவதாரிகைக் குறிப்பு.
பன்மையொருமை மயங்குதல் உயர்த்தற்கண், 144
பாத்து-பகுத்து, 44 [கல், 193
பாரித்துரைத்தல் - விரித்துச்சொல்லுபாலல்லவாகா, 376
பால்-முறைமை, 111 [பெயர், 78
பால்வினங்கா அஃறிணைப்படர்க்கைப் பாவனை, 358
பாழ்படுதல்-கெடுதல், 83
பிதிரர், 43
பிழையாதற்று, 307
பிறப்பு × வீழ்ப்பது, 339
பிறப்புக்குக்காரணம் மருள், 351
பிறப்புத்துன்பந்தரும், 325
பிறப்பென்னும் பேதைமை, 358
பிறர்மனைநோக்காமை அறனும் ஒழுக்கமும், 148 [362
பிறவாமை அவாவாமை வேண்டவரும்,
பிறவித்துன்பங்கள், மூன்று: (இவை தாபத்திரயமெனவும்படும்) 4, 246
பிறன்மனைசெல்வார்க்குவினை பகை முதலியன, 146
பிறிதினெய் தன்னெய்போற்போற்றுதலே அறிவு, 315
பீடு-பெருமிதம், 59
புகழில்லார் தோன்றுமை நன்று, 236
புகழுடையான் ஒருங்கே இவ்வுல கோடு மேலுலகும் எய்துவன், 234
புகழொடுதோன்றுக, 236
புகழ்க்கு ஈதல் சிறந்தகாரணம், 232
புகழ் பாட்டுஉரையுமென இருவகைப்படும், 232
புக்கில் - எஞ்ஞான்றும் இருப்பதோரில், 340
புணரின்-முடியுமாஞல், 308
புதன்மறைந்து புட்சிமிழ்த்தல் × தவமறைந்தல்லவைசெய்தல், 274
புத்தேளுலகு, 213, 290
புரிந்தார்-விரும்பினவர், 287
புரைதீர்ந்தநன்மை-அறம், 292
புலம்-ஐம்பொறி, 174
புலவரினும் புகழுடையார்மேம்படுவர்: புலவர்-ஞானிகள்; 234
புலாலுண்ணுது கொல்லாமலுயிருப்பவனே உயிரெல்லாந்தொழும், 260
புலால் பிறிதொன்றன்புண், 257
புறங்கூறி யுயிர்வாழ்தலின் சாதல் நன்று, 183
புறங்கூறுவான் பிறரால் உளையுமாறு பழிகூறப்படுவான், 186
புறஞ்சொல்வானுரையுங் கொள்ளப்படாது, 185
புறத்துறுப்பு-இடம் பொருள் ஏவல் செய்வார் முதலாயின, 79
புறப்பற்று, 21
புறன்-கேடினவளவு, 189
புன்மை-குற்றம், 174
பூசல்தருதல்-தூற்றுதல், 71
பூசனை-கித்தியோத்ஸவம், 18
பூதங்களைத்தோறும், 271
பூப்பர்-பொலிவர், 248
பூரியார்-இழிந்தார், 241
பெட்டு-விரும்பி, 141
பெண்-மனைவி, 54
பெண்டிர்கணவனைவழிபடுதலால்தேவலோகத்திற் சிறப்புப்பெறுவர், 58

பெருஞ்செல்வம் × கூத்தாட்ட வைக்குழாம், 332
பெருந்தகையான் செல்வம் × மருந்தாகித்தப்பாமரம், 217
பெற்றம் புலித்தோல்போர்த்து மேய்தல் × வலியின்னிலையான் வல்லுருவங்கொண்டு மனவழிப்படல், 273
பேதைமை பிறப்பிற்குக் காரணம்: (பேதைமை-அவிச்சை) 358
பேதைமையுணர்வு நூல் கற்பினும் போகூழால் மிகும், 373
பேராண்மை-காமத்தை யடக்கிவைக்கும் பெரிய ஆண்டகைமை, 148
பேராவியற்கை-மோட்சம், 370
பொச்சாத்தல்-மறத்தல், 199
பொச்சாந்தார், 246
பொச்சாப்பு-சோர்வு, 285
பொய்ம்மையும் வாய்மையாவது, 292
பொய்யாமை புகழ்க்காரணங்களிலடங்கிற்றது, 296
பொய்யாமை பொய்யாமையாற்றிற் பிறவறஞ்செய்யாமை கன்று என்று பிறதருமஞ் செய்யவேண்டாமென்ற மறையிற் கருத்தன்று; பொய்யாமையின்சிறப்பிற் கருத்து, 297
பொய்யாவிளக்கு, 299
பொருட்பெற்றிகூறுவார், ஈசர்-அதி. அவதாரிகை.
பொருந்துமாறு-யுக்தி, 242
பொருளல்லது-பாவம், 254
பொருளாட்சிபோற்றார்க்கில்லை × அருளாட்சி யுண்டின்பவர்க்கில்லை, 252
பொருளாள்-மனையாள், 141
பொருளாற்றலாற் கொள்ளுதல், 306
பொருளிலார்க்கு இவ்வுலகமில் × அருளிலார்க்கவ்வுலகமில், 247
பொருளின்பங்களைச் செய்பவர்அவஞ் செய்வார், 266
பொருளுடைமையாகாது விருந்தோரால், 153 [377
பொருளே நுகர்தற்கு ஊழ்வேண்டும்,
பொருளே விசேடித்துநின்ற பண்புகள் உவமைக்கண்ணும் செல்லுதல், 100
பொருள்-புருஷார்த்தம், உரைப்பாயிரம்: மெய்ம்மை, 5: உபமேயம், 100: அர்த்தம், 128: பொருணூல், அர்த்தசாஸ்திரம், 141: பயன், 199: அறம்: உறுதிப்பொருள், 246
பொருள்கருதிப்பொச்சாப்பார் அருள்கருதி அன்புடையராதலில், 285
பொருள்வெஃகி சூழக்கெடும், 176
பொருள்வைப்புழி அற்றுழிபசிதீர்த்தல், 226
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர், 155
பொறுத்தார்க்குப்புகழ், 156
பொறையுடைமையே குணம் நிரம்பியமையாகும், 154
பொன்றுது-அழியாது, 233
பொன்றி என்பதுபொன்ற எனத்திரிந்தது, 171
பொன்றுதல்-அழிதல், 36
போகூழ், 371
போல் உரையசை, 235
போற்றுதார்-பாதுகாவாதார், 252
மகனேச்சான்றோனெனக் கேட்டதாய் ஈன்றபொழிதினுவக்கும், 69
மகன்-மனிதன், 110
மகன்றந்தைக்குச்செய்யும் உதவி, 70
மக்கட்பதடி, 196
மக்கட்பேறு, 61
மக்கட்பேறு மனைமாட்சிக்குக்கலம், 60
மக்களறிவுடைமை தம்மினும் உலகோர்க்கு இனிது, 68
மக்களுயிர்க்கு ஊதியம் ஈதலும் இசைபடவாழ்தலும், 231
மக்கள் கையளாவியகூழ் அமிழ்திற்றினிது, 64
மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேல்நோக்கக் கீழாகும், 363
மக்கள் தம்பொருள், 63
மக்கள் மெய்ந்நீண்டல், 66
மடவார் - அறிவில்லாதவர் (மகளிரல்ல): 153
மடி-சோம்பேறித்தனம், 371
மயக்கநூல்வழக்கு, 351
மரீஇயவன், 227 [லுதல், 210
மருந்தோடுதல்-கொடுநெறிக்கட் செல்
மருவுக மாசற்றார்கேண்மை, 106
மருள்-மயக்கம், விபரீதவுணர்வு, 199, 351

மல்லல்-வளப்பம், 245
மழலை, 66
மழித்தல்-சிரைத்தல், 280
மறத்தல்-வியங்கோள், 303
மறத்தல் நன்மை, 108, 152
மறத்திற்குத்துணையன்பு, 76
மறவாற்றமாசாத்தூர் கேண்மை, 106
மறைமொழி-மந்திரம், 28
மற்றின்பம்=மற்றையின்பம், 173
மனத்துமாசாக கீராடிமறைந்தொழுகும் மாந்தர், 278
மனிதசன்மத்திற்குப்பயன் ஈத்துபுகழ் பெறுதலே, 231
மனைமாட்சி மங்கலம், 60
மனைவிக்குக் கற்புண்டாயின் மேம்பட்ட பொருள், 54
மனைவிபுகழற்றவளாயின் கணவற்குப் பெருமித நடையின்று, 59
மன்-ஒழியிசை, 378
மன்றநிச்சயம், 143
மன்னுயிர், 244
மாசறுகாட்சி-மெய்யறிவு, 199. கேவல வுணர்வு, 352
மாசாத்தூர்கோள், 311, 312
மாணப்பிறப்பு - (துன்பமேயுடைமையால்) மாட்சிமைப்படாதபிறவி, 351
மாண்பு-நற்குணநற்செய்கை, 51 [158
மிக்கவை செய்தாரை வெல்லும்வழி, 177
மிசைதல்-உண்ணுதல், 85
மிசைவிலம்-வீட்டிலகு, 3
மிச்சில் மிச்சமானது, 85
முகனமர்தல்-முகமினியனுதல், 84
முதனிலைத்தொழிற்பெயர், 93, 117
முயல்வார்-வானப்பிரஸ்தர், 47
முருகனது குறிஞ்சிநிலம்-உரிமைப் பொருள், 63 [319
முற்பகற்செய்யிற்பிற்பகல் விளையும், 177
முனிய-வெறுக்க, 191
மூவகைத்துன்பத்தது, 266
மெய்-மெய்ந்நூல், 300
மெய்ப்பொருள், 249, 355
மெய்ம்மை-பரம்பொருள், 364
மெய்யுணர்ந்தார்க்குநிற்பன, எடுத்த உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும், 360
மெய்யுணர்வு, 21
மேற்கொள்வது, 262
மேற்கோள்-பட்சம், சித்தாந்தம் 321
மேற்சேறல்-விரைதல், 335
யாக்கை, 239
யாவினுமெதன்னுஞ் செருக்கு, 346
யோகவுறுப்பு எட்டு, 26
வகுத்தான், 377
வசை, 238
வரன்-நிறைந்தது, 124 [150
வரைதல் - உரிச்சாகக்கொள்ளுதல், வரையாள்-எல்லையிலிருப்பாள், 150
வலியில்நிலையான் வல்லுருவம் × பெற்றம்போர்த்த புலித்தோல், 273
வழக்கு இன்னதென்பது, உரைப்பாயிரம்.
வழங்கி-நிலைபெற்று, 11
வழங்குதல்-இயங்குதல், 245
வழி-சந்ததி, 44
வழுக்கி-மறந்து, 139
வளம்-பயன், 14: வருவாய், 51
வளி காற்று, 245
வறியவர்துறவாமைக்குக் காரணம் விதியே, 378
வற்றன்மரம், 78
வன்கணவர், 228
வன்கணர், 276
வன்பாற்கண் வற்றன்மாக்களிர்த்தல் × அன்பில்லாவுயிர்இல்லறத்து வாழ்தல், (வன்பால்-பாலேநிலம்) 78
வன்மையுள்வன்மை அறியார் குற்றத்தைப்பொறுத்தல், 153
வாய்மையானகந்தூய்மை × நீராற்புறந்தூய்மை, 298
வாய்மையின் மிக்க அறமில்லை, 300
வாய்மையின்னதென்பது, 291
வாரி வருவாய், 14
வாலறிவன், 2 [240
வாழாதார் இசையொழியவாழ்வார், வாழ்க்கைத்துணைக்கு இலக்கணம், 51
வாழ்நாள்வழி - யாக்கையோடு கூடியிருக்கும் பிறப்படையும்வழி, 38
வாழ்பவர்வசையொழியவாழ்வார், 240
வாழ்வாங்கு=வாழ்வு ஆங்கு: வாழ்தற்கு உரிய அவ்வகை, 50
வானுயர் தோற்றம், 272

வான்-மழை, 11
விக்குள்மேல்வராமுன் கல்வினைசெய்ய வேண்டும், 335
விசும்பு-மேகம், 16
விண்பொய்த்தல், 13
விதப்பு, 306
விதிமுகத்தாற் கூறுவது, 365
விதிவிலக்குக்கள் தம்முள் மலையாமை விஷயபேதத்தால், 328
வித்தகர், 235
வித்து-காரணம், 138
விபரீதவுணர்வு, 351
விமரிசம், 357
விருந்து, 43
விருந்துக்குநன்மை ஞானவொழுக்கங்களானுயர்தல், 84
விருந்து பார்த்திருப்பவன் வானத்தவர்க்கு விருந்து, 86
விருந்து முகந்திரிந்துநோக்கக்குழையும் × அனிச்சம் மோப்பக்குழையும், 90
விருந்தோம்பாமடமை பேதையார்க ணுண்டு, 89
விருந்தோம்பாவிடின் பொருளாற்பயனில்லை, 89
விருந்தோம்பிமிசைவான்புலம் வித்தின்றியேவிளையும், 85
விருந்தோம்புவானுக்குப் பொருள்விளக்கும், 84
விருந்தோம்புவான் வாழ்க்கை பாழ்படாது, 83
விலக்கிய தொழிதலும் அறம், 321
விழுப்பம்-விழுமியபொருள், 21, சிறப்பு, 131
விழுப்பேறு-சிரியபேறு, 162
விழுமம்-துன்பம், 107
விழுமியார், 201
விளிதல் போதல், 332
விறல்-வெற்றி, 180
வினைகளதிருவகைப்பயன்-இன்பதுன்பம், 38
வினைக்குறிப்புப்பெயர், 99
வினைப்பகை பின்சென்றடும், 207
வினைப்பயன் எழுபிறப்புத்தொடரும், 107
வினைமாற்று, 65
வீடுஇன்னதென்பது, உரைப்பாயிரம்.
வீடுகாரணவகையாற் கூறப்படும், உரைப்பாயிரம்.
வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்தல், 369
வீயாது-நீங்காமல், 207
வெஃகாரை அறனென்று அறிந்து சேருவாரைத் திருச்சேரும், 179
வெஃகுதல், 172
வெகுளாமைக்கு இடம், 301
வெகுளியாற் றீய பிறச்சும், 303
வெகுளியுள்ளாதானுக்கு உள்ளிய வெல்லாமெய்தும், 309
வெகுளியையாவர்மாட்டும் மறக்க, 303
வெறிய-அறிவோடுபடாதவை, 175
வேண்டாதுகூறுதல் ஒன்றனையறிவிக்க: இது தாற்பரியமெனப்படும்; 91, 139, 159, 282, 309
வேண்டாமை இருமையிலும் விழுச்செல்வம், 363
வேண்டிய வேண்டியாங்குதவத்தாலெய்தலாகும், 265 [364
வேண்டுதல்-இடைவிடாதுபாவித்தல்,
வேளாண்மை-உதவி, 81, 212
வேள்வி-மறுஷ்யயஜ்ஞம், 87
வேள்வியாயிரத்தின் புலாலுண்ணுமை நன்று, 259
வேள்வியாற் செல்வம்பெரிதாம், 328
வேற்றுப்பொருள்வைப்பணி, 211
வேற்றுமைப்படுத்துக்கூட்டுதல், 344
வேற்றுமைமயக்கம், 102, 242, 294
வேற்றுமையணி, 90, 129
வைசேடிகர் பொருள்பண்பு முதலிய வற்றை அறுவகைப்பொருளென்பர், 307
வைப்பு-வைக்குமிடம்: உலகம், 24, 149
வையகம், 101
வையம், 22

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	36	என்பர்.	என்பர்
22	31	(இவ்வளவென்று)	இவ்வளவென்று
52	11	'தம்,மின்'	'தம்மின்'
96	29	நூல்ளுக்கு	நூல்களுக்கு
128	7	பபனில்	பயனில்
137	13	கருத்து	கருத்து.
138	35	சேர்கல்லா	சேக்கல்லா
145	21	(ஒருவனுக்கு)	(ஒருவனுக்கு),
164	30	முன் -	முற்பட -
212	15	சக்நி	சக்தி.
222	32	என்பது	
228	23	என்று	
241	35	உயிர்க்கு,—	உயிர்க்கு—,

மற்றும் காணப்படினும் திருத்திக்கொள்க.

இதனடியிற் குறித்துள்ள புத்தகங்கள் வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யர், 17 - தெளிசிங்கப்பெருமாள்கோயில்தெரு, திருவல்லிக்கேணி என்ற விலாசத்திற் கிடைக்கும்.

			ரூ.	அ.	பை.
கம்பராமாயணம்:—					
பாலகாண்டம்	உரையுடன்	...	5	0	0
அயோத்தியாகாண்டம்	,,	...	5	0	0
ஆரணியகாண்டம்	,,	...	4	0	0
கிட்கிந்தாகாண்டம்	,,	...	4	8	0
சுந்தரகாண்டம்	,,	...	5	0	0
யுத்தகாண்டம் 2-வால்யும்	,,	...	10	0	0
பத்துப்பாட்டு:—					
திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரையுடன்		...	0	4	0
பொருநராற்றுப்படை	ஷை	...	0	4	0
சிறுபாணாற்றுப்படை	ஷை	...	0	4	0
பெரும்பாணாற்றுப்படை	ஷை	...	0	12	0
முல்லைப்பாட்டு	ஷை	...	0	3	0
நெடுநல் வாடை	ஷை	...	0	4	6
பட்டினப்பாலை	ஷை	...	0	4	0
நாலடியார் உரையுடன்		...	2	0	0
சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை உரையுடன்		...	0	2	0
நன்னூற்காண்டிகையுரை		...	1	8	0
திருக்குறள் பொருட்பால் பரிமேலழகருரையுடனும் அதற்குக் குறிப்புரையுடனும்					
வில்லிபாரதம்:—					
சபாபருவம் உரையுடன்		...	3	0	0
வீட்டும துரோண கர்ண பருவங்கள் உரையுடன்		...	3	8	0
சல்லியசௌப்திக பருவங்கள் உரையுடன்		...	1	8	0
சடகோபரத்தாதி உரையுடன்		...	0	12	0
திருப்பாவை உரையுடன்		...	0	6	0
சரசுவதியந்தாதி உரையுடன்		...	0	3	0
திருவேங்கடத்தந்தாதி உரையுடன்		...	0	12	0
திருவேங்கடக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அழகர்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
மதுரைக்கலம்பகம் உரையுடன்		...	0	10	0
அஷ்டப்ரபந்தம், விரிவுரையுடன்		...	3	8	0
நாலாயிரதிவ்யப்ரபந்தம் தனித்தனியாயிரமும் கிடைக்கும்.		...	3	8	0
பெரியபுராணத்துக் கண்ணப்பநாயனார் புராணவுரையும், கந்தபுராணத்து வள்ளியம்மைதிருமணப்படலவுரையும்			0	8	0
வசனம்.					
உதயணன் சரிதை	...	...	0	12	0
சந்திராபீட சரிதம்	...	...	0	5	0